வ்யா—(வேள்வியும்) பக்தி விவ்ருத்யர்த்தமாகவும் பாபக்ஷயத்துக்காகவும்அநுஷ்டிக்கிறகர்மங்கள். "க்ருஹ்ணீஹோத்ராதி-தத்கர்மாராதனமேவ தத்பூஜநாய - அக்னிஹோத்ராதிதத்தத்கார்யாயைவதத்தர்சநாத்" "சூத்ரயாணாக்ருதஸ்ராவிஹிதஸ்ரஷ்டி-ஆத்ரயாணத் தத்ராபிஹிதக்ருஷ்டம்" என்றும், "யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந, ப்ராஹ்மணாவிவிதிஷந்தி" என்றும் சொல்லுகிறபடியே. (நல்லறம்) விவேகாதிகள், (என்பரே ஏனமாய் நின்றூர்க்கியல்வு) ஏனமாய் நின்றூரைப் பெறுகைக்குப்பண்ணும் ப்ரவ்ருத்தி யிவையென்பர். ஆபத்தே அடையாளமாகத்தானே ரக்ஷிக்குமென்கையாலே - அவன் உபாயமாகத் தம்முடைய அநுபவமான பக்திபைச் சொல்லுகிறதென்றுமாம்.

அவ.—(செவி) கீழ்-ப்ராப்யஸைகரூபண்ணினார்; இனி. ப்ராபகஞ்சொல்லுகிறார்.

(செவியின்பயாதி) ஸர்வேந்த்ரியங்களுக்கு மூபலக்ஷணம். (செந்தீயின்பயாதி) ஆக இருபத்துநாலுக்கு மூபலக்ஷணம். (உவியாதவித்யாதி) கர்மயோகாந்தர்க்கதமான ஜ்ஞாநம். ப்ரக்ருதிஹ்ருதயயாஜ்ஞேயை; ஆத்மா உபாதேயதயாஜ்ஞேயன்; ஈச்வரன் உபாதேயதமனுய்க்கொண்டு ஜ்ஞேயன். "உஞ்ஞுமஞ்ஹி-சஞ்சலம்ஹி." (வேள்வி) கர்மயோகம். (நல்லறம்) ஆந்ருசம்ஸ்யாதி தர்மங்கள். (என்பர்) வேதசாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தி. (ஏனமாய்நின்றூர்) தளர்ந்தபோது எடுக்குமவன். "என்பரே!" என்று கேஷபமானபோது, ப்ரவ்ருத்திகொண்டு புகுவதைக் கைவாங்கினவன்று எடுக்கவிருக்க. "ஞானப்பிரானேயல்லாலில்லை" "அறிவானும்" என்றூற்போலே. (இயல்வு) உபாயம். (கஉ)

வ்யா.—அவ.—பதின்மூன்றும்பாட்டு.—(இயல்வாக) "வாயவனேயல்லது வாழ்த்தாது" என்னும்படியா யிருந்தது உம்மது, அல்லாதார்க்கு அவனே ஆச்ரயிக்கும்போது அவதாரம் வேணும், எங்ஙனே

அரு.—மதுக்கு ஸூத்ரமும், விஷயவாக்யமும் அருளிச்செய்கிறார் (க்ருஹ்ணீஹோத்ராதி - அக்நி ஹோத்ராதி இத்யாதி.)

கீழ் கீழிற்பாட்டில். "அவியாதஞ்ஞாநம்" என்கைக்கு, இப்படிப்பட்ட ஜ்ஞாநம்பிறக்கை அருமையோவென்ன; அருளிச்செய்கிறார் (உஞ்ஞுமஞ்ஹி-சஞ்சலம்ஹி என்று.) இயல்வு - ஏனமாய் நின்றூர்க்கு. இவற்றை உபாயமென்பரே! என்று கேஷபம். (கஉ)

இயல்வாக வீன்துழாயா னடிக்கே செல்ல
முயல்வா ரியலமரர் முன்னம் - இயல்வாக
நீதியா லோதி நியமங்களால் பரவ
ஆதியாய் நின்றூ ரவர். (கஙூ)

ப-உ.—முன்னம் - முதலில், இயல்-தகுந்தயோக்யதையையுடைய, அமரர் - தேவர்கள் (நித்யஸூரிகள்), ஈன் - அழகிய, துழாயான்-திருத்துழாயையுடைய ஸர்வேச்வரனுடைய, அடிக்கே - திருவடிகளிலே, செல்ல - கிட்ட, இயல்வாக - தகுதியாக, முயல்வார் - யத்நம் செய்வார்கள். (அல்லாதவர்களுக்கு) இயல்வாக - ஸத்ருசமாக, நீதியால் - ந்யாயமாக, ஓதி - அத்யயநம்பண்ணி, நியமங்களால் - மநநம் முதலான நியமங்களாலே, பரவ - புகழும்படி, அவர் - அப்பெருமையுடையவர், ஆதியாய் நின்றூர் - முதல்வராயிருந்தார்.

வ்யா.—கூடும்படியென்னில்; ப்ரக்ருத்யா ஆச்ரயித்திருப்பர்கள் நித்யஸூரிகள்; அல்லாதாரும் ஆச்ரயிக்கும்படி தானே ப்ரதமபாவியாமென்கிறார்.

(இயல்வாக) ஸத்ருசமாக. (ஈன்துழாயா னடிக்கே செல்ல) ஆக, முதலியாகத் தோள்மாலை யிட்டிருக்கிறவதுக்குப் போரும்படியாக. (முயல்வா ரியலமரர்முன்னம்) இயற்கையையுடையரான நித்யஸூரிகள் முன்னே மஹாயத்நம் பண்ணுவர்கள். விஷயப்ரவணராய் அவனையறியாதவர்களும், (இயல்வாக) ஸத்ருசமாக. (நீதியாலோதி) முறையாலே திருநாமங்களைச்சொல்லி. (நியமங்களால், பரவ) பரவும்படிக்கீடாக. சாஸ்த்ரங்களில் சொல்லுகிற நியமங்களாலே பரவசராய்ப் பரவும்படிக்கீடாக. (அவர் ஆதியாய்நின்றூர் அவர் தாமே ப்ரதமஸஹ்ருதமானார்.

அரு.—பதின்மூன்றும் பாட்டு.—உமக்கு அவதாநம் வேண்டாதபடி இந்த்ரியங்கள் தானே பற்றிற்று, அல்லாதார்க்கு அவதாநங் கூடும்படியென்னென்று சங்காபிப்ராயம். ப்ரதமபாவி-ப்ரத்மஸஹ்ருத்து.

ஆக - ஸத்ருசமாக என்றவித்தால் என்று பலிதம். இத்தையருளிச்செய்கிறார். (முகலியாகத் தோள்மாலை யிட்டிருக்கிற) (அடிக்கேசெல்ல) திருவடிக்கு, சேரவென்றது-தகுதியாக. திருமேனிக்குப் பாங்கான அடிமைகளைப்பண்ணி யென்றபடி. அப்போது, ஸத்ருசமாக என்றது-தங்கள்ஸ்வரூபத்துக்கு ஸத்ருசமாக. "நீதியாலோதி" என்கையாலே - ஓதுகிற ஸம்ஸாரிகள் அத்யாஹார்யம்.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று - சுவர்மிசைச்
சாத்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல். (கச)

ப-உ.—அவரவர்-ராஜஸ்தமஃ ப்ரசுரரான அதிகாரிகள், தாந்தாம றிந்தவாறு - தங்கள்குணநூலுபமாகத் தாங்களறிந்தபடியே, ஏத்தி - துதித்து, இவரிவர் - இந்தஇத்தெய்வத்திகள், எம்-நமக்கு, பெருமான்-ஸ்வாமி, என்று - இப்படி ஆதரித்து, சுவர்மிசை - பித்திமேல், சாத்தியும் - எழுதியும், வைத்தும் - (விக்ரஹரூபமாய்) ப்ரதிஷ்டைசெய்தும், தொழுவர் - ஆச்ரயிப்பர்கள். உலகு - ஜகத்தை, அளந்த - அளந்துகொண்ட, மூர்த்தி - ஸர்வேச்வரனுடைய, உருவே - திருமேனியே, முதல் - ப்ரதாநம்.

வ்யா—அவ.—உபகரணங்களையுங் கொடுத்து, ருசியையும் ஜநிப்பித்து உபாயமுமாய், தானே பலப்ரதாநம்பண்ணு மென்கிறார்.

(இயலமரர்) இயற்கையையுடைய அமரர்: (முன்னம்) முந்துற முன்னம். (இயல்வாக) இதுவே யாத்ரையாக. (ஈன்முழையான்) பரிபூர்ணன். (அடிக்கேசெல்ல) திருவடிகளுக்கே சேர. (முயல்வார்) யத்நம்பண்ணுவார். (இயல்வாக) ஸத்ருசமாக. (நீதியாலோதி) சாஸ்த்ரோக்தமானபடியே. (நியமங்கள்) ச்ரவணாதிகள். (பரவ) ஆச்ரயித்து. (ஆதியாய்நின்றார்) அவர்களுக்கு உபேயத்துக்கு அடியாஞற்போலே வேண்டினவிடத்துக்கு இவர்களுக்கு உபாயத்துக்கு அடியாய் நின்றுல் ஆச்ரயிக்கவொண்ணுதோ. அவனே இதுக்கும் வேண்டினபின்பு அவனேயே பற்றவமையாதோ வென்றுமாம். (கந)

அவ.—பதினாலாம்பாட்டு.—ப்ரக்ருத்யா ஆச்ரயிக்குமவர்களையும் சொல்லி, ஆச்ரயிப்பித்துக்கொள்ளுமவனையும் சொல்லிற்று; இது ஒன்றும் பெருதாரைச் சொல்லுகிறது.

(அவரவர்) ராஜஃப்ரசுரரும், தமஃ ப்ரசுரரும். (தாந்தாமறிந்தவா றேத்தி) குணநூகுணமாக வெளிச்செறிந்தபடி ஏத்தி. (இவரிவரெம்

அந.—மேல்யோஜனைக்கு அவதாரிகை யருளிச்செய்கிறார் (உபகரணங்களையு மித்யாதி) அவர்களுக்கு-நித்யஸம்ஸாரிகளுக்கு. "நீதியாலோதி" என்கிற உபாஸநத்துக்கு அவனைக்கொண்டு ஸாதிக்கவேண்டினுல் அத்தைவிட்டு அவன் தன்னையே பற்றவமையாதோ வென்கிறார். (அவனையிதுக்கு மித்யாதி.) (கச)

முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன் - முதலாய
நல்லா னருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லா ருளரும் பழுது. (கரு)

ப-உ.—மூவரே-(ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களாகிற) மூன்றுபேரே, முதலாவார் - ப்ரதாநராவார்கள். அம்மூவருள்ளும் - அந்த மூவரிலும், மூரி - பரவாகின்றுள்ள, நீர் - ஜலத்தையுடைய ஸமுத்ரம்போலிருக்கிற, வண்ணன் - வடிவையுடைத்தானவன், முதலாவான் - ப்ரதாநனுவான். முதலாய - காரணபூதனான, நல்லான்-உபகாரம்செய்கிறவனுடைய, அருளல்லால் - க்ருபையொழிய, நாமம் - ப்ரஸித்தமான, நீர் - ஜலம் சூழ்ந்த, வையகத்து - ஜகத்தில், பல்லார் - பலருடைய, அருளும் - தயையும், பழுது - வ்யர்த்தம்.

வ்யா.—பெருமானென்று) ரஜஸ்தமஸ்ஸுக்கு விஷயமானாரை என்னுடையஸ்வாமியென்று. (சுவரித்யாதி) ஸர்வேச்வரன்பக்கல் "எவ்வண்ணம் சிந்தித்திமையாதிருப்பர்" என்கிற செயலில் பித்தியிலேயெழுதியும் வைத்தும் தொழுவர்.

(உலகித்யாதி) இவர்களுடையவும் ஆச்ரயணீயங்களுடையவும் தலையிலே அடியைவைத்தவனே ப்ரதாநம். (மூர்த்தியுருவேமுதல்) ஸர்வேச்வரனுடைய திருமேனியே ப்ரதாநம்.

அவ.—அவனேவேண்டாதார் படுகிறபாடுபாரீர்.

(அவரவர்) பிந்நருசிகள். தாந்தாமறிந்தவாறு சாஸ்த்ரத்தின் பின்செல்லார். (இவரிவர்) ஸகரபுத்ரர்கள், கண்டாரை, 'என் குதிரைபிடித்தாய்" என்று பிடிக்குமாப்போலே தோற்றினாரை. (உலகளந்த) ஸமாச்ரயிப்பார் தலையிலும் ஸமாச்ரயணீயர் தலையிலும் ஒக்கத்துகைத்த ஸர்வேச்வரன். (உருவேமுதல்) - வடிவேமுதல். (கசு)

அ—பதினேந்தாம்பாட்டு.—(முதலாவார்) அவ்வோ தேவதைகளும் ஆச்ரயணீயராய்ச் செல்லா நிற்கச்செய்தே அவர்கள் அப்பாதாரர், இவன் ப்ரதாநனென்று சொல்லுகிறது உம்முடைய

அரு—பதிநாலாம்பாட்டு.—செயலில் - அநுகூலர் செய்கிற ந்யாயத்திலே, தாங்களும் நிச்யதாகுணமான பிம்பங்களைப்பண்ணித் தொழுவர்களென்றபடி.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவனே வேண்டாதார் இத்யாதி.) (கசு)

பழுதே பலபகலும் போயினவென்று, அஞ்சி
அழுதே னரவணைமேற் கண்டு - தொழுதேன்
கடலோதம் காலலைப்பக் கண்வளரும், செங்கண்
அடலோத வண்ண ரடி. (ககூ)

ப-உ.—கடல் - ஸமுத்ரத்தினுடைய, ஓதம் - திவலைகள், கால்- திருவடிகளை, அலைப்ப-ஸ்பர்சிக்க, (அத்தாலே) கண்வளரும்-பள்ளி கொண்டருளுமவனுமாய், செம் - சிவந்த, கண் - நேத்ரங்களையுடை யனுமாய், அடல்-மேல்விழுகிற, ஓதம்-(ஸௌந்தர்ய) தரங்கங்களோ டுகூடின, வண்ணர் - வடிவையுடையனுமானவனுடைய, அடி - திரு ப்பாதங்களை, அரவு - திருவநந்தாழ்வானுகிற, அணைமேல் - படுக்கை யின்மேலே, கண்டு-ஸாக்ஷாத்கரித்து, தொழுதேன்-நமஸ்கரித்தேன். பலபகலும் - காலமெல்லாம், பழுதே-வ்யர்த்தமாய், போயினவென் று-போய்விட்டதே என்று, அஞ்சி-பயப்பட்டு, அழுதேன்-சோகித் தேன்.

வ்யா.—பகூஹத்காலே யிறேயென்ன; அர்த்ததத்வமிருந்த படி-யைப் பார்க்கலாகாதோ வென்கிறார்.

(முதலாவார் மூவரே) இருந்ததே குடியாக ஆச்ரயணீய ரண்மிறே, மூவரிறே ப்ரதாநர். (அம்மூவரித்யாதி) ப்ரஹ்ம ருத்ரா திகளுக்கு ஜீவவ்யவதாநத்தாலே அந்தர்யாமியாயும் தன் பக்கலிலே ஸ்வேநரூபேண நிற்கும் காரணமாவான். (மூரிநீர் வண்ணன்) * பொன்னுருவும் தீயுருவுமானவர்களன்று, பரப்பை யுடைத்தான கடல்வண்ணன். (முதலாய) காரணமான. (நல்லானரு ளல்லால்.) அறவனனவனருளல்லால். (நாமமித்யாதி) அவனுடைய அருளொ ழிய அல்லாதா ரெல்லாருடைய வருளும் பழுது. அதிகாரிகளா கையாலே அவர்களை முற்படச்சொன்ன வித்தனை; பழுதாமிடத்தில் அவர்களோடு அல்லாதாரோடு வாசியில்லை. அவனுக்கு வசராய்க் கொண்டு பலம்தரிலாவென்னில்; இரண்டும் வ்யர்த்தம்.

(முதலாய நல்லான்) பெற்ற தாயாகையாலே பரிவன். யஉ-ஹ ஜ்ஞாநாமதவத்ஸு: - தர்மஜ்ஞச்சரணாகதவத்ஸல: " மூலப்பாலி ருக்க விஷாதம் பண்ணுவரோ. (நாமம்) நாமமாத்ரனை பல்லா

அரு.—பதிநேந்தாமபாட்டு.—(வசராய்) சரீரபூதராய். இரண்டும்- கேவல ஸ்வதந்த்ரராயும், அந்தர்யாமியாகையாலே சரீரவத் பரதந்த்ர ராயும் இரண்டு மென்றபடி. (கஙு)

ரென்னுதல்; ப்ரஸித்தமான நீர் வையகமென்னுதல். (பல்லார்) கீழ்ச் சொன்ன ப்ரஹ்ம ருத்ராதிகளகப்பட. தனித் தனியும், திரளவும். (பழுது) வ்யர்த்தம். (கரு)

வ்யர்:—அவ—பதினைரும் பாட்டு:—(பழுதே) * கல்லானருள் பெற்றவெனக்குச் சோகமுண்டாயிற் றென்கிறார்.

(பழுதே பலபகலும் போயினவென்றஞ்சியழுதேன்) போன காலம அநாதி; வருங்காலம் அநந்தம்; இத்தோடொத்தகாலமிறே போயிற்றென்றழுதேன். இழவுக்கு அழுதாராகில் அச்சமாவதென்! வருமத்தைக்குறித்தன்றே அஞ்சிற்றென்னில்; அதிகாரி நாணுகில் போனகாலம்போலே யாகிறதோ வருகிற காலமுமென்கிறார். ''யஶ்ஶாஶ்நவஶ்யுஷ்டா யஶ்ஶாஶோ நவஶ்யுதி। நிந்திதஸ்வவஸே லோகே ஸ்வாதாரேவ நம்விமஹ்யுதே - யச்சராமம்நபச்யேத்து யஞ்ச ராமோநபச்யதி। நிந்திதஸ்ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேகம்வி கர்ஹதே'' என்று சொல்லுகிறது பெருமாளுடைய * ஒருநாளே யிழவுக்கிறே. (கடலோதம் காலலைப்ப) திருவடிகளே, கடலோதமானது துடைகுத்தமாப்போலே அலைப்ப. (கண்வளருமித்யாதி) (அரவணை மேல்கண்டு தொழுதேன்) தகட்டிலழுத்தின மாணிக்கம் போலே.

அவ.—பண்டு உபாயாந்தரங்களிலும் தேவதாந்தரங்களிலும் ப்ரவணனாயிழந்தேனென்று சொல்லுகிறார்.

(பழுதே) பழுதும் பழுதல்லாததும் கூடப்பெற்றேனே. (பலபகல்) இழந்த அநாதிகாலம் பலவாய், அதுக்கநந்தரம் அநந்தகாலமானபடி. (போயின) போனநீர்களைக் கோலவோ. வரும் காலமும் பழைய காலமும் ஒன்று; பழையனனே இன்னம் அப்படியாகிற் செய்வதென்னென்கிறார். ''சாஶ்வத்வவிவ - காலேஷ்வபிச'' (அரவணைமேல்கண்டு) பர்யங்கவித்யைபிற்படியே பூர்ணமாகக்கண்டேன் (கண்டுதொழுதேன்) கண்டால் செய்யும் தொழில். (காலலைப்ப) சிறுதிவலை துடைகுத்த. (செங்கண்) வாத்ஸல்யம் தோற்றுகை. (அடலோதம்) கெருங்கின ஓதம். (கசு)

அரு.—பதினைரும்பாட்டு.—இழந்த நாளுக்கு துஃகப்பட்ட பேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (யஶ்ஶாஶ்-யச்சராமம்இத்யாதி.)

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (பண்டித்யாதி.) கீழிற் பாட்டின் தாத்பர்யத்தை யுட்கொண்டு (உபாயாந்தரம் தேவதாந்த

---

* ஒருநாளேயிழவு - ஒருநாள்ளே ஸ்வையிழக்கை

ரம்) என்கிறது. அஞ்சுகைக்கு ஹேதுவேதென்ன; அருளிச்செய்கிறார். (வருங்காலமித்யாதி.) காலத்தையும் தன்னையும் பார்த்தால் பயமதுவர்த்திக்கு மென்கிறார்.) (காலேஷ்வவிவ - காலேஷ்வபிச) என்று. (கசு)

அடியும் படி கடப்பத்தோள் திசைமேற் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர் - வடியுகிரா
லீர்ந்தான் இரணியனதாகம், இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்தநான்று. (கள)

ப-உ. வடி - கூர்மையான, உகிரால்-நகத்தினால், இரணியனது-ஹிரண்யகசிபுவின், ஆகம் - உடலை, ஈர்ந்தான் - பிளந்தவனும், இருப்பேரிய, சிறை - பக்ஷத்தையுடைய, புள் - பக்ஷியான பெரியதிருவடியை, ஊர்ந்தான் - நடத்துகிறவன், உலகளந்த நான்று - ஜகத்தை அளந்த காலத்திலே, அடி - திருப்பாதம், படி - பூமியை, கடப்ப - அளக்க, தோள் - புஜம், திசைமேல் - திக்குக்களுக்குமேலே, செல்ல - போக, முடியும் - கிரீடமும், விசும்பு - ஆகாசத்தை, அளந்தது - ஆக்ரமித்தது; என்பர் - என்றுசொல்லுவர்கள்.

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டு.—ஸம்ஸாரத்தில் நினைத்தபடியெல்லாம் அநுபவிக்கப்போமோ? பாமபதத்திலே போலன்றே அநுபவிக்கலாவதென்ன; இங்கே வெள்ளமிட்டவன்று தான் பெற்றேனே வென்கிறார்.

(அடியும்படி கடப்ப) "கோலமாமென் சென்னிக்கு" என்றும் திருவடிகளைக்கொண்டு காடுமோடையு மளப்ப. (தோள்திசைமேல் செல்ல) திருத்தோள்கள் திக்குக்களிலே செல்ல. (முடியு மித்யாதி) திருவபிஷேகமும் அண்டபித்தியளவும் நிமிர்ந்தது. (வடியித்யாதி) கூரிய உகிராலே ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்தான். (இருஞ் சிறையித்யாதி) பெரியதிருவடி முதுகிலிருக்கப்பெற்ற மருதுவான திருவடிகளைக் கொண்டு உலகளந்தவன்று. அடியும்படி கடப்பத் தோள் திசைமேற்செல்ல முடியும் விசும்பளந்த தென்கிறார். நான் கேட்டார் வாய் கேட்டுப்போமத்தனை யென்கிறார்.

அவ.—பழுதென்னென்னில்; இன்று கதைகேட்க விருந்தே னென்பாரிறே.

(அடியும்படி கடப்ப) சென்று காணவேண்டும் திருவடிகள் தானே வந்து பூமியை யகப்படுத்திக்கொண்டது. தோள் திக்குக்

களை யெல்லை கண்டது. முடியும் அபரிச்சேத்யமான ஆகாசத்தை அளவுபடுத்திற்று. நின்றூர் நின்றபடியே வெற்றிகொள்ளுமாப்போலே. (வடியிற்யாதி) ஓரிடத்திலே விரோதி நிரஸநம்பண்ணி ஓரிடத்திலே சென்று முகம்காட்டு மளவன்றியே ஜகத்துக்கெல்லாம் ஏக காலத்திலே உதவினவிது. (கள)

அரு.—பதினேழாம்பாட்டு.—"என்பரே" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (நான்கேட்டார் வாயித்யாதி.)

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (பழுதென்னென்னி வித்யாதி.) என்பாரிறே - என்கிறாரிறே. இருஞ்சிறைப்புள்ளுருகை-கஜேந்த்ராழ்வானுக்கு. (கள)

நான்ற முலைத்தலை நஞ்சுண்டு, உறி வெண்ணெய்
தோன்ற வுண்டான் வென்றி சூழ் களிற்றை-யூன்றிப்,
பொருதுடைவு கண்டானும் புள்ளின் வாய் கீண்டானும்
மருதிடை போய் மண்ணளந்தமால். (கஅ)

ப-உ. நான்ற - தொங்குகிற, முலைத்தலை - ஸ்தநத்திலிருக்கிற, நஞ்சு-விஷத்தை, உண்டு - அமுதுசெய்து, உறி - தூக்கில்வைத்த, வெண்ணெய்-உருக்காத நெய்யை, தோன்ற - ப்ரகாசத்தமாய், உண்டான் - அமுதுசெய்தருளினவனுய், வென்றி - ஜயத்தையுடைய, சூழ்-(சத்ருக்களை) ஆக்ரமிக்கிற, களிற்றை-குவலயாபீடமென்கிற யானையை, ஊன்றி - உறைக்கும்படி, பொருது - யுத்தம்செய்து, உடைவு-நாசத்தை, கண்டானும் - செய்தவனும், புள்ளின்-பக்ஷியான கொக்கினுடைய, வாய் - உதடை, கீண்டானும் - பிளந்தவனும், மருது - அர்ஜுனமரங்களுடைய, இடை - நடுவில், போய் - சென்று, மண்-பூமியை, அளந்த - (திருவடிகளாலே) ஆக்ரமித்த, மால் - ஸர்வாதிகன் கிடீர்.

வ்யா—அவ—பதினெட்டாம்பாட்டு—திருவுலகளந்ததிலேயோ இழிந்தது, அத்தோடொக்க வையாதே தீண்டிப் பரிமாறின க்ருஷ்ணாவதாரத்தி லுமிழந்திலேனே வென்கிறார்.

(நான்றவித்யாதி.) இவன் தன்னுடைய வாயை முலையிலே வைக்க ஸ்வரூபாபத்தியைப் பெற்றுள் உள்ள. ஆரேனுமாக இவனை ஸ்பர்சித்தார்க்கு ஸ்வரூபாபத்திதப்பாது - எல்லாருக்கும் வந்தேறி போம். "ஷ்வோபூதாயவேணாஹிநிஷ்டூதே - ஸ்வோரூபேணஹிநிஷ்

பத்யதே'' என்கிறபடியே. (உறிவெண்ணெய் தோன்ற வுண்டான்) உறியிலே * சேமித்து வைத்த வெண்ணெயைக்கண்டு எட்டியுண்டு. களவுதோற்றும்படி யுண்டான். (வென்றி சூழ்களிற்றை) வென்றி மிக்களிற்றை. வெற்றியையுடைத்தாய் இவனைச்சூழ்க்க நினைத்த களிற்றையென்றுமாம். (ஊன்றி) ''ஆனைப்பூசல்'' என்றிராதேகிட்டி. ''மருப்பொசித்தபாகன்'' என்னும்படியே. (பொருதுடைவுகண்டானும்)† பசலைக்கலம்போலே உடையும்படிகண்டவன். ''இடைவுகண்டான்'' என்றுமாம். (புள்ளினித்யாதி) ''மண்ணளந்தமால்'' என்று-திருவுலகளந்தருளின நீர்மை பின்னுட்டுகிறது. க்ருஷ்ணவதாரத்துக்கும் திருவுலகளந்தருளின விடத்துக்கும்அழகும் மௌக்த்யமும்ஆச்ரிதபக்ஷபாதமும் முள்ளிட்டவை இரண்டிடத்துக்கு மொத்திருக்கும்.

(ஈான்றவித்யாதி.) தன்க்ருத்ரிமமானபால்போனவாறே அந்த மூலை பையானபடி. (தோன்றவுண்டான்.) சிசுபாலாதிகளும் ஏசும்படி. (வென்றியித்யாதி.) வெற்றியையும் சூழ்ச்சியையு முடைய. (ஊன்றி) தரித்துநின்று. (உடைவு) கருவிப்பைபோலே யாக்கினபடி. (மண்ணளந்தமால்) பின்னுட்டினபடி. (கஅ)

அரு—.பதினெட்டாம் பாட்டு.—ஸ்வரூபபத்தி-சாடு; தாய் வடிவு போய் பேய்வடிவானுள்-அர்த்தம்; மோக்ஷம் பெற்றாள் என்று-த்வனி. இவளுக்கு மோக்ஷங் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார். (ஆரேனுமாகவித்யாதி.) உறிவெண்ணெய், தோன்ற-கண்ணுக்குத் தோன்றவென்னுதல்; களவுதோன்ற வென்னுதல். இடைவு - இடைந்து போம்படி. கருவிப்பை-ஆயுதமிருக்கிற வுறை. ஆயுதம் வாங்கினால் பைசுருங்குமாப்போலே கொம்பைப்பிடுங்கவே ஆனைசுருங்கினபடி.()

மாலும் கருங்கடலே என்னேற்றாய், வையகமுண்
டாலினிலைத் துயின்ற வாழியான் - கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள், என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று. (கக)

ப-உ. வையகம்-ஜகத்தை, உண்டு-அமுதுசெய்து, ஆலினிலை-வடத்தின்தளிரிலே, துயின்ற - கண்வளர்ந்தருளுகிறவனுமாய், ஆழியான் - சக்ரத்தையுடையனுமாய், கோல - அழகிய, கரு - கறுத்த, மேனி - விக்ரஹத்தையுடைய, செம்-சிவந்த, கண்- நேத்ரத்தையுமுடையனுமாய், மால் - (ஆச்ரித) வ்யாமோஹத்தை யுடையனுமானவன்,

---

* சேமித்துவைத்த - அடக்கிவைத்த.
† பசலைக்கலம் - பச்சைமட்கலம்.

கண்படையுள் - பள்ளிகொண்ட விடத்தில், என்றும் - எக்காலத்திலும், திருமேனி - அவன்விக்ரஹத்தை, நீ - நீ, தீண்டப்பெற்று - அநுபவிக்கப் பெற்று, மாலும் - மயங்குகிற, கருங்கடலே - கறுத்த ஸமுத்ரமே, என் - என்ன, நோற்றாய் - நோன்பை அநுஷ்டித்தாய்.

வ்யா.—அவ.—பத்தொன்பதாம் பாட்டு.—(மாலும்) அவதார மொழியப் பெற்றருளுகிறார்.

(மாலும்.) மதுபாகமத்தரைப்போலே பிச்சேறுகின்ற. (கருங்கடலே) பெற்றபேறு உண்ணுடம்பே கோட்சொல்லுகிறதில்லையோ. இல்லையாகில் உடம்பு வெளுத்திராதோ. (என்நோற்றாய்) ஆசையைவிட்டு நானும் நோற்கும்படிசொல்லாய். (வையகமித்யாதி) சிறுவயிற்றிலே பூமி யெல்லாவற்றையும் மடக்கிப்பவனன ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருமேனியைத் தீண்டப் பெற்று.

(மாலுங் கருங்கடலே) நான் தீண்டப்பெறுதே மயங்கா நின்றேன்; நீ தீண்டப்பெற்று பரவசமாகா நின்றாய் - பூமியைப்போலே ஒருகாலன்றியே நித்யஸம்ச்லேஷம் பெறுவதேகடல்! என்று கொண்டாடுகிறார்.

(மாலும்) மதுபாக மத்தரைப்போலே பிச்சேறுகிற கடலே. (கருங்கடலே) உடம்பு வெளுக்கவேண்டாவே. (ஆழியான்) ஏகார்ணவத்திலும், திருப்பாற் கடலிலும் துயின்றதாதல். * ஆசிலேகையை வைத்து ப்ரளயத்தை இருதுண்டமாக விடுவேனென்றிருக்கு மென்றுமாம். பிராட்டிமாரோடு † ஊடினபோதும் உனக்குப் பிரிவில்லை. கடலும் எம்பெருமானும், ஸ்ரீபரதாழ்வானும் பெருமாளும்போலே நிறம். ப்ரஹ்ம ப்ராப்திபலமாய், கைங்கர்ய மாநுஷங்கிக மாஞற் போலே, திருமேனிதீண்டுகை ப்ராப்யம்; கைங்கர்யம், அவகாதத்தில் ஸ்வேதம்போலே; உபாயத்திலும் ஸ்வரூபஜ்ஞாநம்பிறக்கால் வ்யவஸாயம் ஆநுஷங்கிகம்.

அரு.—பத்தொன்பதாம்பாட்டு.—அவதரித்தவிடத்திலே யசோதாதிகள் மடியிலேவைத்து ஸ்பர்சிக்கப்பெற்றார்கள். ஆசரியாதேயிருக்க க்ஷீராப்திமடியிலேவைத்து ஸ்பர்சிக்கப்பெற்ற தென்றபடி.

கீழிற்பாட்டிலே, "மண்ணளந்த" என்றதைப்பற்ற மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (பூமியைப்போலே யித்யாதி.) "என்

* ஆசிலே - ஆயுத்தின்பிடியிலே.
† ஊடினபோது - பிரிந்தபோது.

றும் - நீ தீண்டப்பெற்ற" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (பிராட்டிமாரோடித்யாதி.) "கருங்கடல், கோலக்கருமேனி" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (கடலும் எம்பெருமானு மித்யாதி.) "தீண்டப்பெற்று" என்கைக்கு, தீண்டுகை பலமோ, கைங்கர்யமன்றே பலமென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மப்ராப்திர்த்யாதி.) ப்ரஸங்காத் அருளிச்செய்கிறார் (உபாயத்திலுமித்யாதி.) ஜ்ஞாநம்-ப்ரதாநம். கண்படையுள்-கண்வளர்ந்தருளுகிற அவஸ்தையிலே. (கூ)

பெற்றூர் தளை கழலப் பேர்ந்தோர் குறளுருவாய்ச்
செற்றூர் படிகடந்த செங்கண்மால் - நற்றூ
மரைமலர் சேவடியை வானவர்கைகூப்பி
நிரைமலர்கொண் டேத்துவரால் நின்று. (உ0)

ப-உ. பெற்றூர் - தாய்தந்தைகளுடைய, தளை-விலங்கு, கழலநழுவும்படி, பேர்ந்து - (பரமபதத்தினின்றும்) கிளம்பி, (க்ருஷ்ணாவதரித்து) ஓர் - அத்விதீயமான, குறளுருவாய்-வாமநவேஷத்தையுடையனுய், செற்றூர் - சத்ருவான மஹாபலியினுடைய, படி - பூமியை, கடந்த - அளந்தவனுய், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனன, மால் - (ஆஸ்ரித) வ்யாமோஹத்தை யுடையவனுடைய, நல் - அழகிய, தாமரைமலர் - கமலம்போலிருக்கிற, சே - சிவந்த, அடியை - திருத்தாள்களை, வானவர் - தேவர்கள், கைகூப்பி - அஞ்சலிபண்ணி, நின்று - (கூட்டமாய்) இருந்து, நிரை - (இதழ்) நிறைந்த, மலர்கொண்டு - பூக்களைக்கொண்டு, ஏத்துவர்-ஸ்தோத்ரம்பண்ணுவர்கள். ஆல் - ஆச்சர்யம்.

வ்யா.—அவ.—இருபதாம்பாட்டு.—"பெற்றூர் தளைகழல" என்கிறவித்தால் - க்ருஷ்ணவதாரம் சொல்லவுமாம்; வாமநாவதாரத்தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

(பெற்றூர் தளைகழலப்பேர்ந்து) பிறந்து - என்றுமாம். ஆரேனுமாக ஸ்பர்சிக்கப் பெற்றூர்க்குத் தளைகழல. (பேர்ந்தோர் குறளுருவாய்ச் செற்றூர்படிகடந்த) இந்த்ரனுக் கன்றுகாதே சத்ரு தனக்காகாதே. "விஷ்ணுர்ஜநோரூவ்ருஷ - த்விஷ்தக்ஷம் நஹிபாக்தவ்யம்" "யஜ்ஞாவேஷ்டி ஸமாவேஷ்டி-யஸ்த்வாந்த்வேஷ்டி ஸமாந்த்வேஷ்டி" (செற்றரிக்யாதி) மஹாபலி, "என்னது" என்றபிமாநித்த பூமியையளந்த ஸர்வேச்வரன். (நற்தாமரைமலர் சேவடியை) செவ்விமாறுதே யிருந்துள்ள திருவடிகளை. (வானவர்கைகூப்பி, நின்று

நிரைமலர்கொண்டேத்துவர் ஆல்) திரளநின்று பூவைக்கொண்டேத்துவ ரென்னவுமாம்; தொடுத்தமாலே கொண்டேத்துவ ரென்னவுமாம்.

அவ.—படுக்கையாய்க்கிடந்த கடலுக்குத் தன்னைக் கொடுக்கச் சொல்லவேணுமோ தேவதாந்தரங்களுக்குத் தன்னைக் கொடாநிற்க வெண்கிறார்.

(பெற்றூர்) நிதியெடுக்கப்பெற்ற ரென்னுமாப்போலே. "என் பிள்ளை" என்று அபிமானித்தால் தலை கழலாநின்றுல், "அடியோம்" என்றூர் தலை கழலச்சொல்லவேணுமோ. (பேர்த்து) ஸ்ரீவைகுண்டத்தி னின்று மென்னவுமாம். திருப்பாற்கடல் நின்றும் வந்தானுகவுமாம். (ஓர் குறள்) காட்டில் வாமநர்கள் இவன் வளர்ந்தருளின விடத்தோடொக்கும். (செற்றூர்) தன்னைச் செற்றூர். "ஜ்ஞ வ்ராணாஹி - மமப்ராணுஹி". (படிகடந்த) இக்காடுமோடையு மளந்த. பிறரது பெற்றுப்போலே யிருப்பதே. (செங்கண்) அபேக்ஷிதம் முடிக்கப் பெறுகை. (மால்) செய்தது போராதென்றிருக்கை. (நல்தாமரை) செவ்விக்கும், அழகுக்கும், குளிர்த்திக்கும் ஸத்ருசமான தாமரை தேடுகிறூர். (வானவர்) எட்டாதபடி பரணிட்டுக்கொண்டிருக்கிற. (கைகூப்பி) "கூவஸ்ரூவ்ரதிவேஷிரே - அவசாப்ரதிபேதிரே". (நிரைமலர்) ஏற்கவே * தொடையொத்ததளபம் கொண்டிருந்தார்களோ. (ஏத்துவரால்) இப்படி பிறந்தார் பெரூதொழிவதே. (நின்று) * நிண்ணகத் தெதிர்த்து நின்று. (உ0)

அரு.—இருபதாம்பாட்டு.—க்ருஷ்ணபக்ஷத்திலே (பிறந்தென்றுமாம்) என்கிறது. வாமநபக்ஷத்தை யருளிச்செய்கிறூர் (ஆரேனுமாக வித்யாதி.) (ஸ்பர்சிக்கப்பெற்றூர் தலைகழல) ஸம்ஸார ஸம்பந்தம் கழல என்றபடி. (நிரைமலர்) நிரை, வானவருக்காதல், மலருக்காதல் விசேஷணம். ஆல் - அசை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறூர் (படுக்கையாயித்யாதி.) "வானவர்" என்கையாலே-தேவதாந்தரம். (இப்படி) சாடு. இப்படி-இப்படி இவர்களைப்போலே இத்தபூமியிலே பிறந்தார் அவனை ஏத்தப் பெறு தொழிவதே! என்று விஷாதம். ஆல்-விஷாதஸமுச்சயம். (உ0)

நின்று நில மங்கை நீரேற்று மூவடியால்
சென்று திசை யளந்த செங்கண்மாற்கு - என்றும்

---

* நிண்ணகத்து - ப்ரவாஹத்தில்.

படை யாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம்
அடையாழி நெஞ்சே யறி. (உக)

ப-உ. சென்று - கிட்டி, நின்று - நின்று, அம் - அழகிய, கை - கையிலே, நிலம் - பூமியை, நீரேற்று - (தான) ஜலத்தைப்பிடித்து வாங்கிகொண்டு, மூவடியால் - மூன்றுபாதங்களாலே, திசை - திக்குக்களோடுகூடின ஜகத்தை, அளந்த - ஆக்ரமித்துக் கொண்டவனும், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனுமான, மாற்கு - ஸ்வாமிக்கு, என்றும் - எக்காலத்திலும், படை - ஆயுதம், ஆழி - சக்ரம்; ஊர்தி - வாஹநம், புள் - பெரியதிருவடி; பாம்பு - திருவநந் தாழ்வானை, அணையான் - படுக்கையாகவுடையவனுடைய, பாதம் - திருவ்வடிகளை, அடை - ஆச்ரயி. ஆழி - கம்பிர ஸ்வபாவத்தையுடைய, நெஞ்சே - மநஸ்ஸே, அறி - நன்முய்த் தெரிந்துகொள்.

வ்யா.—அவ.—இருபத்தோராம்பாட்டு.—(நின்று) ஸர்வேச்வரனனவன், அர்த்தித்வம் தோற்றும்படிக் கிடாகநின்று. (நிலம் அங் கைநீரேற்று) கொடுத்துவளர்ந்த அழகியகையிலே பூமியை நீரேற்று. (மூவடியித்யாதி) திக்குக்கள்தோறும் சென்றளந்து, அத்தாலே அலப்யலாபம்பெற்றனு யிருக்கிறவனுக்கு. (என்றுமித்யாதி) எல்லாவற்றையுமுடையவன் கிடீர் இரந்தான். கையிலே திருவாழியைப் பேராதேபிடிக்கவல்லவனும், திருவடிமுதுகிலே * நற்றரிக்க இருக்கவல்லவனும்; திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே சாயவல்லவனும் ஸர்வேச்வரனுகிறான். (பாதமடையாழி நெஞ்சேயறி) மஹாபலி கையப்போலே யாகாதே, அவன் திருவடிகளாயடை. (ஆழிநெஞ்சே யறி) அளவுடைய நெஞ்சேயறி. † ஓலக்கவார்த்தை யென்றிரார்தே இத்தை புத்திபண்ணியிரு.

அவ.—இரண்டுபாட்டாலும் ஸர்வேச்வரன் கிடீர் ஆச்ரிதார்த்தமாக இப்படி எளியனனனென்று சொல்லித்றும் ஈடுபடுகிறார்.

(நின்றித்யாதி) பிராட்டியை ஸ்ரீஜகராஜன் சீர்வார்க்கப் பெற்றுற்போலே சென்று நின்றென்னுதல். (சென்று.) கடக்தபடிசென்றளந்தென்னுதல். (செங்கண்மால்) தத்தாமது பெற்றுலும் இனியராகவேணுமோ. (என்றும்) பரிபூர்ணன் கிடீர். (பாதமடை ஆழி நெஞ்சே) என்னை ஒதுவிக்கவல்லரி. எல்செல்லாமையறி. அல்லாத

---

* நற்றரிக்க - நன்முய் தங்கும்படி.

† ஓலக்கவார்த்தை - ஸபையில் டம்பமாகச்சொல்லும் வார்த்தை.

வார்த்தைபோலல்ல; இத்தை புத்திபண்ணு. [சீரால்பிறந்து] அன்று அறுபதினாயிரம் ஸம்வத்ஸரம் தபஸ்ஸுபண்ணினவன் வயிற்றிலே, "வித்தஞ்ஸோஉயாஸோஉ - பிதரம்ஸோசயாமாஸ" என்று-ஆசைப்படவந்து பிறக்கை. [சிறப்பால் வளராது] வெண்ணெயையும் பெண்களையும் களவுகண்டு மூலையடியே வளருகை. [பேர்வாமனுகாக்கால்] நாராயணனுனுலாகாதோ. [பேராளர] ஐச்வர்யத்திலே இழப்பாறவேணுமோ. [மார்வித்யாதி] பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டபூமி. (உக)

அரு—இருபத்தோராம் பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (இரண்டுபாட்டாலுமித்யாதி) இங்கு "நில்மங்கை" என்று பூமிப்பிராட்டியாக்கி அருளிச்செய்கிறார். (பிராட்டியையித்யாதி) யஜ்ஞவாடத்தளவும் சென்றுநின்றென்னுதல்; நின்றவிடத்திலே நின்று திசையெங்கும் சென்றளந்தென்னுதல். தமக்கு உபதேசிக்கிற நெஞ்சுக்குச் சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார். (என் செல்லாமை யென்று) இப்படி வாமனனிடத்திலே ஈடுபட்டபேருண்டோ வென்ன; அருளிச்செய்கிறார். (சீரால் பிறந்தித்யாதி) (இழப்பாறவேணும்) நீர்மையில் இழப்பாறப் போகாமையாலே மேன்மையிலே இழப்பாற வேணுமென்றபடி. உன்கையிலே பன்னிரண்டும் பட்டபூமி. இப்படி வாமனனுகாதபோது ஏற்கவருமையோ வென்றபடி. ()

அறியு முலகெல்லாம் யானேயு மல்லேன்
பொறி கொள் சிறை யுவணமூர்ந்தாய் - வெறிகமழும்
காம்பேய் மென் தோளி கடைவெண்ணெ யுண்டாயைத்
தாம்பே கொண்டார்த்த தழும்பு. (உஉ)

ப-உ. பொறிகொள்-நாநாவர்ணமான, சிறை - பக்ஷத்தையுடைய, உவணம் - கருடனை, ஊர்ந்தாய்-நடத்துமவனுய், வெறி-பரிமளம், கமழும்-வீசுகிற, காம்பு - மூங்கிலோடு, ஏய் - ஸமாநமான, மெல்-ம்ருதுவான, தோளி - புஜத்தையுடைய (யசோதை), கடை - மதித்த, வெண்ணெய் - உருக்காத நெய்யை, உண்டாயை - அமுதுசெய்த உன்னை, தாம்பே - கயிறையே, கொண்டு - எடுத்து, ஆர்த்த - இணைத்துக்கட்டுகையாலுண்டான, தழும்பு - வ்ரணம், யானேயுமல்லேன் - நானொருவனே யல்லேன்; உலகெல்லாம் - நாடடங்க, அறியும் - அறிந்திருக்கும். (உஉ)

வ்யா.—அவ.—இருபத்திரண்டாம் பாட்டு.—(அறியும்) ஆச்ரிதார்த்தமாக எளியனனு னென்னும்படி ரேறிந்தபடி. யெங்ஙனே யென்னில்; (உலகெல்லாம் அறியும் யானேயுமல்லேன்) சிசுபாலன் கூடவறியாதே. (பொறியித்யாதி) பொறிகொண்டிருந்துள்ள சிற கையுடைத்தான திருவடியை யூர்ந்தவன்னே. (வெறிகமழும்) பிள்ளை முகம் வாடவொண்ணுதென்று எப்போதும் ஒப்பித்தபடியே இருக்கையாலே பரிமளம் கமழாநின்ற. (சாம்பு ஏய் மென்தோளி) மூங்கிலோடொத்து ம்ருதுவான தோளையுடையவள். (கடைவெண்ணெயுண்டாயை) அவள், மார்த்தவம் பாராதே கடைந்த வெண்ணெயுண்டாயை. (தாம்பித்யாதி) கைக்கெட்டிற் றருருகாம்பாலே கட்டின தழும்பு. (அறியுமுலகெல்லாம்) கயிற்றைநீட்டவொண்ணுது; உரலைச் சிறுக்க வொண்ணுது; இவ்வுடம்பிலே இடங்காணு மித்தனையிறே.

அவ.—ஆச்ரித பக்ஷபாதம்போலே ஆச்ரிதபவ்யதையும்.

(உலகெல்லாம்) சிசுபாலனையிட்டுச் சொல்லவேணுமோ. (யானேயித்யாதி) அதுக்காஹமுடைய நானே யல்லேன். (பொறியித்யாதி) நிரபேக்ஷனாய் அர்த்திக்கப்பிறந்தநீ. (வெறி) ஸ்வாபாவிகமென்னுதல்; பிள்ளை * முசியாமைக்கென்னுதல். (காம்பு)பசுமையும், திரட்சியும், செவ்வையும். (மென்தோளிகடை வெண்ணெயித்யாதி) இருவர்க்கு தாரகம்; அபலைகட்டிலே கட்டுண்பதே. (தாம்பேகொண்டு) குறுங்கயிற்றைக்கொண்டு. (உஉ)

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு.—ஆர்த்த-ஆர்க்கப்பட்ட என்றர்த்தமாக்கி யருளிச்செய்கிறார். (கயிற்றைநீட்ட வித்யாதி.)

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (ஆச்ரிதபக்ஷபாத மித்யாதி) இட்டு - அவன்மாத்ரமல்ல வென்றபடி. இருவர்க்கும் - தாய்க்கும் மகனுக்கும். அவளுக்கு ஜீவநஹேது, இவனுக்கு ஆச்ரிதஸ்பர்சமென்றபடி. (உஉ)

தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவா மங்கை
தழும்பிருந்த தாள்சகடம் சாடி - தழும்பிருந்த [ந்த
பூங்கோதை யாள்வெருவப் பொன்பெயரோன் மார்பிட
வீங்கோத வண்ணர் விரல். (உங)

ப-உ.—அம்-அழகிய, கை-கரமானது. சார்ங்கம் - சார்ங்கமென்கிற தநுஸ்ஸினுடைய, நாண்-நாணியினுல், தோய்ந்த - படிந்த, தழு

* முசியாமைக்கு - இளையாமைக்கு.

ம்பு - வ்ரணத்தை, இருந்தவாம் - உடைத்தாயிருந்தது, தாள் - திருவடி, சகடம் - சகடாஸுரனை, சாடி - உதைத்து, (அத்தாலே) தழும்பிருந்த - வ்ரணத்தை யுடைத்தா யிருந்தது, வீங்கு - வ்ருத்தியடைந்த, ஓத - அலைகளையுடைய ஸமுத்ரம்போலுள்ள, வண்ணர் - திருமேனியையுடையவருடைய, விரல் - அங்குளிகள், பூம் - அழகிய, கோதையாள் - மயிர்முடியையுடைய (பிராட்டி), வெருவ - நடுங்கும்படி, பொன்பெயரோன் - ஹிரண்யனுடைய, மார்வு - வக்ஷஸ்ஸை, இடந்த - பிளந்ததாலுண்டான, தழும்பிருந்த - வ்ரணத்தையுடைத்தாயிருந்தன. (உரு)

வ்யா.—அவ.—இருபத்துமூன்றும்பாட்டு.—ஒரு செயலைக்கொண்டு சொல்லும்படி யென்னென்னில்; ஒருசெயலிலேயோ ஒரு அவதாரத்திலேயோ தழும்பு சுமந்ததென்கிறார்.

(தழும்பிருந்தவித்யாதி) பிராட்டியுங்கூடக் கூசி ஸ்பர்சிக்கவேண்டும் அழகியகை, சார்ங்கதாண தோய்ந்த தழும்பிருந்தவாம். ஜ்யாகிணத்தாலே கர்க்கசமாயிருக்கும். (தாள்சகடம் சாடித்தழும்பிருந்த பூங்கோதையாள் வெருவப்பொன் பெயரோன் மார்விடந்த) "அடலரியாய்ப்பெருகினனே" என்கிறபடியே. (விரல்தழும்பிருந்த) கால் தழும்பு, கைதழும்பு, அவாந்தரா வயவமான விரல் தழும்பு; ஒன்றேயோ தழும்பாயிற் றென்கிறார்.

(பூங்கோதையாள் வெருவ) "ஆச்ரிதருடைய கார்யம்" என்றால், உகக்குமவளும் பயப்படும்படி உடம்படையத்தழும்பு. (சாடி) அவன் * மூரிநிமிர்ந்தான். இவர்க்குக்குவாலாயிருக்கிறபடி. (பூங்கோதையாள் வெருவ) பொறுதென்றிருக்குமவள். வீரவாசியறியுமவள். ருஷிவேஷத்தோடே திரியவேணுமென்னுமவள். (வீங்கோதவண்ணர் விரல்) வளர்த்தியும் குளிர்த்தியும் [மஹாவிஷ்ணும்] விக்ரஹவ்யாப்தியாயிற்று. (உரு)

அரு.—இருபத்துமூன்றும்பாட்டு.—மேலுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார். (பூங்கோதையா லித்யாதி) பூங்கோதையாளை ராமாவதாரத்தோடே சேர்த்து அருளிச்செய்கிறார். (பொறுதென்றித்யாதி) பொறுது என்று - ஆஸ்ரிதரக்ஷணம் போராதென்னவேணுமென்றிருக்குமவ ளென்றபடி. இப்படிப்பட்டவளும் வெருவும்படி சார்ங்கதாண் தோய்ந்த என்று இங்கும் கூட்டி யோஜிப்பது.

---

* மூரி நிமிர்ந்தான் - நிமிர் போம்படி நிமிர்ந்தான்.

விரலொடு வாய் தோய்ந்த வெண்ணெய்கண்டு, ஆய்ச்சி
உரலோ டுறப்பிணித்த நான்று - குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே
ஓங்கோத வண்ணு வுரை. (உசை)

ப-உ. விரலொடு-விரல்களாலே எடுத்து, வாய்தோய்ந்த-திருப் பவளத்தில்வைத்த, வெண்ணெய் - உருக்காதநெய்யை, கண்டு-பார்த் து, ஆய்ச்சி - இடைச்சி, உலரோடு-உலூகலத்தோடு, உற-இறுக்கி, பிணித்தநான்று - கட்டினவன்று, குரல் - கண்டத்வனி, ஓவாது - ஓயாமல், ஏங்கி - அழுது, நினைந்து - (வெண்ணெயை) த்யாநித்துக் கொண்டு, அயலார் - பிறர், காண - பார்க்கும்படி, இருந்திலையே - இ ருக்கவில்லையோ? ஓங்கு - வ்ருத்தியடைந்திருக்கிற, ஓத - கடலோ லஸமாநமான, வண்ணு - வடிவையுடையவனே, உரை - சொல்லு.

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு.— (விரலித்யாதி) விரல்வாயி லே தோய்ந்தவளவிலே. ""வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு" என்னும் சொல்லாகின்றது; "விரலொடு வாய்தோய்ந்த" என்றும் சொல்லாகின்றது; இவையெங்ஙனே சேரு ம்படி" என்று பிள்ளை திருநறையூ ரரையர் பட்டரைக்கேட்க; "இவ னுக்கு என்றுந் திருப்பணி யிதுவன்றே, ஒருநாள் அங்ஙனுமா கிறது, ஒருநாள் இங்ஙனுமாகிறது" என்றருளிச்செய்தார். "வைக லும் வெண்ணெய்கைகலந்துண்டான்" என்கிறபடியே. (உரலித்யாதி) உரலென்றும் அவனென்றும் பிரித்துக்காணப் போகாதபடி கட்டின வன்று. (குரலோவாதேங்கி) அழப்புக்கத்வநிமாறுதே; ஏங்கின ஏக்கம் கீழ்விழாதே. (நினைந்து) இப்படி அழாநிற்கச் செய்தேயும் பெரிய திருப்பணிகளாயிற்று நினைப்பது. வெண்ணெய்களவுகா ணும்படி நினைந்து. (அயலார்காண இருந்திலையே) ஐந்துலகுங் குடி யில் பெண்களில் காணுதாருண்டோ. இவளுலே நெஞ்சு புண்பட் டாரெல்லாம் இவன்பட்டபாடுகாண வருவர்களிறே. * ""கூதூ ூத டெஃவாணுவாவெ ரிவெஹவமஜூதே - அத்யுத்கட்ஃ புண்யபாபை ரிஹைவபலமச்நுதே"யிறே. (ஓங்கோதவண்ணுவுரை) இவனைக்கட்டிவைத்தது ஒருகடலைத் தேக்கிவைத்தாற்போலே கா ணும். (உரை) இவ்வடிவு காணவேணும்; இவ்வடிவோடே கூட வார்த்தையும் கேட்கவேணும். பொய்யாகில் உரலோடேகூட இழு த்துக்கொண்டு புறப்படுவேனே.

(விரலித்யாதி)வயிறுவளர்த்து அகப்படப்பெற்றேமோ. * மிடற்றுக்குக் கீழிழியப்பெற்றேமோ. (உரலொடு) உரலோடு தன்னோடு வாசியில்லாமை. (குரலோவாது) அழப்புக்கவாறே, "இக்கோலுண்டு பார்" என்ன; ஏங்கிநின்றான். (நினைந்து) வெண்ணெயை நினைத்திருக்கை. (அயலார்காண) பஞ்சலக்ஷம்குடியில் பெண்களடைய; அவர்களே பந்தித்துத்தான் அகப்படாதிருக்கும்; அவர்கள் இவன் அகப்படவல்லனே என்றிருப்பர்கள். (இருந்திலையே) சாமசரத்தை ராவணன் மறக்கில் மறக்கலாம். (ஒங்கோதவண்ணு) நெருக்குண்கையாலே வந்தபூர்த்தி. (உரை) "நமோமோவழி - நமேமோகம்" என்னும் நீசொல்லிக்காண். அவாப்த ஸமஸ்தகாமன் குறையாயழுவதே; ஸர்வசக்தி மிடுக்கின்றி யொழிவதே; ஸர்வஜ்ஞன்புரையறுவதே. ()

அரு.—இருபத்துநாலாம்பாட்டு.—"இலை மெளக்ய வைதக்ர்யங்கள் சேரும்படி." என்று அரையர். விரலாலே தொட்டுவாய் தோய்ந்தாரை வென்ன அருளிச்செய்கிறார். (வைகலு மித்யாதி) அவ்விடத்துக்கு இதுவுமொரு அர்த்தம். காணுதே துஃகப்பட்டவர்கள் காணக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார். (சுதூ—ஃதுடெஃ-அத்யுக்கடஃ இத்யாதி) புண்யபலம். நாளாகை. "உரை" என்றதால் பலித்ததை யருளிச்செய்கிறார். (பொய்யாகி வித்யாதி) பொய்யென்றுயாகில் கையும் களவுமாகக்கட்டுண்டதை யவன் நினைத்திருக்குமோ வென்ன; அருளிச்செய்கிறார். (ராமசரத்தை யித்யாதி) ஆஸ்ரிதவிஷயத்தில் உகந்து கட்டுண்கையாலே மறவாமல் நினைத்திருக்குமென்றபடி. புரையறுகை - அவிழ்க்கைக்கு உபாய மறியாதிருக்கை. (உ)

உரைமேற் கொண்டென்னுள்ள மோவாது, எப்போது
வரைமேல் மரதகமே போல - திரைமேல் [ம்
கிடந்தானைக் கிண்டானைக், கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும். (உடு)

ப-உ. வரைமேல்--பர்வதத்தின்மேல், மரதகமே போல - மரதகமணிபோல, திரைமேல் - ஸமுத்ரத்தின்மேலே, கிடந்தானை -பள்ளிகொண்டவனுய், கிண்டானை - (ஹிரண்யனை)பிளந்தவனுய், கேழலாய்-வராஹமாய், பூமி - தரணியை, இடந்தானை - குத்தி எடுத்தவனை, என்-என்னுடைய, உள்ளம்-மநஸ்ஸு, ஓவாது-ஒழியாமல், எப்போ

மிடற்றுக்கு - கழுத்துக்கு.

தும் - எந்தகாலத்திலும், மேல் - சிரேஷ்டமான, உரைகொண்டு - சப்தங்களைக்கொண்டு ஏத்தி - துதித்து, எழும்-உஜ்ஜீவிக்கும். (உரு)

வ்யா.—அவ.—இருபத்தைந்தாம்பாட்டு.—இவனுடைய இந்திர்மை யநுபவித்தால் வேறொன்றால் போதுபோக்க வொண்ணு தென்கிறார்.

(உரைமேல்கொண்டு) மேலானவுரையைக்கொண்டு. அதாவது-வாக்குக்கு விஷயமானதைக் கொண்டு. அன்றிக்கே, உரைக்கையாலே மேற்கொண்டு. அதாகிறது - சொல்லிச் செல்லுகையிலே கிளர்ந்து. (என்னுள்ள மோவாதெப்போதும்) என்னுடைய ஹ்ருதயமானது உச்சிவீடு விடக்கடவதன்றிக்கே. ஸ்வரூபமொருகாலாக அழியுமோ. ஒருமலையிலே ஒருமரதக கிரியானது பரப்புமாறப் படிந்தாற்போலே யாயிற்று திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின போதிருக்கும்படி. ஸர்வேச்வரனுய் ஸர்வசக்தியானவனுடைய ஸௌலப்ய சரிதங்களைச் சொல்லுகைக்கு.

(என்னுள்ள மித்யாதி) தாஸவ்ருத்திகனுன வென்னுடைய மகஸ்ஸானது இடைவிடாது. (எப்போது மித்யாதி) ஒருபர்வத சிகரத்திலே இந்த்ரநீலமணி யிருந்தாற்போலே விளங்குகிற ஸமுத்ரசாயியானவனை. (கிடந்தானைக்கிண்டானை) ஆர்த்தரைக்கண்டால் படுக்கை அடிகொதிக்குமபடி. (ஏத்தி எழும்) ஸ்துதித்து உஜ்ஜீவிக்கும்.

அவ.—(உரை மேல்கொண்டு) இவனுக்கு நினைவும் பேச்சும் வெண்ணெயிலே யானூற்போலே, ஆழ்வார்க்கு நினைவும் பேச்சும் இவன்பக்கலிலே யானபடிசொல்லுகிறது.

(உரைமேல்கொண்டு) வாக்குக்கு விஷயமாகக்கொண்டு. வாக்வ்ருத்தியை மேற்கொண்டென்னவுமாம். (என்னுள்ள மித்யாதி) ஒருமலைமேலே மரதகம் கிடந்தாற்போலே திரைமேலே கண்வளர்ந்தருளுகிறவனை. (கிண்டானை யித்யாதி) வராஹரூபியாய்ப்புக்கு அண்டபித்தியில் நின்றும் ஓட்டுவிடுவித்து பூமியை யிடந்தவனை. (ஏத்தியெழும்) ஏத்தி உஜ்ஜீவியாநின்றது. (உரு)

அரு.—இருபத்தைந்தாம்பாட்டு.—(உரைமேல்) மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (இவனுக்கித்யாதி) கேழலாய்க்கிண்டிடந்தானை யென்றபடி. சேதந ஸமாதியாலே உள்ளம் ஏத்தி எழும் என்று க்ரியை. வாக்வ்ருத்தியை மேற்கொள்ளுகை - வாக்வ்ருத்தியை யுடைத்தாகை யென்றபடி. (உரு)

எழுவார் விடைகொள்வா ரின்றுழா யானை
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவார்
வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே, வானோர்
மனைச் சுடரைத் தூண்டும் மலை. (உசு)

ப.உ. எழுவார்-(பலத்தையடைந்து) விட்டுப்போவார், (ஐஸ்வர்யகாமர்) விடைகொள்வார் - ஆஜ்ஞையப்பெறுவார், (கேவலர்) ஈன் - போக்யமான, துழாயானை - திருத்துழாயையுடையவனை, வழுவாவகை - நீங்காத உபாயத்தை, நினைந்து-அநுஸந்தித்து, வைகல் - தினந்தோறும், தொழுவார் - ஆஸ்ரயிப்பார், (பகவத்காமர்) (இம்மூவர்களுடைய) வினை-பாபமாகிற, சுடரை - அக்நியை, நந்துவிக்கும் - நாசம்செய்யும், வேங்கடமே - திருவேங்கடமென்கிற மலையே, வானோர் - தேவர்களுடைய (நித்யஸூரிகளுடைய,) மனைச்சுடரை - திருவுள்ளமாகிற விளக்கை, தூண்டும் - வ்ருத்திபண்ணும், மலை - பர்வதம். (உசு)

வ்யா.—அவ.—இருபத்தாறும் பாட்டு.—(எழுவார்) எல்லார்க்கும் நினைவும் செயலும் ஒக்கப்பரிமாறலாவது பரமபதத்திலேயன்றே வென்னில்; நித்யஸூரிகளுங்கூட அவனுடைய ஸௌலப்யங்காரண வருகிறது திருமலையிலேயன்றே வென்கிறார்.

(எழுவார்) ஐச்வர்யம் வேணுமென்று மேலேமேலே ப்ரார்த்திக்குமவர்கள். (விடைகொள்வார்) ஆத்ம ப்ராப்தியே யமையும்; நீ வேண்டாவென்று இவன் பக்கலில் நின்றும் அகலுமவர்கள். (ஈன் துழாயானை யித்யாதி) இவனை நாங்கள் பிரியாதொழிய வேணுமென்று நினைத்து, காலமெல்லாம் தொழுவார்கள். (வினை யித்யாதி) பகவத்ப்ராப்தி விரோதி, ஆத்மப்ராப்தி விரோதி, ஐச்வர்யப்ராப்தி விரோதியான பாபங்களை, எரிகிறகொருப்பை யவித்தாற்போலே நசிப்பிக்கும் வேங்கடமே. (வானோரித்யாதி) நித்யஸூரிகளுடைய கிளர்ந்த மநஸ்ஸை அவனுடைய ஸௌலப்யம் காணப்போரிகோ வென்று கிளர்த்தாநிற்கும் திருமலை. காலாந்தரமன்று, ஸந்நிஹிதம்.

(எழுவார்) ப்ரயோஜநம் கைபுகுந்தவாறே போவார் ஐஸ்வர்யார்த்திகள். (விடைகொள்வார்) பலம் நித்யமாகையாலே மீட்சியில்லை கேவலர்க்கு. (வினை யித்யாதி) இம்மூவர்க்கும் உத்தேச்ய விரோதிகளைப் போக்கும். நந்துவிக்கை - அவிக்கை. (வானோரித்யாதி)

இங்குள்ளார் * ஒழிவில் காலமென்ன, அங்குள்ளார் * அகலகில் லேன் என்னச் சொல்லும். (உசு)

அரு.—இருபத்தாறும்பாட்டு.—(எழுவார்) "மலை" என்கையாலே ஸகநிஷ்டம். இது ப்ரத்யக்ஷமன்றே வென்றபடி.

மீட்சியில்லாமையாலே இவனைவிட்டு விடைகொண் டகன்று போகிறதே அவர்களுக்கு ஸ்வபாவ மென்றபடி. (உசு)

மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து
சிலையால் மராமரமேழ் செற்று - கொலையானைப்
போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றியான் கை. (உஎ)

ப-உ. மலையால் - பர்வதத்தினால், குடை-சத்ரத்தை, கவித்து - மூடி, மா - (கேசி என்கிற) குதிரையினுடைய, வாய் - உதட்டை, பிளந்து-கிழித்து, சிலையால் - தநுஸ்ஸினால், மராமரம்-ஆச்சா மரம், ஏழ் - ஏழையும், செற்று - அழியச்செய்து, கொலை - (பிறரை) கொல்லுகிற, யானை - (குவலயாபீடமென்கிற) ஆனையினுடைய, போர் - யுத்தஸாதநமான, கோடு - கொம்பை, ஒசித்தனவும் - முறித்தனவும், பூங்குருந்தம் - பூத்தகுருக்கத்திமாத்தை, சாய்த்தனவும் - தள்ளினவும், கார் - (ஸ்வபாவத்தால்) மேகத்தோடொத்த, கோடு - சங்கத்தை, பற்றியான் - பிடித்தவனுடைய, கை - கரங்கள் கிடீர். (உஎ)

வ்யா.—அவ.—இருபத்தேழாம் பாட்டு—(மலையித்யாதி) திருவேங்கட முடையானுடைய திருக்கையைப் பார்த்தார்போலே.

(மலையால் குடைகவித்து) வர்ஷத்துக்குக் குடை யபேக்ஷித மிறே. இந்த்ரன் ஆஸுரப்ரக்ருதி யல்லாஹ்மையாலே பகிரங்கத்தாலே செய்தானாகில், மலையையெடுத்து நம்மை நோக்கிக்கொள்வோமென்று மலையைக் குடையாகக்கவித்து. (மாவாய்பிளத்து) பண்ணின ப்ராணிகூ்யத்தின் கனத்தாலேகேசியைக்கொன்று. (சிலையித்யாதி) அவதாரத்துக்கடித்த ஆயுதத்தாலே மராமரமேழையும் செற்று. (கொலை யித்யாதி) கொல்லக்கடவதாக நிறுத்தின குவலயாபீடத்தினுடைய பொராகின்றகோட்டை அநாயாஸேந முறித்தனவும். (பூங்குருந்தம் சாய்த்தனவும்) பூப்பறித்தனவும். (கார்க்கோடித்யாதி) ப்ரமஹரமாய் முழக்கத்தையுடைத்தா யிருக்குமென்கை. அன்றிக்கே, திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்ய மிருந்தபோது மேகத்

தைப்பற்றி யிருந்த சங்குபோலே யிருந்ததென்னை. இடையர்செய் வதெல்லாம் முன்கை உரத்தாலே, க்ஷத்ரியர், என்றும் வில்லாலே யென்னுமிடம் தோற்றுகிறது. ஸ்ரீபாஞ்சஜந்யம் பிடிக்கவும்பொருத மருதுவானகையைக் கொண்டு கிடீர் இதெல்லாம் செய்தது.

அவ.—சேஷ்டிதங்களிலேஉருகுகிறீர்.ஸுகுமாரமானகையைக் கொண்டே இப்பெரிய செயல்களைச் செய்வதே. செய்யாநின்றால் அநாயாஸேந செய்வதே!

(மலையித்யாதி) மலையாக விநியோகங்கொண்டாரே. (மாவாய்பிளந்து) நாரதாதிகள் கூப்பிடும்படிவந்த கேசியை நெட்டிக் கோளை கீண்டாற்போலே கீண்ட. (சிலையித்யாதி) எய்யவொண்ணாத படி திரளநின்றமராமரங்களை. (கொலையித்யாதி) கொலையிலே உற்ற ஆனை. (பூங்குருந்தம்) தலைத்துப் பூத்து நின்ற. (கார்க்கோடு) குளிர்ந்து ஸ்ரமஹரமாய் பெருத்து முழங்குகை. ஸ்ரீபாஞ்சஜந்யம் தொடப்பொருதகைகிடீர். (உஎ)

அரு.—இருபத்தேழாம் பாட்டு.—(மலையால்) கோடு - சங்கம். மேகஸ்வபாவத்தையுடைய சங்கென்னுதல்; மேகத்தோடே கூடின சங்கென்னுதல். க்ருஷ்ணன் கையாலே செய்கையையும், பெருமாள் வில்லாலே செய்கையையும் பற்ற தாத்பர்ய மருளிச்செய்கிறீர் (இடையரித்யாதி). "பற்றி" என்று ப்ரயாஸந் தோற்றுகையாலே பொருதம்ருதுவானகை என்கிறது.

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறீர் (சேஷ்டிதங்களி லித்யாதி). நெட்டி-வாடின. (உஎ)

கைய வலம்புரியும் நேமியும், கார்வண்ணத்
தைய மலர்மகள்நின் னகத்தாள் – செய்ய
மறையான் நின்னுந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னகத் திறை. (உஅ)

ப-உ. கார் - மேகம்போன்ற, வண்ணத்து - திருமேனியையுடைய, ஐய! ஸ்வாமியே! வலம்புரியும் - ஸ்ரீ பாஞ்சஜந்யமும், நேமியும் - திருவாழியும், கைய - கையிலிருக்கின்றன; மலர் - பூவிலவதரித்த, மகள், பெண் (லக்ஷ்மி), நின் - உன்னுடைய, அகத்தாள் - மார்விலிருக்கிறாள்; செய்ய-நிர்த்துஷ்டமான, மறையான் - வேதத்தை

யுடையவன் (ப்ரஹ்மா), நின் - உன்னுடைய, உந்தியான் - நாபியில் பிறந்தவன்; மா - பெரிய, மதில் - ப்ராகாரத்தையுடைய, மூன்று - மூன்றுபட்டணத்தையும், எய்த - அடித்த, இறையான் - ஈஸ்வராபிமானியான ருத்ரன், நின்னகத்து - உன்திருமேனியில், இறை - ஒரு மூலையிலிருக்கிறவன். (உஅ)

வ்யா—அவ.—இருபத்தெட்டாம்பாட்டு.—(கையித்யாதி) ஐஸ்வர்யம் சொல்லுகிற தென்னவுமாம். நீர்மை சொல்லுகிறதென்னவுமாம்.

(கையவலம்புரியும் நேமியும்) ஷகய - கையிலேயுள்ள.(கார்வண்ணத்தைய) ஸுமஹாரமான வடிவையுடைய ஸ்வாமியானவனே. (மலர்மகள் நின்னகத்தாள்) * கோலமலர்ப்பாவை நின்திருமார்விலாள். (செய்யவித்யாதி) நேரே உன்னைக் காட்டவற்றான வேதத்தையுடைய ப்ரஹ்மா உன் திருநாபீகமலத்திலானன். (மாமதிளித்யாதி) த்ரிபுரதஹநம்பண்ணி ஈஸ்வராபிமானியா யிருக்கிற ருத்ரன் உன் திருமேனியைப்பற்றி இறையாயிற்று. அன்றியே, (நின்னகத்திறை) என்று திருமேனியில் ஏகதேசத்திலே என்னவுமாம்.

(கையித்யாதி) ஐஸ்வர்யமாதல்; அழகாதல். (கார்வண்ணம்) வேறே வேணுமோ; வடிவேயமையாதோ. (ஐய) என்னது என்னலாயிருக்கை. (மலர்மகள் நின்னகத்தாள்) * அலர்மேல் மங்கையுறைமார்வன். (மாமதிளித்யாதி) ஊரைச்சுட்டுப் பேரைப்படைத்தான். கோட்சொல்லி ப்ரஸித்தராமாப்போலே. ஆகத்தில் ஏகதேசத்தைப் பற்றிஞனென்னுதல். ஆகத்தைப்பற்றி இறையானனென்னுதல். (உஅ)

அரு.—இருபத்தெட்டாம் பாட்டு.—(கையவலம்புரி) திவ்யாயுதங்கள் அழகுக்கு முடல். (உஅ)

இறையும் நிலனு மிருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயு மாவான் - பிறைமருப்பில்
பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி. (உகூ)

ப-உ.. இறையும் - ஸர்வேச்வரனும், நிலனும் - பூமியும், இரு - விசாலமான, விசும்பும் - ஆகாசமும், காற்றும - வாயுவும், அறை -

ஒலிக்கிற, புனலும் - ஜலமும், செம் - சிவந்த, தீயும் - நெருப்பும், (இந்த பஞ்சபூத நிர்மிதலீலா விபூதியை) ஆவான் - (சேஷமாக) உடைத்தாயிருக்குமவன், பிறை - பாலசந்த்ரன்போன்ற, மருப்பு - கொம்பையும், பை - அழகிய, கண் - நேத்ரங்களையுமுடைய, மால் - (கைங்கர்யத்தில்) வ்யாமோஹத்தையுடைய, யானை - கஜேந்த்ராழ்வானால், படு - அநுபவிக்கப்பட்ட, துயரம் - துக்கத்தை, காத்து - போக்கடித்து, அளித்த - ரக்ஷித்த, செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடைய, மால்கண்டாய் - ஸர்வேச்வரன் கிடாய்; தெளி - இதைதான் நீ அறி. (உகூ)

வ்யா.—அவ.—இருபத்தொன்பதாம்பாட்டு.—(இறையும்) ஐச்வர்யங்கண்டு அஞ்சவேண்டா; ஆஸ்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிறார்.

(இறையும்) பரமபதத்திலிருப்பைச் சொல்லுகிறது.(நிலனுமித்யாதி) ஜகதாகாரனாய் லீலாவிபூதியுக்தனாயபடி சொல்லுகிறது. (பிறைமருப்பிலித்யாதி) பிறைபோலும் கொம்பையுடைத்தாய், ஜாத்யுசிதமான கண்ணையுடைத்தாய், பெருத்த ஆனையினுடைய. (படுதுயரம் காத்தளித்த) ஆனைக்குப்போரும்படியான துயரைப் போக்கி ரக்ஷித்த. (செங்கண்மால்கண்டாய் தெளி) வாத்ஸல்யாம்ருதத்தை வர்ஷியாநின்ற கண்ணையுடையனான ஸர்வேச்வரன். (தெளி) இவனுக்கு ஆஸ்ரிதபாரதந்த்ர்யமே ஸ்வரூபமென்னுமிடத்தை புத்திபண்ணு.

அவ.—ஐச்வர்யங்கண்டு * வெருவாதே சிலத்தையநுஸந்தியென்கிறார்.

(இறையும்) நியாமகனாய்க்கொண்டு பரமபதத்திலிருக்கும்.(நிலனுமித்யாதி) இந்த விபூதியையுடையனாயிருக்கிறவிருப்பு. (மால்யானை) உடம்பில் பெருமை † பாடாற்ற வொண்ணுமை. (அளித்த) புண்பட்டதை ஸ்பர்சித்தருளினபடி.. (செங்கண்) வாத்ஸல்யம். (மால்) அரைகுலையத்தலை குலையவந்து தோற்றினபடி. அவன், தம்மை "சாஸ்மஹே - மாசுசः" என்ற திருவுள்ளத்தை, தாம் "சாஸ்மஹே-மாசுசः" என்கிறார். வாசலேத்திறந்து வைப்பாரைப்போலே பெறுகைக்கு அங்கும் போகவேண்டா; இசைவே வேண்

* வெருவாதே - பயப்படாதே.

† பாடாற்ற - ஸஹிக்க.

டுவது; ஆர்த்தியேவேண்டுவது. அவனே வாராவிடில் ஸமாப்யதிக தரித்ரனே அவன். மற்றவனைப்பெற உபாயமுண்டோ. வாஸனை யாலே "அம்மே" என்பாரைப்போலே அழைத்ததித்தனை. (உகூ)

அரு.—இருபத்தொன்பதாம் பாட்டு.—(இறையும்) மேலுக்கவ தாரிகை யருளிச்செய்கிறார் (ஐஸ்வர்யங் கண்டிடத்யாதி). தெளிவு போருமோவென்ன; அருளிச்செய்கிறார் (வாசலேத்திறந்திடத்யாதி). இசைவுமாத்ரத்திலே வரக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (அவனே வாராவிடி லித்யாதி). ஸமாப்யதிக தரித்ரனைப் பொரு னென்றபடி. ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் அழைத்தானே யென்ன; அரு ளிச்செய்கிறார் (வாஸனையாலேயித்யாதி). (உகூ)

தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை - எளிதாகத்
தாய் நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய் நாடிக்கொள்ளும் புரிந்து. (கூ0)

ப-உ. தெளிதாக-கலக்கம்போம்படி, உள்ளத்தை - மநஸ்ஸை, செம் - நன்மை, நிறீஇ - நிறுத்தி, ஞானம் - புத்தியால், தெளி தாக - நைர்மல்யமுண்டாம்படி, நன்கு - செவ்வையாய், உணர்வார்- அறிந்தவர்களுடைய, சிந்தை - மநஸ்ஸை, எளிதாக - வருத்தமற, தாய் - (தன்) மாதாவை, நாடு - தேடும், கன்றுபோல் - வத்ஸம்போ ல், தண் - குளிர்ச்சியுடைய, துழாயான் - திருத்துழாயையுடைய எம்பெருமானுடைய, அடியே - திருவடிகளையே, புரிந்து - விரும்பி, போய் - சென்று, நாடிக்கொள்ளும் - தேடிக்கொள்ளும். (கூ0)

வ்யா.—அவ.—மூப்பதாம்பாட்டு.—(தெளிதாக) ஸம்ஸாரத்தி லே ஸமாஸ்ரயணீயர் பலருண்டென்று ப்ரமிக்கவேண்டா; ஸம்பந்த ஜ்ஞாநமுண்டாகவே நெஞ்சுதானே அவனை ஆராய்ந்து பற்றும்.

(உள்ளத்தை - தெளிதாக) விஷயப்ராவண்யத்தாலே கலுஷ மான ஹ்ருதயத்தினுடைய காலுஷ்யம்போக. (செந்நிறீஇ) செவ் விதாக நிறுத்தி. (ஞானத்தித்யாதி) ஞானத்தாலே எளிதாம்படி, "அவன் ஸ்வாமி நாம் சேஷபூதர்" என்று அவனை உணர்வாருடைய சிந்தை, அநேகம் பசுக்கள்நின்றால் தாயைத் தேடுங் கன்றுபோலே, தண்டுழாயானடியே புரிந்துபோய் நாடிக்கொள்ளும். (செந்நிறீஇ)

இந்த்ரியங்களைத் தான் வெல்லப்பார்த்தே எம்பெருமான் பக்கலிலே மூட்டி விஷயங்களை ஜயிக்கப்பார்க்கை.

(தெளிதாக) ஜ்ஞாநத்தாலே விசதமான பக்தியாலே. (எளிதாக) விஷயங்களில் பழக்கம்போலே தானே * மூளும்படியாயிருக்கை. தாயாரிருக்கிறபடி. (அடியே) அல்லாதஸ்தலங்களைக்கட க்து. (புரிந்து) விரும்பி. (கூய்)

அரு.—மூப்பத்தாம்பாட்டு.—(தெளிதாக) புரிந்து - பின்னை ஒன்றையும் பாராமல் திரும்பி. "தண்டுழாயான்" என்றத்தைப்பற்ற (தாயரென்கிறது). (கூ0)

புரியொருகை பற்றியோர் பொன்னுழி யேந்தி
அரியுருவு மானுருவு மாகி - எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியை யல்லால், மற்
றெண்ணத்தா னுண்மோ விமை. (கூக)

ப-உ. புரி - சங்கத்தை, ஒருகை - ஒருகையிலே, பற்றி - பிடித்து, ஒருகை - மற்றொருகையிலே, ஓர் - அத்விதீயமான, பொன் - அழகிய, ஆழி-சக்ரத்தை, ஏந்தி-தரித்து, அரியுருவும் -ஸிம்ஹரூபமும், ஆனுருவுமாகி - மனுஷ்யரூபமுமாய், (நரஸிம்ஹமாய்) எரி - அக்நியினுடைய, உருவம் - வடிவுபோன்ற, வண்ணத்தான் - வடிவையுடைய (ஹிரண்யனுடைய), மார்வு - வக்ஷஸ்ஸை, இடந்த - பிளந்த, மால் - விஷ்ணுவினுடைய, அடியல்லால் - பாதத்தையொழிய, இமை - க்ஷணமும், மற்று - வேறுவிஷயத்தை, எண்ணத்தானுமோ - நினைக்கத்தானுமோ. (கூக)

வ்யா.—அவ.—மூப்பத்தோராம் பாட்டு.—(புரியித்யாதி) அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை யதுஸந்திக்கால் வேறே யொன்றை ஒருசற்றுப்போது அநுஸந்திக்கலாமோவென்கிறார்.

(புரியித்யாதி) வலம்புரியில், "வலம்" என்கிறவிடத்தைக் குறைத்துக்கிடக்கிறது. (அரியித்யாதி) ஆயுதங்களை யொழியவும் இரண்டு வடிவாலும் பார்ப்பேனென்று வேண்டிக்கொண்டபடியாலே நரத்வஸிம்ஹத்வங்களை ஒரு வடிவாகக்கொண்டான். (எரியித்யாதி) அந்த பிபவநீயனான ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த. (மாலித்யாதி) இமைகொட்டி விழிக்கும்போது வேறொன்றை யெண்ணலாமோ.

---

* மூளும்படி - கூடும்படி.

அன்றிக்கே, நெஞ்சை யநாதரித்து வேறொன்றை யெண்ணப் போமோ. இமை-பார் என்றுமாம்.

அவ.—இவ்விஷயத்தை ஒருக்ஷணகாலம் விட்டிருக்கை ஸாஹஸிகமென்கிறார்.

(புரியித்யாதி) ஹிரண்யன்மேலேவிழுகிறவனை விலக்கினாற் போலே. (பொன்னுழியேந்தி) ஹிரண்யன் திருவுகிருக்கிரையாய்ப் போனான். திருவாழி அழகுக்குப் பிடித்தவித்தனை. (அரியித்யாதி) விசாரியாகிற்கப் பற்றுமே இரண்டு வடிவையுங்கொண்டு தோற்றினபடி. (எரியுருவவண்ணத்தான்) அணுகவொண்ணுதபடி அநபிபவநீயனுயிருந்தபடி. (மால்) கார்யப்பாட்டாலன்றியே பிள்ளை பக்கல்வ்யாமோஹத்தால் கீண்டான். (இமை)பாரென்னவுமாம். (கூக)

அரு.—முப்பத்தோராம்பாட்டு.—(புரி) இரண்டு வடிவாலும் கேவலஸிம்ஹத்தாலும் கேவல மநுஷ்யனாலும். இமை இமை கொட்டுதல்; பார்த்தல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இவ்விஷயத்தை யித்யாதி). (பற்றி) ஹிரண்யன்மேலே போகிற சங்கை; பற்றி, - வாங்கியென்கிறபடி. (கூக)

இமையாத கண்ணு லிருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும் - நமையாமல்
ஆகத் தணைப்பா ரணைவரே, ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

(கூஉ)

ப-உ. இமையாத - ஸங்கோசமில்லாத, கண்ணுல்- (உள்) கண்ணால், இருள் - அந்தகாரம் (அஞ்ஞானம்), அகல - போம்படி, நோக்கி - பார்த்து, அமையா - அடங்காத, பொறிஐந்தும் - இந்த்ரியங்களைந்தும், புலன்களைந்தும் - (தஜ்ஜந்ய) ஞானங்களைந்தும், நமையாமல் - உபத்ரவம்செய்யாமல், ஆகத்து - ஹ்ருதயத்தில், அணைப்பார் - (அவனை) சேர்ப்பார், ஆயிரவாய் - ஸஹஸ்ர வக்த்ரத்தையுடைய, நாகத்தணையான், ஆதிசேஷனைப்படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய, நகர் - பட்டணத்தை, அணைவர் - சேருவர்கள். (கூஉ)

வ்யா.—அவ.—முப்பத்திரண்டாம் பாட்டு.—(இமையாத வித்யாதி) அவன்மேல்விழ விலக்காதார்க்கு இந்த்ரியஜயம்பண்ண சக்தரன்றுகிலும் கிட்டலாமென்கிறார்.

(இமையாதகண்ணுல்) "கண்" என்றும் - "உட்கண்" என்றும் - சொல்லக்கடவது. அதில் உட்கண்ணுலே. "உநஸாதூ விஸூ ஹேந - மநஸாது விசுத்தேந" என்னும்படி. (இருளகல நோக்கி) அஜ்ஞாநாந்தகாரம் போம்படியாக நோக்கி. (அமையாவித்யாதி) அமைக்கப்போகாத இத்ரியங்களைந்தும். (நமையாமல்) ஜயியாதிருக்கச்செய்தே. (ஆகத்தணைப்பார்) அவன்மேல்விழ விலக்காதவர்களேவரும். (அணைவரே ஆயிரவாய் நாகத்தணையான் நகர்) என்கிறவித்தால், ஒருவனே யெல்லாவடிமைகளும் செய்யவேணுமென்னுமிடமும் ஒரு தேசவிசேஷமுண்டென்னுமிடமும், அத்தேசமே ப்ராப்யமென்னுமிடமும் சொல்லுகிறது.

அவ.—ஸர்வேச்வரனுடைய பரமபதம் ஆச்ரயியாதார்க்குக் கிடைக்குமோ; ஆச்ரயித்தால் பேரவிருக்குண்டோ? ருசிமாத்ரமுடையார் அவனுலே பெறுமித்தணையென்றும், அவனல்ல திலலை யென்றும்.

(இமையாத கண்) நெஞ்சென்னுமுட்கண். திருவாசலிலிக்கி அவனையும் தன்னையும் உள்ளபடியறிகை. (அமையா) திரியவிடவிக்கவொண்ணுத பொறியைந்தும் புலனைந்தும். (நமையாமல்) நியமியாமல். (ஆகத்தணைப்பார்) * மூலையடியென்னுதல்; அவன் மேல் விழா நின்றுல் இருயாமலென்னுதல். (நாகத்தணை) பர்யங்கவித்யை. (கூ உ)

அரு.—மூப்பத்திரண்டாம்பாட்டு.—(இமையாத) "தெளிதாக" என்கிறபாட்டிலே "செக்கிறீஇ" என்று இந்த்ரியஜயத்தைச்சொன்னர்; இப்பாட்டில் அதில்லாவிட்டாலுமென்கிறார். (அவன்மேல் விழவித்யாதி) ஆகம் - மநஸ்ஸு.

அர்த்தசிக்ஷா பூர்வகமாக மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரனுடைய வித்யாதி). ஆச்ரயியாதார்.—ஸம்ஸாரிகள். ஆச்ரயித்தார்-உபாஸகர். ருசியுடையார் - ப்ரபந்நர். "அணைவரே" என்றது பிரிகிலேயாய், அணையார் என்றுய், ஆகத்தை - ஸ்த்ரீகள் தேஹத்தை அணைத்து மூலையடியே திரியும் ஸம்ஸாரிகள் பரமபதத்தைக் கிட்டாரென்னுதல். அன்றியே, "அணைவரே" என்றது தேற்றமாய், இந்த்ரிய ஜயம்பண்ணுவிட்டாலும் அவனை ஏற்றுகையத்திலேவைக்குமவர்கள் பரமபதத்தைக் கிட்டுவரென்னுதல் (கூ உ)

---

* மூலையடி - யதேச்ச ஸஞ்சாரம்

† இறையாதபடி - பின்வாங்காதபடி.

நகரமருள் புரிந்து நான்முகற்குப், பூமேல்
பகரமறை பயந்த பண்பன் - பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதி யுரு வெண்ணும்
அந்தியா லாம் பய னங் கென். (ஈஉ)

ப-உ. பூமேல் - (நாபீகமல) புஷ்பத்தின் மேல், நான்முகற்கு - சதுர்முகனை ப்ரஹ்மாவுக்கு, நகரமே-இருபபிடத்தை, அருள் புரிந்து - க்ருபை செய்து கொடுத்து, பகர - (பிறர்க்கு) உபதேசிக்கும்படி, மறை - வேதத்தை, பயந்த - உபகரித்த, பண்பன் - நல்லகுணங்களையுடையவனுடைய, பெயரினை - திருநாமத்தை, புந்தியால் - புத்தியினால், சிந்தியாது - த்யாகியாதே, ஓதி - ஜபித்து, உருவெண்ணும் - கணக்கெண்ணுகிற, அந்தியால்-ஸந்த்யாவந்தநாதி கர்மத்தால், அங்கு-அவ்விடத்தில், ஆம் - உண்டாகிற, பயன் - ப்ரயோஜநம், என்-ஏது.

வ்யா.—அவ.—முப்பத்துமூன்றும்பாட்டு.—(நகரம்) ஸர்வேச்வரனை நெஞ்சாலே ஆதரியாதே பண்ணுகிற கர்த்தவ்யதாந்த்ரத்தால் என்ன ப்ரயோஜநமுண்டென்கிறார்.

(நான்முகற்குப் பூமேல் நகரமருள்புரிந்து) (பகரவித்யாதி) பிறர்க்கு ஓதுவிக்கும்படி ப்ரஹ்மாவை ஓதுவித்த நீர்மையையுடையவனுடைய. செல்வப்பிள்ளையைத் தேவைக்கு ஓதுவிக்குமாப்போலே. (பெயரினையே புந்தியால் சிந்தியாது) அவனுடைய திருநாமங்களையே நெஞ்சால் நினையாது. (ஓதியித்யாதி) அல்லாதவற்றை யோதிச் சென்று அவ்வுருவையெண்ணும் ஸந்த்யாவந்தநாதிகளால் என்ன ப்ரயோஜநமுண்டு. எம்பெருமானுக் குடலல்லாத கேவலஸந்த்யை வ்யர்த்தம்.

(நகரமித்யாதி) திருநாபீகமலத்தைக்*கலவிருக்கையாக ப்ரஸாதித்தான். ப்ரஹ்மாவுக்கு ஜந்மதேசத்தையே கொடுத்தான். அந்த ரங்கர்க்குக் கிட்ட மாளிகை சமைக்குமாப்போலே. (பகரவித்யாதி) அந்த வேண்டப்பாட்டுக்குமேலே நாட்டாரை ஓதுவிக்கைக்கு வேதத்தைக் கொடுத்தான். (பண்பன்) அந்நீர்மை மறக்கவொண்ணுமை. (பெயரித்யாதி) ஸ்வாபாவிகஸம்பந்தத்தை யநுஸந்தித்து அவனே யுகப்பியாதே. (ஆம்பயனங்கென்) எம்பெருமானே யகலுகையே பலித்துவிடுவது.

---

* கலவிருக்கை - ஸபர்யாகம்.

(பெயரினையே) அவன் குணங்களுக்கு வாசகமான திருநாமம். (ஓதியித்யாதி) அற்றருதயமாகப் பண்ணும் ஆயாஸரூபமான கர்மத்தைப் பற்றுவதே. (கூகூ)

அரு.—முப்பத்துமூன்றும்பாட்டு.—(ஈகார்)வேண்டப்பாடு-மேன்மையாய், அத்தாலே கிட்டவைக்கும்படியான அதிசயம்.

என்னெருவர் மெய்யென்ப ரேழுலகுண்டு, ஆலிலையில்
முன்னெருவ னையமுகில் வண்ணஞ் - நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால், பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்தவாறு. (கூசை)

ப-உ. ஏழுலகு - ஸப்தலோகங்களையும், உண்டு - அமுதுசெய்து, ஆலிலையில் - வடபத்ரத்தில், முன் - ஆதியில், ஒருவனைய - அத்விதீயனையிருந்த, முகில் - மேகம்போன்ற, வண்ணன் - வடிவையுடையவனே! முலைதந்தாள் - ஸ்தநம்கொடுத்த, பேய்த்தாய் - தாயாய்வந்த பிசாசமானபூதனை, - பேர்ந்திலள் - திரும்பமாட்டாமல் பிணமாய்க்கிடந்தாள்; பேர் - பெரிய, அமர்க்கண் - யுத்தபூமியிலே, ஆய்த்தாய்-இடைத்தாய் (யசோதை), நின்-உன் விஷயத்தில், உருகிப்ரீதிபண்ணி, முலைதந்தவாறு - ஸ்தநம்கொடுத்த ப்ரகாரத்தை, ஒருவர் - அத்விதீயர் (ருஷிகள்), மெய்யென்பர் - பரமார்த்தமென்று சொல்லுவர்; என் - அது எங்ஙனே. (கூச)

வ்யா.—அவ.—முப்பத்துநாலாம்பாட்டு.—(என்னெருவர்) ப்ரளயத்தில் லோகத்தையெல்லாம் தன் திருவயிற்றிலே வைத்து ஒரு * பவனன ஆலிலையிலே தனியே கண்வளராகின்ற ஈச்வரனுக்கு அஞ்சுகிற யசோதைப் பிராட்டியுடைய ஸ்நேஹம் ஒரு ஸ்நேஹமே! என்கிறார்.

(என்னெருவர் மெய்யென்பர்) இத்தை ஒருவர் மெய்யென்னும்படியெங்ஙனே யென்னவுமாம். "என்" என்று-"எத்திறம்" என்னும்படியே சொல்லவுமாம். (ஒருவர் மெய்யென்பர்) அமிந்தருஷிகளிலே சிலர், அர்த்தவாதசங்கையில்லை, இது மெய்யென்பர். (ஏழுலகித்யாதி) ஏழுலகத்தையும் திருவயிற்றிலே வைத்து ஆலிலையிலே. (முன்) முன்பு தனியேயாய். ச்ரமஹரமான வடிவையுடையவனே. (பேயித்யாதி) பேயானதாய் முலையைத்தந்து திருமேனியினின்றும் பேராதே கிடக்கச்செய்தே. (நின்னுருகி பேரமர்க்கண் ஆய்த்தாய்

---

* பவனன - அப்போதுண்டான, (க)
முகிழ்விரியாத. (உ)

மூலதந்தவாறு) உனக்கு நல்லவளாய், யசோதைப்பிராட்டி, விஷத் தக்கு அம்ருதமாக மூலைதந்தவாறு ; இதென்ன ஆச்சர்யம்.

அவ.—ஸோபாதிகமாகவன்றியே ஸ்வபாவத ஏவ ஸ்நேஹி க்குமவனே நினைக்கிறார்.

(என்) எத்திறம். (ஒருவர் மெய்யென்பர்) விலக்ஷணர் மெய்யென் பர். இத்தை ஒருவர் மெய்யென்பதே ! "என்" என்றபோது ஜகத் தில் நடையாடுவதொரு ஸ்நேஹமாகிலன்றே மெய்யென்னலாவது. (ஏழித்யாதி) நீ செய்யும் செயலுக்கு அடைவுண்டாகிலிறே உன்னை ஆஸ்ரயித்தார் செயலுக்கு அடைவுண்டாவது. (ஒருவனைய) பரி ஹரிக்கத் தாயும் தமப்பனும் ஒருவருமில்லை. (முகில்வண்ணா) பரிவர் வேண்டியிருக்கிறபடி. (நின்னுருகி) உன் குணங்களுக்கு உருகி. (பேர்ந்திலளால்) அப்பிணம் கிடக்கச்செய்தே. அப்பேயின் கையில் அகப்பட்ட தடையப்படுத்திக் கால்தடைதந்து, நஞ்சுக்குப் பரிஹார மாக அம்ருதமான முலையைக்கொடுத்தபடி. (கூச)

அரு.—முப்பத்துநாலாம்பாட்டு.—(என்னெருவர்) "ஏழுலகுண் டாலிலையில் முன்னெ நவனையமுகில்வண்ணா, பேய்ச்சிதாய் முலைதந்தா ள்பேர்ந்திலளால், நின்னுருகி, பேரமர்க்கண் ஆய்ச்சிதாய் முலைதந்தவா று, என்னெருவர்மெய்யென்பர்" இத்தை ஒருவர் மெய்யென்னும்படி என்-எங்ஙனே யென்று கூடாமைதல் ; ஒருவர் மெய்யென்பர், என்- இதென்ன நீர்மை தான் என்று ஈடுபடாதல். (பேரமர்க்கண்) பெரி தாயிருக்கிற யுத்தஸ்தலத்திலே. (பேய்ச்சியுண்டு) அவள் பிணமாய்க் கிடக்கிற அவஸ்தையிலே என்னுதல். பெரிய அபாயம்போலே ஒன்றுக் கொன்று பொராநிற்கிற கண். அந்த அவஸ்தையைக் கண்டு தூங்கத் தாலே பார்த்த கண்ணையுடைய யசோதை யென்னுதல்.

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (ஸோபாதிகேத்யாதி) கூடாமைபரம். இத்தையருளிச் செய்கிறார். (ஒருவரித்யாதி) மெய் யென்னப் போகாமைக்கு ஹேதுவருளிச் செய்கிறார் (என்னென்ற போதித்யாதி). ஜகத்திலே பிணத்திலே யிருக்கச்செய்தே கண்டால் பயப்படுகை யொழிய எடுத்து முலை கொடுக்கப்போமோ ; ஆகையா லே இது பொய்யென்றபடி. (அடையப்படுத்தி) அவள் * உறுக்கி உ ண்ணச்சொன்னாற்போலே இவளும் விஷத்துக்கு மாற்றாகையாலே உறுக்கியுண்ணச்சொல்லி. (கூச)

---

* உறுக்கி – அதட்டி.

ஆறிய வன்பி லடியார்த மார்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ - தேறி
நெடியோ யடியடைதற் கன்றே, ஈரைந்து
முடியான் படைத்த முரண். (கூடு)

ப-உ. ஆறிய - தணிந்த, அன்பு - ப்ரீதி, இல் - இல்லாத, அடியார் - தாஸஜநர், தம்-தம்முடைய, ஆர்வத்தால் - ஸ்நேஹத்தால், கூறிய - (ஸ்வப்ரயோஜநமாய்) சொன்ன சொற்களை, நீ - நீ, குற்றமாகக் கொள்ளல் - தப்பாகக்கொள்ளாதொழிய வேணும் ; ஈரைந்து முடியான் - பத்துத்தலைகளையுடைய ராவணன், படைத்த - செய்த, முரண் - பகை, தேறி - (க்ரமமாய்) தெளிந்து, நெடியோயடி - பெரியனை உன்னுடைய திருப்பாதங்களை, அடைதற்கன்றே - கிட்டுகைக்காகவன்றே. (கூடு)

வ்யா.—அவ.—மூப்பத்தைந்தாம்பாட்டு.—யசோதைப் பிராட்டியோபாதி ஸ்நேஹமின்றிக்கே, அவளுடைய ஸ்நேஹத்தை யுடைத்தாக பாவிக்கிறவர்களுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேணுமென்கிறார்.

(ஆறியவன்பிலடியார்) * எறிமறிந்த பக்தியில்லாதவர்கள். (தம் ஆர்வத்தால் கூறிய) தங்களுடைய ஸ்நேஹத்தாலே சொன்னவற்றை. (குற்றமாக்கொள்ளல்) நீ குற்றமாகக்கொண்டருளாதொழிய வேணும். நீர்குற்றத்தைச் செய்துவைத்து, "குற்றமாகக்கொள்ளாதொழியவேணும்" என்னப்போமோவென்னில் ; (ஈரைந்துமுடியான் படைத்த முரண் - தேறி நெடியோய் அடியடைதற்கன்றே) ராவணன் பண்ணின ப்ராதிகூல்யம் க்ரமத்திலே சிசுபாலனுக்கு உண்டாயடைகைக்கு உடலாயிற்றில்லையோ. ப்ராதிகூல்யமாதுகூல்யமாய்ப் பலித்தால். ஆதுகூல்யாபாஸம்ஆதுகூல்யமாகத் தட்டுண்டோ. "தேறி" என்றது, செய்த குற்றத்தைக் குற்றமாகக்கொள்ளாதொழியவேணுமென்னவுமாம். அன்றிக்கே, "தேறி" என்றது, சிசுபாலன் கையும் திருவாழியுமாயிருந்தபடியென்னென்று நினைத்துக்கிடக்க, அது அந்திமஸ்ம்ருதியானற்போலே யாகவுமாம்.

(ஆறியவன்பு) எறிமறிந்து தன்னைப்பேணுதே அத்தலைக்குப் பரிகை. யசோதைப்பிராட்டி பரிவு தம்முடைய ப்ராதிகூல்யத்தோ

* ஏறிமறிந்த - சாந்தமான.

டொக்குமென்னை. அவனுடைய ப்ராதிகூல்யம் தேறி அடைகை க்கு உடலாயிற்றில்லையோ. "செய்த குற்றம் நற்றமாகவேகொள்" பொறுக்கவே அடைய நன்றுமென்றிருக்கிறார். (நெடியோய்) ஆது கூல்ய லேசமுடையார்திறத்து நீ யிருக்குமிருப்பு எல்லைகாணப் போமோ. (ஈரு)

அரு.—மூப்பத்தைந்தாம்பாட்டு.—(தேறி) கலங்கினது தேறு மாப்போலே க்ரமத்திலே யென்றபடி. ராவணனுடைய இரண்டாஞ் ஜந்மமான சிசுபாலனுக்கும்.

(அன்பின்) இல் - அல்லாமையாய், தனக்குப் பரிவரில்லையோ வென்ன ; அருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டி யித்யாதி). இத் தனை ப்ராதி கூல்யமுடைய வுமக்குக்கிட்டப்போமோவென்ன ; அரு ளிச்செய்கிறார் (அவனுடைய வித்யாதி). (ஈரு)

மூரணை வலி தொலைதற்காமென்றே, முன்னம்
தரணி தனதாகத்தானே - இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிரால் பொன்னழிக் கையால், நீ
மண்ணிரந்து கொண்ட வகை. (ஈசு)

ப-உ. முன்னம் - முன்பே, தரணி - பூமியை, தனதாகத்தா னே - ஸ்வீயமாகவே அபிமாநித்திருந்த, இரணியனை - ஹிரண்ய கசிபுவை, புண்ணிரந்த - புண்படும்படி பிளந்த, வள் - கூர்மை யான, உகிரால் - நகங்களோடுகூடிய, பொன் - அழகிய, ஆழி - சக் ரத்தையுடைய, கையால் - கரத்தால், நீ - நீ, மண் - பூமியை, இர ந்துகொண்ட - யாசித்த, வகை - ப்ரகாரம், மூரணை - கொடுமை யான, வலி - வல்லமையை, (அஹங்காரமமகாரங்களை) தொலை தற்காமென்றே - நசிப்பிக்கலாமென்றே. (ஈசு)

வ்யா.—அவ.—மூப்பத்தாறும்பாட்டு.—(மூரணை) யசோதைப் பிராட்டி ஸ்நேஹமின்றியிலே யிருக்கச்செய்தே அவளுடைய ஸ்நே ஹமுண்டாக பாவித்துச்சொன்னவற்றைக் குற்றமாகக்கொள்ளா தொழியவேணுமென்று நீர் இரக்கவேணுமோ? தன்னுடைமையை வேரொருத்தனதாக்கிவந்து இரக்குமவனுக்கு.

(முன்னமித்யாதி) முன்பே பூமியடையத் தன்னதாக அபிமா நித்திருந்த ஹிரண்யனைப்புண்படுத்திப் பிளந்த வுகிரையுடைத்தா

யிருக்துள்ள பொன்னுழிக்கையால், (நீயித்யாதி) ப்ரகாரம். (முரணை வலி தொலைதற்காமென்றே) ஸ்வேஷ்வரனுயிருந்துள்ள நம்முடைய அர்த்தித்வந்தோற்றுகின்ற ஸௌலப்யத்தைக்காண நாட்டாருடைய அஹங்கார மமகாரத்தாலே பிறந்தண்மை நெகிழுமன்றே நீயிப்படி. செய்தது. (முன்னம் தரணிதனதாகத்தானே) முன்னே பூமியடங்கலும் தன்னதாக அபிமாநித்த மஹாபலிபக்கலிலே யென்னவுமாம்.

(முரணையித்யாதி) யசோதைப் பிராட்டியைப்போலே எங்களை உருக்கலாமென்றே. (முன்னமித்யாதி) தன்னதாக வுகக்குமாகில், நாம் இன்று பெற்றேமாக வமையாதோ வென்று இரந்துகொண்ட வகை. (கூசு)

அரு.—முப்பத்தாறும்பாட்டு.—"மண்ணிரந்துகொண்டவகை முரணைவலி தொலைதற்காமென்றே" என்றந்வயம். ப்ராதிகூல்யத்தினுடைய மிடுக்கைப்போக்குகைக்காக வென்படி.

இத்தையவதாரிகையிலே யருளிச்செய்கிறார் (யசோதைப்பிராட்டியித்யாதி). எங்களை உருக்கலாமென்றது கீழ்ப்பாட்டிலே-அவனுடைய சேஷ்டிதத்தைக் கண்டவளாகையாலே எங்களையுமுருக்கலாமென்ன நீ மண்ணிரந்துகொண்டது, நாங்கள் வன்னெஞ்சராகையாலே உருகமாட்டோமென்றபடி, இரக்கவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (தன்னதாக வுகக்குமாகிலித்யாதி). (கூசு)

வகை யறு நுண் கேள்வி வாய்வார்கள், நாளும்
புகை விளக்கும் பூம் புனலு மேந்தித்-திசைதிசையின்
வேதியர்கள் சென் றிறைஞ்சும் வேங்கடமே,வெண்சங்க
மூதியவாய் மாலுகந்த வூர். (கூஎ)

ப-உ. வகையறும் - உபாயாந்தரங்களைச் சேதிக்கும்படி, நுண்-ஸூக்ஷ்மமான அர்த்தங்களையுடைய, கேள்வி - ச்ரவணத்தை, வாய்வார்கள் - அடைந்திருக்கும், வேதியர்கள் - வேதார்த்தமறிந்தவர்கள், நாளும் - தினந்தோறும், புகை - தூபமும், விளக்கும் - தீபமும், பூம்புனலும் - புஷ்பத்தோடு கூடின ஜலத்தையும், ஏந்தி - தரித்து, திசைதிசையும் - திக்குகள்தோறும், சென்று - போய், இறைஞ்சும் - ஆஸ்ரயிக்கும், வேங்கடமே - வேங்கடமென்கிற திருமலையே, வெண்-வெளுத்த, சங்கம் - ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை, ஊதிய -

த்வகிப்பித்த, வாய் - திருப்பவளத்தையுடைய, மால் - ஸ்வாமி, (க்ருஷ்ணன்) உகந்த - விரும்பின, ஊர் - தேசம். (கூஎ)

வ்யா.—அவ.—மூப்பத்தேழாம் பாட்டு. (வகையித்யாதி) நாம் அந்த அவதாரத்துக்குப் பிற்பட்டோமிறே; அது தீர்த்தம் ப்ரஸாதித்துப் போயிற்றிறே யென்ன; அவன்றன் ஸப்ஸாரத்திலே திருமலையையுகந்துவந்து நிற்கவும் அதுக்கு வெறுக்கவேணுமோ வென்கிறது.

(வகையறும்) "வஹ்ஹ்மாவாஹ்ய நஞ்ஹாஸ்ய - பஹ்ரூசாகாஹ்ய நந்தாச்ச" என்னும்படி ப்ரயோஜநாந்தர பரமான தேவதாந்தர ஸ்பர்சியான வகையறுகை. (நுண்கேள்விவாய்வார்கள்) ஸ்தூலமாக வன்றிக்கே ச்ரவணவேலையிலே ஸூக்ஷ்மமானகேள்வி வாய்த்தவர்களான. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள். (புகையித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு. (திசையித்யாதி) ஸர்வதோதிக்கமாக வந்து தொழப்படும் திருமலை. (வெண்சங்கமித்யாதி) பாரதஸமரத்திலே அர்ஜுநன் தொடுத்துவிட்ட அம்புகளுக்கு எதிரிகள் எட்டுமளவன்றியே யொழிந்தால் ஒருவராலும் * இறுய்க்கப்போகாதபடி கின்ற கிலையிலே * முழுக்காயாக அவியும்படிக் கீடாக ச்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலேவைத் தூதின க்ருஷ்ணனுகந்தவூர்.

(வகையறும்) முழுகுவாரைக் கண்டவாறே முழுகி, ஜபிப்பாரைக்கண்டவாறே ஜபியா. (நுண்கேள்வி) ஸூக்ஷ்மார்த்தம் கேட்டுக் கைபுகுந்தார். "ஹஞ்ஹம்ஹிஃநஃகூஷ்ஹ் - சஞ்சலம்ஹிமநஃ க்ருஷ்ண." (திசைதிசையில்) ஸர்வதோதிக்கமாக. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டார். (வெண்சங்கம்) ஆஸ்ரிதபக்ஷபாதி வர்த்திக்கிறவூர். (கூஎ)

அரு.—மூப்பத்தேழாம்பாட்டு.—அதுக்கு-பெறப்பட்டதுக்கு. வகையறுகை. ப்ரயோஜநாந்தர தேவதாந்தரங்களைப் ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரங்களையும் தத்பரமான புத்திசாலிகளையும் அறுகை. இவ்விடத்துக்கு வகையறுகை - ஸாதநாந்தரங்களை யறுகை. ஸூக்ஷ்மார்த்தம் கைபுகுருகை யருமையோவென்ன; அருளிச்செய்கிறார் (ஹஞ்ஹம் ஹிஃநஃ-சஞ்சலம்ஹிமநஃ என்று). (கூஎ)

---

* இறுய்க்கப்போகாதபடி - ப்ரதிக்ரியை பண்ணப்போகாதபடி.
† முழுக்காயாக அவியும்படி - உருதெரியாமல் அழியும்படி.

ஊரும் வரியரவ மொண்குறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியை · காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே, மேலசுரர்
எம்மென்னு மால திடம். (சுஅ)

ப-உ. ஊரும் - ஸஞ்சரிக்கிற, வரி - ரேகைகளையுடைய, அரவம் - ஸர்பமானது, மால் - பெரிய, யானை - கஜம், பேர - இளம்பும்படி, ஒண் - விலக்ஷணரான, குறவர் - வேடர், எறிந்த - வீசின பெரு-ஸ்லாக்யமான, மணியை - மாணிக்கத்தை, காருடைய - மேகத்தோடுகூடின, மின்னென்று - மின்னலென்று, (எண்ணி) புற்று - வல்மீகத்தை, அடையும் - ப்ரவேசிக்கும், வேங்கடமே - திருமலையே, மேல - உத்தமரான, சுரர் - தேவர்கள், எம்மென்னும் - எங்களதென்று, மாலதிடம் - அபிமானித்திருக்கும், தேசம். (சுஅ)

வ்யா.—அவ.—மூப்பத்தெட்டாம்பாட்டு.—(ஊரும்)பரமபதத்திலுள்ளாரடைய உத்தேஸ்யரான வோபாதி திருமலையில்வர்த்திக்கும் ஸர்பம், குறவர், பட்டிதின்னு மானையடைய இவர்க்குத் தேஸ்யமாயிருக்கிறபடி. "எம்பெருமான் பொன்மலைமே லேதேனுமாவேனே."

(ஊரும்) ஒரு கார்யப் பாடறத் திருமலையிலே ஊர்ந்து திரிகையே உத்தேஸ்யமாயிருக்கிறபடி. (வரியரவம்) பாம்பினுடைய உடம்பில்வரி திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் ஓரவயவத்தோபாதி உத்தேஸ்யமாயிருக்கிறபடி. (ஒண்குறவர்) திருவேடுவர்க்கு ஒண்மையாவது - "இவர்கள் பாட்டன் பாட்டனிலே பொருத்தன் பூமியிலே இறங்கினன்" என்னும் பழியின்றிக்கே யிருக்கை. (மால்யானையித்யாதி) மலைபோலேயிருத்துள்ள ஆனை, தன்னை ஒருமலை சலித்தாற்போலேயிருக்கப் போம்படிக்கிடாக. (எறிந்த பெருமணியை) மஹார்க்கமானமணியை. ஆனை மேகம்போலே யிருக்கையாலும், அதிலே பட்டமணி மின்போலே யிருக்கையாலும், பாம்பானது, இடிக்கஞ்சுகையாலே மின்னின வநந்தரம் இடியுண்டாவென்றுகொண்டு அதுக்கு முன்னே புற்றடையா நிற்குந்திருமலை. (மேலசுரர் எம்மென்னுமாலதிடம்) ஆக்காரான தேவர்களன்றியே, மேலான, சுரர் - நித்ய ஸூரிகள் - எம்மென்னுமாலதிடம் - x அஹமஹமிகயாவிரும்புமிடம்.

அவ.—அங்கே புக்காலோவென்னில் உள்ளுப்புகவொட்டாதின்றதோ.

(ஊருரும்) * ஸ்ரீதரிமஹ்ஹி - ப்ராதரிகச்சதி போலே. (வரி) அதுவும் ஸ்ப்ருஹணீயம். (மால் யானை) மலைகட்காற்போலே. (பேர) ஆமிஷார்த்தமாக வந்து மலைபேர்ந்தாற்போலே பேர. (பெரு மணியை) மலைபோலே யிருக்கை. (ஊருரும் வரியரவம்) இவை ஸ்வை ரஸஞ்சாரத்தாலே ஸௌபாக்யம் கொண்டாட்டப் புறப்பட்டு. (புற்ற டையும்) இடிக்கு முன்னை மின்னுகையாலே. (கூஅ)

அரு.—முப்பத்தெட்டாம்பாட்டு.—* என்னென்ற-என்னதென்ற. மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (அங்கே புக்காலித் யாதி). (உள்ளுப்போகவொட்டாது) ஊரில் போக்யதையென்றபடி.

இடந்தது பூமி யெடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச - கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது. (கூகூ)

ப-உ. பேர் - பெரிய, ஓதம் - அலைகளையுடைய கடல்போன்ற, வண்ணர் - வடிவையுடையவர், இடந்தது - தோண்டினது, பூமி - தரணி; எடுத்தது - தரித்தது, குன்றம் - மலை; கஞ்சனை - கம்ஸனை, முன் - முற்காலத்தில், அஞ்ச - பயப்படும்படி, கடந்தது - ஆக்ரமித்தது; நீர்-பெரிய ஜலத்தையுடைத்தாய், ஓதம் - அலையெறிகிற, மா-பெரிய, கடல் - ஸமுத்ராத்திலே, கிடந்தது - பள்ளிகொண்டது; பெரிது - மிகவும், நின்றது - நின்றருளினது, வேங்கடமே - திருமலையே கிடீர். (கூகூ)

வ்யா.—அவ.—முப்பத்தொன்பதாம்பாட்டு (இடந்தது) ஆபத்திலே பூமியை ரக்ஷிப்பது, அவதாரங்கள் ஸாது பரித்ராணார்த்தம் துஷ்க்ருத் விநாசார்த்தமாவது, எப்போதும் உகந்து திருமலையிலே நிற்பதென்கிறார்.

(இடந்தது பூமி) ப்ரளயாபத்திலே பூமியை யெடுத்தவழகு காணலாவது. (எடுத்தது குன்றம்) கோவர்த்தநோத்தரணத்திலே அவ்வழகு காணலாவது. (கடந்ததித்யாதி) கம்ஸனைஞ்சும்படி யவனை யழித்த வன்று வெற்றியழகு காணலாவது. (கிடந்ததுவும் நீரோதமாகடலே) கண்வளர்ந்த வழகு காணலாவது ஆழ்ந்த கடலிலே சாய்ந்தபோது. (பேரோத வண்ணர் பெரிது. நின்றதுவும் வேங்கடமே) கடல்போலே

* என்னென்ற-என்றபாடத்தைக்கொண்டும் இந்த அரும்பதம்

ஸ்ரமஹரமான வடிவை யுடையவன், எப்போது முகந்து நிற்பது திருமலையிலே.

(இடந்தது) ப்ரளயத்தாலே வந்த நலிவுதீர. (எடுத்தது) இந்த்ரனால் வந்த நலிவுதீர.(கடந்தது) கம்ஸனால் வந்த நலிவுதீர. (கிடந்தது வும்) அவதாரத்துக்கு ஏகாந்தமாம். நாம் பெருமானே யுகந்தோமென்று சோற்றையுகப்புதோம்,சோற்றை யுகந்தோமென்று நாலும் பத்தும்பட்டினி விடுவுதோம்; ஸ்த்ரீகளே யுகந்தோமென்று சதுரங்கம் பொருதல் உறங்குதல் செய்வுதோம்; ஒன்றிலும் ஸ்நேஹமில்லை. (கூ)

அரு.—முப்பத்தொன்பதாம் பாட்டு.—ஆழ்வார்கள், ஈஸ்வரனுடையகுணசேஷ்டிதங்களே வாய்புலத்துகையாலே இருந்திலே - அஸ்மதாதிகளுக் கில்லையென்னு மிழவாலே யருளிச்செய்கிறார் (நாம் பெருமானே யித்யாதி). (கூ)

பெருவில் பகழிக் குறவர் கைச் செந்தீ
வெருவிப் புனம் துறந்த வேழம் - இருவிசும்பில்
மீன் வீழக் கண்டஞ்சும் வேங்கடமே, மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று. (சல்)

ப-உ. பெரு - பெருத்த, வில் - தநுஸ்ஸையும், பகழி - பாணத்தையுமுடைய, குறவர் - வேடர், கை - கரத்திலே (பிடித்த), செம் - சிவந்த, தீ - நெருப்பை (கண்டு), வெருவி - பயந்து, புனம் - வயலை, துறந்த - விட்ட, வேழம் - யானையானது, இரு - விசாலமான, விசும்பில் - ஆகாசத்தில் நின்றும், மீன் - நக்ஷத்ரம், வீழ - விழ, (அத்தை) கண்டு - பார்த்து, அஞ்சும் - பயப்படும்படியான, வேங்கடமே - திருமலையே, மேல் - முற்காலத்தில், அசுரர் - அரக்கர்களுக்கு, கோன் - ஸ்வாமியான ஹிரண்யன், வீழ - விழ, (அதை) கண்டு - பார்த்து, உகந்தான் - ஸந்தோஷித்தவன், குன்று - (நித்யவாஸம்பண்ணும்) மலை. (சல)

வ்யா.—நாற்பதாம்பாட்டு. (பெருவில்) திருமலையை யுகக்கிறார். "ஸுவஷ்டஹ்யஉஹ உஹ உஹ - அவஷ்டப்யமஹத்தநுஃ" என்கிறபடியே, சக்ரவர்த்திதிருமகன் கையும் வில்லும்போலே பெரியவில்லையும்

தெரிந்த பகழியையுடையரான திருவேடுவர். (குறவரித்யாதி) * சூளிலே கொளுத்திக் கையிலே கொடுபோகிற நெருப்பொளியிலே வில்லின் பெருமையையுங் கண்டு நெருப்பு தனக்கு ஆனே யஞ்சும்படியாகவும், பட்டிமேய்ந்த ஆனே இப்புனங்கொய்தாலுமிங்கு வாரே னென்று ஸ்யஸித்துப்போனது. (இருவிசும்பித்யாதி) வெளியையும் பரப்பையு முடைத்தான ஆகாசத்திலின்றும் மீன்விழக்கண்டு இனி ஓரிடத்திலும் போக்கில்லையென்று கின்ற நிலையிலே நின்று அஞ்சுகிற திருவேங்கடம். மேல்-பண்டு. (அசுரரித்யாதி) "சிறுக்கனுடையவிரோதிபோயிற்று" என்றுகந்து இன்னமு மாஞ்சிதவிரோதியேதேனும் வரிலும் பரிஹரிக்கவேணுமென்றவன் பற்றி நிற்கும் திருமலை.

(பெருவிலித்யாதி) இதிலுத்தரார்த்தம் மீன்வீழக் கண்டஞ்சும்-நிலத்திலே நெருப்பை விழவிட்டார்க ளென்று குறவ ரெறிந்த கொள்ளிக்கு வெருவின தாகையாலே. (வேங்கடம்) நிர்ப்பயமான தேசம்; அஸ்தாநே பயசங்கை பண்ணு மித்தனை. (சo)

அரு.—நாற்பதாம் பாட்டு.—நக்ஷத்ரம் விழுந்தால் பயப்பட வேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (நிலத்திலே நெருப்பை யித்யாதி). குறவர் பாண்களிலேயிருந்து கொள்ளியை யெறியும தாகண்டிருக்குமதாகையாலே மீன்விழுகிறதையுமவர்களெறிந்தார்களாக நினைத்து பயப்பட்டதென்றபடி. (சo)

குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே - என்றும்
புறனுரையே யாயினும் பொன்னழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு. (சக)

ப-உ. என் - என்னுடைய, நெஞ்சே - மனமே, என்றும் - ஸர்வகாலமும், புறனுரையேயாயினும் - அந்யபரமான சொல்லாலேயாகிலும் (அஹ்ருதயச் சொல்லாலேயாகிலும்), பொன் - அழகிய, ஆழி - சக்ரத்தை, கையான் - கரத்திலேந்திய ஸர்வேச்வரனுடைய, திறன் - விஷயத்தில், உரையே - (நதூஜேயழி - என்கிற) சொல்லையே, சிந்தித்து - த்யாநித்து, இரு - ஸ்திரப்படு. இன்றுமுதலாக - இப்பொழுது தொடங்கி, குன்றனைய - மலைபோன்ற, குற்றம் -

* சூளிலே - பந்தத்திலே.

அபராதங்களை - செயினும். அனுஷ்டித்தாலும், குணக்கொள்ளும் - குணமாகஸ்வீகரிக்கும். (சக)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு. (குன்றனைய) அவன் குற்றம் பொறுக்கைக்காகத் திருமலையிலே வந்து நின்றான். ஆபிமுக்யத்தைப் பண்ணினாலும் தோஷாம்சத்தைப்பாராதே குணாம்சத்தைக் கொள்ளும். அவனுள்ளவன்றே இவ்வாதிமாவுண்டென்கிறார். இத்தனைநாளும் இத்தைச் செய்யாதொழிவானென்னென்னில்; (இன்று முதலாக)இவனுக்கே ஸ்வபாவமென்றறிந்த இன்று தொடக்கமாக. (என்னெஞ்சே) எனக்கு ஹிதம் பார்க்கும் நெஞ்சே. ஸஹ்ருதயமாக அவன் குணங்களைப் பேசப்போமோ வென்னில்; (புறனுரையேயாயினும்) அஹ்ருதயமான பேச்சேயாகிலும். ப்ரயோஜந மின்றிக்கே அநர்த்தமாயிற்றாகிலு மென்றுமாம். (பொன்னழி யித்யாதி) ஸ்ரீவேங்கடேஸ்வரன் திறத்தில் சப்தங்களையே யறிந்து. (சிந்தித்திரு)க்குதார்த்தமாயிரு.

அவனேடே ஸம்பந்தமுண்டாகிலும் முன்பு அவனுன் செய்தருளாவிடிலானென்னென்னில்; "குற்றம்-குணம்" என்று நினையாமை. (பொன்னழி) தானே ஸஹ்ருதயமாக்கும். (சக)

அரு.—நாற்பத்தோராம் பாட்டு.—குற்றம் பொறுக்கை ஸ்வபாவமென்றறிந்த இன்றென்றபடி. (சக)

திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல் - திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநாகணைக் கிடந்த
மாலோத வண்ணர் மனம். (ஈஉ)

ப-உ. பாலோதம் - பாற்கடலில் திவலை, சிந்த - சிதற, பட ம் - பணங்களையுடைய, நாகணை - திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே, கிடந்த - பள்ளிகொண்ட, மால் - பெரிய, ஓதம் - ஸமுத்ரம் போன்ற, வண்ணர் - வடிவையுடையவருடைய, திருமகள்மேல் - லக்ஷ்மிமேல் (செல்லுகிற), மனம் - திருவுள்ளம், திருமகளும் - லக்ஷ்மியும், மண்மகளும் - பூதேவியும், ஆய்மகளும் - நப்பின்னைப்பிராட்டியும், சேர்ந்தால் - ஸம்ஸ்லேஷித்தால், திருமகட்கே - பெரியபிரா

ட்டியார் விஷயத்திலேயே, தீர்ந்தவாறு - ப்ரீதமானபடி (நடக்கிற படி), என்கொல்! எங்ஙனேதான்! (சுஉ)

வ்யா.—அவ.—(திருமகளும்) பாராதே பொறுக்கைக்கடி பிராட்டிமாருகே யிருக்கையென்கிறார்.

(திருமகளித்யாதி) அநந்தாழ்வான், "திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்று பணிக்கும். (பாலோதம் சிந்த) "திருப்பாற்கடலின் குறுந்திவலே திருமுகத்திலே படும்படிக் கோடாகத்திருவநந்தாழ்வான் மேலே கிடந்த மாலோத வண்ணருடைய திருமகள்மேல் வைத்த திருவுள்ளம், திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்றருளிச்செய்வர் பட்டர். பிராட்டியோடு கலந்தபோது, "வ-ஷ்ஷாஜ்ஞாமைஷ்ஷி - புஷ்பாங்கராகைஸ்ஸமம்" என்கிறபடியே அல்லாத பிராட்டிமார் உபகரண கோடியிலே நிற்பர்கள்; அல்லாத பிராட்டிமாரோடு பரிமாறும்போது, இவள் தன்னிடையிலும் முலையிலும், கலந்தாற்போலே யிருக்கும். போகந்தான் உன்மஸ்தகமாஞல் வ்ருத்த கீர்த்தநாதிகளுக்குக் கூட்டமாய் நிற்பர்கள். இத்தால் சொல்லிற்றுயிற்று, இதர விஷயங்களிருவர்க்கும் போராமையாலே "சீறு-பாறு" என்கைக்குடலாம்; இங்கு போக்யதாதிசயத்தாலே கிண்ணகத்தி லிழிவாரைப்போலே திரண்டு அவகாஹிக்கவேணுமென்றதாயிற்று. (சுஉ)

மனமாசு தீரு மருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும் - புனமேய
பூந்துழாயா னடிக்கே போதொடு நீரேந்தித்
தாந்தொழா நிற்பார் தமர். (சுரு)

ப-உ. புனமேய - தன் நிலத்திலிருந்தாற்போலே (செழித்து), பூம் - பூத்த, துழாயான் - திருத்துழாயையுடையவனுடைய, அடிக்கே - திருப்பாதங்களுக்கே, போதொடு - விகாஸோன்முகமான அரும்புகளோடு, நீர் - ஜலத்தை, ஏந்தி - தரித்து, தமர் - பக்தர், தாம் - தாங்களே, தொழாநிற்பார் - அடிமைசெய்வர்கள்; (அடிமை செய்யவே) மனம் - மனதிலிருக்கிற, மாசு - (அஞ்ஞாநம் முதலிய)

அழுக்கு, தீரும் - கழியும் ; அரு - அஸாத்யமான, வினையும் . பாபங்களும், சாரா - கிட்டாது; தனமாய - ஸம்பத்தான பக்தியும், தானே - அதுவே, கைகூடும் - சேரும். (சஙூ)

வ்யா.—அவ.—நாற்பத்துமூன்றும்பாட்டு.— (மனமித்யாதி) பிராட்டிமாரடியாக அவனேப்பற்றினர்க்கு போகத்தில் ப்ரதிபந்தகங்கள் போகவேணுமென்றும் பக்த்யாதிகளுண்டாகவேணுமென்றும் இவர்களுக்குக் கரைய வேண்டாவென்கிறது.

(மனமாசுதீரும்) மனஸ்ஸுக்குமாசாகிறது - ருசிவாஸனைகள். (அருவினையும் சாரா) அவித்யாதிகர்மங்களனைய. (தனமித்யாதி) இப்படியானவதிகாரிக்கு தனமான கைங்கர்ய பூர்வபாவியான பக்த்யாதிகள் தானேயுண்டாம். (புனமித்யாதி) தமரானவர்கள் ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே தாங்களே தொழாநிற்பர்கள். இவர்களுக்கு அவனுடைய திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தொழுவது அவனே யதுபவிக்கையிலே அன்வயம்.

* திறனுரையே சிந்தித்திருக்கவொட்டுமோ இவனுடைய அவித்யாதிகளென்னில் ; (தனமாய) அவித்யாதிகள் போனர்க்கு வரும் தநம். "சுஜுஷிகூமதி ஶ்ரீ ஶாலு-அந்தரிகூஷகத ஶ்ஶ்ரீமான்" (பூந்துழாயானடிக்கே) குடிக்கிற வேப்பங்குடிநீர். (தாமித்யாதி) இவன் வகுத்தது செய்ய அவன் வகுத்தது செய்யாதொழியுமோ. (சஙூ)

அரு.—நாற்பத்துமூன்றும் பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (திறனுரையேயித்யாதி). அவன் வகுத்தது செய்கை-அநிஷ்டத்தைப்போக்கி இஷ்டத்தைக்கொடுக்கை. (சஙூ)

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தம ருகந்த தெப்பேர் மற்றப்பேர் - தமருகந்த
தெவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரோ
அவ்வண்ண மாழியா னும். (சஜ)

ப-உ. ஆழியான் - சக்ராயுதனான ஸர்வேஶ்வரன், தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எவ்வுருவம் - எந்த விக்ரஹமோ ; அவ்வுருவம் - அந்த விக்ரஹத்தை, தானே - ஸ்வயமே, ஆம் - ஸ்வீகரி

க்கும்; மற்று - இப்படியே யன்றிக்கே, தமர் - பக்தர், உகந்தது - விரும்பியது, எப்பேர் - எந்தத்திருநாமமோ; அப்பேர் - அந்த திருநாமத்தை, ஆம் - அங்கீகரிக்கும்; தமர் - பக்தர், உகந்து - விரும்பி, எவ்வண்ணம், எந்த ப்ரகாரத்தை - சிந்தித்து, அநுஸந்தித்து - இமையாதிருப்பர் - இமைகொட்டாமல் நிற்பர்களோ (அநவரதபாவனை பண்ணுகிறார்களோ); அவ்வண்ணம் - அந்த ப்ரகாரத்தையுடையனாய், ஆம் - இருக்கும். (சசை)

வ்யா.—அவ.—நாற்பத்துநாலாம்பாட்டு. (தமரித்யாதி) "தமர்" என்று சிலவரும் அவர்களுக்கு ப்ரதிபக்தகம் போக்கவேண்டா, போகத்திலே அந்வயஞ் சொல்லுகிறபடி யெங்ஙனே யென்னில்; அவனுடைய ஸ்வரூப மாஸ்ரிதபரதந்த்ரமாகையாலே சொல்லுகிறது.

(தமருகந்ததித்யாதி) ஸ்யேயஸாஸ்வயமேவ ஸ்ருதே தாநுதஸ்யை வஹஜாஸ்ரு ஹேது - யேயதாமாம்ப்ரபத்யந்தே தாந்ததைவபஜாம்யஹம்" எமக்கு கல்லவர்களின்னுஞ்சென்றுமில்லை, இன்னபடி பஜிப்பாரென்றுமில்லை; அவர்கள் நின்ற நிலையிலே அவர்கள் பஜித்தபடியே அவர்களைப் பற்றுவானென்கிறது. தமராணவர்கள் ப்ராக்ருதத்ரவ்யங்களிலே யொன்றை "உனக்குத்திருமேனியாகக் கொள்ளவேணும்" என்றால் அத்தைத் திருமேனியாகக் கொள்ளும். "ஸ்வவர்ணராஜதாதிபிஃ - ஸ்வவர்ணராஜதாதிபிஃ". எம்பெருமானார் மாதுகரத்துக்கெழுந்தருளாநிற்க, சிலபிள்ளைகள் காலாலேகீறி, "உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, பாத்ரத்தை வைத்து தண்டனிட்டருளினார். இவ்வர்த்தத்திலே, "கோயிலிலே சில பிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரிய திருமண்டபமும் கற்பித்துப் பெரும் திருப்பாவாடையு மமுது செய்வித்து, "எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்" என்று மணலைக்கையாலே * முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக்கெழுந்தருளுகிற உடையவர், அவ்விடத்திலே அது கேட்டருளி தண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே யேற்றார்" என்றுஜீயரருளிச்செய்தார். (தமருகந்ததெப்பேர்மற்றப்பேர்) நல்லவர், "சதங்கையழகியார்" என்று திருநாமம் சாத்தினராகில், காரையணுகி நாமங்களைக்காட்டிலுமத்தை விரும்பும். (தமரித்யாதி) நல்லவருகந்து "யேயதா-யேயதா" என்னும்படி யாதொரு ப்ரகாரத்திலே உகந்து ஸாவதாரராயிருப்பர்கள்; அந்தப்ரகாரத்தாலேஅத்தை யுடையனான.

* முகந்து - ஸந்தோஷித்து.

(ஆழியான்) அப்ராக்ருதமாயிருந்துள்ள ஸகலபரிகரத்துக்கு முபலக்ஷணம். அவையெல்லாங்கிடக்க இவர்கள் நினைத்தபடியாகத் தன்னை யமைத்துக்கொடுக்கும்.

(தமரித்யாதி) இவன் கண்டு தொழவேண்டாவோ. எங்கே காண்பதென்னில்; (அவ்வுருவந்தானே)"சூத்ரநாமாநஷாமேஷு"-ஆத்மாகமாதுஷம்மத்யே." "யேயஷு - யேயதா". (எப்போதுமற்றப்போர்) எங்களாழ்வார்பாடே ஆயர்தேவு சென்று நாவம்பழம் வேண்ட, "நீயார்" என்று அவர்கேட்க, "ஜீயர் மகனை ஆயர்தேவு" என்ன, ஜீயரைக்கண்டு "உம்முடைய பிள்ளை எங்களைக்குடியிருக்க வொட்டுகிறிலன்" என்றார். (ஆழியானும்) ஸ்ரஷ்டாவாய் நியாமகனுயிருக்கிறவன் ஸ்ருஜ்யனுமாய் நியாம்யனுமாம். (சசு)

அரு.—நாற்பத்துநாலாம்பாட்டு.—அதிகாரி நியமம் த்ரவ்ய நியமமின்றிக்கேயொழிந்தாலும், எம்பெருமான் ஸாந்நித்யம் பண்ணுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (எம்பெருமானரித்யாதி). எவ்வண்ணம் எந்தப்ரகாரம் ஸ்திதி கமந ஸயநாதிகள் என்றபடி,

மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (இவன்கண்டித்யாதி). ஆஸ்ரிதனிட்ட பேரை யுகப்பனென்னுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (எங்களாழ்வாரித்யாதி). ஆயர்தேவுநங்கீயர் திருவாராதநம். அவர் ஸ்வப்நத்திலே பழம்முதலான வற்றைக்கேட்க, ரஹஸ்யமாக எங்களாழ்வாரருளிச்செய்தா ரென்றபடி. (சசு)

ஆமே யமரர்க் கறிய வது நிற்க
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே - பூமேய
மாதவத்தோன்தாள்பணிந்தவாளரக்கன்நீண்முடியைப்
பாதமத்தா லெண்ணினன் பண்பு. (சரு)

ப-உ. நன்னெஞ்சே - நன்மையுடைய மனமே! பூ - (நாபீ) கமலத்தில், மேய - வாஸம்பண்ணுகிற, மா - பெரிய, தவத்தோன் - ஜ்ஞாநத்தையுடைய, (ப்ரஹ்மாவினுடைய), தாள்-பாதங்களை, பணிந்த - வணங்கின, வாள் - வாள் என்கிற ஆயுதத்தையுடைய, அரக்கன் - அஸுரனான ராவணனுடைய, நீள் - தீர்க்கமான, முடியை - தலைகளை, அப்பாதத்தால் - அந்தத்திருவடிகளினால், எண்ணினன் -

கணக்கிட்டவனுடைய, பண்பு - குணங்களை, அமரர்க்கு - தேவர்களுக்கு, அறியவாமே - தெரிந்துகொள்ளப்போமோ; அதுநிற்க-அது கிடக்க, நாமே - நாமே, அறிகிற்போம் - அறிய ஸமர்த்தராவோம்.

வ்யா.—அவ.—நாற்பத்தைந்தாம்பாட்டு (ஆமே இது அவன் காட்டக்கண்டவருக்கொழிய அல்லாதார்க்கறியப் போகாதென்கிறார்.

(ஆமேயமரர்க்கறிய) எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநரான தேவர்களுக்கு மறியப்போகாதென்கிறது. (அது நிற்க நாமே யறிகிற்போம்) அவ்விடையாட்டம் நிற்க நமக்கறியத்தட்டென். (நன்னெஞ்சே) அவன் காட்டக்கண்ட நெஞ்சே. (பூமேயவித்யாதி) ப்ரஹ்மாவின் மடியிலே ஒரு சிறுபிள்ளையாய்க் கண் வளருவாரைப் போலே கிடந்து "இவனுக்கு வரங் கொடுக்க வேண்டா, இது அகார்த்தமாம்" என்று ராவணன்தலையைத்தன்திருவடிகளாலேஎண்ணினவனுடைய நீர்மையை "அமரர்க்கு அறியவாமே"என்கிறது-இத்தால் ப்ரஹ்மாவினுடைய அறிவு கேடு சொல்லுகிறது.

(ஆமே) அபிமாநிகளான ப்ரஹ்மாதிகளுக்கு மெளியனும் (தாள் பணிந்த வாளரக்கன்) புதுத்தண்டன்கண்டு * இறுமாந்து விலைவதறியாதே வரங்கொடுத்தபடி. (சசு)

அரு.—நாற்பத்தைந்தாம்பாட்டு.—இது ஆஶ்ரிதபார தந்த்ர்யம். ராவணன் பத்துத் தலையையும் மறைத்துவர அத்தைச் சிறுபிள்ளைகள் காலியாட்டுமாப்போலே எண்ணிக் காட்டினன்.

(ப்ரஹ்மாதிகளுக்கு மெளியனும்) அவர்களுக்கு மெளியனுமவன் நமக்கெளியனுகச் சொல்லவேணுமோவென்று இரண்டாம் தாத்பர்யம். (சசு)

பண் புரிந்த நான்மறையோன் சென்னிப் பலியேற்ற
வெண் புரிநூல் மார்பன் வினைதீரப் - புண்புரிந்த
ஆகத்தான் தாள்பணிவார் கண்டீர், அமரர்தம்
போகத்தால் பூமியாள்வார். (சசூ)

ப-உ. பண் - ஸ்வரத்தோடு, புரிந்த - யுக்தமான, நான்மறையோன் - நாலுவேதங்களையுடைய ப்ரஹ்மாவினுடைய, சென்னி-

* இறுமாந்து - மிகவும் ஸந்தோஷித்து.

தலையிலே, பலி - பிக்ஷையை, ஏற்ற - வாங்கினவனும், வெண் - வெளுத்த, புரி - புரியையுடைய, நூல் - யஜ்ஞோபவீதத்தை, மார்பன் - வக்ஷஸ்ஸிலேயுடைய (ருத்ரனுடைய), வினை - பாபங்கள், தீர - போம்படி, புண் - வ்ரணத்தோடு, புரிந்த - கூடிய, ஆகத்தான் - திருமேனியையுடைய ஸர்வேஸ்வரனுடைய, தாள் - திருவடிகளை, பணிவார்கண்டீர் - தொழுமவர்கள் கிடீர், அமரர்தம் - நித்யஸூரிகளுடைய, போகத்தால் - செல்வத்தோடு கூட, பூமி - தரணியோடுகூடின லீலாவிபூதியை, ஆள்வார் - நிர்வஹிப்பர்கள். (சகூ)

வ்யா.—அவ.—நாற்பத்தாறும்பாட்டு.—(பண்ணித்யாதி) ருத்ரனுடைய லஜ்ஜைகேடு சொல்லுகிறது.

(பண்புரிந்த நான்மறையோன்) ஸ்வரயுக்தமாக ஸர்வேஸ்வரனாலே ஓதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவின். (சென்னிப்பலியேற்ற) "வாஸோ ஹ்ருஷ்டநவாதே மரண மஹிந்ருதவஸ்மிரோரஸா - வாமாங்குஷ்டகராக்ரேண சிந்நம்தஸ்ய சிரோமயா" என்கிறபடியே ப்ரஹ்மாவின் தலையை யறுக்க, அவன், "கபாலியாவாய்" என்று சபிக்க. அவனுடைய தலையோட்டிலே பிக்ஷையேற்ற. (வெண்புரிநூல் மார்பன் வினைதீர) விநீதவேஷனுய் ப்ராயச்சித்தியானபடி. இவனோடு ஸம்பந்தித்தார்க்கெல்லா மதுவேயிறேபணி. அகமுடையவளும் தகப்பனுரைக்கொன்றுள்; இவளை யாஸ்ரயித்தவனும் தகப்பனைக்கொன்றுன். "வினைதீர" என்கிறவித்தால் இவனுடைய கர்மவஸ்யத்வமும், தான் பண்ணின கர்மம் தன்னால் பரிஹரிக்கப்போகாமையும் சொல்லுகிறது. இத்தால் ஈஸ்வரத்வ சங்கையிலை யென்றபடி. (புண்புரிந்த வித்யாதி) ஈஸ்வராபிமானியாய் ஒருத்தனுய்த் திரிந்தவன் வாசல்தோறும் இடறித்திரிவதே! என்று திருவுள்ளத்திலே புண்பட்ட ஸர்வேஸ்வரனுடைய தாள் பணிவார் கிடீர். (அமரரித்யாதி) பூமியுமாண்டு பரமபதத்தில் போகமுமநுபவிப்பார்கள். அன்றியே, போகபூமியிலே பிருக்கச்செய்தே பரமபதத்தில் போகமெல்லா மநுபவிப்பார்களென்றுமாம்.

அவ.—ப்ரஹ்மாவாலே ஒரு ருத்ரனிலைத்துகொடுகிடக்க அது தீர்த்தாரார்.

(பண்ணித்யாதி) ஒத்துச்சொல்லாநிற்கத் தலையறுத்தபடி. மூலையடியே திரிந்தார் பாதகியரனவாறே முழுகித்திரியும்படி. "வின்னுளாரிலும் சீரியர்" என்றுமாம். (சகூ)

அரு.—நாற்பத்தாறும்பாட்டு.—பலி - வலி ; பிகைஷயென்ற படி. அகமுடையவள்-பார்வதி. தகப்பனைக்கொன்றது-தக்ஷப்ரஜாபதி பகவத்பரனுகையாலே யாகத்திலே பெண்ணான பார்வதியையழையாதிருக்க, அவள் ருத்ரனைக் கூட்டிக்கொண்டுபோக, அவன் ருத்ரனை யுதாஸிக்கையாலே, ருத்ரன், ஜடையிலே வீரமுஷ்டிகளை யுண்டாக்கிக்கொல்லுகையாலே "அவள்கொன்றாள்" என்கிறது. இவளையாஸ்ரயித்தவன்-ருத்ரன். அவன் ப்ரஹ்மாவைத் தலையையறுத்தான்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாவாலே யித்யாதி). ருத்ரனுக்கு ஒத்துச்சொல்லாகிற்க, வெள்ளைப் பூணூலும், என்கையாலே முழுகினமைதோற்றுகிறது. பூமியிலேயிருக்க அமரர்போகம் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (விண்ணுளாரிலுமித்யாதி). (சசு)

வாரி சுருக்கி மதக் களி றைந்தினையும்
சேரி திரியாமற் செந்நிறீஇக் - கூரிய [நாள்
மெய்ஞ் ஞானத் தாலுணர்வார் காண்பரே, மேலொரு
கைந்நாகம் காத்தான் கழல்.

ப-உ. மதம்-கொழுத்த, களிறு - இந்த்ரியங்களாகிற யானைகள், ஐந்தினையும் - ஐந்தையும், வாரி-விஷயங்களாகிற ஜலத்தில், சுருக்கி - ஓடுக்கி, சேரி - விஷயங்களாகிற தெருவில், திரியாமல் - ஸஞ்சரியாதடடி, செந்நிறீஇ - நன்றாய் கிறுத்தி, கூரிய - ஸூக்ஷ்மமான, மெய் - பரமார்த்தமான, ஞானத்தால் - பக்தியால், உணர்வார் - அதிய ஸமர்த்தரானவர்கள், மேலொருநாள் - முன்பொருகாலத்தில், கை - குணவானான, நாகம் - கஜத்தை, காத்தான் - ரக்ஷித்தவனுடைய, கழல் - திருவடிகளை, காண்பர் - ஸாக்ஷாத்கரிப்பர்கள். (சஎ)

வ்யா.—அவ.—நாற்பத்தேழாம்பாட்டு. (வாரிசுருக்கியித்யாதி) இந்த்ரியங்களுடைய போகத்தைச் * செறுத்து, விஷயத்தினுடைய ஸந்நிதியில் நில்லாமல் பரிஹரித்து, மெய்யான பக்தியையுடையவர்களவனைக் காண்பரென்கிறார். "விஷயாவிநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிநஃ । ரஸவர்ஜம்ரஸோப்யஸ்ய பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே" வ்வ

---

* செறுத்து-நெருக்கி.

(வாரிசுருக்கி) மதித்த வாஜைகளைத் தண்ணீரிலே செறுக்கு மாப்போலே இந்த்ரியங்களினுடைய போகத்தைக் குறுக்கி. (சேரி திரியாமல்) தெருவேதிரியில்கொல்லுமிறே ஆனை. அப்படி விஷயத்தி னுடைய ஸங்நிதியில் திரியாமல். (செங்நீரீ) செவ்விதாக நிறுத்தி; பதார்த்தங்களில் போகாமல் ப்ரத்யக்வஸ்து விஷயமாக்கி. (கூரிய வித்யாதி) விஹித கர்மங்களை பலாபிஸந்திரஹிதமாக வநுஷ்டித்து க்ஷீணபாபராய் ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநமுண்டாய் ஈஸ்வர பாரதந்த்ர்யமென்னு மிடம், ‘‘உவாஸநாஜ்ஞாவாயஸ்தி ஹுஸுநஸோ நாசுரா வரதூக்ஷாஹிவுக்ஷிவிஸுஜே தஜநஞாழி - உபாஸநாத் யுபாயஸ்திதி தர்சநஸமாநாகார ப்ரத்யக்ஷாபிவ்யக்திவிசதேததகந்த ரம்’’ என்று சொல்லுகிற பக்தியாலே காண்பர்கள். (மேலித்யாதி) பண்டொருநாள் ஸ்ரீகஜேந்த்ரமோக்ஷம் பண்ணினவனுடைய திரு வடிகளை. இத்தால் விரோதியான முதலையைப்போக்கித் தன்னைக் காட்டிக் கொடுத்தாற்போலே இவர்களுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கித் தன்னைக்காட்டிக்கொடுக்குமென்கிறது. (சேரிதிரியாமல்) ஆள்நடையாடாதவிடத்தே கொண்டுபோய். (கூரியவித்யாதி) சுபா ஸ்ரயமாகவும், ஸாதநமாகவும், உபாயமாகவும், உபேயமாகவும், அநு ஸந்திக்கை.(கைங்காகம்) ‘‘வாஸுரவஹுவஸ்ஸ-பரமாபதமாபந்நஃ’’.

அரு.—நாற்பத்தேழாம்பாட்டு.—ஆனைக்கு மதஹேதுவான ஜலத் தைச்செறுக்கவே மதம் போமாப்போலே, முமுக்ஷுவுக்குமாஹா ராதிகளைச் செறுக்கவே வீர்யம் போமென்னு மதுக்கு ப்ரமாணமரு ளிச்செய்கிறார் (விஷயாவிநிவதநுஜ்ஞே.விஷயாநிநிவர்த்தந்தே, இத் யாதி). தண்ணீரிலே செறுக்கை தண்ணீர்காட்டாதிருக்கை .(சஎ)

கழ லொன் றெடுத் தொருகை சுற்றி யோர் கைமேல்
சுழலும் சுராசுரர்களஞ்ச - அழலும்
செருவாழி யேந்தினன் சேவடிக்கே செல்ல
மருவாழி நெஞ்சே மகிழ். (சஅ)

ப-உ. ஒருகழல் - ஒருதிருவடியை, எடுத்து - தூக்கி, ஒருகை - ஒருகையாலே, சுற்றி - (நமுசியை) ப்ரமிப்பித்து, சுழலும் - கலங்கி யிருக்கிற, சுராசுரர்கள் - தேவர்களும் அரக்கர்களும், அஞ்ச - பயப் படும்படி, அழலும் - எரிகிற, செரு - யுத்தஸாதநமான, ஆழி - சக்

ரத்தை, ஓர்கைமேல் - ஒருகரத்தில், ஏந்திஞன் - பிடித்தவனுடைய, சே - சிவந்த, அடிக்கே - பாதங்களிலே, செல்ல - கிட்டும்படி, ஆழி - கம்பீரமான, நெஞ்சே - மனமே, மருவு - பொருந்து; மகிழ் - ஸந்தோஷப்படு. (சஅ)

வ்யா.—அவ.—காற்பத்தெட்டாம் பாட்டு.—(கழல்) இப்படி "இந்திய ஜயம்பண்ணி நாம் பெறுகையாவதென்" என்று தம்முடைய திருவுள்ளம் பயப்பட, எளிதாகப்பற்றலாம், நீ பயப்படவேண்டா வென்கிறார்.

(கழலித்யாதி) கழுசியுடைய ஒரு காலையெடுத்துக் கையாலே சுற்றி என்னவுமாம். அன்றியே, பூமியளக்க வென்று தன்னுடைய ஒரு திருவடி மலையையெடுத்து (அவஸரத்திலே) கழுசியை ஒருகையாலே சுற்றியென்னவுமாம். (ஓர்கைமேலித்யாதி) ஒரு திருக்கை மலரிலே அநுகூலப்ரதிகூலரோடு வாசியற அழலாகின்ற * செருவுடைத்தான திருவாழியை யேந்தினவனுடைய. (சேவடிக்கேசெல்ல, ஆழிநெஞ்சே மகிழ்ந்து மருவு) உகந்துகந்து அநுபவி.

(கழலித்யாதி) அளந்தபடி. (ஆழிநெஞ்சே) உனக்கு உபதேசிக்கவேண்டா விறே. சேவடிதானே யிருந்த விடத்தேவந்தால், † இழுயாமையே வேண்டுவது (சஅ)

அரு.—நாற்பத்தெட்டாம்பாட்டு.—ஆழிநெஞ்சு - அன்புடையநெஞ்சு. "மருவு" என்றதைப் பற்றவருளிச்செய்கிறார் (சேவடிதானேயித்யாதி). (சஅ)

மகிழல கொன்றேபோல் மாறும்பல் யாக்கை
நெகிழமுயல் கிற்பார்க்கல்லால் - முகிழ் விரிந்த
சோதிபோற் றோன்றும் சுடர்பொன் னெடுமுடி, எம்
ஆதிகாண் பார்க்கு மரிது. (சகூ)

ப-உ. மகிழ் - மகிழமரத்தினுடைய, ஒரு அலகுபோல் - ஒரு விளைபோல், மாறும் - வேறுவேறாய் வருகிற, பல் - அநேகமான, யாக்கை - சரீரத்தை, நெகிழ - நீங்க, முயல்கிற்பார்க்கல்லால் - யத்நம்பண்ணுமவர்களுக்கல்லது, முகிழ்விரிந்த - விகஸித்த, சோதிபோல் - தேஜஸ்ஸைப்போல், தோன்றும் - காணப்படுகிற, சுடர் -

---

* செரு-சண்டை,

† இழுயாமை-பின்வாங்காமை.

தீப்தியையுடைய, பொன் - அழகிய, நெடு - நீண்ட, முடி - கிரீடத்தையுடையனுய், எம் - நமக்கு, ஆதி - காரணபூதனானவன், காண் பார்க்கும் . காணவேணு மென்றிருப்பார்க்கும், (கேட்பார்க்கும்), அரிது - துர்லபன். (சகு)

வ்யா.—அவ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. (மகிழலகித்யாதி) இப்படி யிராதார்க்கு அவனைக் கிடையாதென்று பின்னையுமதினுடைய வருமைசொல்லுகிறது.

(மகிழலகித்யாதி) அலசானது கோடிஸ்தாகத்திலும் நின்று காணிஸ்தாகத்திலும் நிற்குமாப்போலே, இவ்வாத்மாவானது தேவசரீரத்திலே புகுவது திர்யக் சரீரத்திலே புகுவதாய் மாறிமாறி வருகிற பலயாக்கையை நெகிழ்ந்துபோம்படியாகப் . பண்ணுவார்க்கல்லால். (முகிழித்யாதி) விகஸிதமாயிருந்த தேஜஸ்ஸைப்போலே தோன்றுமதாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையனுய் எனக்குக் காரணமாயிருக்கிறவனைக் காணுமவர்களுக்கரிது.

அவ.—ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் அருசியும் எம்பெருமானைக் காண்கையில் ருசியுமுடையார்க்கு எளிதாகக் காணலாமென்கிறது. "பொய்நின்ற" இத்யாதி.

(மகிழித்யாதி) கர்மாதுகுணமாக சரீரங்கள்தோறும் துழைகை. "யாதானுமோராக்கை". (முகிழ்விரிந்தசோதி) "செவ்விப்படிக்கோலம்."(எம்மாதி) ப்ராபகனை. (காண்பார்க்கும்)கேட்பார்க்குமரிது. இப்படியாஸ்ரயிப்பார்க் கல்லது ப்ரக்ருதியை யுகப்பார்க்கு முகங்கொடுக்குமிதரபுருஷனல்லன். (சகு)

அரு.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.—"மூயல்கிற்பார்க்கல்லால்" என்றதைப்பற்ற வவதாரிகை யருளிச்செய்கிறார் (இப்படி யிராதார்க்கித்யாதி). பண்ணுவார்க்கு-கர்மாத்யுபாயங்களைப் பண்ணுவார்க்கு,

மேலுக்கு ப்ரதிபத்திபரமாக அவதாரிகையருளிச்செய்கிறார் (ப்ரக்ருதி ப்ராக்ருதங்களித்யாதி) சகாரத்தாலே கேட்பார்க்குமென்கிறது. மகிலழகு - மகிழம்விரை. (சகு)

அரிய புல னைந்தடக்கி யாய் மலர்கொண்டு, ஆர்வம்
புரிய பரிசினற் புல்கில் - பெரியனுய்

மாற்றுது வீற்றிருந்த மாவலிபால், வண்கைநீர்
ஏற்றுனைக் காண்பதெளிது. (நி0)

பத. அரிய - கொடுமையான, புலனைந்து - ஐந்து இந்திரியங்களை, அடக்கி - ஸ்வாதீநப்படுத்தி, ஆய் - சோதித்த, மலர் - புஷ்பங்களை, கொண்டு - ஸம்பாதித்து, ஆர்வம் - ப்ரீதி, புரிய - வ்ருத்தியடையும்படியான, பரிசினால் - ப்ரகாரத்தாலே, புல்கில் - தொழுதால், பெரியனுய் - (தன்னை) பெருக்க நினைத்திருக்குமவனுய், மாற்றுது - (தாகத்தில்) வேறுபடாமல், வீற்றிருந்த - வேறுபாடுதோற்றும்படியிருந்த, மாவலிபால் - மஹாபலிபக்கலில், வண் - பெரிய, கை - கரத்திலே, நீர் - (தாரை) ஜலத்தை, ஏற்றுனை - பிடித்தவனை, காண்பது - ஸாக்ஷாத்கரிப்பது, எளிது - ஸுலபமாயிருக்கும். (நி0)

வ்யா.—அவ.—ஐம்பதாம் பாட்டு.—இந்திரியங்களை விஷயங்களில் போகாமல் காத்து அவன் பக்கலிலேஸ்நேஹிக்கில் காண எளிதென்கிறார்.

(அரியவிக்யாதி) ஒரு * செய்யிலே பாயும் நீர் இரண்டுசெய்யிலே பாய்ந்தால் இரண்டு செய்க்கும் போராதொழியுமிறே. ஸர்வேஸ்வரனையிச்சிக்கக் கடவவான விந்திரியங்களை விஷயங்களிற் போகாதபடியடக்கி. "அரிய" என்றது "தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்" ப்ரதிகூலமானவாயுவை நியமிக்கவரிதானுற்போலே மநஸ்ஸை நியமிக்கவரிதென்று அர்ஜுநன் சொன்னபடியேயிருக்கை. (ஆய் மலர்கொண்டு) செவ்விப்பூக்களைக்கொண்டு. (ஆர்வம் புரியபரிசினால்) ஸ்நேஹம் மிக்க ப்ரகாரத்தாலே. (புல்கில்) ஆணையில். (பெரியனுயித்யாதி) உதாரமான கையைக்கொண்டு நீரேற்றவனைக் காண்கையெளிது.

(புல்கில்) புல்கப்பெறில். (பெரியனுய்) ஐச்வர்யமும் ஔதார்யமும். (வண்கை) கொடுத்துவளர்ந்தகை. (நீரேற்றுனைக் காண்பதெளிது) அப்ரதிஷேதமுடையார்க்கு அர்த்தியாய் வருமென்றவாறு. (நி0)

அரு.—ஐம்பதாம்பாட்டு.—"அடக்கி" என்று விஷயங்களைவிட்டே பற்றவேணுமே, அவற்றையுங்கூட விரும்பினுலாகாதோவென்ன;

* செய்யிலே-வயலிலே.

அருளிச்செய்கிறார் (ஒரு செய்யித்யாதி). மாற்றாதே வீற்றிருந்த ஔதார்யம் மாறாதே வீற்றிருந்த.

"ஏற்றானே" என்றதைப்பற்ற வருளிச்செய்கிறார் (அப்ரதிஷேதமித்யாதி). (நிo)

எளிதி லிரண்டடியும் காண்பதற்கு, என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே – களியில்
பொருந்தாதவனைப் பொரலுற்று, அரியாய்
இருந்தான் திருநாமமெண், (நிக)

ப-உ. என்னுள்ளம் - என்னுடைய மனமே! எளிதில் - ஸுலபத்தில் இரண்டடியும்-இரண்டுபாதங்களையும், காண்பதற்கு - ஸாக்ஷாத்கரிக்க, தெளிய-நிர்மலமானால், செவ்வே-நன்றாக, தெளிந்தொழியும்-ப்ரஸந்நனாய்விடுவன். (ஆனபின்பு) களியில்-கர்வத்தினால். பொருந்தாதவனை-அதிகாதவனை, பொரல் - போர்செய்து முடிக்கையிலே, உற்று-ஒருப்பட்டு, அரியாய் - நரஸிம்ஹமாய், இருந்தான் - ஸ்திதனானவனுடைய, திருநாமம்-திருநாமங்களை, எண்-த்யாநம்செய். (நிக)

வ்யா.—அவ.—ஐம்பத்தோராம்பாட்டு.—(எளிதில்) தம்முடைய திருவுள்ளத்தை ஸம்போதித்து, நீ விஷய காலுஷ்யத்தைத் தவிர்; அவன் ப்ரஸந்நனுமென்றார்.

(எளிதிலித்யாதி) எளிதின்றிக்கே யிருந்துள்ள விரண்டு திருவடிகளும்காண்பதற்கு. எளிதாக வென்னவுமாம். (என்னுள்ளம்)என்னெஞ்சே! என்றபடி. (தெளிய) விஷயகாலுஷ்யத்தைத் தவிர. (செவ்வேதெளிந்தொழியும்)அவன் நேரேப்ரஸந்நனும்.(களியித்யாதி) செருக்காலே பொருந்தேனென்றிருந்த ஹிரண்யனை (பொரலுற்று அரியாயிருந்தான் திருநாமமெண்) சிறுபிள்ளைக்காக * உதவி ஹிரண்யனை முடித்தவனுடைய திருநாமத்தை எண்ணு.

(என்னுள்ளம்) உள்ளமே! நீ தெளியில் அவன் செவ்வே நம்திறத்துத் தெளிந்தொழியும். ப்ரமாணமென்! ப்ரஹ்லாதன் தெளிய அவன்விஷயத்துத்தெளிந்தானென்று கார்யம் பார்த்தபடிகண்டிலையோ.

பாடாந்தரம்- * உதவி-பொருந்த.

(பொரலுற்று) பொருது. சிற்றத்துக்கிளை * போராமல் † சோம்பியிருந்தான். (திருநாமம்) வாக்காலே. (தெளி) எண்ணவொட்டாதவன் பட்டபாடறிவுதியிறே. (நிக)

அரு.—ஐம்பத்தோராம் பாட்டு.—என்னுள்ளம் - அண்மைவிளி. பொரலுற்று. பொருகையிலேயுற்று. காணத்தகுந்திருநாமமென்றவயம். (நிக)

எண்மர் பதினெருவ ரீரறுவ ரோரிருவர்
வண்ண மல ரேந்தி வைகலும் - நண்ணி
ஒருமாலை யால்பரவி யோவாது, எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று. (நிஉ)

ப·உ. எண்மர் - அஷ்டவஸுக்களும், பதினெருவர் - ஏகாதசருத்ரர்களும், ஈரறுவர் - பன்னிரண்டு ஆதித்யர்களும், ஓர்-அத்விதீயமான, இருவர்-அஸ்வினீதேவதைகளிருவரும், வண்ணம்-காவிநாவர்ணத்தையுடைய, மலர்-பூவை, ஏந்தி-தரித்துக்கொண்டு, வைகலும்-தினந்தோறும், நண்ணி-கிட்டி,ஒரு-அத்விதீயமான,மாலையால்-புருஷஸூக்தாதி சப்தஸந்தர்ப்பங்களாலே, பரவி - துதித்து, எப்போதும்-ஸர்வகாலமும், ஓவாது-விடாமல், திரு - லக்ஷ்மியோடு கூடின, மாலை - ஸர்வேஸ்வரனை, சென்று-கிட்டி, கைதொழுவர் – கையால் கமஸ்கரிப்பர்கள். (நிஉ)

வ்யா.—அவ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.— (எண்மரித்யாதி) கீழ்தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குதவினவனுடைய திருநாமத்தை யெண்ணு; அவன் ப்ரஸந்நனென்றது - மற்றும் துர்மாநிகளான தேவாதிகளுமவனை யாஸ்ரயிக்கத்தக்க காரணங்கள் அதிகாரம் பெற்ற தென்கிறார்.

(எண்மரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதஸருத்ரர்கள், த்வாதஸாதித்யர்கள், அஸ்வினிகள். (வண்ணமலரேந்தி) காவிநாவர்ணமான புஷ்பங்களைக்கொண்டு. (வைகலும் நண்ணி ஒருமாலையால்) புருஷஸூக்தத்தாலே. (ஓவாதெப்போதும்) விச்சேதமின்றிக்கே. (திருமாலித்யாதி) ஸ்ரியபதியைச்சென்று ஆஸ்ரயிப்பர்கள் "தஜ்ஜ்வ

* போராமல்-பொருமல்.

† சோம்பியிருந்தான்-வாடியிருந்தான்.

ரூவிவாஹராயணஸ்ஸம்ஹவாக்-தத்துபர்யபிபாகராயணஸ்ஸம்பவாத்" தேவர்களுக்கும் பவிஷ்யத்திற் பெறவிருந்துள்ள வதிகாரார்த்தமாக ஆதித்யாந்தர்யாமியா யிருந்துள்ள பரமாத்மோபாஸநம் விதியா நின்றதே.

வ்யாபாரயோக்யரான ப்ரயோஜநாந்தரபரர் ஒரு மாலையால் பரவியோவுகையன்றிக்கே, எல்லாக் காலமும் எப்போதுமென்றுமாம். (திருமால்) வேண்டுவதெல்லாம் பெறுகைக்கடி. (நிஉ)

அரு.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—வகுத்த விஷயமாகையாலே, அதிகாரம்பெற்றது.தேவர்களும் பெற்றார்கள்; காரணங்களும்பெற்றன வென்றபடி.

தேவர்களுக் காஸ்ரயமுண்டோவென்ன ; அருளிச்செய்கிறார் (தஹ-வாஹி - தத்துபர்யபிதியாதி).

எண்மர் = வ்யாபார யோக்யரானதிக்பாலர்கள். எப்போதும் எல்லாக்காலமாதல், எல்லாப்புஷ்பமாதல். (நிஉ)

சென்றால் குடையா மிருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு. (நிக)

ப-உ.—அரவு - திருவநந்தாழ்வான், திரு - பிராட்டியோடு கூடின, மாற்கு - ஸர்வேஸ்வரனுக்கு, சென்றால் - உலாவினால், குடையாம்-சத்ரமாயிருப்பர்; இருந்தால்-எழுந்தருளி யிருந்தால், சிங்காசனமாம்-ஸிம்ஹாஸநமாயிருப்பர்; நின்றால்-நின்றால், மரவடியாம் - பாதுகையாயிருப்பர்; நீள்-விசாலமான, கடலுள்-ஸமுத்ரத்தில், (பள்ளிகொண்டால்), என்றும்-ஸர்வகாலமும், புணையாம் - தெப்பமாயிருப்பர்; மணிவிளக்காம்-ரத்நத்தால் செய்யப்பட்ட தீபமாயிருப்பர்; பூம்பட்டாம் - அழகிய பரியட்டமாயிருப்பர்; புல்குமணையாம் - தழுவிக்கொள்ளும் மெத்தையாயிருப்பர். (நிக)

வ்யா.—அவ.—ஐம்பத்துமூன்றும்பாட்டு.—(சென்றால்) கீழே யெல்லா நேர்த்தியும் நேர்ந்து தங்களுக்குறுப்பாக வாஸ்ரயிக்குமவர்

களைச் சொல்லிற்று ; இதில் தங்களையெல்லாமழிய அங்குத்தைக் குறும்பாமவர்களைச் சொல்லுகிறது.

(சென்றால் குடையாம்) கைங்கர்யம் ஸ்வபுத்யதீநமன்றென்கிறது. நான்குடையாய் நின்றேன், நீ இங்கேவா வென்கையன்றிக்கே அவனுலாவப் புக்கால் குடையபேக்ஷிதமானபோது குடையாகை. (இருந்தால் சிங்காசனமாம்) இருக்கை திருவுள்ளமானபோது திவ்ய ஸிம்ஹாஸநமாம். நிற்கை திருவுள்ளமானபோது மரவடியாம். கண் வளர வபேக்ஷிதமானபோது கடலிலே எல்லாக்காலத்திலும் படுக்கையாம். (மணிவிளக்காம்) ஒருவிளக்காலே ஒரு பதார்த்தத்தைக் காணவேணுமென்றபோது மங்களதீபமாயிருக்கும். (பூம்பட்டாம்) திருப்பரியட்ட மபேக்ஷிதமானபோது அழகிய பட்டாம். (புல்கு மணையாம்) தழுவணை யபேக்ஷிதமானபோது தழுவணையாம். (திருமாற்கு) ஸ்ரீயஃபதிக்கு. (அரவு) கட்டிப்பொன்போலே எல்லாவடிவையு மாக்கிக்கொள்ளலாம்படி யிருக்கிறபடி.

(சென்றால்) "குடையாவேன்-செல்" என்று சேஷியை நியமியாதே. (இருந்தால்) அபேக்ஷையுள்ளபோது. (நின்றால்) நின்றபின்பு. (புணை) தெப்பம். (மணிவிளக்கு) மங்களதீபம். (பூம்பட்டு) பும்ஸ்த்வாவஹமான பரியட்டம். (புல்குமணை) பிராட்டிமாரோடணைல், வ்யஸநம் மறப்பிக்கவற்றாகை, ஊடலுக்கு ஹேதுவாசவுமாம். (திருமாற்கு) இளையபெருமாளுக் கங்தரங்கஸேவை. (அரவு) தான் ஒரு சேதநனென்று கூசவேண்டாதபடி தன்னை யமைத்தபடி. ராஜகிங்கரங்களில் கூனர் குறளைப்போலே. (நிங)

அரு.—ஐம்பத்துமூன்றும் பாட்டு.—திருவகத்தாழ்வானைச்சொன்னது உபலக்ஷணமாய், தங்களை யெல்லாமென்று - நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. க்ஷீராப்திபோலே யழுந்தாமைக்குத் தெப்பமாய். வ்யஸநம் மறப்பிக்கை தன்னுடைய ஸ்பர்சத்தாலே யவர்களைப்பிரிந்த வ்யஸநம் தோற்றாதபடிபண்ணுகை. தன்னுடையஸ்பர்சம்போக்யமாம்படி உடம்புகொடுக்கையாலே பிராட்டிமாரூடுகைக்கும் ஹேதுவென்றபடி,

"திருமாற்கரவு" என்றசேர்த்தி எப்படி யிருக்கிறதென்ன ; "ரமாணாவநேதுயஃ- ரமமாணவநேத்ரயஃ" என்று-ரமித்த இளைய பெருமாளைப்போலே யென்கிறார்(இளையபெருமாளுக்கித்யாதி).(நிங)

அரவ மடல்வேழம் ஆன்குருந்தம் புள்வாய்
குரவை குடமூலை மற் குன்றம் - கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக்கீண்டுகோத்தாடி, உண்
டிட்டெடுத்த செங்கணவன். (நிச)

ப-உ.—செம்-சிவந்த, கண்-நேத்ரத்தையுடைய; அவன் - அந்த ஸர்வேஸ்வரன், கரவு-மறைத்தல், இன்றி - இல்லாமல், அரவு - காளியனை, விட்டு-அனுப்பி, அடல்-சண்டைக்குவந்த, வேழம் - குவலயாபீடமென்கிற யானையை, இறுத்து - முறித்து, ஆன்-பசுக்களை, மேய்த்து-புஜிக்கப்பண்ணி, குருந்தம் - குருக்கத்திமரத்தை, ஒசித்து - ஒடித்து, புள்வாய்-பகமென்கிறபக்ஷியினுடைய வாயை, கீண்டு-பிளந்து; குரவை - கைகோத்த விளையாட்டை, கோத்து-தொடுத்து, குடமாடி-குடக்கூத்தாடி, மூலை - (பூதனையின்) ஸ்தநத்தை, உண்டு - புஜித்து, மல்-மல்லரை, அட்டு - கொன்று, குன்றம் - கோவர்த்தநமலையை, எடுத்த - தூக்கின, (இது முதலான செயல்களிருந்தபடி என்). (நிச)

வ்யா.—அவ.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—(அரவம்) ஆஸ்ரிதர்க்குச் சிலவிரோதம்வந்து போக்கவேண்டில் படுக்கையும் பொருந்தாமல் வந்துநிற்குமென்கிறது. இப்பாட்டு - நிரனிறை

(அரவமித்யாதி) காளியனைவிட்டு, குவலயாபீடத்தின் கொம்பைமுறித்து, ஆனைமேய்த்து, குருந்தமொசித்து. புள்வாய் கீண்டு-பகாஸுரனைக்கொன்று, குரவைகோத்து, குடமாடி, பேய்மூலையுண்டு, மல்லரை யட்டு, குன்றமெடுத்த ஸர்வேஸ்வரன். எடுத்த விச்செயல்க ளெம்பெருமான் சேஷவிஷயத்திற் குறைந்து பரிமாறும்படி யவன்ஸ்வரூபம்.

"செங்கணவன் - விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி உண்டு அட்டு எடுத்தவை - அரவமித்யாதி". (நிச)

அரு.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—எடுத்த - இப்பாட்டிலெடுத்த இந்த வ்யாபாரங்கள், தாழ்ந்து பரிமாறின சேஷியுடைய ஸ்வரூபஞ் சொல்லுகிறது.

அந்வயங்காட்டுகிறார் (செங்கணவனித்யாதி). (நிச)

அவன்தம ரெவ்வினைய ராகிலும், எங்கோ
னவன்தமரே யென்றெழுவ தல்லால் - நமன்தமரால்
ஆராயப் பட்ட றியார் கண்டீர், அரவணைமேல்
பேராயர்க் காட் பட்டார் பேர். (நூ)

ப-உ.—அவன் - அந்த ஸர்வேஸ்வரனுடைய, தமர் - பக்தர், எவ்வினையராகிலும்-எந்தக் கர்மங்களையுடையராஞலும், எம்-நமக்கு, கோன் - ஸ்வாமியான, அவன் - அந்த ஸர்வேஸ்வரனுடைய, தமரே-பக்தர்களிறே; என்று-இப்படி கொண்டாடி, ஒழிவதல்லால்-நீங்குவதல்லாமல், அரவணைமேல்-ஸர்ப்பமாகிற படுக்கையின்மேல்,(இருக்கத் தக்க), பேர்-பெரிய, ஆயர்க்கு - இடையரான க்ருஷ்ணனுக்கு, ஆள் பட்டார் - அடிமைபூண்டவர்களுடைய, பேர் - நாமமும், நமன்-யமனுடைய, தமரால் - தூதரால், ஆராயப்பட்டறியார்கண்டீர் - தேடப் பட்டறியார்கிடீர். (நூ)

வ்யா.—அவ.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—(அவன் தமர்) இப்படி அவ ஞ்ரிதவிரோதி நிரஸநஸ்வரூபஞ்ஞ பின்பு அவனுடைய தமனை யமபட ஞராய்வதெங்ஙனே யென்கிறார்.

(அவனித்யாதி.) அவனுக் கதுகூலமானவர்கள் எத்தொழிலாராகிலென்; விஹிதத்தைச் செய்யிலென், நிஷித்தத்தைச் செய்யிலென். (எங்கோனித்யாதி) "வ்ரஹவதிஹம்யமநேமமாபிவிஷ்ணுः ப்ரபவதிஸம்யமநேமமாபிவிஷ்ணுः" என்னும்படியே. (நமன்தமரித்யாதி) நமன்தமராலாராயப்படா தொழிகிறார், அரவணைமேல் பேராயர்க்காட்பட்டார்பேர். இவர்கள் தாங்களோ வென்னில்; அன்று; ஒருபாகவதனுடைய பேரை ஒரு அபாகவதன் தரித்தால் அவனுடைய பேரும் யமஸதஸ்ஸிலே வாசிக்கப்பெறுதென்கிறது, பேராராயில், குவலயாபீடம் தொடக்கமானவை பட்டதுபடுமத்தனை. "ஏய-ஹ-ஏஉஹவ்வெந்நாஹு - மதுஸ-ஏதஹப்ரபங்நாந்".

(எங்கோனவன்தமரே) என்னையனைவடியார். (எவ்வினையராகிலென்னென் றெழுவதல்லால்) அவர் புண்யம்பண்ணிலென், பாபம்பண்ணிலென்; அத்துறை நா மாராயுந் துறையல்லவென்று கைவிடுமதொழிய. "தூஜஹடஹஏஉதஏணதா நவாவாஹு-த்யஜபடதூரதரேண தாஹபாபாந்". (அரவணைமேல் பேராயர்க் காட்பட்டார்)படு

க்கைபாராட்டிலிறே ஆராய்வது. "நன்று செய்தாரென்பர்போலும்" என்று பிராட்டிக்கு மகப்பட நிலமல்லாதவிடத்தே யமனே ஆராயப் புகுகிறான். அவனுடைய ஒருபேரான ஸம்ஸாரிபேரும் தீட்டி வாட்டான். (நிநி)

அரு.—ஐம்பத்தைந்தாம் பாட்டு.—ஆட்பட்டார் பேர் - ஆட்பட்டாருடைய மநுஷ்யரென்றுய், "பேர்" என்கிற ஸமாதியாலே திருநாமமுமாராயப்பட்டாதென்றபடி.

படிக்கைபாராட்டில் - ஸமுத்ரம்பார்த்து கேவலம் நித்ரைபண்ணினாலன்றே யமனாய, இதப்படியன்றியே, அவனேறிட்டுக்கொண்ட பின்பு இவனுலாராயப்போகாதென்றபடி. பாகவதனுடைய பேரன்றியே அவனுடைய திருநாமம்சுமந்த ஸம்ஸாரிபேரையு மெழுத்தாணியைத்தீட்டி ஓலையிலேவாட்ட எழுதமாட்டா னென்றபடி. (நிநி)

பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பெம்மானே
ஆரே யறிவா ரதுநிற்க-நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான், கண்ணன்
அடிக்கமலந் தன்னை யயன். (நிகூ)

ப-உ.—பேர் - திருநாமத்தை, வர (வாயில்) வரும்படி, பிதற்ற லல்லால்-பலகால் சொல்லுகை யொழிய, எம்-நமக்கு, பெம்மானே - ஸ்வாமியானவனே, ஆர் - எவர்கள், அறிவார் - தெரிந்து கொள்வர்கள், அது நிற்க-அந்த விஷயமிருக்க, கடி - பரிமளமுள்ள, கமலத்து - நாபீகமலத்தினுடைய, உள்-மத்யத்தில், நேரே-நிரந்தரம், இருந்தும்-வாஸம் பண்ணியும், அயன்-ப்ரஹ்மா, கண்ணன் - திருமாலுடைய, அடிக்கமலந்தன்னை - தாமரைப்பூப்போன்ற பாதத்தை, காண்கிலான் - அறியஸமர்த்தனல்லன். (நிகூ)

ஸ்யா.—அவ.—ஐம்பத்தாறும்பாட்டு.—(பேரே)பேராயர்க்காட்படுகையாவது, அவன் விஷயீகரிக்கப்புக்கால் தன் செல்லாமை தோற்ற நிற்கையல்லது இவனவனைப் பரிச்சேதித்தறிகையாவதென்னென்கிறது.

(பேரித்யாதி) பேராலே அவன் வரும்படி. (பிதற்றலல்லால்) திருநாமத்தைச் சொல்லலாமென்றுமாம். அன்றிக்கே, ஏதேனும்

சொல்லப்புக்காலும் திருநாமம் வாயிலே வரும்படி பிதற்றலல்லால். இதுக்கீடாகச் சொல்லுகை யென்றுமாம். (எம்பெம்மானித்யாதி) என்னுடைய ஸ்வாமியை ஆரேயறிவார். அவ்விடையாட்டம் நிற்க, (நேரித்யாதி) அறிவார் கிடக்கிடீர், அறியாதாரைக் கேட்கலாகாதோ. ஸர்வேஸ்வரனுடைய பரிமளத்தை யுடைத்தான திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து அவன்றன்னுலே ஓதுவிக்கப்பட்டு அங்கேயிருக்கிற ப்ரஹ்மா, ஸர்வேஸ்வரனைக் காண்கிறிலன் - அறிகிறிலன்.

நம்மாலறிய வொண்ணுமோவென்னில்; (பேரேவரப் பிதற்றல்) கன்று நின்றவிடத்தே தாய் வருமாப்போலே வாஸிதமாக வென்றுமாம். (எம்பெம்மானே) நமக்கு நேரே காட்டினபடி. (உள்ளிருந்தும் காண்கிலான்) கடற்கரையிலே குடில் கட்டிக்கொண்டிருக்குங் காட்டில் கடலைப் பரிச்சேதிக்க வொண்ணுமோ? அபரிச்சேத்ய மென்றறியில் அறியலாம். பெரியகிழாயார் "வ்யூஹவிஷாம்வாஸ்- ப்ரஹ்மவிதாம்வராः".

(நிசு)

அரு.—ஐம்பத்தாறும் பாட்டு.—மேலுக்கவதாரிகை (நம்மாலித்யாதி). திருநாமம் வாயிலேவாஸிதமாக. பெரியகிழாயார்-பெரியவன். ப்ரஹ்மா பெரியவனேவென்ன; அருளிச்செய்கிறார் (வ்யூஹவிஷாம்வாஸ் - ப்ரஹ்மவிதாம்வராः என்று).

(நிசு)

அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி
உய நின் திருவடியே சேர்வான் - நயநின்ற
நன்மாலை கொண்டுநமோ நாரணு வென்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது.

(நிஎ)

ப-உ.—அயல் - பக்கத்தில், நின்ற - இருக்கிற, வல் - ப்ரபலமான, வினையை - பாபத்தைக்குறித்து, அஞ்சினேன் - பயப்பட்டேன்; அஞ்சி - பயப்பட்டு, உய - உஜ்ஜீவிக்க, நின் - உன்னுடைய, திருவடி - திருப்பாதங்களே, சேர்வான் - அடைவதற்காக, நயம்கின்ற - இன்பமாயிருக்கிற, நல் - ஸ்ரேஷ்டமான, மாலைகொண்டு - சப்த ஸந்தர்ப்பங்களைக்கொண்டு, தொழுது - ஆஸ்ரயித்து, நமோநாரணுவென்னும் - திருமந்த்ரமென்கிற, சொல்மாலை - சப்தஸந்தர்ப்பத்தை, கற்றேன் - அப்யஸித்தேன்.

(நிஎ)

வ்யா.—அவ.—ஐம்பத்தேழாம் பாட்டு.—(அயல் நின்ற) நீர் பகவத்விஷயத்தில் செய்ததென்னென்னில்; ஸம்ஸாரம் பயஸ்தாக மென்னுமிடமும் உஜ்ஜீவிப்பா ரவனைப்பற்றியென்னு மிடமுமறிந் தேனென்கிறார்.

(அயலித்யாதி) நானிட்டவடியிலேயிட்டு வாராநின்ற மஹா பாபங்களே யஞ்சினேன். (அஞ்சி உய) அவற்றை யஞ்சி உஜ்ஜீவிக்கைக்காக. (நின்திருவடியே சேர்வான் நயம்நின்ற நன்மாலைகொண்டு) நிர்வசநரூபமாக நின்ற நல்லமாலை கொண்டு. (நமோநாராயணவென்னும் சொன்மாலை கற்றேன்) சொல்தொடை கற்றேன். (தொழுது) வணங்கி; சொன்மாலைகற்றேன். ஆற்றுமைபாலே நாஞ்சைக்குப் பேசினேன்.

(அயல் நின்ற) விஸ்லேஷத்தாலேவரும் வ்யஸநத்துக் கஞ்சி, திருநாமஞ் சொல்லுந்தனையும் கடக்க, சாபலத்தாலே நின்ற. (நிஎ)

அரு.—ஐம்பத்தேழாம்பாட்டு.—அயல்நின்ற - அண்டையிலேயென்றபடி. நயம்நின்ற-சாஸ்த்ரரூபமாய்நின்ற. அதாவது-திருமந்த்ரார்த்தத்தை நிர்வஹிக்கிற தமிழ்த்தொடை என்றபடி. "கற்றேன்" என்று வருத்தம் தோற்றுகையாலே ஆற்றுமை சொல்லுகிக்கச் சொன்னேனென்றபடி. நாஞ்சைக்கு - ஸத்தை பெறுகைக்கு.

வல்வினையான தூரப்போகாமல் கிட்டநிற்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (விஸ்லேஷத்தாலேயித்யாதி). இத்தனைநாளுங் கூடியிருந்து நாமிவனைப்பிரிந்து போகிறோமென்றஞ்சி துக்கப்பட்டு, சாபலத்தாலே நின்றதென்றபடி. (நிஎ)

தொழுது மலர்கொண்டு தூபம்கை யேந்தி
எழுது மெழு வாழி நெஞ்சே-பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன் றில்லை யடை. (நிஅ)

ப-உ.—நெஞ்சே - மனமே, மலர் - பூவை, கொண்டு - ஸம்பாதித்து, தூபம் - புகையை, கையேந்தி - கையிலேபிடித்து, தொழுது - ஆஸ்ரயித்து, எழுதும் - உஜ்ஜீவிப்போம்; எழு - எழுந்திரு;

வாழி - இந்த ஸம்பத்து உனக்கு நித்யமாய்ச் செல்லுக; பழுதின்றி- தோஷமில்லாமல், மந்திரங்கள் - மந்த்ரங்களோ, கற்பனவும் - அப்யஸிக்கையும், மால் - ஸர்வேஸ்வரனுடைய, அடியே - பாதங்களிலேயே, கைதொழுவான் - அஞ்சலிபண்ணுகைக்காக, (ஆனபின்பு) அந்தரம் - விலம்பம், ஒன்றில்லை - கொஞ்சமுமில்லை; அடை - கிட்டு. (நிஅ)

வ்யா.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.—(தொழுது) கையாலே தொழுது. புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு தொழுது. (எழுதும்) எழுவோம். போவோம். (எழு) போகு. (வாழிநெஞ்சே) நெஞ்சே! உனக்கு நன்மையுண்டாக. (பழுதின்றியித்யாதி) விச்சேதமின்றிக்கே எல்லாத்திருமந்த்ரங்களையும் கற்கிறதும் கைதொழுகை. ஆனபின்பு, (அந்தரமொன்றில்லை யடை) ஒருக்ஷணமாத்ரம்போகாதே அவன் திருவடிகளிலே யடை.

(எழுதும்) உஜ்ஜீவிப்போம். (எழு) ஒருப்படு. (வாழி)ஒருப்பட்ட படிக்கு மங்களாசாஸநம். இது வுனக்கு நித்யமாயுண்டாக. (பழுதின்றி) குருகுலவாஸம் பண்ணிப் பழுத்துவிழக்காண்கை. மூதலிலே சொல் என்னில் உத்பத்திதோஷமாமிறே. (கற்பனவும்) கிடந்தானைக் கண்டேறுதே சந்தையிட்டுக் கற்கை. (நிஅ)

அரு.—ஐம்பத்தெட்டாம் பாட்டு.—கைதொழுகை - தொழுகைக்காக வென்று தமுல். அந்தரமொன்றில்லை - ரந்த்ரமின்றிக்கே சிக்ரமாகவென்றபடி. மந்த்ரத்துக்குப் பழுதில்லாமையேதென்ன; அருளிச்செய்கிறார் (குருகுல வாஸமித்யாதி). பழுத்துவிழுகை - அடியிலேயிருக்க மடியிலேவிழுகை. அதுவர்த்தந பூர்வகமாகக் கேளாவிட்டால் விரோத மேதென்ன; அருளிச்செய்கிறார் (மூதலிலே யித்யாதி). ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணுமல் சொல்லென்று கேட்கிலென்றபடி. உத்பத்திதோஷம்-மந்த்ரத்துக்கு வீர்யமின்றிக்கேயொழிகை.(நிஅ)

அடைந்த வருவினையோ டல்லல் நோய்பாவம் [யை
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - தொடங்கிடை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய, முன்னொருநாள்
தன் விலங்கை வைத்தான் சரண். (நுகூ)

ப-உ.—அடைந்த - ப்ராப்தமான, (ப்ராசீநமான) அரு - கொடுமையான, வினை - பாபம், அல்லல் - துன்பம், நோய் - வ்யாதி,

பாவம்-கெட்டஉடத்தை, மிடைந்தவை-நெருங்கினவிவைகளை, மீண் டொழியவேண்டில் - திரும்பாமல்போகவிட இச்சித்தால், நூடங்கு - துவளுகிற, இடையை - மத்யத்தையுடைய பிராட்டியை, முன் - பூர்வகாலத்தில், இலங்கை வைத்தான் - லங்கையிலே ஸ்தாபித்த ராவணனுடைய, முரண் - பலம், அழிய - நசிக்கும்படி, முன்னொரு நாள் - முன்பு ஒரு காலத்தில், தன் - ஸ்வீயமான, வில் - சார்ங்கத் தை, அம் - அழகிய, கை - கரத்திலே, வைத்தான் - தரித்த வனே, சரண் - உபாயம். (சுo)

வ்யா.—அவ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—(அடைந்த)கால க்ஷேபம் பண்ணும்படி சொல்லுகிறது.

(அடைந்தவருவினை) ஆத்மஸ்வரூபத்திலன்றியே அசித்ப்ரத் யாஸத்தியாலே வந்தேறியான அஜ்ஞாநாதிகள். (அல்லல்) மாநஸ வ்யாதி. (நோய்)சரீரவ்யாதி. ஆதிவ்யாதிகளென்றபடி. (பாவம்)பரிக்ர ஹித்த சரீரத்தாலே பண்ணின நிஷித்தாநுஷ்டாநம். (மிடைந்தவை) சரீராரம்பகஹேதுவான பாபங்களுமாக நெருங்கினவை. (மீண்டொ ழிபவேண்டில்) "ஸஹம்த்வாஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி - அஹந்த்வாஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்னும்படி ஒரு ராஜகுலஸம்பந்தத்தாலே மீளாதபடி. போகவேண்டில், (நூடங்கி டையை) பிரியத் தகாதவளை, (முன்னித்யாதி) பண்டுலங்கையிலே வைத்தவனுடைய மிடுக்கொழிய. (தன்விலங்கை வைத்தான்) தன்னு டைய திருவில்லை யழகிய திருக்கையிலே வைத்தவன் உபாயம். இத் தால், ஸர்வேஸ்வரனுக்கு போக்யமாயிருந்துள்ள வாத்மாவை "என் னது" என்றிருக்குமவன் பிராட்டியைப் பிரித்த ராவணனை டொ க்குமென்னுமிடமும், "இவ்வாத்மா அவனுடையது" என்றதுகூவித் தவனுக்குப் பிராட்டியிருந்த மார்விலே அம்பேற்றிப் பரிஹரித்தாற் போலே பரிஹரிக்குமென்னுமிடமும், அவளோடு கூடினவ னுபாய மென்கையாலே, பற்றுவார்கள் அவள் முன்னாகப்பற்ற வேணுமென் னுமிடமும் சொல்லுகிறது.

திருவுள்ளம் இந்திய ஜயம்பண்ணென்றது, தொழு என் றது, திருநாமம் சொல்லென்றது, நீனேயென்றது. பலபடிகள் சொ ன்ன விவற்றுக்குத் தாத்பர்யமென்னென்னில்; இதுக்குக் கீழெல் லாம் ஷட்கத்ரயத்திற் சொன்னவார்த்தைபோலே ஸ்வரூபம் விசத

மாகைக்குச் சொன்னநிலை ; இது சரமஸ்லோகத்தில் நிலைபோலே. உணர்ந்தவன்று அவனல்லதில்லை.

(அடைந்தவருவினை) அவித்யாதிகள். ஆத்மா ஹேயஸம்ஸர்க்கத்துக் கநர்ஹனுகையாலே "அடைந்த" என்றது. பரமாத்மாவுக்கும் ப்ரவேசமொக்குமிறே. "கூநஸ்ஹநு - அநச்நந்" (அல்லல் நோய்) ஆதிவ்யாதி. (பாவம்) சரீரத்துடன் பண்ணும்பாவம். (மிடைந்தவை)ஸமிதை யிடாமாணிபோலே; பரணிக்கூடு வரிந்தாற்போலே. (மீண்டொழியவேண்டில்) தொடருகிற பாம்பைத்திரிய விடுத்தாற்போலே "ஸவஷுவாவேஹ்யாதோகூயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோ மோகூயிஷ்யாமி" யிறே. ஸர்வசக்தியைக் கொண்டு கார்யங்கொள்ளவேண்டாவோ. (நுடங்கிடையை) ஏக த்ரவ்யத்தை பிந்நமாக்கின. (இலங்கை வைத்தான்) தாயையும் தமப்பனையும் பிரித்த பையல் மிடுக்கழிய. பிராட்டி அம்பெய்யுமன்று இவனுல் பேரக்கலாவது. "தத்தஸ்யுஸஷ்ஷஸ்ஹவேகூ-தத்தஸ்யஸத்ருசம்பவேத்". கூர்மையை விஸ்வஸித்திருக்குமத்தனை அவளுக்குப் பரியுமாப்போலே பரியும்; அவதாரஸௌலப்யம். பிறந்து முன்னே யுன்னைப்பெறுகைக்கு யத்நம் பண்ணுநின்றான்; இனிப்ரதிபத்தியே யுள்ளது (நிகூ)

அரு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—இதில் உபாயஸ்வீகாரம் சொல்லுகிறதென்று கண்டுகொள்வது. மீண்டொழியமீளுகையொழிய. போனது திரியவுமிவனிடத்திலே மீளாதபடி.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (திருவுள்ள மித்யாதி). திருவுள்ளமானது "எழுதும் எழு" என்று இங்கே சொன்னீர்; இப்படி பல்படியாகச் சொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்று ஆழ்வாரைக்கேட்கவென்று சங்காபிப்ராயம். ஸ்வரூபம் விசதமாலைவனே உபாயமாக வேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (உணர்ந்தவன்றித்யாதி).

வந்தேறியானது பரமாத்மாவுக்குமொவ்வாதோவென்று சங்கை. "இறை" என்று-சங்காஸ்ஹகம். அதுக்கு உத்தரம். (கூநஸ்ஹநு-அநச்நந் என்று). ஸமிதையிடாமாணி-சுப்பிலேமேலே சூழ்த்துக்கொளுகிறபூச்சி. பற்றுகைக்கு ஸௌலப்யமென்னென்ன; அருளிச்செய்கிறார். (அவதாரம் ஸௌலப்யமென்று). அது இப்போதில்லையேயென்ன; அருளிச்செய்கிறார். (பிறந்துமுன்னேயித்யாதி). (நிகூ)

சரணு மறைபயந்த தாமரையாளேடு
மரணுய மன்னுயிர்கட் கெல்லாம் - அரணுய
பேராழிகொண்ட பிரானன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த வுலகு. (சுo)

ப-உ.—சரணு - உபாயமாக, மறை - வேதத்தை, பயந்த - உபதேசிக்கப்பட்ட, தாமரையாளேடு - நாபீகமலத்திற் பிறந்த ப்ரஹ்மாவோடுகூட, மரணுய - மரணதர்மத்தையுடைய, மன் - நித்யரான, உயிர்கட்கெல்லாம் - ஜீவாத்மாக்களுக்கெல்லாம், அரணுய - ரக்ஷகமான, பேர் - பெரிய, ஆழிகொண்ட - சக்ரத்தையுடைய, பிரானன்றி - உபகாரகனேயல்லது, ஓர் - அத்விதீயமான, - ஆழி ஸமுத்ரத்தால், சூழ்ந்த - ஆவரிக்கப்பட்ட, உலகு - பூலோகத்திலுள்ளார், மற்று - வேறொன்றை, அறியாது. அறியமாட்டார்கள். (சுo)

வ்யா.—அவ.—அறுபதாம்பாட்டு.—(சரணித்யாதி) கீழ் அவனேயே உபாயமென்றது; பேறு இவர்களதேயானபின்பு இவ்வாத்மாக்கள் உபாயமாஞலாகாதோ வென்னில்; கீழ் போக்கறிவான்; இப்போது தாங்கள் படுகிறது இன்னதாலே என்றறியார்கள்; வரக்கடவதறியார்கள். ஈச்வரன் இவை யெல்லாமறிந்து பரிஹரிக்கவல்ல ஜ்ஞாந சக்த்யாதிகளையுடையவன். "பழகியான் தாளே" என்னுமாப்போலே, ஆகையாலே. அவனே உபாயமாமித்தனை; இத்தை லோக மறியாதென்கிறது.

(சரணுவித்யாதி) எல்லார்க்கும் ஹிதத்தைச்சொல்லக்கடவதான வேதத்தை யோதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவோடு. "சரணுமறைபயந்த" என்றதை, "அரணுய" என்றதோடே கூட்டி ஈச்வரனுக்குவிசேஷணமாக்கவுமாம். (மரணுய மன்னுயிர்கட்கெல்லாம்) கல்பாதியிலே யுண்டாய் கல்பாந்தத்திலில்லையாகிற ப்ரஹ்மாவோடே கூட "ஜாயதேஸ்யதேவா - ஜாயதேம்ருய தேவா" "ஜாயஸ்வஸ்ரியஸ்வ-ஜாயஸ்வ ம்ருயஸ்வ" என்று ஜாயமரண தர்மாக்களான வுயிர்களுக்கெல்லாம். (அரணுய) ரக்ஷகமான. (பேராழியித்யாதி) கீழ்பெருமாள் ப்ரஸ்துதராகையாலே கடலிலேவெதுப்பித் தமக்கு வசமர்த்திக்கொண்ட சக்கரவர்த்தித் திருமகனென்னவுமாம். கையிலே திருவாழியையுடையனாய் உபகாரகனான ஸர்வேச்வரனுடைய உபாயபாவத்தை

யறிவர். (மற்றறியாதோராழிசூழ்ந்தஉலகு) மற்றுயிருந்துள்ள கடல் சூழ்ந்த லோகமானது உபாயமாகவறியாது.

(சரணமறைபயந்த) அபிமதஸித்திகளுக் கடைத்த உபாயபேதங்களையுடைய வேதங்களை ஜகத்துக்கோதுவிக்கும்*ப்ரஹ்மவிதாம்வரனை ப்ரஹ்மா மந்த்ரக்ருத் என்பது.(மரணைய)சாவது பிறப்பதாகிற சரீரதர்மம். (மன்னுயிர்) ஆத்மதர்மம் மரணதர்மங்களுடைய. அஜ்ஞனும், அசக்தனும். அரணனவை - இவற்றை விநாசகன் அறியுமத்தனை. "ஊழோயநாஹிஜாநாதி - மூடோயம் நாபிஜாநாதி" "வேதாஹம்". ஆப்பான், ஜீயர்க்கு, "ஜீயரே! இவ்வுலகு எம்பெருமானை யல்லாதிருந்ததோ" என்ன; "அதுக்குப் பொருளென்" என்ன; "உயர்ந்தோர் எம்பெருமானை யல்லதறியார்" என்ன; இத்தை பட்டரைக்கேட்க, "அதுக்கொருகுற்றமுண்டு, "ஓராழி சூழ்ந்த" என்று விசேஷிக்கவொண்ணாது" என்ன; இதுக்குப்பொருளோவென்ன; "ஜீயரே நான் சொல்லும்பொருளென்" என்ன; "உலகறியாது" என்ன; "அதுவேபொருள்" என்றார். இத்தைப்பிள்ளையும் ஜீயருக்குரைக்கத் திருக்கலி கன்றி தாஸர் மறந்ததை உணர்த்தினரென்றருளிச் செய்தார். (கூ0)

அரு.—அறுபதாம்பாட்டு.—உபாயமானால்-உபாயயத்நம் பண்ணினால். அறிவான்-தன்னுடைய உபாயபாவத்தைத்தானே யொழிய வேறொருவரு மறிவாரில்லையென்றபடி. ஈஸ்வரனை யுபாயமாகவறியாது.

நித்யமானவேதத்தை யுண்டாக்குகையாவதென்னென்ன; அருளிச்செய்கிறார் (மந்த்ரக்ருத்தித்யாதி). மந்த்ரத்ரஷ்டாவை "மந்த்ரக்ருத்" என்னக்கடவது. இவற்றை-அரணன உபாயத்தை. விநாசகன்-ஜ்ஞாநிகளைப்போக்குகிற ஈஸ்வரன். லோகமறியாது, ஈஸ்வரனறியுமென்னுமதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார்.(ஊழோயழி-மூடோயம் இத்யாதி). "பிரானன்றி மற்றறியாது- உலகு" என்று உலகானது ஈஸ்வரனை யொழிய வேறொரு உபாயத்தை யறியாதென்னும் சப்தம்தோற்றுகிற, சப்தத்தை நெருக்கி உபாயமீஸ்வரனறியுமொழிய உலகறியாதென்னுமதுக்கு ஸம்வாதமாக வருளிச்செய்கிறார்.(ஆப்பானித்யாதி) பொருளென்-பொருளாது "பொருளென்" என்று வெறுத்தாற்போலே சொல்ல, "ஆனலும் கேட்டவுமக்குச் சொல்ல

வேணுமே ; உபாயமீஸ்வரனறியுமத்தனை உலகறியாது" என்று பட்டர் ஜீயர்க்கருளிச்செய்தாரென்றபடி. (சுo)

உலகு முலகிறந்த வூழியும், ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும் - உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும், திருமால்தன்
புந்தியிலாய புணர்ப்பு. (சுக)

பத-உ.—உலகும் - லோகங்களும், உலகு - லோகம், இறந்த - அழித்துகிடக்கிற, ஊழியும் - ப்ரளயகாலமும், ஒண் - அழகிய, கேழ்-நிறத்தையுடைய, விலகு (அலை) எறிகிற, கரும் - கறுத்த, கடலும் - ஸமுத்ரமும், வெற்பும் - மலைகளும், உலகினில் - ஜகத்திலிருக்கிற, செம்-சிவந்த, தீயும் - தேஜஸ்ஸும், மாருதமும்-காற்றும், வானும் - ஆகாசமும், புந்தியில்(ஸ்ருஷ்டி விஷயமான) ஸங்கல்ப ரூபஜ்ஞானத்தில், ஆய - ஒருப்பட்ட, திருமால் - ஸ்ரீயஃபதியினுடைய, புணர்ப்பு - ஸ்ருஷ்டி. (சுக)

வ்யா.—அவ.—அறுபத்தோராம்பாட்டு.—(உலகு) ஹிதத்திலே யறியாததுக்குத் தந்தாமுடைய உத்பத்தியிலே வைத்து அறிவுணர்த்துகிறார்.

(உலகும்) லோகமடங்கத்தானே சேஷித்தகாலமும். (ஒண்கேழ்) அழகிய நிறத்தையுடைத்தாய் அலை யெறியாநின்ற கடலும், லோகத்துக்காதாரமான மலையும். (செந்தீயித்யாதி) இவ்வோக்கமான கடலிலே லோகமலிந்து நோவுபடப்புக்கவாறே, ஐயோ! நோவுபடாநின்றதே! என்று அதுக்கு துக்கித்த பிராட்டிக்கு ப்ரியமாகத் தன் ஸங்கல்ப ஜ்ஞானத்தாலே ஸ்ருஷ்டித்து

(ஒண்ணித்யாதி) தெளிந்து அழகியதாய்ச் சலிக்கின்ற கடலும். (வெற்பும்) பூமிக்கு ஆணியடித்தாற்போலே யிருக்கும். (திருமாலித்யாதி) தாய்க்கு ப்ரியமாக ப்ரஜைகளை நோக்குமித்தனையிறே. இத்தலை யறிந்தோ ஸ்ருஷ்டித்தது; விலக்காமையேயுள்ளது. (சுக)

அரு.—அறுபத்தோராம்பாட்டு.—புந்தி - புத்தியாய், அத்தால் ஸங்கல்பஜ்ஞானமென்கிறது. புணர்ப்பு - ஸ்ருஷ்டி. இவை யறியாதகாலத்திலுமவனே ஸ்ருஷ்டிக்கையாலே இப்போது உபாயமறிவானுமவனென்றபடி. (சுக)

புணர்மருதி னூடுபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து
மணமருவ மால்விடையேழ் செற்று - கணம்வெருவ
ஏழுலகம் தாயனவு மெண்டிசையும் போயினவும்
சூழரவப் பொங்கணையான் தோள். (கூஉ)

ப.உ.—புணர் - சேர்ந்திருக்கிற, மருதின் - மருதமரத்தினுடைய, ஊடு - நடுவில், போய் - சென்று, பூம் - புஷ்பித்த, குருந்தம் - குருக்கத்திமரத்தை, சாய்த்து - தள்ளி, மணம் - விவாஹம், மருவ - தலைக்கட்டுகைக்காக, மால் - பெரிய, விடை - எருதுகள், ஏழ் - ஏழையும், செற்று - கொன்று, கணம் - கூட்டம், வெருவ - நடுங்கும்படி, ஏழுலகும் - ஸப்தலோகங்களையும், தாயினவும் - அளந்தனவும், எண்டிசையும் - எட்டுதிக்குக்களிலும், போயினவும் - சென்றனவும், சூழ் - பரந்த, அரவம் - திருவஹந்தாழ்வானுகிற, பொங்கு - கிளர்ந்த, அணையான் - படுக்கையுடையவனுடைய, தோள் - புஜங்கள் கிடீர். (கூஉ)

வ்யா.—அவ.—அறுபத்திரண்டாம்பாட்டு.—(புணர்) உத்பந்நமானபின் இவரதோ தம்காரியத்துக்குக் கடவராயிருக்கிறதென்கிறது.

(புணரித்யாதி) ஒன்றென்னலாம்படி நிர்விவரமாயிருந்த மருதினிடைபோய். (பூங்குருந்தம் சாய்த்து) தர்சநீயமான குருந்தத்தைச் சாய்த்தும். (மணமித்யாதி) நப்பின்னைப்பிராட்டியுடைய பாணிக்ரஹமணமங்களமானது தலைக்கட்டும்படிக்கீடாகப்பெரிய எருதுகளேழையும்செற்று. (கணமித்யாதி) "ஸலிலே ஷ்வஸ்ருஷாணாழ்-ஸங்கைஸ்ஸராணும்" என்கிறபடியே அதுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற "இது வெண்ணெய்ப் புகுகிறதோ" என்று வெருவும்படிக்கீடாக ஏழுலகையு மநாயாஸேந கடந்தனவும், எட்டுதிக்குக்களிலும் போய் வ்யாபித்தனவும். (சூழித்யாதி) பரந்து, மேன்மை குளிர்த்தி நாற்றங்களையுடைத்தாயிருந்துள்ள திருவஹந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவன்.

கலை பிடுங்கும்படி. (பூங்குருந்தம்) பூவைக்காட்டி அந்யபரதை பண்ணி வஞ்சிக்கப்பார்க்கை. (மணமித்யாதி) தனக்கு வந்த கர்மத்தைத் தீர்த்தபடி. (ஏழுலகித்யாதி) பிராட்டிக்குச்செய்யும் செயலை

இந்த்ரனுக்குச்செய்கை. (எண்டிசையும் போயினவும்) திக்குக்களை வெளியடைக்கை. (சூழாவித்யாதி) இப்படிப்படுக்கையில் கண்வளரப் பெறுதே அலமந்து திரிவதே. "வாணுஷ்யாகவதூஷ்யாயா யாம் ஜரிதஷ்யா - பாண்டரஸ்யாத பத்ரஸ்யச் சாயாயாம் ஜரிதம் மயா" ஸம்ஹாஸத்திலிருக்க அவஸரம் பெற்றிலன்; இக்காலத்தி லேயிறே நிழலிலே முத்துக்குடையிடுவது. (கூஉ)

அரு.— அறுபத்திரண்டாம்பாட்டு.— இவரதோ இவருடைய யத்நமோ-பொங்கணை-கிளர்ந்தவணை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (களை பிடுங்கும்படி யென்று) தோளே இவையெல்லாம் செய்ததென்றபடி. படுக்கைவிட்டு ரக்ஷணார்த்தமாகத்திரிந்த விடமுண்டோ வென்ன; அருளிச்செய்கிறார் (வாணுஷ்யாதவதூஷ்ய-பாண்டரஸ்யாதபத்ரஸ்ய இத்யாதி) இக்காலத்திலே-வ்ருத்தனுனவிக்காலத்திலே ராஜ சிஹ்நார்த்தமாகவிம் ஹாஸநத்திலே யிருக்கிறபோது நிழலிலே குடையிடுவது. இதுக்கு முன்பெல்லாம் ரக்ஷணார்த்தமாக வெய்யிலிலே குடையிட்டுத் திரிந்தேனென்றபடி. (கூஉ)

தோளவனை யல்லால் தொழா, என்செவியிரண்டும்
கேளவனதின் மொழியே கேட்டிருக்கும் - நாநாளும்
கோணுகணையான் குரைகழலே கூறுவதே
நாணுமை நள்ளேன் நயம். (கூங)

ப-உ.—தோள் - கையானது, அவனையல்லால் - அந்த ஸர்வேஸ்வரனை யல்லது, தொழா - ஆச்ரயிக்கிறதில்லை; என் - என்னுடைய, செவியிரண்டும் - இரண்டுகாதுகளும், கேள் - பந்துவான, அவனது - அவனுடைய, இன் - மதுரமான, மொழி - பேச்சை, கேட்டு - ச்ரவணம்பண்ணி, இருக்கும் - (களித்து) இருக்கும்; நா - நாக்கு, நாளும் - எப்போதும், கோள் - பலத்தையுடைய, நாகம் - ஸர்ப்பத்தை, அணையான் - படுக்கையாகவுடையவனுடைய, குரை - (ஆபரணத்தின்) த்வனியையுடைய, கழலே - திருவடிகளையே, கூறுவது - சொல்லாநிற்கும்; நாணுமை - லஜ்ஜையில்லாமல், (விஷயத்தை) நள்ளேன் - நெருங்கேன், நயம் - என்னுடைய பரார்த்தம். (கூங)

வ்யா.—அவ.—அறுபத்துமூன்றும்பாட்டு.—(தோள்) இப்படி அவன் ஸுலபனென் றநுஸந்தித்த பின்பு என்னுடையஇந்த்ரியங்க ளவனேயல்ல தறிகிறதில்லே.

(தோளித்யாதி) நான் வேறே யொன்றைத் தொழச்சொன்னு லும் என்தோளானது அவனே யல்லது தொழுகிறதில்லே. (என்செவி யித்யாதி) என் செவிகள், உறவானவனுடைய இனிய மொழியைக் கேட்டிராநின்றது. (நாநாளும்) என்னுடைய நாக்கானது எப்போ தும். (கோள் நாகணையித்யாதி) "கோள்" என்று ஒளிக்கும், மிடுக் குக்கும் பேர். "வ்ருஜுஷ்வி ஜ்ஞாநவலெகயாஸநி - ப்ரக்ருஷ்டவி ஜ்ஞாநபலெகதாமநி" என்னும்படியே, அநந்தசாயியான ஸர்வேஸ்வ ரனேயே கூறுமத்தனே. (நயம்நாணுமைகள்ளேன்) ஆசைப்படப்படு வதான சப்தாதிகளே லஜ்ஜியாதநிடேன்; ஹாஸ்யமான விஷய மென்றுமாம். அவன் ரக்ஷகனுகவுமாம், தவிரவுமாம்.

(தோளவனே) அவன் தான் தனக்குப் பகையென்னலாம்படி யிருந்தாலு மென் செவிதானும்கேட்பது. ஆசைப்படும் விஷயங் கள். (நாணுமை கள்ளேன்) ஆண்பிள்ளைச் சொற்குழ்வியை யாசைப் பட்டவனேப்போலே உணர்ந்தவனுக்கு லஜ்ஜிக்கவேணும். (கோள்) பிராட்டிக்கும் தனக்கும் கிடக்கைக் குண்டாகை. (கூசு)

அரு.—அறுபத்து மூன்றும்பாட்டு.—கேள் - உறவு. சப்தாதி கள்-ஆசைக்கும் ஹாஸ்யத்துக்கும் விஷயம் நயம் விரும்புகை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவன்றனித்யாதி)"நய ம்" என்றதத்தை யருளிச்செய்கிறார் (ஆசைப்படுமித்யாதி) விஷயங்க ளைக்கண்டால் நாணவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஆண்பிள்ளையித்யாதி) ஆண்பிள்ளைச் சொற்குழ்வி-பெண்வடிவு கொ ண்ட புருஷன் - கோள்-மிடுக்கும், பரப்பும். கிடக்கைக்குண்டா கை-இருவரும் கிடக்கைக்கிடம்போருகை. (கூசு)

நயவேன் பிறர்பொருளே நள்ளேன் கீழாரோடு
உயவேனுயர்ந்தவரோடல்லால் - வியவேன்
திருமாலே யல்லது தெய்வமென் றேத்தேன்
வருமாறென் நம்மேல் வினே. (கூசு)

ப.உ.—பிறர் - விஜாதியனுடைய ஸர்வேச்வரனுடைய, பொருளே - தனமான ஆத்மாவை, நயவேன் - விரும்பேன்; கீழாரோடு - தாழ்ந்த ஸம்ஸாரிகளோடு, நள்ளேன் - சேரமாட்டேன்; உயர்ந்தவரோடல்லால் - ச்ரேஷ்டர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களோடுதப்ப, உயவேன் - ஸஹவாஸம் பண்ணமாட்டேன்; திருமாலையல்லது - ஸ்ரியஃபதியை யல்லது வேறுசிலரை, தெய்வமென்று (ஆச்ரயணீய) தேவதையென்று, ஏத்தேன் - துதிக்கமாட்டேன்; வியவேன் - ஆச்சர்யப்படமாட்டேன்; நம்மேல் - நம்முடையமேலே, வினை-பாபம், வருமாறு - வரும்ப்ரகாரம், என் - எங்ஙனே. (சுச)

வ்யா.—அவ.—அறுபத்துநாலாம்பாட்டு.—(நயவேன்) ப்ராப்தத்தைச் செய்துஅப்ராப்தத்தைச் செய்யேனென்திருக்கிற வென்பக்கல் பாபத்துக்கு வரப்போமோவென்கிறார்.

(நயவேன் பிறர்பொருளே) பிறர்பொருளேஆசைப்படேன். த்ரவ்யத்துக்கு உத்கர்ஷமாவது - த்ரவ்யந் தன்னுடைய நன்மையாலும் உடையவனுடைய நன்மையாலும். த்ரவ்யம்பரிணமியான அசித்தன்றிக்கே ஆத்மத்ரவ்யமாயிருந்தது. "யஸ்யாத்மாசரீரம்" "வதிஃவிஷ்வஸ்ய-பதிம்விஸ்வஸ்ய" என்று ஓதப்படுகிறவன் உடையவன். உத்க்ருஷ்டமான வாத்மாவை "என்னது" என்றிரேன். (நள்ளேன் கீழாரோடு) ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவர்களாயிற்றுக் கீழாராகிறார்; அவர்களோடு கிட்டேன்; தங்கள்படியாக்கிக்கொள்வரென்று. (உயவேனுயர்ந்தவரோடல்லால்)உத்தமரென்னுமவர்களோடல்லது உசாவேன். (வியவேன் திருமாலையல்லது) ஸ்ரியஃபதியைக்கண்டல்லது விஸ்மயப்படேன். (தெய்வமென்றேத்தேன்) அவனேயல்லது வேறு சிலரைத் தெய்வமென்று ஸ்துதியேன். (வியவேன் திருமாலை) ஸ்ரியஃபதியினுடைய வைஸ்வர்யத்தை யர்த்தவாதமென்றிரேன். (வருமாறென் என்மேல்வினை) "சுவஶுஉந—ஹோத்ரவ்யே - அவச்யமநுபோக்தவ்யம்" என்கிறவசநத்தைக்கொண்டு என்பக்கலிலே வரப்போமோ பாபத்துக்கென்கிறார்.

(நயவேன்) வாக்யார்த்தம் க்ருத க்ருத்யனென்கிறார். எம்பெருமான் விரும்புமாத்மாவை யபஹரியேன். ராவணன் செயலைச்செய்யேன். கீழார்-அவனுக்குக் கூட்டுப்படும் மார்சப்ரப்ருதிகள். உயர்ந்தவர்-விஸ்வாமித்ராதிகள். "ஹோத்ரநஸ்து - மஹாத்மாநஸ்து"

பெரியோர். (வியவேன்) "தூணீகூதவிரிஞ்சாதி நிராகூஷவிஹ தயஃ - த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதயஃ" ப்ரஹ்மாதிக ளைக்கண்டால் அடிப்படைக்கல்லாக நினைத்திருக்குமத்தனை. (திரு மாலையல்லது வியவேன் - தெய்வமென்றேத்தேன் - வருமாறென் னென்மேல் வினை) "ஸவஸ்யாநுஹோகூவ்ய - அவஶ்யமநுபோக்தவ் யம்" என்கிறவை என்னைநலியவோ. (சுச)

அரு.—அறுபத்துநாலாம்பாட்டு.—உயவுகை-உசாவுகை. "பொ ருள்" என்றது உதாரத்துக்குபலக்ஷணமாக்கி யருளிச்செய்கிறார் (ரா வணனித்யாதி) உயர்ந்தவர்-மஹாத்மாக்களாய்ப் பெரியோரா யிருக் கிற விஶ்வாமித்ராதிகள். (சுச)

வினையா லடர்ப்பட்டார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் - நினைதற்
கரியானைச் சேயானை யாயிரம்பேர், செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால். (சுரு)

ப-உ.—நினைதற்கு - த்யாநிக்க, அரியானை - துர்லபனுய், சே யானை - தூரத்திலிருக்கிறவனுய், ஆயிரம்பேர் - ஸஹஸ்ரநாமங்களை யுடையனுய், செம் - சிவந்த, கண் - நேத்ரத்தையுடையனுய், கரி யானை - கறுத்த திருமேனியையுடையனுனவனை, கைதொழுதக் கால் - கையினுல் நமஸ்கரித்தால், வினையால் - கர்மங்களால், அடர்ப் படார் - நெருக்குப்படமாட்டார்கள்; வெம் - க்ரூரமான, நரகில் - நரகத்தில், சேரார் - செல்லமாட்டார்கள்; தினையேனும் - கொஞ்ச மும், தீ - துஷ்டமான, கதிக்கண் - வழியில், செல்லார் - போகமாட் டார்கள். (சுரு)

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.—(வினையித்யாதி) பாபத்தா லடர்க்கப்படார். (வெந்நரகில்சேரார்) பாபபலமானநரகிலும் சே ரார். (தினையித்யாதி) தர்மபுத்ரன் நரகதர்ஶநம் பண்ணினவோபாதி யுங்கூடாது இவர்களுக்கு. (நினைதற்கரியானை) ஸ்வ யத்நத்தாலே அறியப்போகாதவனை. (சேயானை) அதுக்கடிதூரஸ்தனுகை. (ஆயிர மித்யாதி) தான்கொடுத்த வறிவையுடையவர்களுக் கேத்துகைக்கு ஆயிரத்திருநாமத்தையும் கண் டநுபவிக்கைக்கு ஶ்ரமஹரமான வடிவையுமுடையவனை. (கைதொழுதக்கால்) அஞ்சலிபண்ணினுல்.

(வினையாலடர்ப்படார்) என்னைப்போலே விதேயகரணமின்றி யே பாவநமென்றுஸ்ரயித்தார்க்குப் பாபம்போம். (வினை) இங்கநு பவிக்கும் பாபபலமநுபவியார். (வெங்நரகு) போய் அநுபவிக் கும் பாப்பலம். (தினை) அஸத்யாபாவத்தாலே. (நினைதற்கரியானை) ஸ்வயத்நத்தாலே நினைப்பார்க்கரியானை. (சேயானை) இவன்குற்ற மன்று, வஸ்துஸ்வபாவம். (ஆயிரமித்யாதி) தானே காட்டுவார்க்கு இழிந்தவிடமெல்லாம் துறையாகை. (கைதொழுதக்கால்) பாலைக் குடிக்கநோய்போம். வகுத்தது செய்யவமையும். (சுரு)

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளி ச்செய்கிறார் (என்னைப்போலே யித்யாதி) விதேயகாணம் - "தோளா வினை யல்லால் தொழா" என்கிறபடியே ப்ராப்யமாகப்பற்றுகை. "செங்கட்கரியான்" என்றதைப்பற்ற வருளிச்செய்கிறார் (பாலைக் குடிக்கநோய்போமென்று). "கைதொழுதக்கால்" என்றதைப்பற்ற வருளிச்செய்கிறார் (வகுத்ததித்யாதி). (சுரு)

காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும் - வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும்
பேராழி கொண்டான் பெயர். (சுசு)

ப-உ.—காலை - பால்யாவஸ்தையில், எழுந்து - கிளர்ந்து, உல கம் - லோகத்தார், கற்பனவும் - அப்யஸிக்குமவை யெல்லாம், கற் று -அப்யஸித்து, உணர்ந்த - அறிந்தவர்களாய், மேலை - உயர்ந்தி யையுடைய, தலை - ச்ரேஷ்டர்களான, மறையோர் - வைதிகர்கள், வேட்பனவும் - ஆசைப்படுவனவும், வேலை - கடையோடுகூடின, கண் - விசாலமான, ஓர் - ஒப்பற்ற, ஆழியான் - ஸமுத்ரத்தில் பள்ளி கொண்டவனுடைய, அடியே - பாதங்களையே, ஓதுவதும் - சொல்லு வதும், ஓர்ப்பனவும் - மநநம் பண்ணுவதும், பேர் - பெரிய, ஆழி - சக்ரத்தை, கொண்டான் - உடையவனுடைய, பெயர் - திருநாமங் கள். (சுசு)

வ்யா.—அறுபத்தாறும்பாட்டு.—(காலையெழுந்து) ஸத்வோத் தரமானகாலத்திலே எழுந்திருந்து. (உலகம்) மோக்ஷேச்சையுடை யவர்கள் கற்பனவும். (கற்றுணர்ந்தவித்யாதி) அறிவுதலைக்கட்டின

வர்கள் பாவநாப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிப்பனவும். (வேலையித் யாதி) இவற்றினுடைய ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே கை யுந்திருவாழியுமாய்க் கிடக்கிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளையே (போராழிகொண்டான் பெயரே ஓதுவதும்ஓர்ப்பனவும்) ஸர்வேஶ்வர னுடைய திருநாமங்களே யிவர்களுடைய ஶ்ரவணத்துக்குமாநந் தத்துக்கும் விஷயமாவது.

(காலே) ஸத்வோத்தரமான காலம். (வேலைக்கணேராழியானடியே) கரையையுடைத்தாய் ஒப்பில்லாதகடல். (பேராழிகொண்டான்)இவர் களைரக்ஷிக்கைக் குருவினபத்திரமுந் தானுமாயிருக்கை. "கைகழ லாநேமியான்." (கூசு)

அரு.—அறுபத்தாறும்பாட்டு.—மேலத்தலைமறையோர் - உத் தரபாகத்தில் உபநிஷத்தாத்பர்யங் கைப்பட்ட ஜ்ஞாநாதிகர். (வேலை க்கண்) வேலை-ஸமுத்ரமாதல், கரையாதல். கண்-இடம். ஆழி - ஆயு தமாதல், ஸமுத்ரமாதல். (போராழி) மூன்றினது நிரூபகம்; இரண்டா வது ஆயுதம். பத்திரம்-ஆயுதம். (கூசு)

பெயரும் கருங்கடலே நோக்குமாறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்
தருமனையே நோக்குமொண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கு முணர்வு. (கூஎ)

ப-உ.—ஆறு - நதியானது, பெயரும் - சலிக்கிற, கரும் - விசா லமான, கடலே - ஸமுத்ரத்தையே, நோக்கும் - பார்க்கும்; ஒண் - அழகிய, பூ - தாமரைப்பூவானது, உயரும் - உயரத்தில் வரும், கதிர வனே - ஸூர்யனையே, நோக்கும் - விரும்பும்; உயிரும் - ப்ராணிக ளும், (முடிவில்) தருமனையே - யமனையே, நோக்கும் - பார்ப்பர்கள்; (அப்படியே) உணர்வு - ஜ்ஞாநமானது, ஒண் - அழகிய, தாமரை யாள் - தாமரைப்பூவில் வாஸம்பண்ணுகிற லக்ஷ்மிக்கு, கேள்வன் - வல்லபனன, ஒருவனையே - ஒருத்தனையுமே, நோக்கும் - விரும் பும். (கூஎ)

வ்யா.—அவ.—அறுபத்தேழாம்பாட்டு.—(பெயரும்) மோக்ஷே ச்சையுடையவர்களுக்கு மறிவு கலிநின்றவர்களுக்கும், அவனு டைய திருவடிகளை யேத்துவது, அவனுடைய திருநாமங்களையே

ஏத்துவது என்றுசொல்லிற்று, ஜ்ஞாநத்துக்கு அவனேவிஷயமாகை யாலே யென்கிறது.

(பெயருமித்யாதி) ஆரூனது, பூர்ணமாய்ச் சலியாநின்றகடலிலே நோக்கா நின்றது. ஆறுகடலை நிறைக்கைக்கன்று புகுகிறது; புக்கல் லது தான் தரிக்கமாட்டாமை. தாமரைப்பூவானது, தூரஸ்தனுகிலும் ஆதித்யனுக் கலருமத்தனை, அக்ஷாதிகளுக்கலராது. (உயிரும் தருமனேயேநோக்கும்) யமனைக்கிட்டியல்லது வேறேரிடத்தில் புக வொண்ணாது. (ஒண்தாமரையித்யாதி) ஜ்ஞாநமாகில் ஸ்ரியஃபதியை யறியுமத்தனை; மற்றொன்றையறியாது. "தகூ ஜ்ஞாநஜ்ஞாநதேதாநூ ஊஷூழி-தத்ஜ்ஞாந மஜ்ஞாநமதோந்யதுக்தம்" "விஜ்ஞாநாஸிவூ தெந வ—ணூழி-வித்யாந்யாசில்பநைபுணம்" என்னும்படியே. (கூஎ)

உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந் தன்னை - உணர்வாரார் [தப்
விண்ணகத்தாய்மண்ணகத்தாய் வேங்கடத்தாய்,நால்வே
பண்ணகத்தாய் நீகிடந்த பால். (கூஅ)

ப-உ.—விண்-பரமபதத்தை, அகத்தாய் - ஸ்தாநமாகவுடையவ னே ! மண்-பூமியடங்கின லீலாவிபூதியை, அகத்தாய்-ஸ்தாநமாகவு டையவனே ! வேங்கடத்தாய் - திருமலையிலெழுந்தருளியிருக்கிறவ னே! பண்-ஸ்வரப்ப்ரதாகமான, நால்வேதம்-நான்கு வேதங்களை, அகத் தாய் - இடமாகவுடையவனே ! (அவைகளால் ப்ரதிபாதிக்கப்பட்ட வனே) உன் - உன்னுடைய, பெருமை - மேன்மையை, ஊழிதோ றூழி - காலமெல்லாம் கூடினாலும், உணர்வார் - அறியவல்லர், ஆர்- எவர்; உன் - உன்னுடைய, உருவந்தன்னை - ஸ்வரூபத்தை, உணர் வாரார் - அறியவல்லாரெவர்; நீ கிடந்த - நீ பள்ளிகொண்ட, பால் - க்ஷீரஸமுத்ரத்தை, உணர்வாரார் - அறியவல்லாரெவர். (கூஅ)

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு.—(உணர்வாரார்) கீழ் அஜ்ஞாநத்துக்கு விஷயமவனென்றது ; உணரவரிதென்கிறது இப் பாட்டில்.

(உணர்வாராருன்பெருமை) "ஜ்ஞஷ்யஸ்ய ஸர்வஜ்ஞ தாநுபபத்தே-ஜ்ஞஷ்டம் யதாபச்யத்யங்யமீசம்" என்கிறபடியே, குணங்களோடே கூடியிருக்கிற வுன்னை யுணர்வாராரென்கிறது. (ஊழியித்யாதி)

காலத்தையெல்லா மொருபோகியாக்கி உன்னுடைய ஸ்வரூபரூப குணங்களே யுணரப்புக்கால் உணரவரிதென்கிறது. (விண்ணகத்தாய் மண்ணகத்தாய்) ஸ்ரீவைகுண்டத்திலே யிருந்தரீ அவதாரரூபேணபூமியிலேவந்தவதரித்து அத்தாலே ஸௌலப்யத்தையுடையவனே! கடல்கிட்டிற்றென்னு பரிச்சேதிக்கப்போகாதிறே. (வேங்கடத்தாய்) ஸம்ஸாரிகளுடைய ஸகலதுரிதங்களும் போம்படி திருமலையிலே வந்து நிற்கிறவனே! (நால்வேதப்பண்ணகத்தாய்) ஸ்வரத்துக்குள் ளீடாய்நின்று ப்ரதிபாதிக்கிற வேதங்களுக்கு ப்ரவர்த்தகனானவனே! நீகிடந்தபால் உணர்வாரார்.

(உணர்வாராரித்யாதி) உன்னுடைய ஸ்வரூபமறியவொண்ணாது உன்னை ஸ்வர்யம். (ஊழிதோறூழியித்யாதி) காலமெல்லாங்கூடினாலும் ஸௌலப்யமறியவொண்ணாது. விண்ணகம் - அவதாரம், இவையென்கை. விண்ணகத்தானாய், பாற்கடலானாய், மண்ணகத்தானாய், வேங்கடத்தானாய் நின்றான். (நால்வேதப்பண்ணகம்) ஸ்வர்யம் ப்ரதிபாதிக்கிறது கண்ணுக்கு விஷயமிறே. மற்றையது இங்குச்சொல்லிற்று அநுவாதம் காண்கையாலே. [கஸ்யோநிஷ் - தஸ்யயோநிம்] அவனுடைய பிறப்பு.* உயர்வற உயர்நலமுடையவன் பிறப்பிறே. [ஸ்ரஷ்டா-தீராः] ஸ்ரஷ்டாரமீஶ்வராः - ஸ்ரீமதாமக்ரேஸராः. * மயர்வறமதிநலம் பெற்றார். [வரிஜாநஜி - பரிஜாநந்தி.] கூடாங்கோறும் எத்திறமென்பர்.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு.—நீ கிடந்தபால் - பாலிலே நீகிடந்தது. ஏவமாதியெல்லா மூணர்வாரா ரென்றபடி.

"உரு" என்று கண்ணுக்கு விஷயமாய் ஸௌலப்யம். கீழ்ச் சொன்ன பரத்வ ஸௌலப்யங்களுக்கெல்லியேதென்ன; அருளிச்செய்கிறார் (விண்ணகம் அவதாரமென்று) பரத்வ ஸௌலப்யங்களுக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார் (மற்றையதிங்கித்யாதி) இவையெல்லார்க்குந் தோற்றவில்லையே யென்ன; ஜ்ஞாநாதிகர்க்குத் தோற்றுமென்கிறார் (காண்கையாலென்று) அப்படி கண்டார்களோ வென்ன; அருளிச்செய்கிறார் (கஸ்யோநிஷ்-தஸ்யயோநிம் இத்யாதி) "தஸ்ய" என்று பரத்வம் "யோநிம்" என்று ஸௌலப்யம்.

(கூஅ)

பாலன் றனதுருவா யேழுலகுண்டு, ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்தது மெய்யென்பர் - ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு. (௮௯)

ப-உ.—பாலன்றனது - பால்மாறுத முக்த சிசுவினுடைய, உரு வாய் - திருமேனியையுடையனுய், ஏழுலகு - ஸப்தலோகங்களேயும், உண்டி - அமுதுசெய்து, ஆலிலையின்மேல் - வடத்தின் தளிரில், அன்று - அக்காலத்தில், நீ - தேவரீர், வளர்ந்தது - கண் வளர்ந்த தை, மெய்யென்பர் - (வைதிகர்கள்) யதார்த்தமென்பர்கள்; அன்று - அக்காலத்தில், ஆல் - வடமானது, வேலைநீர் - ஸமுத்ரஜலத்தில், உள்ளதோ - இருந்ததோ? விண்ணதோ - ஆகாசத்திலிருந்ததோ? மண்ணதோ - பூமியிலிருந்ததோ? சோலை - தோப்புகளால், சூழ் - சுற்றப்பட்ட, குன்று - கோவர்த்தந பர்வதத்தை, எடுத்தாய் - தூக் கினவனே! சொல்லு - உரை. (சுக)

வ்யா.—அவ.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—(பாலன்) எல்லா மொழிய ஓரோவொன்றை யறியப்போமே வென்கிறது.

(பாலனித்யாதி) ரக்ஷகாபேக்ஷமான வடிவையுடையையாய். (ஏழுலகுண்டு) ஸ்வவ்யதிரிக்த ஸகலபதார்த்தத்தையும் ரக்ஷித்து. (ஆலிலையின்மேல்) ஸர்வர்க்கு மாதாரமான ஸர்வரக்ஷகனுக்குக் கண்வளரப்போகாத வாலிலையின்மேலே. (அன்றித்யாதி) அன்று வள ர்ந்தத்தை ஆப்ததமரானவர்கள் மெய்யென்பர்கள். வேதமர்யாதை யில்லையாகில் சூன்யமாதல், உண்டாகில் ஸத்யமாதலே யுள்ளது. (சோலையித்யாதி). ஏழுவயஸ்ஸிலே மலையைக் கீழ்மேலாக வெடுத்தநீ அவற்றைச் சொல்லவேணும். (அன்று) திக்கெல்லாமழிந்தவன்று. (வேலையித்யாதி) நீ கண்வளர்ந்த பாற்கடலுள்ளதோ, நிராலம்பந மானவாகாசத்திலோ, கரைந்துபோனபூமியிலதோ, சொல்லவேணும். பின்பு மலையெடுத்த வாச்சர்யமிதுக்கு ஸத்ருசமோ. இத்தால் அவ ன்றன்படியை யவன்றனேசொல்லுகையு மரிதென்றபடி.

(பாலன்றனதுருவாய்) பாலனுடைய ரூபத்தையுடையையாய். அப்ராக்ருதமாய் மஹத்தரமான திருமேனியைச் சிறுக்கி ஸஜாதீ யமாக்குகை மெய்யென்பர் ருஷிகள். "எத்திறம்" என்ன; "பொய்'

என்னவொண்ணாது. (மெய்) நீயே ஸர்வத்துக்கும் காரகனனமையும் மெய். இருந்தபடியென். (சோலையித்யாதி) ஏழுபிராயத்திலே பெரிய மலையையெடுத்த வாச்சர்யமுஞ் சொல்லவேணும். இது ஆழ்வார்வந்தால் கேட்கவிருந்தோமோ வென்றுனே எம்பெருமான். இது அத்யந்தம் விஸ்மயமென்கிறார். (சுக)

அரு.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—இவர்கள் "மெய்" என்கிறது, என்கொண்டென்ன ; அருளிச்செய்கிறார் (வேதமார்யாதையித்யாதி). வளர்ந்த - கண்வளர்ந்ததை.

இவர் "சொல்" என்கைக்கு அவன்று னிவர்வார்த்தைகேட்க ஆசைப்பட்டிருக்குமோவென்ன ; அருளிச்செய்கிறார் (இது ஆழ்வாரித்யாதி). கேட்கவிருந்தான்போலே யென்றுவ்யாக்யாதா. (சுக)

சொல்லுந் தனையும் தொழுமின், விழுமுடம்பு
செல்லுந் தனையும் திருமாலை - நல்லிதழ்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தா லேத்துதிரேல் நன்று. (எo)

ப-உ.—திருமாலை - பிராட்டியோடு கூடின ஸர்வேஸ்வரனை, விழும் - நசிக்கத்தக்க, உடம்பு - சரீரமானது, செல்லுந்தனையும் - விழுமளவும், நல் - அழகிய, இதழ் - தளங்களையுடைய, தாமத்தால் - மாலையாலும், வேள்வியால் - யாகத்தாலும், தந்திரத்தால் - மந்த்ரமில்லாத க்ரியைகளாலும், மந்திரத்தால் - க்ரியையில்லாத மந்த்ரத்தினாலும், தொழுமின் – ஆச்ரயியுங்கோள். சொல்லுந்தனையும் - வாங்மநஸ்ஸுகளும், நாமத்தால் - திருநாமங்களாலே, ஏத்துதிரேல் - புகழ்வீர்கோளாகில், நன்று - நல்லது. (எo)

வ்யா.—அவ.—எழுபதாம்பாட்டு.—இப்படி அபரிச்சிந்நசக்தியானபின்பு அவனை யெல்லாருமாச்ரயியுங்கோளென்கிறார்.

(சொல்லுமித்யாதி) நாக்குச்சொல்லப் பாங்கானபோதெல்லாம்சொல்லி ஆச்ரயியுங்கோள். (விழுமுடம்பு செல்லுந்தனையும்) உடம்பு பாங்கானபோதெல்லாமாச்ரயியுங்கோள். (திருமாலை) பாங்கானபோதாச்ரயிக்க யாவதாத்மபாவி ஆச்ரயித்தானுகக் கொள்ளும் பித்தனைச்சொல்லுகிறது. (நல்லிதழ்தாமத்தால்) நல்ல

செவ்விப்பூவையுடைய மாலையால்.(வேள்வியால்) செவ்விமாலை கிடையாதாகில் கர்த்தவ்யமான கர்மத்தாலே,அது கிடையாதாகில் அதுக்கடியான தந்த்ரத்தாலே, அடையப்போகாதாகில் மந்த்ரத்தைக் கொண்டு செய்வது ; க்ரியாரூபமான தந்த்ரமாகில் வாக்வ்ருத்தியான மந்த்ரத்தாலே செய்வது. மந்த்ரத்துக்கு தேசகாலநியதியுமதிகாரி நியதியும் வேணுமென்றிருந்திகோளாகில் நாமத்தாலே ஏத்துவது. தாய்பேர்சொல்லக் குளித்துவரவேண்டாவிறே. (திருமாலே) நியதியுண்டென்னில், " அம்மே " என்னுமோபாதி சொல்லவமையும். (எo)

அரு.—எழுபதாம்பாட்டு.—விழுமுடம்பு-திருவடிகளிலேவிழுந்தாஸ்ரயியுங்கோள். வேள்வி - ஸ்வயமேவபண்ணுகை. மந்த்ரம் - சங்கையாய்ப்பண்ணுவிக்கை. க்ரியாரூபமான மந்த்ரம் - வேதமந்த்ரம். வாக்வ்ருத்தியானமந்த்ரம் - பகவன்மந்த்ரம். நியதி-விஷயநியதி. மிதுனமென்றபடி. (எo)

நன்று பிணி மூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுது மாண்டாலும் - என்றும்
விட லாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடலாழி கொண்டான்மாட் டன்பு. (எக)

ப-உ.—ஆழி - கம்பீரமான, நெஞ்சமே - மனமே, பிணி - நோயையும், மூப்பு - கிழத்தனத்தையும், நன்று - செவ்வையாய், கையகற்றி - விட்டு, நான்கூழி - நாலுயுகங்களில், நின்று - ஸ்திரமாயிருந்து, நிலமுழுதும் - பூமியோடுகூடின அண்டமெல்லாம், ஆண்டாலும் - நிர்வஹித்தாலும்,அடல் - யுத்தத்தில் பின்வாங்காத, ஆழி - சக்ரத்தை, கொண்டான்மாட்டு - பிடித்தவனுடைய விஷயத்தில், அன்பு - ஸ்நேஹத்தை, என்றும்-எக்காலத்திலும், விடல் - விடாதே கொள் ; வேண்டினேன் கண்டாய், இரக்கிறேன் கிடாய். (எக)

வ்யா.—அவ.—எழுபத்தோராம் பாட்டு.—(நன்று) ஐஸ்வர்ய கைவல்யங்களில் புகாதே அவன்தன்னையே ஆசைப்படப்பாரென்கிறார்.

(நன்றித்யாதி) இத்தால் கைவல்யத்தைச்சொல்லுகிறது. நான்கூழியித்யாதி) ப்ரஹ்மாவினுடைய வைஸ்வர்யத்தைப் பெற்றாலும்

(ஆழிநெஞ்சமே) அளவுடைய நெஞ்சே ! நீயே முற்பட்டிருக்கிறவுன்னை யிரக்கிறேனிறே. (அடலாழிகொண்டான் மாட்டன்பு - விடல்)விடாதே கொள். (வேண்டினேன் கண்டாய்)பார்குடிக்க இரக்கிறேனிறே. ஐஸ்வர்யம் நிலைநில்லாது; கைவல்யம் பகவத்கைங்கர்யத்தைப் பார்க்க அல்பமென்கை.

அன்றியே, இரண்டையும் சேர்த்துத்தரிலும், விடல் - இவை நன்றுனவன்றும் விடுகைக்கு அவனல்லாமையையும். பற்றுகைக்கு அவனுகவமையும். (வேண்டினேன்) இவ்வர்த்தம். (அடலாழியித்யாதி) எனக்குக் கைக்கூலிதந்து பற்றும் விஷயம். (எக)

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—நன்றுக - ஸவாஸநமாக. பிணியையும் மூப்பையும் கையகற்றி-கைவிட்டு. நான்கூழி-நாலுயுகஸஹிதமாயிருக்கிறகாலம். "நின்று"என்கையாலே,ஐஸ்வர்யஸ்தைர்யத்தையும் "நன்று" என்று கைவல்யலக்ஷணயத்தையுஞ் சொல்லி, இவற்றையென்று மாண்டாலும் அவனிடத்திலன்பு விடல் என்கிறார் (ஐஸ்வர்யமித்யாதி). (எக)

அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும் - முன்பூழி
காணுனைக் காணென்னும் கண்செவி கேளென்னும்
பூணுரம் பூண்டான் புகழ். (எஉ)

ப - உ.—அன்பு - ப்ரீதிக்கு ஆதாரமான மநஸ்ஸு, ஆழியானை - திருவாழியுடையவனை, அணுகு - கிட்டு; என்னும் - என்று சொல்லும்; நா - வாகிந்த்ரியம், அவன்தன் - அவனுடைய, பண்பு - அழகுக்கு, ஆழி - ஸமுத்ரமாயிருக்கிற, தோள் - புஜங்களை, பரவி - பரக்கச்சொல்லி, ஏத்து - துதி; என்னும் - என்றுபேசும்; கண் - நயநேந்த்ரியம், முன்பு - பூர்வமுள்ள, (அபராதம் பண்ணின) ஊழி - காலத்தையும், காணுனை - அறியாதவனை, காண் - பார்; என்னும் - என்றுசொல்லும்; செவி - ஸ்ரவணேந்த்ரியம், பூண் - அணியத்தக்க, ஆரம் - முத்துமாலையை, பூண்டான் - தரித்தவனுடைய, புகழ் - கீர்த்தியை, கேள்-ஸ்ரவணம்பண்ணு; என்னும்-என்றுசொல்லும். (எஉ)

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு.—(அன்பு) சிஷ்யர்கள் ஆசார்யர்களைநோக்கி.

(அன்பு) என்று நெஞ்சைச்சொல்லிற்று. "அடலாழிகொண்டா ன்மாட்டன்பு - விடாதே" என்று திருவுள்ளத்தை யிரக்க, அதுவும் நீர் ஆழியானைவிடாதே கொள்ளுமென்கிறது. (நாவித்யாதி) நாவா னது அவனுடைய ஸௌந்தர்யஸாகரமான தோள்களை அக்ரமமாக ஏத்தென்ன நின்றது; முடியும்படியாதொன்றறியாது காணும். (முன்பித்யாதி) ஸாபராதராயிருந்துள்ள நம்மாலவனைக் கிட்டப் போமோவென்னில்; ஓரடிவரநின்றால் குற்றமே யன்றியே குற்ற ங்கிடக்கும்நாளும் காணவறியானென்கிறது. (முன்பூழிகாணானை) அவனைக்காணும் என்ன நின்றது கண். (செவியித்யாதி) குற்றம் பார்த்துப் போகிறானாகிலும் விடப்போகாத ஆபரண சோபையையு டையனானவனுடைய புகழைக்கேளென்ன நின்றது செவி.

(ஆழியானை) ராஜபுத்ரர்களிடைச்சேரிக்கு மகப்படுமாப்போ லே. (பண்பு ஆழித்தோள்) ஸௌந்தர்யஸாகரமான. (பரவியேத்து) நீஏத்தும் க்ரமம் தப்பாமே. (முன்பித்யாதி) நாம் பண்ணிவைத்தபா பங்களை நினைத்துச் சீறிலோவென்னில்; பாபமும் கீழ்க்கிடந்த கால மும் மறக்கும். கண்கண்டவாறே தெரியுமிறே சீறிநோக்கும் நோக் கும், வாத்ஸல்யத்தாலே நோக்கும் நோக்கும். (செவிகேளென்னும்) செவிக்கு விக்ருதிசொல்ல அவஸரமில்லை. (பூணாரம்) ஆபரணமான உடம்புக் காபரணம். [ஸவ-ஹ-ஷோஷணஹ-ஷோஹ-ஹாரஃ - ஸர்வ பூஷண பூஷார்ஹாஃ] மற்றையாபரணங்களுக் காபரணமென்றும். (பூண்டான்) பூணவல்லவழகு. (புகழ்) ப்ரஹ்மபூஷணம். (எஉ)

அரு.—எழுபத்திரண்டாம் பாட்டு.—கரணங்கள் கரணிக்குப தேசிக்கையாலே (ஆசார்யர்களானார்கள்) என்கிறது.

காண்கைக்கு ப்ரயோஜநமேதென்ன; அருளிச்செய்கிறார் (கண்கண்டவாறேயித்யாதி). கீழில்இந்த்ரியங்களைப்போலே அவனைச் சொல்லி, பின்னை இன்னபடி செய்யென்னுமல் கேவலம் "கேள் என் னும்" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (செவிசிகித்யாதி). விக்ருதிசொல்ல-தன்னுடைய பக்திக்கு விஷயஞ்சொல்ல அவஸர மில்லை யென்றபடி. முன்பு அவஸரமில்லாமையாலே பின்பு "பூணா ரம்பூண்டான்" என்று விஷயத்தைச்சொல்லிற் றென்றபடி. அன்றி க்கே, தன்னுடைய பக்தியாலே விஷயஞ்சொல்ல அவஸரமின்றியே, "கேள் என்னும்" என்னவுமாம். பூண் - திருமேனியாதல், மற்றை

யாபரணமாதல். ஆரம்-விக்ரஹபூஷணம். புகழ் - ஸ்வரூபபூஷணமென்றபடி. ப்ரஹ்மம்-ஸ்வரூபம். (எ2.)

புகழ்வாய் பழிப்பாய் நீ பூந்துழாயானை
இகழ்வாய் கருதுவாய் என்நெஞ்சே - திகழ்நீர்க்
கடலு மலையு மிருவிசும்பும் காற்றும்
உடலு முயிரு மேற் றூன். (எசு)

ப-உ.—என்னெஞ்சே! என்னுடைய மனமே! நீ - நீ, பூம் - அழகிய, துழாயானை - திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்டவனை, புகழ்வாய் - ஸ்தோத்ரம் பண்ணினாலும் பண்ணு; பழிப்பாய் - நிந்தித்தாலும் நிந்தி. இகழ்வாய் - அநாதரம் செய்தாலும் செய்; கருதுவாய் - விரும்பினாலும் விரும்பு. (அந்த ஸர்வேஸ்வரன்) திகழ் - ப்ரகாசிக்கிற, நீர் - ஜலத்தையுடைய, கடலும் - ஸமுத்ரத்தையும், மலையும் - பர்வதத்தையும், இரு - விசாலமான, விசும்பும் - ஆகாசத்தையும், காற்றும் - வாயுவையும், உடலும் - சரீரத்தையும், உயிரும் - ஆத்மாவையும், ஏற்றான் - தரித்தவன். (எசு)

வ்யா.—அவ.—எழுபத்தாறான்றும்பாடு.—(புகழ்வாய்) கீழ்தம்முடைய இந்த்ரியங்கள் ப்ரவணமானபடி சொல்லிற்று; அவ்விஷயந்தானினியறிய ப்ராப்தமாயிருந்தது, நீ அத்தைப்பற்றினும் பற்று, விடிலும்விடு என்கிறது.

(புகழ்வாய் பழிப்பாய்) புகழிலும் புகழ்; பழிக்கிலும் பழி. (இகழ்வாய்கருதுவாய்) இகழிலும் இகழ்; கருதிலும் கருது. (பூந்துழாயானை) பழித்தல், இகழ்தல் செய்யப்போமோவென்கிறது. (என்னெஞ்சே) நாட்டுக்குச் சொல்லுகிறேனே; உனக்கன்றே. (திகழ்நீர்கடலும் மலையும்) இரண்டாலுமாகக்கார்யத்தைச்சொல்லுகிறது. (இருவிசும்பும் காற்றும்) காரணபூதங்களுக்கு முபலக்ஷணம். (உடலுமுயிரும்) காரணமான சிதசித்துக்களைச் சொல்லுகிறது. (உடலுமுயிரு மேற்றான்) இத்தால் இவையெல்லாமவனுக்குக் கார்யதயாசேஷம், அவன் சேஷியென்கிறது.

அவை மத்யஸ்தமென்னும்படி தம்முடைய ப்ராவண்யம். (புகழித்யாதி) வாசகத்துக்கு. (இகழ்வாய் கருதுவாய்) மநஸ்ஸுக்கு. (என்

னெஞ்சே). புகழ்ந்து பழகின நெஞ்சே. பூந்துழாயானேப்புகழ்ந்த தல்லது நிற்கவொட்டாது. (ஏற்றான்) ஆதாரத்தைப்பற்றிலும் பற்று, ஆதேயத்தைப்பற்றிலும் பற்று. இது இருந்தபடி. (எஈ)

அரு.—எழுபத்துமூன்றாம்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அவையித்யாதி). மத்யஸ்தமென்கிறது — தம்முடையகரணங்கள் இகழுகைக்கும் கருதுகைக்கும் பொதுவாயிருக்கும். தமக்குக் கருதுகை ப்ரயோஜநம். "ஏற்றான்" என்று சேஷித்வஞ் சொல்லுகையாலே ப்ராப்யம். ஏற்றான் - சரீரவத்தரித்தான் ஏற்றான்-ஆதாரபூதனென்றபடி. (எஈ)

ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணிவண்ணத்தான்-கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான், நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (எச)

ப-உ.—ஏற்றான் - எருதையுடையனுய், எயில் - மதிளையுடைய த்ரிபுரத்தை, எரித்தான் - கொளுத்தினவனுய், நீற்றான் - சாம்பல் பூசினவனுய், கூற்றொருபால் - (சரீரத்தில்) ஒருபக்கத்தில், மங்கையான் – பார்வதியைத் தரித்தவனுய், வார் - தொங்கின, சடையான் - சிக்குப்பட்ட மயிர்முடியையுடையனுய், கங்கையான்-கங்காநதியை ஏந்தினவனன ருத்ரன், புள் - கருத்மானை, ஊர்ந்தான் – வாஹநமாகவுடையனுய், மார்வு - (ஹிரண்யனுடைய) வக்ஷஸ்ஸை, இடந்தான் - பிளந்தவனுய், நிழல் – குளிர்ந்த (ஸ்ரமஹரமான), மணி - நீலரத்நம்போன்ற, வண்ணத்தான்-வடிவையுடையனுய், பூ - தாமரைப்பூவில் வஸிக்கிற, மகளான் – பிராட்டியையுடையனுய், நீள் - தீர்க்கமான, முடியான் – கிரீடத்தையுடையனுய், நீள் - நீண்ட, கழலான்-திருவடியையுடையனன விஷ்ணுவினுடைய, காப்பு - ரக்ஷையாயிருக்கும். (எச)

வ்யா.—அவ,—எழுபத்துநாலாம்பாட்டு.—(ஏற்றான்) இது இவனுக்கேற்றமாகச்சொல்லுவானென்; அல்லாத ருத்ரனுமிப்படி சேஷியாயன்றே விருப்பதென்னில்; அவனுடைய ப்ரகாரங்களைப் பார்த்தால் ரக்ஷ்யமாய்த்தோற்றும்; இவனைப் பார்த்தால் ரக்ஷகனுயிருக்குமென்கிறது.

(ஏற்றான்புள்ளூர்ந்தான்) * வேதாத்மாவான திருவடியைத் தலைக்கு வாஹநமாகவுடையனாயிருக்குமாகில், அவனப்ரஸித்தமாயிருப்பதொரு எருத்தை வாஹநமாகவுடையனாயிருக்கும். (எயிலெரித்தான்) ஆஸ்ரிதரையொருவ்யாஜத்திலே யழிக்குமவன். (மார்விடந்தான்) ஆஸ்ரிதனுக்காகத் தன்னையழியமாறும் இவன். (கீற்றான்) "ஹஸ்தஸ்பர்சஸ்ய" என்று ப்ராயச்சித்தம் பண்ணும் அவன். (நிழல்மணிவண்ணத்தான்) கண்டால் ஸ்ரமஹரமான வடிவு இவனது. (கூற்றொருபால் மங்கையான்) ஒரு ஸ்த்ரீயைத் தனக்கே வைத்துக்கொண்டிருக்கும் அவன். (பூமகளான்) "கமலேஸ்மாந் ஜமதாவிஷ்ணவதீ-அஸ்யேசாநாஜகதோ விஷ்ணுபத்நீ" என்னுமவளைத் தனக்காகவுடையவன் இவன். (வார்சடையான்) ஸாதகவேஷன் அவன். (நீண்முடியான்) ஆதிராஜ்யஸூசகமான திருமுடியையுடையவன் இவன். (கங்கையான்) பாவநார்த்தமாகக் கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கும்அவன். (நீள்கழலான்) அந்தத் தீர்த்தபூதையான கங்கைக் குத்பாதகமான திருவடியையுடையவன் இவன். "ஏற்றான் - எயிலெரித்தான் - கீற்றான் - கூற்றொருபால் மங்கையான் - வார்சடையான்-கங்கையானை அவன், புள்ளூர்ந்தான் - மார்விடந்தான் - நிழல்மணிவண்ணத்தான் - பூமகளான்-நீண்முடியான் - நீள்கழலான் காப்பு" அவனுடைய ரக்ஷையிவன். "உடலுமுயிரும்" என்றத்தோடு இவனோடு வாசியில்லை அவனுக்கு சேஷமாமிடத்தில். (எச)

அரு.—எழுபத்துலாம்பாட்டு.—எயில்-மதிளாய், த்ரிபுரம். கீற்றான். கீற்றையுடையவன். கூற்றொருபால் - லோகரக்ஷணார்த்தமாகவன்றியே தனக்கே கூறாகவென்றபடி. (எச)

காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும் - மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே, நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி. (எந)

ப-உ.—உன்னை - உன்னை, உன்ன - த்யாநித்தால், காப்பு - ரக்ஷகரான யமன் முதலானார், கழியும் - நீங்குவர்கள். உன்னையுன்ன - உன்னை யநுஸந்தித்தால், அரு-க்ரூரமான, வினைகள்-கர்மங்களின், ஆப்பு-பந்தம், அவிழ்ந்து - விட்டு, ஒழியும்-நசிக்கும். திரு-பிராட்டி

திறத்தில்.மாலே - வ்யாமோஹத்தையுடையவனே ! உன்னைச்சிந்திப் பார்க்கு - உன்னைத்யாநம் பண்ணுமவர்களுக்கு, மூப்பு - கிழத்தனம் முதலானவிகாரங்கள், இல்லை - கிடையாது. கின் - உன்னுடைய, அடியை-பாதத்தை, வந்திப்பார் - நமஸ்கரிக்குமவர்கள், வழி - (அர்ச் சிராதி) மார்க்கத்தை, காண்பர் - பார்ப்பர்கள். (எடு)

வ்யா.—அவ.—எழுபத்தைந்தாம் பாட்டு.—(காப்பு) சேஷியா யிருந்துள்ள உன்னையுணர ப்ரதிபந்தகமெல்லாம் போமென்கிறது.

உன்னையுணரக் காப்புக்கழியும். "காப்பு" என்கிறது ஈச்வர னுக்குப் புரவர்போலே இவ்வாத்மாக்கள் செய்த கர்மங்களை யாரா யக்கடவரான சந்த்ராதித்யர்கள் தொடக்கமான பதினாலுபேரு டைய சிறைகள். கர்மவச்யனுகையிறே இவர்கள் காக்கைக்கடி.(உன் னையுன்ன அருவினைகளாப்பு அவிழ்ந்தொழியும்) அக்காப்புக்கடி யான அவித்யாதிகளாலுண்டான பந்தம் உன்னை நினைக்க நெகிழும். (மூப்பித்யாதி)காப்பு மருவினைகளும்போன வதிகாரிகளுக்கு, மூப்பா வது கைவல்யம். அன்றியே, ஷட்பாவவிகாரங்களுக்கு முபலக்ஷண மாகவுமாம். (திருமாலே) ஈச்வரன் ஸ்வாதந்த்ர்யத்தாலே ஆராயப் புக்காலும் ப்ராயச்சித்தமாத்யமில்லாத பாபம் நாம்பொறுக்குமத் தனை யன்றேயென் றுணர்த்துவாளொருத்தி யருகேயுண்டென்கி றது. "ஹாஸீநாஸ்ராவணவ்யாஹம் ஷிப்யாஸீஹஜ்ஜவைபுவா ! ராஜ லம்ஸ்ரயவச்யாநாம் கூவபுஜ்ஜீநாம்வராஜ்ஜயா - தாஸீநாம் ராவண ஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா ! ராஜஸம்ஸ்ரயவச்யாகாம் குர்வந்தீ நாம் பராஜ்ஞயா" என்னும்படியே. (நின்னடியை வந்திப்பார்காண் பர்வழி) உன் திருவடிகளிலே விழுவார்கள் நல்லவழிகாண்பர். "வழி" என்று - அர்ச்சிராதியாகவுமாம். பரமபதம் போலேபரமபத த்துக்குப் போம்வழி; நரகம்போலே பொல்லாதாயிருக்கும் நரகத் துக்குப் போம்வழி.

(காப்பித்யாதி) "ப்ரஹ்மரஹஸ்ய ந்ரணாம் நமவெஷ்ணவாநாம் ப்ரபுரஹமங்யக்ருணம் நவைஷ்ணவாநாம்" "தேவஷிபு - தேவர் ஷி" இத்யாதி. (அருவினை) அவித்யாதிகளால் பிறக்கும் புண்யபா பங்கள். சாரீரமான மூப்பு. (திருமாலே) "யுவாகுமாரஸ்-யுவா குமாரஸ்" "யுவதிஸ்குமாரீணீ-யுவதிச்சகுமாரீணீ" என்கிறவற்

களை யாச்ரயித்தால் உங்களைப்போலே * பரமம் ஸாம்யமுபைதியே - வந்தியாதார்க்கு முள்ளும் முடிக்குமானவழி. (எடு)

அரு.—எழுபத்தைந்தாம்பாட்டு.—புரவர்-தலையாரிகள். ஈச்வரனுடைய பட்டணமான லோகத்தைக்காக்கிற சந்த்ராதித்யர்கள். வழி-ஸித்தோபாயமாதல். "காண்பர்" என்கைக்கதிசயமென்னென்ன; அருளிச்செய்கிறார் (பரமபதமித்யாதி). காப்பு இங்குயமவச்யதையும் இதரசேஷமுமாக்கி யருளிச்செய்கிறார் (வ்ரஹ்மாதஹி - ப்ரபுரஹ்மம் இத்யாதி). (எடு)

வழிநின்று நின்னைத் தொழுவார், வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர் – பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும், மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். (எசு)

ப-உ.—வழி - (பக்தி) மார்க்கத்தில், நின்று - (ஸ்திரமாய்) இருந்து, நின்னை - உன்னை, தொழுவார் - ஆச்ரயிக்குமவர்கள், வழுவா - அழிவில்லாத, மொழி - (வேதச்) சொற்களிலே, நின்ற . ப்ரதிபாதிக்கப்பட்ட, மூர்த்தியர் - ஸ்வரூபத்தையுடையவர்களாய், ஆவர் - ஆவர்கள். மண் - பூமியை, அளந்த - ஆக்ரமித்த, சீரான் - கல்யாணகுணங்களையுடையவனே! திருவேங்கடம் - திருமலை, பழுதொன்றும் - ஒருகுறையும், வாராதவண்ணம் . ஸம்பவியாதபடி, விண் - பரமபதத்தை, கொடுக்கும் - தரும். (எசு)

வ்யா.—அவ.—எழுபத்தாறும்பாட்டு.—(வழிநின்று) உன்னைத் தொழுவார் பிழைப்பரென்று சொல்லவேணுமோ? உன்னோடு ஸம்பந்தித்த தேசமே எல்லா நன்மையும் கொடுப்பதாகவிருக்க வென்கிறது.

(வழிநின்று நின்னைத்தொழுவார்) "ஆத்மாவா உரே த்ரஷ்டவ்ய ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ-ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய ஸ்ரோதவ்யோமந்தவ்யோநிதித்யாஸிதவ்யஃ "விஜ்ஞாயவ்ரஜாகுவீத விஜ்ஞாயப்ரஜ்ஞாம் குர்வீத" "உவாஸநய்ஸ்ருவாஸ்ருதிஃ ஸுஸ்ருநஸோநாகாரதா வ்ருத்யுக்ஷதாவதீஃவிஸ்ருதேதஸ்நஹ்ருஷ்டஃ-உபாஸநம்த்ருவாஸ்ம்ருதிஃதர்சநஸமாநாகாரதாப்ரத்யக்ஷதாபத்திஃ விசதே

தகங்காரம்" என்னுமளவுஞ் சொல்லுகிறது. (வழுவாமொழி நின்ற மூர்த்தியரேயாவர்) யதாபூதவாதியானவேதத்திற் சொன்ன வடிவையுடையராவர். "வரஂஜ்ஜோதிரஂவஹஂவஜ்ஜ வ்ஹோநரஂஞ்ஜவேணாஹிநிஷ்ஜ்ஜதே - பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்கிறபடியே. (பழுதிலாதி) ப்ராப்ய ப்ராபகங்களொன்றும் குறையாதபடி பரமபதத்தைக்கொடுக்கும், திருவுலகளந்த நீர்மையையுடையவனுடைய திருமலை. "மண்ணளந்த சீரான்" என்று ஸம்புத்தியாகவுமாம்.

(வழுவாமொழி) ஒருவர்க்கொருவர் ஒதுவித்துப்போருகை. (மூர்த்தியரே யாவர்) அதுக்கீடான ஸ்வரூபத்தையுடையராவர். (மண்ணளந்த சீரான்) அந்தஸ்வபாவமுண்டு திருமலைக்கு. எம்பார் விடிவோடே அநுஸந்திக்கும்பாட்டு. (எசு)

அரு.—எழுபத்தாறும்பாட்டு.—வழிகின்று-உபாஸநமார்க்கத்திலேகின்று. அதுக்கீடான-வேதோச்சாரணத்துக்கீடான. "ஹா ஊ உஹா ஊ உஹா ஊ உ,ஊஹூஹூஹூஹூஹூ - அஹமங்கமஹமங்கமஹமங்கம்" என்று உச்சரிக்கைக்கீடான என்றபடி. (எசு)

வேங்கடமும் விண்ணகரும் வெஂகாவும், அஂகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் - நான்கிடத்
நின்றுனிருந்தான் கிடந்தான் நடந்தானே [தும்
என்றுல் கெடுமாமிடர். (எஎ)

ப-உ.—வேங்கடமும் - திருமலையும், விண்ணகரும் - ஸ்ரீவைகுண்டமும், வெஂகாவும் - திருவெஂகாவும், அஂகாத - மாறுத, பூம் - புஷ்பங்களையுடைய, கிடங்கின் - அகழையுடைய, நீள் - தீர்க்கமான, (போக்யதையுடைய), கோவல் - திருக்கோவலூராகிற, பொன் - அழகிய, நகரும் - திவ்யநகரமும் (ஆன), நான் கிடத்தும் - இந்த நாலு திவ்ய தேசங்களிலும்,(க்ரமமாக) நின்றுன் - நின்றருளினான்; இருந்தான் - எழுந்தருளியிருந்தான்; கிடந்தான் - பள்ளிகொண்டான்; நடந்தான் - ஸஞ்சரித்தான்; என்றுல்-என்று சொன்னுல், இடர்-துக்கம், கெடுமாம் - போம். (எஎ)

வ்யா.—அவ.—எழுபத்தேழாம்பாட்டு.—(வேங்கடமுமித்யாதி) உகந்தருளின தேசங்கள் பூமியிலே உண்டாயிருக்க, ஸம்ஸாரமுண்டோவென்கிறது.

(வேங்கடமுமித்யாதி) பூமாறுதேயிருந்துள்ள அழகையுடைத்தான திருக்கோவலூரும். "விண்ணகரும்" என்று பரமபதத்தைச் சொல்லுகிறது. (நான் கிடத்துமித்யாதி) நான் கிடத்தும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தபடியையுஞ்சொல்ல,நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் செய்தபாப பரம்போமென்கிறது. (என்றூல் கெடுமாமிடர்) தாய்போற்சொல்ல க்லேசம்போமாப்போலே.

அவ.—நம்முடைய இடரானனவை திருமலையை யாஶ்ரயிக்கப் போமோவென்னில; அநாதிகாலம் நம்மைப்பெறுகைக்கு அவன் படுகிறபாட்டை யதுஸந்தியாய்.

(நடந்தானே) (வேங்கடமும் விண்ணகரும்) இவர்களுக்கெல்லாம் ஒரு போகியாயிருக்கிறபடி. (பொன்னகர்)தானே வந்துநோக்கினவிடம். (எஎ)

அரு.—எழுபத்தேழாம்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (நம்முடையவித்யாதி). திருப்பதிகளைச் சொல்லுகிறவிடத்திலே பரமபதத்தைச்சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (பொன்னகர்தானேயித்யாதி). (எஎ)

இடரார் படுவா ரெழு நெஞ்சே, வேழந்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த - படமுடைய
பைந்நாகப்பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு. (எஅ)

ப-உ.—வேழம்-யானையை, தொடர்வான் - பின்சென்ற,கொடு - க்ரூரமான, முதலை - மகரத்தை, சூழ்ந்த - அழித்தவனுய், படமுடைய - பணத்தையுடைத்தான, பை - பரந்த, நாகம் - திருவநந்தாழ்வானை, பள்ளியான் - படுக்கையாகவுடையனுனவனுடைய, பாதம் - திருவடிகளை, கொய் - அறுக்கத்தக்க, பூம் - அழகிய,நாகம்-புன்னையினுடைய, போது - பூக்களை, கொண்டு - ஸம்பாதித்து,

கைதொழுதும் - ஆஸ்ரயிப்போம். இடர் - துக்கத்தை, ஆர் - எவர், படுவார் - அநுபவிப்பர்; நெஞ்சே-மனமே, எழு-எழுந்திரு. (எஅ)

வ்யா.—அவ.—எழுபத்தெட்டாம்பாட்டு.—(இடரித்யாதி)* நீ துக்கப்படுகைக்கு சங்கையுண்டோவென்னில்; போராய்நெஞ்சே ! இனி நம்பக்கலிடர் வந்ததாகில் முதலிலபட்டது படுமித்தனே.

(வேழமித்யாதி) ஆனையைத் தொடருவதான கொடிய முதலை யை முடித்த, "சூழ்ச்சி" என்று வஞ்சித்தலாய், முடித்தவென்றபடி. (படமித்யாதி) இக்தால்அநாஸ்ரிதர் வந்தாலும் ஆஸ்ரிதர் வந்தாலும் அவனிருக்கும்படிசொல்லுகிறது. (கொய்ங்ஙாக மித்யாதி) கொய்யப் பட்டுச் செவ்வியையுடைய நாகப்பூவைக்கொண்டு "பைங்ஙாகப்பள்ளி யான்பாதமேகைதொழுதும் - இடராரப்படுவார் - எழுநெஞ்சே" என் றன்வயம்.

(எழு) போது. "நாகப்பூ" என்கையாலே அப்ராக்ருத புஷ்பம் தேடிப்போகவேண்டா, காட்டிலொரு பூவமையுமென்கிறது. இவர் கள் என்றும் காட்டிலேயிறே பழகிற்று. (எஅ)

அரு.—எழுபத்தெட்டாம் பாட்டு.—ஆஸ்ரிதர்-திருவந்தாழ்வா ன். அநாஸ்ரிதர்-முதலை. நாகப்பூ-புஷ்பவிசேஷம். காட்டிலே திரிகை யாலே (காட்டுப்பூ) என்கிறார்கள். (எஅ)

கொண்டானையல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை - ஒண்தாரை
நீரங்கைதோய நிமிர்ந்திலையே, நீள்விசும்பி
லாரங்கை தோயவடித்து. (எக)

ப-உ.—மண் - பூமியை, தாவெனை - கொடு என்று, மாவலியை - மஹாபலியை, இரந்து - யாசித்து, ஒண் - அழகிய, தாரைநீர் - தாரையாகவிட்ட ஜலமானது, அம் - அழகிய, கை - கரத்திலே, தோய - விழுந்தஉடனே, நீள் - பரந்த, விசும்பிலார் - ஆகாசத் தில் வர்த்திக்கிற தேவர்களுடைய, அம் - அழகிய, கை - கரமானது, தோய - உறையும்படி, அடித்து - கிட்டி, நிமிர்ந்திலையே - வளர வில்லையோ ? கொண்டானை - (தாநம்) வாங்கினவனை, பழிப்பாரல்

(பா) * இனி.

லால் - நிந்திப்பார்களேயொழிய, கொடுத்தாரை - (தாநம்) கொடுத்த வனே, பழிப்பாராார் - ஆர்நிந்திப்பர்கள். (நிந்திக்கமாட்டார்களே என்று கருத்து). (எசு)

வ்யா.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—(கொண்டானே) குண மே குற்றமாம், குற்றம்குணமாங் கிடீர் ஸம்ஸாரம். ராவணனே பாதி வத்யனுயிருக்க ஔதார்யகுணம் இவன் பக்கலிலே கிடக்கையாலே தன்னதான பூமியை யவனுக்காக மேலெழுதிட்டு அவன் கொடுத் தானுக இவன் கொண்டதை, தன்கையிலே நீர்வார்த்தவனைப்பாதா ளத்திலே தள்ளினனென்று பழிசொல்லா நிற்பர்கள். தன்னதல் லாத பூமியைத் தன்னதென்று கொடுத்தவனையிறே கெல்வாலிலே வைத்துத் தெறிக்கவேண்டுவது. அவனைப் பழிசொல்லுவாரில்லை. (கொண்டானையித்யாதி) ஆரத்தை யிரக்கிறானேவிவன். (ஒண்டாரை யித்யாதி) அலப்யலாபம் பெற்றாரைப்போலே, "வஷை-ுணவீஜம் வ்ருதிஸம்ஜஹஷ-ு - வர்ஷேணபீஜம்ப்ரதி ஸஞ்ஜஹர்ஷ" என்னு மாப்போலே. அழகிய கையிலே நீர்விழுங் காட்டில் வளர்க்கிலையோ. (நீள்விசும்பித்யாதி) பரந்த விசும்பிலே ஆர்மும் கையுமடித்துத் தோயும்படிக்கிடாக. அன்றிக்கே, நீள்விசும்பிலார்-விசும்பிலுள்ளார் அழகிய தோளிலே யணையவென்றுமாம். நாமாஸ்ரயிக்கவேணுமோ, தானே அர்த்தியாய். நானர்த்தியோவென்ன; (நிமிர்ந்திலையே).

(கொண்டானே யல்லால்) தன்னதென்று கொடுக்கப் புகுமா கில் நமக்கிதில் ப்ராப்தியில்லை யென்று * இருந்தாலாகாதோ என் றிருக்க, அது குணமாகை தவிர்ந்து நிற்கைக் குடலாவதே. பையலே கெல்லிலேவைத்துத் தெறிக்கவேணுமென்பாருண்டாயிற்றே. ஆரதி யப்பட்டான். (மண்டாவென) தன்னதிலேகதேசத்தை (மாவலியை) அஸ-ுரனேக்கிடீர். (நீர்தோய நிமிர்ந்திலையே) மறுமாஸ்ஸ-ுப் படு மென்று அப்போதே. (நீள்விசும்பிலாரங்கை தோயவடித்து) ஆஸ் ரயிக்க நிமிர்ந்திலையே யென்றுமாம். (எசு)

அரு.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—கெல்வாலிலே-வாலானகெ ல்லின்நுனியிலே. பரமத்திலே சிறுகச்சிறுக வறுத்துத் தெறிக்கவே ணுமென்றபடி. ஆர்பழிப்பார் - ஒருவரும்பழிக்கிறார்களில்லை. ஒண்தா

(பா) * இரந்தாலாகாதோ வென்றிரக்க அது நிந்திக்கைக் குட லாவதே.

ரை - ஒள்ளியதாரை ; தெளிந்தஜலம். ஆரத்தையுடையமார்வும் கை யையுடைய தோளும் அகித்துக்கூட்டி ஆகாசத்தைக் கிட்டும்படிக் கீடாக என்னுதல். அர்த்தியாயன்றே செய்தானென்று தாத்பர்யம்.

வாமநன்கருத்தை யருளிச்செய்கிறார் (தன்னதென்றித்யாதி). இதில் ப்ராப்தியில்லை - பூமி என்னதென்று பலி சொல்லுமதில் விசாரிக்கப்ராப்தியில்லை. ப்ரயோஜநமே போருமென்றிருந்தான். அடுத்துத்தோய-கூட்டித் தோய ஸ்பர்சிக்க. "ஸஜ்ஜ்வ்ஹ்ரூ-ரூணாழி-ஸங் கைஸ்ஸ-ராணும்" என்னும்படி எல்லாருமாஸ்ரயிக்கநிமிர்ந்திலையே யென்றுமூன்றுமர்த்தம். (எக)

அடுத்த கடும் பகைஞர்க் காற்றேனென்றோடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த - விடத்தரவை
வல்லாளன் கைகொடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள். (அ0)

ப.உ.—அடுத்த - நெருங்கின (ஸஹஜமான), கடும் - கொடி தான, பகைஞர்க்கு - த்வேஷத்தையுடைய (பெரிய திருவடிக்கு), ஆற்றேன் - பொறுக்கமாட்டேன், என்று - என்று, ஓடி - சீக்ர மாய்ச் சென்று, படுத்த - விரித்த, பெரும் - மஹத்தான, பாழி - படுக்கையை, சூழ்ந்த - சுற்றிக்கொண்ட, விடத்து - விஷத்தை யுடைய, அரவை - (ஸுமுகனென்கிற) ஸர்பத்தை, வல்லாளன் - பலவானனை கருத்மானுடைய, கை - கரத்திலே, கொடுத்த - (ரக்ஷிக்கும்படி) ஸமர்ப்பித்தவனுய், மா - சிறந்த, மேனி - விக்ரஹத் தையுடையனுய், மாயவனுக்கல்லாது - ஆச்சர்ய பூதனனவனுக் கொழிய, ஆளாவரோ - அடிமையாவார்களோ. (அ0)

வ்பா.—அவ.—எண்பதாம்பாட்டு.—(அடுத்த) பரிஹாரமில்லா த ஆஸ்ரிதவிரோதம் பிறக்கிலும் அவர்களைப் பொறுப்பித்து புருஷ காரமாக அவர்களைக் †கைக்கொண்டு ரக்ஷிக்குமென்கிறது. "கூஹயழ்-அபயம்" என்று புகுந்த ஸ்ரீவிபீஷணப் பெருமாளை "புகுரலொட் டோம்." என்றவரைப்பொறுப்பித்து, "கூநமியெநம் ஹரிஸ்ரேஷ்-ஆநயைநம்ஹரிஸ்ரேஷ்ட" என்று அவரைக்கொண்டழைப்பித்தாற்

(பா) † கொண்டு.

போலே, பாதாளத்திலே ஸ-ழுகனென்றொரு ஸர்பத்தைப் பெரிய திருவடியழுதுசெய்ய நினைக்க, அத்தையறிந்துஸ்வர்க்கத்திலேஉபேந்த்ரமூர்த்தியா யெழுந்தருளியிருக்கிற விடத்திலே திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டு கிடக்க, திருவடி பாதாளத்திலே சென்று தேடிக்காணுமல் திருவடிகளிலே வந்து இவன் கிடக்கிறபடியைக் கண்டு * சிவிகையார்சொல்லும் வார்த்தையை விண்ணப்பஞ்செய்ய, திருவாழியை இவன்கையிலேகொடுத்து பலத்தை கூயிப்பிக்க, பின்பு திருவடி ஸ்தோத்ரம்பண்ண, க்ருபைபண்ணித் திருவடிகையிலே † அடைக்கலமாகக் காட்டிக்கொடுத்து ரகூஷித்தானென்கிற உபாக்யாநத்தை யநுஸந்தித்தருளிச் செய்கிறார்.

(அடுத்தவித்யாதி) அடுத்த-ஸஹஜசத்ரு. (கடும்பகைஞன்) திருவடியோடு விரோதங்கொண்டால் பிழைக்கப்போகாதென்கை. (ஆற்றேனென்றொடி) "பாழி" என்று - படுக்கைக்குப்பேர். (சூழ்ந்த) சுற்றின.(விடத்தரவை)சரண்யனுக்கு க்ருபாவிஷயமென்கிறது. (வல்லாளன்கைகொடுத்த) ப்ரஸ்துதனைபோது அவனைப் பொறுக்கமாட்டேனென்றதே ரகூஷிக்கவல்லனனவன் கையிலே காட்டிக்கொடுத்த. (மாமேனி) காட்டிக்கொடுத்தபின்பு வடிவிற்பிறந்த பௌஷ்கல்யம். (மாயவனுக்கித்யாதி) எல்லாவவஸ்தையிலும் விட்டுக்கொடாத ஆச்சர்யபூதனுக்கொழிய வேறொருவருக்காளாவரோ.

அவ.—"நகூஷாதி - நகூஷாமி" என்னும் தப்புக்குப் போக்கடி காணவல்லனென்கிறார்.

(வல்லாளன்) நலியநினைக்கில் அத்தைவெல்லவல்லாருமில்லை; ரகூஷிக்கநினைக்கில் அத்தைத் தடுக்கவல்லாருமில்லை. (அல்லாதுமாவரோ ஆள்)ஆஸ்ரிதவிரோதியென்று கைவிடவேண்டும் விஷயத்தையும் பொருத்திவிட வல்லவனையொழிய. கடித்தவாயாலே தீர்க்கை. $ "வத்ஸ்யதி - வத்யதாம்" என்ற வரையே. "கூஷாஹிஷ்ட-யோஹவத-ட-அஸ்மாபிஸ்துல் யோபவது" என்னப்பண்ணுகை.

(அடுத்த) ஸஹஜசத்ருவினுடையஸத்தையுண்டாகில் பகையாயேயிருக்கும். (கடும்பகை) பேர்சொல்ல முடியும்படி கொடிதாகை

---

* சிவிகையார் - பல்லக்குத் தூக்குகிற ஓர் நீசஜாதி.

† அடைக்கலமாக - புகலிடமாக.

$ வத்யதாம் என்ற அரும்பதத்துக்கு பாடமில்லை.

யும். (பெரும்பாழி) இந்த்ராதுஜன்படிக்கை. திருப்பாற்கடலாகவு மாம். (அ0)

அரு.—எண்பதாம்பாட்டு.—விடத்தரவை - விஷத்தையுடைய தென்கையாலே க்ருபாவிஷயம் தோஷயுத்தமென்றபடி. வல்லாளன் - ஜ்ஞாநாதிக்யத்தால் வந்தமிடுக்கு.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (நகூஷாதி - நகூஷமாமி இத்யாதி)-என்றவரையே. "வய்யுதாழ் - வத்யதாம்" என்றவரையே.

ஆளமர்வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர்வேண்டி வரைநட்டு - நீளரவைச்
சுற்றிக்கடைந்தான் பெயரன்றே, தொல்நரகைப்
பற்றிக்கடத்தும் படை. (அக)

ப.உ.—ஆள் - ஜனங்களால், அமர் - பொருந்தின, வென்றி - ஜயத்தையுடைய, அடுகளத்துள் - யுத்தஸ்தாநத்தில், அஞ்ஞான்று - அக்காலத்தில், வாள் - ஒளியையுடைய, அமர் - யுத்தத்தை, வேண்டு - அபேக்ஷித்து, வரை - (மந்தரமென்கிற) மலையை, நட்டு - நாட்டு, நீள் - நீண்ட, அரவை - (வாஸுகியாகிற) ஸர்ப்பத்தை, சுற்றி - சுழற்றி, கடைந்தான் - மதித்தவனுடைய, பெயரன்றே - திருநாமமன்றே, தொல் - அநாதியான, நரகை - நரகத்தை, பற்றி - பிடித்து இழுக்கொண்டுபோய், கடத்தும் - தாண்டிவைக்கும், படை-ஸாதநம்.

வ்யா.—அவ.—எண்பத்தோராம் பாட்டு.—(ஆளமர்) ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ருதம் கொடுத்து அவர்களைச் சாவாமல் காத்தவனுடைய பேரன்றோ அநாதியான நரகத்தினின்றும் கைப்பிடித்தேறவிடும் பரிகரமென்கிறார்.

(ஆளமரித்யாதி) அமர்ந்து - நிறைந்து. ஆள்நிறைந்து வென்றியையுடைத்தாய் முடிப்பதானயுத்தஸ்தலத்திலே. (வாளமர்வேண்டி) இப்புடைத்தான பூசலைவேண்டி மந்தரத்தைநட்டு (அஞ்ஞான்று) அஸுரர் தேவர்களைமுறித்து வாயிலிட்டுச் செல்லுகிறவன் ம. (வாளித்பாதி) தேவர்களுக்கு மதிப்பும் ஆயுஸ்ஸு முண்டாகும்படி. (நீளரவை) சேதநத்தை. (பற்றிக்கடத்தும்படை) அள்ளியெடுத்துக்

கொடுபோய் பரமபதத்திலே வைக்கும். (பற்றி) "அல்லேன்" என்று ஓம்விடாது. (அக)

அரு.—எண்பத்தோராம்பாட்டு.—"வாள்" என்று ஒளியாய், அத்தால்யதிப்பை யுடைத்தாகை. தேவர்களுக்குவெற்றியையுடைய பூசலென்றபடி. அமர்-பூசலாதல், ஆயுஸ்ஸாதல். படை-ஸாதநம். (அக)

படையாரும் வாள்கண்ணூர் பாரசிநாள், பைம்பூந்
தொடையலோ டேந்திய தூபம்- இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. (அஉ)

ப-உ.—படை - (வேலென்கிற) ஆயுதத்தோடு, ஆரும் - ஸமாநமான, வாள் - ஒளியையுடைய, கண்ணூர் - நேத்ரங்களையுடையபெண்கள், பாரசிநாள் - த்வாதசியன்றைக்கு, பை - அழகிய, பூ-புஷ்பங்களுடைய, தொடையலோடு - மாலைகளோடுகூட, ஏந்திய - தரித்த, தூபம் - புகையானது, இடையிடையில் - நடுநடுவே, மீன் - நக்ஷத்ரங்களோடுகூடின ஆகாசம், மாய - மறையும்படி, மாசூணும் - அழுக்கடையும்படி பண்ணுகிற்கும், வேங்கடமே - திருமலையே, மேலொருநாள் - முன்பொருகாலத்தில், மான் - மான் என்னும் ம்ருகம், மாய-மடியும்படி, எய்தான் - அடித்தவனுடைய, மலை - பர்வதம். (அஉ)

வ்யா.—எண்பத்திரண்டாம்பாடு.—(படையித்யாதி) வாள்போன்ற ஒளியையுடைத்தான கண்களையுடையரான ஸ்த்ரீகள். (பாரசிநாள்) த்வாதசிநாள். (பைம்பூமித்யாதி) அழகிய காகத்தோடுத்த மாலையோடே யேந்தினதூபம். (இடையிடையிலித்யாதி) பூக்களோடேகூடின புகையானது, ஆகாசத்திலே கலக்கத்தோற்றின நக்ஷத்ரங்களை மாசூணப்பண்ணுகின்றது. (மேலொருநாளித்யாதி) பண்டொருநாள் ராக்ஷஸன் மாயாம்ருகமாய்வர, "இத்தைப் பிடித்துத் தரவேணும்" என்று பிராட்டியருளிச்செய்தது மறுக்கமாட்டாமே அத்தை முடித்தவனுடையமலை.

அவ.—இப்பாட்டாலே ஸர்வஸமாஶ்ரயணீயத்வமும் ஆஶ்ரித பாரதந்த்ர்யமும் சொல்லுகிறது.

(வாள்கண்ணுர்) தங்களைச் சிலர் ஆஸ்ரயிக்க விருக்குமவர்கள். (மீன்மாய) ஆகாசத் தோற்றுதபடி பூக்களும் புகையுமாகத் தோற்று கை. (மானிதியாதி) பிராட்டிக்கு நியாம்யனுனற்போலே நியாம்யனு ய்ப்புக்கு, தன்ன ர்த்தமென்று மீளாது கார்யஞ்செய்யுமவன்.(அ உ)

அரு.—எண்பதிரண்டாம்பாட்டு.—பார் - பூமி. அரிநாள் என் கையாலே (த்வாதசிநாள்) என்கிறது. (அ உ)

வரைருடை தோள்காம்பாக ஆநிரைகாத்து, ஆயர்
நிரைவிடையேழ் செற்றவாறென்னே - உரவுடைய
நேராழியுட்கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்டபிரான். (அங)

ப-உ.—உரவுடைய-பலத்தையுடைய, நீர் - ஜலத்தையுடைய, ஆழியுள் - ஸமுத்ரத்துக்குள், கிடந்து - பள்ளிகொண்டு, நேரா - எதிரிட்ட,நிசாசரர்மேல்-அஸுரர்களான மது கைடபர்கள்மேலே, பேர் - பெரிய, ஆழி - சக்ரத்தை, கொண்டான் - எடுத்த, பிரான் - உபகாரகனே! வரை - மலை, குடையாக - சத்ரமாகவும், தோள் - புஜம், காம்பாக - ஆதாரதண்டமாகவும் (செய்து), ஆநிரை - பசுக் கூட்டங்களை, காத்து-ரக்ஷித்து, ஆயர் - இடையரை (முன்னிட்ட), நிரை - திரண்ட, விடையேழ் - ஏழுஎருதுகளையும், செற்றவாறு - அழித்தப்ரகாரம், என்னே - எங்ஙனே. (அங)

வ்யா.—எண்பத்துமூன்றும்பாட்டு.—(வரையித்யாதி) மலை குடை யாகவும், தோள்காம்பாகவும், பசுக்களைக்காக்க. (ஆயரித்யாதி) நப் பின்னைப்பிராட்டிக்கு ப்ரதிபந்தகமான ஏழுவ்ருஷபத்தையும் முடித்த படி எங்ஙனே. (உரவுடைய நித்யாதி) "உரவு" என்று மிடுக்குக்குப் பேர். ஸர்ப்பமென்றுமாம். திருப்பாற்கடலிலே கிடந்து. (நேராவித் யாதி) எதிரான மதுகைடபர் மேலே திருவாழியை வாங்கின உபகா ரகன். இத்தால் ஆஸ்ரிதர்க்கு விரோதம் வந்தபோது தன்னுடம்பு நோவக்கார்யம் செய்யுமென்றபடி.

ஒருசெயலேயோ. (வரையித்யாதி) வந்ததுக்குத் தக்கது கொ ண்டு கார்யஞ்செய்வதே. (உரவுடைய நீர்) * முதுநீர். (பேராழியித்

* முதுநீர் – வலிவையுடைய ஜலம்

யாதி) கையில் திருவாழியைக்கொண்டு இந்த்ரன் நோவாதபடி உன் தோள் நோவ ரக்ஷிப்பதே. (அசு)

அரு.—எண்பத்து மூன்றும்பாட்டு.—மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (ஒரு செயலேயோ வென்று). (அசு)

பிரானுன் பெருமை பிறராறறிவார்
உராயுலகளந்த நான்று - வராகத்
தெயிற்றளவு போதாவாறென்கொலோ, எந்தை
யடிக்களவு போந்தபடி (அச)

ப-உ.—பிரான் - உபகாரகனே ! உராய் - ஸ்ரமமின்றி, உலகு-பூமியை, அளந்தநான்று - ஆக்ரமித்த காலத்தில், எந்தை - என்ஸ்வாமியான உன்னுடைய, அடிக்கு - பாதத்துக்கு, அளவுபோந்த - ப்ரமாணமாய்ச் சரிப்பட்ட, படி - பூமியானது, வராகம் - ஏனமான உன்னுடைய, எயிற்றளவும் - கொம்புக்கும், போதாவாறு - பூர்ணமாகாதபடி, என்கொலோ - எங்ஙனே!. (ஆனபின்பு), உன் - உன்னுடைய, பெருமை - ஆதிக்யத்தை, பிறர் - வேறொருவர், ஆர் - எவர்-அறிவார் - தெரிந்துகொள்வர்கள். (அச)

வ்யா.—எண்பத்துநாலாம்பாட்டு.—(பிரானித்யாதி) உபகாரகனான வுன்னுடைய பெருமையை வேறுசிலராலறியப்போமோ. (உராயித்யாதி) "உராய்" என்று, பட்டர் "அநாயாஸேந அளந்தவன்று" என்றருளிச்செய்தார். உலாவியென்றுமாம். பூமியிலே பொருந்த விட்டென்னிலுமாம். (எந்தையடிக்களவு போந்தபடி வராகத்தெயிற்றளவு போதாவாறென்கொலோ) ஒருநாள் திருவடிக்குள்ளடங்கியது திருவெயிற்றுக்குப் போந்ததில்லையென்கிறது. ரக்ஷ்யத்தினளவன்று ரக்ஷகன் பாரிப்பு. நானொருவனுமே உன் குணங்களிலே குமிழ் நீருண்ணுகின்றேன். (அச)

அரு.—எண்பத்துநாலாம்பாட்டு.—உராய் - அநாயாஸமாதல்; உரோசியென்றும் - பூமியிலே பொருந்த விட்டென்னுதல். "என்கொலோ - பிறராறறிவார்" என்கையாலே (நானொருவனுமேயென்கிறது). (அச)

படிகண்டறிதியே பாம்பணையினன், புள்
கொடிகண்டறிதியே கூறாய் - வடிவில்
பொறியைந்து மூள்ளடக்கிப் போதொடு நீ ரேந்தி
நெறிநின்ற நெஞ்சமே நீ. (அரு)

ப-உ.—நெஞ்சமே - மநஸ்ஸே ! பொறியைந்தும் - இந்திரியங்களைந்தையும், வடிவில் - சரீரத்தினுடைய, உள் - உள்ளே, அடக்கி-நியமித்து, போதொடு - புஷ்பங்களோடுகூடி, நீர் - ஜலத்தை, ஏந்தி-தரித்து, நெறி - வழியில், நின்ற - ஸ்திரமான, நீ - நீ, பாம்பணை யினன்-திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனுடைய, புள்-பக்ஷியாகிற, கொடி - த்வஜத்தை, கண்டு - பார்த்து, அறிதியே - அநுபவித்தாயோ ? படி - திருமேனியை, கண்டறிதியே - பார்த்தநு பவித்தாயோ ? (இல்லையே என்று கருத்து). (அரு)

வ்யா—அவ.—எண்பத்தைந்தாம்பாட்டு.—"பிறராரறிவார்" * என் பாரைத்தம்முடைய திருவுள்ளம் நானறிந்திருக்க வென்ன; நீயும் இந் திரிய ஜயம்பண்ணி ஆஸ்ரயணத்திலே யிழிந்தாயல்லது ஸாக்ஷாத் கரித்தாயோ வென்கிறார்.

(படியித்யாதி) திருமேனி கண்டறிதியோ. (பாம்பணையித்யாதி) அவனுடைய படுக்கைகண்டறிதியோ. (கூறாய்) சொல்லாய். (வடிவி லித்யாதி) சரீரத்தில் இந்திரியங்களைந்தையு மடக்கி. வடிவில்லாத இந்திரியங்களை யடக்கி யென்றுமாம். "கண்டவாதிரிந்த தொண்ட னேன்" என்னுமாப்போலே என்னவுமாம். (போதொடித்யாதி) புஷ் பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆஸ்ரயணத்திலே யிழிந்தாயித்தனை யிறே நீ.

நாம்றியா திருக்கப்பெற்றபடி யென்னென்ன; திருவுள்ளத்தைக் குறித்து, (வடிவில் பொறியைந்து முள்ளடக்கி) வடிவிலே-உடம்பிலே யடக்கி. வடிவில்லாதபடி ஒருபடிப் பட்டிராதென்றுமாம். (அரு)

அரு.—எண்பத்தைந்தாம்பாட்டு.—புட் கொடிகண்டறிதியே - கண்டாயோ ? இல்லையேயென்றபடி. வடிவு-ஸ்வபாவமாய் அத்தால்

(பா) * என்றவாறே.

ஒரு படிப்பட்டிராலம. இத்தையருளிச்செய்கிறார், (கண்டவாதிரிக்தவித்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (நாமறியாதிருக்கப்பெற்றபடி யித்யாதி). (அடு)

நீயும் திருமகளும் நின்றுயால், குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா - வாசல்
கடைகழியா வுட் புகா காமர்பூங்கோவல்
இடைகழியே பற்றியினி. (அசு)

ப-உ.—பாயும் - மேலேவிழுகிற, பனி - மழையை, குன்றெடுத்து - மலையைத்தூக்கி, மறைத்த - தடுத்த, பண்பாளா - ஸௌலப்ய குணமுடையவனே! வாசற்கடை - வீட்டுக்கு வெளிப்பிரதேசத்தில், கழியா - போகாமலும், உள்புகா - உள்ளேபோகாமலும், காமர் - அலங்காரமான, பூ - அழகிய, கோவல் - திருக்கோவலூருடைய, இடைகழி - மத்யப்ரதேசத்தை, பற்றி - அவலம்பித்து, நீயும் - நீயும், திருமகளும் - பிராட்டியுமாக, இனி - இப்போது, நின்றுய் - இருந்தாயே! ஆல் - ஆச்சர்யம். (அசு)

வ்யா.—அவ.—எண்பத்தாறும்பரட்டி.—(நீயும்) இவர், தம்முடைய நிருவுள்ளத்தைக் குறித்து, "ஸாக்ஷாத்கரித்திலையிறே" என்னைத் தரியானிறே அவன்.

(நீயுமித்யாதி) "தாமரையாளாகிலும் நிகரைக்குமேல் என்னடியாரது செய்யார்" என்ற நீயும், உன்னுடைய பரிகரம் நலியப்புக, "நகஸ்ரீர்நாவரூயதி - நசச்சிந்தாபராத்யதி" என்ற அவளுமாய் நின்றுயால். (குன்றித்யாதி) உடம்பிலேவிழப்புக்க மழையை மலையெடுத்துப் பரிஹரித்த நீர்மைபோலே யிருந்தது இப்போது நெருக்கு. அபேக்ஷிதமாக நெருக்கினபடி. (வாசலித்யாதி) இடைகழிக்கு உள்ளும் புறமும் காட்டுச்சீறுபோலே யிராநின்றது காமுகரானவர்கள் உகந்த விஷயத்திலுடைய கண் வட்டம் விட்டுப்போகமாட்டாதாப்போலே. (இனி) இப்போது. இனி திருக்கோவலூ

நிலே நிற்கிறது கர்மபலானுபவத்துக் கன்றிறே. ஸம்ஸாரிகளே நரகத்தில் புகாமல் காக்கவிறே.

(நீயுமிக்யாதி). ஆஸ்ரிதரக்ஷணத்தில் முற்பாடனை நீயும் "ஸர்வதர்மான்பரித்யஜ்ய - அக்ரதஸ்தேகமிஷ்யாமி" என்று உனக்கு மூற்படும் பிராட்டியும். (பண்பாளா) அன்று அங்ஙனே உதவினாய். (கடைகழியாவுள் புக) அங்கு அவர்களாபத்துத்தீர்த்தான்; இங்கு தன்னுபத்து தீர்த்தபடி. புறம்பு காடடுத்தியோ டொக்கும். (அஈ)

அரு.—எண்பத்தாறும்பாட்டு.—இன்ட கழிக்குப் புறம்பு ஸம்ஸாரிகளும், உள்ளே உபாஸகனை ருஷியுமாகையாலே, அநந்யப்ரயோஜநரான ஆழ்வார்கள் பற்றியிருக்கிற இடைகழியைப் பற்றிநின்ற ரென்றபடி. "இனி" என்று மேலில் பாட்டைப்பற்றவருளிச்செய்கிறார் (திருக்கோவலூரித்யாதி) இன்று இங்ஙனே உதவினாய். (அஈ)

இனியார் புகுவா ரெழுநரகவாசல்
முனியாது மூரித்தாள் கோமின் - கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலம் சூழ் நாடு. (அள)

ப-உ.—கனி - (விளவின்) பழம், சாய - விழும்படி, கன்று - வத்ஸத்தை, எறிந்த - வீசிப்பராக்கட்ட, தோளான்-புஜங்களையுடைய வனுடைய, கனை - (ஆபரண) த்வனியையுடைய, கழல் - திருவடிகளை, காண்பதற்கு - ஸாக்ஷாத்கரிக்கைக்கு, நாவல் - நாவல்மரத்தின் சாயையிலிருக்கிற, சூழ் - விசாலமான, நாடு - தேசம் (ஜம்பூத்வீபம்), நன்று - செவ்வையாய், அறிந்தது - (உபாயத்தை) தெரிந்து கொண்டது; (ஆனபின்பு), எழு - ஏழுவிதமான, நரகம் - நரகத்தினுடைய, வாசல் - த்வாரங்களில், இனி - இதுக்குமேல், புகுவார் - நுழைவர்கள், யார் - எவர்; முனியாது - கோபித்துக்கொள்ளாமல், மூரி - த்ருடமான, தாள் - பூட்டை, கோமின்-பூட்டுங்கோள். (அள)

வ்யா.—எண்பத்தேழாம்பாட்டு.—(இனியித்யாதி) "எழுநரகவாசல்" என்கிறது-கிளர்த்தியையுடைத்தான நரகமென்னவுமாம்; ஏழுவகை நரகமென்னவுமாம். (முனியாது) யமபடருடைய கோபத்து

க்கு இனி பலமில்லையென்கிறது. (மூரித்தாள் சோமின்) இனிப்புகு வாரில்லை; மிகக்குடையதாளைக் கேவுங்கோள்.(கனிசாய வித்யாதி) "கனைகழல்" என்றது இலக்கைக்குறித்து கடக்கிறபோது திருவடிகளினுபாணத்வநிலையை ஜம்பூத்வீபமானது நன்றுகவறிந்தது நன்றுகவறிகை - ஸம்ஸாரத்தினின்றும் போகோமென்றிருக்கை. உகந்தருளின தேசமிங்குண்டாயிற்றே யென்று அஸூயைபண்ணுதே பொறுத்திருக்கை.

(இனியித்யாதி) எங்கள் பதத்துக்கு அழிவுசொல்லுவதே என்று பொடியாதே. (கனைகழல்) ஆபரணவொலி. (நாவலம்) ஜம்பூத்வீபம். "வனகாம்யரணி சாஸ்திதெள - ஏகாந்தரணிமாஸ்ரிதெள" ஒரு பயக்கையிலே யிருப்பார்க்கு பயமுண்டோ. (அஎ)

அரு.—எண்பத்தேழாம்பாட்டு. — கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (உகந்தருளின தேசமித்யாதி). "அஸூயை" என்றது - பகவத்த்விட்டுக்களாகையாலே திவ்யதேசத்தை விட்டு தேசாந்தரத்தேபோதல்; அங்கொரு அதிசயங்கண்டால் ப்ராணத்யாகம் பண்ணுதல். பொடியாதே - ஆழ்வாரைப்பொடியாதே. திவ்யதேசமுள்ள நாட்டிலிருப்பு மாத்ரம் போருமோவென்ன ; அருளிச்செய்கிறார் (வனகாம்யரணிஷு - ஏகாந்தரணிம்; இத்யாதி). (அஎ)

நாடிலும் நின்னடியே நாடுவன், நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் - சூடிலும்
பொன்னழி யேந்தினன் பொன்னடியே சூடுவேற்கு
என்னுகி லென்னே யெனக்கு. (அஅ)

ப-உ.—நாடிலும் - விரும்பினாலும், நின் - உன்னுடைய, அடியே - பாதத்தையே, நாடுவன் - விரும்புவன்; நாடோறும் - ப்ரதிதினமும், பாடிலும் - ஸ்தோத்ரம்பண்ணினாலும், நின்புகழே - உன்னுடைய கீர்த்தியையே, பாடுவன் - துதிப்பன்; சூடிலும் - சிரஸ்ஸிலணிந்தாலும், பொன் - அழகிய, ஆழி - சக்ரத்தை, ஏந்தினன் - தரித்தவனுடைய, பொன் - அழகிய, அடியே - பாதங்களையே, சூடுவேற்கு - தலையில தரிக்கப்பட்டவனை, எனக்கு - எனக்கு, என்னுகில் - எப்படியானால், என் - என்ன. (அஅ)

வ்யா.—எண்பத்தெட்டாம்பாட்டு.—(நாடிலுமித்யாதி) நினைக்கிலும் உன் திருவடியையே நினைப்பன். எப்போதும் பாடிலும் உன்னுடைய புகழையே பாடுவன். (சூடிலுமித்யாதி) ஒன்றைச் சூடிலும் திருவாழியேந்தின உன்னுடைய விலக்ஷணமான திருவடிச்சோச் சூடாநின்ற வெகைக்கு பரமபதத்திலே போனாலும் வாங்மனஃகாயங்கள் அங்கே ப்ரவணமாகையாகச் செய்வது; அது இங்கே பெற்றேனாகில் எனக்கு இங்கே யிருக்கை நல்லதென்கிறார். அவன் படிக்கு ஸம்ஸாரிகள் படிபைப்பார்த்தால் யமனுக்கு அவகாசமுண்டாயிருந்தது. "தேநஹேதீஹவ தூ - தேநமைத்ரீபவது" என்றும் "யஹ்வா-யதிவா" என்றும் சொல்லத் தலையறுப்புண்டிலனே. (பொன்னடியே) இதுவே ப்ரயோஜநமாக வாக்காயங்களை யொழிய நினைக்கிலும். (என்னுகிலென்னே யெனக்கு) நாட்டார் நரகம்புகிலென் சவிரிலென். ஆராணுழ. (அஅ)

அரு.—எண்பத்தெட்டாம்பாட்டு.— "சூடுவேற்கு" என்றது மாநஸமாகச்சூடுகையைச்சொல்லி, இப்படி மாநஸமாகச்சூடுவார்க்கு என்று பரகதமாக்குகிறார் (அவன்படிக்கித்யாதி). இப்படி நினைத்தமட்டிலே அவனைப்பெறலாயிருக்க அதுவும் செய்யாமையாலேயமனுக்கு அவகாச முண்டென்றபடி.

இப்படி அல்பாநுகூல்யத்திலே அவன் கார்யம் செய்யலாயிருக்க இழந்த பேருண்மோ வென்ன ; அருளிச்செய்கிறார் (தேநஹேதீ-தேநமைத்ரீ இத்யாதி). சூடுகை - மாநஸப்பற்றுக்கு யருளிச்செய்கிறார் (வாக்காயங்களை யித்யாதி). (எனக்கு-என்னுகிலென்) இப்படி அல்பாநுகூல்யத்திலே பெறலாயிருக்க இத்தை இழக்கிறஸம்ஸாரிகள் படி எனக்கு ஏதானுல் தாவிலே. அத்தை யாராயக்கார்யமில்லை என்றபடி. ஆராணுழ - இப்படி ஆர்தான் பிறருக்குத் துக்கப்படுவாரென்றபடி. (அஅ)

எனக்காவா ராரொருவரே, எம்பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால் - புனக்காயாம்
பூமேனிகாணப் பொதியவிழும் பூவைப்பூ
மாமேனி காட்டும் வரம். (அகூ)

ப-உ.—எனக்கு - எனக்கு, ஆவார் - ஒப்பாவார், ஆரொருவரே - ஒருவராகிலும் ஆருண்டு; எம்பெருமான் - ஸர்வேஸ்வரன், தா

னே - ஸ்வயமே, தனக்கு - தனக்கு, ஆவானல்லால் - ஒப்பாமல்லது, மற்று - எனக்கொப்பாவனே ? புனம் - தன்னிலத்திலிருக்கிற, காயாம்பூ - காயாம்பூவினுடைய, மேனி - நிறமும், காண - பார்க்கப் பார்க்க, பொதியவிழும் - மலரும், பூவைப்பூ - பூவைப்பூவினுடைய, மேனி - நிறமும், மா - ஸ்லாக்யமான, மேனி-விக்ரஹத்தை, வரம்-நன்முக, காட்டும் - தர்சிப்பிக்கும். (அகூ)

வ்யா.—எண்பத்தொன்பதாம்பாட்டு.—(எனக்கித்யாதி) என்னே டொப்பா ரொருவருமில்லையிறே என்னவுமாம். எனக்காவா ரெவரென்னவுமாம். என்னேடொப்பா ரொருவருமில்லை யென்று நீர்சொல்லுவானென்; பரமசேதநனுண்டே யென்னில்; (எம்பெருமானித்யாதி) என்னேடொத்தா ரில்லையென்றே னித்தனையல்லது, எம்பெருமானுடைய உயர்த்தியில்லை யென்றேனே. நீர்என்னேடொப்பா ரில்லையென்று சொல்லிற்று எத்காலே யென்னில்; அவனேடு ஸத்ருசமான பதார்த்தங்கள் வர்த்திக்கிற தேசத்திலே நின்றேன்; ஓரடியன்றே குறைய நின்றது. அவன் என்று ஸாக்ஷாத் கரிக்கு மத்தனையன்றே வேண்டுவது. (புனக்காயம் பூமேனி) புனத்திலே நிற்கிற காயாம்பூமேனியை. (காணப்பொதிய விழும்பூவைப்பூ) காணக்காண அலராநின்ற பூவைப்பூ. இவையிரண்டு மவனுடைய வாமனமாமேனியைக் காட்டா நின்றது. காட்டார்க்கு கினைக்கையிலுள்ள வருத்தம் போரும் எனக்கு மறக்க. நானுமொருவனே. வரமாக - தன்னிலும் விசதமாகவென்றுமாம். (அகூ)

அரு.—எண்பத்தொன்பதாம்பாட்டு.—எனக்குஹிதபரர் எவர், ஸ்வஹிதையொழிய வொருவருமிலை யென்று இரண்டாபர்த்தம்; ஸத்ருச பதார்த்தம் - காயாம்பூ முதலானவை. அவற்றைக்கண்டு தரிக்கலாயிருக்கையாலே என்னேடொப்பாரிலை யென்றபடி. அவற்றைக்கண்டு தரிக்கப் போமோ, அவனைக்காணவேண்டாவோ வென்ன ; அருளிச்செய்கிறார், (ஓரடியன்றேகுறித்யாதி). குறை - ப்ரத்யக்ஷமாக அவனைக்காணுமை. ஆனால் வேணதுதென்ன ; அருளிச்செய்கிறார் (அவனென்றித்யாதி). ஸத்ருச பதார்த்தங்களை அவனாகக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்கு மத்தனையென்றபடி. (பொதியவிழும்) கண்டொதிய - கண்காணவென்றபடி. பூக்கள் காட்டுகையாலேமறக்கவுமாம். (அகூ)

வரத்தால் வலிநினைந்து மாதவநின் பாதம்
சிரத்தால் வணங்காஞ மென்றே - உரத்திஞல்
ஈரியாய் நேர்வலியோ ஞய விரணியனே
ஓரியாய் நீயிடந்த தூன். (கூ0)

ப-உ.—மாதவ - ஸ்ரீயஃபதியானவனே ! ஈர் - பிளக்கப்பட்ட, அரியாய் - சத்ருவாய், நேர் - எதிரில் (நிற்கவல்ல), வலியோஞய - பலவானான, இரணியனே - ஹிரண்யகசிபுவை, ஓர் - ஒப்பற்ற, அரியாய் - ஸிம்ஹமாய், உரத்திஞல் - பலத்தாலே, ஊன் - கொழுத்த (உடம்பை), நீ - நீ, இடந்தது - கிழித்தது, வரத்தால் - (தேவர்களுடைய) ஆசீர்வாதத்தால் (வந்த), வலி - பலத்தை, நினைந்து - எண்ணி, நின் - உன்னுடைய, பாதம் - திருவடிகளை, சிரத்தால் - தலையால், வணங்காஞம் - தொழாதேயிருந்தான், என்றே - என்றே!. ()

வ்யா.—அவ.—தொண்ணூற்றும்பாட்டு.—(வரத்தால்)நரஸிம்ஹரூபியான ஈச்வரனுடைய ஆச்ரித விரோதி நிரஸந சீலத்தையும் வாத்ஸல்யத்தையுமநுஸந்திக்கிறார்.

(வரத்தால்வலி நினைந்து) வரத்தாலே தனக்கு மிடுக்குண்டாக நினைத்தானல்லது வரங்கொடுத்தவர்கள் சக்தி பகவததீந மென்றறிந்திலன். (மாதவ) வரங்கொடுத்தவர்களாலும் வணங்கப்படுமவன். (நின்பாதமித்யாதி) அவனிழவுக்கு வெறுக்கிறார். (உரத்திஞலீரியாய்) மிடுக்காலே ஈரப்படும் அரியானவன் - சத்ருவானவன். பெரிய சத்ருவென்றுமாம். (நேர்வலியோன்) நேரே வலியான ஹிரண்யனே. (ஓரியாய்) நாட்டில் நடையாடும் ஸிம்ஹமன்று. தன்னுடைய இச்சையாலே பிறந்த ஸிம்ஹமென்றுமாம். ஓரப்படும் அரியாய் - எல்லாரும் த்யாநம்பண்ணும் ஸிம்ஹமென்றுமாம்.

(வரத்தால்) தேவர்கள் வரத்தை மிடுக்காக நினைத்தான். வணங்குவித்துக்கொள்ளும் விஷயமிருக்கும்படி. (வணங்காஞமென்றே) பிள்ளை பக்கல் பரிவு தப்பச் செய்தோம். என்ஞமென்றுமாம். உன் வஸ்து அழியாமைக்கென்றுமாம். (ஈரரி) பெரிய சத்ரு. (ஓரரி) ஸிம்ஹங்களில் ஒப்புப்பிடிக்க வொண்ணாது. (கூ0)

அரு.—தொண்ணூற்றும்பாட்டு.—"ஓர்" என்று - விசாரமாய் (இச்சையாலே யென்றது). பரிவு தப்பச் செய்தோம்-பரிவு தப்பும் படி தண்டித்தோமே யென்னுமதுதாபமில்லாதவனென்னுதல்; வணங்காமையாலே தன் வஸ்துவான ஹிரண்யனுக்கு ஸ்வரூபநாசம் வாராமைக் கென்னுதல். விரோதியான சரீரத்தைப் போக்கினனென்றபடி. (கூ0)

ஊனக் குரம்பையி லுள்புக் கிருள் நீக்கி
ஞானச் சுடர்கொளீஇ நாடோறும் - ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான். (கூக)

ப-உ.—ஊன - மாம்ஸமயமான, குரம்பையில் - சரீரமாகிற குடிசையில், உள்புக்கு - உள்ளேநுழைந்து, இருள் - அஞ்ஞானத்தை, நீக்கி - போக்கி, ஞானம் - ஞானமாகிற, சுடர் - விளக்கை, கொளீஇ - ஏற்றி, ஏனத்து - வராஹத்தினுடைய, உருவாய்-ரூபத்தையுடையனாய்க்கொண்டு, உலகு - ஜகத்தை, இடந்த - பிரித்தெடுத்த, ஊழியான் - ப்ரளயகாலத்தில் வர்த்திக்கிறவனுடைய, பாதம் - திருவடிகளை, நாடோறும்-திநந்தோறும், மருவாதார்க்கு - கிட்டாதவர்களுக்கு, வான்-பரமபதம், உண்டாமோ - கிடைக்குமோ ? (கூக)

வ்யா.—அவ.—தொண்ணூற்றேராம்பாட்டு.—(ஊனக் குரம்பை) பரமபதம் ஸ்வயத்நஸாத்யமன்று என்றவோபாதி இச்சையும் வேண்டாவோ வென்கிறது. ஹேயத்திலே ஹேயதாபுத்தியும், உபாதேயத்திலே உபாதேயதாபுத்தியும் வேண்டாவோ பேற்றுக்கு.

(ஊனமித்யாதி) சரீரங் கண்டதெல்லாம் பொல்லாதாயிருக்கச் செய்தே ஆபாதப்ரதீதியில் நன்றுபோலே யிருப்பதொன்றுண்டு; அந்தவிருள் சரீரத்தை அவகாஹிக்கப்போம். (ஞானச்சுடர்கொளீஇ) ஜ்ஞாநமாகிற விளக்கை ப்ரகாசிப்பித்து. இதினுடைய ஹேயதையும் அங்யதா ஜ்ஞாநமும் யதார்த்தஜ்ஞாநத்தாலேபோம். ஆக, யதார்த்த ஜ்ஞாந பூர்வகமாக பரஜ்ஞாநம் வேணும். (நாடோறுமித்யாதி) நோவுபட்டபோது உதவினவனுய் இவை யிவ்லாதவன்று தானுண்டாய் ரக்ஷிக்குமவனுடைய திருவடிகளில் ருசி யில்லாதார்க்கு மூண்டோ பரமபதம். (நாடோறும்) அவன் ஆபிமுக்யம் பண்ணுகிற

படியை அநுஸந்திக்க வைமுக்ய சங்கையுண்டோ? ஜீயர் திருவடிகளை ஆஸ்ரயித்திருப்பானொரு வைஷ்ணவன் வர, "நீபலநாள் வரத் தவிர்த்தாயே" என்றருளிச்செய்ய, "நீர் ஒருகாலருளிச்செய்தபடியைநினைத்திருக்கவமையாதோ" என்ன, "நம்பிக்கை நிலையிலே வர்த்திக்கிறதும்மாண்டு, "நாடோறு மேனத்துருவா யுலகிடந்த ஊழியான் பாதம்மருவாதார்க்குண்டாமோவான்" என்கிற விப்பாட்டுங் கெடுவாய்கேட்டறியாயோ" என்கிறார். ருசியில்லாதார்க்கும் ஸ்ரீவைகுண்டம் கிடைக்குமோ.

கீழிற்பாட்டு ருசியுடையவனுக்குதவினபடி. (ஊனக் கூம்பை) ஹேயமாய் அல்பமாய் அஸ்திரமாய் அகர்த்தமாய் அகவாய் தெரியாதபடி மேலே தோலை வைத்து மினுக்கி, ஆபாதப்ரதீதியில் நன்றென்று தோற்றும்படி யிருக்கிற விதத்தை உள்ளபடியே அநுஸந்தித்து அபுருஷார்த்தமென்றும், புருஷார்த்தவிரோதியென்றும் பேசிற்று. "பொய்ந் நின்ற" இத்யாதி. (ஞானச்சுடர்க்காளீ!) ப்ரகாரமானதன்னை யநுஸந்தித்து ப்ரகாரியான * காமரையாள் கேள்வனொருவனையே நோக்கி. (ஏனமித்யாதி) இத்தலைநினையாதபோதும் நினைத்திருந்து நோக்குமவன். விரோதியான இவ்வாகாரத்தை யன்றே துடைத்தது. "ஏனத்துருவாயிடந்த-ஞானப்பிரான்". (கூக)

அரு.—தொண்ணூற்றேராம்பாட்டு.—அவகாஹிக்கை - சரீரதோஷங்களை யறிகை - ஊழியான் - ஸம்ஹாரகாலத்திலும் தான் உளனெய்ரகூடிக்குமவன். நாடோறும் மருவவேணுமென்னு மதுக்கு ஸம்வாதமாக வருளிச்செய்கிறார் (ஜீயரித்யாதி). நாடோறும் மருவுகைக்குப் பண்ணின உபகார மேதென்ன; அருளிச்செய்கிறார் (இத்தலை யித்யாதி). விரோதியைப்போக்கி உபதேசித்த தெங்கே யென்ன; அருளிச்செய்கிறார் (ஏனத்துருவாயித்யாதி). (கூக)

வாணுகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்
தேணுகிப் பாலாம் திருமாலே - ஆணைச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு. (கூஉ)

ப-உ.—வாணுகி - ஆகாசரூபனாய், தீயாய் - அக்நிரூபனாய், மறி - அலையெறிகிற, கடலாய் - ஸமுத்ரரூபனாய், மாருதமாய் - வா

யுரூபனுய், (தான் இந்திந்தரூபங்களே எடுத்துக்கொண்டு ஜகத்தை நிர்வஹித்துப் போருகிறவனுய்), தேனுகி - தேன்போலே ஸர்வரஸ னுய், பாலாம் - பால்போலே போக்யனை, திருமாலே - ஸ்ரீயஃபதி யே! ஆன் - பசுமேய்க்கும் குலத்தில் பிறந்த, ஆய்ச்சி - இடைச்சியி னுடைய, வெண்ணெய் - உருக்காதநெய்யை, விழுங்க - அமுதுசெ ய்ய, முன்னெருநாள் - முன்பு ஒருகாலத்தில், மண்ணை - பூமியை, உமிழ்ந்த - வெளிப்படித்தின, வயிறு - திருவுதரம், நிறையுமே - பூர்ணமாகுமோ. (கூஉ)

வ்யா.—தொண்ணூற்றிரண்டாம் பாட்டு.—(வானுகி) அவ்வவ ஜாதிகளிலே அவதரித்து அதிலுள்ளாருடைய தாரகமே தனக்கு தாரகமாயிருக்கிறபடி. ஸ்ரீவராஹமானுனில் கோரைக்கிழங்கு தா ரகமாம்; இடையனுனில் வெண்ணெய் தாரகமாயிருக்கிறபடி. (வானித்யாதி) பஞ்சபூதங்களாலே ஒரு அண்டமாய் அண்டாந்தர்வ ர்த்திகளானபுருஷர்களுக்குநிர்வாஹகனுய். (தேனித்யாதி) "ஸவஃ ஸவஃ-ஸர்வரஸஃ" என்கிறபடியே பிராட்டியோடே கூட பரமபதத் திலே யிருக்கிறவனே! உபயவிபூதியுக்தனு யிருக்கிற இருப்புக்குச் சேருமோ ஓரிடைச்சி வெண்ணெயை விழுங்குகை.(முன்னித்யாதி) ப்ரளயங்கொள்ளாதபடி வயிற்றிலே வைத்து வெளிநாடுகாண்பப்புறம் பேயுமிழ்ந்து ரக்ஷித்தவயிறு. இத்தனே வெண்ணெயாலே நிறைக்க வேண்டியிருந்ததோ; பின்னே உன் வயிற்றை வண்ணுனுக்கிடமா ட்டாபோ வென்கிறார். ருசியுடையாரோடு ஸம்பந்தமுள்ள தொன் முலல்லது உபய விபூதியோகம் குறைபட்டிருக்கு மவனுடைய ருசி சொல்லுகிறது. (ஆனுய்ச்சி வெண்ணெய்)முடைநாறும் வெண் ணெய். (நிறையுமே) குறைக்குமிட்டு அடைக்கவேணும். ஸம்ஸாரிக களுக்குப்ரளயம்போலே இவனுக்கு வெண்ணெய் பெருவிடில்.(கூஉ)

அரு.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு.—வண்ணன் தாழியில் எப்போதும் கஞ்சி தோய்க்கிறதே ஸ்வபாவமாகையாலே, வயிற்றை வளர்க்கமாட்டாவிட்டால் வண்ணன் கையிலே கொடுத்தால் எப் போதும் கஞ்சி யுண்டென்று லோகவார்த்தை. வயிறு தாழிஸ்தாநம். "நிறையுமே" என்றதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ருசியு டையாரோடித்யாதி). (கூஉ)

வயிறழல வாளுருவி வந்தானை யஞ்ச
எயிறிலக வாய்மடுத்த தென்நீ - பொறியுகிரால்

பூவடிவை யீடழித்த பொன்னுழிக் கையா,நின்
சேவடிமே லீடழியச் செற்று. (கூஉ)

ப-உ.—பூ - புஷ்பத்தினுடைய,வடிவை-வண்ணத்தை, ஈடழித்த - திரஸ்கரித்த, பொன் - அழகிய, ஆழி - சக்ரத்தை, கையா - கையிலேந்தினவனே ! வயிறு - உதரம், அழல - எரியும்படி, வாள்-கத்தியை, உருவி - உருவிக்கொண்டு, வந்தானை - வந்தஹிரண்யனை, அஞ்ச - பயப்படும்படி, நின் - உன்னுடைய, சே - சிவந்த, அடி மேல் - பாதங்கள்மேலே (ஏறிட்டு), பொறி - நாகாவர்ணமான, உகிரால் - நகத்தினால், ஈடழிய - கட்டிக்குலையும்படி, செற்று - முடித்து, எயிறு - தந்தங்கள், இலக-ப்ரகாசிக்கும்படி, நீ - நீ, வாய்மடுத்தது - வாய்க்குள் வைத்துக்கொண்டது, என் - என்ன ஆச்சர்யம். (எதுக் காக). (கூஉ)

வ்யா.—அவ.—தொண்ணூற்றுமூன்றும்பாட்டு.—(வயிறித்யாதி)கீழ்ப்பாட்டிலே ஆஸ்ரிதவாத்ஸல்யம் சொல்லிற்று; இதில் ஆஸ்ரித வாத்ஸல்யகார்யமான அவர்கள் விரோதிகள் பக்கலுண்டான சீற்றஞ் சொல்லுகிறது.

(வயிறித்யாதி) வயிறழலுகிறதுஆர்க்கென்னில்; ஆழ்வாருக்கு; முன்பொருநாள் ஹிரண்யன் செய்ததாயிராதே தம்முடைய எதிரே வாளுமுருவிக்கொண்டு புறப்பட்டாற்போலே யிருந்தபடி. "என்று மெண்பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர் களே" என்கிறபடியே. (வந்தானை) தம்முடைய மேலே வந்தாற்போ லே யிருக்கிறபடி. (பூவடிவை யீடழித்தபொன்னுழிக்கையா) லௌ குமார்யத்தாலும் அழகாலும் பூவைக்கிழப்படுத்துவதான கையிலே திருவாழியையுடையவனே. (பொறியுகிரால்) பார்த்தபடியே யிருக்க வேண்டியிருக்கிற உகிராலே. (நின்சேவடிமே லீடழியச்செற்று) என் றும் நாங்கள் ஆசைப்பட்டுப்போகிற திருவடிகளிலே அவனேயேறி ட்டு இனிமுளையாதபடி முடித்து. (எயிறிலகவாய்மடுத்த தென்நீ) பிராட்டிமார்க்கும் ஸம்போகத்தில் திருமுத்து தோற்றாதபடி பண் ணும் ஸ்மிதம்வேண்டா,எயிறுதோற்றும்படிக்கீடாகப்பண்ணின ஹா ஸத்தைக்கண்டால் அதுவே அமையுமென்னும்படி யிருக்கிற வாயை மடுத்ததென்நீ. உனக்கும் சீற்றத்துக்கும் விஷயமுண்டோ? முடித்த பின்னும் சீற்றம்மாறாதொழிவதே! முடித்தால் சீற்றம்மாறுவது தன்

னளவுக்கு; "கூயிகிஂவிஸ்ஸாவதேஜ-த்வயிகிஞ்சித்ஸமாபந்நே" என்னும் விஷயங்களிலன்று. "கூயா ராதோகூஹாதேஜாஃ-அதராமோம ஹாதேஜாஃ" "கொடியவாய் விலங்கின்னுயிர்மலக்கக் கொண்ட சீற்றம்" என்று சரணாகதர்க்குத் தஞ்சமானதனமாவது ஆஸ்ரிதார்த்தமாக ஹிரண்யனேப்பற்றப் பண்ணும் சீற்றம்.

"எங்ஙனேயுய்வர்தாமவர் நினைந்தால்" என்று நரஸிம்ஹத்தைக்கண்ட அஸுராராக்ஷஸஜாதியாகப் படும்பாட்டை அவனேக்கண்டறுகூலர்படும்படி.

(வயிறழல)"கூஸ்ஸாநுஹந்தூம்நஸம்ஸயஃ ராகூஸோஜ்ஜி-அஸ்மாக்ஹந்தும்நஸம்சயஃ ராகூஸோப்யேதி" இத்யாதிவத். தனித்தனியே சொல்லில் ஒருவரல்லா வொருவர் பிழைக்கிலுமாம் என்று வேர்ப்பற்றிலே நலிய. (பொறியுகிரால்) போகத்துக்கு ஏகாந்தமான அழகையுடைய அறுகாழியென்னுதல்; திருவாழி பிடிச்சத்தகும் கையென்னுதல். (செற்றுவைத்து வாய்மடுத்ததென்கீ) ஸங்கல்பம் தவிர்ந்து திருவாழி தவிர்ந்து திருவுகிராலே பிளந்து பிணத்தின் முகத்திலே நாமடிக்கொள்வதே. (கூக)

அரு.—தொண்ணூற்று மூன்றும்பாட்டு.—இப்படி பீதராய் மங்களாசாஸநம் பண்ணின பேருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (என்றுமென் பிள்ளாக்கித்யாதி) முடிந்தபின்னும் சீற்றம் மாறுமைக்குஹேதுவை யருளிச்செய்கிறார் (முடித்தாலித்யாதி). ஆஸ்ரிதவிரோதமாகக் கொண்ட சீற்றம் அதிகமென்னு மதுக்குப்ரமாணமருளிச்செய்கிறார். (கூயராஃ - அதராமஃ - இத்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (எங்ஙனேயுய்வரித்யாதி). "கூஸ்ஸாநுஹந்தூம் - அஸ்மாக்ஹந்தும்" என்ற பஹுவசநத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனித்தனியே யித்யாதி). (கூக)

செற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த வேழுலகும்
மற்றிவையா வென்று வாயங்காந்து – முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனே யல்லால்
இறையேனு மேத்தாதென் நா. (கூச)

ப-உ.—எழுந்து - கிளர்ந்து, தீவிழித்து - நெருப்புவிழும்படி பார்த்து, சென்ற - (தன்னிடத்தில்) சேர்ந்த, இந்தவேழுலகும் - இந்த ஏழுலோகத்தையும், செற்று - அழித்து, மற்று - அதுக்கு மேலே, இவையாவென்று - (அழிந்தவை) இதுகளென்று, வாய் - திருப்பவளத்தை, அங்காந்து - திறந்து, மூற்றும் - ஸகலத்தையும், மறையவற்கு - வைதிகரான மார்க்கண்டேயருக்கு, காட்டிய - தர்சிப்பித்த, மாயவனையல்லால் - ஆச்சர்ய சக்தியுடையவனையல்லது, இறையேனும் - கொஞ்சமும், என்னா - என்னுடைய, நாக்கு, ஏத்தாது - துதியாது. (கூச)

வ்யா.—அவ.—தொண்ணூற்று நாலாம் பாட்டு.—(செற்றெழுந்து) இப்பாட்டு கீழ்ப்பாட்டில் வ்ருத்தாந்தமாகவுமாம்; இந்த வைஶ்வரூப்யம் துர்யோதநஸபையிலே காட்டினதாகவுமாம்; மார்க்கண்டேயபகவானுக்கு இதை-உதரத்தின் வயிற்றிலே யிருந்தபடியைக்காட்டிற்றாகவுமாம். "தஜ்ஜவஸ்ய ஹிமவதஸ்ய தஸ்ய கூடஸ்ய ஹாடகநிஷ-தத பச்யமஹம் ஸர்வம் தஸ்யகுக்ஷௌ மஹாத்மந:" என்கிறபடியே.

(செற்றெழுந்து தீவிழித்து) என்றது - நீ யொரு தூதுவரிட வேண்டாவென்று துர்யோதநாதிகளைச் சீறிப்பார்த்தபடியாகவுமாம். (சென்ற வித்யாதி) நரகில் பாபகர்மம் போக்குகைக்கென்று ஸங்கல்பம் வேண்டா. (மறையவற்கு) ஸ்ரீமார்க்கண்டேய பகவானுக்காகவுமாம்; பீஷ்மத்ரோணாதிகளாதல். "ஸாஶாநூ ஸுகூர்யாவயழி-ஸாமாந்யலக்ஷணாவயம்". (இறையேனும்) பரவ்யூஹாதிகளில் போகாது. (கூச)

அரு.—தொண்ணூற்றுநாலாம்பாட்டு.—வேண்டா வென்று சொன்ன துர்யோதநாதிகள் வதம்; பீஷ்மாதிகள் கோபித்துப்பாராதே ஸாமாந்யமாக ஸந்தமாகப் பார்க்கைக்கு விஷயமென்றார்கள். (வாய் அங்காந்து) துர்யோதந பக்ஷத்தில் பொய்யாஸந வேளையிலே விஶ்வரூபத்தைக்காட்டினது. மறையவர்க்கும் வாயை ஆவென்று காட்டுகை. (கூச)

நா வாயிலுண்டே நமோ நாரணனென்று
ஓவாதுரைக்கு முரையுண்டே - மூவாத

மார்க்கதிக்கண் செல்லும் வகையுண்டே, என்னெருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம். (கூரு)

ப.உ.—நா - நாக்கு, வாயிலுண்டே - வாயிலே யிருக்கிறதே; ஓவாது - ஓயாமல், நமோநாரணவென்று - நமோநாராயணயவென்று, உரைக்கும் - சொல்லும்படியான, உரை - திருமந்திரம், உண்டே - இருக்கிறதே; மூவாத - திரும்புதலில்லாத, மா-ஸ்ரேஷ்டமான, கதிக்கண் - (மோக்ஷ) மார்க்கத்தில், செல்லும் - போகைக்கு, வகை - உபாயம், உண்டே - இருக்கிறதே; ஒருவர்-ஒருத்தர், தீக்கதிக்கண் - துர்மார்க்கங்களிலே, செல்லும் - போகிற, திறம் - ப்ரகாரம், என் - எதுவாகலாம். (கூரு)

வ்யா.—அவ.—தொண்ணூற்றைந்தாம் பாட்டு.—(நாவாயில்) இதுவிடப்போகாதாயிருந்தது, இது கீழ்ப்போகாதாயிருந்தது, இதுக்கு எங்ஙனே விலக்கடியுண்டானபடி; அபரிகரராயிருக்கில் செய்யலாவதில்லை யிறேயென்னில், ஈஸ்வரன் ஒரு பரிகரம் தேடும்படி வைத்தானேவென்கிறது.

(நாவாயிலுண்டே) "ஸ்ருஷ்ஹ்வநவாஸாய - ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்கிறபடியே நாக்காகில் அவனை யேத்தக் கடவது. (நமோவித்யாதி) அந்நாக்குக் கண்டவோபாதி திருமந்த்ரமும் இவனுக்கு இளைப்பாறிச்சொல்ல வேண்டாததுண்டே. ஒரு ஸஹஸ்ராக்ஷரீ மாலாமந்த்ரம், இது சொல்லுமதில் நரகாநுபவம் அமையுமென்னைத் திருமந்த்ரமுண்டே. (மூவாத வித்யாதி) அபுநராவ்ருத்திலக்ஷணமான ப்ராப்யத்துக்குச் செல்லும் அர்ச்சிராதிமார்க்கமுண்டே. (என்னெருவரித்யாதி) நரகத்துக்குப் போகவழி நேராகக்கண்டிலோம். இதுக்கு விலக்கடி எங்ஙனே யுண்டாயிற்று. ஸம்ஸாரி ஹிதம்காண்கிறிலோம், நாளோ செல்லாநின்றது. (என்னெருவரித்யாதி) வலிய விலக்கடிதேடவேணும். (கூரு)

அரு.—தொண்ணூற்றைந்தாம்பாட்டு.—திருநாமத்தினுடைய போக்யதையாலே விடப்போகாது; பாவநத்வத்தாலே தீக்கதியான் கீழ்ப்போகாது. ஓவாது - ஓயாதே. நடுஇளைப்பாறுதே ஒருமூச்சிலே சொல்லலாயிருக்கை. ஹிதம் காண்கிறிலோம் - ஹிதசிந்தைபண்ணக்

காண்கிறிலோம். இவையெல்லாமிருக்க இத்தைவிட்டு வலியத்தேட வேணுமென்கிறபடி. (கூடு)

திறம்பா தென்னெஞ்சமே செங்கண்மால் கண்டாய்
அறம்பாவ மென்றிரண்டு மாவான் - புறந்தானும்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான், வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி. (கூசு)

ப-உ.—என் - என்னுடைய, நெஞ்சமே - மநஸ்ஸே! செம் - சிவந்த, கண் - நேத்ரங்களையுடைய, மால்கண்டாய் - ஸர்வேஸ்வரன் கிடாய், அறம் - புண்யம், பாவம் - பாபம், என்று - என்கிற, இரண்டும் - இரண்டுக்கும், ஆவான் - ஸ்வாமியாவான்; இம்மண் தான் - இந்த பூமிக்கும் ஸ்வாமி; மறி - அலையெறிகிற, கடல் தான் - கடலுக்கும் ஸ்வாமி; மாருதந்தான் - காற்றுக்கும் ஸ்வாமி; வான் தான் - ஆகாசத்துக்கும் ஸ்வாமி; புறந்தான் கண்டாய் - இவைகளுக்கு வெளியிலுண்டான மஹதாதிகளுக்கும் ஸ்வாமி கிடாய்; கடைக் கண் - மூடிவில், திறம்பாது - தவறுதபடி, பிடி - பற்று. (கூசு)

வ்யா.—அவ.—தொண்ணூற்றாறும்பாட்டு.—(திறம்பாது)விலக் கடியில்லையென்று இருக்கலாயிருக்கிறதில்லை, இவ்வர்த்தத்தைக்கை விடாதே கொள்ளென்று தம்மூடைய திருவுள்ளத்தைப்பார்த்து அருளிச்செய்கிறார்.

(திறம்பாதென்னெஞ்சமே) நான் சொல்லிற்றுத் தப்பாதுபோருகிற நெஞ்சே! அர்த்த தத்வங்கண்டாலல்லது கால்வாங்கேனென்றிருக்கிற நெஞ்சமே! (அறமித்யாதி) விஹிதத்தைச்செய்து நிஷித்தத்தைப் பரிஹரித்துப்போருகிற நம்மோடு விஹிதநிஷித்தங்களோடு வாசியில்லை அவனைக்குறித்துப் பாதந்த்ரமாமிடத்தில். "வஷட்வஹவஹாயஹூ காரயதி - ஏஷ ஏவஸாதுகர்ம காரயதி". தம்மூடைய பக்கல் கர்த்ருத்வம் தவிர்ந்தபின்பு ஒரு அசேதநக்ரியையைப் பற்றுவரன்றே. (செங்கண்மால்கண்டாய்) ஸர்வேஸ்வரன் கண்டாய். "தஸ்யயாஹுவ்யவஹம்வஷட்கரோதி தேவாஹூதிணீ - தஸ்யய காஹப்யாஸம் புண்டரீகமேவமகூதிணீ".

(இம்மண்ணிர்யாதி) ப்ரதிஷ்டாகமான அஸ்தோடே கூடின சேதநனுமவனே. அநுக்தமான மஹதாதிகளைச் சொல்லுகிறது. அவனை யொழிய ஸ்வதந்த்ரமாயிருப்ப தொன்றுமில்லை. (கண்டாய் கடைக்கட்பிடி) இவ்வர்த்தத்தைத் திறம்பாது கடைக்கட்பிடி. கடைபோகப்பிடி. இவ்வர்த்தத்தினுடைய கடைப்பிடி கண்டாயே என்றுமாம். (அறமித்யாதி) ஆபாத ப்ரதீதியில் அவனை யொழிய புண்யபாபமென்று தோற்றுவது; நிலைநின்று பார்த்தால் அவனே கடவனென்று தோற்றும். "திறம்பாது" என்று நெஞ்சோடே கூட்டவுமாம். "திறம்பாது. அறம்பாவமென்றிரண்டு மாவான்" என்னவுமாம். "திறம்பாது கடைக்கட்பிடி" என்னவுமாம்.

நாட்டார்க்குப் பலவழியுண்டாகிலும் நம்முடைய வழியைப் பற்றி யிராய்நீ. (திறம்பாதென்னெஞ்சமே) சொல்லென்றலைக்கிற நெஞ்சமே. (செங்கண்மால்) நம்முடைய விஷயத்திலிருக்கிறபடி கண்டாயே. (அறமித்யாதி) பெறுகைக்கும் இழக்கைக்கும் அவனுடைய நிக்ரஹாநுக்ரஹங்களையொழியப் போக்கில்லை; ஸர்வமும் பகவததீநமன்றே. (கடைக்கட்பிடி) அறுதியாகப்பிடி. (கூசு)

அரு.—தொண்ணூற்றுமூன்றுபாட்டு.—கர்மாதிகளிருக்க அவனைப் பிடிக்க வேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (தம்முடைய பக்கலித்யாதி).

கடைபோகப்பிடி - நடுவேவிடாதே முடியப்பிடியென்று க்ரியையாதல்; கடைப்பிடி - அவன் சரீரி, அல்லாதவையெல்லாம் சரீரதயாபரதந்த்ரமென்கிறவெல்லையான அர்த்தத்தைக்கண்டாயே யென்று க்ருபையாதல்; திறம்பாதே - இவ்வர்த்தத்திலே சலியாதே யென்று நெஞ்சொத்துக் கூட்டுதல்; திறம்பாது-அறம்பாவமிரண்டும் அவனிட்ட வழக்கென்னுமது தப்பாதென்னுதல்; திறம்பாதே - கடைபோகச்சலியாதே பிடியென்னுதல்.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார். (நாட்டார்க்கித்யாதி).(கூசு)

பிடிசேர் களிறளித்த பேராளா, உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்று ளன்றே - பொடிசேர்
அனற்கங்கையேற்று னவிர்சடைமேல் பாய்ந்த
புனல்கங்கை யென்னும்பேர்ப்பொன். (கூஎ)

ப-உ.—பிடி - கைப்பிடித்த பூவோடு, சேர் - கூடியிருக்கிற, களிறு - யானையை, அளித்த - க்ருபை பண்ணி ரக்ஷித்த, பேராளர் - மஹாப்ரபாவனனவனே! பொடிசேர் - சாம்பலோடுகூடினவனும், அனற்கு - நெருப்புக்கு, அம் - அழகிய, கை - கரத்தை, ஏற்றான் - ஏந்தினருத்ரனுடைய, அவிர்-ப்ரகாசிக்கிற, சடைமேல் - சடையின் மேலே, பாய்ந்த - விழுந்த, புனல் - ஜலத்தையுடைய, கங்கை என்னும் பெயர் - கங்கையென்று பேரையுடைய, பொன் - ஸ்லாக்யமான ஸ்த்ரீயானவள், உன்றன் - உன்னுடைய, அடி - பாதத்தின்மேலே, சேர்ந்தன்றே - கிட்டியன்றோ, அருள் பெற்றாள் - க்ருபையை அடைந்தாள். (தயைக்குப் பாத்ரமானாள்). (கூள)

வ்யா.—அவ.—தொண்ணூற்றேழாம்பாட்டு.—(பிடிசேர்) "அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்றதுக்கு வ்யாக்யாநம் இப்பாட்டு.

(பிடிசேர்களிறளித்த) ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்கள். "ஸாதோஹா ஹாஜ உவாரதஸ்தி திக்ஷு" - சாந்தோதாந்த உபரதஸ்திதிக்ஷு:" என்னுமவனிறே மோக்ஷத்துக்கதிகாரி. அன்றிக்கே, தன் பக்கல் ப்ரவணமாகாத விஷயப்ரவணமாகையிறே பாபமாவது; தன் பிடிபக்கல் ப்ரவணமாய் தன் பக்கலின்றிக்கே இருந்த களிற்றை ரக்ஷிக்கும்போது பாபம்தானிட்டவழக்காக வேணுமிறே. (பேராளர்) பிடிசேர்ந்தகளிற்றை ரக்ஷித்தானென்றால் அவன் செய்தானுகில் கூடுமென்றிருக்கை. (உன்றனடிசேர்ந்தருள்பெற்றாளன்றே) இத்தால் தர்மம் அவனிட்ட வழக்கென்கிறது. (பொடிசேரித்யாதி) பஸ்மச்சந்நனாய் அக்நியைக்கையிலே ஏற்றுக்கொண்டிருந்துள்ள ருத்ரனுடைய விளங்காநின்ற ஜடைமேலே பாய்ந்த புனலையுடைத்தான கங்கையென்னும் பேரையுடைத்தான விலக்ஷணையான ஸ்த்ரீ உன் திருவடிகளிலே சேர்ந்தன்றோ நாட்டுக்குப் பாவகமாயிற்று.

அவ.—"பொடிசேர்" என்றவித்தால் ப்ராயச்சித்தம்பண்ணி அத்தால் சுத்தனன்றியிலேயிருக்கிறவனையும்சுத்தனாக்கிற்று திருவடிகளில் ஸ்பர்சத்தாலே என்கிறது.

(பிடிசேர்களிறு) அவன் பிடியை நினைக்க நீ அவனைநினைத்தியிலையோ. ஒருகால் நினைத்தாலுகில்முன்புள்ளவரு பமிதுவன்றோவென்கிறது. ஜந்மவ்ருத்தங்களன்று ப்ரயோஜநமென்கிறார். (அருள்பெற்றாள்) பிறரை சுத்தராக்கும்படி பார்த்தருளினாள். (கூள)

அரு.—தொண்ணூற்றேழாம்பாட்டு.—அன்றிக்கே-மோகூஹாதி காரிகளன்றிக்கே. அனறகு அங்கை யேற்றான்-அதனுக்கு அங்கையே ரூன். (கூஎ)

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவரங்கத்தால் திரிவரேலும், ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன். (கூஅ)

ப-உ.—பொன் - பொன்போலே, திகழும் - ப்ரகாசிக்கிற, மேனி - வடிவையும், புரி-பின்னப்பட்ட, சடை-சடையையும், அம்-அழகிய, புண்ணியனும் - புண்யத்தையுமுடைத்தான ருத்ரனும், நின்று-நின்று, உலகம் - லோகத்தை, தாய - அளந்த, நெடுமாலும்-மேலானவனான ஸர்வேஸ்வரனும், என்றும்-ஸர்வகாலத்திலும், இருவரங்கத்தால் - இரண்டு சரீரத்தையுடையராய், திரிவரேலும் - ஸஞ்சரித்தார்களேயாகிலும், ஒருவன்-(புண்ணியனான) ஒருத்தன், ஒருவன் - (நெடுமாலான) ஒருத்தனுடைய, அங்கத்து - சரீரத்தைப் பற்றி, என்றும் - எக்காலத்திலும், உளன் - ஸத்தையுடையனாவான். (கூஅ)

வ்யா.—அவ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—(பொன்திகழு மேனி) ஈஸ்வரனுய் அதிகாரியாய்த் தானும் சிலர் கார்யத்துக்குக் கடவனுயிருக்கிறவனே, இவனுடைய ஸம்பந்தத்தாலே சுத்தனானென்றுசொல்லும்படி யெங்ஙனே யென்னில்; ஈஸ்வராபிமானியாயிருக்கும்போது சொல்லுமத்தை ப்ரமாணிக்கவொண்ணாது; இவனுடைய ஸ்வரூபத்தைப் பார்க்கலாகாதோவென்கிறார்.

(பொன்திகழுமேனி) ஸர்வேஸ்வரனுயிருக்கும்போது மேகஸ்யாமமாயிருக்குமிறே. (புரிசடை) *தாழ்சடையானுக்கும் நீண்முடியானுக்கும் வாசி பார்த்துக்கொள்ளலாமித்தனையிறே. (அம்புண்ணியனும்) "ஹரஹோதாநம்ஹவஜேவோஸஹரவ- ஹரந்வாத்மாநம் தேவதேவோபபூவ" என்கிறபடியே. (நின்றுலகந்தாயநெடுமாலும்) ஸ்வைரமாக அகிலாண்டஸம்ஹாரத்தைப் பண்ணினவனும். அவன் தலையிலும் பிறர் தலையிலுமாகத் திருவடிகளை வைத்தவனும். (என்றுமித்யாதி) இருவரும் ஸஹகாரிகளாய்த் திரிந்தாரேயாகிலும். (ஒருவனித்

யாதி) ஒருவனுக்கு ஸ்திதி ஒருத்தன் சரீரத்தைப்பற்றி. "வலத்தனின் திரிபுரமெரித்தவன்" என்னுமபடியே.

அவ.—ருத்ரனுடைய ஐஸ்வர்யம் பொய்யோவென்னில்; பகவததீநமென்கிறார்.

(நின்றுலகமித்யாதி) ருத்ரன் தலையிலும் நாட்டார் தலையிலும் ஒக்க அடியிட்டவன். (இருவரங்கத்தால்) இரண்டு வடிவுகளாலே யென்றுமாம். அங்கத்தில் ஏகதேசத்திலே உளனென்றுமாம். (கூஅ)

அரு.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—புண்ணியனும் - புண்ணியம் பண்ணுகையாலே தேவனானென்றபடி. இருவரங்கம்-அங்க சதுரங்கபல மென்னுமாப்போலே ஸேனை.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார்(ருத்ரனுடைய வித்யாதி). அங்கம் சரீரமாதல் ஏகதேசமாதல். (கூஅ)

உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமனென்றும்
உளன்கண்டாய், உள்ளுவா ருள்ளத் - துளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென் றோர். (கூகூ)

ப-உ.—நல் - அநுகூலமான, நெஞ்சே - மநஸ்ஸே! உத்தமன் - புருஷோத்தமன், உளன்கண்டாய் - (நம்ஸத்தைக்காக) இருக்கிறான் கிடாய்; என்றும் - ஸர்வகாலத்திலும், உளன்கண்டாய்-(நம்ரக்ஷணத்துக்காக) இருக்கிறான் கிடாய்; உள்ளுவார் - த்யாநிப்பவர்களுடைய, உள்ளத்து - நெஞ்சிலே, உளன்கண்டாய்-வாஸம்பண்ணுகிறவன் கிடாய்; வெள்ளத்தில் - திருப்பாற்கடலிலே, உள்ளானும் - வாஸம்செய்தவனும், வேங்கடத்துமேயானும் - திருமலையை வாஸஸ்தாநமாக உடையவனும், உள்ளத்தில் - ஹ்ருதயத்தில், உள்ளான் - நித்யவாஸம்பண்ணுகிறவன்; என்று - இப்படி, ஓர் - புத்திபண்ணு.

வ்யா.—அவ.—தொண்ணூற்றேழாம்பாட்டு.—(உளன்கண்டாய்) நாட்டில் பெரியாராயிருக்கிறவர்களும் தங்களுக்கு மேற்பட்ட கூடஸ்தரஜ்ஞராயிருக்கிறபடி அறிந்திருக்கச் செய்தே ஈஸ்வரர்களாக ப்ரமிக்கிற

படி கண்டு திருவுள்ளம் பயப்பட, நாம் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டால் அறுத்துவிழ விடுகைக்கு ஒருத்தனுண்டு காணென்கிறது.

(உளன்கண்டாய்) இலனுளனவனே யுளனென்கிறதன்று ; அவனுடைய ஸத்தை நம்முடைய ரக்ஷணத்துக்கும் நம்முடைய ஸத்தை நம்முடையவிநாசத்துக்கும். நாம் ப்ரதிபத்திபண்ணுகிறதுபிறரையஞ்சியன்று, நம்மையஞ்சி. பித்தத்தாலே மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டேனுகில் அறுத்துவிழவிடுகிடாய் என்றறிவுடையார்க்குச் சொல்லிவைக்குமாப்போலே. (நன்னெஞ்சே) எம்பெருமான் நமக்குளனென்று சொல்லப்பாங்காயிருக்கிற நெஞ்சே! (உத்தமனித்யாதி) அவனுடைய உண்மை ஸுஹ்ருத்தாய்க்கொண்டு. அதாவது - பரஸம்ருத்தியைகப்ரயோஜநனுயிருக்கை. (உள்ளுவாரித்யாதி) இவனொருநா ளுளனென்றிருக்கில், பின்னை இவனென்றும் நமக்குளனென்றிருக்கும்.தான் புகுரப்புக்கால் விலக்காதவர்களுடைய ஹ்ருதயம் விட்டுப்போகவறியான். (வெள்ளத்தினித்யாதி) திருப்பாற்கடலிலே கிடக்கிறதும் திருமலையிலே நிற்கிறதும் தம்முடைய ஹ்ருதயத்திலே புகுருகைக்கு அவஸரம் பார்த்தென்றபி.

புறம்புள்ளார்கிடக்கிடீர். (உளன்கண்டாய்) பிறர்க்குபதேசிக்கிறவர். எம்பெருமானுளனென்றிருக்கிறாரல்லர்; நாம் நமக்கில்லாதாப்போலே அவன் நமக்கென்று மூளன். (நன்னெஞ்சே) இவ்வர்த்தத்தி லென்னிலும் எனக்குபதேசிக்க வல்ல நெஞ்சே. (உத்தமன்) தன் பேறுகவுபகரிக்கை.(என்றும்) "ஸுலபேஸுவஸுலபே - அஸங்கேவஸபவதி" ஆனவன்றோடு, "ஸதுதோஷதுதோவிஷ்ணுஃ-ஸந்தமேநம்ததோவிதுஃ" ஆனவன்றோடு வாசியில்லை. (உள்ளுவார்) புகுரஸம்வதிப்பார். (உள்ளத்துளன்) "இடவகைகளிற் கழ்ந்திட்டு". (வெள்ளமித்யாதி) என்று மூளனுமை காட்டுகிறார். "அணைப்பார்க்கருத்தனுவான்".

அரு.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு.—பிறரையஞ்சி-பௌத்தாதிகள் ஈச்வரனில்லை யென்கிறதுக்கு அஞ்சி "உளன்" என்கிறதன்று; நம்மையஞ்சி - நம்முடைய ஸத்தைக்குண்டாக்குகைக்கு அவனுளனென்கிறது. இப்போது "உளன்" என்கிறது எப்படியிருக்கிறதென்ன; அருளிச்செய்கிறார் (பித்தத்தாலே யித்யாதி).

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (புறம்புள்ளாரித்யாதி). அங்கங்கே யிருக்கிறதெல்லாம இவனிடத்திலே யிருக்கைக்கோ வென்ன அருளிச்செய்கிறார் (அனேப்பார்க்கித்யாதி). (கூகூ)

ஓரடியும் சாடுதைத்த வொண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலா மென்னெஞ்சே - ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்து வை. (க00)

முதற்றிருவந்தாதி முற்றிற்று.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ப-உ.—என் - என்னுடைய, நெஞ்சே - மநஸ்ஸே! ஓர் - ஒரு, அடியில் - திருப்பாதத்தால், தாயவனை - (ஜகத்தை) அளந்தவனை, கேசவனை - கேசியென்கிற அஸுரனையழித்தவனை, தண் - குளிர்ந்த, துழாய்மாலை - திருத்துழாய் மாலையாலே, சேர் - அலங்கரிக்கப்பட்ட, மாயவனையே - ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய ஸ்ரியஃபதியையே, மனத்து - ஹ்ருதயத்திலே, வை - வைத்துக்கொள்; (இப்படி வைத்தால்), ஓரடியும் - (ஜகத்தை யளந்த) ஒருதிருப்பாதத்தையும், சாடு - சகடத்தை, உதைத்த - அழித்த, ஒண் - அழகிய, மலர் - புஷ்பம்போன்ற, சே - சிவந்த, அடியும் - திருப்பாதமுமான, ஈரடியும் - இரண்டு திருவடிகளையும், காணலாம் - ஸாக்ஷாத்கரிக்கலாம். (க00)

வ்யா.—அவ.—நூறும்பாட்டு.—(ஓரடியும்)பெறுமத்தாலே பெறுவதும்அவன் திருவடிகளையவனுலே பெறுவதென்கிறது.

(ஓரடியும்) லோகத்தை யடங்கலும் தன்னதாக்கின திருவடிகளையும். (சாடித்யாதி) சகடாஸுரனை நிரஸித்த போக்யமான திருவடியையும்.(ஈரடியுங்காணலாம்)இவ்விரண்டு திருவடிகளும் ப்ராப்யம். (என்னெஞ்சே!)காணவேணுமென்றிருக்கிற வென்னெஞ்சே. இதுக்குபாயமேதென்னில்; அவனென்கிறது. (ஓரடியிற்றூயவனை)ஓரடியாலே எல்லாவற்றையுமளந்தஸுலபனை. (கேசவனை) விரோதிநிரஸநசீலனானவனை. (தண்டுழாய்மாலை சேர் மாயவனையே மனத்துவை) ஸுலபனுமன்றிக்கே விரோதியைப்போக்குமவனுமன்றிகே யிருக்கிலும்

விடவொண்ணாதபோக்யனான மாயவனையே, நாமுன் ஸஹகாரிகளென்றிராதேகாண்டுமவனையே; காட்டுவானுடவனே. நமக்குப்ரதிபத்தியே உள்ளது.

(ஓரடியித்யாதி) சாடுதைத்த ஓரடியையும் திருவுலகளந்த சேவடியையுங்காணலாம். காணவொண்ணாதோவென்றிருக்கிற வென்னெஞ்சே! (தாயவனை கீழ்ச்சொன்ன வோரடி. (கேசவனை) சாடுதைத்த திருவடிகளையுடையவனை. திருவடிசளைத் தருவானும் விரோதியைப்போக்குவானும். (தண்டுழாய்) போக்யதை. (மாயவன்) இவனொன்று நினையாதபடி பண்ணவல்லவன். (மனத்துவை) அநுஸந்தி. (க00)

அவ.—(வையமித்யாதி) நினைத்தவாறு பேசியல்லது நிற்கமாட்டாமல் பேசுகிறார். (க)

முதற்றிருவந்தாதி வ்யாக்யானம்

முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—நூறும்பாட்டு.—திருவடிகளே உபாயமும் உபேயமுமானவும் அவையிரண்டும் அவனுலே பெறவேணுமென்றபடி. (க00)

அந்தாதியாகையாலே முதற்பாட்டுக் கவதாரிகை யருளிச்செய்கிறார். (நினைத்தவாறித்யாதி). (க)

அரும்பதம் முற்றிற்று.

அப்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநமஃ.

இயற்பா

பூதத்தாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

இரண்டாம் திருவந்தாதி.

இந்த க்ரந்தம்

அபாரகருணைலாகரரான பெரியவாச்சான்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய

மணிப்ரவாள வ்யாக்யாநஸஹிதம்.

அப்பு அரும்பதஸஹிதம்

இச்சபாபண்டிதரான

சிங்கப்பெருமாள்கோவில்

ஸ்ரீமான் - மாடபூசி

தர்க்கதீர்த்தர் - ராமாநுஜாசார்யரால்

எழுதப்பட்ட ப்ரதிபதஸஹிதம்

(:)

அநேக தேசாதீத ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினால்

லேககப்ரமாதாதி ஜநிததோஷங்களில்லாமல்

மேற்படி

ராமாநுஜாசார்யராலும்

வி. முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ வைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்) யாரால்

சென்னப்பட்டணம்,

ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலையில்

ஸ்ரீபராங்குசதிருவவதாராதி - ஞ்ஞ்ஞ.

ப்லவஸமவத்ஸரத்தில்

பதிப்பித்துப் ப்ரசுரம் செய்யப்பட்டது.

ககூக.

விஜயதேதராம்.

[illegible] மாதாஜி நமஃ.

ஸ்ரீவேங்கடேஸ்வரக்ருந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

1882-ம் வருஷத்திய ஆறுவது ஆக்டுப்ரகாரம் ரிஜிஸ்டர் செய்து ஸ்தாபிக்கப்பட்டது.

ப்ரதிமாதம் 5 - பாரங்களுக்குக் குறையாமல் சாஸ்வதமாய் அச்சிட்டு மூன்றுதலைமுறைகளுக்கு பேட்ரன்களுக்கு 12-காபிகளும், பாகஸ்தர்களுக்கு 5-காபிகளும் போஷகர்களுக்கு 1-காபியும் ப்ரதிமாதம் கொடுக்கப்படும்.

பேட்ரன் சந்தா ரூபாய் - 200, பாகஸ்தர்களுக்கு சந்தா ரூபா 100, போஷகர்களுக்கு சந்தா ரூபா 20, மொத்தமாயாவது ப்ரதி இங்லீஷ்மீ 15வுக்குள் 10-ல் ஒருபாகமாயாவது கட்டவேண்டும். இவர்களுக்குப் ப்ரவேசவர்த்தனைக்ரமமாக ரூபா, 2-0-0, ரூபா, 1-0-0, ரூபா, -0-4-0.

மற்ற விவரங்களெல்லாம் சட்டபுஸ்தகத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். இதின் விலை அணா 2.

இந்த ஸபையாரால் இதுவரையில் அச்சிட்டு ப்ரசுரம்செய்யப்பட்ட க்ரந்தங்கள்.

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம் ப்ரதிபதார்த்தாத்பர்யஸஹிதம் மேலான காகிதம்தமிழ்லிபி 3—4—0

பாரதாதி தனிஸ்லோகம் டிடோ 0—5—0

பராசரவிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம் 0--14—0

ராமசரமஸ்லோகம் ஸவ்யாக்யாநம் டிடோ 0—3—0

இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபதமுகா அரும் பதஸஹிதம் டிடோ 1—2—0

டிடோ இரண்டாந்திருவந்தாதி டிடோ 0--12—0

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம் ப்ரதிபதார்த்தாத்பர்யஸஹிதம் உயர்ந்த காகிதம் தெலுங்குலிபி 3—4—0

ராமசரமஸ்லோகம் டிடோ 0—3—0

பாரதாதி தனிஸ்லோகம் டிடோ 0—5—0

இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபத முகா அரும்பதஸஹிதம் 1—3—0

டிடோ இரண்டாந்திருவந்தாதி டிடோ 0--12—0

இப்படிக்கு,

காலபாடி - ஆழ்வாரய்ய,

கார்யதர்சி-தனதிகாரி.

நெ. 31, வெங்கடாசலமுதலிதெரு, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீவைஷ்ணவக்ரந்தமுத்ராபகஷாலை, (லிமிடெட்.)

இயற்பா

இரண்டாம் திருவந்தாதி.

இந்த க்ரந்தம், திவ்யப்ரபந்தத்தில் நூ-வது ஆயிரமான இயற் பாவில் உ-வது, ப்ரபந்தம். இதில் பாசுரம். கூ0. இதை யருளிச்செ ய்தவர், நிர்ஹேதுகபகவத்கடாக்ஷலப்தவிபவரான பூதத்தாழ்வார். இவர் முதலாழ்வார்கள் மூவரில் இரண்டாமவர். இவர், மஹாபலி புரமென்கிற திருக்கடல்மல்லை யென்னும் திவ்யதேசத்தில குருக் கத்திப்பூவி லவதரித்த லோகாஜ்ஜீவநகரான அயோநிஜர். பூதம் என்று உண்மைக்கும், ஆத்மாவுக்கும பெயர். இவர்வாஸ்தவார்த்தத தைத் தம்முடைய ப்ரபந்தத்தில் அருளிச்செய்தபடியாலும், "ஜ்ஞாநீ க்வாபித்வதோஹிதத்வ - ஜ்ஞாநீத்வாதமைவமோதம்" என்கிறபடியே ஜ்ஞாநாதிகரான இவர் ஸர்வேஸ்வரனுக்கு ஆத்மாவாயிருக்கிறபடி யாலும் இவருக்கு பூதத்தாழ்வாரென்று திருநாமம்.

இவர், த்வாபரயுகாதி - அசு0ஈ00-வது ஸம்வத்ஸரமான ஸித் தார்த்தி ஸம்வத்ஸரம் ஐப்பசி மாஸம் சுக்லநவமீ புதன்கிழமை அவிட்டநக்ஷத்ரத்தில் வைதரிக்தார். இவர்க்கு நாமாந்தரங்கள்: பூதா ஹ்வயர் - மல்லாபுராதீசர். திருவாராதநம்: ஆழ்வார்கள் நாதர். ஆசார்யர்: ஸேநைமுதலியார். இவர் ப்ரபாவத்தைப்பார்த்து ஸ்ரீகௌ மோதகியினம்சமென்பர்கள். இவர் பாடின திருப்பதிகள், நீகாயில், திருமலை, திருக்கடல்மல்லை, திருக்கோவலூர்.

இவர் ப்ரபாவங்களும், இப்ப்ரபந்தத்துக்கு வ்யாக்யாநம் அதி க்கு அரும்பதம் ஸாதித்தருளின பூர்வாசார்யர்களும், அவர்கள் ப்ர பாவங்களும், இவ்வாழ்வாரோடு ஸமான வ்ருத்திகரான பொய்கை யாழ்வார் அருளிச்செய்த முதற்றிருவந்தாதி பீடிகையில் விவரிக்கப் பட்டிருக்கிறது.

திருநகஷத்ர தனியன்.

தாமாயநிஷாவஸ ஹேதம ஹேதங்கலோமஜாலிநஃ।
தீரேஷாலோதயாஜலாவாரயீமேமஹாஸுகழி॥

ஜலாவாரவராயீஸாயவீகாஸாதோஜவழி।
ஹேதங்நஜாலியோவிஷ்ணோஜ்ஞாநதீவகுலுயக்॥

தூலாதநிஷ்டாஸம்பூதம் பூதம்கல்லோலமாலிநஃ
தீரேபுல்லோத்பலாமல்லா புர்யமீடேகதாம்சகம்.

மல்லாபுரவராதீசம் மாதஷீகுஸுமோத்பவம்
பூதம்நமாமியோவிஷ்ணோஃ ஜ்ஞாநதீபமசல்பயத்

வாழி திருநாமம்.

அன்பேதகளி நூறு மருளினன் வாழியே
ஐப்பசியி லவிட்டத்தி லவதரித்தான் வாழியே
நன்புகழ்சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே
கல்லதிருக் கடல்மல்லை நாதனார் வாழியே
இன்புருகு சிந்தைதிரி யிட்டபிரான் வாழியே
எழில்ஞானச் சுடர்விளக்கை யேற்றினன் வாழியே
பொன்புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதத்தார் தாளிணை யிப்பூதலத்தில் வாழியே.

இப்படிக்கு,

வாபாபண்டிதர்கள்.



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

இரண்டாந் திருவந்தாதி.

தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(என்பிறவி தீரவித்யாதி) இதில் திவ்யப்ரபந்த ப்ரதாதாவுமாய் திவ்யதேசத்தை ஜந்மதேசமாக வுடையருமாயிருக்கிற பூதத்தாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை ஜந்ம ஸம்பந்தமறும்படி பஜித்தேனென்கிறது. * இன்னமுதா வன்பே தகளியளித்தாருமாய், நன்புகழ்சேர் சீதத்தார் முத்துக்கள்சேரும் கடல்மல்லைப் பூதத்தார் பொன்னம் கழல்களை என்பிறவி தீரவிறைஞ்சினேனென்கிறது.

தீருக்தருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்த தனியன்.

என்பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளியளித்தானே - நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

ப-உ.—இன் - போக்யமான, அமுதா - அம்ருதமாக, அன்பேதகளி - அன்பேதகளி என்னும் ப்ரபந்தத்தை, அளித்தான் - க்ருபைசெய்து கொடுத்தவராய், நல் - ஸ்லாக்யமான, புகழ் - கீர்த்தியை, சேர் - அடைந்திருக்கிறதுமாய், சீதத்தார் - குளிர்த்தியையுடைய, முத்துக்கள் - முத்துக்களானவை, சேரும் - அடைந்திருக்கிறதுமான, கடல்மல்லை-திருக்கடல்மல்லை என்கிற திவ்யதேசத்தில் அவதரித்த, பூதத்தார் - பூதத்தாழ்வாருடைய, பொன்அம் - மிகவும் ஸ்ப்ருஹணீயமான, கழலை - திருவடிகளை, என் - என்னுடைய, பிறவி - ஸம்ஸாரம், தீர - நசிக்கைக்காக, இறைஞ்சினேன் - வணங்கினேன்.

வ்யாக்யாநம்.—இனி அவர் உபகாரசுத்வ வைபவம் சொல்லு கிறது. இன்னமுதா வன்பே தகவியளிக்கையாவது - * அமுதன்ன, சொன்மாலையான "இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன் னேன்" "நாரணற்கு ஞானந்தமிழ்புரிந்தநான்" என்னும்படியான * அன்பேதகவியா என்னும் ப்ரபந்தத்தை "உத்தமன் பேரேத் தும் திறமிதில்" என்னும்படி உபகரிக்கை. அன்றிக்கே, கொ டுக்கை.

கீழ் ஜ்ஞாந வைபவம் சொல்லிற்று, இனி ஜ்ஞாநவைபவம் சொல் லுகிறது (நம்புகழ்மேசர் சீதத்தார் முத்துக்கள்சேரும் கடல்மல்லைப் பூசத்தாரென்று). அதாவது - ஸ்லோக்யமான யஸஸ்ஸு சேருமூரு மஹிஷிகளாதிய பக்தாமணிகள் சேரும்படியாயுமிருக்கிற ஸ்தல மென்கை. * சீதக்கடலிலே பிறந்த முத்தாதிகளும் சீதளமாயிருக்கு மிறே. நன்பகழாவது - "யஸஸ்மிஞ்சுஹாஜநே - யசஸஸ்சைகபா ஜநம்" "சேரும் கொடைபுரிந்த எல்லையிலானே" "அந்தமில் புகழ் காரெழிலண்ணலே" "எண்ணிறந்த புகழினானே" என்னும்படியான * கடல்மல்லைத் தலசயனத்தைவாரையும், * எப்புவியும் பேசும் புகழ்ப்பூதத்தாரையும் உடைத்தாகையாலு முண்டானமுத்துக்கள் * வந்துதித்த வெண்டிரைகள் வெண்முத்தத்தைக் கொழிக்கை. * மாமணிவந்துந்து முந்நீர்மல்லையிலே. சங்கிடங்கொள் முத்தொன் றும், கைகடந்த முத்தொன்றும், சேரும் ஸ்தலம். "இக்கரை யேறி" என்னைக்கடவதிறே. "கரைகண்டோர்" என்னும்படி யான முக்தராயிற்று இவரும்.

கடல்மல்லை - விலக்ஷணவஸ்துக்கள் சேரும்தேசம். * சங்கு தங்கு தடங்கடல் கடல்மல்லையிறே. "மாமயிலை" என்றிறே இவர் காமும் மண்டியிருப்பது. "கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தல சயனம்" என்று - அடித்தடித்துப்படிக்கும் தேசமாகவிறேபாடினூர். ஆகையால், அவன் படுகாடுகிடக்கும் தேசமென்கிறது. (கடல்மல் லைப்பூதத்தார்) "தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப்பூதம்" என்னலாம்படியான தாத்தையுடையவர். "பாற்கடல்பாம்பணைமேல் பள்ளிகொண்டருளும் சீதனியதொழுவார் விண்ணுளாரிலும் சீரி யரே" என்னக்கடவதிறே. "இண்டைகொண்டு தொண்டரேத்த வெவ்வுள்கிடந்தான்" என்கிறபடியே* மிக்கசீர்த்தொண்டரானபுண்

டரீகர் * வண்டுகொண்டு நறுந்துழாயலங்கல்கொண்டு சாத்தக்கிடந்த விடமிதே.

(கடல்மல்லைப் பூதத்தார்) திருக்கடல் மல்லையில் குருக்கத்திப் பூவிலேயிறே பூதத்தார் ஐப்பசியில் அவிட்டத்திலே அவதரித்தது. இவரும் * இருந்தமிழ் நன்மாலை இணைபடிக்கே சூட்டினரிறே. அத்தையிட்டு * கடல்மல்லைப் பூதத்தாரென்கிறது. அவனுக்கும், "கடல்மல்லைத் தலசயனத்துறைவார்" என்றிறே நிரூபகம். (பூதத்தார் பொன்னங்கழல் - இறைஞ்சினேன்) "மேவினேனவன்பொன்னடி" என்னுமாப்போலே. "தமிழ்த்தலைவன் பொன்னடி" என்னக்கடவதிறே. (பொன்னம்கழல் - என்பிறவி தீரவிறைஞ்சினேன்) இவர் பொன்னடியடியாகவிறே ஜந்மஸம்ஸாரபந்தம் நீங்குவது. இத்தால், பூதத்தார் பாதத்தைப் பணியவே பிறப்பறும் என்றதாயிற்று. (க)

இரண்டாந் திருவந்தாதியின் தனியன் வ்யாக்யானம்

முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீரஸ்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

இரண்டாந் திருவந்தாதி வ்யாக்யானம்.

அவதாரிகை.—(அன்பேதகளி) கீழில் திருவந்தாதியிலே உபயவிபூதியுக்தனனவன் ஜகத்துக்கு சேஷியென்றார்; இவர் அவ்வுபயவிபூதியையும் தம்முடைய பக்தியாலே அநுஸந்தித்து பக்தி பரவசராய்க் கவிபாடுகிறார். அவர்க்கிந்த பக்தியில்லையோ வென்னில்; உண்டு; காரண கார்யரூபமான அவஸ்தாபேதமேயுள்ளது. உபயவிபூதியையும் அநுஸந்தித்துப் பிறந்தஜ்ஞாநமவரது; அது பக்வமாய் பக்திரூபாபந்நமான படி யிவரது, ஆழ்வார்களொருத்தர்க்கொருத்தர் பாவஜ்ஞராயிறே பரிபாறுவது.

அரும்பதவிளக்கம்.—ப்ரவேசே: பக்தியாலே யநுஸந்திக்கை-ஜ்ஞாநத்வாரா உபயவிபூதியையும் பக்திக்கு விஷயமாக்குகை. ஜ்ஞாநத்தாலே யறிந்து ஸ்வரூபரூபகுண விபூதிகளிலே ஸ்நேஹம் பிறக்கையென்றபடி. ஜ்ஞாநவிசேஷம் பக்தியாகையாலே, காரணமான ஜ்ஞாநத்தோடு கார்யமான பக்தியோடு பேதமில்லை, அவஸ்தாபேதமேயுள்ளது; அவரதும் பக்தியென்றபடி. ஜ்ஞாநபக்திகள் ஏகாஸ்ரயத்திலே உண்டாகவேண்டியிருக்க, அவருடைய ஜ்ஞாநமிவருக்கு பக்வமாகக்கூடுமோவென்ன, அருளிச்செய்கிறார் (ஆழ்வார்களித்யாதி).

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (க)

ப-உ.—அன்பே - பக்தியே, தகளியா - அகலாகவும், ஆர்வமே-அபிநிவேசமே, நெய்யாக - நெய்யாகவும், இன்பு - ஆநந்தத்தாலே, உருகு - கரைந்திருக்கிற, சிந்தை-மநஸ்ஸானது, இடு - போடத்தக்க, திரியா - வர்த்திகையாகவும், (செய்து), ஞானம் - ஜ்ஞாநப்ரதமுமாய், தமிழ் - த்ராவிடபாஷாரூபமுமான ப்ரபந்தத்தை, புரிந்த -

செய்த, நான் - யான், நன்பு - ஜ்ஞாநஸ்வரூபமான ஆத்மா, உருகி - கரைந்து, நாரணற்கு - ஸர்வேஸ்வரனுக்கு, ஞானம் - பரபக்தியாகிற, சுடர் - உஜ்வலமான, விளக்கு-தீபத்தை, ஏற்றினேன் - ஜ்வலிக்கச்செய்தேன். (க)

வ்பா.—அவ —முதற்பாட்டு.—ஜகத் வைசித்ரியினுடைய நிர்வாஹகத்வம் போரு மென்னேத்திருத்தினபடியென்றநுஸந்திக்கிறார்.

(அன்பேதகளியா) "வையந்தகளியா" என்று வையத்தைத் தம்முடைய பக்தியிலே அநுஸந்தித்து பக்தியைத் தகளியாகக் கொள்ளுகிறார். தைலவர்த்திகளுக்கு ஒரு ஆதாரம்வேணும். (ஆர்வமே நெய்யாக) அதடியாகப்பிறந்த அபிநிவேசமே நெய்யாக. ஆர்வமாகிறது - அன்பினுடைய த்விதீயபர்வம். (இன்புருகுசிந்தையிடுதிரியா) விஷயத்தினுடைய ரஸ்யதையாலே சிதிலமானஹ்ருதயம் திரியாக. "நன்பு" என்று ஜ்ஞாநம், "தஜ்ஜ்ஞாநஸாரகுணஸார - தத்குணஸாரத்வாத்" என்கிறபடியே ஜ்ஞாநாவைக்காட்டுகிறது; "ஹ்ருதயம் - அதாஹ்ருயம்" என்கிற ஆத்மா. இந்தபக்திக் கநுரூபமான ஸம்பந்தத்தையுடையவருக்கு. (ஞானச் சுடர்விளக்கேற்றினேன்) பரபக்தியாகிற விளக்கேற்றினேன். (ஞானத்தமிழ் புரிந்த நான்) பரபக்தி பர்வசனப்ரகாசிபாடுகிறநான். (க)

அரு.—பாட்டுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஜகத்வைசித்ரியித்யாதி). ஜகத்தை, பூமியும் ஸமுத்ரமும் ஆதித்யதேஜஸ்ஸுமாக விசித்ரமாக்கினாற்போலே, என்னையும் நாநாவித பக்தியுடையேனும்படி பண்ணுவதே! என்றீடுபடுகிறார். முதற்பாட்டில் ஜ்ஞாநவிஷயமான வையத்தைத் தகளியாக்கினாரவர். இவர் ஜ்ஞாநவிசேஷமான பக்தியைத் தகளியாக்குகிறாரென்றபடி. தகளிதானேதுக்கென்ன, அருளிச்செய்கிறார் (தைலவர்த்தீத்யாதி). (க)

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால் - வானத்
தணியமரர் ஆக்குவிக்கு மம்ஃதன்றே, நங்கள்
பணியமரர் கோமான் பரிசு. (உ)

ப-உ.—நாரணன் தன் - சேஷியான ஸர்வேஸ்வரனுடைய, நாமங்கள் - அஸாதாரணமான திருநாமங்களையும், மற்று - இதைக்காட்

டிலும் வேறான (குணயோகத்தைச்சொல்லும்), அவன் - அவனுடைய, பேர் - திருநாமங்களையும், ஞானத்தால் - ஜ்ஞானத்தாலே, நன்கு - நன்றாக, உணர்ந்து - அறிந்து, தானத்தால் - ஸ்தானத்தால் (பக்தியால்), சாற்றினல் - சொன்னல், நங்கள் - நமக்கு பந்துவாய், பணி - கைங்கர்யபரரான, அமரர் - நித்யஸூரிகளுக்கு, கோமான் - ஸ்வாமியான ஸர்வேஸ்வரனுடைய, பரிசு - ப்ரகாரம், வானத்து - பரமாகாசமான ஸ்ரீவைகுண்டத்துக்கு, அணி - அலங்காரமான, அமரர் - நித்யஸூரிகளோடு ஸமானமாக, ஆக்குவிக்கு மஃதுஅன்றே - செய்விக்குமதன்றோ. (உ)

வ்பா.—அவ.—இரண்டாம்பாட்டு.—(ஞானத்தால்) பக்திபரவசராய்க் கவிபாடினவர்க்கு அவன்கொடுக்கும் பரிசுசொல்லுகிறது.

(ஞானத்தால் நன்குணர்ந்து) பக்தியாலே நன்றாகவுணர்ந்து. (நாரணன் தன்நாமங்கள்) அஸாதாரணமான நாராயணஸ்ரீ நாமங்களை, விபூதியோகத்தைப்பற்றின நாமங்களை. (தானத்தால் மற்றவன் பேர்சாற்றினல்) பக்தியாயே உணர்ந்தபடியே சொன்னல். (வானத்தித்யாதி) பரமபதத்துக் காபரணமான நித்யஸூரிகளோடே ஒருகோவையிலே கோக்குமதிறே. (நங்களித்யாதி) ஒருநாள் பணிந்து ஒருநாள் பணியாதிராதே பணிகையேஸ்வபாவமான அமரர் கோமானுடையபடி. (உ)

அரு.—இரண்டாம்பாட்டு.—தானம்-ஸ்தானமாய் பக்தி ஸ்தானத்திலே. (உ)

பரிசு நறுமலரால் பாற்கடலான் பாதம்
புரிவார் புகப்பெறுவர் போலாம் - புரிவார்கள்
தொல்லமரர் கேள்வித் துலங்கொளிசேர் தோற்றத்து
நல்லமரர் கோமான் நகர். (கூ)

ப-உ.—பரிசு - இளசான, நறு - அழகிய, மலரால் - புஷ்பத்தினல், பாற்கடலான் - க்ஷீராப்தியில் பள்ளிகொண்டவனுடைய, பாதம் - திருவடியை, புரிவார் - விரும்புவோர்கள், புரிவார்கள் - (பகவத்ப்ராப்தியில்) விருப்பமுடையவர்களாய், தொல்-பழையர்களான, அமரர் - (ப்ரஹ்மாதி) தேவர்கள், கேள்வி - கேட்டறியத்தக்கதாய், துலங்கொளிசேர்-மிகுந்தேஜஸ்ஸை உடைத்தாய், தோற்றத்து-

ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற, நல் - ஸ்லாக்யமான, அமரர்-நித்யஸூரிகளுக்கு, கோமான் - ஸ்வாமியான ஸர்வேஸ்வரனுடைய, நகர்-பட்டணமான ஸ்ரீவைகுண்டத்தை, புக - ப்ரவேசிக்க, பெறுவர் போலாம் - பெறுவராம். (கூ)

வ்யா.—அவ.—மூன்றும்பாட்டு.—(பரிசு) அவன் செய்ததிலே தா மீபெடுகிறார்.

(பரிசு நறுமலரால்) பக்திப்ரகாரத்தாலே செவ்விப்பூவைக்கொண்டு. (பாற்கடலான்பாதம் புரிவார்) ஸம்ஸாரிகளை யக்கரைப்படுத்த வேணுமென்று திருப்பாற்கடலிலே கண்வளருகிறவனுடைய திருவடிகளை ஆஸ்ரயிக்குமவர்கள். (புகப்பெறுவர்போலாம்). (புரிவார்களித்யாதி) ஸாதகராய் முற்பட நாலுநாளிருந்துள்ள ப்ரஹ்மாதிகளென்றும் கேட்டேபோவதாம். (துலங்கொளிசேர் தோற்றத்து) கூதுகூநமஜீவுதுகு-அத்யர்க்கநல தீப்தந்தத்" என்று மொழியையுடைத்தாயிருந்துள்ள. (நல்லமரர்கோமான்நகர்) என்றும ஸாத்யரான நித்யஸூரிகளுக்கு சேஷியாயிருந்துள்ளவனுடைய நகரை, "பரிசு நறுமலரால் பாற்கடலான்பாதம் புரிவார் புகப்பெறுவர்போலே"; என்ன ஆச்சர்யமோ வென்றீடுபடுகிறார். (கூ)

அரு.—மூன்றும்பாட்டு.—புரிகை - முயலுகை. துலங்குகை - விளங்குகை. தோற்றம் - மிக்க வொளியையுடைத்தாய்ப் ப்ரகாசிக்கை. (கூ)

நகரிழைத்து நிக்திலத்து நாண்மலர்கொண்டு, ஆங்கே
திகழுமணி வயிரம் சேர்த்து - நிகரில்லாப்
பைங்கமல மேந்திப் பணிந்தேன் பனிமலராள்
அங்கம் வலங்கொண்டா னடி. (சு)

ப-உ.—நகர் - (என்னுடையமநஸ்ஸை) நகாமாக, இழைத்து - செய்து, ஆங்கே - அந்தநகரத்தில், திகழும்-உஜ்வலமான, மணிவயிரம் - (அபிவேஸமாகிய) மாணிக்க வயிரங்களை, சேர்த்து - சேகரித்து, நித்திலம் - (ஸ்நேஹமாகிற) முத்தை, நாள் - ஸ்லாக்யமான, மலர் - இதழாக, கொண்டு - ஸமபாதித்து, நிகரில்லா - ஒப்பில்லாத, பை - அழகிய, கமலம் - (ப்ரீதியாகிற) தாமரைப்பூவை, ஏந்தி - கொண்டு, பனி-குளிர்ந்த, மலராள்-கமலமலரை வாஸஸ்தாநமாகவுடைய பிராட்டியை, அங்கம் - திருமேனியில், வலம் - வலதுதிருமார்பில்

கொண்டான்-வைத்துக்கொண்டவனுடைய, அடி-திருப்பாதங்களை, பணிந்தேன் – ஆஶ்ரயித்தேன். (சு)

வ்யா.—அவ.—நாலாம்பாட்டு.—(நகரிழைத்து) "அன்பேதகளியா" என்றொரு விளக்குரூபித்தாற்போலே ஒரு புஷ்பமாகரூபித்து அத்தைக்கொண்டு ஆஶ்ரயிக்கிறார்.

(நகரிழைத்து) நெஞ்சைக் கோயிலாகக்கொண்டு. (நித்திலத்தித்யாதி) குளிர்ந்த மூத்தையிதழாகக்கொண்டு. (ஆங்கித்யாதி) அதிலே திகழாநின்ற மணிவயிரங்களாகிற அல்லியையு முண்டாக்கி. (நிகரித்யாதி) ஒப்பின்றிக்கே யிருந்துள்ள ஆர்வமாகிற புஷ்பத்தைக்கொண்டு பணிந்தேன். (பனிமலராளித்யாதி) பணிவுக்கு விஷயமாவான் ஶ்ரியஃபதியிறே. அவளுடைய ஸங்கிதியில் அபுஷ்கலமான ஸமாஶ்ரயணமும் புஷ்கலமாமிறே. (சு)

அரு.—நாலாம்பாட்டு.—பக்தியைப் புஷ்பமாகரூபிக்கையாலே இங்கு மணிமுக்தாதிகள் ஸங்ககாமாநுராகங்கள். அங்கம் வலம்திருமேனியில் வலப்பார்ச்வத்திலே. (சு)

அடிமூன்றி லிவ்வுலக மன்றளந்தாய் போலும்
அடிமூன் றிரந் தவனி கொண்டாய் - படிநின்ற
நீரோதமேனி நெடுமாலே, நின்னடியை
யாரோத வல்லா ரறிந்து. (ரு)

ப-உ.—அடிமூன்று - மூன்றடியை, இரந்து-யாசித்து, அவனி-பூமியை, கொண்டாய் - ஸ்வாதீகமாக்கிக்கொண்டாய்; அன்று – அக்காலத்தில், அடிமூன்றில் - மூன்றடியினால், இவ்வுலகம் - இந்தலோகங்களை, அளந்தாய்போலும் - அளந்துகொண்டாயோதான்; படி-பூமியிலே, நின்ற - இருக்கிற, நீர் - (சைத்யம்முதலான) குணங்களையுடைய, ஓதம் – ஸமுத்ரம்போன்ற, மேனி - விக்ரஹத்தையுடைய, நெடு - ஸர்வோத்க்ருஷ்டனை, மாலே - ஸர்வேஶ்வரனே! நின்-உன்னுடைய, அடியை - ஶ்ரீபாதத்தை, ஆர் - எவர், அறிந்து – தெரிந்துகொண்டு, ஓதவல்லார் - சொல்லத்தகுந்தவர்கள். (ரு)

வ்யா.—அவ.—ஐந்தாம்பாட்டு.—(அடிமூன்றில்) அவனுடைய உத்கர்ஷம் சிறிதறியுமத்தனையல்லது, ஸௌலப்யமொருவருமறிவாரில்லை யென்கிறது.

(அடிமூன்றி லித்யாதி) மூன்றடியில் இரண்டடியாலே லோகத்தையளந்தாய். (அடிமூன்றித்யாதி) அளக்கைக்கடியாக மூன்றடியை யிரந்து பூமியைக்கொண்டாய். (படிநின்ற) பூமியிலேஸ்வாபாவிகமாக நின்றவென்றுமாம். (நீரோதமித்யாதி) கடலோதம்போலேயிருந்துள்ள திருமேனியை யுடையனுய் வளர்ந்தவனே. வ்யாமோஹத்தை யுடையவனென்றுமாம். (நின்னடியையித்யாதி) உன்னுடைய ஸௌலப்யத்தையறிந்து சிலராலே ஆஸ்ரயிக்கப்போமோ. (நு)

அரு.—ஐந்தாம்பாட்டு.—படிநின்ற-அளக்கிறபோது பூமியிலே நின்ற. (நு)

அறிந்தைந்து முள்ளடக்கி யாய்மலர் கொண்டு, ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே - அறிந்தவன்றன்
பேரோதி யேத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
காரோத வண்ணன் கழல். (சூ)

ப-உ.—அறிந்து - (குணதோஷங்களை) அறிந்து, ஐந்தும்-ஐந்து இந்த்ரியங்களையும், உள் - சரீரத்துக்குள்ளே, அடக்கி-விஷயங்களில் போகாதபடிசெய்து, ஆய் - சோதிக்கப்பட்ட, மலர் - பூக்களை, கொண்டு-ஸம்பாதித்து, ஆர்வம் - ப்ரீதியினுல், செறிந்த - மிகுந்த, மனத்தராய் - மநஸ்ஸையுடையராய்க்கொண்டு, செவ்வே - நன்றாக, அறிந்து - தெரிந்துகொண்டு, அவன்தன் - அவனுடைய, பேர் - திருநாமத்தை, ஓதி - சொல்லி, ஏத்தும்-ஸ்தோத்ரம்பண்ணுகிற, பெரும் - அதிகமான, தவத்தோர்-பாக்யசாலிகள், கார் -கறுத்த, ஓதம் - ஸமுத்ரம்போன்ற, வண்ணன்-வர்ணத்தையுடையவனுடைய, கழல் - திருவடிகளை, காண்பர் - ஸாக்ஷாத்கரிப்பர்கள். (சூ)

வ்யா.—அவ.—ஆறும்பாட்டு.—(அறிந்து) ஜ்ஞாநத்துக்கு விஷயமன்றுகில் சூந்யமாகிறதோவென்னில்; அபிநிவேசத்தை யுடையராய் ஆஸ்ரயிக்கவல்ல பாக்யவான்கள் அறிவரென்கிறது.

(அறிந்து) சப்தாதிகளத்யாஜ்யமென்றறிந்து. (ஐந்துமுள்ளடக்கி) விஷயங்களில் நின்றும் இந்த்ரியங்களைமீட்டு ப்ரத்யக்காக்கி. (ஆய்மலர்கொண்டு) செவ்விப்பூக்கொண்டு. (ஆர்வமித்யாதி) அபிநிவேசம் பெருங்கின மநஸ்ஸையுடையராய். (செவ்வேயறிந்து) நாம் சேஷம், அவன் ஸ்வாமியென்னுமிடத்தையறிந்து. (அவன் தன் பே

ரோதியேத்தும் பெருந்தவத்தோர்) அவனுடைய திருநாமங்களைச் சொல்லி. ஏத்துகிற பாக்யவான்கள். (காண்பர்) நிச்சிதம். (காரோத வண்ணன்கழல்)கடலுதாஹரணமான வடிவையுடைய திருவடிகளை.

கழலெடுத்து வாய்மடித்துக் கண்சுழன்று, மாற்றூர்
அழலெடுத்த சிந்தையராயஞ்ச – கழலெடுத்த
போராழி யேந்திஞன் பொன்மலர்ச் சேவடியே
ஓராழி நெஞ்சே யுகந்து. (எ)

ப-உ.—கழல் - திருவடிகளை, எடுத்து - உயர்த்தி, வாய்-உதட்டை, மடித்து - உள்ளே அடக்கி (பற்களால் கடித்து), கண் - நேத்ரங்களை, சுழன்று - ப்ரமிப்பித்து, மாற்றூர் - சத்ருக்கள், அழலெடுத்த - தீபெழுந்த, சிந்தையராய் - மநஸ்ஸையுடையராய்க்கொண்டு, அஞ்ச - பயப்படும்படியாக, தழலெடுத்த - அனல்வீசுகிற, போர் - யுத்தஸாதநமான, ஆழி - சக்ரத்தை, ஏந்திஞன் - தரித்தவனுடைய, பொன் - பொன்போல் ஸ்ப்ருஹணீயமாய், மலர் - புஷ்பம்போல் ஸுகுமாரமான, அடியே - திருவடியே, ஆழி - கம்பீரமான, நெஞ்சே - மநஸ்ஸே! உகந்து-ப்ரீதமாய்க்கொண்டு, ஓர்-த்யாநம்பண்ணு.()

வ்யா.—அவ.—ஏழாம்பாட்டு.—(கழலெடுத்து) அவனையுகந்தார் காண்பாரானபின்பு, நீயுமவனையே உகந்தாஸ்ரயியென்று திருவுள்ளத்தைப் பார்த்துச்சொல்லுகிறார். ப்ரதிபந்தகமுண்டாகில் செய்வதென்னென்னில், கழிபட்டது படுமத்தனை.

(சுழலித்யாதி) அஞ்சக்கழலெடுத்து வாய்மடித்துச் சுழலாநின்ற கண்களையுடைய கழுசிப்பரந்துகள் ஹ்ருதயத்திலே கொளுத்தினபாக்நியை யுடையரா யஞ்சும்படி திருவடியையெடுத்து. (வாய்மடித்துக் கண்சுழன்று) "கழலெடுத்து" என்று ஈஸ்வர விசேஷணமாகவுமாம். (தழலித்யாதி) அக்நியையுமிழாநின்ற திருவாழியைக் கையிலே ஏந்தினவனுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளையே. (ஆழி நெஞ்சே யுகந்தோர்) அளவுடைய நெஞ்சே உகந்தாஸ்ரயி.

அந.—ஏழாம்பாட்டு.—திருமேனியென்னுதல்-வக்தேதியன்றியே ஸ்வாபாவிகமாகநின்ற நிறத்தையுடைய திருமேனியென்னுதல். (எ)

உகந்துன்னை வாங்கி யொளிநிறங்கொள் கொங்கை
அகம்குளிர வுண்ணென்ற ளாவி - உகந்து
மூலையுண்பாய் போலே முனிந்துண்டாய், நீயும்
அலைபண்பா லானமையா லன்று. (அ)

ப–உ.—உகந்து - ஸ்நேஹத்தைச்செய்து, உன்னை - உன்னை, வாங்கி - எடுத்து, ஒளி-காந்திவீசுகிற, நிறங்கொள் - அழகையுடைத்தான, கொங்கை-ஸ்தநங்களை, அகம் - உள்ளம், குளிர - குளிரும்படி, உண்ணென்ற ள் - சாப்பிடச்சொன்னள் ; ஆன்மையால்-ஆகையால், அன்று - அக்காலத்தில், நீயும் - நீயும், அலை - அதிசயித்த, பண்பால் - குணத்தாலே, உகந்து - விருப்புற்று, மூலையுண்பாய் போலே - ஸ்தன்யபாநம்பண்ணுவார்களைப்போலே, முனிந்து - சீறி, ஆவி - உயிரை, உண்டாய் - ஸ்வீகரித்தாய் (முடித்தாய்). (அ)

வ்யா.—அவ.—எட்டாம்பாட்டு.—(உகந்து) பொய்யுகப்புபாதகமாம் படிசொல்லுகிறது.

(உகந்து) யசோதைப்பிராட்டி யுகக்குமாப்போலேயுகந்து. (உன்னைவாங்கி) அவளோசழக்காக வெடுக்குமாப்போலே யெடுத்து. (ஒளிநிறங்கொள்கொங்கை) முலைப்பாலாலேநெறித்து அத்தாலே புகருடைத்தானகொங்கை. (அகங்குளிரவித்யாதி) உண்டல்லது நிற்கப்போகாதபடி ஹ்ருதயங்குளிரும்படிக் கீடாகச்சொன்னவளுடைய ப்ராணனை. (உகந்தித்யாதி) அவள் பொய்யே உகந்துமுடிக்க நினைத்தாறபோலே நீயும்பொய்யே உகந்து முலை உண்ணுமாப்போலே முனிந்து முடிக்க நினைத்தாய். (அலையித்யாதி) அவள் பொய்யே உகந்துமுடிக்க நினைத்தாற்போலே நீயும் பொய்யேயுகந்து மிக்க நீர்மையையுடையையாகையாலன்று ; உனக்கு மித்ரபாவமும் அமைந்திருக்கச் செய்தேயவளைமுடித்து உன்னைத் தந்தது ஆஸ்ரிதர்பக்கலுண்டான ஓமிறே. (அ)

அன்றதகண் டஞ்சாத வாய்ச்சியுனக் கிரங்கி
நின்றுமுலைதந்த விந்நீர்மைக்கு - அன்று
வரன் முறையால் நீயளந்த மாகடல்சூழ் ஞாலம்
பெருமுறையா லெய்துமோ பேர்த்து. (கூ)

ப-உ.—அன்று - பூதனை ஸ்தனம் கொடுக்கும்காலத்தில், அது - அந்த சரிதத்தை, கண்டு - பார்த்து, அஞ்சாத-பயப்படாத, ஆய்ச்சி-இடைச்சியானயசோதை, உனக்கு - உன்னுடைய்விஷயத்தில், இரங்கி - தயவுசெய்து, நின்று - ஸ்திரப்பட்டு, முலைதந்த - ஸ்தனம்கொடுத்த, இந்நீர்மைக்கு - இந்த நல் ஸ்வபாவத்துக்கு, அன்று - மஹாபலி பக்கல் தாநம்வாங்கினகாலத்தில், வரன் - ஸ்லாக்யமான, முறையால், ஸ்வஸ்வாமிபாவமாகிற ஸம்பந்தத்தாலே, நீ - நீ, அளந்த - ஆக்ரமித்த, மா - பெரிய, கடல் - ஸமுத்ரத்தினுல், சூழ் - சுற்றப்பட்ட, ஞாலம் - பூமியானது, பேர்த்து - மறுத்து விசாரிக்குமிடத்தில், பெரு - அதிகமாயிருக்கும், முறையால் - க்ரமத்தினுல், எய்துமோ - ஒப்பாமோ ? (கூ)

வ்யா.—அவ.—ஒன்பதாம்பாட்டு.—(அன்றது) யசோதைப் பிராட்டியுடைய ஸ்நேஹத்துக்கு உபமாந முண்டோவென்கிறது.

(அன்றது கண்டஞ்சாதவாய்ச்சி) அப்பெரிய வ்யஸநத்தைக் கண்டு பயப்படாத தாயார். (உனக்கிரங்கி) உன்பக்கலிலே சிதிலையாய். (நின்றித்யாதி) தறையிலேகால்பாவி முலைதந்தஸ்வபாவத்துக்கு.(வரன்முறையால்) ஈஸ்வரனை ப்ராப்தியாலே. (நீயளந்தவித்யாதி) நீயளந்த பெரியகடல்சூழ்ந்த பெரியபூமியானது பெருமுறையாலெய்துமோஅவளுடைய ஸ்வபாவத்துக்கு. இந்தபூமியானது திரியட்டி இது பெரியது, இது பெரியதென்னும் முறையாலே எதிர்க்குமோ. அவளுடைய ஸ்வபாவத்துக்கு நீ பெரிதாகச்செய்ததுவும் ஒப்பன்றென்கிறது. (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு.—எய்துமோ-நீர்மைக்கு பூமிஸத்ருசமோ என்னுதல், உன்னுடைய அளந்தவ்யாபாரந்தானெக்குமோவென்னுதல். (கூ)

பேர்த்தனைமா சகடம்பிள்ளாய், மண்ணிரந்து
காத்தனை பல்லுயிரும் காவலனே - ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் நின்னுள்ளி நின்றமையா
காவடியேன் பட்ட கடை. (கo)

ப-உ.—பிள்ளாயாய் - பாலனுய்க்கொண்டு, மா-பெரிய, சகடம்-சகடாஸுரனை, பேர்த்தனை - வேரைக்களைந்தாய் ; காவலனே-ரக்ஷ

கனே! மண் - பூமியை, இரந்து - யாசித்து, பல்-அநேகமான, உயிரும்-ப்ராணிகளையும், காத்தனை - ரக்ஷித்தாய்; நின்-உன்னிடத்தில், உள்ளி - அவகாஹித்து, நின்றமையால் - இருக்கையாலே, ஏத்தியஸ்துதிக்கத்தக்க, நாவுடையேன் - நாக்கையுடைத்தானேன்; பூவுடையேன் - (அர்ச்சிக்க) புஷ்பங்களையுடையேனுனேன்; அடியேன்-தாஸனுனான், பட்ட - அநுபவித்த, கடை - தாழ்மையை, கா - (போக்கி) ரக்ஷி. (கடு)

வ்யா.—பத்தாம்பாட்டு.—(பேர்த்தனையித்யாதி) பிள்ளையாயிருந்து பெரிய சகடத்தை உதைத்தாய். (மண்ணிரந்தித்யாதி) மஹாபலியாலே நோவுபடாமே பூமியையிரந்து ரக்ஷித்தாய். இப்படி ரக்ஷிக்கைக்கடி என்னென்றால்; (காவலனே) எல்லாவற்றையுமுடையவனுகை. (நின்னுள்ளி நின்றமையால் - ஏத்திய நாவுடையேன் பூவுடையேன்) உன்னை ஸமாஸ்ரயணீயனுக உடையேனுகையாலே ஆஸ்ரயிக்கும் த்ரவ்யங்களையும் கிரியங்களையும் புஷ்கலமாகவுடையேனுனேன். (அடியேன் பட்டகடை) உன்னுடையேனுயிருந்து வைத்து நான் மூன்று தேவதாந்தரங்களை யநுவர்த்தித்துப் பட்டபொல்லாங்கு இனிப்படாதபடி காத்தருளவேணும். (கம)

கடைநின் றமரர் கழல்தொழுது, நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர் - புடைநின்ற
நீரோத மேனி நெடுமாலே. நின்னடியை
யாரோத வல்லா ரவர். (ககூ)

ப-உ.—கடைநின்று - வாஸலிலிருந்து, நாளும்-தினந்தோறும், அமரர் - (ப்ரஹ்மாதி) தேவர்களுடைய, கழல் - பாதங்களை, தொழுது - ஆஸ்ரயித்து, இடைநின்ற - (மோக்ஷத்துக்கும் பூமிக்கும்)நடுவிலிருக்கிற, இன்பத்தராவர் - ஸுகத்தையுடையராவர்கள்; புடைநின்ற - சுற்றிக்கொண்டிருக்கிற, நீர் - ஜலத்தையுடைய, ஓதம்-ஸமுத்ரம்போன்ற, மேனி - விக்ரஹத்தையுடைய, நெடுமாலே - ஸர்வோத்க்ருஷ்டனான ஸ்வாமியே! நின் - உன்னுடைய, அடியை - பாதங்களை, ஓதவல்லாரவர்-ஸ்தோத்ரம் பண்ணத்தக்கவர்கள், யார் - எவராவார். (ககூ)

வ்யா.—அவ.—பதினேராம்பாட்டு.—(கடைநின்றமரர்)தேவதாந்தரங்களையநுவர்த்தித்துப்பட்ட அகர்த்தத்தைப் பரிஹரியென்ன;

இப்படி செய்வாருண்டோவென்னில்; அவரிப்படி செய்தன்றே அர்த்தப்படுகிறார்.

(கடையித்யாதி) தேவதாந்தரங்கள் வாசலிலே நின்று அவர்களை நாள்தோறுந்தொழுது மத்யமபுருஷார்த்தமான ஸுகத்தைப் பெறுவர். (புடைநின்றவித்யாதி) எங்கும்புக்க நின்ற சீரையுடைத்தான கடலில் நிறத்தையுடைய ஸர்வேஸ்வரனே! ப்ராப்யமானஉன்னுடைய திருவடிகளை யறிந்தாஸ்ரயிக்க வல்லாரார். (கக)

அரு.—பதினேராம்பாட்டு.—கடைகா-காத்தருளவேணும். (கக)

அவரிவ ரென்றில்லை யரவணை யான்பாதம்
எவர்வணங்கி யேத்தாதா ரெண்ணில் - பவரும்
செழுங்கதிரோ ணெண்மலரோன்கண்ணுதலோனன்றே
தொழுந்தகையார் நாளும் தொடர்ந்து. (கஉ)

ப-உ.—அவர் - (ஆஸ்ரயணீயரான) அந்த தேவர்கள், இவர் - (ஆஸ்ரிதரான) இம்மனுஷ்யர்கள், என்று - இப்படி, இல்லை - (பேதம்) இல்லை; அரவணையான் - திருவநந்தாழ்வானைப் படுகையாகவுடையவனுடைய, பாதம் - திருவடிகளை, வணங்கி - தொழுது, ஏத்தாதார்-ஸ்துதிபண்ணுதவர்கள், எவர் - யார்! எண்ணில் - ஆராயில், பவரும்-பரமபியிருக்கிற, செழும் - அழகிய, கதிரோன் - கிரணங்களையுடைய ஸூர்யனும், ஒள் - ப்ரகாசமுடைய, மலரோன் - தாமரைப்பூவை வாஸஸ்தானமாகவுடைய ப்ரஹ்மாவும், கண்ணுதலோனன்றே - நெற்றியில் கண்ணையுடைய ருத்ரனுமாகிற இவர்கள், தொடர்ந்து - (அவனிருக்குமிடம்)சென்று, நாளும்-தினந்தோறும், தொழும் - ஆஸ்ரயிக்கையே, தகையார்-ஸ்வபாவமாகவுடையவர்கள். (கஉ)

வ்யா.—அவ.—பன்னிரண்டாம்பாட்டு.—(அவரிவர்) சிறியார் பெரியாரென்னுதே. ஸர்வேஸ்வரன் திருவடிகளை ஆஸ்ரயியாதாரெவர்.

(அவரித்யாதி) எல்லாரும் அவனையே ஆஸ்ரயிக்கிறதோ வென்னில்; ப்ரஸித்தரான ப்ரஹ்மாதிகளும், அவனைத்தொழும் ஸ்வபாவராயன்றே விருக்கிறது. (எண்ணிலித்யாதி) பரந்தழகியதான கிரணங்களையுடைய ஆதித்யனும் ப்ரஹ்மாவும் லலாடநேத்ரனும். (நாளுந்தொடர்ந்து தொழுந்தகையார்) தொழும் ஸ்வபாவத்தையுடையராவர். (கஉ)

அரு.—பன்னிரண்டாம்பாட்டு.—சங்கைபண்ணுகைக்காக பதோ பாதாகம் பண்ணுகிறார் (அவரித்யாதி). இதின்மேலே சங்கைக்கு உத்தரமாய் மேலுக்கவதாரிகையுமாக அருளிச்செய்கிறார் (ப்ரஸித்த ரானவித்யாதி). (கூ)

தொடரெடுத்த மால்யானை சூழ்கயம்புக் கஞ்சி
படரெடுத்த பைங்கமலம் கொண்டு,- அன் றிடரடிக்க
ஆழியான் பாதம் பணிந்தன்றே, வானவர்கோன்
பாழிதா னெய்திற்றுப் பண்டு. (கசு)

ப-உ.—தொடர் - (காலிலிட்ட)சங்கிலியை, எடுத்த - (தும்பிக்கையாலே) எடுத்த, மால் - பெருத்த, யானை - ஆனையானது, சூழ் - விசாலமான, கயம் - மடுவில், புக்கு - ப்ரவேசித்து, படர் - மலர்ந்தும், எடுத்த - உயர்ந்துமிருக்கிற, பை - அழகிய, கமலம் - தாமரைப் பூவை, கொண்டு - எடுத்து, அன்று - அக்காலத்தில், இடர் - (முதலையால்வந்த) துஃகமானது, அடுக்க - ஸம்பவிக்க, அஞ்சி - அதுக்குப் பயப்பட்டு, ஆழியான் - சக்ரத்தை யேந்தினவனுடைய, பாதம்-திருவடிகளை, பணிந்தன்றே - தொழுதன்றே, வானவர் - நித்யஸூரிகளுக்கு, கோன் - ஸ்வாமியானவனுடைய, பாழிதான் - ஸ்தாநத்தை, பண்டு - முன்பு, எய்திற்று - அடைந்தது. (கசு)

வ்யா.—அவ.—பதின்மூன்றும்பாட்டு.—(தொடரெடுத்தமால்) விலக்ஷணாதிகாரமாகில் இடையாரதோவென்னில்; ஓராநேக்கன்றே எளிதாய்த் தோன்றுகிறது.

(தொடரித்யாதி) வல்லியை முறித்துக் கையிற்கொண்ட ஆனை, மதித்திருந்துள்ள ஆனை. (சூழ்கயம்புக்கு) பரந்தபொய்கையிலே புக்கு. (இடரடிக்கவஞ்சி) முதலையால் வந்த விடருக்குப்பயப்பட்டு. (படரெடுத்தபைங்கமலங்கொண்டு) படர்ந்தோங்கி குளிர்ந்த தாமரைப் பூவைக்கொண்டு. (ஆழியானித்யாதி) ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளிலே விழுந்தன்றே நித்யஸூரிகளோடே கூடியிருக்கிறவனுடைய படுக்கையிலே ஏறப்பெற்றது. (கசு)

அரு.—பதின்மூன்றும்பாட்டு.—புள்ளூர்ந்துத்தோன்றிற்றென்ற படி - வல்லி - விலங்கு-பாழி-படுக்கை - "இடரடிக்க" என்றபோது இடர்கிட்ட என்றபடி. (கசு)

பண்டிப் பெரும்பதியை யாக்கி, பழிபாவம்
கொண்டு இங்குவாழ்வாரைக் கூரூதே - எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்
தீர்த்தகரா ராமின் திரிந்து. (கச)

ப-உ.—பண்டியை - வயிற்றை, பெரும் - விசாலமான, பதி - ஊராக, ஆக்கி - செய்து, பழி - பிறரால் ஏறிட்ட தீமைகளையும், பாவம் - புத்தி பூர்வமாகச்செய்த தீமைகளையும், கொண்டு - ஸம்பாதித்து, இங்கு - இவ்வுலகத்தில், வாழ்வாரை - கல்யாணத்தை யநுபவிப்போர்களை, கூரூதே - அநுஸந்தியாமல், பேதைகாள் - புத்தியில்லாதவர்களே! எண்டிசையும் - எட்டுத்திக்கிலும், பேர்த்த-வ்யாபித்திருக்கிற, கரம்நான்கு-நாலுகைகளை, உடையான்-உடைத்தான ஸர்வேச்வரனுடைய, பேர் - திருநாமங்களை, ஓதி - அநுஸந்தித்து, திரிந்து - ஸஞ்சரித்து, தீர்த்தகராமின் - (ஜகத்தை) பரிசுத்தப்படுத்துகிறவர்களாக ஆகுங்கோள். (கச)

வ்யா.—அவ.—பதினாலாம்பாட்டு.—(பண்டி) அவன்படி இது வானபின்பு ஸம்ஸாரிகளை யேற்றித்திரியாதே அவன் திருவடிகளிலே பூணிந்து திருநாமங்களைச்சொல்லி உங்களுடைய ஸ்பர்சத்தாலே லோகத்தைச் சுத்தமாக்கிக்கொள்ளுங்கோ வென்கிறார்.

(பண்டிப் பெரும்பதியையாக்கி) அன்றிக்கே, வயிறுகிற பெரும்பதியை உண்டாக்கி யென்றுமாம். (பழிபாவ மித்யாதி) அடியுண்டாயும் அடியின்றிக்கேயுமான பாபமே வாழ்வாகவிருப்பாரைப் பேசாதேயட்டுத்திக்கும் விம்மவளர்ந்த நாலு கோள்களையுடையனவனுடைய திருநாமங்களைச்சொல்லி. (கச)

அரு.—பதினாலாம்பாட்டு.—பெரும்பதியையாக்கி-முன்பு இந்த லோகத்தை உண்டாக்கி, அதுக்கு ஆபத்தவர, "எண்டிசையும் பேர்த்தகர நான்குடையான்" என்று அவனுக்கு விசேஷணமாதல். பண்டியாகிற வயிற்றைப் பெரும்பதி-பெருக்கப்பண்ணி என்று ஸம்ஸாரிக்கு விசேஷணமாதல். அடியுள்ளது பழி; மற்றையது பாபம். திரிந்து தீர்த்தகராமின் - உங்கள் ஸஞ்சாரத்தாலே பாவகராக்குங்கோள். (கச)

திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி, அன்று
பிரிந்தது சீதையை மான்பின்போய் - புரிந்ததுவும்

கண்பள்ளி கொள்ள வழகியதே, நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் றனக்கு. (கடு)

ப-உ.—வெம் - கொடிய, சமத்து - யுத்தத்தில், தேர்-ரதத்தை, கடவி - கடத்தி, திரிந்ததுவும் - ஸஞ்சரித்ததும், மான் - (மாயா) ம்ருகத்தினுடைய, பின்போய், - பின்தொடர்ந்து, அன்று - அக்காலத்தில், சீதையை - ஸீதாதேவியை, பிரிந்ததுவும் - விஸ்லேஷித்ததுவும், கண் - பூமியில், பள்ளிகொள்ள - படுக்க, புரிந்ததுவும் - விரும்பியதும், நாகத்தின் - திருவநந்தாழ்வான்மேலே, தண் - குளிர்ந்திருக்கும்படி, பள்ளிகொள்வான் தனக்கு - சயநிக்கும் ஸ்ரியஃபதிக்கு, அழகியதே-உகப்பாயிருந்ததன்றே. (கடு)

வ்யா.—அவ.—பதினேந்தாம்பாட்டு.—(திரிந்தது) திருவுலகளந்தருளினபடி ப்ரஸ்துதமாகையாலே அல்லாத வவதாரங்களிலும் ஆஸ்ரிதார்த்தமாக மிகப்பட்ட இறுக்குக்களை நினைத்து வெறுக்கிறார்.

(வெஞ்சமத்துத் தேர்கடவித்திரிந்தது) யுத்தத்திலே யுடம்புக்கிடிடாதே யுள்ளேயழிபமாறப் படைபொருத்துத் தேர்கடவித்திரிந்தது. (அன்றுமான்பின் போய்பிரிந்தது சீதையை), ரக்ஷிக்கிறவிடத்திலிருவருங் கூடவிருந்து ரக்ஷிக்கப்பெற்றோமோ. (புரிந்ததுவுங்கண் பள்ளிகொள்ள) தரையிலே பள்ளிகொள்ளக்கற்றது. (நாகத்தின் தண்பள்ளி கொள்வான் தனக்கு அழகியதே) திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளப்பெற்ற ஸௌகுமார்யத்தையுடைய ஞானவனுக்கு ஜகத்ரக்ஷணம் சாலவழகிதாயிருந்தது. (கடு)

அரு.—பதினேந்தாம்பாட்டு.—புரிந்ததுவும் - திருவயோத்தியையைக் கைகேயிக்குக் கொடுத்ததும் காட்டிலே தரையிலே கிடக்கைக்கு. (கடு)

தனக்கடிமை பட்டது தானறியானேனும்
மனத்தடைய வைப்பதாம்மாலே - வனத்திடைநீ
எரியாம்வண்ண மியற்றுமிது வல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று. (ககூ)

ப-உ.—தனக்கு - தனக்கு, அடிமை-தாஸ்யமானது, பட்டது - ஸம்பந்தித்தது (என்னுமிடத்தை), தான் - ஸ்வயம், அறியானேனும் - தெரிந்துகொள்ளாமல் போனாலும், மாலே - ஸர்வேஸ்வரனே,

மனத்து - மனஸ்ஸிலே, அடைய - புகும்படி, வைப்பது - ஸ்திரப்படுத்துவது, ஆம் - இஷ்டஸித்திக்குப்போரும். வனம் - காடெழுந்த, திடரை - மேட்டை, ஏரியாம்வண்ணம் - தடாகமாகும்படி, இயற்றும் - பண்ணம்பண்ணுகிற, இதுவல்லால் - இந்த ப்ரகாரமல்லாமல், மற்று - அதுக்குமேலே, மாரி - மழையை, யார் - எவர், பெய்கிற்பார் - பெய்யப்பண்ணுவர்கள். (கசு)

வ்யா.—பதினேழும்பாட்டு.—(தனக்கடிமையித்யாதி) "ஸ்வகுரோ தூபிஸஞ்ஜாதம் ஸ்வாதிகுவம்ப்ரஹணிஸ்ரிதம் - ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்" என்னும்படியே விசதமாக வறியாநிகிலும். (மனத்தித்யாதி) "யஜ்ஞாவராஹதிர்ஸ்ருஷ்டி: - யத்யதாசரதிஸ்ரேஷ்ட:, என்னும்படியாகிலும் ஸர்வேஸ்வரனெற்றுதயத்திலேவைப்பதாம். (வனத்திடரித்யாதி) காட்டில் திடரைக்கல்லிக் குளமாக்குமதொழிய வர்ஷத்தை இவனுலே பெய்விக்கப்போமோ. இத்தால் ருஷிமாத்ரம் இவன் தலையிலேயுண்டா மித்தனையொழிய ப்ராப்தி இவனுலே உண்டாக்கிக் கொள்ளப்போமோ என்றதாயிற்று. அன்றிக்கே, ஏரியாம் வண்ணமியற்றுமது, மற்று வர்ஷிப்பிக்குமது, இரண்டும்செய்யப்போமோ வென்னவுமாம். ருச்யுத்பாதகனுங்தானே, ப்ராப்தியைப்பண்ணிக் கொடுப்பானுங் தானே யென்னவுமாம். (கசு)

அரு.—பதினேழும்பாட்டு.—அறியாநிகிலும் - தனக்குசேஷத்வமுண்டென்று சேதநனறியாநிகிலும். இரண்டு மவனையல்லால் வேறு ஆர்செய்வார், ஒருத்தர்க்குப் போதாதென்றபடி. இந்த வர்த்தத்துக்கு, "மநத்தடையவைப்பாதாம்" என்று கூடாபம்; வைக்கமாட்டாசென்றபடி. மூன்றினவர்த்தத்துக்கு, "வைப்பதாம்" வைக்கலாமென்றபடி; இரண்டாமர்த்தத்தை தார்ஷ்டாந்திகத்திலே ஏறிடுகிறார் (ருச்யுத்பாதகனுமித்யாதி). (கசு)

மற்றூ ரியலாவார் வானவர்கோன் மாமலரோன்
சுற்றும் வணங்கும் தொழிலானை - ஒற்றைப்
பிறையிருந்த செஞ்சடையான் பின்சென்று, மாலைக்
குறையிரந்து தான்முடித்தான் கொண்டு. (கள)

ப-உ.—வானவர் - தேவர்களுக்கு, கோன் - ஸ்வாமியான இந்த்ரன், மா - ஸ்லாக்யமான, மலரோன் - கமலத்தில் வஸிக்கிற ப்ரஹ்மா இவர்கள், சுற்றும் - நாற்புறங்களிலும், வணங்கும் - நமஸ்கரிக்கும்படியான, தொழிலானே - சேஷ்டிதங்களையுடையவனே, ஒற்றை-ஒன்றான, பிறை - கலையையுடைய சந்த்ரன், இருந்த - வாஸம்பண்ணுகிற, செம் - சிவந்த, சடையான் - ஜடையையுடைய ருத்ரன், மாலை - ஸ்ரீயஃபதியை, பின்சென்று - அநுஸரித்து, தான் - ஸ்வயம், இரந்துகொண்டு - யாசித்துக்கொண்டு, குறை - ந்யூநதையை, முடித்தான் - நிறைவேற்றிக்கொண்டான். மற்று - அந்தஸ்ரியஃபதியைக் காட்டிலும் வேறான, ஆர் - எவர், இயலாவார் - ஆஸ்ரயிக்க யோக்யராவர்கள். (கஎ)

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டு.—(மற்றார்) இவனே ஆஸ்ரயணீயனென்பா னென்னென்னில்; வேறொருவரில்லாமை யென்கிறது.

(மற்றரியலாவார்) மற்றாஸ்ரயணீயராவாரார். (வானவரித்யாதி) லோகத்தில் ப்ரதாநனான இந்த்ரனேடுகூடின ப்ரஹ்மாதிகளிறே. அவர்களுமவனே ஆஸ்ரயித்திறே தங்காமூடைய அபிமதங்கள் பெறுகிறது. இந்த்ரன், ப்ரஹ்மா, நேர்கொடு நேராஸ்ரயிக்கப்போகாதே பரதேவதைகளைச் சென்று வணங்குமாஸ்ரயணப்ரகாரங்களையுடையனனவனே. ஈஸ்வரனுடைய சேஷ்டிதங்களையறிவர்கள் சுற்றி வணங்குவாரென்னவுமாம். (ஒற்றைப்பிறையித்யாதி) சடையிலே பிறையைத் தரித்தானாய் ஸர்வஸம்ஹாரகனான ருத்ரன் பின்சென்று-அநுவர்த்தித்து. (மாலை) ஸர்வேஸ்வரனை. (கொண்டு) ஹ்ருதயத்திலேகொண்டு. (குறையிரந்து) குறைகளையிரந்து. (தான்முடித்தான்) தன்னுடைய அபேக்ஷிதங்களைப் பெற்றான். (கஎ)

கொண்டதுலகம் குறளுருவாய்க் கோளரியாய்
ஒண்திறலோன் மார்வத் துகிர்வைத்தது - உண்டதுவும்
தான்கடந்த வேழுலகே தாமரைக்கண் மாலொருநாள்
வான்கடந்தான் செய்த வழக்கு. (கஅ)

ப-உ.—வான் - ஆகாசத்தை, கடந்தான் - அதிக்ரமித்த (அபரிச்சேத்யனை), தாமரை - கமலம்போன்ற, கண் - நேத்ரங்களையுடைய, மால் - ஸர்வேஸ்வரன், குறள் - சிறிதான, உருவாய் - திரு

மேனியையுடையவனுய், உலகம் - லோகத்தை, கொண்டதுவும் - ஆக்ரமித்ததும், கோள் - மிடுக்கையுடைய, அரியாய் - ஸிம்ஹமாய், ஒண் - அழகிய, திறலோன் - பலத்தையுடைய ஹிரண்யகசிபுவினுடைய, மார்வத்து - மார்விலே, உகிர் - நகங்களை, வைத்ததுவும் - வைத்துக்கீண்டதும், ஒருநாள் - ஒருகாலத்தில், தான் - ஸ்வயம், கடந்த - அளந்த, ஏழுலகு - ஸப்தலோகங்களை, உண்டதுவும் - அமுதுசெய்ததுவுமான இவைகள், செய்த - அநுஷ்டித்த, வழக்கு - ந்யாயங்கள். (ப்ராப்தங்கள்). (கஅ)

வ்யா.—அவ.—பதினெட்டாம்பாட்டு.—(கொண்டது) அதாவது-இவன் ஜகத்ரக்ஷணம் பண்ணும்படிசொல்லுகிறது.

(குறளுருவாய்க்கொண்டதுகலம்) ஸ்ரீவாமனனுய் லோக மளந்து கொண்டது. (கோளரிஇத்யாதி) கைதொட்டு ஆஸ்ரிதவிரோதிகளைப் போக்கும்படி. (தான்கடந்த வேழுலகையுண்டதுவும்) தன் திருவடிகளிலே அடங்கின லோகங்களையே திருவயிற்றிலே வைத்ததுவும். (தாமரைக்கண்மால்) புண்டரீகாக்ஷனான ஈஸ்வரன். (ஒருநாள்வான் கடந்தான்) நித்யஸூரிகளுக் கவ்வருகானவன். ஸ்வர்க்கத்தை யளந்தவனென்றுமாம். (செய்தவழக்கு) தன்னுடைமையை ரக்ஷிக்க ப்ராப்தமிறே. (கஅ)

வழக்கன்று கண்டாய் வலிசகடம் செற்றுய்
வழக்கென்று நீமதிக்க வேண்டா - குழக்கன்று
தீவிளவின் காய்க்கெறிந்த தீமை திருமாலே
பார்விளங்கச் செய்தாய் பழி. (ககூ)

ப-உ.—திருமாலே - ஸ்ரியஃபதியே! வலி - பலத்தையுடைய, சகடம் - சகடாஸுரனை, செற்றுய் - கொன்றுய்; (அது) வழக்கு - ந்யாயம், அன்றுகண்டாய் - ஆகாதுகிடாய்; வழக்கென்று - ந்யாயமென்று, நீ - நீ, மதிக்கவேண்டா - எண்ணவேண்டா; குழம் - அழகிய, கன்று - வத்ஸாஸுரனை, தீ - கொடிய, விளவின்-விளாமரத்தினுடைய், காய்க்கு - காய்க்கு (காய்விழும்படி), எறிந்த-வீசிப்பொகட்ட, தீமை - கடும் கடத்தையை, பார் - பூமியிலே, விளங்க - ப்ரகாசிக்கும்படி, பழி - தப்பாக, செய்தாய் - அநுஷ்டித்தாய். (ககூ)

வ்யா.—அவ.—பத்தொன்பதாம்பாட்டு.—(வழக்கன்று) நீ ஜகத்ரக்ஷணம் பண்ணுகிறது பழியாய்விட்டது.

(வலிசகடஞ்செற்றாய் வழக்கன்றுகண்டாய்) பிள்ளையாயிருந்து பெரியசகடத்தை முறித்ததும் வழக்கன்று. அது செய்தோமிறே யென்னில், இதிறேனாலும் வேண்டாவென்கிறது. (வழக்கென்று நீ மதிக்கவேண்டா) இது வழக்கென்று நீ புக்கிருண்ணியிருக்கவேண்டா. (குழக்கன்றித்யாதி) அஸுரனுகன்றும் விளாவான அஸுரனும் தன்னிலேயொத்து உள்ளறிந்தவன்னே நலிந்ததாகில் செய்வதென்னென்று பயப்படுகிறார். (திருமாலே) இருவருங்கூட விருக்கவன்றோதகுவது. (பாரித்யாதி) பூமியடங்கலும் ப்ரகாசிக்கும்படி பழிசெய்தாய். விபூதியில் ஏகதேசத்தை ரக்ஷிக்கப்புக்கு அவ்விபூதியையும் அழிக்கப்பார்த்தாய். (கக)

அரு.—பத்தொன்பதாம்பாட்டு.—மேலிற்பதத்துக் கவதாரிகை (அதுசெய்தோமிறே இத்யாதி). தனக்கொரு ஹாநிவந்தால் அவ்விபூதியுமழியுமென்றபடி இது அவன்செய்த பழிபாவது. (கக)

பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வரா மாதோ - வழுவின்றி
நாரணன்றன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்
காரணங்கள் தாமுடையார் தாம். (உ0)

ப-உ.—பழி - அபுத்தி பூர்வமாகச்செய்யும் தப்பையும், பாவம் - புத்தி பூர்வமாகச்செய்யும் தப்பையும், கையகற்றி - கைவிட்டு, பல்காலும், ஸர்வகாலமும், வழி - சாஸ்த்ரமார்க்கத்திலிருந்து, நின்னை - உன்னை, வாழ்வார்-போக்யமாக அநுபவிப்பார்களும், வழுவு - ஒழிவு, இன்றி - இல்லாமல், நாரணன்தன் - ஸர்வசேஷியினுடைய, நாமங்கள் - திருநாமங்களை, நன்கு - செவ்வையாய், உணர்ந்து - அறிந்து, நன்கு - அழகியதாய், ஏத்தும் - ஸ்துதிக்கைக்கு, காரணங்கள்தாம்-ஹேதுக்களை, தாம் - தாங்கள், உடையார் - பெற்றவர்களும், வாழ்வராம் - மேன்மேல் ஸுகத்தை யநுபவிப்பர்கள். மாதோ - என்பது அசை. (உ0)

வ்யா.—அவ.—இருபதாம்பாட்டு.—(பழிபாவம்) ஜகத்ரக்ஷணத்தை யதஸந்தித்து அவனை யாஸ்ரயித்தவர்களென்றே ஆழ்வார்களென்கிறது.

(பழிபாவங்கையகற்றி) அடியுண்டாயும் அடியின்றிக்கேயுமுள்ள விரோதங்களைப் போக்கி. (பல்காலுமித்யாதி) என்றுமுன்னை யாஸ்ர

யித்துவாழ்வார் வாழ்ந்தேபோவர். "நஸுவாஸுதேஸுவ - நஸுகால்லப்யதேஸுகம்" என்கிற திவ்யோக்தி. மாதோவென்ப தை இடைச்சொல்லு. (வழுவித்யாதி) வழுவின்றிக்கேயிருக்கிற நாரா யணனுடைய திருநாமங்களே பக்தியாலேயுணர்ந்து நன்றுகவேத்தும். (காரணங்கள் தாமுடையார்தாம்) காரணங்கள், ஹேதுக்கள். ஏத்து கைக்கடியான பக்திருசி, ஆநுகூல்யம், பகவத்கடாக்ஷம், ஸுக்ரு தம். "தாரணங்கள் தாமுடையார்" என்றபோது தாரணமென்று த்ருதியுடையாரென்றபடி. (உ0)

அரு.—இருபதாம்பாட்டு.—ஸுகத்துக்குகந்தரம் துக்கமென்கிற ந்யாயம் இங்கில்லையாகாதே என்கிறது; முடியவாழ்வேயாயிருக்கும் பகவத்ஸமாஸ்ரயணமென்றபடி. இடைச்சொல்பாத பூரணமாய் அவ் யயமென்றபடி. (உ0)

தாமூளரே தம்முள்ள முள்ளுளதே, தாமரையின்
பூவுளதே யேத்தும் பொழுதுண்டே - வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே, செவ்வே
அருநரகம் சேர்வ தரிது. (உக)

ப-உ.—தாம் - (கர்த்தாவான) தாங்கள், உளரே - இருந்தார்க ளே; தம் - தங்களுடைய, உள்ளம் - (கரணமான) மநஸ்ஸு, உள் - சரீரத்துக்குள்ளே, உளதே - இருந்ததே; தாமரையின்பூ - உபகரண மான) கமலபுஷ்பம், உளதே - இருந்ததே; ஏத்தும் - ஸ்துதிக்கைக் கு, பொழுது - காலம், உண்டே - இருந்ததே; வாமன் - குணதிக னை ஸர்வேஸ்வரனுடைய, திரு - ஐஸ்வர்யத்தோடு, மருவு - கூடி யிருக்கிற, தாள் - திருவடிகளே, மருவு - கிட்டும்படியான, சென்னி யரே - தலையையுடையராயிருந்தார்களே; (இப்படி இருக்க) செவ் வே-நேராக, அரு - க்ரூரமான, நரகம்-நரகத்தை, சேர்வது - அடை வது, அரிது - துர்லபம். (உக)

வ்யா.—அவ.—இருபத்தோராம்பாட்டு.—(தாமூளரே) ஏத்தும் போது தானுண்டாகவேணுமேயென்னில்;

(தாமூளரே) இவன்தான் தன்னையுண்டாக்க வேண்டியிருந்ததோ? "வஸுவஸுதேவகுலாஸுஜஸுந ஹஸுஸுவாஷாஹிஸம்யுதா। விஜிஜ்ஞா ஜேஹஸம்வத்திஸ்ரீஸ்ஸுராய நிவேதித-ஸுபூர்வமேவக்ருதாப்ரஹ்மன் ஹ ஸ்தபாதாதிஸம்யுகா। விசித்ராதேஹஸம்பத்தி ரீஸ்வராயநிவேதிதும்"

அன்றே. (தம்முள்ளமுள்ளுளதே) தனக்குப் புறம்பன்றே ஓரு தயம். (தாமரையின்பூவுளதே) இவனுடைய விபூதிக்குப்புறம்பே தேடிப்போகவேண்டாவே பூ. (ஏத்தும் ஏபாழுதண்டே) ஏத்து கைக்குக்காலம் ஈஸ்வரனேயுண்டாக்கினனே. (வாமனித்யாதி) எல் லார்தலையிலும் காலைவைத்தவனுய்த் தன்னுடைமையைப் பெறு கைக்கு அர்த்தியுமாயிருந்தவனுடைய ஐஸ்வர்யம் பொருந்தின திருவடிகளைவைக்க விலக்காத தொருதலையுமுடையதே. (செவ்வே அருநரகஞ்சேர்வதரிது) இப்படி உபகரணங்கள் குறைவற்றிருக்கச் செய்தே நரகத்துக்கு நேர்வழிகிடையாது. (உக)

அரிய தெளி தாகும் ஆற்றலால் மாற்றி
பெருக முயல்வாளைப் பெற்றூல் - கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்றி முடித் தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து. (உஉ)

ப-உ.—ஆற்றலால் - ஸர்வ சக்தியோகத்தால், மாற்றி - (சேத நனுடைய ப்ரவ்ருத்திகளை) வேறுபடுத்தி, பெருக - மிகவும், முயல் வாரை - யத்நம்பண்ணும் மஹாபுருஷனை, பெற்றூல் - அடைந்தால், அரியது - துர்லபமான மோக்ஷம், எளிதாகும் - ஸுலபமாகும்; கரி யது - கறுத்தும், வெண் - வெளுத்த, கோட்டு - கொம்புகளையுடை யதுமான, ஓர் - அத்விதியமான; மால் - பெருத்த, யானை - ஆனை யானது, தண் - குளிர்ந்த, கோட்டு - மடுவின் கரையிலே, மா - ஸ்ரேஷ்டமான, மலரால், தாமரைப்பூவினால், தாழ்ந்தன்றே - அடி மைசெய்தன்றே, வென்றி - ஜயத்தை, முடித்து - முடித்தது (பெற் றது). (உஉ)

வ்யா.—அவ.—இருபத்திரண்டாம்பாட்டு.—(அரியது) ஸத்தை யேபிடித்து நோக்கிக்கொண்டு போருவானொரு ஸமாஸ்ரயணீயனைப் பெற்றூல் எல்லாம் ஸுலபமிறே என்கிறது.

(அரியதெளிதாகும்) அரிதாவது-பகவல்லாபமும், பகவத்பஜந மும்; இவை இரண்டும் மெளிதாகும். (ஆற்றலால்யாதி) இவன் தலையிலே ஒரு தேவையிடுகிறதென்; எல்லாம் தானே ஏறிட்டுக்கொ ண்டு செய்வோமென்பானொரு ஸர்வசக்தியைப்பெறுமூல், ஸுலா பம் நம்மதானபின்பு எல்லாவற்றையும் ஈஸ்வரன் பக்கலிலே விடுகிற

தென்; நாமே பஜிப்போமென்பானொரு அதிகாரியைப்பெற்றுமென்றுமாம். மேலிதுக்கு த்ருஷ்டாந்தம் (கரியதோரித்யாதி): கறுத்து வையும வளுத்த கொம்பையுமுடைத்தான பெரிய ஆனை. (தண் கோட்டிடத்யாதி) கோட்டென்று கரையிலே என்கிறது. "தண்தோட் டோமாமலர்" என்று பாடமானபோது, இதழையுடைத்தான பெரிய புஷ்பத்தாலே என்கிறது. (மாமலரால் தாழ்ந்து வென்றி முடித்தன்றே) புஷ்பத்தைக்கொண்டு திருவடிகளிலே பணிந்தன்றோ ஆனைவென்றியை முடித்தது; விஜயத்தைப்பெற்றது அவன் ப்ரஸாதத்தாலேயன்றோ வென்கிறது. (உஉ)

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு.—ஆற்றலால்மாற்றிப் பெருகமூயல்வாரைப் பெற்றுல் - தன் மிடுக்காலே சேதநனிடத்திலே உண்டாகவேண்டும் அத்வேஷாதிமுதலான ப்ரயத்நங்களையெல்லாம், மாற்றி, இவையெல்லாந் தானே ஏறிட்டுக்கொண்டு, பெருக - மிகவும் யத்நம்பண்ணு மீஸ்வரனைப்பெற்றுல் என்னுதல்; தன் மிடுக்காலே ஈஸ்வரயத்நத்தை மாற்றி, மிகவும் ஸ்வயத்நம்பண்ணும் சேதநனைப்பெற்றுலென்னுதல். இத்தால் பக்திப்ரபத்திகளைச் சொல்லுகிறது. (தாழ்ந்தன்றே) தாழவில்லையென்று ப்ரபத்திபரம்; தாழ்ந்தன்றோ என்று பக்திபரம். கரையிலே-மடுவின் கரையிலே. (உஉ)

தாழ்ந்து வரங்கொண்டு தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும் - தாழ்ந்த
விளங் கனிக்குக் கன்றெறிந்து வேற்றுருவாய், ஞாலம்
அளந்தடிக் கீழ்க்கொண்ட வவன். (உங)

ப-உ.—தாழ்ந்த - தொங்கியிருந்த, விளம்-(அஸுரனை)விளாமரத்தினுடைய, கனிக்கு - பழத்தைக்குறித்து, கன்று - வத்ஸாஸுரனை, எறிந்து - வீசிப்போகட்டு, வேற்றுருவாய் - உதாரனனதன்ரூபத்தைக்காட்டிலும் வேறுபட்ட யாசகரூபத்தை யுடையனாய்க்கொண்டு, ஞாலம் - பூமியை, அளந்து - ஆக்ரமித்து, அடிக்கீழ் - திருப்பாதத்தின்கீழே, கொண்ட - ஸ்வீகரித்த, அவன் - அந்தஸ்ரீயஃபதி, வரம் - அநுக்ரஹத்தை, கொண்டு - ஸம்பாதித்து, தக்க - தகுந்த, வகைகளால் - ப்ரகாரங்களாலே, தாழ்ந்து - வணங்கி, வாழ்ந்து - இஷ்டத்தையடைந்து, கழிவாரை - மேன்மேல்ஸுகத்தையாசைப்பட்டவர்களை, வாழ்விக்கும் - ரக்ஷிக்கும். (உங)

வ்யா.—அவ.—இருபத்துமூன்றும்பாட்டு.—தன்னை யாஸ்ரயிப் பார்க்கு ப்ரதிபந்தகத்தையும் போக்கித் தானும் ஸ-லபனு மன் கிறது.

(தாழ்ந்தித்யாதி) வரங்கொண்டு - அவன் ப்ரஸாதத்தைக்கொ ண்டு, சாஸ்த்ரங்களில் சொல்லுகிறவகைகளாலே தாழ்ந்து - ஆஸ்ர யித்து, அதுதானே வாழ்வாகக் காலத்தைப் போக்குவாரை ரக்ஷிக் கும். ப்ரதிபந்தகஞ் செய்வதென்னென்னில் தாழ்ந்த விளங்கனிபட் டது படுமத்தனை. (தாழ்ந்தவித்யாதி) "வேற்றுருவாய்" என்கிறது - சிறுகாலைக் காட்டி பெரியவடிவைக் கொண்டளக்கது. ஸ்ரியஃபதி யானவன் அர்த்தியாய் நின்றதென்றுமாம். பூமியையளந்து தன் திருவடிகளிலே யிட்டுக்கொண்டவன் வாழ்விக்கும். (உங)

அவன் கண்டாய் நன்னெஞ்சே யாரருளும் கேடும்
அவன் கண்டா யைம்புலனுய் நின்றூன்-அவன்கண்டாய்
காற்றுத்தீ நீர்வான் கருவாமண் காரோதச்
சீற்றத்தீ யாவானும் சென்று. (உச)

ப-உ.—நல் - ஸ்வாதீனமான, நெஞ்சே - மநஸ்ஸே! ஆர்-பூர்ண மான, அருளும்-க்ருபையினுலடையத்தக்க போகத்துக்கும், கேடும்- ஸம்ஸாரத்துக்கும், அவன் கண்டாய் - அந்த ஸர்வேஸ்வரனே நிர் வாஹகன்கிடாய். ஐம்புலனுய் - ஐந்து இந்த்ரியங்களுக்கும் ஸ்வாமி யாய், நின்றூன் - இருக்கிறவன், அவன்கண்டாய் - அந்த ஸ்ரியஃபதி கிடாய். காற்று - வாயு, தீ - நெருப்பு, நீர் - ஜலம், வான் - ஆகா சம், கரு - பெரிய, வரை - மலை, மண் - பூமி, கார் - கறுத்த, ஓதம் - கடலை, சீற்றம் - கோபிக்கக்கடவ, தீ - படபாக்நி, இவைகளுக்கு, ஆவானும் - நிர்வாஹகனுவானும், அவன்கண்டாய் - அந்த ஸர்வேஸ் வரன்கிடாய். (ஆகையால்), சென்று-(அவனை) கிட்டி, (ஆஸ்ரயி). ()

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு.—(அவனித்யாதி) ஸம்ஸார ப்ரவர்த்தகனுமவனே என்கிறது. "ஸர்வேஷாமேவ ஜந்தூனாம் ஸாயா ஸோதாம தாஜ்ஞயா - மாமேவ யேப்ரபத்யந்தே மாயாமேதாம்தர ந்திதே" என்கிறபடியே அவனைப்பற்றி ஸம்ஸாரபந்த மறுக்கவே ணுமென்கிறது. "காரோதச்சீற்றத்தீ" என்று (வடவை) படபை யைச்சொல்லுகிறது. (உச)

அரு.—இருபத்துநாலாம்பாட்டு.— (ஆசருளும்) "வடியிதழ் உயரோநுநாஃ - கடியிதுத்தயமாநமநர:" என்கிறபடியே, போக மோக்ஷஞ்சூன்யராயிருக்கிற சேதநரைக் கரணகளேபரங்களோக்கொடுத்துபோக மோக்ஷபாகிகளாக்குகை ஆசருள்; கேடு - மஹாப்ரளயம். இவை இத்தனைக்கும் நிர்வாஹகனுகையாலே, சென்று - அவனைக்கிட்டி - உஜ்ஜீவியென்று க்ரியை அத்யாஹார்யம். (உச)

சென்ற திலங்கைமேல் செவ்வே தன் சீற்றத்தால்
கொன்ற திராவணனைக் கூறுங்கால் - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே, விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து. (உடு)

ப-உ.—விண்ணவர்தம் - நித்யஸூரிகளுடைய, வாய் - வாக்கினாலே, ஓங்கு - ஸ்துதிக்கப்பட்ட, தொல் - ஸ்வாபாவிகமான, புகழான் - கீர்த்தியையுடைய ஸர்வேஸ்வரன், வந்து - அவதரித்து, செவ்வே - நேராக, சென்றது - நடந்தது, இலங்கைமேல் - லங்கையிலே; தன் - தன்னுடைய, சீற்றத்தால் - கோபத்தினால், கொன்றது - முடித்தது, இராவணனை - ராவணஸூதனை; கூறுங்கால் - பேசப்புக்கால், நின்றதுவும் - நின்றருளினதும், வேய் - மூங்கில், ஓங்கு, வளர்ந்திருக்கிற, தண் - குளிர்ந்த, சாரல் - மலைப்பக்கங்களையுடைய, வேங்கடமே - திருமலையிலே. (உடு)

வ்யா.—அவ.—இருபத்தைந்தாம் பாட்டு.— (சென்றதித்யாதி) உத்பத்யாதிகளேயோ ? உத்பந்நங்களானால் ப்ரதிபந்தகங்களைப் போக்குவானுமவனென்கிறது.

(சென்றதிலங்கைமேல்செவ்வே) ஸங்கல்பத்தாலன்றியே நேரே கால்நடையே லங்கையிலே நடந்தது. (தன்சீற்றமித்யாதி) கோபம் தானிட்ட வழக்காயிருக்கிறவன் தானே கோபத்தின் வழக்காய் முடித்தது ராவணனை. (கூறுங்கால்)பேசுங்கால். (விண்ணவரித்யாதி) நித்யஸூரிகள் ஸ்துதிக்கப்படா நின்ற பழைய புகழையுடையவன். கீழ்ராமாவதாரமாகையாலே ராவண வதஸமகந்தரம் ப்ரஹ்மாதிகளாலே ஸ்துதிக்கப்படுகிற புகழையுடையவனென்றுமாம். (விண்ணவர்தம்வாயோங்கு தொல்புகழான்வந்து நின்றதுவும் வேயோங்கு தண்சாரல் வேங்கடமே) அவதாரத்துக்குப் பிற்பாடரானவர்க ளிழக்க

வொண்ணுதென்று அவர்கள் விரோதியைப்போக்குகைக்காகத் திருமலையிலே வந்துநின்றது. (உடு)

அரு.—இருபத்தைந்தாம்பாட்டு.—* சாபம் - வில்லு. வில்லிருக்கச் செய்தேயும் கோபத்தாலே கொன்றுனென்றபடி. (உடு)

வந்தித் தவனை வழிநின்ற வைம்பூதம்
ஐந்துமகத் தடக்கி யார்வமாய் - உந்திப்
படியமரர் வேலையான் பண்டமரர்க் கீந்த
படியமரர் வாழும் பதி. (உசு)

ப-உ.—வழி - ஸஞ்சாரத்துக்கு, நின்ற-விரோதியாயிருக்கிற, ஐம்பூதம் - பஞ்சபூதங்களையும், ஐந்தும் - பஞ்சேந்த்ரியங்களையும், அகத்து - சரீரத்துக்குள்ளே, அடக்கி - அமைத்து, ஆர்வமாய் - ப்ரீதியுடையராய்க்கொண்டு, அவனை-அந்த ஸர்வேஸ்வரனை, வந்தித்து-ஆஸ்ரயித்து, உந்தி-முற்கோல்கொண்டு, படி-ஆஸ்ரயிக்கும்படி, அமரர்-(ப்ரஹ்மாதி) தேவர்களுக்காக, வேலையான் - திருப்பாற்கடலிலே பள்ளிகொண்ட ஸர்வேஸ்வரன், பண்டு - அநாதியான, அமரர்க்கு - தேவர்களான நித்யஸூரிகளுக்கு, ஈந்த-கொடுத்தது, படி - பூமியிலுள்ள, அமரர் - தேவதைகளான ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழும் - வாழுகிற, பதி - திருமலை. உசு)

வ்யா.—அவ.—இருபத்தாறும்பாட்டு.—(வந்தித்து) திருமலை ப்ரஸ்துதமாகையாலே, பின்னையுந்திருமலைக்குள்ளே ப்ரஸ்துதஞ் சொல்லுகிறது.

(வழிநின்ற வித்யாதி) பகவத்ப்ராப்தி விரோதியானபூதங்களைந்தையும் அவித்து. (ஆர்வமாய்)அபிநிவேசத்தையுடையராய். (அவனை வந்தித்து)அவனையாஸ்ரயித்து. (உந்திப்படியமரர்வேலையான்) * ஸுஹ்ருதமகயா - அஹமஹமிகயா - ப்ரஹ்மாதிகளாஸ்ரயிக்கத்திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவன். (பண்டமரர்க்கீந்த) நித்யஸூரிகளுக்குப் பரிஸில் கொடுத்தது. படி - பூமி, (படியமரர்வாழும்) பூமியில் ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுகிறதிருமலை. (உசு)

அரு.—இருபத்தாறும்பாட்டு.—அவனை வந்தித் திருக்கிறபடியமரர்வாழ்வுமே; பதியானது - திருமலையானது. உந்திப்படியமரர்

* இந்த பதம் வ்யாக்யாநத்தில் காணவில்லை,

வேலையான் - திருப்பாற்கடல்நாதன். நித்யஸூரிகளுக்கு உபகாரமாகக்கொடுத்தது. (உசு)

பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதியுரிஞ்சி வான்முகடு நோக்கி - கதிமிகுத்தங்
கோல்தேடி யோடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி யோடும் மனம். (உஎ)

ப-உ.—பதி - திருமலையிலே, அமைந்து - பொருந்தி, நாடி - விசாரித்து, பருத்து - வ்யாபித்து, எழுந்த-இளம்பின, சிந்தை - மனோரதத்தையுடைத்தாய், மதி - சந்த்ரனை, உரிஞ்சி - கிட்டி, வான்-ஆகர்சத்துக்கு, முகடு - உச்சியான (அண்டபித்தியை), நோக்கி - பார்த்து, மால் - பரிபூர்ணனான ஸர்வேஸ்வரனை, தேடி - ஆராய்ந்து, ஓடும்-செல்லுகிற, மனம் - மநஸ்ஸானது, கதிமிகுத்து - சீக்ரகமநத்தையுடைத்தாய்க் கொண்டு, அம் - அழகிய, கோல் - கொம்பை, தேடி-ஆராய்ந்து, ஓடும் - செல்லுகிற, கொழுந்தேபோன்றதே - கொடிபோலிராநின்றதே. (உஎ)

வ்யா.—அவ.—இருபத்தேழாம்பாட்டு.—(பதியமைந்து நாடி) கீழ்திருமலையில் நின்றபடியையநுஸந்தித்தார். அங்குநினைத்த பரிமாற்றங் கிடையாமையாலே நினைத்தபடிபரிமாறலாம் பரம பதத்திலிருக்கிற ஸர்வேஸ்வரனைத் தேடாநின்றதென்னெஞ் சென்கிறார்.

(பதியமைந்தித்யாதி)திருமலையிலே பொருந்தியாராய்ந்து விஸ்த்ருதமாய்க் கிளர்ந்த மநோரதத்தையுடைத்தாய். (மதியுரிஞ்சி) சந்த்ரனைக்கடந்து - (வான்முகடுநோக்கி) அண்டபித்தியை நோக்கி. (மால் தேடியோடும் மனம்)கரைகட்டாக்காவேரிபோலே ஸர்வாதிகனான ஸர்வேஸ்வரனைத் தேடியோடாநின்ற நெஞ்சு. (கதிமிகுத்தித்யாதி) வேகத்தையுடைத்தாய் - அழகிய தோர்கொம்பைத்தேடாநின்ற கொடிபோன்றிருந்தது. "கதிர்" என்று பாடமான போது, ஒளியையுடைத்தானகொடி. (உஎ)

அரு.—இருபத்தேழாம்பாட்டு.—(கதிமிகுத்து) கதி - கதியாய், வேகம் மிக்கென்றபடி. (உஎ)

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான், மற்றும்
நினைப்பரிய நீளரங்கத் துள்ளான் – எனைப்பலரும்
தேவாதி தேவனெனப் படுவான், முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன். (உ அ)

ப-உ.—எனைப்பலரும்-பூஜ்யரெல்லாரும், தேவாதிதேவன்-நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான பெரியவன்; எனப்படுவான்-என்றுசொல்லப்படா நிற்பனும், மா-பெரிய, கடலான் - க்ஷீராப்திபில் பள்ளிகொண்டவனும், முன்னொருநாள் - முன்பொருகாலத்தில், மா - குதிரையான கேசியினுடைய, வாய் - வாயை, கீண்ட - பிளந்த, மகன் - சிறுபிள்ளையாயும், மற்றும் – அதுக்குமேலே, நினைப்பரிய - நினைக்கைக்கு அஸாத்யமாய், நீள் - விசாலமான, அரங்கத்து - கோயிலில், உள்ளான் - நித்யவாஸம் பண்ணுகிறவனும், வேங்கடத்தான்-திருமலையை ஸ்தாநமாகவுடையனுமானவன், மனத்து – (என்) நெஞ்சிலே, உள்ளான் - நித்யவாஸம்பண்ணுகிறான். (உ அ)

வ்யா.—அவ.—இருபத்தெட்டாம்பாட்டு.—(மனத்துள்ளான்) இவர் அவன்பிரியாதநிலத்தைவிரும் பப்புக்கவாறே அவனிவருடைய மநஸ்ஸையே விரும்பாநின்றானென்கிறது.

(எனைப்பலரும் தேவாதி தேவனெனப்படுவான்) விவகூஹித ரெல்லாம் * அயர்வறுமமரர்களதிபதியென்ன ப்ரஸித்தனானவன், ஜகத் ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து க்ருஷ்ணனாயவதரித்து விரோதிநிரஸநம்பண்ணி வருவதுபோவதாக வொண்ணு தென்று திருமலையிலே வந்து நின்ற தேவாதி தேவன், என்றும் பரிச்சேதிக்கப் போகாத பரப்பையுடைத்தான கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறவன், என்நெஞ்சை விரும்பிப்புறம்புபோகிறிலன். (உ அ)

அரு.—இருபத்தெட்டாம்பாட்டு.—எனை - எனையர், பூஜ்யர் - நினைப்பரிய, அவனுக்கும் உள்ளுக்கும் விசேஷணம். (உ அ)

மகனைக் கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை
அகனர வுண்பனென் றுண்டு - மகனைத்தாய்
தேறுத வண்ணம் திருத்தினாய் தென்னிலங்கை
நீறுகவெய் தழித்தாய் நீ. (உ கூ)

ப-உ.—தென் - ஸ்ப்ருஹணீயமான, இலங்கை - லங்கையை, நீறுக - சாம்பலாம்படி, எய்து - அடித்து, அழித்தாய் - நாசம்செய் தவனே! நீ - நீ, மகனுக-புத்ரனுக, கொண்டு - ஸ்நேஹம்பண்ணி, எடுத்தாள் - எடுத்த பூதனையினுடைய, மாண்பாய - அழகிய, கொ ங்கை - முலையை, அகன் - வயிறு, ஆர - நிறையும்படி, உண்பன் - அமுதுசெய்வேன்; என்று - இப்படி நினைத்து, உண்டு - அமுது செய்து, மகனை - பிள்ளையானஉன்னை, தாய் - மாதாவான யசோ தைப்பிராட்டி, கோழுதவண்ணம் - விஸ்வஸியாதபடி, திருத்தினாய் - சிகூழித்தாய். (உகூ)

வ்யா.—அவ.—இருபத்தொன்பதாம்பாட்டு.—(மகனுக) க்ருஷ்ணாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே அதிலேசுழியாறுபடுகிறார்.

(மகனித்யாதி) பிள்ளையாக வெடுத்துத் தாயார் சோழக்காக வெடு க்குமாப்போலே எடுத்து நஞ்சாலே நிறைந்தத்தைப் பாலாலே நிறை த்ததாகப்பண்ணி அத்தாலே தர்சநீயமான கொங்கையை. (அகனித் யாதி) அவள்நிலையிறேயிவனது. அவள்முலைகொடுத்தல்லது தரிபா ளாய்நின்றுறப்போலே இவனுமுண்டல்லது தரியாளுய் வயிறார வுண்ப னென்றுண்டி. (மகனித்யாதி) மகனென்றாலும் தாயென்றாலும் க்ருஷ்ணன் பக்கலிலும் யசோதைப் பிராட்டி பக்கலிலும் நிற்கும்; புத்ரஸ்நேஹமென்றால் சக்ரவர்த்தி பக்கலிலே கிடக்குமாப்போலே. அவனும் விரும்பி முலையுண்ணநிற்க இவளும் விரும்பி முலைகொடா நிற்கிலும். பூதனைமடியிலேயிருந்தாளைக்கொண்டு துணுக்குத்துணுக் கென்னும்படியாகத்தாயாரைத் தொட்டுவிட்டாய். (தென்னிலங்கை.) ஒருதாயாரை மார்பிலேகையைவைத்து றங்கும்படி பண்ணின நீ. "கீர்த்திபூதாம்பதாகாம் யோலோகேப்ரமயதிப்ரபுஃ। கிம்நாஸி உமுஹம்தவ்ய) - கீர்த்திபூதாம்பதாகாம் யோலோகேப்ரமயதிப்ரபுஃ। கிந்நாமதுர்லபம் தஸ்ய" என்று சொல்லும்படிபண்ணினநீ - பருவம் நிரம்பிஆயுதஸ்ரமங்களும் பண்ணிச் செய்தாய். பருவம்நிரம்புவதற்கு முன்னே இச்செய்லைச் செய்தாயென்று. (உகூ)

அரு.—இருபத்தொன்பதாம்பாட்டு.—மாண்பு - அழகு. அகம் உள்ளாய்-வயிறு. (தேழுதவண்ணம்) தன் மடியிலேயிருக்கச்செய் தேயும் பூதனைமடியிலே யிருக்கிறாளுக அதிசங்கை பண்ணும்படி செய்தா யென்றபடி - ராவணவதம் பருவம் நிரம்பினபின்பு செய்த

செயலாகையாலே அவள் நிர்ப்பரையானாள். பெருமாள் விஜயகீர்த்தி முதலான குணங்களையுடையரா யிருப்பரோவென்ன ; அருளிச்செய் கிறார். (கீர்த்தி-ஹ-ஸ்தாழி - கீர்த்திபூதாம் இத்யாதி). நீரூகவெய்த ழித்த நீ தேறுதலண்ணாந்திருத்தினாய் என்றன்வயமாக்கி அருளிச் செய்கிறார் (பரவம் நிரம்பியித்யாதி). (உக)

நீயன் றுலகளந்தாய் நீண்ட திருமாலே
நீயன் றுலகிடந்தா யென்பரால் - நீயன்று
காதிரா தமுன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலை
பேரோத மேனிப் பிரான். (ஈ0)

ப-உ.—பேர் - பெரிய, ஓதம் - ஸமுத்ரத்தையொத்த, மேனி-விக்ரஹத்தையுடைய, பிரான் - உபகாரகனை, நீண்ட - அபரிச்சிந்நனை, திருமாலே - ஸ்ரீயஃபதியே ! அன்று - (இந்த்ரன் ஸ்நாவு பட்ட) அக்காலத்தில், நீ - நீ, உலகு - லோகத்தை, அளந்தாய் - ஆக்ரமித்தாய் ; அன்று - ப்ரளயகாலத்தில், நீ - நி, உலகு - பூமியை, இடந்தாய் - (அண்டபித்தியில் நின்றும்) பிரித்தெடுத்தாய்; அன்று - (இந்தரனை துர்வாஸமுனிசபித்த) காலத்தில், நி - நீ, முன்-முன்னே, கார்-கறுத்த, ஓதம் - ஸமுத்ரத்தை, கடைந்து-மதநம்பண்ணி, பின் - பின்பொருகாலத்தில், மா-பெரிய, கடலை-ஸமுத்ரத்தை, அடைத்தாய் - (அணையினால்) தடுத்தாய்; என்பர் - என்று (வைதிகர்) சொல்லுவர்கள். ஆல்-ஆச்சர்யம். (ஈ0)

வ்யா.—அவ.—முப்பதாம்பாட்டு.—(நீயன்று) எல்லார்க்கலையிலும், ஒக்கத்திருவடிகளாலளந்த அவதாரத்தைச் சொல்லுகிறது.

(நீண்டதிருமாலே நீயன்றுலகளந்தாய்) அபரிச்சேத்யனாய் ஸ்ரீயஃபதியான நீ பெரிய பெற்றத்போலே பூமியையளந்தாய். (நீயன்றித்யாதி) அதுக்கடியாக பூமியைபிடந்தாய். (பேரோதமேனிபபிரான் நீ அன்றுகாரோத முன்கடைந்து மாகடலைப் பின்னடைத்தாய்) பெரியகடல் வெள்ளம்போலே ஸ்ரமஹரமானவடிவை யுடையையாய் உபகாரகனாநீ, கறுத்த நிறத்தை யுடைத்தான கடலைமுழுப்படக் கடைந்து அது தன்னைப் பின்படைப்பதும் செய்தாய். "பேரோத மேனிப்பிரான்" என்று கடைகிறபோது ஒருகடலை யொருகடல் நின்று கடைந்தாற்போலே யிருக்கை. (ஈ0)

பிராணென்று நாளும் பெரும்புலரி யென்றும்
குராநற் செழும்போது கொண்டு - வராகத்
தணியுருவன் பாதம் பணியுமவர் கண்டீர்
மணியுருவங் காண்பார் மகிழ்ந்து. (ஈக)

ப-உ.—பிராணென்றும்-ஸ்வாமியே! என்றும், நாளும் - (பாழாய்க் கழிந்த) திரந்திலும், பெரும் - அழகிய, புலரியென்றும் - விடிவு (உண்டாவதே!) என்றும், (அதரத்துடன்), குரா - குராவென்னும் காட்டுமரத்தினுடைய, நல் - அழகிய, செழும் - பெருத்திருக்கிற, போது - புஷ்பத்தை, கொண்டு - ஸம்பாதித்து, வராகம்-பன்றியோடுஸத்ருஸமாய், அணி - அழகியதாயிருக்கிற, உருவன் - திருமேனியையுடையவனுடைய, பாதம் - திருவடிகளை, பணியுமவர்கண்டீர் - ஆச்ரயிக்குமவர்களல்லரோ, மணி - ரத்னம்போல் ஸ்லாக்யமான, உருவம்-விக்ரஹத்தை, மகிழ்ந்து - உகந்து, காண்பார் - ஸாக்ஷாத்கரிப்பர்கள். (ஈக)

வ்யா.—அவ.—மூப்பத்தோராம்பாட்டு.—(பிராணென்றும்) தன்னையே வணங்கும்படி பண்ணிவைனையும் வணங்குகைக் கீடானகாலத்தையுங் கொண்டாடுகிறார்.

(நாளும் பிராணென்றும்) கைகழிந்துபோன வென்னைத் தன் பக்கலிலே ஆபிமுக்யம் பண்ணுவித்து ருசியைப்பிறப்பித்த உபகாரகனென்றும். (பெரும்புலரியென்றும் குராநற்செழும்போதுகொண்டு) குராவினுடைய நன்முறுவ்செவ்வியை யுடைத்தானபூவைக்கொண்டு. (வராகத்தியாதி) இன்னபுஷ்பங் கொண்டென்னை யாச்ரயிக்க வேணுமென்றிராதே, காட்டில் புஷ்பத்துக்கு ஸஜாதீயமான வடிவையுடையவன் திருவடிகளைப் பணியுமவர்கள். (மகிழ்ந்துமணியுருவங் காண்பார்) பலத்துக்கு பலமிதே. "ஸுஸுவோகதுஷ்கவ்யழ - ஸுலுகம் கர்த்துமவ்யயம்" என்கிறபடியே ஸாதகதசையிலே இனிதாயிருக்கை. (ஈக)

அரு.—மூப்பத்தோராம்பாட்டு.—"புலரி" என்று நாளாய், பெரும்புலரியென்று கொண்டாட்டம். (ஈக)

மகிழ்ந்தது சிந்தை திருமாலே, மற்றும்
மகிழ்ந்தது

தழலாழி சங்க மவை பாடி யாடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து. (கூ.உ)

ப-உ.—திருமாலே - ஸ்ரியஃபதியே! சிந்தை - மநஸ்ஸு, துணிந்து - த்யாநத்தில் ஒநப்பட்டு, மகிழ்ந்தது - ப்ரீதியையடைந்தது; மற்றும்-வேறுனவாகிந்த்ரியமும், உன்-உன்னுடைய, பாதமே-திருவடிகளேயே, போற்றி - ஸ்தோத்ரம்பண்ணி, அழல் - (சத்ருக்கள் மேல்) நெருப்புவீசுகிற, ஆழி - சக்ரம், சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யம், அவை - அவ்விரண்டுகளே, பாடி - கானம்பண்ணி, மகிழ்ந்து-ஸந்தோஷித்தது. ஆகம் - சரீரமானது, ஆடும் - நர்த்தநம் செய்கையாகிற, தொழில் - வ்யாபாரத்திலே, சூழ்ந்து - வ்யாபரித்து, மகிழ்ந்தது - உகந்தது. (கூ.உ)

வ்யா.—அவ.—முப்பத்திரண்டாம்பாட்டு.—(மகிழ்ந்தது) இவ்விஷயத்தில் நீர்செய்ததென்னென்னில்; மநோவாக்காயங்களுங்கூட ப்ரவணமாயிற்றென்கிறார்.

(திருமாலே சிந்தைசூழ்ந்து துணிந்து நின்பாதமேபோற்றி மகிழ்ந்தது) என்னுடைய மநஸ்தத்வம், மநோரதித்து-அத்யவஸித்து. ஸ்ரியஃபதியானவனுடைய திருவடிகளேப்போற்றி மகிழ்ந்தது. (மற்றும்) என்றது-வாக்கும்என்றபடி. (மகிழ்ந்ததழலாழிசங்கமவைபாடி) மிகவும் ப்ரதிபக்ஷத்திலே அக்நியுமிழாநின்ற திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்பாடி மகிழ்ந்தது. ஆகம் ஆடுகையாகிறதொழிலிலே மகிழ்ந்தது. மகிழ்கையே தொழிலாயிற்று. (கூ.உ)

அரு.—முப்பத்திரண்டாம்பாட்டு.—மற்றும் - மநஸ்ஸுக்குமற்றுமுன-அநந்தரமான வாக்குமென்றபடி. (கூ.உ)

துணிந்தது சிந்தை தழாயலங்கல், அங்க
மணிந்தவன்பே ருள்ளத்துப் பல்கால் - பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல்வேங்கடவனேயே
வாய்திறங்கள் சொல்லும் வகை. (கூ.கூ)

ப-உ.—சிந்தை - மநஸ்ஸானது, தழாயலங்கல் - திருத்துழாய்மாலேயை, அங்கம்-திருமேனியில், அணிந்தவன் - பூண்டவனுடைய, பேர்-திருநாமங்களே, உள்ளத்து - த்யாநிக்க, துணிந்தது - நிச்சயித்

தது; அங்கம் - சரீரமானது, பலகால் - ஸர்வகாலமும், பணிந்ததுவும் - ஆஸ்ரயித்ததும்; வேய் - மூங்கில்களாலே, பிறங்கு - நிறைந்திருக்கிற, சாரல் - மலைப்பக்கங்களையுடைய, விறல் - பெருமையையுடைய, வேங்கடவனையே - திருமலைக்கு ஸ்வாமியானவனையே; வாய் - வாக்கு, திறங்கள் - (அவனுடைய) ஸ்வபாவங்களை, சொல்லும்வகை - சொல்லும் ப்ரகாரத்திலே, துணிந்தது - அத்யவஸித்தது. (கூகு)

வ்பா.—அவ.—மூப்பத்துமூன்றும்பாட்டி.—(துணிந்தது) மகிழ்ந்த மாத்ரமேயோ வேறொருவிடத்துக் காகாதபடியாயிற் றென்கிறார்.

(தூயலங்க லங்க மணிந்தவள் பேருள்ளத்துப்பலகால் சிந்தை துணிந்தது) திருத்துழாய்மாலையைத் திருமேனியிலே அணிந்தவனுடைய பேரைப் பலகாலு முள்ளுகையிலே சிந்தைதுணிந்தது. (அங்கம்பணிந்ததுவும் வேய்பிறங்கு சாரல் விறல் வேங்கடவனையே) சரீரம் பணிந்ததுவும், திருமலையிலே நிற்கிற ஸர்வேஸ்வரனையே. (வாய் திறங்கள் சொல்லும்வகை துணிந்தது) வாக்கானது அவனுடைய திறங்களைச்சொல்லுகையிலே துணிந்தது. (கூகு)

வகையா லவனி யிரந்தளந்தாய் பாதம்
புகையால் நறுமலரால் முன்னே - மிகவாய்ந்த
அன்பாக்கி யேத்தி யடிமைப்பட்டே னுனக்கு
என்பாக்கி யத்தா லினி. (கூச)

ப-ரு—வகையால் - (அழகு - சேஷ்டைமுதலான) ப்ரகாரங்களாலே, முன்னே - முற்காலத்தில், அவனி - பூமியை, இரந்து - யாசித்து, அளந்தாய்-ஆக்ரமித்தவனுடைய, பாதம்-திருவடிகளை, புகையால் - தூபத்தினால், நறு - அழகியதான, மலரால் - பூவினால், மிக - அதிகமாக, வாய்ந்த - கிட்டி, அன்பாக்கி - ப்ரீதியையுடையனாகச் செய்துகொண்டு, ஏத்தி - ஸ்துதித்து, இனி-இதுமுதலாக, என் - என்னிடத்தில்பண்ணின, பாக்கியத்தால் - உன்னுடைய கடாக்ஷமாகிற புண்யத்தினாலே, உனக்கு-உனக்கு, அடிமைப்பட்டேன்-கைங்கர்யம்செய்யுமவனானேன். (கூச)

வ்யா.—அவ.—மூப்பத்து நாலாம்பாட்டு.—(வகையால்) உன் லௌகீர்யத்துக்குத் தோற்று அடிமைப்படும்படி நீயே முன்னே க்ருஷிபண்ணினையென்கிறது.

(கூகையித்யாதி) ராவணனுபாதி வத்யனுயிருக்க மஹாபலியும் இவன்பக்கல் ஔதார்யகுணங் கிடக்கையாலே அவனுந் தன்னதாக் கித் தருவனுனன் ; நாமும் பூமியைசவனதாக்கிக் கொள்ளுவோம்; ஆஸ்ரயித்த இந்த்ரனும் தன் கார்யம்பெறுவான் ; என்கிறவகைகளா லே அவனியிரந்தளந்த வுன் திருவடிகளை. (புகையால் நறுமலரால்) உன் திருவடிகளைப் புகையால் நறுமலரால். (மிகவாய்ந்த வன்பாக்கி யீத்தி யடிமைப்பட்டேன்) புஷ்பாத் யுபகரணங்களைக்கொண்டு மிக்க வன்பையுடையேனுய் லௌகீர்யத்துக்குத் தோற்று அடி மைப்பட்டேன். (இனி என் பாக்கியத்தால்)இப்போது என்னுடைய ஸுக்ருதத்தாலே. இஸ்ஸுக்ருதத்துக் சடியாக முன்னே பூமியை யளந்து க்ருஷிபண்ணினவைத்தாய். (கூச)

அரு.—மூப்பத்துநாலாம்பாட்டு.—இப்படி யடிமைப்படும்படி அவகீயளந்தாயென்றன்வயம். (வாய்ந்த) வாய்கை-உண்டாகை.(கூச)

இனிதென்பர் காம மதனினு மாற்ற
இனிதென்பர் தண்ணீரு மெந்தாய் - இனிதென்று
காமநீர் வேளாது நின்பெருமை வேட்பரேல்
சேமநீ ராகுஞ் சிறிது. (கூடு)

ப-உ.—எந்தாய்-என்னுடைய ஸ்வாமியே! காமம் . (சப்தாதி) விஷயங்களை, இனிதென்பர் - போக்யங்களென்று சொல்லுவர்கள்; தண்ணீர் - ஜலம், அதனினும் - அதைக்காட்டிலும், ஆற்ற - மிக வும், இனிது - போக்யம், என்பர் - என்று சொல்லுவர்கள் ; காமம்- விஷயங்களையும், நீர் - ஜலத்தையும், இனிதென்று - போக்யமென் று, வேளாது - ஆசைப்படாமல், நின் - உன்னுடை ய, பெருமை-அ திசயத்தை, சிறிது - அல்பம், வேட்பரேல் - ஆசைப்படுவர்களே யா னால், சேமம் - (அது) ரக்ஷகமான, நீராகும்-ஸ்வபாவமாகும்.(கூடு)

வ்யா.—அவ.—மூப்பத்தைந்தாம்பாட்டு.— (இனி தென்பர்) இவ்விஷயங்கிடக்க சப்தாதிவிஷயங்கள் இனிதென்றிருப்பதே! என் று வெறுக்கிறார்.

(காமமினிதென்பர்) காமத்தையு மழகியதென்பர். "என்பர்" என்கிறத்தாலே தமக்கிதிலக்வய மின்றிக்கே இருக்கிறபடி. காமதந்த்ரம் போமவர்கள் காமதந்த்ரத்தையினிதென்று சொல்லுவர்கள். (அதனிலுமித்யாதி) காமத்திலும் மிகவினிது தண்ணீரென்றுசொல்லாநிற்பர்கள். விரக்தர்க்கும் வேணுமிதே தண்ணீர். "கூவஹவஹிஸுஜ நஹஃ - ஆப ஏவஹிஸுமநஸ:" என்கிறபடியே விரக்தரோடு அவிரக்தரோடு வாசியறத் தண்ணீரில் வந்தால் எல்லாரும் ஸுமநஸ்ஸுக்களாயிருப்பர்கள். (எங்காய்) இவருடைய தண்ணீருங் காமமும், "வாஸுதேவஸ்வ-ஃ - வாஸுதேவஸ்ஸர்வம்" உண்ணுஞ்சோறு" இத்யாதிவத். (இனிதென்று காமநீர்வேளாது சிறிது கின் பெருமை வேட்பரேல் சேமநீராகும்) பாக்யஹாநியடியாகவிதே அதஸ்மிந் தத்புத்திபண்ணி சப்தாதிவிஷயங்களிலே ருசிபிறப்பது; ஸ்வபாவதஃ இனிமையின்றிக்கேயிருக்கிலும் காமத்திலுந் தண்ணீரிலுமாசைப்படாதே உண்ணுடைய குணங்களிலே அல்பமாசைப்படுவாகில் ரக்ஷகயேஸ்வபாவமாம். "வாஸுதேநாஸுரணஸ்ய-புத்திநாசாத்ப்ரணஸ்யதி" என்கிறபடியே சப்தாதிகளிலாசை விநாசத்தைப் பலிப்பிக்கும் "மித்ரபாவேந - மித்ரபாவேந" என்று பகவத்விஷயத்திலே போலியான வாசையுண்டாகில், "நதுஜேயமங்கயஜுந - நத்யஜேயர்கதஞ்சந" என்றிருக்குமவன். எல்லாவாசை யுண்டாகிலும் கிடையாது சப்தாதிகள். ஓரடிவர நிற்கில் அவனதே யாம் பகவத்விஷயம். (கூரு)

அரு.—மூப்பத்தைந்தாம்பாட்டு.—ஸுமநஸ்ஸுக்களாகை - அபேக்ஷிதராகை. (கூரு)

சிறியார் பெருமை சிறிதின்க ணெய்தும்
அறியாருந் தாமறியா ராவர் - அறியாமை
மண்கொண்டு மண்ணுண்டு மண்ணுமிழ்ந்தமாயனென்
றெண்கொண்டென் னெஞ்சே யிரு. (கூசு)

ப-உ.—சிறியார் - கூஷுத்ரர்களால் நிஜைக்கப்பட்ட, பெருமை - (தங்களுடைய) உத்கர்ஷமானது, சிறிதின்கண் - கூஷுத்ரஞகையில், எய்தும் - சேர்த்துவிடும்; அறியாரும் - (க்ருத்யாக்ருத்யங்களை) அறியாதவர்களும், தாம் - தாங்கள், அறியாராவர் - புத்தி சூந்யர்களாயே

ஆவார்கள்: என் - என்னுடைய, நெஞ்சே - மநஸ்ஸே! அறியாமை- (ஒருவருக்கும்) தெரியாமல், மண் - பூமியை, கொண்டு - இரந்து கொண்டு, மண் - பூமியை, உண்டி - அமுதுசெய்து, மண் - பூமியை, உமிழ்ந்த - வெளிப்படுத்தின, மாயனென்று - அத்புதவ்யாபாரங்களையுடையவனென்று, எண்ணிக்கொண்டு - நினைத்து, இரு-ஸ்திரப்படு. (கூசு)

வ்யா.—அவ.—மூப்பத்தாறும்பாட்டு.—(சிறியார்) ப்ரமிப்பார் ப்ரமிக்கிறார். நீ இவ்வர்த்தத்தை புத்திபண்ணியிரு என்கிறார்.

(சிறியாரித்யாதி) தாங்களே சிறியராயிருந்து வைத்துத் தங்களுச்சொல்லும் பெருமை ஸ்வரூபத்திலே நிற்கும். (அறியாருமித்யாதி) அவ்விடத்திலே நமக்கு மிடையில்லை. (அறியாமையித்யாதி) நெஞ்சே! நீ பெரியார்கோடியிலேயிரு. "பேராளன் பேரோதும் பெரியோரை" என்னும்படி யொருவர்க்கு மென்கிறது. "ஸுமஹஉ - மாசுசः" என்னும்படியே. (கூசு)

அரு.—மூப்பத்தாறும்பாட்டு —ப்ரமிக்கை - விஷயங்களிலும் தேவதாந்தரங்களிலும். இரண்டுக்கு மநுகூலமாக அருளிச்செய்கிறார் (தாங்களே இத்யாதி). தேவதாந்தரம்தான் ப்ரஹ்மாதிகள் அஹங்காரத்தாலே பார்ப்பாரைப்போலே பேருக்க நினைத்திருந்தாலும் கூஷ்தரஜ்ஞருமாய், அத ஏவ கர்மவஸ்யருமான தங்கள் ஸ்வரூபத்திலே நிற்குமென்றபடி. விஷயங்களானோது தேஹாத்மாபிமானிகளாய்த் தங்களையும் விஷயங்களையும் போரப்பொலியப்பெருக்கநினைத்திருந்தார்களேயாகிலும், அல்பமாய் அல்திரமாயிருக்கிற தங்களுடையவும் விஷயங்களுடையவும் ஸ்வரூபத்திலே நிற்குமென்றபடி. (அறியாருந்தாமறியார்) இவற்றைப் பற்றுமவர்கள் அஜ்ஞராமிடத்திலருமையில்லை. அஜ்ஞரேயென்றபடி. நமக்கு மிடையில்லை—. தங்களுடைய அஜ்ஞதைக்கு அருமையில்லை. அறியாமைமண்ணை - மஹாபலியறியாமல் பின்னிற்பாளை. (கூசு)

இருந்தண் கமலத் திருமலரி னுள்ளே
திருந்து திசைமுகனைத் தந்தாய் - பொருந்தியநின்
பாதங்க ளேத்திப் பணியாவேல் - பல்பிறப்பும்
வாதங்க ளெல்லா மெமக்கு. (கூஎ)

ப-உ.—இரும் - பரந்தும், தண் - குளிர்ந்துமிருக்கிற, கமலத்து - நாபிகமலத்திலுடைய, இரு - விசாலமான, மலரின் - பூவினுடைய, உள்ளே - மத்யத்திலே, திருந்து - ஸமர்த்தனான, திசைமுக னே - நான்குமுகத்தையுடைய ப்ரஹ்மாவை, தந்தாய் - (ஸ்ருஷ்டித்துக்) கொடுத்தவனே! பொருந்திய - இணைந்திருக்கிற, நின் - உன்னுடைய, பாதங்கள் - திருவடிகளை, ஏத்தி - ஸ்துதித்து, பணியாவேல் - வணங்காமல்போனால், எமக்கு - எங்களுக்கு, எல்லாம் - ஸமஸ்தமான, பல்பிறப்பும் - அநேக ஜந்மங்களும், ஏதங்கள் - துக்கரூபங்களாகும். (வ்யர்த்தமாகும்). (கூ௭)

வ்யா.—அவ.—மூப்பத்தேழாம்பாட்டு.—(இருந்தண்) சரண்யனைப்பற்றி யாஸ்ரயியாவாகில் ஜந்மங்களெனக்குதுக்கமென்கிறார்.

(இருந்தணிய) ப்ரஹ்மாவுக்கிருக்கப் பரப்புபோந்து குளிர்ந்து விலக்ஷணமான பூவினுள்ளே ஸ்ருஷ்டிக்கவும் ப்ரமித்துப்போய் கேட்டுவரவும் வேண்டாதபடி தானே ஸமர்த்தனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவன் பொருந்திய உன்திருவடிகளையேத்திப் பணியாவாகில். (எனக்குப் பல்பிறப்பெல்லா மேதங்கள்) பல ஜந்மங்களையும் நீ பண்ணுவிக்கிறது ஒன்றல்லாவொன்றுபகவத் ஸமாஸ்ரயணத்துக்கு உறுப்பாமென்று. "ஏதங்கள்" என்கிறது—புருஷபோதங்கள்தோறும் துக்கங்களும் போதித்திறேயிருப்பது. ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் - நீ கிணைத்தபடியன்றுகில் அப்புருஷர்களுக்கெல்லா முண்டான துக்கங்களெனக் கொருவனுக்குமுண்டாம். ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தாயென்கிற வித்தாலே சரண்யனென்கிறது. "யோவை ப்ரஹ்மாணம்விதயாதிவை வேதாம்ஶ்ச ப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" "ஸ ஹோவாச மாமேவவிஜாநீஹி மாமேவோபஸரணமஹம்ப்ரபத்யே" என்கிறபடியே. (கூ௭)

அரு.—மூப்பத்தேழாம்பாட்டு.—ஏதம் - துக்கம். துக்கந்தான் ஜந்மாநுகுணமான துக்கமாகையாலே துக்கபோதத்தாலே புருஷபோதமும் தோற்றுமென்றபடி. இந்த ஜந்மத்திலே யாஸ்ரயியாவிட்டால் முன்புள்ள ஜந்மங்களும் வ்யர்த்தமாகையாலே அந்த துக்கங்களெல்லாமிப்போ தோற்றுமென்னுகை. இப்போ காஸ்ரயமுண்டாகில் அந்த ஜந்மங்களும் ஸபலமாய்த் தோற்றுமென்றபடி. அப்புருஷர்கள்—அந்தந்த ஜந்மவிசிஷ்டரான புருஷர்கள். (கூ௭)

எமக்கென் றிருநிதிய மேமாந் திராதே
தமக்கென்றும் சார்வ மறிந்து - நமக்கென்றும்
மாதவனேயென்னும் மனம்படைத்து, மற்றவன்பேர்
ஓதுவதே நாவினு லோத்து. (கூஅ)

ப-உ.—இருநிதியம் - தனக்கும் பிறர்க்குமான இருவருடைய தனத்தை, எமக்குஎன்று - நமக்குவேணும் என்று, ஏமாந்து - ப்ரமித்து, இராதே - இராமல், தமக்கு - தங்களுக்கு, என்றும - ஸர்வகாலமும், சார்வம் - ரகஸ்யம் (இதுவேஎன்று), அறிந்து-தெரிந்துகொண்டு, நமக்கு - நமக்கு, என்றும - எக்காலத்திலும், மாதவனே - ஸ்ரியஃபதியே, என்னும் - (ஆஸ்ரயணீயன்) என்கிற, மனம் - சிந்தையை, படைத்து - உடையராய்க்கொண்டு, மற்று - அதுக்குமேலே, அவன் - அந்த ஸ்ரியஃபதியினுடைய, பேர் - திருநாமங்களை, நாவினால் - வாக்கினால், ஓதுவதே - சொல்லுவதே, ஓத்து - அத்யேதவ்யமான வேதம். (கூஅ)

வ்யா.—அவ.—மூப்பத்தெட்டாம்பாட்டு.—(எமக்கென்று) அர்த்தத்தைப் புருஷார்த்தமாக புத்திபண்ணியிராதே ஸ்ரியஃபதியை யாஸ்ரயித்திருவென்கிறார்.

(எமக்கித்யாதி) கழஞ்சு பொன்னுண்டென்றறிந்து ஸர்வேஸ்வரனைப்பற்றி நிர்ப்பரராயிருப்பாரைப்போலேயிராதே. (தமக்கித்யாதி) தமக்கு நித்யமான ஆஸ்ரயமென்றறிந்து.(நமக்கித்யாதி) நமக்கென்று மநுபாவ்யன் ஸ்ரியஃபதியென்னும் நெஞ்சைப்படைத்து அம்மிதுநத்துக்கு வாசகமான சப்தத்தைச் சொல்லுகை வாஜிந்த்ரியத்துக்கோத்தாவது. (கூஅ)

ஓத்தின் பொருள்முடிவு மித்தனையே, உத்தமன்பேர்
ஏத்தும் நிறமறிமி னேழைகாள் - ஓத்ததனை
வல்லீரேல் நன்றதனை மாட்டீரேல், மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. (கூகூ)

ப-உ.—ஏழைகாள் - வேததாத்பர்ய மறியாதவர்களே! ஓத்து அதனை - வேதத்தின் அர்த்தத்தை, வல்லீரேல் - அறிய ஸமர்த்தராகில், உத்தமன் - புருஷோத்தமனுடைய, பேர் - திருநாமம், ஏத்தும் - ஸ்துதிக்கிற, நிறம - ப்ரகாரமான, இத்தனையே - இவ்வளவே, ஓத்தின் - வேதத்தினுடைய, பொருள் - அர்த்த

மூடிவு - நிச்சயிக்கும்படி, ஆகமம் - அந்த வேதார்த்தத்தை, கண்டு - செவ்வையாக, மாட்டீரேல் - அறியமாட்டீர்களாகில், மாதவன் - ஸ்ரீயபதியினுடைய, பேர் - திருநாமத்தை, சொல்லுவதே - உச்சரிக்கையே, ஓத்தின் - வேதத்தினுடைய, சுருக்கு - ஸங்கோசிதமுச்சொன்ன வார்த்தம் (என்றும்), அறிமின் - அறியுங்கோள். (நுசு)

வ்யா.—அவ.—முப்பத்தொன்பதாம்பாட்டு.— (ஓத்தின்பொருள்) இத்யாதிசேஷியும் ஆஸ்ரயணீயராகச் சொல்லாநிற்கச் செய்தே, நீரும் ப்ராமாணிகராயிருந்து லக்ஷ்மீபதியையே ஸமாஸ்ரயணீயனென்று சொல்லுகிறபடி எங்ஙனேயென்னில்; உங்களுக்கு அபிதாந வ்ருத்தியேயாய் தாத்பர்யஜ்ஞாந மில்லாமையாலேசொல்லுகிறிகோள்; தாத்பர்யஜ்ஞாந முண்டாகில் அவர்களைச் சொல்லுகிறது விபூதிக்கே; விபூதிமானாய் ஸமாஸ்ரயணீயனாயிருப்பான் லக்ஷ்மீபதியே என்றிருங்கோளென்கிறார்.

(ஓத்தின் பொருள்முடிவு மித்தனையே) வேதார்த்தத்தின் முடிவுமிதுவே. அதேதென்னில்; (உத்தமன் பேரேத்தும்திறம்) எல்லாத்துக்கும் ப்ரகாரியாயிருக்குள்ளவனுடைய திருநாமத்தையேத்துகை. (அறிமினேழைகாள் ஓத்தகமனைவல்லீரேல்) ஸாங்காத்யயநத்தைப்பண்ணி, "வேதைஶ்ச ஸர்வைரஹமேவவேத்யஃ" என்கிறபடியே வல்லீர்களாகில் அறியுங்கோள். (என்றகமனைமாட்டீரேல்) அப்படியறியமாட்டிகோளாகில்; (மாதவனிபேர்) ஓத்தினுடைய ஸங்க்ரஹரூபமான லக்ஷ்மீபதியினுடைய திருநாமத்தைச் சொல்லுகை. அவன் ப்ரஸாதமடியாகப் பிறந்த ஞாநமுடையார் சொன்னதை அர்த்தமென்றிருங்கோள். (நுசு)

சுருக்காக வாங்கிச் சுலாவி நின்று, ஐயார்
நெருக்காமுன் நீர்நினைமின் கண்டீர் - திருப்பொலிந்த
ஆகத்தாண் பாத மறிந்து மறியாத
போகத்தா லில்லை பொருள். (சஂ)

ப-உ.—ஐயார் - கோழையானது, சுலாவி - (சரீரமெங்கும்) பரவி, நின்று - இருந்து, சுருக்காக - (கண்டத்திலே) அடங்கும்படி, வாங்கி - இழுத்துக்கொண்டு, நெருக்காமுன் - (கண்டத்தை) அடைப்பதற்குமுன்னமே, திரு - லக்ஷ்மியாலே, பொலிந்த - அதிசயித்திருக்

கிற, ஆகத்தான்-திருமேனியையுடைய ஸர்வேஸ்வரனுடைய, பாதம்-திருவடிகளை, நீர் - நீங்கள், நினைமின்கண்டீர் - அநுஸந்தித்திருங்கிடிகோள்; அறிந்தும் - (விஷயங்களை கூடாதாரங்களென்று) அறிந்தும், அறியாத - அவ்வறிவின் கார்யமான த்யாகத்தைச் செய்யப்போகாத, போகத்தால் - விஷயாநுபவத்தினால், பொருள் - ப்ரயோஜநம், இல்லை - கிடையாது. (ச ०)

வ்யா.—அவ.—நாற்பதாம்பாட்டில்.—(சுருக்காக) நீங்கள் கிற்கிற நிலைபொல்லாது; கடிக ஸ்ரியஃபதியினுடைய திருவடிகளை நினையுங்கோள்.

(சுருக்காதவித்யாதி) பஞ்சதாவான சரீரத்தைச் சுருங்கவிடித்து உடம்பெங்கும் நாளை யாம்படி வ்யாபித்து ஸ்லேஷ்மாவானது நெருக்குவதுக்குமுன்பே நினையுங்கோள். அத்தலைகம்ஸகமன்றோவென்னில்; உத்தேச்யத்தையறியாதபடி அகர்த்தகதைப்பண்ணும். (திருப்பொலிந்தவித்யாதி) ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை அறிந்திருக்கச்செய்தே அறிந்ததாகவொட்டாத போகத்தால். (அறிந்துமறியாத போகத்தாலில்லை பொருள்) பொல்லாதென்றிருக்கச் செய்தே கைவிடப்போகாத அர்த்தஸம்ஸ்காரத்தால் ப்ரயோஜநமில்லையென்றுமாம். (நெருக்காமுன் திருப்பொலிந்தவாகத்தான் பாதம் நீர் நினைமின்கண்டீர்) "நினைமின்" என்கிற விது இரண்டிடத்திலும் கிடக்கிறது. (ச ०)

அரு.—நாற்பதாம்பாட்டு.—(பஞ்சதா) பஞ்சப்ரகாரதையா; பஞ்சபூதாத்மகமான சரீரமென்னுதல், பஞ்சப்ராணனுடைய சக்ரமென்னுதல். போகம் - ஐச்வர்யம். அறிந்துமறியாத - ஸர்வேஸ்வரனையறிந்து மறியவொட்டாத வர்த்தமென்னுதல், தன்னை த்யாஜ்யமென்றறிந்தும் கைவிடப்போகாத அர்த்தமென்னுதல். பொருள் - ப்ரயோஜநம். ஆகையாலே பாதம் நினைமினென்று. இங்குக்கூட்டுவது. (ச ०)

பொருளா லமருலகம் புக்கியல லாகாது
அருளா லறமருளு மன்றே - அருள்வாலே
மாமறையோர்க் கீந்த மணிவண்ணன் பாதமே
நீமறவேல் நெஞ்சே நினை. (ச க)

ப-உ.—பொருளால் - புருஷார்த்தமென்கிற புத்தியால், அமருலகம் - தேவலோகத்தில், புக்கு-ப்ரவேசிப்பதற்கு, இயலலாகாது - யத்நிக்கக்கூடாது; அருளால் - க்ருபையாலே அறம் - புண்ய ஸாத்யமானலோகத்தை, அருளுமன்றே - (ஸர்வேஸ்வரன்) கொடுப்பனன்றே; மா - பெரியோர்களான, மறையோர்க்கு - வைதிகர்களுக்கு, அருளாலே - க்ருபையாலே, ஈந்த - (மோக்ஷத்தை) கொடுத்தவனுமாய், மணி - நீலரத்ந ஸத்ருசமான, வண்ணன் - வடிவையுடையவனுமான ஸ்ரீயஃபதியினுடைய, பாதமே - திருவடிகளையே, நெஞ்சே - மநஸ்ஸே! நீ - நீ, மறவேல் - விஸ்மருதிபண்ணுதேகொள்; நினை - (அவற்றை) த்யாநம்பண்ணு. (சக)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு.—(பொருளித்யாதி) பொருளாலே ஸ்வர்க்கத்தில் புகயத்நம்பண்ணப்போகாது. (அருளாலித்யாதி)க்ருபையாலே இவை ஸ்வர்க்கத்தை யாசைப்பட்டதாகில் ஸ்வர்க்கத்தைக் கொடுப்போமென்றிருக்கும். (அருளாலேஇத்யாதி) தன்க்ருபையாலே தன்னைக் கொடுக்குமவன் திருவடிகளேமறவாதேகொள். அவற்றைநினை, "மாமறையோர்" என்றது-"ஸுகோஷ-தூராவாஷேவோவிஷ-தஃ - சுகோமுக்தேராவாமதேவோபிமுக்தஃ" என்றவர்கள்; ஸ்ரீதண்டகாரண்யத்தில் ருஷிகளென்றுமாம். ஸ்ரீமார்க்கண்டேயனென்றுமாம். (சக)

அரு.—நாற்பத்தோராம்பாட்டு.—ஆனலும் ஸ்வர்க்காதிகளுக்கு அர்த்தம் ஸாதநமாயன்றே இருக்கிறதென்ன; அருளிச்செய்கிறார் (பொருளித்யாதி). அறமருளும் - அர்த்தத்காலே தர்மத்தை ஸாதித்தாலும் தர்மம் அசேதநமாகையாலே தர்மகார்யமான ஸ்வர்க்கத்தை அருளாலே கொடுக்குமென்றபடி. (சக)

நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் தேரார் - மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்ப மெல்லாம்
துறந்தார் தொழுதாரத் தோள். (சஉ)

ப-உ.—நீண்ட - (போக்யதையால்) மிகுந்த, தோள்-புஜங்களை, காண - ஸாக்ஷாத்கரிக்கைக்கு, திருமாலை - ஸ்ரீயஃபதியை, நினைப்பன் - த்யாநியாநின்றேன்; நினைப்பார் - த்யாநிக்குமவர்கள், ஒன்ற - ஒருவிதமான, பிறப்பும் - ஜந்மத்தையும், தேரார் - கிட்டார்கள்.

மனைப்பால் - ஓரிடத்தில், பிறந்தார் - ஜந்மித்தவர்கள், பிறந்து - ஜந்மித்து, எய்தும் - அடையும், பேர் - பெரிய. இம்பமெல்லாம் - ஸமஸ்தஸுகங்களையும், அத்தோள் - அந்த புஜத்தை, தொழுதார்-ஆஸ்ரயித்தவர்கள், துறந்தார் - த்யஜித்தவர்களாவர்கள். (சுஉ)

வ்யா.—நாற்பத்திரண்டாம் பாட்டு.—(நினைப்பன் திருமாலை) அத்ரிபகவானு ஸ்ரமத்தில் பிராட்டியோடே வந்தாற்போலே நினையாகின்றேன். எதுக்கு நினைக்கிறதென்னில்; அவளோட்டைக் கலவியாலே போக்யதை யளவிறந்ததோலைக்காண. ஸ்வர்க்காதிகளுக்கன்று; (நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்) அத்தோளை நினைக்குமவர்கள் ஸம்ஸாரத்தை யொருநாளும் கிட்டார்கள். (மனைப்பாலித்யாதி) ஸம்ஸாரஸுகத்தைத் துறந்தவர்கள் அத்தோளைத் தொழப்பெறுவர்கள். (சுஉ)

தோளிரண் டெட்டேழும் மூன்றும் முடியனைத்தும்
தாளிரண்டும் வீழச் சரந் துரந்தான் - தாளிரண்டும்
ஆர்தொழுவார் பாத மவைதொழுவ தன்றே, என்
சீர்கெழுதோள் செய்யும் சிறப்பு. (சுங)

ப-உ.—இரண்டு எட்டு ஏழும் மூன்றும் - இருபதான, தோள்-புஜங்களையும், அனைத்து-ஸமஸ்தமான, முடியும் - தலைகளையும், தாளிரண்டும் - இரண்டு கால்களையும், வீழ - விழும்படி, சரம் - பாணங்களை, துரந்தான் - விட்டவனுடைய, தாளிரண்டும் - இரண்டு திருவடிகளையும், ஆர் - எவர், தொழுவார் - ஆஸ்ரயிப்பர்களோ; பாதமவை - (அவர்களுடைய) சரணங்களை, தொழுவதன்றே-ஆஸ்ரயிப்பதன்றோ, என்-என்னுடைய, சீர் - அழகு, கெழு-அமைந்த, தோள்-புஜங்கள், செய்யும் - பண்ணும், சிறப்பு - உபகாரம். (சுஙு)

வ்யா.—அவ.—நாற்பத்து மூன்றும்பாட்டு.— (தோளிரண்டு) தோளைத் தொழுவதியோம்; அத்தோளைத் தொழுவார் தாளைத்தொழுமித்தனையென்கிறார்.

(தோளித்யாதி) எட்டு மிரண்டும் ஏழும்மூன்றுமாக இருபது தோள்களும், முடியனைத்தும் தாளிரண்டும் மற்றும் விழும்படிக்கீடாகச் சரத்தைவிட்டவன். ஆஸ்ரிதவிரோதியாகையாலே நம்மாலே ஸ்ருஷ்டனென்றும் பாராதே முடியச்செய்தவனுடைய திருவடிகளிரண்டையும் யாவர் சிலர் தொழுதார்கள். ஏதேனும் ஜக்மமாகிலும்

அவர்களுடைய தாளேத்தொழுகையன்றே புருஷார்த்தம்தரவந்த தோள்செய்யு முபகாரம். (சஙு)

சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடரா வையேன் - அறம்தாங்கும்
மாதவனே யென்னும மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினு லுள்ளு. (சச)

ப-உ.—சிறந்தார்க்கு - ஸ்ரேஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, எழு - போகத்தக்க, (அர்ச்சிராதி மார்க்கத்துக்கு), துணையாம் - ஸஹாயமாயிருக்குமவனும், செம் - சிவந்த, கண் - நேத்ரங்களையுடைய, மால் - வ்யாமோஹத்தையுடையவனுடைய, நாமம் - திருநாமத்தை, மறந்தாரை - விஸ்மரித்திருக்குமவர்களை, மானிடமா - மனுஷ்யர்களாக, வையேன் - நினைக்கமாட்டேன். அறம் - (ஆந்ருசம்ஸ்யமான) தர்மத்தை, தாங்கும் - தரித்திருக்கும், மாதவனே - ஸ்ரியஃபதியே! என்னும் - என்று ப்ரீதமாகும், மனம் - மநஸ்ஸை, படைத்து - உண்டாக்கி, மற்று - அதுக்குமேலே, அவன்பேர் - அந்த ஸ்ரியஃபதிக்கு வாசகமான திருநாமத்தை, நாவினுல் - நாக்காலே, ஓதுவது - சொல்லுகைக்கு, உள்ளு - அநுஸந்தி. (சச)

வ்யா.—நாற்பத்துநாலாம்பாட்டு.—(சிறந்தாரித்யாதி) திருநாமத்தைச்சொன்னவர்களுக்கு ப்ராக்ருதங்களில் அருசியைப்பண்ணுவித்து உத்க்ரமணதசையில் ஆதிவாஹிகர்க்கு முன்னேதானே துணையாகக் கொண்டுபோகக்கடவனும். வாத்ஸல்யத்தாலே சிவந்த கண்களையுடைய வீச்வரனுடைய திருநாமத்தை மறந்தாரை மநுஷ்யராக புத்திபண்ணியிரேன். அஜ்ஞரை ஸர்வஜ்ஞரென்றிருப்பன். அறிகைக்கு யோக்யதையுண்டா யிருக்கையாலே. குருவிந்தக்கல்லை மாணிக்கமென்று நினைத்திருந்தால் ரத்நமாகாதிறே; ரத்நபரீக்ஷகன் ரத்நமாமென்றதிறே ரத்நமாவது; அப்படியே கெஞ்சிலே மனிசரென்று வைக்கப்பட்டவர்கள் மநுஷ்யராவரென்கிறார். "மானிடவ ரல்லரென்று என்மனத்தேவைத்தேனே" என்கிறபடியே. (அறந்தாங்குமித்யாதி) ஆந்ருசம்ஸ்யத்தாலே தரியாநின்ற ஸ்ரியஃபதியினுடைய திருநாமத்தை நாவினுலே ஓதவள்ளு. (சச)

அரு.—நாற்பத்துநாலாம்பாட்டு.—மறந்தாரை - ஒருகால் சொல்லி மறந்தாரை. இவர் மநுஷ்யரல்லரென்றபோதே மநுஷ்யான்

றிக்கேபோவர்களோவென்ன ; அருளிச்செய்கிறார் (குருவிந்தக்கல்லை யித்யாதி). ஒக உள்ளு - ஒதுகைக்கு விசாரியுங்கோளென்று பரோபதேசம். (சச)

உளதென் றிறுவாமா ருண்டில்லை யென்று
தளர்தல்த னருகும் சாரார் - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று. (சரு)

ப-உ.—அளவரிய - பரிச்சேதமில்லாத, வேதத்தான் - வேதத்தினால் ப்ரதிபாதிக்கப்பட்டவனும், வேங்கடத்தான் - திருமலையை வாஸஸ்தானமாக வுடையவனும், விண்ணோர்-நித்யஸூரிகளுடைய, முடி - சிரஸ்ஸுக்கள், தோயும் - உறைந்திருக்கிற, பாதத்தான்-திருவடியையுடையவனுமான ஸர்வேஸ்வரனுடைய, பாதம் - திருவடிகளை, பயின்று-ஆச்ரயித்து, உளது என்று - (தனம்) உண்டு என்று, இறுமாவார் - கர்வப்படார்கள் ; உண்டு - முன்புண்டாயிற்று; இல்லை - இப்போது இல்லை ; என்று - இப்படி நினைத்து, தளர்தல் - சோகித்தலாகிற, அதனருகும்-அதன் ஸமீபத்திலும்கூட, சாரார் - கிட்டார். (சரு)

வ்யா.—அவ.—நாற்பத்தைந்தாம்பாட்டு.—(உளதென்று) நித்யஸூரிகளுக்கு ஸ்ப்ருஹணீயமானவனுடைய திருவடிகளைப்பயிலுமவர்கள் அர்த்தத்திலுடைய லாபாலாபங்களுக் கீடுபடார்.

(உளதென்றிறுமாவார்) தரித்ரர் அர்த்தமுண்டாகவாறே மாதா பிதாக்களையும் ஆசார்யர்களையும் அவமாகப் பண்ணுவர்கள் ; இவர்களிப்படிசெய்யார்கள். (உண்டில்லையித்யாதி) இல்லையென்று தளராரென்னுதே உண்டில்லையென்று தளராரென்றதென்னில் ; நித்யதரித்ரன் சோகமறியான் ; ஒருநாளுண்டாய் அதில்லையானவாறே, பாவி யேன் பண்டுஸுகமே ஜீவித்தோம், இப்போது இடிபடாநின்றோமென்று மிகவும் தளர்த்திக் குடலாமென்று உண்டில்லையென்று தளராரென்று சொல்லுகிறது. பகவத் விஷயத்தில் பிரிவு முத்தேஸ்யமோவென்னில் ; "அழுகீர்களும்ப வலமருகின்றன வாழிபரோ" "கியஶ்சிரம்விநதராஹ்யாம்வாரிஸ்ரவதிசோகஜம் - நிமர்த்தும் தவதீக்ஷ்ணாப்யாம் வாரிஸ்ரவதிசோகஜம்" ஸம்ஸாரத்தில் ஸம்ஸாரியிற் காட்டில் ஜ்ஞானவானுக்கு வாசி விஸ்லேஷத்தில்

துவட்சியன்றே. இத்தையன்றே * உண்ணுஞ்சோற்றில் மூற்கூறும் * துவளில் மாமணியுஞ் சொல்லுகிறது; "முன்னைநோற்ற விதிகொலோ முகில்வண்ணன் மாயங்கொலோ" நான் பண்ணின ஸுக்ருதமோ; இடைவீடின்றிக்கே அவன் சன்னுடைய க்ருபை யோ; "நிமுணஉவரோதாஹௌஹேஹம் தேவ்யாவ்ருதிஷ்டதி - நிர்க்குணஃ பரமாத்மாஹௌதேஹம்தேவ்யாப்யதிஷ்டதி" என்னு மப்படிகளாலே பிரிவு முத்தேஸ்பம். "தளர்தலதனருஞ்சாரார்" என்றது - சோகமுண்டாய் அதுதாபம்பிறந்து மீளாரென்கிறது; மூதலிலேதளராரென்கிறது - அஸ்திரமென்றுநினைத்து. ஒருகால் ஸ்தி ரமென்றுநினைத்து ஒருகால் அஸ்திரமென்று நினைத்திருக்குமவர்கள ன்றிறே. ஸ்திரமானது அஸ்திரமாயிற்றென்னிலிறே சோகமுள்ளது. (அளவறியவேதத்தான்) அபரிச்சிந்நமான வேதத்தாலே ப்ரதிபாதிக் கப்படுமவன். கண்ணுலேகாண வாசைப்படுமவனுக்கு வேதப்ரதி பாத்யனென்றால் என்ன ப்ரயோஜநமுண்டென்னில்; (வேங்கடத் தான்) எல்லாருங்கண்டு ஆஸ்ரயிக்கும்படிக் கீடாகத் திருமலையிலே கின்றான். எங்களுடைய அர்த்தத்தோபாதி யும்முடையவர்த்தமும் ப்ரத்யக்ஷமாயிற்றிறே யென்னில்; (விண்ணோர் முடிதோயும் பா தத்தான்) நித்யஸூரிகளுக்கு ஸ்ப்ருஹணீயனனவன். அவனு டைய ஸத்பாவத்துக் கிசைந்தால் அவர்களுக்குங்கூட ஸ்ப்ருஹ ணீயனனவனே நிங்குவந்து நிற்கிறனென்று ஆதரிக்கவேண்டா வோ ப்ராமாணிகராகில். (விண்ணோர்முடிதோயும் பாதத்தான் பாதம் பயின்று உளதென்றிறுமாவார்) இவர்களுக்கிறுமாக்கவும் தள ரவும் அவஸரமில்லை. (சகு)

அரு.—நாற்பத்தைந்தாம்பாட்டு.—நிர்க்குணஃ - காணேறிடாத வில்லையுடைய சக்ரவர்த்தித் திருமகன். இது புஷ்பாஹரணத்த மாக மஹாமேருவைக்குறித்து பீமஸேநன் போகிறபோது வழி யிலே திருவடியைக்கண்டு சொன்னவார்த்தை. தளர்தலாகிறவதனரு கும் - அசேதநமான எங்களர்த்தம்போலே உம்முடைய வர்த்த மான அர்ச்சாவதாரமும் அர்ச்சக பராதீநமன்றே என்று சங்காபிப் ராயம். இது ரஹஸ்யமாகப்போகிறதோ என்று தாத்பர்யம். (சகு)

பயின்ற தரங்கம் திருக்கோட்டி, பன்னள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னள் - பயின்ற

தணிதிகழும் சோலை யணிநீர்மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால் (சசு)

ப-உ.—மணி - நீலரத்நம்போல், திகழும் - ப்ரகாசிக்கிறவடி வையும், வண் - (தாநத்தில்) சிறந்த, தடம் - விசாலமான, கை-கர ங்களையுடைய, மால் - ஸர்வேச்வரன், பயின்றது - ஆதரித்துப் போந்தது, அரங்கம் - கோயில், திருக்கோட்டி - திருக்கோட்டியூர் (இந்த திருப்பதிகளை); பல்நாள் - சிரகாலம், பயின்றதுவும் - நித்ய வாஸம்பண்ணினதும், வேங்கடமே - திருமலையிலே; பல்நாள்-அநேக காலம், பயின்றது - கெருங்கியிருந்தது, அணி - அழகு, திகழும் - விளங்காநின்ற, சோலை - தோப்புகளையுடைய, அணி - அலங்கார மான, நீர்மலையே - திருநீர்மலையிலே. (சசு)

வ்பா.—அவ.—நாற்பத்தாறும்பாட்டு.—(பயின்றது) இவர்களை இப்படிப் பயிலப்பண்ணுகைக்கு இவர்கள் பட்டதன்று அவன் படுவது.

(பயின்றதித்யாதி) மணிபோலே ஸ்ரமஹரமானவடிவையும் உதாரமானகையையுமுடைய ஸர்வேச்வரன் பலகாலம்பயின்றது, கோயில், திருக்கோட்டியூர், திருமலை; பலநாள்பயின்றது, தர்சநீயமாய்த் திகழாநின்ற சோலையையுடைத்தாய் ஸம்ஸாரத்துக் காபரணமா யிருந்துள்ள திருநீர்மலையே. (சசு)

மாலை யரியுருவன் பாதமல ரணிந்து
காலை தொழுதெழுமின் கைகோலி—ஞாலம்
அளந்திடந் துண்டுமிழ்ந்த வண்ணலை மற்றல்லால்
உளங்கிடந்த வாற்ற லுணர்ந்து (சள)

ப-உ.—ஞாலம் - பூமியை, அளந்து - ஆக்ரமித்து, இடந்து - பிரித்தெடுத்து, உண்டு-அமுதுசெய்து, உமிழ்ந்த-வெளிப்படுத்தின, அண்ணலை - ஸ்வாமியை, அல்லால் - இவைதவிர, மற்று-வேறு ரும், உளங்கிடந்த - ஹ்ருதயத்தைப்பற்றியிருக்கிற, ஆற்றல் - ப்ரகாரத்தால், உணர்ந்து - அறிந்து, அரியுருவன் - நரஸிம்ஹவிக்ரஹத்தை யுடையவனுடைய, பாதமலர் - தாமரைபுஷ்பம்போலேயிருக்கிற திருவடிகளிலே, மாலை - புஷ்பமாலையை, அணிந்து - சாத்தி, காலை-உதயகாலத்தில், கை - கரங்களை, கோலி - கூப்பிக்கொண்டு, தொழுது - வணங்கி, எழுமின் - உஜ்ஜீவியுங்கோள். (சள)

வ்யா.—அவ.—நாற்பத்தேழாம்பாட்டு,—(மாலே) அவன் ஸ்வபாவ மிப்படியானபின்பு 'எல்லாருமவனே ஆஸ்ரயியுங்கோ ளென்கிறது.

(அரியுருவன்பாதமலர் மாலையணிந்து கைகோலிக்காலே தொழுதெழுமின்) ஆஸ்ரிதார்த்தமானவடிவைத் தனக்கு வடிவாக உடையவனுடைய திருவடிகளிலே மலர்மாலையையணிந்து கைகூப்பி ப்ரார்த்தமான முஹூர்த்தத்திலேதொழுது உஜ்ஜீவியுங்கோள். "கைகோலி" என்று ஏற்கவே கோலினென்கிறது. "கைகூப்பி" என்றுமாம். (ஞாலமித்யாதி) சேதநர்க்கநுபாவ்யமான குணங்களையுடைய சேஷியை. (மற்றல்லாலித்யாதி) மற்றுநீங்க ளநுஸந்திக்கும்படி எல்லாத்தையுமுணர்ந்து காலே தொழுதெழுமின். மற்றெல்லா மிதிபாடாந்தரம். (சள)

அரு.—நாற்பத்தேழாம்பாட்டு.—மற்றல்லால் - நான்சொன்னபடியன்றியே. உளங்கிடந்தவாற்றால் - உங்கள் ஹ்ருதயத்திலே கிடந்த ஆஸ்ரயண ப்ரகாரத்திலே உணர்ந்து தொழுமினென்கை. மற்றெல்லாமென்றபக்ஷத்துக்கு ஆஸ்ரயண ப்ரகாரங்களெல்லா முணர்ந்து தொழுமினென்கை. (சள)

உணர்ந்தாய் மறைநான்கு மோதிஞாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே—மணந்தாய்போய்
வேயிருஞ் சாரல் வியலிருஞாலம்சூழ்
மாயிருஞ் சோலை மலை. (சஅ)

ப-உ.—மறைநான்கும் - நான்கு வேதங்களையும், உணர்ந்தாய் - (ஸ்ருஷ்டிஸமயதசை) ஸ்மரித்தாய்; நீதி - அர்த்தநிச்சாயகமாக ஸ்ம்ருத்யாதிகளை, ஓதிஞாய் - அத்யயநம்பண்ணிவைத்தாய்; மலர்மகள் - கமலவாஸிநியான பிராட்டியினுடைய, தோள் - புஜங்களை, மணந்தாய் - ஸம்ஸ்லேஷித்தாய்; மாலே-வ்யாமோஹத்தையுடையவனே! வேய் - மூங்கில்களாலே, இரும் - நிறைந்த, சாரல் - மலைப்பக்கங்களையுடைய, வியல் - ஆச்சர்யகரமான, இரு - விசாலமான, ஞாலம்-பூமியிலுள்ள ஜனங்களால், சூழ் - சூழப்பட்ட, மா-உயர்ந்த, இரும் - பரந்த, சோலை - தோப்பையுடைய, மலை - திருவேங்கடத்திலே, போய் - சென்று, மணந்தாய் - சேர்ந்தாய். (சஅ)

வ்யா.—அவ.—நாற்பத்தெட்டாம்பாட்டு.—(உணர்ந்தாய்) எல்லாரு முன்னே யுணரும்படி எல்லாத்தையு முண்டாக்கினாய்.

(உணர்ந்தாய் மறைநான்கும்) ஸம்ஸ்காராதிசயமாக உன்திரு வுள்ளத்திலே கிடந்த வேதத்தை ப்ரகாசிப்பித்தாய். (ஓதினாய்நீதி) வேதோப ப்ரும்ஹணமான இதிஹாஸபுராணங்களேஉண்டாக்கினாய். (மணந்தாய்மலர்மகள் தோள்) வேதப்ரதிபாத்யை யானவளுடைய தோளைஸம்ஸ்லேஷித்தாய். (போய்வேயிதயாதி) வேதப்ரதிபாத்ய னாகில் பரமபதத்திலே யிறேயென்னுதபடி ஸம்ஸாரிகளுக் கநுபவிக்க லாம்படி திருமலையைவிரும்பினாய். (சஅ)

அரு.—நாற்பத்தெட்டாம்பாட்டு.—வேய் - உயரப்போயிருக்கிற மூங்கில். மாயிருஞ்சோலை மணந்தாய் - விரும்பினாயென்னை. (சஅ).

மலையேழும் மாநிலங்களேழு மதிர
குலைசூழ் குளைகடல்க ளேழும்—மூலைசூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை நவின்றுண்ட நாவனென்று
அஞ்சாதென் னெஞ்சே யழை. (சஈ)

ப-உ.—மலையேழும் - ஏழுகுலபர்வதங்களும், மா - பரந்த, நிலங்களேழும் - ஏழுத்வீபங்களும், குலை - கரையினுல், சூழ் - ஆவரிக்கப்பட்ட, குளை - சப்தியாகின்ற, கடல்களேழும் - ஏழு ஸமுத்ரங்களும், அதிர - நடுங்கும்படி, மூலை - ஸ்தநத்தில், சூழ்ந்த - வ்யாபித்த, நஞ்சு - விஷத்தினுலுண்டான, உரத்து - பலத்தையுடைய, பெண்ணை - பெண்ணுனபூதனை, நவின்று - மழலைச்சொல்லைச் சொல்லிக்கொண்டு, உண்ட - அமுதுசெய்து முடித்த, நாவனென்று - நாக்கையுடையவனென்று, என் - என்னுடைய, நெஞ்சே-மநஸ்ஸே! அஞ்சாது - பயப்படாமல், அழை - கூப்பிடு. (சஈ)

வ்யா.—அவ.—நாற்பத்தெதான்பதாம்பாட்டு.—திருமலையை விரும்பின பின்பு லோகமெல்லா மதிரும்படி அவன் பேரைச்சொல்லி அழையென்கிறார்.

(மலையேழுமித்யாதி) மூலையெங்கும் வ்யாபித்த நஞ்சாலே மிடுக்குடையளான பூதனையை முக்திமான சொலவுகளை அவள் முகத்தேசொல்லிச் சுவையாகின்ற ருசியையுடையவனென்றழை. ப்ரதி

பந்தகமுண்டாகில் செய்வதென்னென்னில்; (அஞ்சாது) பூதனை பட்டது படுமித்தனை. (சகூ)

அரு.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.—குலைசூழ் – கரையாலே சூழப்பட்ட. (சகூ)

அழைப்பன் திருமாலை யாங்கவர்கள் சொன்ன
பிழைப்பில் பெரும்பெயரே பேசி—இழைப்பரிய
வாயவனே யாதவனே யென்றவனை யார்முகப்பும்
மாயவனை யென்று மதித்து. (நிஐ)

ப-உ.—இழைப்பு - (நெஞ்சில்) அழுத்துகைக்கு, அரிய - துர்லபனை, ஆயவனே - இடையனானவனே! என்றும் - என்றும், யாதவனே என்றும் - யதுகுலத்திலவதரித்தவனே! என்றும், மாயவனே என்றும் - ஆச்சர்யபூதனானவனே! என்றும், மதித்து - புத்திபண்ணி, ஆங்கு-அந்தத் திருவாய்ப்பாடியிலுள்ள, அவர்கள் - அப்பெண்கள், சொன்ன-உச்சரித்ததாய், பிழைப்பு இல் (கேட்டுப்) பிழைக்கப்போகாததாயிருக்கிற, பெரும் - பெருமையையுடைய, பெயரே-திருநாமத்தையே, பேசி - சொல்லி, திருமால் - ஸ்ரியஃபதியான, அவனை - அந்த ஸர்வேஸ்வரனை, யார்முகப்பும் - எல்லார்முன்பும், அழைப்பன் - கூப்பிடுவேன். (நிஐ)

வ்யா.—ஐம்பதாம்பாட்டு.—(அழைப்பன் திருமாலை) ஸ்ரியஃபதியையழைப்பன். (ஆங்கித்யாதி) திருவாய்ப்பாடியிலவர்கள் சொன்னவற்றை யதுஸந்திக்கப் புக்கால் பிழைக்கவொண்ணாதாய் அத்தாலே அரைக்ஷணம் விடப்போகாத திருநாமங்களைச்சொல்லி. "ஆங்கவர்கள்" என்றது - திருவாய்ப்பாடியிலுள்ளவர்களைப் பார்த்து நம்முடைய பக்கலிலே இரங்குவரென்று. (இழைப்பரியவாயவனே) நினைக்கவரிதாம்படி பெண்களைப் படுத்தும் க்லேசத்தையுடைய க்ருஷ்ணனே. (யாதவனே என்றவனை) இடைத்தனத்தோபாதியும் ஸ்ரீவஸுதேவர் மகனானதும் ஆகர்ஷகமானபடி. (யார்முகப்பும்) எல்லார்முகப்பும். (மாயவனேயென்றுமதித்து) ஆச்சர்யபூதனேயென்று மதித்து. திருமாலையழைப்பன். (நிஐ)

அரு.—ஐம்பதாம்பாட்டு.—பிழைப்பில்-ஏடுபடுத்துமதாய் என்றபடி. ஆயவனென்றமையாதே? மாதவனும் வேணுமோ வென்ன;

அருளிச்செய்கிறார் (இடைத்தனத்திலித்யாதி). முகப்பும் – எல்லார் முன்பும்.
(நிஅ)

மதிக்கண்டாய் நெஞ்சே மணிவண்ணன் பாதம்
மதிக்கண்டாய் மற்றவன்பேர் தன்னை - மதிக்கண்டாய்
பேராழிநின்று பெயர்ந்து கடல்கடைந்த
நீராழிவண்ணன் நிறம்.
(நிக)

ப-உ.—நெஞ்சே – மநஸ்ஸே! மணி – நீலரத்நதுல்யமான, வண்ணன் - வடிவையுடையவனுடைய, பாதம் - திருவடிகளை, மதிக்கண்டாய் - புத்திபண்ணுகிடாய்; மற்று - அதற்குமேலே, அவன்-அந்த ஸர்வேஸ்வரனுடைய, பேர்தன்னை-திருநாமங்களை, மதிக்கண்டாய் - புத்திபண்ணுகிடாய்; பேர் – பெரிய, ஆழிநின்று – ஸமுத்ரத்திலிருந்து, பெயர்ந்து - எழுந்திருந்து, கடல் - அந்த ஸமுத்ரத்தை, கடைந்த - மதநம்பண்ணின, நீர்-ஜலம்நிறைந்த, ஆழி-ஸமுத்ரம்போன்ற, வண்ணன் - திருமேனியையுடையவனுடைய, நிறம் - அழகை, மதிக்கண்டாய் - புத்திபண்ணுகிடாய்.
(நிக)

வ்யா.—ஐம்பத்தோராம்பாட்டு.—(மதியித்யாதி) ஸ்ரமஹரமான வடிவையுடையவனுடைய திருவடிகளை நெஞ்சே மதிக்கண்டாய். அவனுக்கு வாசகமான திருநாமத்தை மதிக்கண்டாய். (மதிக்கண்டாயித்யாதி) கண்வளருகைக்குப் போருப்படி பெரிதான திருப்பாற்கடலில் நின்றும் பேர்ந்து பின்னையத்தைக்கடைவதுஞ் செய்து நீரையுடைத்தான கடல்போலேயிருக்கிறவனுடைய திருநிறத்தையநுஸந்தி.
(நிக)

நிறங்கரியன் செய்ய நெடுமலராள் மார்வன்
அறம்பெரிய ஞானத்தறிவார் - மறம்புரிந்த
வாளரக்கன் போல்வானை வானவர்கோன் தானத்து
நீளிருக்கைக் குய்த்தான் நெறி.
(நிஉ)

ப-உ.—நிறங்கரியன் - கறுத்த வர்ணத்தையுடையனுமாய், செய்ய - சிவந்த, நெடு - பெரிதான, மலராள் - கமலவாஸிநியான பிராட்டியை, மார்வன் – வக்ஷஸ்ஸிலேயுடையனுமாய், அறம் - ஆத்ருசம்ஸ்யநாமத்தினாலே, பெரியன் - சிறந்தவனுமாய, மறம் - க்ரூரகர்மத்தை,

புரிந்த - செய்த, வாள் - வாளென்கிற ஆயுதத்தையுடைய, அரக்கன் போல்வானே - ராக்ஷஸனான ராவணனுடைத்த மஹாபலியை, வானவர் - தேவர்களுக்கு, கோன் - ஸ்வாமியான இந்த்ரனுடைய, தானத்து - பதத்திலே, நீள் - சிரகாலம், இருக்கைக்கு - (மேல்மந்வந்தரத்தில்) வஸிக்கும்படிக்கு, உய்த்தான்-பண்ணிக்கொடுத்தவனுமிருக்கிற ஸர்வேஸ்வரனுடைய, அது - அந்த, நெறி - ப்ரகாரத்தை, ஆர் - எவர், அறிவார் - அறியவல்லர். (நூஉ)

வ்யா.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—(நிறங்கரியனித்யாதி) ஸ்ரமஹாரமான வடிவையுடையனும், நீலமேகத்திலே மின்னற்போலே பிராட்டியைத் திருமார்விலேயுடையனும், அவளோட்டைக் கலவியாலே ஆற்றுசம்ஸ்ய ப்ரதாநனான படியை யாரறிவார். (மறம்புரிந்தவித்யாதி) ராவணனைப்பாதியும் வதத்துக்கு யோக்யனாயிக்கச்செய்தே இவன் பக்கலிலே ஔதார்யகுணங் கிடந்ததென்று, "உபேந்த்ரம்வை தஸ்மாத்" - மந்வந்தரம்பூர்ணமபேதசத்ரு:" என்னும்படியே மேலிந்த்ரபதம் செலுத்துவதாக வைத்தவனுடைய ஆற்றுசம்ஸ்யத்தை யறிவாரார். (நூஉ)

அரு.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—வானவர்கோன் தானத்திலே நீளிருக்கைக்கு-ஒரு மந்வந்தரமிருக்கைக்காக. உய்த்தாய்-மஹாபலியைப் பாதாளத்திலே நிறுத்தினாய். (நூஉ)

நெறியார் குழல்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியா திளங்கிரியென் றெண்ணிப் - பிரியாது
பூங்கொடிக்கள் வைகும் பொருபுனல் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு. (நூஊ)

ப-உ.—நெறியார் - ஸம்மார்க்கத்திற்செல்லுகிற (பக்தஜநங்களுடைய), முன்நின்று - முன்புறத்திலிருந்து, பின்தாழ்ந்து - பின்புறத்தில் தொங்கியிருக்கிற, குழல்கற்றை- மயிர்முடியை, அறியாது-உணராமல், இளங்கிரி என்று - சிறியமலை என்று, எண்ணி - நினைத்து, பிரியாது - நீங்காமலிருக்கிற, பூ - புஷ்பம்நிறைந்த, கொடிக்கள் - லதைகள், வைகும் - வாஸம்பண்ணுகிறதாயும், பொரு - அலைமோதுகிற, புனல் - ஜலத்தையுடையதாயுமிருக்கிற, குன்று - மலை ; என்னும் - இப்படி ப்ரஸித்தமான, வேங்கடமே - திருமலையே, யாம்-நாங்கள், விரும்பும் - ஆசைப்படும், வெற்பு - மலை. (நூஊ)

வ்யா.—ஐம்பத்துமூன்றும்பாட்டு.—(நெறியாரித்யாதி) ஆஸ்ரயித்தவர்களுடைய முன்னின்று பின்தாழ்ந்த குழற்கற்றையையறியாதே ஒரு சிறுமலையென்றெண்ணி, மூச்சுவிடுகல் உடம்பாடுதல் செய்யாமையாலே இன்னமலை யென்றறியாமையாலே, பூக்களையுடைத்தான கொடிகள் தங்குகிற பொராநின்ற புனலையுடைத்தாயிருக்துள்ள மலை என்கிற திருவேங்கடமே நாமாசைப்படும் மலை.(நிரு)

அரு.—ஐம்பத்துமூன்றும்பாட்டு.—நெறியார் - ஸ்தாவர ப்ரதிஷ்டராயிருந்துத்யாகிக்கிறவர்கள். பிரியாது இடைவிடாதே. (நிரு)

வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல் - நிற்பென்
றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன், வெள்ளத்
திளங்கோயில் கைவிடே லென்று. (நிச)

ப-உ.—சோலை - திருமாலிருஞ்சோலை, வேங்கடம் - திருமலை, என்று - என்கிற திருநாமத்தையுடைய, இரும் - விசாலமான, வெற்புஎன்று - திருமலை என்று சொல்லப்படுகிற, இவ்விரண்டும் - இந்த இரண்டுஸ்தாநமும், நிற்புஎன்று - (உகக்தருளின) வாஸஸ்தாநமென்று, நீ - நீ, மதிக்கும் - எண்ணும், நீர்மைபோல் - ஸ்வபாவம்போலே, உளம் - ஹ்ருதயமாகிற, கோயில் - இருப்பிடமும், நிற்புஎன்று - (உகந்து) வர்த்திக்கும் ஸ்தாநமென்று, உள்ளம்வைத்து - அறிந்து, வெள்ளம் - திருப்பாற்கடலாகிற, இளங்கோயில் - பாலாலயத்தை, கைவிடேல் என்று - கைவிடாதொழியவேணுமென்று, உள்ளினேன் - ப்ரார்த்தித்தேன். (நிச)

வ்யா.—அவ.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—இவர் திருமலையையிரும்பப் புக்கவாறே அவனிவருடைய ஹ்ருதயத்தைவிரும்ப, பிராநே! அவற்றைக் கைவிடவொண்ணுதென்கிறார்.

(வெற்பித்யாதி) வெற்பென்று சொல்லப்படாநின்ற தெற்குத்திருமலை பெரியதிருமலை இவைபோலே என்னுடைய ஹ்ருதயத்தையும் உனக்குக் கோயிலாக நினைத்தாயென்றறிந்து. (வெள்ளத்திளங்கோயில் கைவிடேலென்றுள்ளினேன்) நான் க்ருதக்ருத்யனாகவொண்ணுதென்று ஹ்ருதயத்திலே புகுருகைக்குபாலாலயமாகக்கொண்ட திருப்பாற்கடலைக் கைவிடாதே கொள்ளென்று இரக்கிறேன். (நிச)

அரு.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—என்னுள்ளத்தையும் நிம்பானகோயிலென்று நினைத்தாய் என்று, உள்ளம்வைத்து - அறிந்து, கைவிடேலென்று, உள்ளினேன் - இரந்தேன் என்றபடி. (நிசை)

என்று மறந்தறியே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
நின்று நினைப்பொழியா நீர்மையால் - வென்றி
அடலாழி கொண்ட வறிவனே. இன்பக்
கடலாழி நீயருளிக் காண். (நிநி)

ப-உ.—வென்றி - ஜயத்தையுடைத்தான, அடல் - யுத்தோம் முகமான, ஆழி - சக்ரத்தை, கொண்ட - ஏந்தின, அறிவனே - ஸர்வஜ்ஞனானவனே! ஏழ்பிறப்பும் ஏழு ஜன்மத்திலும், எப்பொழுதும் - எல்லாவவஸ்தையிலும், நின்று - ஸ்திரப்பட்டு, நினைப்பு - நினைவு, ஒழியா - தவறாமலிருக்கிற, நீர்மையால்-ஸ்வபாவத்தால், என்றும் - எக்காலத்திலும், மறந்தறியேன்-விஸ்மருதிபண்ணியறியமாட்டேன்: நீ - நி, இன்பக்கடலாழி - அபரிச்சிந்நமான ஆநந்தஸமுத்ரத்தை, அருளிக்காண் - கொடுத்தருளவேணுங்காண். (நிநி)

வ்யா.—அவ.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—(என்றும்) உன்னை நினைக்கையரிதாவ ஸம்ஸாரத்திலே உன்னை நினைக்கும்படி பண்ணினாய்: இனி ப்ராப்தியளவும் பண்ணுயோவென்கிறார்.

(என்று மறந்தறியேன்) ஒருகாலு முன்னை மறந்தறியேன். ஸ்ரவண மகநிதித்யாஸகாகந்தரம் பிறக்கும் உபாஸகாத்ருவாநுஸ்ம்ருதிகளாலேயோ நீர்மறவாதொழிந்ததென்னில்; (ஏழ்பிறப்பித்யாதி) "எதிர்சூழல் புக்கெனத்தோர் பிறப்பும்" என்னும்படியே எல்லாஜந்மங்களிலும் எல்லாக்காலத்திலும் நீ நின்று உன்னுடைய நினைவுமாறாத ஸ்வபாவத்தாலே ஒருகாலும் மறந்தறியேன். (வென்றியித்யாதி) நாஞ்செய்தவம்சஞ்செய்தோமிறே. எல்லாஞ் செய்யவேணுமென்று நிர்ப்பந்திக்கக் கடவதோவென்ன; உன்பக்கலொருஞ்ஞாந சக்திகளுக்கு வைகல்யங்காண்கிறிலேன்; ஆனபின்பு, (இன்பக்கடலாழியருளிக்காண்) "வஸுஷ்வேவாநுயாதி-ஏஷுவேவாகந்தயாதி" என்னும்படியே உன்னுடைய ஆநந்தஸமுத்ரத்தையும் நீயெனக்கருளாய். (நிநி)

காணக் கழிகாதல் கைமிக்குக் காட்டினுல்
நாணப் படுமென்றுல் நாணுமே - பேணிக்
கருமாலைப் பொன்மேனி காட்டாமுன் காட்டும்
திருமாலை நங்கள் திரு. (நிசு)

ப-உ.—திருமாலை - ஸ்ரீயஃபதியை, காண - ஸேவிக்கவேணுமென்று, கழி - மிகுந்திருக்கிற, காதல் - ப்ரீதியானது, கைமிக்கு - விஞ்சி (அமைக்கப்போகாமல்), காட்டினுல்-தோற்றினுல், நாணப் படும்-அடங்கியிருக்கவேணும், என்றுல்-என்று விசாரித்தால், நாணுமே-அடங்குமோ? கரு - கறுத்த நிறத்தையுடைய, மாலை - ஸ்வாமியான ஸ்ரீயஃபதியை, பொன் - ஸ்ப்ருஹணீயமான, மேனி - திவ்ய மங்களவிக்ரஹமானது, காட்டாமுன் - காட்டுவதற்குமுன், நங்கள் - நமக்கு ஸ்வாமிகியான, திரு - பெரியபிராட்டியார், பேணி - ஆதரித்து, காட்டும் - தர்சிப்பிக்கும். (நிசு)

வ்யா.—அவ.—ஐம்பத்தாறும்பாட்டு.—(காண) நீர்சேஷபூதராஞல் உம்முடைய ஸ்வரூபாநுரூபமாயிருக்கவேண்டாவோ? சேஷியை இப்படி நியமிக்கக்கடவதோ வென்னில்; அதுவிதேயமான போதிறே; ஆசைமிக்கால் செய்யலாவதுண்டோ வென்கிறார்.

(திருமாலைக்காணக் கழிகாதல் கைமிக்குக்காட்டினுல் நாணப் படுமென்றுல் நாணுமே) ஸர்வேஸ்வரனைக்காணுமிகாகின்ற காதல் விஞ்சிக்காட்டினுல், நீசேஷி - நான் சேஷபூதனென்னும் முறையிலே நிற்கப்போமோ. கண்டாலல்லது கழியாதே காதலென்றுமாம். ஸாபராதனென்று மீளவும்போகாது. கருமாலைப் பொன்மேனியானது காட்டுவதற்குமுன்னே எங்களுடைய புருஷகாரமாகப் பிராட்டி முன்னே காட்டாநின்றுள். "நகுஷ்டிஞாவாராயதி - நகச்சிங்காபராத்யதி" என்று - எங்களுடைய குற்றம் அவள் பார்க்கவொட்டாமையாலும் முறையில் நிற்கவொண்ணுது. (நிசு)

அரு.—ஐம்பத்தாறுபாட்டு.—அது விதேயமானபோது - நானெனக்கு வசமானபோது. பக்திபரவசனுஞல் என்வசமோ என்ற படி. மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஸாபராதனித்யாதி). கருமாலை - காளமேகஸ்யாமனுன ஸர்வேஸ்வரனை, திருமேனிதானுபாயமாகக் காட்டுகைக்குமுன்னே நங்கள் திரு மேனி காட்டுமென்றபடி. (நிசு)

திருமங்கை நின்றருளும் தெய்வம் நாவாழ்த்தும்
கருமம் கடைப் படுமின் கண்டீர் - உரிமையால்
ஏத்தினேம் பாத மிருந்தடக்கை யெந்தைபேர்
நாற்றிசையும் கேட்டீரே நாம். (நூஎ)

ப-உ.—மங்கை - யௌவநத்தையுடையவளான, திரு - பெரிய பிராட்டியார், நின்றருளும் - நித்யவாஸம்பண்ணும்படி யிருக்கிற, தெய்வம் - ஸர்வாதிகனே, நா - நாக்காலே, வாழ்த்தும் - ஸ்தோத்ரம் பண்ணுகையாகிற, கருமம் - கார்யத்திலே, கடைப்படுமின்கண்டீர் - ஸ்திரசித்தராயிருங்கோள்கிடீர்; நாம் - நாங்கள், இரும் - பருத்தும், தடம் - நீண்டுமிருக்கிற, கை - புஜங்களையுடைய, எந்தை - எமக்கு ஸ்வாமியானவனுடைய, பாதம் - திருவடிகளை, உரிமையால் - (சேஷ சேஷிபாவமாகிற) தகுந்த ஸம்பந்தத்தினாலே, பேர் - திருநாமங்களைக்கொண்டு, ஏத்தினேம் - ஸ்துதித்தோம்; நால்திசையும் - நாலு விதமான திக்கிலுள்ளாரெல்லாரும், கேட்டீரே - ஸ்ரவணம்பண்ணீர்களோ? (நூஎ)

வ்யா.—ஐம்பத்தேழாம்பாட்டு.—(திருமங்கையிதயாதி) பெரிய பிராட்டியார் நித்யகடாக்ஷம் பண்ணுகின்றதெய்வத்தை நாவாழ்த்துகையாகிற கருமத்தைக் கைவிடாதே. (இருந்தடக்கையெந்தை பேர்நாற்றிசையுங்கேட்டீரே) பெரிய தோளையுடையனை வென் ஸ்வாமியுடைய பேரன்றோ எல்லாத்திக்குக்களிலுமுள்ளது; அது கேட்டிலிகொளோ. (நாமுரிமையா லேத்தினேம்பாதம்) நாங்களவனுடைய பேரையும் திருவடிகளையும் சேஷபூதரென்னும் ப்ராப்தியாலே ஏத்தினோம். (நூஎ)

அரு.—ஐம்பத்தேழாம்பாட்டு.—எல்லாருமவனுக்கு சேஷபூதராகையாலே அவனே ஸ்துத்யனென்று தாத்பர்யம். (நூஎ)

நாம்பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்து
ஓம்பி யிருந்தெம்மை யோதுவித்து - வேம்பின்
பொருள் நீர்மையாயினும் பொன்னழி பாடென்று
அருள் நீர்மைதந்த வருள். (நூஅ)

ப-உ.—வேம்பு - வேம்புவென்கிற, பொருளின் - வஸ்துவினுடைய, நீர்மை-ஸ்வபாவம்போலே, ஆயினும்-இருந்தாலும், பொன்-

ஸ்ப்ருஹணீயமான, ஆழி - சக்ரத்தையுடையவனே, பாடி - காரம் பண்ணு, என்று - என்று, நாமங்கை - ஸரஸ்வதியானவள், நல்-விலக்ஷணமான, நெஞ்சத்து - ஹ்ருதயத்தில், ஓம்பியிருந்து - ஆதரித்திருந்து, எம்மை - நம்மை, ஓதுவித்து - சொல்லிவைத்து, நாம் - நாம், பெற்ற - அடைந்த, நன்மையும் - புருஷார்த்தமும், அருள்-க்ருபை பண்ணுகையே, நீர்மை - ஸ்வபாவமாகவுடைய ஸர்வேச்வரன், தந்த - கொடுத்த, அருள் - அநுக்ரஹம். (நிஅ)

வ்யா.—அவ.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.—(நாம்பெற்ற) நீரிப்படி ஏத்துகைக்கடியென்னென்னில்; ஸரஸ்வதி என் ஹ்ருதயத்திலே இருந்து என்னே ஓதிவைத்ததென்கிறது.

(நாம் பெற்றயித்யாதி) எங்களுக்கிந்த நன்மையுண்டாயிற்று, நாமங்கையானவள் ஹ்ருதயத்திலேயிருந்து நம்மை ஓம்பியோதுவித்தத்தாலே. ராஜபுத்ராதிகள் ராஜவைபவமறியாதிருக்கச் செய்தே அத்தைச் சொல்லவறியாமையாலே விரஸமானாலும் ஸரஸமாகத்தங்கள் ஸ்வரூபத்துக்குக் கற்பிக்கும் தாஸவ்ருத்தைகளைப்போலே. அவள் ஹ்ருதயத்திலே யிருந்தோதுவிக்கைக்கடி சொல்லுகிறது. (வேம்பித்யாதி) இனியவிது வேம்புபோலே கையாகின்றதேயாகிலும் பாடென்றருளி யல்லது நிற்கப்போகாத அவனுடைய நீர்மையாலே தந்தவருள் - தந்தப்ரஸாதம் ஸரஸ்வதி யோதுவிக்கைக்கடி. (நிஅ)

அரு.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.—ஓம்பி-வளர்த்து, கிளர்ந்தென்றபடி. ஸரஸ்வதியையிட்டுப் பாடுவித்ததெப்படி யிருக்கிறதென்ன, த்ருஷ்டாந்த பூர்வகமாக அருளிச்செய்கிறார் (ராஜபுத்ரனித்யாதி). தங்கள் ஸ்வரூபத்துக்கு-காலிகளான தங்கள் ஸ்வரூபத்துக்குச் சேரக் கற்பிக்கிற என்றபடி. அநுரூபமாகவும்-குறையாயும். இது - இந்தத் தமிழ்மாலை. பாடென்றருளும் அருள் நீர்மை – பாடென்றருளி நீர்மைதந்தவருள் என்றபடி. சில சில விரஸமாகச்சொன்னால், அத்தை ஸரஸமாக - பஹுமாநமாகக் கற்பிப்பார்கள். (நிஅ)

அருள் புரிந்தசிந்தை யடியார் மேல்வைத்து
பொருள் தெரிந்து காண்குற்றவப்போது-இருள் திரிந்து
நோக்கினேன் நோக்கி நினைந்தேன தொண் கமலம்
ஒக்கினே னென்னையுமங் கோர்ந்து. (நிகழ்)

ப-உ.—அருள் - க்ருபையோடு, புரிந்த - கூடின, சிந்தை - திருவுள்ளத்தை, அடியார்மேல் - தாஸபூதர்களான எங்கள்மேலே, வைத்து - ஸ்தாபித்து, பொருள் - வஸ்துவென்று, தெரிந்து - அறிந்து, காண்குற்ற - கடாக்ஷித்தருளுகிற, அப்போது - அக்காலத்தில், இருள் - அஜ்ஞாநம், திரிந்து - நசித்து, நோக்கினேன் - (உன் ஸ்வரூபத்தை) ஸாக்ஷாத்கரித்தேன்; நோக்கி - ஸேவித்து, ஒண் - அழகிய, கமலம் - தாமரைபுஷ்பம்போன்ற, அது-அத்திருவடிகளே, நினைந்தேன் - அநுஸந்தித்தேன்; என்னையும் - என்னையும், ஓர்ந்து - உள்ளபடியறிந்து, அங்கு - அத்திருவடிகளில், ஒக்கினேன் - ஸமர்ப்பித்தேன். (ருக)

வ்யா.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—(அருள்புரிந்தவித்யாதி) அடியோமான வெங்கள்மேலே அருள்புரிந்த சிந்தையைவைத்து அத்தாலே நாங்கள் பதார்த்தங்களையறிந்து காணவுற்றபோது, நீசேவி - நான் சேஷபூதனென்கிற ஜ்ஞாநத்துக்கு விரோதியான அஜ்ஞாநத்தைப்போக்கி யுணர்ந்து உன்னுடைய கமலம்போன்ற திருவடிகளே நினைத்தேன்; ஆராய்ந்துபார்த்து பரதந்த்ரமாயிருக்கையாலே, என்னை உன் திருவடிகளிலே ஸமர்ப்பித்தேன்; அருள்புரிந்துள்ள உன் திருவுள்ளத்தை எங்கள் மேலே வைத்து எங்களே யொரு பதார்த்தமாக புத்தி பண்ணின போதென்றுமாம். (ருக)

அரு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—பொருள்தெரிந்து காண்குற்றவப்போது-நீ எங்களே ஒரு பொருளாக விசாரித்துத் திருவுள்ளம் பற்றினபோதென்று ஈச்வரபரமாதல். (ருக)

ஒருருவ னல்லே யொளியுருவம் நின்னுருவம்
ஈருருவ னென்ப ரிருநிலத்தோர் - ஓருருவம்
ஆதியாம் வண்ண மறிந்தா ரவர்கண்டீர்
நீதியால் விண்காப்பார் நின்று. (சுo)

ப-உ.—ஓர் - ஒருபடியாயிருக்கும், உருவனல்லே - (விஜாதீய) ஸ்வரூபத்தையுடையவனன்று; ஒளி-(ஆஸ்ரிதபரதந்த்ரமாய்) உஜ்வலமான, உருவம் - ஸ்வரூபம், நின் - உன்னுடைய, உருவம்-ஸ்வரூபம்; இரு-விசாலமான, நிலத்தோர் - பூமியிலுள்ளார், ஈர் உருவன் - இரண்டுவிதமான ஸ்வரூபத்தையுடையவன், என்பர்-என்று

சொல்லுவர்கள். ஓர் - ஆஸ்ரிதபரதந்த்ரமாய் ஒருபடிப்பட்ட, உரு வம் - ஸ்வரூபமே, ஆகி - ஜகத்காரணமாய், ஆம் - (ஆஸ்ரிதர்க்கு) உஜ்ஜீவநகரமான, வண்ணம் - ப்ரகாரத்தை, அறிந்தார் - உணர்ந்த வர்களான, அவர்கண்டீர் - அந்த மஹாத்மாக்கள்கிடீர், நீதியால் - (எல்லாருக்கு முபதேசிக்கையாகிற) ந்யாயத்தாலே, நின்று - ஸ்திர மாயிருந்து, மண் - பூமியை, காப்பார் - ரக்ஷிப்பர்கள். (கூ0)

வ்யா.—அறுபதாம்பாட்டு.—(ஒருருவனல்லே) "நிதேஹாநிதேஹா நாஞ்-நித்யோநித்யாநாம்" என்கிறபடியே ஸர்வஸ்மாத்பரமாயிருக்குமது, உண்மைவடிவன்று. (ஒளியுருவம்) ஆஸ்ரித பரதந்த்ரனாயிருக்கும் வடிவே யுனக்குவடிவு. முறைகுலையாமல்-சேஷ சேஷிபாவங்கெடாமல். (கூ0)

நின்றதோர் பாதம் நிலம் புதைப்ப, நீண்டதோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம் - அன்று
கருமாணி யாயிரந்த கள்வனே, உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு. (கூக)

ப.உ.—நின்றதோர் - நிற்கிறதொரு, பாதம் - திருவடியானது, நிலம் - பூமியை, புதைப்ப - மறைக்க, நீண்ட - வளர்ந்த, தோள் - புஜமானது, திசையெல்லாம் - திக்குகளெல்லாவற்றையும், சென்று-போய், அளந்தது - ஆக்ரமித்தது; என்பர் - என்றுசொல்லுவர்கள். அன்று - (இந்த்ரன்ப்ரார்த்திக்க) அக்காலத்தில், கரு - கறுத்த தி ருமேனியையும், மாணியாய் - ப்ரஹ்மசாரி வேஷத்தையுமுடைய வனாய்க்கொண்டு, இரந்த - யாசித்த, கள்வனே - வஞ்சகனே! (இப் படி பலியை வஞ்சித்து இந்த்ரனே ரக்ஷித்தது), உன்னை-உன்னை, பிர மாணித்தார் - விஸ்வஸித்தவர்கள், பெற்ற - அடைந்த, பேறு - புரு ஷார்த்தமன்றே? (கூக)

வ்யா.—அவ.—அறுபத்தோராம்பாட்டு.—(நின்றதோர்பாதம்) வடிவேயோ? அவனுடைய சேஷ்டிதமும் ஆஸ்ரிதபரதந்த்ரமென்கிறது.

(நின்றதித்யாதி) இரந்து நின்ற நிலையிலே பூமி யெல்லாம் ஓரடியாலே மறையும்படிக்கிடாக. (நீண்டவித்யாதி) கையிலே நீர் விழுந்தவாறே அலப்யலாம்போலே வளர்ந்த தோளானது திக்குக்களெல்லாம் சென்றளந்ததென்பர். (அன்றித்யாதி) உன்னைப்பேணாதே உன்னுடைய விபூதியை யவன் தன்னதென்ன, அவன் பக்கலிலே யிரந்தாயாய் வஞ்சித்தாயாய்ச் செய்தது இந்த்ரன் ஒருத்தனுக்குச் செய்ததேயோ? ஆஸ்ரிதவிஷயத்தில் தன்னையழியமாறி வஞ்சிக்கும். தாதுபோம், ஸாரத்யம் பண்ணும். எல்லாம் செய்தாகிலும்கு மென்று உன்னைப்ரமாணித்தவர்கள் மார்விலே கைவைத்துறங்கும்படி பண்ணினையத்தனையன்றே. (கூக)

பேரொன்றுமுன்னறியேன்பெற்றறியேன்பேதமையால்,
மாறென்று சொல்லி வணங்கினேன் - வறின் [போய்
பெருத் தெருத்தம் கோடொசியப் பெண்நசையின் பின்
எருத் திறுத்த நல்லாய ரேறு. (கூஉ)

ப-உ.—ஏறின் - ருஷபங்களுடைய, பெருத்த - வ்ருத்தியடைந்த, எருத்தம் - பிடரியையும், கோடு - கொம்புகளையும், ஒசிய - முறியும்படிக்கு, பெண் - நப்பின்னைபிராட்டி விஷயமான, நசையின் - ஆசையினுடைய, பின்போய் - பின்னே சென்று, எருத்து - (ருஷபங்களின்) பிடரியை, இறுத்த - முறித்த, நல் - ஸ்ரேஷ்டரான, ஆயர் - இடையர்களுக்கு, ஏறு - தலைவனைச்ருஷ்ணன், மாறு - (நம்பாபங்களுக்கு) சத்ரு, என்று சொல்லி - என்று நினைத்து, வணங்கினேன் - ஆஸ்ரயித்தேன்; பேதமையால் - அறிவில்லாமையால், முன் - இதுக்கு முன்பு, ஒன்று - இப்படியொரு, பேறு - புருஷார்த்தம், (உண்டென்று), அறியேன்-அறியமாட்டேன். பெற்றறியேன்-அடைந்தறியமாட்டேன். (கூஉ)

வ்யா.—அவ.—அறுபத்திரண்டாம்பாட்டு.—(பேரொன்று) நப்பின்னைப்பிராட்டிக்கு ப்ரதிபந்தகமான எருதுகளைப்போக்கி அவளைத்தனக்காக்கிக் கொள்ளுகையாலே நம்முடைய ப்ரதிபந்தகங்களையும் போக்குமென்கிறது.

(பேறித்யாதி) பேறொன்றுண்டாக முன்பறியேன். அறியாமையேயன்று, பெற்றுமறியேன். (பேதமையால்) பெறுமைக்கடி அறிவு கேடு; ஏறின்பெருத்தெருத்தங் கோடொசியப்பெண்ணை சையின் பின் போய், எருத்திறுத்த நல்லாயரேறு, மாறொன்றுசொல்லி வணங்கினேன்) எருத்தினுடைய பெருத்தக்குத்தும் கொம்புகளும் ஒசியும் படிக்கீடாக நப்பின்னைப் பிராட்டியைப் பெறலாமென்கிற நசையாலே எருதிறுத்த நல்லாயரேறு நம்ப்ரதிபக்ஷத்துக்கும் மாறென்று சொல்லி வணங்கினேன். (சுஉ)

அரு.—அறுபத்திரண்டாம்பாட்டு.—எருத்தம்-ககுத்து. மாறு-சத்ரு. (சுஉ)

ஏறேழும் வென்றடர்த்த வெந்தை, எரியுருவத்
தேறேறி பட்டவிடு சாபம் - பாறேறி
யுண்டதலை வாய்நிறையக் கோட்டங்கையொண்குருதி
கண்ட பொருள் சொல்லில் கதை. (சுஊ)

ப-உ.—ஏறு ஏழும் - ஏழு ருஷபங்களையும், வென்று - ஜயித்து, அடர்த்த - முறித்த, எந்தை - என் ஸ்வாமியானக்ருஷ்ணன், எரி - நெருப்பினுடைய, உருவத்து - ரூபத்தையுடையவனுய், ஏறு-ருஷபத்தை, ஏறி - ஏறியிருக்கிற ருத்ரனுல், பட்ட - அநுபவிக்கப்பட்டும், விடு - (ப்ரஹ்மாவாலே) விடப்பட்டுமிருக்கிற, சாபம் - சாபத்தை (போக்குகைக்காக), பாறு - பருந்து, ஏறி - மேல் விழுந்து, உண்ட - புஜித்த, தலை - சிரஸ்ஸோடு கூடின, வாய் - வாயானது, நிறைய - பூர்ணமாகும்படி, கோடு - குவிந்த, அம்-அழகிய, கை - கரத்தினுல்,(தெறிக்கப்பட்ட), ஒண் - அழகிய, குருதி - ரக்தத்தை, கண்ட – பார்த்த, பொருள் - அர்த்தத்தை, சொல்லில் - சொல்லப்புக்கால், கதை - பெரிய கதையாயிருக்கும், (சுஊ)

வ்யா.—அவ.—அறுபத்துமூன்றும்பாட்டு.—(ஏறேழும்) அபிமாநியான ருத்ரனுடைய சாபத்தைப் போக்குகையாலும் அவனே ஆஶ்ரயணீயனென்கிறது.

(ஏறேழுமித்யாதி) ஏறேழையும்வென்றஸ்வாமி. (எரியித்யாதி) எரியினுடைய உருவையுடையனுய் ருஷபத்தை ஏறினருத்ரனை ப்ரஹ்மா "கவாங்கேஹவிஷ்யஸி-கபாலீத்வம்பவிஷ்யஸி" என்றிட்ட

சாபத்தை ஓட்டினவழகியகை. (பாறேறியித்யாதி) கழுகும்பருந்தும்மேறி உண்ணுகின்ற தலையையுடைய வாய் நிறையும்படிக்கீடாக அழகிய குருதியைக்கண்ட அர்த்தத்தைச்சொல்லில் அதொருமஹாபாரதம். ஏழெருத்தையடர்த்தவிடத்தில் அத்தாலொரு தோஷமின்றிக்கேயிருக்க ஒருதலையை யறுத்ததுக்காக பாதகியானவனுடைய சாபத்தைப்போக்கினவனே? ஈஸ்வரன், பாதகியானவனே? தலையறுப்புண்டு சோச்யனானவனே? பார்த்துக்கொள்ளுமத்தனை. (சுசு)

அரு.—அறுபத்துமூன்றும்பாட்டு.—கோட்டம்-கொட்டுவாய்-அடிச்சொடினகை. "பாறு" என்று பறவையாய் பக்ஷியென்றபடி. ()

* கதையின் பெரும் பொருளும் கண்ணு, நின் பேரோ
இதைய மிருந்தவையே யேத்தில் - கதையும்
திருமொழியாய் நின்ற திருமாலே, உன்னைப்
பருமொழியால் காணப் பணி. (சுச)

ப-உ.—கண்ணு - க்ருஷ்ணனே! கதையின் - இதிஹாஸ புராணங்களுடைய, இதயம் - தாத்பர்யத்தை, இருந்தவையே - உள்ளபடியே, ஏத்தில் - (அறிந்து) ஸ்துதிக்கில், பெரும் - முக்யங்களான, பொருளும் - அர்த்தங்களும், நின் - உனக்கு வாசகமான, பேரே - திருநாமமேயாயிருக்கும். கதையும் - விசேஷித்துச்சொல்லப்படுகிற, திரு - அழகிய, மொழியாய் - சப்தங்களுக்கு ப்ரதிபாத்யனாய், நின்ற - இருக்கிற, திருமாலே - ஸ்ரீயஃபதியே! உன்னை - உன்னை, பரு - பரிபூர்ணமான, மொழியால் - சப்தங்களாலே, (ஸ்துதித்து), காண - அநுபவிக்கும்படி, பணி - அருள்செய். (சுச)

வ்யா.—அவ.—அறுபத்துநாலாம்பாட்டு.—(கதையித்யாதி) இதிஹாஸ புராணங்களுடைய ஹ்ருதயமிருந்தபடி அறிந்துசொன்னவற்றில் நிர்ணீதமானவர்த்தம் ஆஸ்ரிதவ்யனானவனுடைய திருநாமத்தைச் சொல்லுகையென்கிறது.

(கதையினித்யாதி) இதிஹாஸ புராணங்களிலே ப்ரதிபாதிக்கப்பட்ட ஸ்ரீயஃபதியாயிருந்துள்ள வுன்னைக் குறையற்றசொல்லாலே யேத்தி அநுபவிக்கும்படி யருளிச்செய். அநவாப்தியான சொல்லன்றிக்கே உன்னைக்கண்டு ஹ்ருஷ்டனாய் ஏத்தப்பணி. (சுச)

---

* கதையும் — என்று உரையின்பாடம்.

அரு.—அறுபத்துநாலாம்பாட்டு.—" கண்ணு கதையி னிதய மிருந்தவையே ஏத்தில் பெரும்பொருளும் நின்பேரே" என்றன்வயித்து அருளிச்செய்கிறார் (இதிஹாஸேத்யாதி). காண் என்றதைப் பற்ற அருளிச்செய்கிறார் (அநவாப்தியான இத்யாதி). (சூசு)

பணிந்தேன் திருமேனி பைங்கமலம் கையால்
அணிந்தேனுன் சேவடிமே லன்பாய்த் - துணிந்தேன்
புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம் பார்த்து, ஆங்கே
இருந்தேத்தி வாழு மிது. (சூடு)

ப-உ.—திரு - அழகிய, மேனி - விக்ரஹத்தை, பணிந்தேன் - வணங்கினேன். உன் - உன்னுடைய, சே - சிவந்த, அடிமேல் - திருவடிகளின்மேலே, பை - அழகிய, கமலம் - தாமரைபுஷ்பத்தை, அன்பாய் - ப்ரேமத்தையுடையனாய்க்கொண்டு, கையால் - கரத்தினாலே, அணிந்தேன் - சாத்தினேன். புரிந்து - விரும்பி, உன்னை - உன்னை, ஏத்தி - ஸ்துதித்து, புகலிடம் - (அவதாராநந்தரம்) ப்ரவேசிக்கும் ஸ்ரீவைகுண்டத்திலே, பார்த்து - ஸாக்ஷாத்கரித்து, ஆங்கே - அவ்விடத்திலேயே, இருந்து - இருந்து, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, வாழும் - வாழ்கையாகிற, இது - இப்புருஷார்த்தத்தில், துணிந்தேன் - அத்யவஸித்தேன், (சூடு);

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.— (பணிந்தேன் திருமேனி) கண்டேனென்னும் சொல்லே சேஷபூதராகையாலே பணிந்தேனென்றுசொல்லுகிறார். (பைங்கமலமித்யாதி) உன் திருவடிகளிலே ஸ்நேஹத்தையுடையேனாய் அழகிய தாமரைப்பூவை யணிந்தேன். (புரிந்தேத்தி உன்னைப் புகலிடம்பார்த்தாங்கே யிருந்தேத்திவாழுமிது துணிந்தேன்)உன்னை ஸேவித்திருந்துபார்த்து ஏத்தி பரமபதத்திலிருக்கும்படியைப்பார்த்து ஆங்கேயிருந்தேத்துகைதானே வாழ்வாகவிருக்கிற வித்தையத்யவஸித்தேன். பெருமாள் புக்கருளினால் பின்னும் முன்னும் நின்றுவைத்த வனேத்தையும் பின்பும் பிறகுவாளியையும் கண்டேத்துகையிலே துணிந்தேன். (சூடு)

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.—உன்னையிங்கே ஸேவித்துப் புரிந்தேத்தி-பார்த்தேத்தி. புரிகை-பார்க்கை. அன்றிக்கே, புரிகை - சுற்றும் பார்க்கையாய், அத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பெருமா

ளித்யாதி). புக்கருளினால் - புறப்பட்டருளினால். புகலிடமென்றதுக் கதுகுணமாக புக்கருளினாலென்கிறது. (சுடு)

இது கண்டாய் நன்னெஞ்சே யிப்பிறவி யாவது
இது கண்டா யெல்லாம் நாமுற்றது - இதுகண்டாய்
நாரணன் பேரோதி நரகத் தருகணையாக்
காரணமும் வல்லையேல் காண். (சுசு)

ப-உ.—நல் - நன்றாய் இசைந்த, நெஞ்சே - மநஸ்ஸே! இப்பிற வியாவது - இந்த ஸம்ஸாரமாகிறது, இது கண்டாய் - (தோஷயுக்த மான) இதுவேகிடாய்; நாம் - நாம், உற்றது எல்லாம் - அநுபவித் ததெல்லாம், இது கண்டாய் - இந்ததுக்கமே கிடாய்; நாரணன் - சேஷியான ஸர்வேஸ்வரனுடைய, பேர் - திருநாமத்தை, ஓதி - சொல்லி, நரகம் - நரகம் போன்ற ஸம்ஸாரத்தினுடைய, அருகு - சமீபத்தி லும், அணையா - சேராமைக்கு, காரணமும் - ஹேதுவும், இது கண் டாய் - (இஸ்ஸம்ஸாரத்தில் தோஷதர்சநமான) இதுவேகிடாய்; வல்லை யேல் - (காண) ஸாமர்த்ய மூடையையாகில், காண் - பார். (சுசு)

வ்யா.—அவ.—அறுபத்தாறும்பாட்டு.—ப்ராப்திக்கும் ப்ரதிபந் தக நிவ்ருத்திக்கு மடிஸம்ஸாரதோஷ தர்சநம்பண்ணுகை; ஏத்து கையில் துணிகையன்று.

(நன்னெஞ்சே இப்பிறவியாவதிதுகண்டாய்) பாபத்தாலே நன் றென்றிருந்ததன்று, பகவத் ப்ரஸாதத்தாலே பொல்லாதென்று தோ ற்றினவிதுகண்டாய் ஸம்ஸாரமாவது. (இதுகண்டாயெல்லாநாமுற் றது) அங்குத்தைக் கஸாதாரணராயிருக்கச் செய்தே நாமநுபவித்த தெல்லாங் கண்டாயிறே; இதுக்கொரு ப்ரமாணம் வேண்டாவிறே. (இதுகண்டாயித்யாதி) வகுத்தவனுடைய திருநாமத்தைச்சொல்லி நரகஸமீபத்தில் செல்லாமைக்குக் காரணம் இதினுடைய தோஷதர் சநமே. (வல்லையேல்காண்) அநுபவித்திருக்கச்செய்தே விடப்போ காதொழிகிறது பாபம், இல்லையாகில் இதினுடைய தோஷ தர்சநத் தைப்பண்ணு. (சுசு)

அரு.—அறுபத்தாறும்பாட்டு.—எல்லாம்நாமுற்றது-தேகேபா காயிருக்கிற நாமிதரபோகத்தை யெல்லாமுற்றதுகண்டாயே. இல் லையாகில் - பாபமில்லையாகில். (சுசு)

கண்டேன் திருமேனி யான்கனவில், ஆங்கவன்கைக்
கண்டேன் கனலும் சுடராழி - கண்டேன்
உறுநோய் வினையிரண்டு மோட்டுவித்துப், பின்னும்
மறுநோய் செறுவான் வலி. (சூள)

ப-உ.—யான் - நான், திரு - அழகிய, மேனி - திருமேனியை, கனவில் - ஸ்வப்நத்தில் (கண்டாற்போலே), கண்டேன் - அநுபவித்தேன்; ஆங்கு-அக்கனவில், அவன்-அவனுடைய, கை - ஸ்ரீஹஸ்தத்தில், கனலும் - அனலையுமிழுகிற, சுடர்-உஜ்வலமான, ஆழி-சக்ரத்தை, கண்டேன் - அநுபவித்தேன்; உறு - (ஆத்மாவோடு) கூடியும், நோய் - துக்கஜநகமுமான, வினை - புண்யபாபங்கள், இரண்டும் - இரண்டையும், ஓட்டுவித்து - துறத்திவிட்டு, பின்னும்-பின்னையும், மறு - திரும்பிவரக்கடவதாய், நோய்-துக்கஜநகமான வாஸநையை, செறுவான்-போக்கடிக்குமவனுடைய, வலி - பலத்தை, கண்டேன் - அநுபவித்தேன். (சூள)

வ்யா.—அறுபத்தேழாம்பாட்டு.—(கண்டேனித்யாதி) ஆத்மாவுக்கு நித்யதர்மமான ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷிக்கைக்கு ஆநந்தாளான மநஸ்ஸாலே புறப்பட்டு பாஹ்யேந்த்ரியங்களாலே காண்கையன்றிக்கே "ஹ்ருத்யேமநஸ்யா - ஸ்வப்நதீக்ஷ்ணம்" என்கிறபடியே மநஸ்ஸாலே காண்கை கனவிலே காண்கையாவது. (ஆங்கித்யாதி) அபாதிதமாகக்கண்டேன். (கண்டேனித்யாதி) அநுபவிக்கக்கடவதான புண்யபாபங்களைப் போக்கிப் பின்பு வாஸநையும் போக்குமவனுடைய மிடுக்கைக்கண்டேன். வாஸநையைப் போக்குகைக்கு வலிகண்டேனென்றுமாம். (சூள)

அரு.—அறுபத்தேழாம்பாட்டு.—அபாதிதமாக-ப்ரத்யக்ஷம்போலே. மறுநோய் - வாஸநை. செறுவானுடைய வலியைக்கண்டேனென்னுதல்; செறுகைக்கு வலிகண்டேனென்னுதல். (சூள)

வலிமிக்க வாளெயிற்று வாளவுணர் மாள
வலிமிக்க வாள்வரை மத்தாக - வலிமிக்க
வாணுகம் சுற்றி மறுகக் கடல் கடைந்தான்
சேணுகம் கொம்பொசித்த கோ (சூ அ)

சுஅ இரண்டாந்திருவந்தாதி சுகூ—பா.—கோவாகி.

ப-உ.—வலிமிக்க - மிகுந்த பலத்தையுடையவர்களும், வாள் - ஒளியையுடைய, எயிறு - பற்களையுடையவர்களும், வாள் - வாளாயுதத்தையுடையவர்களுமான, அவுணர் - அரக்கர், மாள - நசிக்கும்படி, வலிமிக்க - மிக்கபலத்தையுடைய, வாள் - ஒளிவிடுகிற, வரை - (மந்தர) பர்வதத்தை,மத்தாக-மத்தாகச் (செய்து), வலிமிக்க - அதிகமிடுக்கையும், வாள் - ஒளியையுமுடைய, நாகம் - (வாஸுகியாகிற) ஸர்ப்பத்தை, சுற்றி - (கயிறுகச்) சுற்றி, மறுக-சுழலும்படி, கடல் - ஸமுத்ரத்தை, கடைந்தான் - மதநம்பண்ணினவன், கோள் - மிடுக்கையுடைய, நாகம் - (குவலயாபீடமென்கிற) யானையினுடைய, கொம்பு - தந்தத்தை, ஒசித்த - முறித்த, கோ - (ஸர்வ) ஸ்வாமி (கிடீர்). (சுஅ)

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு.—(வலி மிக்க) இவனைக்கொண்டு வாஸனையைப் போக்குவிக்கையன்றிக்கே உப்புச்சாறு கொள்ளுமவர்களைச்சொல்லுகிறது.

(வலியித்யாதி) மிடுக்கையுடையராய் ஸாயுதரான அஸுரர் முடிய. (வலிமிக்கவாள்வரை மத்தாக) கடையப்புக்கால் பிதிர்ந்து போகாதபடி மிடுக்கையுண்டாக்கி மந்தரத்தை மத்தாகக்கொண்டு. (வலிமிக்க வித்யாதி) நாற்காற்கடைந்தவாறே யற்றுப்போகாதபடி வாஸுகிக்கு மிடுக்கைக்கொடுத்து. (மறுகக்கடல் கடைந்தான்) கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறியும்படி கடலைக்கடைந்தான். (கோணகம் கொம்பொசித்தகோ) நம்மை முடிக்கவந்தகுவலயாபீடத்தைக் கொன்று நாட்டிக்கொரு சேஷியைத்தந்தான். சுஅ)

கோவாகி மாநிலம் காத்து, நங் கண்முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும் - பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும்
தண்கமல மேய்ந்தார் தமர். (சுகூ)

ப-உ.—கோவாகி - ஸ்வாமிகளாகி, மா - பரந்த, நிலம் - பூமியை, காத்து - ரக்ஷித்து, நம் - நம்முடைய, கண்முகப்பே - கண்வட்டத்திலே, மா - குதிரையை, ஏகி-ஏறி,செல்கின்ற - செல்லுகிற, மன்னவரும் - ராஜாக்களும், செம் - சிவந்த, கமலப்பூ - தாமரஸபுஷ்பம், மேவும் - பொருந்தியிருக்கிற, நாபியான் - நாபியையுடையவனு

டைய ஸர்வேஸ்வரனுடைய, சே - சிவந்த, அடிக்கே - திருவடிகளிலே, ஏழ்பிறப்பும் - ஏழுஜன்மங்களிலும், தண் - குளிர்ந்த, கமலம் - தாமரைப்பூவை, ஏய்ந்தார் - சாத்தினவர்களான, தமர் - பக்தர்கள் கிடீர். (கூகூ)

வ்யா.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—(கோவாகி) தேவர்களையொழியச்சிலர் வாழாதேயிருக்கச்செய்தே சிலர் வாழ்ந்தாராயிருக்கிற ராஜாக்களும். (பூமேவுமித்யாதி) அழகியதாமரைப்பூவைத்திருநாபியிலேயுடையனானவனுடைய திருவடிகளிலே குளிர்ந்த தாமரைப்பூவையணிந்த தமர்களிறே ராஜாக்களாய்க்கிரிகிறவர்கள்.

அரு.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—அம்ருதபாநமுகத்தாலே வாழ்ந்த தேவர்களையொழிய இவ்வருகுள்ள ராஜாக்களுமவனை யாஸ்ரயித்து ஐஸ்வர்யம் பெற்றார்களென்கிறதிப்பாட்டு. (கூகூ)

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை - தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக் கிடம். (ஏ0)

ப-உ.—தமர் - பக்தஜநங்களுடைய, உள்ளம் - ஹ்ருதயம், தஞ்சை - தஞ்சைமாமணிக்கோயில், தலை-(திருப்பதிகளில்)ப்ரதாநமான, அரங்கம் - கோயில், தண்கால் - திருத்தண்கால், தமர் - பக்தர், உள்ளும் - த்யாநிக்கும், தண் - குளிர்ந்த, பொருப்பு - (திருவேங்கட)மலை, வேலை-திருப்பாற்கடல், தமர் - பக்தர், உள்ளும் - அநுஸந்திக்கும், மாமல்லை - திருக்கடல்மல்லை, கோவல் - திருக்கோவலூர், மதிள் - ப்ராகாரத்தையுடைய, குடந்தை - திருக்குடந்தை (இவைகள்), ஏவல்ல - (சத்ருக்களை) நிரஸிக்கஸமர்த்தனும், எந்தைக்கு-எமக்கு ஸ்வாமியான ஸர்வேஸ்வரனுக்கு, இடம் - வாஸஸ்தாநம்; என்பர்-என்றுசொல்லுவர்கள். (ஏ0)

வ்யா.—அவ.—எழுபதாம்பரட்டு.—தனக்கு நல்லவர்களுக்கு அவன் ஸந்நிதிபண்ணுமிடங்கள் சொல்லுகிறது.

(தமருள்ளம்) அவற்றில் முற்பட்டது ஆஸ்ரிதருடைய ஹ்ருதயம். (தஞ்சை) தஞ்சைமாமணிக்கோயில். (தலையரங்கம்) திருப்பதிகளில் ப்ரதாநமான கோயில். (தண்கால், தமருள்ளும்தண் பொரு

ப்பு) வைஷ்ணவர்களுக்கு ஸர்வஸ்வமான திருமலை. (வேலை) திருப்பாற்கடல். (தமருள்ளும் மாமல்லை, கோவல்) மூன்றுழ்வார்களையும் நெருக்கினவிடம். (மதிள்குடந்தை) திருமழிசைப்பிரானுகந்தவிடம் (என்பரே ஏவல்ல வெந்தைக்கிடம்) சக்ரவர்த்தித்திருமகனுக்கிடமென்று சொல்லுவர்கள். (எ0)

அரு.—எழுபதாம்பாட்டு.—ஏவல்ல - எய்யவல்ல. (எ0)

இடங்கை வலம்புரிநின் றூர்ப்ப, எரி கான்று
அடங்கா ரொடுங்குவித்த தாழி - விடம்காலும்
தீவா யரவணைமேல் தோன்றல் திசையளப்பான்
பூவா ரடிநிமிர்த்த போது. (எக)

ப. உ.— விடம் - விஷத்தை, காலும் - உமிழாநின்ற, தீ-பயங்கரமான, வாய் - வாயையுடைய, அரவு - திருவநந்தாழ்வானுகிற, அணைமேல் - படுக்கையின்மேலே, (சாய்ந்தருளின) தோன்றல் - ஸௌகுமார்யப்ரதாநனான ஸர்வேஸ்வரன், திசை - திக்குக்களோடுகூடினபூமியை, அளப்பான் - அளக்கைக்காக, பூவார் - புஷ்பம்போல் ஸௌகுமார்யம்நிறைந்த, அடி - திருப்பாதத்தை, நிமிர்த்தபோது - உயர்த்தினகாலத்தில், இடங்கை - இடது திருக்கையில், வலம்புரி - ஸ்ரீபாஞ்சஜந்யம், நின்று - இருந்து, ஆர்ப்ப - சப்திக்க, ஆழி - திருவாழி, எரி - அனலை, கான்று - உமிழாநின்றுகொண்டு, அடங்கார்- அடங்காத சத்ருக்களை, ஒடுங்குவித்தது - முடங்கப்பண்ணிற்று. ()

வ்யா.—அவ.—எழுபத்தோராம்பாட்டு.—கீழிவனுகந்தபடிசொல்லிற்று ; இவ்வையுகக்கும் நித்யஸூரிகள் படிசொல்லுகிறது.

(இடங்கையித்யாதி) திருவுலகளந்த விஜயத்தை அநுஸந்தித்து ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸ்ரீபாஞ்சஜந்யம் ஆர்க்க. (எரியித்யாதி) ஆர்க்கைக்கு அவஸரமின்றிக்கே அக்நியை யுமிழாநின்றுகொண்டு நமுசிப்ரப்ருதிகளை வாய்வாயென்று ஒடுங்குவித்தது திருவாழி. (விடமித்யாதி) கிடந்தவிடத்தேகிடந்து விஷத்தையுமிழாநின்ற திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளும் ஸௌகுமார்யத்தையுடையனான ஈஸ்வரன் பூமியை அளக்கைக்குப் புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளை நிமிர்த்தபோது இப்படியானதென்கிறது. (எக

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு, ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போது உள்ளம் - போது
மணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல
அணி வேங்கடவன்பே ராய்ந்து. (எஉ)

ப-உ.—வானரங்கள் - குரங்குகள், போது - (ப்ராஹ்மமான) காலத்தை, அறிந்து - தெரிந்துகொண்டு, பூ - பூக்களையுடைய, சுனை-சுனைகளிலே, புக்கு - ப்ரவேசித்து, ஆங்கு-அவ்விடத்தில், அலர்ந்த-விகஸித்த, போது - பூக்களை, அரிந்துகொண்டு - பறித்துக்கொண்டு, ஏத்தும் - ஸ்துதியாநிற்கும்; உள்ளம் - மநஸ்ஸே! போது - (நீயும் துதிக்க) போகு; வேங்கடவன் - திருவேங்கடமுடையாணுடைய, பேர் - திருநாமத்தை, ஆய்ந்து - ஆராய்ந்து, மணி - நீலரத்நம்போன்றவடியையுடைய, வேங்கடவன் - திருவேங்கடமுடையாணுடைய, மலரடிக்கே - புஷ்பம்போன்ற திருவடிகளுக்கே, செல்ல - இட்டும்படி, போது - பூக்களை, அணி - சாத்து. (எஉ)

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு.— (போதறிந்து) திருமலையில் திர்யக்குக்கள் ஆஸ்ரயிக்கும்படி சொல்லுகிறது.

(போதறிந்து) "ஸ்ராஹ்மேமுஹூர்த்தே உத்தாய - ப்ராஹ்மேமுஹூர்த்தே உத்தாய" என்று ஸத்வோத்தரகாலமறிந்து. (வானரங்களித்யாதி) குரங்குகள் பூஞ்சுனையிலே புக்கு அதில் செவ்விப்பூவையரிந்துகொண்டேத்தாநின்றது. (போதுள்ளம்) ஹ்ருதயமே! போரு. (அணிவேங்கடவன் பேராய்ந்து வேங்கடவன்மலரடிக்கே செல்லப்போதுமணி) ஸம்ஸாரத்துக் காபரணமான திருவேங்கடமுடையாணுடைய திருநாமத்தைச்சொல்லி அவன் திருவடிகளிலே புஷ்பத்தையுமணி. மணிவேங்கடவனென்று சொல்லி அணியென்றுக்ரியையாகவுமாம். (எஉ)

அரு.—எழுபத்திரண்டாம்பாட்டு.—போது-புஷ்பம். போது-இவ்வழியேபோரு. அணிவேங்கடவனென்னுதல்; மணிவேங்கடவன்-மணிமயமான வேங்கடவனென்னுதல். அப்போது போதுமணியென்னுமல் போது-போதை, புஷ்பத்தை அணியென்று மேலில் அணியைக்கூட்டுவது. (எஉ)

ஆய்ந்துரைப்ப ஞாயிரம்பேர் ஆதிநடு வந்திவாய்
வாய்ந்த மலர்தூவி வைகலும்- ஏய்ந்த
பிறைகோட்டுச் செங்கண் கரிவிடுத்த பெம்மான்
இறைக்காட் படத்துணிந்த யான். (எசு)

ப-உ.—பிறை - பாலசந்த்ரனைபோலே, ஏய்ந்த - ஸமானமான, கோடு - கொம்புகளையும், செம் - அழகிய, கண் - நேத்ரங்களையுமுடைய, கரி - (குவலயாபீடமென்கிற) யானையை, விடுத்த - நிரஸித்த, பெம்மான் - ஸர்வேச்வரனுடைய, இறைக்கு - ஸ்வாமிக்கு, ஆள்பட - அடிமைசெய்கையிலே, துணிந்த - நிச்சயித்த, யான் - நான், ஆதி - முதலும், நடு - மத்யமும், அந்திவாய் - அந்திமமுமான, வைகலும் - காலங்களெல்லாம், வாய்ந்த - கிடைத்த, மலர் - பூக்களை, தூவி - ஸமர்ப்பித்து, ஆயிரம்பேர் - ஆயிரம் திருநாமங்களையும், ஆய்ந்து - ஆராய்ந்து, உரைப்பன் - சொல்லாநிற்பன். (எசு)

வ்யா.—எழுபத்துமூன்றும்பாட்டு.—(ஆய்ந்தித்யாதி) எல்லாத் திருநாமங்களையும் ஆராய்ந்துரைப்பன். எல்லாவவஸ்தைகளிலும் (வாய்ந்தமலர்தூவி)கைக்கெட்டின புஷ்பத்தைக்கொண்டுவேண்டின படியே பொகட்டு, (வைகலும்) காலமெல்லாம், (ஏய்ந்தபிறையித்யாதி) பிறைபோலே யேந்தினகொம்பை யுடைத்தாய் தர்சநீயமான கண்ணையுடைத்தான குவலயாபீடத்தை முடித்த வெண்ணுடைய ஸ்வாமிக்கு. (ஆள்படத்துணிந்த யான் ஆய்ந்துரைப்பன்) அவன் ப்ரதிபந்தகம் போக்க நானடிமைசெய்கேனென்கிறார். (எசு)

யானே தவம்செய்தே னெழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான் - யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந் தமிழனல்லேன் * பெரிது. (எச)

ப-உ.—எம்பெருமான் - எமக்கு ஸ்வாமியே! ஏழ்பிறப்பும் - ஏழுஜந்மங்களிலும், எப்பொழுதும் - எல்லாவவஸ்தைகளிலும், தவம் செய்தேன் - தபஸ்ஸைப்பண்ணினவன், யானே-நானே; தவமுடையேன் - தபஸ்ஸின்பலத்தையடைந்தவனும், யானே-நானே; இருந்-(லக்ஷணங்களினால்)பூர்ணமாய், தமிழ்-த்ராவிடரூபமாய், நல் - விலக்ஷணமான, மாலை-(சப்த) ஸந்தர்ப்பங்களை, இணை - சேர்ந்திருக்கிற,

(பா) * பெருகு.

அடிக்கே - திருவடிகளுக்கே, சொன்னேன் - சொல்லப்பெற்றேன், யானே - நானே; பெருந்தமிழன் - பெரியத்ராவிடபண்டிதன்; பெருகு - மிகவும், நல்லேன் - ஸ்ரேஷ்டனானேன். (எச)

வ்யா.—எழுபத்துநாலாம்பாட்டு.—(யானே தவஞ்செய்தேன்) நானே தபஸ்ஸு பண்ணினவனாகிறேன். (யானேதவமுடையே னெம்பெருமான்) தபஸ்ஸினுடைய பலமுடையேனும் நானே. தபஸ்ஸும் தபஸ்ஸினுடைய பலமும் உடையவன் நானே யென்கிறதெத்தாலே யென்னில்; (யானேயித்யாதி) விலக்ஷணமான தமிழாகிறமாலையைச் சேர்ந்ததிருவடிகளிலேசொன்னேன்; ஆகையால் (பெருந்தமிழன்) பெரியதமிழன். (பெரிதுநல்லேன்) மிகவும் நல்லேன். (எச)

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இரு கணிள மூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை. (எஞ)

ப-உ.—பெருகு - வழிகிற, மதம்-மதஜலத்தையுடைய, வேழம்-யானையானது, மா - ஸ்லாக்யமான, பிடிக்கு - பெண்யானைக்கு, முன்நின்று-முன்னேநின்று, இரு-இரண்டு, கண் - கணுக்களையுடைய, இளம் - இளையதான, மூங்கில் - மூங்கில்குருத்தை, வாங்கி-(மெள்ள) எடுத்து, அருகு - ஸமீபத்தில், இருந்த - இருந்த, தேன் - தேனிலே, கலந்து - தோய்த்து, நீட்டும் - ஸமர்ப்பிக்கும், திரு - சிறந்த, வேங்கடங்கண்டீர் - திருமலைகண்டீர், வான் - மேகத்தோடு, கலந்த - ஸமாநமான, வண்ணன் - வடிவையுடையவன் (வஸிக்கும்), வரை-மலை. (எஞ)

வ்யா.—அவ.—எழுபத்தைந்தாம்பாட்டு.—(பெருகு) பெரியதமிழன், மிகவும் நல்லேனென்றுசொன்னீர்; ஒரு கவிசொல்லிக் காணுமென்ன; சொல்லுகிறார்.

(பெருகுமதவேழம்) மதித்துச் சமைக்கதாகில் சிறிதறிவுண்டாம்; மதம்பெருகாநின்று அறிவுகெட்ட ஸமயத்திலே. (மாப்பிடிக்கு) இப்படி அறிவுகெட்டதை த்யாநயுக்தரைப்போலே தன்புருவம் நெறித்தவிடத்திலே கார்யங்கொள்ளவற்றாகை. (முன்னின்று) அந்தேவாளிகளைப்போலே பிடியினுடைய ஸ்வபாவத்தையறிந்து கண் வட்டத்திலேநின்று. (இருகணிளமூங்கில்வாங்கி) இரண்டுகணு

வீயச்செய்தே பருவத்துக்குள்ள மூற்றனவற்றிருக்கை. (வாங்கி) மூங்கிலினுடைய மேன்மையுங் களிற்றினுடைய ஸாவதாநத்தையுஞ் சொல்லுகிறது. (அருகிருந்ததேன்) திருமஞ்சனத்துக்கு ஸம்பாரித்திருக்குமாப்போலே குறைவற்றிருக்கிறபடி. (தேன்கலந்து) த்ரவத்ரவ்யங்களிரண்டுங் கலந்தாற்போலேயிருக்கை. (நீட்டும்) இதுக்குக் கொடுக்கையே புருஷார்த்தமாயிருக்கிறபடியும், அதநாதரிக்கிறபடியும். (திருவேங்கடமித்யாதி) "வான்கலந்த" என்கிறது. உபமாநோபமேயங்கள் ஸுஸத்ருசமாயிருக்கிறபடி. (எரு)

அரு.—எழுபத்தைந்தாம்பாட்டு.—சமைந்ததாகில் - மதமமைந்துவற்றினலென்றபடி. த்யாநயுக்தரைப்போலே த்யாநயுக்தர் ஸர்வேஸ்வரனே வசீகரிக்குமாப்போலே, திருமஞ்சனத்துக்கு - பெருமான் திருமஞ்சனத்துக்கு. (எரு)

வரைச் சந்தனக் குழம்பும் வான்கலனும், பட்டும்
விரைப் பொலிந்த வெண் மல்லிகையும்- நிரைத்துக்கொ
ஆதிக்கண் நின்ற வறிவ னடியிணையே [ண்டு
ஓதிப் பணிவ துறும். (எசு)

ப-உ.—வரை - மலையிலுண்டான, சந்தனக்குழம்பும் - பரிமளமுடைய சந்தநத்தையும், வான் - விலையுயர்ந்த, கலனும், - ஆபரணத்தையும், பட்டும்-கல்லதிருப்பரியட்டத்தையும், விரை-வாஸனையால், பொலிந்த - மிகுந்திருக்கிற, வெண் - வெளுத்தநிறத்தையுடைய, மல்லிகையும் - மல்லிகைப்பூவையும், நிரைத்துக்கொண்டு - அழகாய் ஸம்பாதித்துக்கொண்டு, ஆதிக்கண் - (ஸ்ருஷ்டிக்கு) முன்காலத்தில், நின்ற - இருந்த, அறிவன் - ஸர்வஜ்ஞனான ஸர்வேஸ்வரனுடைய, இணை - சேர்ந்திருக்கிற - அடியே - திருவடிகளையே, ஓதி - ஸ்தோத்ரம்பண்ணி, பணிவது - வணங்குவது - உறும் - சேரும். ()

வ்யா.—அவ.—எழுபத்தாறும்பாட்டு.—இப்படிஸங்கிஹீதனான ஆஸ்ரயிக்கை உறுமென்கிறது.

(வரைச்சந்தனக்குழம்பும்) சந்தநகிரியிலேயுண்டான சந்தநக்குழம்பும். (வான்கலனும்) * தேசமானவணிகலனும். (பட்டும் விரைப்பொலிந்த வெண்மல்லிகையும்) பரிமளமமிக்கு தர்சநீயமான மல்லிசையும். (நிரையித்யாதி) இதெல்லாத்துக்குங் காரணமாய்நின்று இத்தனையுஞ்செய்தானாகில் இதற்குமேல் செய்வதென்னென்னும்

ஜ்ஞாநத்தையுடைய ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளையே யேத்திப் பணிவதுதரும். (எசு)

அரு.—எழுபத்தாறும்பாட்டு.—சந்தகிரி மலயபர்வதம். (எசு)

உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமன் நற்பாதம்
உறுங்கண்டா யொண்கமலந் தன்னுல் - உறுங்கண்டாய்
ஏத்திப்பணிந்தவன்பே ரீரைஞ்ஞூறெப்பொழுதும்
*** சாத்தியுரைத்தல் தவம்.** (எஎ)

ப-உ.—நல் - அநுகூலமான, நெஞ்சே - மநஸ்ஸே! உத்தமன் - புருஷோத்தமனுடைய, நல் - நன்மையையுடைய, பாதம் - திருவடிகள், உறுங்கண்டாய் - (ஆஸ்ரயிக்கச்) சேருங்கிடாய். ஒண்-அழகிய, கமலந்தன்னுல், தாமரைப்பூவாலே, உறுங்கண்டாய் - (ஆஸ்ரயித்தல்) தகுங்கிடாய். சாத்தி-(அந்தக்கமலத்தை) ஸமர்ப்பித்து, ஏத்தி - துதித்து - பணிந்து - வணங்கி, அவன் - அவனுடைய, ஈரைஞ்ஞூறு-ஆயிரமான, பேர் - திருநாமங்களை, எப்பொழுதும் - ஸர்வகாலத்திலும் - உசாத்தல் - சொல்லுகையாகிற, தவம் - தபஸ்ஸு, உறுங்கண்டாய் - ப்ராப்தங்கிடாய். (எஎ)

வ்யா.—எழுபத்தேழாம்பாட்டு.—(உறுமித்யாதி) கூஷ்மாண்ட்ரபதார்த்தங்களினுடைய காலைப்பற்றிக்கொண்டு திரிந்த உனக்குஸுஹ்ருத்தானவனுடைய திருவடிகளைப்பற்றுகை உறும். (உறுமித்யாதி) அப்ராக்ருத புஷ்பந்தேடிப்போகவேண்டா. (உறுமித்யாதி) ஆஸ்ரயணீய வஸ்துதன்னிலும் ஆஸ்ரயணந்தானே உறும். (எஎ)

(நாமம்பலசொல்லி) கார்யபுத்யாசொல்லுகிறாராகிலிறே யொன்றைச்சொல்லுவது. எல்லாத்திருநாமங்களையும் சொல்லி.(நாராயணனென்று)அஸாதாரணமான நாமத்தைச்சொல்லி. (கையால்தொழுது நன்னெஞ்சே) எல்லாவிந்த்ரியங்களுக்குமடி நீயிறே. (மண்ணித்யாதி) ப்ரளயம் வருமென்றேற்கவேகோலி வயிற்றிலேவைத்து. வெளிநாடு காணவுமிழ்ந்து போக்யபூதனுய் ஸுலபனை க்ருஷ்ணனையே விரும்பிக்காணவேணுங்காண். அ.

கண்ணுங்கமலம் கமலமேகைத்தலமும்
மண்ணளந்தபாதமும்மற்றவையே—எண்ணில்
கருமாமுகில்வண்ணன் கார்க்கடல்நீர்வண்ணன்
திருமாமணிவண்ணன் தேசு. கூ.

அந்.— கரு மா முகில் வண்ணன் கார் கடல்நீர் வண்ணன் (7) திரு மா மணி வண்ணன் தேசு எண்ணில். (13) கண்ணும் கமலம் கைத்தலமும் கமலமே. (17) மற்று மண் அளந்த பாதமும் அவையே. (22)

அர்.— கறுத்த பெரிய மேகம்போன்ற வடிவையுடையவனுய் கருங் கடல்நீர் நிறத்தனுய் (எ) அழகிய ஸ்லாக்யமான மணி யுருவனுனஸர்வேஸ்வரன் தேஜஸ்ஸை யாராய்ந்து பார்க்கில் (கூ) திருக்கண்களும் தாமரை புஷ்பம்போன்றிருக்கும். திருக்கைத்தலமும் தாமரைபுஷ்பம்போலவே யிருக்கும். (கள) இணையும் பூலோகத்தை யாக்ரமித்த திருவடியும் அப்புஷ்பம்போலவே யிருக்கும். (உஉ) கூ.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(கண்ணும்)(கருமாமுகில்வண்ணன், கார்க்கடல் நீர்வண்ணன் திருமா மணிவண்ணன் தேசெண்ணில்) ஸ்ரமஹரமாய் கண்ணுக்கடங்காதேதிரண்டு குளிர்ந்திருந்தவனுடைய வழகையெண்ணில். (கண்ணுங்கமலம் கமலமேகைத்தலமும் மண்ணளந்தபாதமும் மற்றவையே) காடுமேடுமான பூமியையளந்ததுவும் பூவைக்கொண்டே. கூ.

தேசுந்திறலும் திருவுமுருவமும்
மாசில்குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில்
வலம்புரிந்தவான்சங்கங் கொண்டான்பேரோத
நலம்புரிந்துசென்றடையும் நன்கு. கஂ.

அந்.— வலம்புரித்த வால் சங்கம் தொண்டான் பேர் ஓத பேசில் (7) தேசும் நிறனும் திருவும் உருவமும் மாசு இல் குடி பிறப்பும் (15) மற்றவையும் நன்கு கலம் புரிந்து சென்று அடையும். (21)

அர்.— தகுதிணுவர்த்தமான வெண் சங்கை (திருக்கையில்) ஏந்திய திருமாலுடைய திருநாமத்தைச் சொல்ல (அதின்பலத்தைப்) பேசினால் (எ) தேஜஸ்ஸும் ஸாமர்த்யமும் ஐஸ்வர்யமும் ஸௌந்தர்யமும் குற்றமற்ற குலத்தில் ஜன்மமும் (கடி) மற்றுமுண்டான நன்மையும் (தங்கள்) மேன்மையை விரும்பி (த்தானே) வந்து சேரும். (உக) கo.

வ்யா.— அவ.— பத்தாம்பாட்டு.— (தேசும்) அங்குள்ளவழகைப்பேசிப் போமித்தனையோ? நமக்கும் சிலபேறுகள் வேண்டாவோ? வென்னில்; நாமவனுடைய திருநாமங்களைச் சொல்ல உபக்ரமிக்க எல்லாஸம்பத்துக்களும் தங்களுடைய ஸ்வரூபம் பெறுகைக்காகத் தானேவந்தடையுமென்கிறது.

(தேசும்) மதிப்பும். (நிறனும்) பராபிபவஸாமர்த்யமும் (திருவும்) ஐஸ்வர்யமும். (உருவமும்) வடிவழகும். (மாசில்குடிப் பிறப்பும்) குற்றமற்றபிறப்பும் (மற்றவையும்நன்கு) அதுக்தமானவையும் இவையெல்லாமானநன்கு. (பேசில்) திருநாமம்சொன்னதுக்கு பலம் பேசப்போகாது, ப்ரயோஜநத்திலே பேசில். (வலம் புரிந்தவித்யாதி) ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்ல. (கலம்புரிந்து சென்றடையும்) இஸ்லம்பத்தெல்லாம் தன்பேறுகச் சென்றடையும். கo.

அரு.— பத்தாம்பாட்டு.— நன்கு-கீழ்ச்சொன்ன வெல்லா நன்மையும். வலம்புரிந்த-வலமாகப்புரிந்திருக்கை. கo.

நன்கோதும்நால்வேதத்துள்ளான், நறவிரியும்
பொங்கோதருவிப் புனல்வண்ணன்—சங்கோதப்
பாற்கட்லான்பாம்பணையின்மேலான், பயின்றுரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவினன். கக.

அந்.— நன்கு ஓதும் நால்வேதத்து உள்ளான் (4) நறவு இரியும் பொங்கு ஓதம் அருவி புனல் வண்ணன் (11) சங்கு ஓதம் பாற்கடலான் பாம்பணையின் மேலான் (16) பயின்று உரைப்பார் நூற்கடலான் நுண்ணறிவினன். (20)

அர்.— நன்றாய் (க்ரமத்துடன்) ஓதப்படுகிற நால்வகையான வேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டவனாய் (ச) தேன் தோற்கும்படியாயும் வ்ருத்தியடைகிற ஸாமத்ரம்போலவும் மலையருவியின் ஜலம் போலவு மிருக்கிற திருமேனியையுடையனாய் (கக) சங்கங்களோடு கூடிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளு மவனாய் ஆதிசேஷனுகிறபடிக்கைமேல் பள்ளிகொண்டவனாய் (ககூ) விமர்சித்துச் சொல்லுமம்வாதிகளுடைய சாஸ்த்ரஸாகரத்தில்ப்ரதிபாதிக்கப்பட்டவனாயிருக்கிறஸர்வேஸ்வரன் ஸூக்ஷ்ம புத்தியாலறியத்தக்கவனாயிருப்பன். (உ0) கக.

வ்யா.— அவ.— பதினேராம்பாட்டு.— (நன்கோதும்) அவன் திருநாமத்தைச்சொல்லத் தானே காட்டக் காணுமத்தனை. அல்லாதார்க்கு துர்ஜ்ஞேயனென்கிறது.

(நன்கோது மித்யாதி) ப்ரதிநியத விசேஷங்களோடேகூட ஸாங்காத்யயநம் பண்ணினவேதங்களாலே "வேதைஶ்சாஹமேவவேத்யः - வேதைஸ்ச ஸர்வைரஹமேவவேத்யः" என்கிறபடியே ப்ரதிபாதிக்கப்பட்டவன். (நறவித்யாதி) தேன் தோற்கும்படியாய்க் கிளர்ந்த கடல்போலேயும் அருவிப் புனல்போலேயு மிருந்துள்ள திருமேனியையுடையவன். (சங்கோதப்பாற்கடலான்) சங்குகளோடேகூடின திரையையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுமவன். (பரம்பணையின்மேலான்) அநந்தசாயி. (பயின்றாழைப்பார் நீற்கடலான்) ஸாதரமாகவுரைக்குமவர்களாலே இதிஹாஸபுராணங்களாலே ப்ரதிபாதிக்கப்படுமவன் (நுண்ணறிவினன்) ஸ்வயத்நத்தாலே யறிவார்க்கு துர்ஜ்ஞேயன். கக.

அரு.— பதினேராம்பாட்டு.— சொல்ல-சொல்லுகைக்கு. ப்ரதிநியதவிசேஷங்களோடேகூட என்றபடி. (நறவிரியும்) நறவு-தேன், இரியும்-சிதறும்படி, தோற்கும்படியென்கை, நீற்கடல் - சாஸ்த்ரக்கடல். ஙக.

அறிவென்னுந்தாள்கொளுவி யைம்புலனுந்தம்மில்
செறிவென்னுந்திண்கதவம்செம்மி—மறையென்றும்
நன்கோதிநன்குணர்வார்காண்பரோ, நாடோறும்
பைங்கோதவண்ணன்படி. ஙஉ.

அந்.— என்றும் மறை நன்கு ஓதி அறிவென்னும் தாள் கொளுவி (7) ஐம்புலனும் தம்மில் செறிவென்னும் திண் கதம் செம்மி

நன்கு உணர்வார் (15) பைங்கோதவண்ணன்படி நாடோறும் காண்பர். (18)

அந்.— எப்போதும் வேதத்தைச் செவ்வையா யத்யயநம்செய்து ஞானமாகிற பூட்டைத்தொடுத்து (எ) ஐவகையான விந்த்ரியங்களாத் தமக்குள் ளடக்குகையாகிற வலிய கதவை யடைத்து நன்றுமறியவல்லவர்கள் (கரு) அழகியகடல்நிறத்தனனஸர்வேஸ்வரன் வகையை ப்ரதிதிநமும் மறிவார்கள். (கஅ) கஉ.

வ்யா.— அவ.— பன்னிரண்டாம்பாட்டு.— (அறிவென்னும்) ஒருத்தருக்கு மறியப்போகாதேகாவென்னில், இப்படி யறிவார்க்கறியலாமென்கிறது.

(அறிவித்யாதி) தண்ணிதான ஸ்ரவண ஜ்ஞானத்தை மூட்டி. (ஐம்புலனுமித்யாதி) பாஹ்யேந்த்ரியங்கள் மநஸ்ஸோடேகூடி மநஸ்ஸு ஆத்மாவோடேகூடி யிருக்கிற விதச் செறிவாகிற திண்ணிய கதவை இந்த்ரியங்கள் பாஹ்யவிஷயங்களில் போகாதபடி செம்மி: (மறையென்றும் நன்கோதி) "யோமாதாஜ்ஞாயாஶேநஶ. யோகாத்ஸ்வாத்யாயமாமநேத்". யோகங் கைவந்தாலும் ப்ரமாணப்ரமேயங்களுடைய சேர்த்தி யறஸ்திக்கவேணும். (நன்கித்யாதி) உபாஸநம், த்ருவாநுஸ்ம்ருதி, தர்சந ஸமாநாகார ப்ரத்யக்ஷதாபத்தி. இவ்வளவாகவுணர்ந்தவர்கள் நன்குணர்ந்தவராகிறார். ஸ்ரமஹரமான வடிவையுடையவனுடையபடி. இப்படி யுணர்ந்தவர்கள் நாள்தோறுங் காண்பர்கள். ஐஉ.

அரு.— பன்னிரண்டாம்பாட்டு.— (தாள்கொளுவி) மேலே தகவு சொல்லுகையாலே ஜ்ஞாநமாகிற தாளையிட்டு என்கிறது. (யோகாத்தித்யாதி) யோகத்தினுலே அநாதி சாகைகளையு மறிகை. கஉ.

படிவட்டத்தாமரை பண்டுலகம் நீரேற்று
அடிவட்டத்தாலளப்ப நீண்ட—முடிவட்டம்
ஆகாயமூடறுத் தண்டம்போய்நீண்டதே
மாகாயமாய்நின்ற மாற்கு. கஙு.

அந்.— பண்டு உலகம், நீரேற்று படிவட்டத்தாமரை அடிவட்டத்தால் அளப்ப (6) மா காயமாய் நின்றமாற்கு நீண்ட முடிவட்டம் (12) ஆகாயம் ஊடறுத்து அண்டம்போய் நீண்டதே. (16).

அர்.— முற்காலத்தி லுலகத்தை தாகஜல மேற்றுவாங்கி தாம ரைப்பூப்போன்ற பூமியைத் திருவடியிலு ளடக்கைக்காகப்(சு)பெரிய திருமேனியுடையனுய் நின்ற ஸர்வேஸ்வரனுடைய நீண்ட கிரீடமா னது (கஉ) ஆகாயத்தைப் பிளந்து அண்டபித்திவரையிலும் போய் வளர்ந்தது. (கசு) கஙு.

வ்யா.— பதின்மூன்றும்பாட்டு.—(படிவட்டத்தாமரை) பூவலய மாகிற தாமரைப்பூவை. (பண்டித்யாதி) அடிவலயத்தாலே அளப்ப (நீண்டவித்யாதி) வடிவாலே பரிச்சேதித்து வ்யாமோஹத்தை யுடைய னனவனுக்குத் திருவபிஷேகமானது ஆகாசத்தையூடறுத்து அண்ட பித்திக் கவ்வருகே நீண்டது. ஙஙு.

அரு.— பதின்மூன்றும்பாட்டு.— படிவட்டத்தாமரை - வட்ட மாயிருக்கிற பூமியாகிறதாமரை. மாகாயமாய்நின்ற - பெரியவடிவை யுடைய. மாற்கு - வ்யாமோஹத்தை யுடையவனுக்கு. கஙு.

மாற்பால்மனம்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு
நூற்பால்மனம்வைக்க நொய்விதாம்—நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர்முடிதோயும்
பாதத்தான்பாதம் பணிந்து. கச.

அக்.—நால்பாலவேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடி தோயும் பாதத்தான் பாதம் பணிந்து (8) மால்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு (14) நூல்பால் மனம் வைக்க நொய் விதாம். (18)

அர்.— சதுர்விதவேத ப்ரதிபாத்யனுய் திருமலையை வாஸஸ்தா நமாக வுடையனுய் நித்யஸூரிகளின் கிரீட முறையும்படியான திரு வடிகளை யுடையனுன ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை யாஸ்ரயி த்து (அ) அத்தஸர்வேஸ்வரன் பக்கல் மாஸ்ஸை ப்ரவணமாக்கினல் பெண்களின் தோளை நிராசைபண்ணி (கச) வேதங்களி லுள்ளத்தை ப் பொருத்த வெளிதாம். (கஅ) கச.

வ்யா.— அவ.— பதினலாம்பாட்டு.— (மாற்பால்) "அறிவெ ன்னுந்தாள்கொளுவி" என்கிறபாட்டிற் சொல்லுகிறபடி இந்த்ரிய ஜயம்பண்ணி யறிகை யரிதாயிருந்ததே; அசக்த நிழக்குமத்தனையோ வென்னில், இழக்கவேண்டாதவுபாயம்சொல்லுகிறது.

(நாற்பாலவேதத்தான்) நாலுவகையான வேதத்தாலே ப்ரதி பாதிக்கப் படுமவன். வேததாத்பர்யமறியுமிடத்தில் கண்ணுலேகாண்

கிற சப்தாதிகளை யநுபவிப்பார்க்குக் காண வரிதிறேயென்னில்; (வேங்கடத்தான்) கண்ணாலே கண்டநுபவிக்கும்படி திருமலையிலே வந்து நின்றவனே. ஆகில் கண்ணாலே காணப்படுகிற சப்தாதிகளோடொக்குமோவென்னில், (விண்ணோர்முடிதோயும்பாதத்தான்) இப்படி திருமலையிலே நிற்கிறவன் நித்யஸூரிகளுக்கு ஸ்ப்ருஹணீயனானவன். அவன் திருவடிகளிலேபணிந்து. (மாற்பால்மனம்சுழிப்ப) வ்யாமுக்தனுயிருக்கிறவன் பக்கலிலே மநஸ்ஸுசுழிக்க. (மங்கையர் தோள்கைவிட்டு) ரஸத்திலே மூட்டக்கடவதான ஸ்த்ரீகளுடைய தோளைக் கைவிட்டு. (நூற்பால்மனம்வைக்க நொய்யிதாம்) ப்ரமாணங்களிலே அல்பம் மநஸ்ஸை வைக்கவெளிதாம். ஒசை.

பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோதப்
பணிந்தபணமணிகளாலே—அணிந்து, அங்
கனந்தனணைக்கிடக்குமம்மான், அடியேன்
மனந்தனணைக்கிடக்கும்வந்து. கடி.

அந்.— பௌவம் படு பணிந்து உயர்ந்த திரைகள் மோத(6) பணிந்த பணமணிகளாலே அணிந்து அனந்தன் அணை கிடக்கும் அம்மான் அங்குவந்து (13) அடியேன் மனந்தன் அணை கிடக்கும். (16)

அர்.— ஸமுத்ரத்தி லுண்டாய் மடிந்து கிளம்புகிற வலைகளடிக்க (சு) (அத்திவலை மேல்விழாதபடி)கவித்த படங்களிலுள்ள மாணிக்கங்களினு லலங்கரிக்கப்பட்ட திருவநந்தாழ்வானுகிற படுக்கையின் மேற் பள்ளிகொண்ட ஸ்வாமி (கஉ) அப்படுக்கையையிட்டுவந்து அடியேனுடைய மநஸ்ஸாகிற படுக்கையில் சயநித்தான். (ககூ) கடி.

வ்யா.— அவ.— பதினேந்தாம்பாட்டு.—.(பணிந்து) அவனுலே ஸ்வயம்வரிக்கப் பட்டவனுக்கு துக்கமொன்றுமில்லையிறே என்கிறது.

(பணிந்தித்யாதி) தாழ்வதுகிளருவதானகடல் திரைகளோதத. மோதவென்கிறது— குறுந்திவலைபடிலும் திருமேனியிலே ஒருமலை விழுந்தாற்போலே யிருக்கை. (பணிந்தபணமணிகளாலே) அத்திவலைகள் திருமேனியில் படாதபடி காத்தபணத்தின்மணிகளாலே. (அணிந்தித்யாதி) அதினுலே யலங்க்ருதனன திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே கிடக்கிற ஸர்வேஸ்வரன். (வந்து அடியேன் மனந்தனணைக்கிடக்கும்) அப்பெரிய படுக்கையிலே கிடக்குமவன் பரியவு மறியாதே அப்படுக்கை வாய்ப்புமின்றிக்கேயிருக்கவந்தென்மந

ஸ்ஸிலே தங்காகின்றான். எங்கேதங்குமவன் எங்கே தங்காகின்றான். கிடக்க வொருபடுக்கையில்லாதவன் படுக்கையுள்ள விடந்தேடிவரு மாபோலே. திருவயோத்தையிலுள்ளார் அவனைச் சரணம்புக்குக்கிட க்க, "சூவாவஷ்ஷஹிஷ்ஷாகி-ஆவாஸந்த்வஹமிச்சாமி" என்றிருந் தாற்போலே. ஙடு.

வந்துதைத்தவெண்டிரைகள் செம்பவளவெண்முத்தம்
அந்திவிளக்குமணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித்தாமரையாளொன்றியசீர்மார்பன்
திருவல்லிக்கேணியான் சென்று. கசு.

அந்.— ஒரு அல்லி தாமரையாள் சென்று ஒன்றிய சீர் மார்பன் (7) வெண் திரைகள் வந்து உதைத்த செம் பவளம் வெண் முத்தம் (15) அந்தி விளக்கும் அணிவிளக்காம் திருவல்லிக்கேணியான் எந்தை. (20)

அர்.— மிக்கவழகிய விதழ்களையுடைய கமலப்பூவில் வஸியா நின்றபிராட்டி போ யுறைந்த வழகிய திருமார்பையுடையனும் (எ) வெண்மையான அலைகள் கொண்டுவந்து தள்ளாகின்ற சிவந்த பவள த்தையும் வெள்ளை முத்துக்களையும் (கடி) ஸந்த்யாகாலத்துக்கு ப்ரகாசகமான மங்களதீபமாகவுடைய திருவல்லிக்கேணியி லெழுந்த ருளியிருக்கிற பார்த்தஸாரதி யெனக்கு ஸ்வாமி. (20) கசு.

வ்யா.— அவ.— பதினாறும்பாட்டு.— (வந்து) இப்படி வந்து தங்குகைக்கடி பிராட்டியோடேயிருக்கை யென்கிறார்.

(வந்தித்யாதி) வந்துதையா நின்றுள்ள வெண்டிரைகளாலே யுண்டானசிவந்த பவளமும், ஒளியையுடைத்தானமுத்தும், அந்திக்கு ப்ரகாசகமாக நின்றமங்களதீபத்தை யுடைத்தான திருவல்லிக்கேணி யிலே நின்றவன். (சென்று ஒருவல்லித்தாமரையா ளொன்றிய சீர் மார்பன்) [வஸ ;)தாம்ஸவ-ஜேவா நாம் யயளவக்ஷஷ்வ்யம்ஹரேஃ - பஸ்யதாம்ஸர்வதேவாநாம் யயௌவக்ஷஸ்தலம்ஹரேஃ] "பஸ்பதாம்" என்று அநாதரேஷஷ்டீ. ப்ரஜைகள் பார்த்திருக்க பர்த்தாவின் படுக்கையைக் கணிசித்தேறுவாரைப்போலே தேவர்கள் பார்த்துக் கிடக்கத் திருமார்பிலே யேறினள். [தயாவலோகி தாஜேவாஃ-தயாவ லோகிதா தேவாஃ] பின்னை ஸர்வேஸ்வரன் இவர்களுடைய அல மாப்பைப்பாராயென்று திருவுள்ளத்தாலே நினைத்தபடி தோற்றப் பின்னை யவளாலே பார்க்கப் பட்டவர்கள். [வ ஜே ஹிஸ ஹமே

ஹாரழி - ப்ரதேஹிஸ்வபேகேஹாரம்] அவன் நினைவுஞ் சொல்லுமறி க்கிறே சிலரைக் கடாக்ஷிப்பதும், சிலரைக் கொண்டுகொடுப்பதும். பெரியபிராட்டியார் தானே சென்றடையும் திருமார்பை யுடைய னாய் திருவல்லிக்கேணியானனவன். (எந்தை) எனக்குஸ்வாமி. கசு.

அரு.— பதினைரும்பாட்டு.— பவளமும் மூத்தும் ப்ரகாசக த்வே விளக்காக ப்ரகாசியாநிற்கை. அவன் நினைவறிந்தே பார்க்கு மோவென்ன, அருளிச்செய்கிறார் (ப்ரதேஹீத்யாதி). கசு.

சென்றநாள் செல்லாதசெங்கண் மாலெங்கண்மால்
என்றநாளெந்நாளும் நாளாகும்—என்றும்
இறவாத வெந்தை யிணையடிக்கே யாளாய்
மறவாது வாழ்த்துக வென்வாய். கஎ.

அ.— செம் கண் மால் எங்கள் மால் என்றநாள் சென்றநாள் செல்லாதநாள் எந்நாளும் நாளாகும். (10) என்றும் இறவாத எந்தை இணை அடிக்கே ஆளாய் என்வாய் மறவாது வாழ்த்துக. (19)

அர்.— சிவந்த நேத்ரங்களையுடைய ஸர்வேஸ்வர னெங்களிடத் தில் வ்யாமோஹத்தையுள்ளவன் என்றறிந்தநாள் (அதற்குமுன்) கழி ந்தநாள் (இனி) வரக்கடவ நாளாகிய வெல்லாநாளும் நன்னாளாம். (கo) எப்போது மழிவில்லாத பிதாவான ஸர்வேஸ்வரனுடைய பொ ருந்திய திருவடிக்கு தாஸனாய் என்னுடைய வாக்கு விஸ்மருதியின்றி மங்களாசாஸநம் செய்யக்கடவதாக. (கக) கஎ.

வ்யா.— அவ.— பதினேழாம்பாட்டு— (சென்றநாள்) அவ ளோடே கூடியிருக்கையாலே பலத்துக்குத்தட்டில்லை, இனி யென் னுடைய வாக்கானது அவனை விச்சேதமின்றிக்கே அநுபவிப்பதாக.

(செங்கண்மா லெங்கண்மா லென்றநாள் சென்றநாள் செல்லாத எந்நாளும் நாளாகும்) ஸர்வேஸ்வரன் என்பக்கலிலே வ்யாமோ ஹத்தைப்பண்ணினனென்று அறிந்தநாள், கழிந்தநாள், வரக்கடவ நாளான வெல்லாநாளும் நல்விடிவாம். இந்நாள்வரும்படி கழிந்தநா ளாகையாலேபோனநாளுமழகிது. மேல் விச்சேதமின்றிக்கே அநுப விக்கப்பெறுகையாலே வருங்காலமு மழகிது. (என்றும்பித்யாதி.) ஒரு நாளுண்டாய் ஒருநாளின்றிக்கே யொழியுமுறவின்றிக்கே நித்யனான பிதாவினுடைய வாக்கானது விச்சேதமின்றிக்கே வாழ்த்துக. கஎ.

வாய்மொழிந்து வாமனனுய் மாவலிபால், மூவடிமண்
நீயளந்துகொண்ட நெடுமாலே—தாவியநின்
எஞ்சாவிணையடிக்கே யேழ்பிறப்புமாளாகி
அஞ்சாதிருக்கவருள். கசு.

அந்.—வாமனனுய் வாய்மொழிந்து மாவலிபால் மூவடி மண் அளந்துகொண்ட நெடுமாலே! (7). தாவிய எஞ்சா நின் இணை அடிக்கே ஏழ் பிறப்பும் ஆளாகி அஞ்சாதிருக்க நீ அருள். (18)

அர்.—வாமநாவதாரமெடுத்து (சிலவற்றைச்) சொல்லி மஹாபலிபக்கல் மூன்றடி பூமியை (வாங்கி அதைத்திருவடிகளாலே) யாக்ரமித்த ஸர்வாதிகனே! (எ) உலகமளந்த குறைவற்ற உன் னிரண்டு திருவடிகளுக்கே மேல்வரும் ஜந்மங்களெல்லாவற்றிலு மாட்பட்டு பயப்படாதிருக்கும்படி நீ க்ருபைசெய்யவேண்டும். (கசு) கசு.

வ்யா.— அவ.— பதினெட்டாம்பாட்டு.— (வாய்மொழிந்து) உன்னுடைமையை யொன்றுஞ் சோரவிடாத நீயென்னைக்கைக்கொண்டருளவேணுமென்கிறார்.

(வாமனனுய் வாய்மொழிந்து) ஸ்ரீவாமனனுய், "மாவலி! மூவடி மண்தா" என்றருளிச்செய்து. (மாவலியித்யாதி) அவன் தரப்பின்னை யளந்து கொண்ட ஸர்வேஸ்வரனே! (தாவியவித்யாதி) திருவுலகளந்தருளினவனுடைய கல்யாணமான திருவடிகளிலே நிர்ப்பயனுய் காலமெல்லாமடிமை செய்திருக்கும்படி யருள். ஔஷதத்தை ஸேவித்தாலொருவன் தனக்குபயமின்றிக்கே ஸர்ப்பத்தின்வாயிலே கைகொடாகின்றானிறே. அவனுண்டியவருள் பெற்றவன்று ஸம்ஸாரத்திலேயிருந்து பயங்கெடவிருக்கத்தட்டில்லை யிறே, கசு.

அரு.— பதினெட்டாம்பாட்டு.— (எஞ்சாவிணையடி) எஞ்சுதல்-சுருங்குதலாய், சுருக்கமின்றி என்கையாலே கல்யாணகுண பூர்ணமான திருவடிகளென்றபடி. ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே அஞ்சாதே யிருக்கக்கூடுமோவென்ன, அருளிச்செய்கிறார் (ஔஷதத்தை யித்யாதி). கசு.

அருளாதொழியுமேயாலிலைமேல், அன்று
தெருளாதபிள்ளையாய்ச்சேர்ந்தான்—இருளாத
சிந்தையராய்ச்சேவடிக்கேசெம்மலர்தூய்க்கைதொழுது
மூந்தையராய்நிற்பார்க்குமூன். கஎ.

அந்.—இருளாத சிந்தையராய் சே அடிக்கே செம் மலர் தூய் கைதொழுது (8) முந்தையராய் நிற்பார்க்கு முன் அன்று ஆலிலை மேல் தெருளாத பிள்ளையாய் சேர்ந்தான் அருளாதொழியுமே? (17)

அர்.— அஜ்ஞாநாந்தகாரமில்லாத மநஸ்ஸையுடையராய்க்கொண்டு அழகிய திருவடிகளில் சிவந்த புஷ்பங்களை ஸமர்ப்பித்துக் கைகூப்பி(அ) முற்பாடராய் நிற்குமுபாஸகருக்கு முன்னமே அந்தப்ரளயகாலத்தில் வடதளத்தில் ஜ்ஞாநயோக்யதையில்லாத பிள்ளையுருவையுடையனுய்ப் பள்ளிகொண்ட ஸர்வேஸ்வரன்(நமக்கு)க்ருபைசெய்யாமற்போவனோ? (கள) கக.

வ்யா.— அவ.— பத்தொன்பதாம்பாட்டு.— (அருளாது) அருளென்னுங்காட்டில் அருளுமோவென்று திருவுள்ளம் விசாரிக்க நமக்கருளாதொழியுமோவென்கிறார்.

(ஆலிலையித்யாதி) ஆலிலையிலேசேர்ந்து வ்யாமுக்தனை பிள்ளை நமக்கருளாதொழியுமோ? (இருளாதசிந்தை) இருளாதசிந்தைகளையுடையராய்த் திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு கைகளாலே தொழுது முற்பாடராயிருக்கிறவர்களுக்கு முன்னருளாதொழியுமோ? முன்னேயருளானே. கக.

முன்னுலகமுண்டுமிழ்ந்தாய்க்கு, அவ்வுலகமீரடியால்
பின்னளந்துகோடல்பெரிதொன்றே—என்னே
திருமாலேசெங்கணெடியானே, எங்கள்
பெருமானேநீயிதனைப்பேசு. உ0.

அந்.—முன் உலகம் உண்டு உமிழ்ந்தாய்க்கு அவ்வுலகம் பின் ஈரடியால் அளந்துகோடல் பெரிதொன்றே? (9) திருமாலே! செங்கண் நெடியானே! எங்கள் பெருமானே! நீ இதனை பேசு. என்னே! (18)

அர்.— முற்காலத்தி லுலகத்தை யமுதுசெய்து (அநந்தரம்) வெளிப்படுத்தி அவ்வுலகத்தைப் பின்பொருகாலத்தி லிரண்டடியினுலளந்துகொண்டது ஒரு பெரிதோ? (கூ) பெரியபிராட்டியினிடத்தில் வ்யாமோஹமுடையவனே! சிவந்தகண்களையுடைய ஸர்வாதிகனே! எமக்குஸ்வாமியே! நீ யிதைச் சொல். என்ன ஆஸ்சர்யம். (கஅ) உ0.

வ்யா.— இருப்சாம்பாட்டு.— (முன்னுலகமித்யாதி) உன்கையிலே பருத்திபட்ட பன்னிரண்டும்பட்ட விந்தலோகத்தன்னையே

பெறுதுபெற்றாயாக வளர்த்துகொள்கை. இதுபெரியதொன்றே? (என்னே திருமாலே யித்யாதி) உன்னுடைய மேன்மைக்கும் இத்தாழ்ச்சிக்கு மெங்கே சேர்த்தியுண்டி. நீ யித்தைச்சொல்லவேணுமென்று எத்திறமென்கிறார். உ0.

அரு.— இருபதாம்பாட்டி.—அளந்துகோடல் - அளந்துகொள்கை - பெரியதொன்றே - அன்றென்றபடி! உ0.

பேசுவா ரெவ்வளவு வேசுவர், அவ்வளவே
வாசமலர்த்துழாய் மாலையான்— தேசுடைய
சக்கரத்தான் சங்கினென்சார்ங்கத்தான், பொங்கரவ
வக்கரனைக்கொன்றுன் வடிவு. உக.

அந்.— வாசம் மலர் துழாய் மாலையான் தேசு உடைய சக்கரத்தான் சங்கினென் (8) சார்ங்கத்தான் பொங்கு அரவம் வக்கரனை கொன்றுன் வடிவு பேசுவார் எவ்வளவு பேசுவர், அவ்வளவே. (18)

அர்.—பரிமளம்மிக்க விதழ்களையுடைய திருத்துழாய் மாலையையுடையனும் தேஜஸ்ஸையுடைய திருவாழியையுடையனும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையனும் (எ) சார்ங்கமென்கிற வில்லையுடையனும் பெரிய கூச்சலையுடைய தந்தவக்த்ரனை ஸம்ஹரித்தவனுமான ஸர்வேஸ்வரன் படியைப் பேசவல்லர்கள் எவ்வளவு பேசவார்களோ? அவ்வளவேபேசுவார்கள். (இவன்படியைப் பூர்ணமாகப்பேச ஒருவரும் சக்தராகார்கள்) (கஅ) உக.

வ்யா.— அவ.—இருபத்தோராம்பாட்டி.— (பேசுவார்) கீழ்திருவுலக்களந்தருளின விடம்.ப்ரஸ்துதமாகையாலே அப்படிவனையாதே பரீம்ராறுங் க்ருஷ்ணவதாரத்தைச் சொல்லுகிறார்.

(பேசுவாரித்யாதி) பேசுமவர்களுக்கு யாதோரளவுண்டி, அவ்வளவுபேசிப்போமத்தனை. விஷயத்தைப் பரிச்சேதித்துப் பேசப்போகாது. (வாசமித்யாதி) பரிச்சேதிக்கப்போகாமைக்கிவை தனித்தனியே ஹேதுக்கள். (பொங்கரவ வித்யாதி) விஸ்த்ருதமான சப்தத்தையுடையனை தந்தவக்த்ரனைக் கொன்றவனுடைய வடிவு பேசுவா ரெவ்வளவு பேசுவர்; அவ்வளவே. உக.

அரு — இருபத்தோராம்பாட்டி.— அரவம் - சப்தம். வடிவு - ஸ்வபாவம். உக.

வடிவார்முடிகோட்டி வானவர்கள், நாளும்
கடியார்மலர்தூவிக் காணும்—படியாளன
செம்மையாலுள்ளுருகிச் செவ்வனேநெஞ்சமே
மெய்ம்மையே காணவிரும்பு. உஉ.

அந்.— வானவர்கள் வடிவு ஆர் முடி கோட்டி (5) கடி ஆர் மலர் நாளும் தூவி காணும் படியாளன(11)நெஞ்சமே! செம்மையால் உள் உருகி செவ்வனே மெய்ம்மையே காண விரும்பு. (19)

அர்.—நித்யஸூரிகள் ஸௌந்தர்யம் மிக்க திருவபிஷேகங்களை வணக்கி பரிமளத்தினால் நிறைந்த புஷ்பங்களைத் தினந்தோறும் ஸமர்ப்பித்து ஸேவிக்கத்தக்கஸ்வபாவத்தையுடையஸர்வேஸ்வரனை (கக) மனமே! மெய்ப்பாட்டை யதுஸந்தித்து உள்ளங்கரைத்து ஸம்மார்க்கத்தினால் யதார்த்தமாகக் காண வாசைப்படு. (கூ) உஉ.

வ்யா.— அவ.— இருபத்திரண்டாம்பாட்டு.— (வடிவார்) அவன்படி பரிச்சேதிக்கப் போகாதபின்பு அவன்தானே காட்டக் காணென்கிறார்.

(வடிவாரித்யாதி) தர்சநீயமாயிருந்துள்ள முடிகளைவணக்கித் தேவர்கள் நாள்தோறும் பரிமளமிக்கிருந்துள்ள புஷ்பத்தைக் கார்ய புத்தியின்றிக்கே திருவடிகளிலே பொகட்டுக்காணும் ஸ்வபாவத்தையுடையவனுள்ளவனே. (செம்மையாலுள்ளுருகி) "அவன் சேஷிஹான் சேஷபூதன்" என்னும்முறையாலே ஹ்ருதயம சிதிலமாய். (செவ்வனே) அவன்காட்டும்வழியாலே. (நெஞ்சமே மெய்ம்மையே காணவிரும்பு) ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் காணவாசைப்படு. உஉ.

அரு.— இருபத்திரண்டாம்பாட்டு.— (முடிகோட்டி) கோடுதல்-வணங்குதல். செவ்வனே-செவ்வே. உஉ.

விரும்பிவிண்மண்ணளந்த வஞ்சிறையவண்டார்
சுரும்புதுளையிற்சென்றூத—அரும்பும்
புனந்துழாய்மாலையான் பொன்னங்கழற்கே
மனந்துழாய்மாலாய் வரும். உஙூ.

அந்.— அம் சிறைய வண்டு ஆர் சுரும்பு சென்று துளையில் ஊத (8) அரும்பும் புனம் துழாய்மாலையான் விரும்பி விண் மண் அளந்த பொன் ஆம் கழற்கே (18) மனம் துழாய் மாலாய் வரும். (22)

அர்.—அழகிய இறகுகளையுடைய ஆண்வண்டோடு கூடிய பெண்வண்டுபோய் ரஸகாடியி லூதும்போது(அ) அரும்பிடாநின்றும் தன்னிலத்திற்போல் செழித்துமிருக்கிற திருத்துழாய்மாலையையுடையவனுடைய, ஆசைப்பட்டு ஆகாசத்தையும் பூமியையு மளந்த பொன்போலழகிய திருவடிகளை (கஅ) யாராய்ந்துகொண்டு (என்) மகஸ்ஸானது வ்யாமோஹத்தையுடையதாய் வரும். (உஉ) உங.

வ்யா.— அவ—. இருபத்துமூன்றும்பாட்டு.—(விரும்பி)உபதேசம்பலித்தபடி சொல்லுகிறது.

(விரும்பி யித்யாதி) பொன்னங்கழற்கே விரும்பி என்னவுமாம். விருப்பத்தோடே விண்ணும்மண்ணுமளந்த, அழகிய கிறகையுடைத்தான வண்டார்க்கும் சுரும்பு ரசம்பறிந்தூதுமரும்பாநின்றுள்ள புனந்துழாய்மாலையானுடைய விலக்ஷணமான கழலிலே மகஸ்ஸானது வ்யாமோஹத்தைப்பண்ணித் துழாவி வாராநின்றது. உங.

அரு.— இருபத்து மூன்றும்பாட்டு.— விரும்பி - மகஸ்ஸு விரும்புதல்; அவன்விரும்புதல். வண்டார்சுரும்பு - வண்டுகளும் வண்டு விசேஷமான சுரும்புகளும், ஆர்-மிக்கு, திரண்டென்றபடி. ரசம்பு-தேன் புறப்படுகிறவழி. உங.

வருங்காலிருநிலனும் மால்விசும்புங்காற்றும்
நெருங்குதீநீருருவுமானான்—பொருந்தும்
சுடராழியொன்றுடையான் சூழ்கழலே, நாளும்
தொடராழிநெஞ்சே தொழுது. உச.

அந்.—ஆழி நெஞ்சே! இருநிலனும் மால் விசும்பும் காற்றும் நெருங்கு தீ நீருருவுமானான்(10)பொருந்தும் சுடர் ஒரு ஆழி உடையான் சூழ் கழலே வருங்கால் நாளும் தொழுது தொடர். (21)

அர்.—கம்பீரமான மகஸ்ஸே ! விசாலமானபூமியும் பெரிய ஆகாசமும் வாயுவும் அடர்ந்த நெருப்பும் ஜலமுமாகிய இவைகளைச் சரீரமாகவுடையவனும் (கo) அமர்ந்து உஜ்வலமாய் அத்விதீயமான திருவாழியை யுடையவனுமான ஸர்வேஸ்வரனுடைய (ஆஸ்ரிதரை) வ்யாபியாகின்ற திருவடிகளையே மேல்வரப்போகிறகாலமெல்லாம் தினந்தோறும் வணங்கி யாஸ்ரயி. (உக) (24)

வ்யா.— அவ— இருபத்துநாலாம்பாட்டு.— (வருங்கால்) ஆசைபிறந்தபின் விச்சேதமின்றிக்கே அநுபவிக்கப்பார்.

உசு மூன்றுந்திருவந்தாதி, உடு-பா, தொழுதால்பழுதுண்டே.

(இருநிலனுமித்யாதி) காரணமான பூதபஞ்சகமும் லீலாவிபூதிக்குமுபலக்ஷணம். (பொருந்து மித்யாதி) நித்ய விபூதிக்கு முபலக்ஷணம், உபய விபூதியுக்தனுடைய சூழ்கழலே வருங்கால் நாளு மாழி நெஞ்சே! தொழுது தொடர். கீழ் விச்சேதித்து அந்வர்த்தப்பட்டது போரும். முறையாலே ஆஸ்ரயி. உச.

அரு.— இருபத்துகாலாம்பாட்டு.— வருங்கால் - தானேவரும் போது. சூழ்கழல்-ஆபரணங்களாலே சூழ்ந்திருக்கிற கழல். முறை-சேஷத்வமுறை. உச.

தொழுதால்பழுதுண்டே தூநீருலகம்
முழுதுண்டுமொய்குழலாளாய்ச்சி—விழுதுண்ட
வாயானைமால்விடையேழ் செற்றானை,வானவர்க்கும்
சேயானைநெஞ்சே சிறந்து. உடு.

அக்.—நெஞ்சே! தூ நீர் உலகம் முழுது உண்டு(6) மொய் குழலாள் ஆய்ச்சி விழுது உண்ட வாயானை (12) மால் ஏழ் விடை செற்றானை வானவர்க்கும் சேயானை சிறந்து தொழுதால் பழுதுண்டே? (21)

அர்.—மனமே! தெளிந்த நீர்சூழ்ந்த வுலக மனைத்தையு மமுதுசெய்து (சு) அழகிய மயிர்முடியையுடைய யசோதையினுடைய விழுதானெய்யை யமுதுசெய்த திருப்பவளத்தையுடையனாய் (கூ) பெரிய ஏழெருதுகளைக்கொன்றவனாய் தேவர்களுக்கும் கிட்டவரியனாயிருக்கிறபரியாபதியைத் தகுந்தபடி யாஸ்ரயித்தால் தோஷமுண்டோ? (உக) (உடு)

வ்யா.— அவ.— இருபத்தைந்தாம்பாட்டு.— (தொழுதால்) என்சொல்லுகிறது தப்புண்டோவென்கிறார்.

(தூநீருலகம்முழுதுண்டு) சூழ்ந்தகடல் அலையாதபடிக் கீடாக லோகத்தையெல்லாம் வயிற்றிலேவைத்து. (மொய்குழலித்யாதி) அதுகூலருடைய த்ரவ்யத்தாலல்லது கரியாதவனை. (மால்விடை யேழ்செற்றானை) நப்பின்னைப்பிராட்டியுடைய ஸம்ச்லேஷத்துக்கு விரோதியானமதித்த ஏறேழையும் செற்றவனை. (வானவர்க்குஞ்சேயானை) ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு மருஸ்ஸுக்கும் வாக்குக்கும் தூரஸ்தனானை. (சிறந்து நெஞ்சே தொழுதால் பழுதுண்டே) ஆஸ்ரிதர்க்கு லாலபனாயனைக் கிட்டித்தொழுதால் பழுதுண்டோ!

மூன்றாந்திருவந்தாதி, உசு- பா, சிறந்தவென்சிந்தையும். உள

அரு.—இருபத்தைந்தாம்பாட்டு.—தூநீர்-தெளிந்தநீர். சிறப்புத்தகுதி. உரி.

சிறந்தவென்சிந்தையும் செங்கணரவும்
நிறைந்தசிர்நீள்கச்சியுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும்வெஃகாவும் வேளுக்கைப்பாடியுமே
தாங்கடவார் தண்டுழாயார். உசு.

அந்.—தண் துழாயார் நிறைந்த சிர் நீள் கச்சியுள்ளும் வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப்பாடியும் உறைந்ததுவும். (10) சிறந்த என் சிந்தையும் செம் கண் அரவும் தாம் கடவார். (18)

அர்.—குளிர்ந்த திருத்துழாயினாலலங்கரிக்கப்பட்ட ஸ்ரீயஃபதி, பூர்ணமான ஸம்பத்தையுடைய விசாலமான பெருமாள்கோயிலிலும் திருமலையிலும் திருவெஃகாவிலும் வேளுக்கைப்பாடியிலும் வாஸம் செய்ததும். (கo) ஸ்லாக்யமான வென்னுடைய மகஸ்ஸையும் சிவந்த திருக்கண்களையுடைய திருவனந்தாழ்வானையும் தாம் அதிக்ரமியார் (விரும்பியிருப்பர்). (கஅ) உசு.

வ்யா.— இருபத்தாறும்பாட்டு.— (சிறந்தவித்பாதி) என்னுடைய சிந்தையுள்ளும் திருவனந்தாழ்வான் மேலும் கச்சியுள்ளும் ஸாதரமாகவுறைந்தது. (வேங்கடமித்யாதி) திருமலையிலும் திருவெஃகாவிலும் வேளுக்கைப்பாடியிலுங் கடவரானமாத்ரம். கடவரானமாத்ரமென்று சொன்ன வரமெத்தாலே யென்னில்; (தண்டுழாயார்). நிறைந்த சிர் நீள்கச்சியுள்ளும், வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப்பாடியுமுறைந்ததுவும். சிறந்தவென்சிந்தையும் செங்கணரவும் தாங்கடவார். உகந்த படுக்கையான திருவனந்தாழ்வானெபாதி யென்னுடையநெஞ்சை அதிக்ரமியார். அன்றிக்கே, திருவனந்தாழ்வானையும் என்னுடைய நெஞ்சையும் தம்மதாகவபிமாநித்திருப்பது; அல்லாதவற்றிலுறைந்த மாத்ரமேயென்று மருளிச்செய்வர். உசு.

அரு.— இருபத்தாறும்பாட்டு.— (கடவரானமாத்ரம்) அங்கெல்லாம் நிர்வாஹகரான மாத்ரமின்றிக்கே, உறைந்தென்னுதல், இங்கேஉறைகைக்கு ஹேது (தண்டுழாயார்) ஆஶ்ரித பவ்யதாகையாலெவ்கிறது. அன்றிக்கே, திவ்யதேசங்களிலே உறைக்கை கடவார்-நெஞ்சை யதிக்ரமியாரென்னுதல். அங்ஙனுமன்றிக்கே, கடவார்-

அபிமானமெல்லாமிங்கே, அங்கெல்லாமுறைத்தமாத்ரமென்னுதல். இத்தாலெல்லாயோஜனையாலும் ஆதிக்யமிங்கே, மற்ற விடங்களிலுதித்தமாத்ரமென்கை. உசு.

ஆரேதுயருழந்தார் துன்புற்றூராண்டையார்
காரேமலிந்தகருங்கடலே—நேரே
கடைந்தானைக் காரணனை நீரிணைமேல், பள்ளி
அடைந்தானை நாளு மடைந்து. உஎ.

அந்.—கார் மலிந்த கருங்கடலே நேரே கடைந்தானை காரணனை நீரிணைமேல் பள்ளியடைந்தானை அடைந்து (9) துயர் உழந்தார் ஆண்டையார் நாளும் துன்புற்றூர் ஆரே! (15)

அர்.—மேகங்கள் நிறைந்தும் (அத்தால்) கறுத்துமிருக்கிற ஸமுத்ரத்தை நேர்நின்று கடைந்தவனும் ஜகத்காரணனும் ஜலமாகிற படுக்கையின்மேல் சயனித்தவனுமான ஸ்ரியஃபதியை யாஶ்ரயித்து, (கூ) துக்கஹேதுவானபாபத்தை யிடைவிடாமற்செய்த வுலகத்தார் ஒருநாளாகிலும் துன்பமடைந்தவர் யார்? (கரு) உஎ.

வ்யா.— அவ.— இருபத்தேழாம்பாட்டு.— (ஆரே) அவன்படியிதுவானபின்பு அவனை யாஶ்ரயித்தும் தாங்கள் பண்ணின பாபத்தின் பலம் புஜிப்பாருண்டோ வென்கிறார்.

(காரேமலிந்தகருங்கடலே நேரேகடைந்தானை) மேலேபடிந்த மேகங்கள் சலியாதபடி அம்ருதம்படும்படிக்கிடாகக் கடலைக்கடைந்தானை. (காரணனை) ஜகத்காரணபூதனை. (நீரிணைமேல்பள்ளியடைந்தானை) ஆஶ்ரிதர்கார்யஞ் செய்கைக்காகத் திருப்பாற்கடலிலே கிட்டவந்து கிடந்தவனை. (நாளுமடைந்து ஆரேதுயருழந்தார் துன்புற்றூராண்டையார்) தாந்தாம் பண்ணின நிஷித்தகர்மத்தினுடைய பலமான துக்கத்தை யவனை யாஶ்ரயித்து அநுபவிப்பாருண்டோ? "ஆண்டையார்" என்றது-எங்குள்ளாரென்றபடி. "நாளும்" என்றது-எக்காலத்திலென்றபடி. எக்காலத்தில் எத்தேசத்தில் ஆரவனைப்பற்றி துஷ்கர்மபலத்தை யநுபவித்தார். உஎ.

அரு.—இருபத்தேழாம்பாட்டு.— "துயர், துன்பம்" என்கிற விரண்டாலும் கர்மத்தையும் கர்மபலமான துக்கத்தையுஞ் சொல்லுகிறது-ஆண்டையார்-அண்டஸம்பந்திகளாகையாலே தேசபரம். உஎ,

அடைந்ததரவணைமே லவர்க்காய், அன்று
மிடைந்ததுபாரதவெம்போர்—உடைந்ததுவும்
ஆய்ச்சிபால்மத்துக்கே யம்மனே வாளையிற்றுப்
பேய்ச்சிபா லுண்டபிரான். உஅ.

அந்.—வாள் எயிற்று பேய்ச்சி பால் உண்ட பிரான் அரவு அணைமேல் அடைந்தது, (9) அன்று ஐவர்க்காய் பாரதம் வெம் போர் மிடைந்தது, (15) ஆய்ச்சிபால் மத்துக்கே உடைந்ததுவும், அம் மனே ! (19)

அர்.—வாள்போன்ற பற்களையுடைய பூதனையின் பாலை யமுது செய்த உபகாரகனஞ்ரியபதி திருவனந்தாழ்வானிற படுக்கை யின்மேல் பள்ளிகொண்டது, (கூ) அக்காலத்தில் பஞ்சபாண்டவர் களுக்காக பாரதமென்கிற கொடிய யுத்தத்தி லடர்ந்துசென்றது, (கூ) யசோதாதேவிபக்கலுண்டான மத்துக்குப் பயந்தது, ஆகிய விவை என்ன ஆஸ்சர்யமோ ! (கஉ) உஅ.

வ்யா.— இருபத்தெட்டாம்பாட்டு.— (அடைந்ததரவணைமேல்) உகந்தார்க்குடம்புகொடுப்பது.(ஐவர்க்காயித்யாதி) ஆஸ்ரிதர்க்காகத்த ன்னுடம்பை யழியமாறி அம்பேற்பது. (உடைந்ததுவுமித்யாதி) பரி ஹாரமின்றிக்கே ஒழிந்ததுவும் யசோதைப்பிராட்டிக்குப்பயப்பட்டு. (வாளையிற்று இத்யாதி) பருவம் நிரம்பாதேயிருக்கச்செய்தே வாள் போலே யிருந்துள்ள வெயிற்றையுடைய பூதனையை முடித்தவுபகார கன் அதுகூலையா யிருப்பாளொரு இடைச்சிக்குப் பயப்பட்டு, பரி ஹாரமின்றிக்கே யிருப்பதே! (அம்மனே) எத்திறம். உஅ.

அரு.—இருபத்தெட்டாம்பாட்டு.— (மிடைந்தது) மிடை-படு கையாய், அம்பேற்கை. பரிஹாரம்-ப்ரதிக்ரியை,இன்றிக்கே, உடைந் தது: அம்மனே - ஈடுபாடு. உஅ.

பேய்ச்சிபா லுண்டபெருமானைப்பேர்ந்தெடுத்து
ஆய்ச்சிமுலைகொடுத்தாளஞ்சாதே—வாய்த்த
இருளார்திருமேனியின்பவளச்செவ்வாய்
தெருளாமொழியானைச்சேர்ந்து. உகூ.

அந்.—பேய்ச்சி பால் உண்ட பெருமானை வாய்த்த இருளார் திருமேனி (7) இன் பவளம் செவ்வாய் தெருளாமொழியானை (11) ஆய்ச்சி பேர்த்து சேர்ந்து அஞ்சாதே எடுத்து முலைகொடுத்தாள்.(17

அர்.—பூதனையின் பாலே யமுதுசெய்தஸ்வாமியாய் திரண்ட விருளோடொத்த திருமேனியையுடையனுய் (எ) அழகிய பவளம் போல் சிவந்ததிருப்பவளத்தையுடையனுய் நிறைவற்றசொற்களை யுடையனுங்கிருஷ்ணனே (கக) யசோதாதேவி போ யடைந்து பயப் படாம லெடுத்து முலேதந்தாள். (கஎ) உகூ.

வ்யா.— அவ.— இருபத்தொன்பதாம்பாட்டு.— (பேய்ச்சிபால்) அச்சத்துக்கிவனுக்கொப்பில்லாதாற்போலே ஸ்நேஹத்துக்கு யசோ தைப்பிராட்டிக் கொப்பில்லையென்கிறது.

(பேய்ச்சிபாலுண்டபெருமானே) பூதனையை முடித்தவனே. (வா யத்தவிருளார் திருமேனி இன்பவளச்செவ்வாய்) பூதனையுடைய மடி யிலே ஸ்ரமஹாரமானவடிவையுடையனுய், பவளம்போன்றிருத்துள்ள் வதரத்தையுடையனுய். (தெருளாமொழியாளைச்சேர்ந்து பேர்ந்தெடு த்தாய்ச்சிமுலைகொடுத்தாளஞ்சாதே) பூதனைமுகத்திலே முக்தஜல் பிதம் பண்ணுகிறவனேக்கிட்டி காற்கடைதந்தெடுத்துத்தாயானவள் அஞ்சாதேமுலையைக் கொடுத்தாள். ஸ்வரூபத்தை யழியமாறி முலே யைக்கொடுத்தாள். ஸ்த்ரீத்வப்ராயுக்தமிறே அச்சம். உகூ.

அரு.—இருபத்தொன்பதாம்பாட்டு.— (அஞ்சாதே) பிணத்தி ன்மேலே யிருக்கச்செய்தேயும். பயப்படாமல் முலைகொடுத்தாளென் றபடி. உகூ.

சேர்ந்ததிருமால் கடல் குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென்சிந்தை நிறைவிசும்பும்—வாய்ந்த
மறைபாடகமனந்தன் வண்டுழாய்க்கண்ணி
இறைபாடியாயவிவை. கூ0.

அ்.—கடல் குடந்தை வேங்கடம் சேர்ந்த என் சிந்தை நிறை விசும்பு (8) வாய்ந்த மறை பாடகம் அனந்தன் ஆய இவை (14) வண் துழாய் கண்ணி திருமால் சேர்ந்த இறைபாடி. (20)

அர்.—திருப்பாற்கடல் திருக்குடந்தை திருமலே (ஸ்ரியஃபதி க்கு) உடன்பட்ட லெண்ணுடைய மநஸ்ஸை பரிபூர்ணமான பரமபதம் (அ) தகுதியான வேதம் திருப்பாடகம் திருவநந்தாழ்வா னுகிய விவைகள் (கச) போக்யமான திருத்துழாய் மாலேயையுடைய ஸ்ரியஃ பதி நித்யவாஸம்செய்யும் ராஜதானிகள். (உ0) கூ0.

வ்யா.— அவ.— முப்பதாம்பாட்டு.— (சேர்ந்த) அவன்ஸந்நிஹீதனுகையாலே ஸ்நேஹித்தாள்; இப்போது நமக்கு ஸந்நிஹீதனன் றேயென்னில்; அவன் ஸந்நிஹீதனை விடங்கள் சொல்லுகிறார்.

(கடலிற்யாதி) ஸ்வாமிக்குப்படைவீடான விலை ஸ்ரீயஃபதி சேர்ந்த பாடியாயவிலை. இலையாயதிருமால் சேர்ந்த வென்ன வுமாம். "சிந்தை" யென்கையாலே இத்திருப்பதிகளிலேவந்திருக்கிற தெல்லாம் என் ஹ்ருதயத்துள்ளே புகுருமகக்கென்கிறது. "வாய்ந்த மறை" என்றத்தாலே ப்ரமாணமான வேதத்திலே நின்றத்தோடு கண்ணுலே காணப்படுகிற திருப்பதிகளோடு வாசியற விவர்க்கு ப்ர காசமாயிருக்கிறபடி. நூ.

அரு.—முப்பதாம்பாட்டு.—நிலைவிசும்பு - பரமபதம் - தி-ஊ வீகூநநாயது - "தூளஸீகாநநம் யத்ர" என்கிற ந்யாயத்தாலே வண்டுழாய்க் கண்ணியுமிருப்பிடம். நூ.

இலையவன்கோயிலிரணியனதாகம்
அலைசெய்தரியுருவமானுன்—செவிதெரியா
நாகத்தான்நால்வேதத்துள்ளான், நறவேற்றுன்
பாகத்தான்பாற்கடலுளான். நூ.

அந்.—இரணியனது ஆகம் அலைசெய்து அரியுருவமானுன் செவிதெரியான் நாகத்தான் (6) நால்வேதத்துள்ளான் நறவேற்றுன் பாகத்தான் பாற்கடலுளான் அவன் இலை கோயில். (12)

அர்.— ஹிரண்யாஸுரனுடைய சரீரத்தைச் சிக்குபிங்குமாக்கி நரஸிம்ஹாவதாரமெடுத்தவனும் காதுதெரியாத (இல்லாத) திருவநந் தாழ்வானைப்படுக்கையாகவுடையவனும் (சு) நால்வகையானவேதங் களில் ப்ரதிபாதிக்கப்பட்டவனும் தேன்போலினிமையான கங்கையை யும் எருதையுமுடையனை ருத்ரனைத் தன் திருமேனியிலொருபக்க த்திலுடையவனும் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டவனை அந்த ஸ்ரீயஃபதிக்குக் கீழ்ச்சொன்ன திவ்யதேசங்கள் வாஸஸ்தாநங்களா யிருக்கும். (கூ) நூ.

வ்யா.— மூப்பத்தோராம்பாட்டு.— (இரணியனித்யாதி) உபச யாத்மகமான ஹிரண்யனுடைய சரீரத்தைப்பலவாகச்செய்தஸிம்ஹ ரூபியானுன். (செவிதெரியாநாகத்தான்) ஒரு இந்த்ரியத்தாலே எல் லாவற்றையும் க்ரஹிக்குமவன். சஸ்ரஸ்ரவணமே (நால்வேதத்

தள்ளான்) காலுவேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்பட்டவன். (நறவேற் றுன்பாகத்தான்) நறவையேற்றவன். நறவையும் ஏற்றையுமுடைய ருத்ரனுக்குத் திருமேனியிலே யிடங்கொடுத்த சீலவான். (பாற்கட லுளான்) திருப்பாற்கடலிலேயுள்ளவன். (இவையவன்கோயில்) கீழ்ச் சொன்னவை. வெஞ்சைவருந்தியதுவர்த்தித்தபடி. கூக.

அரு.—மூப்பத்தோராம்பாட்டு.— ஆகமவைசெய்து-அவயவமா கப்பிரித்து-செவிதெரியான். செவிதெரியாதவன்;செவியில்லாதவன். கண்ணே செவியாகவுடையவனென்றபடி.ஆகத்தான்-இவனுகத்திலே யிருக்கிறவன்; படுக்கை யென்றபடி. நறவு-தேனுய், தேன்போலே போக்யமான கங்கையையுடையவன். திரியவுஞ் சொல்லுவானென் னென்ன,அருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்னவை இத்யாதி). கூக.

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பணிவிசும்பும்
நூற்கடலும் நுண்ணூலதாமரைமேல்—பாற்பட்
டிருந்தார்மனமுமிடமாகக் கொண்டான்
குருந்தொசித்தகோபாலகன். கூ உ.

அ.—குருந்து ஒசித்த கோபாலகன் பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனி விசும்பும் (8) நூல் கடலும் நுண் நூல தாமரைமேல் பால்பட்டிருந்தார் மனமும் இடமாக கொண்டான். (17)

அர்.—குறுக்கத்திமாத்தை முறித்துத்தள்ளின ஸ்ரீக்ருஷ்ணன், திருப்பாற்கடலையும் திருமலையையும் திருவஹந்தாழ்வானையும் குளிர் ந்த பரமபதத்தையும் (அ) சாஸ்த்ரமாகிற ஸமுத்ரத்தையும் ஸூக்ஷ் மமாயும் சாஸ்த்ரங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டுமிருக்கிற ஹ்ருதயகமல த்தின்மே லமைக்கப்பட்டகரணங்களையுடையயோகிகளுடைய மஹ ஸ்ஸையும் வாஸஸ்தாநமாக ஸ்வீகரித்தான். (கஎ) கூ உ.

வ்யா.— மூப்பத்திரண்டாம்பாட்டு.— (பாற்கடலித்யாதி) (நூற் கடலும்) இதிஹாஸபுராணங்களாகிற கடலும். (நுண்ணூலித்யாதி) இதிஹாஸபுராணங்களிலே ஹ்ருதயகமலமென்று சொல்லப்படுகிற தின் மேலே வைக்கப்பட்ட இந்த்ரியங்களையுடையவர்களுடைய மஹஸ்ஸைத் தனக்கிருப்பிடமாகக்கொண்டான். (குருந்தொசித்த கோபாலகன்) விரோதியைப்போக்கி ஸுலபனானவன். இவனுடைய உண்மை யெல்லாம் பரார்த்தமென்கிறது. கூ உ.

அரு.—மூப்பத்திரண்டாம்பாட்டு.—பனிவிசும்பு-குளிர்ந்த பரமபதம். பால்பட்டு-அதினிடத்திலே வைக்கப்பட்டு - இந்திரியங்களை ப்ரத்யக்காக்குகையாலே அந்தர்யாமி யிடத்திலே வைக்கப்பட்டு என்றபடி. ஈஉ.

பாலகனு யாலிலைமேல்பையய, உலகெல்லாம்
மேலொருநா ளுண்டவனே மெய்ம்மையே—மாலவனே
மந்தரத்தால்மாநீர்க்கடல் கடைந்து, வானமுதம்
அந்தரத்தார்க்கீந்தாய் நீயன்று. ஈஈ.

அந்.—மேலொருநாள் ஆலிலைமேல் பாலகனுய் உலகெல்லாம் மெய்ம்மையையே பைய உண்டவனே! மாலவனே! (8) நீ அன்று மந்தரத்தால் மா நீர்கடல் கடைந்து வான் அமுதம் அந்தரத்தார்க்கு ஈந்தாய். (19)

அர்.—முன்பொருகாலத்தில் வடபத்ரத்தின்மேல் குழவியாயிருந்து லோகங்களெல்லாம் உண்மையாக மெள்ள வமுதுசெய்தவனே! ஸர்வாதிகனான ஸ்ரியஃபதியே! (அ) நீ யக்காலத்தில் மந்தர பர்வதத்தினால் மிக்க ஜலத்தையுடைய ஸமுத்ரத்தைக் கடைந்து ஸ்லாக்யமான வம்ருதத்தை (யெடுத்து) ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களுக் களித்தாய். (ஈஈ) ஈஈ.

வ்யா.— மூப்பத்துமூன்றும்பாட்டு.— (பாலகனித்யாதி) ஒரு பவனுயிருப்பதோராலிலையின் மேலே பருவம் நிரம்பாப் பிள்ளையாய். (மேலொருநாளுலகெல்லாம் பைய உண்டவனே) லோகங்களையெல்லாம் நோவுபடாமல் மெள்ளத்திருவயிற்றிலே வைத்தவன். (மெய்ம்மையே) ஐந்த்ரஜாலிகரைப்போலேயன்றிக்கே ஸத்யமே. (மாலவனே) ப்ராணனைக்கொடுக்கவல்ல மிடுக்கையுடைத்தான வம்ருதத்தை. (அந்தரத்தித்யாதி) ஆகாசத்தே நிற்கிறவர்களுக்குக் கொடுத்தாய் நீ அன்று. ஈஈ.

அரு.—மூப்பத்துமூன்றும்பாட்டு.—வானமுதம்-மிடுக்கான அம்ருதம். மாலவன்—ஸர்வேஸ்வரன். ஈஈ.

அன்றிவ்வுலகமளந்த வசைவேகொல்
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்—அன்று
கிடந்தானைக் கேடில் சிராளை, முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமேகாண். ஈஉ.

அந்.—நெஞ்சமே! அன்று நின்று இவ்வுலகம் அளந்த அசை வேகொல் அன்று வேளுக்கை இருந்து நீள் நகர்வாய் கிடந்தானே 12) கேடு இல் சீரானே முன் கஞ்சை கடந்தானே காண். (19)

அர்.— மனமே ! அந்தவாமநாவதாரகாலத்தில் (த்ரிவிக்ரமனய்) நின்று இந்தலோகங்களே யாக்ரமித்த ஆயாஸத்தினாலேயோ? (கூ) அப்போது வேளுக்கையி லெழுந்தருளியிருந்து பெருநகராகிய திருவெஃகாவில் பள்ளிகொண்டவனய் (கஉ) அழிவில்லாக் கல்யாண குணங்களேயுடையனய் முற்காலத்தில் கம்ஸனைக்கொன்றவனை புருஷோத்தமனே ஸேவி. (கசு) கூ.

வ்யா.— அவ.— முப்பத்துநாலாம்பாட்டு.— (அன்றிவ்வுலகம்), அவனுடைய ஸ்த்தை பரார்த்தமான பின்பு அவனைக்காண வாசைப் படா யென்று தம்முடைய நெஞ்சைக்குறித்துச்சொல்லுகிறார்.

அன்றிவ்வுலக மளந்தவசைவேகொல் நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்க் கிடந்த. (கேடில் சீரானே) நித்யஸித்தமான கல்யாண குணங்களேயுடையவனே. (முன்கஞ்சைக்கடந்தானே நெஞ்சமே) கம் ஸன்நினைத்தவஞ்சனையை அவன்தன்னோடுபோம்படி முடித்து உப காரகனைவனே. பூமியடங்கலும் நின்றளந்தவருத்தத்தாலேயோ திரு வெஃகாவில் கண்வளர்ந்தருளுகிறதும், திருவேளுக்கையி லிருக்கிற தும் என்று நெஞ்சே! அநுஸந்தி. கூ

அரு.—முப்பத்துநாலாம்பாட்டு.—அன்றுநின்று இவ்வுலகமளந்த வசைவேகொல். கூ.

காண்காணை விரும்புங்கண்கள், கதிரிலகு
பூண்டாரகலத்தான்பொன்மேனி— பாண்கண்
தொழில்பாடி வண்டறையுந்தொங்கலான், செம்பொற்
கழல்பாடி யாந்தொழுதுங்கை. கூடு.

அந்.— கதிர் இலகு பூண் கார் அகலத்தான் பொன் மேனி கண்கள் காண்காணை விரும்பும். (10) தொழில் பாண்கண் பாடி வண்டு அறையும் தொங்கலான் செம் பொன் கழல் பாடி யாம் கை தொழுதும். (22)

அர்.— ஒளி வீசுகிற திருவாபரணங்களேயும் திருமாலேயையும் திருமார்பிலணிந்தபுருஷோத்தமனுடைய அழகிய திருமேனியைக் கண்கள் ஸேவிக்கவேணும் ஸேவிக்கவேணுமென் றாசைப் படாநின்

றன. (கo) (அவனுடைய) திவ்யசேஷ்டிதங்களைப் பாட்டிலே (வைத்துப்) பாடி வண்டுகள் சப்தியாகின்ற திருமாலையையுடைய ஸர்வேஸ்வரனுடைய சிவந்த வழகிய திருவடிகளை காலம்செய்து நாம் கைகளால் ஸ்ரயிப்போம். (உஉ) கூடு.

வ்யா.— அவ.— முப்பத்தைந்தாம்பாட்டு.— (காண்காணென் நெஞ்சமே! காணென்றுபதேசித்தார் கீழ். இந்த்ரியங்கள் தான் முற்பட்டிவரை மூட்டுமளவாயிற்றென்கிறது.

(க்திரிலகு பூண்டாரகலத்தான் பொன்மேனி காண்காணென விரும்புங் கண்கள்) ஒளிவிடாநின்ற ஹாரத்தையுந்தாரையுமுடைத்தான திருமார்பையுடையவனுடைய ஸ்ப்ருஹணீயமான திருமேனியைக் கண்கள் காண்காணென விரும்பாநின்றது. (பாணித்யாதி) பாட்டிலேதொழிலுண்டாகப்பாடி;பாண்தொழிலுண்டாகப்பாடியென்றுமாம். அவனுடைய தொழிலைப் பாட்டிலேவைத்துப் பாடியென்னவுமாம். (வண்டறையுந்தொங்கலான்) வண்டுகள் சப்தியாநின்றுள்ள மாலையையுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைக் கையாலே தொழுவோம். கூடு.

அரு.—முப்பத்தைந்தாம்பாட்டு.—பாண்கண்-பாட்டிடத்திலே தொழிலுண்டாக - லக்ஷணமுண்டாக பாடியென்னுதல்; காதத்தை ஸ்வரத்தோடேபாடியென்னுதல்; அவன் சரித்ரங்களைப்பாடி யென்னுதல். திருவடிகளைப்பாடித்தொழுவோம். கூடு.

கையகனலாழி கார்க்கடல்வாய் வெண்சங்கம்
வெய்யகதைசார்ங்கம்வெஞ்சுடர்வாள்—செய்ய
படைபரவைபாழிபனிநீர்ulகம்
அடியளந்த மாயரவற்கு. கூசு.

அந்.— பனி நீர் உலகம் அடியளந்த மாயரவற்கு (5) கனல் ஆழி கார் கடல் வாய் வெண் சங்கம் வெய்ய கதை சார்ங்கம் (15) வெம் சுடர் வாள் செய்ய படை கைய. பரவை பாழி. (23)

அர்.— தண்ணீர் சூழ்ந்த லோகத்தைத் திருவடிகளிலே லாக்ஷமித்தஆஸ்சர்யபூதனான அந்தஸ்ரியஃபதிக்கு, (கூ) அனலுமிழ்கிற திருவாழி, கரிய ஸமுத்ரத்திலுண்டான வெண்மையான ஸ்ரீபாஞ்சஜந்யம், க்ரூரமான கௌமோதகியென்கிறகதை, சார்ங்கமென்கிறதநுஸ்ஸு, (கூ) உஷ்ணமான ஜ்வாலையையுடைய நந்தகமென்கிறகத்தி ஆகிய அழகிய இவ்வாயுதங்கள் திருக்கைகளில் (விளங்குகின்றன). திருப்பாற்கடல் படுக்கையாயிருக்கிறது. (உக) கூசு.

வ்யா.—முப்பத்தாறும்பாட்டு.—(கையகனலாழியித்யாதி) (செய்யபடைகைய) இவைகையிலே யுள்ளன. "செய்ய" என்று ஆபரணமானபோது புகரைச்சொல்லுகிறது; ஆயுதமானபோது விதேயமான ஆயுதங்களைச் சொல்லுகிறது. (பரவைபாழி) திருப்பாற்கடல்படுக்கை. (பணிநீருலகமடியளந்த மாயரவற்கு) கடல்சூழ்ந்த பூமியளந்த ஸர்வேஸ்வரனுக்கு. கூசு.

அரு.— முப்பத்தாறும்பாட்டு.— "படை" என்றாயுதம் - ஆபரணகோடியும் ஆயுதகோடியும். கூசு.

அவற்கடிமைபட்டேனகத்தான்புறத்தான்
உவர்க்குங்கருங்கடல்நீருள்ளான்—துவர்க்கும்
பவளவாய்ப்பூமகளும்பன்மணிப்பூணாரம்
திகழும்திருமார்பன்தான். கூஎ.

அ.— உவர்க்கும் கரும் கடல்நீர் உள்ளான் (4) துவர்க்கும் பவளம் வாய் பூமகளும் பல் மணி பூண் ஆரம் (12) திகழும் திருமார்பன்தான் அகத்தான்; புறத்தான். அவற்கு அடிமைபட்டேன். (18)

அர்.— உப்புறைத்தும் கறுத்துமிருக்கிற ஸமுத்ர ஜலத்தில் பள்ளிகொண்டவனும் (ச) இவ்வத பவளம்போன்ற திருவதரத்தையுடைய பிராட்டியையும் அநேகவித மணிகளிழைத்த திருவாபரணங்களையும் திருமாலையையுமுடையதாய் (கஉ) விளங்காநின்ற திருமார்பையுடையஸ்ரியஃபதி தான் உட்புறத்திலு முள்ளவன். வெளிப்புறத்திலுமுள்ளவன். அந்த ஸ்ரியஃபதிக்கு தாஸனானேன். (கஅ). கூஎ.

வ்யா.— அவ.—முப்பத்தேழாம்பாட்டு.—(அவற்கு) தன் அடிமையிலே அவ்வயிக்ஷௌபரியைப்போலே அநேகம் வடிவுகொண்டு புஜிக்கவாசைப்படா நின்றானென்கிறது.

(உவர்க்குங்கருங்கடல் நீருள்ளான்) திருப்பாற்கடலே வாஸஸ்தானமாக உடையனும். (துவர்க்கும்பவளவித்யாதி) பெரியபிராட்டியாரையும் அநேகம்மாணிக்கங்களையுடைத்தாயிருந்துள்ள பூணாரத்தாலே திகழாநின்றுள்ள திருமார்பையுமுடையவன். அவனுக்கடிமைப்பட்டேன். குறைவற்றமேன்மையையும் வடிவழகையுமுடைய ஸ்ரியஃபதியானவன் தானடிமையிலே அவ்வயித்தமாத்ரத்திலே உள்ளும் புறம்பும்விடே சக்தனாகிலன். கூஎ.

தானேதனக்குவமன்தன்னுருவே யெவ்வுருவும்
தானேதவவுருவும்தாரகையும்—தானே
எரிசுடரும்மால்வரையு மெண்டிசையும், அண்டத்
திருசுடருமாயவிறை. கூ அ.

அக்.— எவ்வுருவும் தன்னுருவே தவவுருவும் தாரகையும் தானே (5) எரி சுடரும் மால் வரையும் எண்திசையும் (10) அண்டத்து இருசுடரும் தானேயாய இறை தனக்கு தானே உவமன். (17)

அர்.— ஸமஸ்தவஸ்துக்களையும்தனக்குச்சரீரமாகவுடையனும் தப்ச்சரீரர்களானவஸிஷ்டாதிகளையும் நக்ஷத்ரங்களையும்தனக்குப் ப்ரகாரமாகவுடையனும் (டு) உஜ்வலமான அக்நியையும் பெரியமலைகளையும் எட்டுத்திக்குக்களையும் (கo) அண்டத்துக்குள்ளிருக்கிற சந்த்ர ஸூர்யர்களாகிற இரண்டுதேஜஸ்ஸுக்களையும் சரீரமாகவுடையனுன் ஸ்வாமி தனக்குத் தானே உபமானபூதன். (கஎ) கூ அ.

வ்யா.—முப்பத்தெட்டாம்பாட்டு.— (தனக்குவமன் தானே) தனக்குபமான ரஹீதன். உபமானராஹித்யத்துக்கடி-ஸகலபதார்த்தங்களுமவனுக்குப்ரகாரமாய், தான்ப்ரகாரியாய், ப்ரகார்யதாமின்றிக்கே யிருக்கை.(தன்னுருவேயெவ்வுருவும்)எல்லாப்பதார்த்தங்களுமவனுக்குச் சரீரம். (தானேதவவுருவும்)தபஸ்ஸுபண்ணி, புண்யசரீரரான வதிகாரிகளும் அவனுக்குப் ப்ரகாரம். கூ அ.

அரு.— முப்பத்தெட்டாம்பாட்டு.— தானேஎரிசுடரென்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (உபமாந ராஹித்யேத்யாதி). எரி சுடர் - அக்நி. இருசுடர்-சந்த்ராதித்யர்கள். ஏதாத்ருசமான இறையாகையாலே தானே தனக்குவமன், என்றுக்ரியை. கூ அ.

இறையாய்நிலனகி யெண்டிசையுந்தானுய்
மறையாய்மறைப்பொருளாய் வானுய்—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவிவிளங்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தினுள்ளேயுளன். கூ கூ.

ஆக்.— இறையாய் நிலனகி எண்திசையும் தானுய் மறையாய் மறைப்பொருளாய் வானுய் (7) பிறை வாய்ந்த வெள்ளத்து அருவி விளங்கு ஒலி நீர் வேங்கடத்தான் (15) உள்ளத்தின் உள்ளே உளன். (18)

அர்.— (ஸர்வ) ஸ்வாமியாய் பூமிக்கந்தர்யாமியாய் எட்டுத்திக்குக்களையும் தனக்குச்சரீரமாக வுடையவனுய் வேதத்துக்குநிர்வாஹக

ஞப் வேதப்பிரதிபாத்யனுய் பரமபதத்தைப்பகாரமாகவுடையனுய் (ஏ) சந்த்ரமண்டலத்தைக் கிட்டின ப்ரவாஹத்தையுடைய அருவிகளின் தெளிந்தும் சப்தியாநின்றுமிருக்கிற ஜலத்தையுடைய திருமலையிலெழுந்தருளி யிருக்கிற திருவேங்கடமுடையான் (கநி) (என்னுடைய) ஹ்ருதயத்திற்குள்ளே வாஸம்செய்கிறான். (கஅ) கூ.

வ்யா.— முப்பத்தொன்பதாம்பாட்டு.— (இறையாயித்யாதி) உபய விபூதியுக்தனுய் பூமியும் எட்டுத்திக்குகளும்வேதங்களும் தானிட்டவழக்கு. (மறைப்பொருளாய்) வேதப்பிரதிபாத்யனுய். (பிறையித்யாதி) சந்த்ரபதத்திலேகிட்டின வெள்ளத்தையுடைத்தாயிருந்துள்ள திருமலையிலே நின்று என்னுடைய ஹ்ருதயத்திலே புகுர அவஸரப்ரதீக்ஷனையிருக்கிறான். கூ.

அரு.— முப்பத்தொன்பதாம்பாட்டு.— திருமலை சந்த்ரபதத்தளவு மோங்கியிருக்கையாலே அருவிகள் சந்த்ரனைக்கிட்டியிருக்கை.

உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமனென்றும்
உளன்கண்டாய், உள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய்
விண்ணெடுங்கக்கோடியரும் வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணெடுங்கத்தானளந்த மன். சம.

அர்.— நல் நெஞ்சே! உத்தமன் உளன்கண்டாய், என்றும் உளன்கண்டாய், உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய், (கூ)விண் ஓடுங்க கோடி உயரும் வீங்கு அருவி வேங்கடத்தான் மண் ஓடுங்கதான் அளந்த மன். (21)

அர்.— அறுகூலமான மநஸ்ஸே! புருஷோத்தமனிருக்கிறான்கிடாய், எப்போதுமிருக்கிறான்கிடாய், த்யாகம்செய்யுமவர்களுடைய ஹ்ருதயத்திலிருக்கிறான்கிடாய். (கூ) ஆகாசம் (ஒருமூலையில்) அடங்கும்படி சிகரங்களிலே லயராநின்றும் வ்ருத்தியடையாநின்ற அருவிகளையுடைத்தாயுமிருக்கிற திருமலையிலெழுந்தருளி யிருக்கிறவன் பூமியை (தன்திருவடியில்) அடங்கும்படி தானளந்துகொண்டஸ்வாமி. (உக) சம.

வ்யா.— நாற்பதாம்பாட்டு.— (உளன்கண்டாய்) அவனுடைய ஜீவகம் நம்முடைய ஸத்தாஹேது. "ஹ ஆதிவனவதவிஷ்வவஹாயஷ வஸ்தா - இச்சாத ஏவதவவிஷ்வ பதார்த்தஸத்தா". (நன்னெஞ்சே) எம்பெருமான் நம்முடைய ஸத்தாஹேதுவென்று சொல்லுகைக்குப் பாங்கான நெஞ்சே! (உத்தமனென்றும் உளன்கண்டாய்) நம்முடைய

ஸந்தாஹேது அவனென்று நினைத்திராதவன்றும் என்றுமவனிருக்கும்படியிதுவே. (உள்ளுவாரித்யாதி) புகுர்ப்புக்கால் விலக்காதாருடைய ஹ்ருதயத்திலேயுள்ளன். (விண்ணித்யாதி) "உத்தமனென்று மூளன்கண்டாய்" என்கிற்தை உபபாதிக்கிறது. உபரிதரலோகங்களும் சில வெல்லியுண்டென்றிராதே இவை வேண்டாவென்று கொண்டு உயராநின்ற-ஆகாசாதி லோகங்களெல்லாம் ஒடுங்கும்படிக்கிடாக உயராநின்ற சிகரத்தையுடைத்தாயிருந்துள்ள திருமலையிலே நின்றவன் ப்ரப்பின திருவடிகளிலே பூமிதோற்றுகபடியளந்து கொண்டமன்னன்-உடையவன். இந்த்ரனிழந்தது பெறுகையாலும் மஹாபலியைப்பறித்து வாங்கிக்கொடுக்கையாலும் இவனே உடையவனென்று தோற்றுகின்றது. சஅ.

அரு.—காற்பகாம்பாட்டு.—தோற்றுதபடி—திருவடிகளேயாய் மண் தோற்றுதபடி - வீங்கருவி -பெரியஅருவி. சக.

மன்னுமணிமுடிநீண்டண்டம்போயெண்டிசையும்
துன்னுபொழிலனைத்தும் சூழ்கழலே—மின்னை
உடையாகக்கொண்டன்றுலகளந்தான், குன்றம்
குடையாகவாகாத்ததோ. சக.

அர்.— குன்றம் குடையாக ஆகாத்ததோ (5) மன்னு மணிமுடி நீண்டு அண்டம் போய் (11) எண்டிசையும் துன்னு பொழில் அனைத்தும் கழல் சூழ் (17) மின்னை உடையாகக்கொண்டு அன்று உலகு அளந்தான். (22)

அர்.— கோவர்த்தகமலையைக் குடையர்கச்செய்து பசுக்களைக் காத்த ஸ்வாமி (இ) பொருந்தியும் ரத்நங்களிழைத்துமிருக்கிற கிரீடம் நீண்டு அண்ட பித்திவரையில் போம்படியாகவும் (உக) எட்டுத்திக்குக்களையும் நிறைந்த பூமியனைத்தையும் திருவடி வ்யாபிக்கும்படியாகவும் (உ) மின்னலை வஸ்த்ரமாகக்கொண்டு (மேகத்தளவும்வளர்ந்த இடுப்பையுடையனாய்) அக்காலத்தில் உலகங்களை யாக்ரமித்தான். (உஉ) சக.

வ்யா.— காற்பத்தோராம்பாட்டு.—(மன்னுஇத்யாதி) (அண்டம் போயெண்டிசையும் மன்னுமணிமுடி நீண்டு) அண்டத்தையுமெட்டுத்திக்குக்களையும் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம் வ்யாபிக்கவும். (துன்னித்யாதி) சேதநராலே செறியப்பட்ட பூமியடங்கலும் திருவடிகளேயாகவுமாம். (மின்னையித்யாதி) மேகபதத்துக்கவ்வருகே வளர்ந்தருளுகிறபோது மின்னைத்திருப்பீதாம்பரமாகக்கொண்டு உல

களந்தான். (குன்றமித்யாதி)த்திரிலோக்யத்தையுந்தன்னுடைய திரு மேனியிலே மறைத்தவன் ஒருமஹியாலே தன்னுடைய திருமேனியை மறைத்துக்கொண்டான். சக.

கோவலனு யாநிரைகள் மேய்த்துக்குழலூதி
மாவலனுய்க்கீண்டமணிவண்ணன்—மேவி
* எரியுருவமாகி யிரணியனதாகம்
தெரியுகிரால்கீண்டான்சினம். சஉ.

அ்.— கோவலனுய் ஆ நிரைகள் மேய்த்து குழல் ஊதி (6) வலனுய் மா கீண்ட மணிவண்ணன் (10) மேவி எரியுருவமாகி இரணியனது ஆகம் உகிரால் கீண்டான் சினம் தெரி. (18)

அர்.— இடையனுய்க்கொண்டு பசுக் கூட்டங்களை மேய்த்து வேணு கானம்செய்து (சு) ஸ்மர்த்தனுய், குதிரையாகிற கேசியைப் பிளந்தவனுய் நீலரத்நம்போன்ற வடிவையுடையனுய் (க0) அமர்ந்த அவயவங்களையுடைய உஜ்வலமான நரஸிம்ஹாவதார மெடுத்து ஹிரண்யனுடையசரீரத்தை நகங்களினுல் கிழித்தவனை புருஷோத்தமனுடைய கோபத்தை(மனமே!) அநுஸந்திக்கக்கடவாய். (கஅ, சஉ.

வ்யா.— நாற்பத்திரண்டாம்பாட்டு.— (கோவலனித்யாதி) ப்ரஹ்மணனுய் ஒத்துச்சொல்லப்பெறுமாபோலே இடைஜாதிக்குசித மாகப்பசுக்களையும் மேய்த்துக் குழலியுமூதி. (மாவலனித்யாதி) அப்பருவம் நிரம்பாமையிலே கேசியினுடைய வாயைக்கிழிக்கவல்லனுய் விரோதியைப்போக்குகையாலே ஸ்ரமஹரமான வடிவையுடையவன் (மேவியித்யாதி) மேவி- நரத்வஸிம்ஹத்வமான விரண்டுவடிவுகொண்டால் பொருந்தாதே யிருக்குமோ வென்னில் ஒருவடிவுபோலே பொருந்தினபடி. அன்றிக்கே, மேவியென்று ஹிரண்யனுடைய வரத்தைக்கிட்டி என்றுமாம். (எரியுருவமாகி) ஒளியுண்டான ரூபத்தையுடையனுய்ச் சினத்தாலே இரணியனகத்தைக் கீண்டான். அன்றிக்கே, அருளன்று நமக்குத்தேஜ்யம்; ஆஸ்ரிதவிரோதிகள் பக்கல் அவனுக்குண்டான சினமுத்தேஜ்யம். அச்சினத்தைத் தெரி--அநுஸந்தியென்றுமாம். கூ..

அரு.— நாற்பத்திரண்டாம்பாட்டு.— வரத்தைக்கிட்டுகை- வரத்தையறிந்து அதுக்கநுரூபமான வடிவைக்கொள்ளுகை. "எரியுரு" என்று பாடாந்தரம். சினத்தாலே தெரியுகிரால் - கூரியவகிராலே,

* (பா) அரியுருவமாகி.

மூன்றுத்திருவந்தாதி, சதுர்பா, சினமா, சசபா, உலகமும். சக

கிண்டானென்று க்ரியையாதல். அன்மியே, கிண்டான் சினம்தெரி-
விசாரியென்று க்ரியையாதல். சஉ.

சினமாமதகளிற்றின்திண்மருப்பைச்சாய்த்துப்
புனமேயபூமியதனைத்—தனமாகப்
பேரகலத்துள்ளொடுக்கும் பேராரமார்பனுர்
ஓரகலத்துள்ளதுலகு. சஙூ.

அந்.—: சினம் மதம் மா களிற்றின் திண் மருப்பை சாய்த்து (7) புனம் மேய பூமியதனை தனமாக (11) பேர் அகலத்து உள் ஒடுக்கும் பேர் ஆரம் மார்பனுர் (18) ஓர் அகலத்து உலகு உள்ளது. (22)

அர்.— கோபத்தையும் மதத்தையுமுடைய பெரிய குவலயாபீடமென்கிறயானையின் வலிய கொம்பை முறித்து (ஏ) சப்தாதிபோக்யபதார்த்தங்கள் நிறைந்த பூமியைத் தனமாகவங்கீகரித்து (கக) (அதை) விசாலமான ஹ்ருதயத்திற் குள் ளடக்கிய பெரிய ஹாரங்களையுடைய திருமார்புபடைத்த ஸர்வேஸ்வரனுடைய (கஅ) அத்விதீயமான ஸங்கல்பத்திலுலகம் ஸத்தைபெற்றிருக்கிறது. (உஉ) சஙூ.

வ்யா.—அவ.—நாற்பத்துமூன்றும்பாட்டு.— (சினம்) அவன் ஸங்கல்பத்தாலேயன்றே விந்தலோகங்கிடக்கிறதென்கிறார்.

(சினமித்யாதி) சினத்தையுடைத்தாய்ப் பெருத்து மதித்த குவலயாபீடத்தினுடைய விரண்டு மருப்புக்களையும் அநாயாஸேபறித்து. (புனமித்யாதி) சேதநர்க்குபோக்யங்களையுடைத்தான பூமியை. (தனமித்யாதி) தகும் போலே யிருக்கத் திருவயிற்றிலே வைத்துக் காக்கும். (போராரமார்பனுர்) தன்னுடைமையானது ரக்ஷிக்கப்பட்டதென்றத்தாலே யொருபடி ஆபரணம் பூண்டாற்போலே யிருக்கிறபடி. (ஓரகலத்துள்ளதுலகு) அம்சமான ஸங்கல்பத்துள்ளது லோகம். ஓரப்படுகிற ஸங்கல்பத்துள்ள தென்றுமாம். சஙூ.

அரு.— நாற்பத்துமூன்றும்பாட்டு.— புனம் - புலனென்றுய் விஷயங்களைச்சொல்லுகிறது. அகலம்- ஹ்ருதயம். ஓரகலம்-ஸங்கல்பத்தினுடைய ஏகதேசமென்னுதல். சஙூ.

உலகமுழுழியுமாழியும், ஒண்கேழ்
அலர்கதிருஞ்செந்தியுமாவான்—பலகதிர்கள்
பாரித்தபைம்பொன்முடியா னடியிணைக்கே
பூரித்தென்னெஞ்சேபுரி. சச.

அந்.— உலகமும் ஊழியும் ஆழியும் ஒண் கேழ் அலர் கதிரும் செம் தீயுமாவான் (9) பல கதிர்கள் பரிந்த பை பொன் முடியான் இணை அடிக்கே என் நெஞ்சே! பூரித்து புரி. (21)

அர்.—லோகங்களையும் ப்ரளயகாலத்தையும் ஸமுத்ரங்களையும் அழகிய நிறத்தையுடையதாய்ப் பரவாநின்ற கிரணங்களையுடைய ஸூர்யனையும் சிவந்த அக்நியையும் சரீரமாகவுடையனும் (சூ) அநந்தமான கிரணங்களை விசிறுகின்ற ஸ்ப்ருஹணீயமான அழகிய கிரீடத்தையுடையஸர்வேச்வரனுடைய இணைந்த திருவடிகளையே என்னுடைய மநஸ்ஸே! ஸந்தோஷித்து ஆச்ரயி. (உக) சசு.

வ்யா.— நாற்பத்துநாலாம்பாட்டு.— (உலகமுமித்யாதி) லோகமும், எல்லாம் ஸம்ஹ்ருதமாய்க்காலமே சேஷித்தகாலமும், *கடலும், அழகியதாய் அலராநின்றுள்ள ஒளியையுடைத்தான ஆதித்யனும், அக்நியும் தனக்குப்ரகாரமாகவுடையவன்.இத்தால் ஜகதாகாரத்தைச் சொல்லுகிறது. (பலகதிரித்யாதி) பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கும்படி. (பலகதிர்கள்) ''ஜிவிஷஸூர்யஸஹஸ்ரஸ்யபவேத்யுகபதுத்திதா'' என்னும் படியே நூறாயிரமாதித்யர்களோடவைத்த ஒளியையுடைத்தாய் ஸ்ப்ருஹணீயமான திருவபிஷேகத்தையுடையவனுடைய திருவடிகளிலே.(என்னெஞ்சே பூரித்துப்புரி) ஸ்நேஹீத்தாச்ரயி. சசு.

அரு.— நாற்பத்துநாலாம்பாட்டு.— ஆழி - வட்டமாய், அத்தாலே வளைய என்றாய், அடங்கலுமென்கிறது. சசு.

புரிந்துமதவேழம்மாப்பிடி யோடிடித்
திரிந்துசினத்தால்பொருது—விரிந்தசீர் [நாள்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே, மேலொரு
மண்கோட்டுக்கொண்டான் மலை. சருு.

அந்.—மதம் வேழம் மா பிடியோடு புரிந்து ஊடி (6) திரிந்து சினத்தால் பொருது விரிந்த சீர் வெண் கோடு முத்து உதிர்க்கும் வேங்கடமே(16) மேலொருநாள் மண் கோடு கொண்டான் மலை. (21)

அர்.— மதித்த யானையானது ஸ்லாக்யமான பெண்யானையோடு ஸம்ஸ்லேஷித்துப் (பின்பு) ப்ரணயகலஹம்செய்து(சு) ஸஞ்சரித்துக் கோபத்தினால் (மணீச்சுவர்களில்) சண்டைசெய்து பரவாநின்ற வீரஸ்ரீயையுடைய வெண்மையான தந்தங்களினின்றும் முத்

* அடைகளும் எனது அரும்பதத்தின் பாடம்.

துக்கலை யுதிராகின்ற திருமலையே (கசு) முன்பொருகாலத்தில் பூமியைத்தந்தத்தின்மே லெடுத்துக்கொண்டுவந்தஸர்வேஸ்வரன் வாஸம் செய்யும்மலை. (உக) சுடு.

வ்யா.— அவ.— நாற்பத்தைந்தாம்பாட்டு.—(புரிந்து) "பலகதிர்கள் பரிதித்தபைம்பொன்முடியான்" என்று பரமபதத்தைக்கலவிருக்கையாக உடையவன் நமக்கு ஸுலபனுமோ வென்னில், நமக்காகவன்றே திருமலையிலேவந்து ஸந்நிஹிதனுயிற்றென்கிறார்.

(மதவேழம்பிடியோடுபுரிந்து) மதித்திருத்துள்ள ஆனையானது பிடியோடே ஸம்ஸ்லேஷித்து. (ஊடி) ஸம்ஸ்லேஷாகக்தரமுடி. (திரிந்துசினத்தால்பொருது)ஊடலாலே பிறந்த சினத்தாலே உலாவி ரத்நபித்திகளிலேபொருது. (விரிந்தசீரித்யாதி) பொருகையாலே வீரஸ்ரீயையுடைத்தான வெள்ளைக் கோட்டிலே யுண்டான முத்தையுதிராகின்ற திருமலை. (மேலித்யாதி) பண்டொருகால் பூமியை ஸ்ரீவராஹரூபியாய் எயிற்றிலேகொண்டவனுடையமலை. திருமலையில் ஆனைகளுக்குச் சேருமிறே ஸ்ரீவராஹ ரூபமான வடிவு. சடு.

மலைமுகடுமேல்வைத்து வாசுகியைச்சுற்றித்
தலைமுகடுதானொருகைபற்றி — அலைமுகட் [ன்
டண்டம்போய்நீர்தெறிப்ப வன்றுகடல்கடைந்தா
பிண்டமாய் நின்றபிரான். சசு.

*அர்.— முகடு மலை மேல்வைத்து வாசுகியை சுற்றி (5) முகடு தலை தான் ஒரு கைபற்றி (11) அலை முகடு அண்டம் போய் நீர் தெறிப்ப அன்று கடல் கடைந்தான் பிண்டமாய் நின்ற பிரான். (23)

அர்.— சிகரத்தையுடைய மந்தரபர்வதத்தைத் (தன்முதுகின்) மேலேவைத்து வாஸுகியைக்(கயிறுகச்சுற்றி) (நி) சிகரத்தின் மேல் பாகத்தைத் தானொரு கைபாலே பிடித்து. (கக) அலைகளினுச்சி அண்டபித்திவரையில் சென்று ஜலம் தெறிக்கும்படி அக்காலத்தில் ஸமுத்ரத்தை மதநம்பண்ணினவன், (ஜகத்) காரணமாய் நின்ற ஸ்வாமி. (உசு) சசு.

வ்யா.— நாற்பத்தாறும்பாட்டு.— (மலைமுகடுமேல்வைத்து) ஓங்கியிருத்துள்ள மலையைத் தன்முதுகின்மேல் வைத்து. (வாசுகியைச் சுற்றி) அதிலேவாஸுகியைச்சுற்றி. (தலைமுகடுதானொருகைபற்றி) கீழ்கடைகிறது குலையாமல் ஆமையாய்த் தாங்கி மேலேவைத்த சிகர

சச மூன்றுந்திருவந்தாதி, சள-பா, நின்ற. சஅ-பா, நீயன்றே:

மடிக்களிர்ந்து போகாதபடி யொருகையாலேபற்றி. (அலைமுகட்டி த்யாதி) இத்திரண்ட திவலிலேபோய்த்தெறிப்ப. அலைமேல் நீர் அண்ட பித்தியில் போய்த்தெறிப்ப. (அன்றித்யாதி) இதுக்குபாதாகாரண மானவன். "வனகோ ஹவெநாராயணசூவீசு-ஏகோஹவைகாரா யண ஆஸீத்". சசு.

நின்றபெருமானே நீரேற்று, உலகெல்லாம்
சென்றபெருமானே செங்கண்ணு—அன்று
தூகவாய்கீண்ட துழாய்முடியாய், நங்கள்
நரகவாய்கீண்டாயும் நீ. சள.

அந்.— நீர் ஏற்று நின்ற பெருமானே! உலகெல்லாம் சென்ற பெருமானே! செம் கண்ணு! (9) அன்று தூகம் வாய் கீண்ட துழாய் முடியாய்! நங்கள் நரகம்வாய் கீண்டாயும் நீ. (18)

அர்.— தாஜலத்தை வாங்கி (மஹாபலியஜ்ஞத்தில்) நின்ற ஸ்வாமி! லோகங்களெயெல்லாம் போய் (அளந்த) ஸ்வாமி! சிவந்த நேத்ரங்களையுடையஸ்வாமி! (கூ) அக்காலத்தில் கேசியின். வாயை க்கிழித்தவனே! திருத்துழாய்மாலையைத்திருமுடியில் தரித்தவனே! எங்கள் நரகத்தைப் போக்கினவனும் நீதான். (கஅ) சள.

வ்யா:—நாற்பத்தேழாம்பாட்டு.— (நின்றபெருமானேநீரேற்று) மஹாபலிபக்கலிலேநீரேற்றுசேஷித்வம் தோற்றும்படி நின்றவனே! (உலகித்யாதி) லோகத்தை யெல்லாமளந்து உடையவனென்று தோற்றும்படி நின்றவனே ! (செங்கண்ணு) ஸ்நேஹந்தோற்றும் படி நின்றவனே ! (அன்றித்யாதி) வைத்தவிளாயம் வாடாமல் கேசி வாயைக்கிழித்தவனே ! (நங்களித்யாதி) ஒருகேசிவாயைக்கிழித்தது ஆஸ்சர்யமோ? எங்கள் நரகத்தின் வாயைக்கிழித்தவுனக்கு. சள.

நீயன்றேநீரேற்றுலக மடியளந்தாய்
நீயன்றேநின்.று திரைமேய்த்தாய்—நீயன்றே
மாவாயுரம்பிளந்து மாமருதிணூடுபோய்த்
தேவாசுரம்பொருதாய் செற்று. சஅ.

அந்.— நீர் ஏற்று உலகம் அடி அளந்தாய் நீயன்றே? (6) நின்று நிரை மேய்த்தாய் நீயன்றே? (10) மா உரம் வாய் பிளந்து மா மருதின் ஊடு போய் (18) தேவாசுரம் செற்று பொருதாய் நீயன்றே? (22)

அர்.— தாகஜலம் வாங்கி லோகங்களைத் திருவடியினு லளந்தவன் நீயன்றே? (சு) (இடையனாய்) இருந்து பசுக்களை மேய்த்தவன் நீயன்றே? (கஅ) கேசியினுடைய வலிய வாயைப் பிளந்தும் பெரிய மருதமரத்தின் நடுவே சென்றும் தேவாஸுரயுத்தத்தில் (அஸுரரைக்) கொன்று சண்டைசெய்தவனும் நீயேயன்றே? (உஉ) சஅ.

வ்யா.—நாற்பத்தெட்டாம்பாட்டு.—(நீயன்றேயித்யாதி) உன்னுடைமைக்கு மஹாபலிபக்கலிலே நீரேற்று அத்தைத் திருவடிகளாலே அளந்தாய். (நீயன்றேயித்யாதி) க்ருஷ்ணனுயவதரித்துப் பசுமேய்த்தாய். (நீயன்றேயித்யாதி) கேசிவ்யைப்பிளந்து பெரியமருதினிடையே போய். (தேவாசுரமித்யாதி) ஜ்ஞாநஹீநமான அசேதநங்களைப் போக்கினதுவேயோ. சேதநரான விரோதிகளையும் போக்கிற்றில்லையோ. சஅ.

அரு.— நாற்பத்தெட்டாம்பாட்டு.— தேவாசுரம்பொருதாய் - தேவாஸுரயுத்தத்தைப்பண்ணி தேவர்கள் விரோதியைப் போக்கினு யென்றபடி. சஅ.

செற்றதுவும்சேரா விரணியனைச், சென்றேற்றுப்
பெற்றதுவும்மாநிலம் பின்னைக்காய்—முற்றல்
முரியேற்றின்முன்னின்று மொய்ம்பொழித்தாய், மூரிச்
சுரியேறுசங்கினைய் சூழ்ந்து. சஙு.

அ.— பின்னைக்காய் முற்றல் முரி ஏற்றின் முன் நின்று சூழ்ந்து மொய்ம்பு ஒழித்தாய்! (9) மூரி சுரி ஏறு சங்கினைய் செற்றதுவும்; சேரா இரணியனை (16) சென்று ஏற்று பெற்றதுவும் மா நிலம். (21)

அர்.— கீழ்பின்னைப்பிராட்டிக்காக வலியதாய்த் திரியாகின்ற ஏருகின் மூன்னே யிருந்து ஆலோசித்து (அதின்) பலத்தைப் போக்கினவனே! (கூ) விசாலமாய் சுழிகளையுடையதுமான ஸ்ரீபாஞ்சஜந்யமுடையவனே! (ஈ) கொன்றதும் (தன்பக்கலிலே) பொருந்தாத ஹிரண்யனை; (கசு) மஹாபலியிடம்போய் தாகம் வாங்கிப் பெற்றதும் பெரிய பூமியை. (உக) சஙு.

வ்யா.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.— (செற்றதுவுமித்யாதி) ஆஸ்ரிதரோடு சேராத ஹிரண்யனைக்கொன்றது அவனிழவுக்காகவென்றுமாம். (சென்றித்யாதி) மஹாபலிபக்கலிலே நீரேற்றுப்பெற

தது பூமி. (பின்னைக்காயித்யாதி) நப்பின்னைப் பிராட்டிக்காகத் திண்ணியதாயுலாவாநின்ற ஏற்றினுடைய மிடுக்கையழித்தாய். (சூழ்ந்து) இடம்பார்த்துநின்று. (மூரிச்சுரி யித்யாதி) கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே! சசு.

அரு.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.— சேரா - தன்னைச்சேராதே, ஆநுரயியாதே; அவனிழக்கையாலே விரோதியான தேஹத்தைப் போக்கினனென்றபடி. முற்றல்-திண்ணியதாய், மூரி-ஸஞ்சாரியாய், மொய்ம்பு - மிடுக்கையுடைய ஏற்றின். மூரிச்சுரியென்று மிடுக்கையும் தூளையுமுடையசங்கு. சசு.

சூழ்ந்ததுழாயலங்கல் சோதிமணிமுடிமால்
தாழ்ந்தவருவித்தடவரைவாய்—ஆழ்ந்த
மணிநீர்ச்சுனைவளர்ந்த மாமுதலைகொன்றான்
அணிநீலவண்ணத்தவன். நுய.

அந்.— சூழ்ந்த துழாய் அலங்கல் சோதி மணி முடி மால் அணி நீலவண்ணத்தவன் (9) தாழ்ந்த அருவி தடம் வரைவாய் ஆழ்ந்த மணி நீர் சுனை வளர்ந்த மா முதலை கொன்றான். (21)

அர்,—வனைத்துச்சாத்தின திருத்துழாய் மாலையையுடையனும் உஜ்வலமான மணிகளிழைத்த கிரீடமுடையனும் ஸர்வாதிகனும் அழகிய நீலவர்ணத்தையுடையவனுமான ஸர்வேச்வரன், (கூ) பெருகாநின்ற அருவிகளையுடைய விசாலமான மலையிலுண்டாய் அழகாய் நிர்மலமான ஜலமுடையதான மடுவில் வருத்தியடைந்த பெரிய முதலையைக் கொன்றான். (உக) நிம.

வ்யா.— ஐம்பதாம்பாட்டு.— (சூழ்ந்தவித்யாதி) ஆகமுதலியாகவிட்ட திருத்துழாய்மாலையையும் ஆதிராஜ்யஸூசகமான மணிமுடியையுமுடையவன். (தாழ்ந்தவித்யாதி) தாழ்ந்த அருவிகளையுடைத்தாயிருந்துள்ளதடவரையிலே யாழ்ந்து, நிர்மலமானநீரையுடைத்தானசுனையிலேவளர்ந்த பெரியமுதலையை நீர்ப்புழுவென்றுபாராதே கினத்தோடே கொன்றான். (அணி நீலவண்ணத்தவன்) ஆஸ்ரித விரோதியான முதலை போயிற்றென்று ஸ்ரமஹரமான வடிவையுடையவன். நுய.

அரு.— ஐம்பதாம்பாட்டு.— "ஆகமுதலியாகவிட்ட" என்று வார்த்தைப்பாடு. நிம.

மூன்றுந்திருவந்தாதி, நிக-பா, அவனே. நிஉ-பா, எய்தான். சன.

அவனேயருவரையா லாநிரைகள்காத்தான்
அவனேயணிமருதஞ் சாய்த்தான்— அவனே
கலங்காப்பெருநகரம் காட்டுவான்கண்டீர்
இலங்காபுரமெரித்தானெய்து. நிக.

அந்.—அரு வரையால் ஆ நிரைகள் காத்தான் அவனே.(6) அணி மருதம் சாய்த்தான் அவனே.எய்து இலங்காபுரம்எரித்தான் அவனே. (14) கலங்கா பெரு நகரம் காட்டுவான் அவனேகண்டீர். (15)

அர்.— அசைக்கவொண்ணாத மலையினால் பசுக் கூட்டங்களைக் காத்தவனுமவனே. (சு) இணைந்த மருதமரங்களை விழத்தள்ளினவனுமவனே. (பாணங்களினால்) அடித்து இலங்கையைக் கொளுத்தினவனும் (அழித்தவனும்) அவனே. (கச) குழப்பமற்ற விசாலமான ஸ்ரீவைகுண்டத்தை தர்சிப்பிக்கிறவனுமவனேகிடீர். (ககூ) நிக.

வ்யா.—ஐம்பத்தோராம்பாட்டு.— (அவனேயித்யாதி) வர்ஷத் காலே நோவுபட்ட பசுக்கள் தன்னுடையரக்ஷணத்துக்குத் தான் ப்ரவர்த்தித்ததுண்டோ? அவனேயன்றேவென்று ஸஹகாரி கைர பேக்ஷயத்தைச்சொல்லுகிறது. (அவனேயணியித்யாதி) நிரபேக்ஷ மாக மருதைச்சாய்த்தானுமவனே. (அவனே கலங்கா.வித்யாதி) பரமபதம் அவனே காட்டக் காணுமத்தனை. ஸ்வயத்நத்தால் காண் பார்க்குக் காணப்போகாது. (கண்டீரித்யாதி) லங்கையை யழித்துப் பிராட்டியைப் பெறுகைக்கு யத்நம்பண்ணினானே. நிக.

எய்தான்மராமரமேழுமிராமனுய்
எய்தானம்மான்மரியவேந்திழைக்காய்— எய்ததுவும்
தென்னிலங்கைக்கோன்வீழச்சென்றுகுறளுருவாய்
முன்னிலங்கைக்கொண்டான் முயன்று. நிஉ.

அந்.— இராமனுய் மாமரம் ஏழும் எய்தான். ஏந்திழைக்காய் அம்மான் மரிய எய்தான்.(8) எய்ததுவும். தென் இலங்கை கோன்வீழ முன் குறள் உருவாய் சென்று நிலம் முயன்று கைக்கொண் டான். (20)

அர்.— ஸ்ரீராமாவதாரமெடுத்து மராமரங்களை முறுமடித் தான். ஸீதாபிராட்டிக்காக அந்தமானைச் சாகவடித்தான். (அ) கீழே விழும்படி அடித்துத்தள்ளினது தென்திசையிலுள்ள இலங்கைக்

கரசனனை இராவணனை. முற்காலத்தில் வாமன வேஷங்கொண்டு மஹாபலியிடம்சென்று பூமியை யத்தம்செய்து கைப்பற்றினன். (உ0)

வ்யா.:— ஐம்பத்திரண்டாம்பாட்டு.— (எய்தானித்யாதி) ராமனுய் ஆஸ்ரிதருக்காக மராமர மேழையுமெய்தான். (எய்தரனம்மானித்யாதி) மான்குட்டியென்று பாராதே பிராட்டிசொன்னளென்று எய்தான். (எய்ததித்யாதி) எய்ததுவும் ராவணனைக்கொல்லுகைக்காக. (சென்றித்யாதி) குறளுருவாய்ச்சென்று மூன்றுலோகத்தையடங்கலும் கைக்கொண்டான். நூஉ.

முயன்றுதொழுநெஞ்சே மூரிநீர்வேலை
இயன்றமரத்தாலிலையின்மேலால்—பயின்றங்கோர்
மண்ணலங்கொள்வெள்ளத்து மாயக்குழவியாய்
தண்ணலங்கல்மாலையான் தாள். நூங.

அந்.— மூரி நீர் வேலை இயன்ற ஆலமரத்து இலையின்மேல் பயின்று (7) மண் நலம் கொள் வெள்ளத்து அங்கு ஓர் மாயக்குழவியாய் (14) அலங்கல் தண் மாலையான் தாள் நெஞ்சே! முயன்று தொழு. (21)

அர்.—பரந்த ஜலத்தையுடைய ஸமுத்ரத்தில் பொருந்திமூலத்திருக்கிற ஆலமரத்தின் இலைமேல் சயனித்திருந்தும், (எ) பூ ஸாரத்தை யபஹரித்த ப்ரவாஹத்திலிருந்த அவ்வாலிலையில் அத்விதீயமாய் ஆஸ்சர்யகரமானகுழந்தையாயிருந்தும், (கச) அசையாநின்ற குளிர்ந்த திருமாலையையுடையவனுமான ஸ்ரியபதியினுடைய திருவடிகளை மனமே! ப்ரயத்நப்பட்டு ஆஸ்ரயி. (உக) நூங.

வ்யா.—அவ.—ஐம்பத்துமூன்றும்பாட்டு—(முயன்று) துர்க்கடங்களைகடிப்பிக்க வல்லவன்; அவனை யாஸ்ரயியென்கிறார்.

(முயன்றுதொழுநெஞ்சே) யத்நம்பண்ணி யாஸ்ரயிக்கப்பார். (மூரிநீரித்யாதி) உலாவாநின்ற நீரையுடைத்தான கடலிலே யுண்டான மரத்தினுடைய * பல்லவமாயிருப்பதொரு ஆலிலையின்மேலே பயின்று சேதநர்க்குபோகோபகரண போகஸ்தாந போக்யமான பூமியை யழியாநின்ற வெள்ளத்திலே ஆஸ்சர்யமான பிள்ளையானவன். (தண்ணலங்கலித்யாதி) ஆலிலையின்மேலே கண்வளர்ந்தருளுகிறபோது பொகட்டமாலையுந்தானுமாய்க் கிடந்தபடி. அவனுடைய திருவடிகளை முயன்றுதொழுநெஞ்சே நூங.

* (பா) பலனை.

தாளால்சகடமுதைத்துப் பகடுந்தி
கிளாமருதிடைபோய்க்கேழலாய்—மீளாது
மண்ணகலங்கீண்டங்கோர் மாதுகந்தமார்பற்குப்
பெண்ணகலங்காதல்பெரிது. நிச.

அ.—தாளால் சகடம் உதைத்து பகடு உந்தி கிளா மருது இடை போய் (9) கேழலாய் அங்கு மீளாது அகலம் மண் கீண்டு ஓர் மாது உகந்த மார்பற்கு அகலம் பெண் காதல் பெரிது. (23)

அர்.—திருவடிகளினால் சகடாஸுரனை யுதைத்துக் குவலயாபீடமென்கிறயானையைத் தள்ளி இணைபிரியாத மருதமரத்தின் நடுவே சென்று (அதைத்தள்ளி) (கூ) வராஹாவதாரமெடுத்து அவ்வண்டபித்தியில் கீழேவிழாமலொட்டிக்கொண்டிருந்த பரந்த பூமியைப்பிரித்தெடுத்து அத்விதீயையான பூமிப்பிராட்டியை யாசைப்பட்ட அழகியதிருமார்பையுடைய ஸர்வேஸ்வரனுக்கு அபரிச்சிந்நமான குணங்களையுடைய பெரியபிராட்டியார்விஷயத்தில் ப்ரேம மதிகமாயிருக்கும். (உக) (நிச)

வ்யா.—ஐம்பத்தாறாம்பாட்டு.—(தாளால் சகடமுதைத்து) திருவடிகளாலே சகடாஸுரநிரஸனம்பண்ணி. (பகடுந்தி) குவலயாபீடத்தைத்தள்ளி. (கிளாமருதிடைபோய்) இரண்டாயிருகே கின்ற மருதூடேபோய். (கிளாள) பிளவாமருதிடைபோயென்றுமாம். (கேழலாயிக்யாதி) ஸ்ரீவராஹரூபியாய் மீளாதபடிக்கீடாக பூமியைக்கீண்டு ஸ்ரீபூமிப்பிராட்டியை யுகந்தமார்பற்கு. (பெண்ணகலங்காதல் பெரிது) பிராட்டிபக்கலிலே ஸ்நேஹம் பெரிது. நிச.

பெரியவரைமார்பில் பேராரம்பூண்டு
கரியமுகிலிடைமின்போலத்—* தெரியுங்கால்
பாணெடுங்கவண்டனையும்பங்கயமே, மற்றவன்தன்
நீணெடுங்கண்காட்டும்நிறம். நிநி.

அ.—பெரிய வரை மார்பில் பேர் ஆரம் பூண்டு தெரியுங்கால் (7) கரிய முகில் இடை மின்போல. 11) மற்று பாண் ஒடுங்க வண்டு அனையும் பங்கயம் (17) அவன்தன் நீள் நெடும் கண் நிறம் காட்டும் (23)

அர்.—விசாலமாய் மலைபோன்ற திருமார்பில் பெரிய முத்துமாலையை யணிந்த (ஸர்வேஸ்வரனை) த்யாநித்தால் (எ) கரு மேகத்தி

* (பா) திரியுங்கால்.

னிடையில் மின்னற்போலிருக்கும். (கக) இன்னும், (உலகத்திலுள்ள) பாட்டுக்களெல்லாம் தோற்கும் படி வண்டுகள் பாடாநின்ற தாமரை புஷ்பமானது (கள) அத்தஸர்வேஸ்வரனுடைய நீண்டு விசாலமாயிருக்கிற நிருக்கண்களுடைய ஸௌந்தர்யத்தைக் காட்டாநிற்கும் (உங) இரு.

வ்யா.— ஐம்பத்தைத்தாம்பாட்டு — (பெரியவரைமார்பில்) ஆரத்தால் பரிச்சேதிக்கப் போகாதமார்பில், (பேரரம்பூண்டு) மடித்துப்பூணவேண்டும் பெரியஹாரத்தைப்பூண்டு. (கரியமுகிலிடைமின் போல) மார்புக்குமாரத்துக்கும் த்ருஷ்டாந்தம். மேகத்திலே மின்னற்போலே ஸ்யாமமான திருமார்பிலே ஹாரங்கிடந்தபடி. (தெரியுங்கால்) அநுஸந்திக்கும்போது. "திரியுங்கால்" என்றுபாடமுமாம். (பாணெடுங்கவித்யாதி) பாண்சாதியாக ஒடுங்கும்படி பாடாநின்ற வண்டையுடைத்தான பங்கயமே. (மற்றவனித்யாதி.) அவனுடைய பரிச்சேதிக்கப்போகாத கண்ணினுடைய நிறத்தைக்காட்டாகின்றது. இரு.

நிறம்வெளிதுசெய்து பசிதுகரிதென்று
இறையுருவம்யாமறியோமெண்ணில்—*நிறைவுடைய
நாமங்கைதானும் நலம்புகழவல்லளே
பூமங்கைகேள்வன்பொலிவு. இசு.

அங்.—இறை உருவம் நிறம் எண்ணில் (4) வெளிது செய்து பசிது கரிது என்று யாம் அறியோம். (11) நிறைவுடைய நாமங்கை தானும் பூமங்கை கேள்வன் பொலிவு நலம் புகழ வல்லளே? (19)

அர்.— எம்பெருமானுடைய திருமேனியின் ஸௌந்தர்யத்தை யாராயில் (ச) வெளுத்திருக்கும்; சிவந்திருக்கும்; பசுமையாயிருக்கும்; கறுத்திருக்கும்; என்று நாம் அறியமாட்டோம். (கக) (ஜ்ஞாந) பூர்த்தியையுடைய வாக்தேவியானஸரஸ்வதிதான், பூமகளான பெரியபிராட்டியின் வல்லபனானஸர்வேஸ்வரன் பெருமையை நன்றாய்ப் புகழ சக்தையாவளோ? (ஆகமாட்டாள்). (கஙு) இரு.

வ்யா.— அவ.— ஐம்பத்தாறும்பாட்டு.— (நிறம்) என்னுடைய ஸ்வாமியினுடைய ரூபத்தை இன்னபடியிருக்குமென்று சொல்லப் போகாது. ப்ரயோஜகத்தைச் சொல்லுமித்தனையென்கிறார்.

* (பா) நிறமுடைய.

(நிறமித்யாதி) இறையினுடைய வடிவானது வெளுப்பு, சிவப்பு, பசுமை, கறுப்பு, என்றெண்ணில் நாமறியோம். (நிறையித்யாதி) நாமேமாட்டாதோமானாலும்மதிப்புடையளானஸரஸ்வதிஅங்குத்தைக்குத்தாரமாகப் புகழவல்லளோ. (பூமங்கைகேள்வன் பொலிவு) புகழப்போகாமை யென்னென்னில்; ஸ்ரீயஃபதியுடைய ஸம்ருத்தியைச்சிலவரால் பேசப்போமோ? நிசு

பொலிந்திருண்டகார்வானில் மின்னேபோல்தோன்றி
மலிந்துதிருவிருந்தமார்பன்—பொலிந்து
கருடன்மேற்கொண்ட கரியான்கழலே
தெருடன்மேற்கண்டாய்தெளி. நிள.

அந்.—பொலிந்து இருண்ட கார் வானில் மின்போல் தோன்றி (6) திரு மலிந்து இருந்த மார்பன் (10) பொலிந்து கருடன்மேல் கொண்ட கரியான் கழல் தெருள்தன் மேல் தெளிகண்டாய். (18)

அர்.—திரண்டும் இருண்டுமிருக்கிற மழைகாலத்து மேகத்தில் மின்ன மின்னலிப்போல் ப்ரகாசித்துக்கொண்டு (சு) பெரியபிராட்டியார் ஸமஸ்தகல்யாணகுணபூர்ணையாய் நித்யவாஸம்பண்ணுகிற திருமார்பையுடையவனும் (கo) சிறப்பையுடைத்தாயிருக்கிற பெரிய திருவடியின்மேலே எழுந்தருளியிருக்கிற ஸ்யாமகிறத்தனான ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளில் பண்ணின பக்திதான் ஸர்வோத்க்ருஷ்டமென்றறி. (கஅ) நிள.

வ்யா.— அவ.— ஐம்பத்தேழாம்பாட்டு.— (பொலிந்து) கருடவாஹநனுடைய திருவடிகளேயாஸ்ரயி யென்கிறது.

(பொலிந்தித்யாதி) ஸம்ருத்தமாயிருண்ட கார்காலத்திலே மேகத்தின் மின்போலே தோற்றித் தண்ணீர்தண்ணீரென்றுசைப்படாநின்ற பெரியபிராட்டியாருகந்த திருமார்பையுடையவன். (பொலிந்தித்யாதி) மஹாமேருவிலே யொரு அஞ்ஜநகிரியிருந்தாற்போலே ஸம்ருத்தனான பெரியதிருவடிமேலே யிருந்தவனுடைய திருவடிகளிலேயுண்டான, (தெருடனித்யாதி) ஜ்ஞாநவிபாகை யானபக்தியை யெல்லாவற்றுக்கும் மேலாகக்கொண்டநுஸந்தி, ஒலக்கவார்த்தையென்றிராதேகொள். நிள.

அரு.— ஐம்பத்தேழாம்பாட்டு.—தெருடன்மேல் - தெருள்தன் மேலே. மேலான தெருள் - ஜ்ஞாநவிபாகையானபக்தி. தெருள் - ஜ்ஞாநமாய், ஜ்ஞாநவிசேஷமான பக்தியென்றபடி. கண்டாய் தெளி - திருவடிகளிலே யுண்டான பக்தியை மேலாகக்கொண்டநுஸந்தி யென்றபடி. நிஎ.

தெளிந்தசிலாதலத்தின் மேலிருந்தமந்தி
அளிந்தகவினேயேநோக்கி —விளங்கிய
வெண்மதியந்தாவென் னும்வேங்கடமே,மேலொருநாள்
மண்மதியில்கொண்டுகந்தான் வாழ்வு. நிஅ.

அ.—தெளிந்தசிலாதலத்தின்மேல் இருந்தமந்தி அளிந்தகவினே நோக்கி (7) வெண் விளங்கிய மதியம் தாவென்னும் வேங்கடமே (12) மேலொருநாள் மண் மதியில் கொண்டு உகந்தான் வாழ்வு. (18)

அர்.—நிர்மலமான கற்பாறைமேலிருக்கிற பெண்குரங்கு (தன்னிடத்தில்) ஸ்நேஹித்திருக்கிற ஆண்குரங்கைப் பார்த்து (எ) வெண்மையாயொளிவீசுகிற சந்த்ரனைக்(கொண்டு)கொடுவென்றுசொல்லாநின்ற திருமலையே (கஉ) முற்காலத்தில் பூமியை (த்தன்) யுக்தியினால் ஸ்வீகரித்து ஸந்தோஷித்தஸர்வேஸ்வரன் சிறப்புடனேவர்த்திக்கும் தேசம். (கஅ) நிஅ.

வ்யா.— அவ.— ஐம்பத்தெட்டாம் பாட்டு.— (தெளிந்த) "ஸுஸ்நிக்தயாஸாஸுஸ்தி— அஸ்மிந்மயாஸார்த்தம்" என்று பிராட்டி செய்த செயலைத் திருமலையில் தீர்யக்குக்களும் அநுவர்த்தியா நின்றதென்கிறார்.

(தெளிந்தவித்யாதி) ஸ்படிகப்பாறையிலேயிருந்த பெண்குரங்கு. (அளிந்தவித்யாதி) தன்பக்கவிலே ஸ்நேஹித்த ஆண்குரங்கை நோக்கி. (விளங்கியவித்யாதி) ஊடிஞால் ஒருகட்கர் பொருந்தவிடவேண்டாதே தானே சந்த்ரனுடைய மேற்புறமாகையாலே களங்கமற்று உஜ்வலமாயிருந்துள்ள சந்த்ரமண்டலத்தைத் தாவென்றுநின்றது. இழிந்துவாங்கவேண்டுங்காணும் திருமலையினுடைய உயர்த்தி (மேவித்யாதி) பண்டொருகாள் பூமியை மதியாலேகொண்டு அலப்யலாபம்பெற்றுஞ் யுகந்தவனுடைய ஸ்ஸ்வர்யம். நிஅ)

மூன்றுத்திருவந்தாதி, நிகு-பா; வாழும். கூ0-பா, பெற்றம். நிகூ.

வாழும்வகையறிந்தேன்மைபோல் நெடுவரைவாய்
தாழுமருவிபோல்தார்கிடப்ப—சூழும்
திருமாமணிவண்ணன் செங்கண்மால், எங்கள்
பெருமானடிசேரப்பெற்று. நிகூ.

அந்.—மைபோல் நெடு வரைவாய் தாழும் அருவிபோல் தார் கிடப்ப (7) சூழும் திரு மா மணி வண்ணன் செம் கண் மால் (15) எங்கள் பெருமான் அடி சேரப்பெற்று வாழும்வகை அறிந்தேன்.(21)

அர்.—அஞ்ஜநம்போலிருண்ட பெரிய மலைப்புறத்தில் வழிகிற அருவியைப்போல் திருமாலை ப்ரகாசிக்க (எ) (அதைக்கண்டாசைப்பட்டு அங்கே நித்யவாஸம்செய்கிறபெரியபிராட்டியாரையுடையனும் ஸ்லாக்யமான நீலமணிபோன்ற திருமேனியையுடையனும் சிவந்த திருக்கண்களையுடையனும் ஸர்வாதிகனும் (கடு) எமக்கு ஸ்வாமியான ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளைப் பற்றி வாழ்க்கைக்கு உபாயத்தைத் தெரிந்துகொண்டேன். (உக) நிகூ.

வ்யா.— ஐம்பத்தொன்பதாம்பாட்டு.— (வாழும்வகையறிந்தேன்) ஸர்வேஸ்வரனைப்பற்றி ஆத்மாவுக்குவகுத்த ஸம்பத்தென்று வ்யுத்பத்திபண்ணினேன். (மைபோலிதியாதி) அஞ்ஜநகிரியிலே பாயாகின்ற அருவிபோல் திருமார்பிலே சாத்தினதோள்மாலை கிடப்ப. (சூழும்திருமாமணிவண்ணன்) அதிலே ஆசைப்படாநின்ற பெரிய பிராட்டியாரையுடையனும் ஸ்ரமஹரமான வடிவையுடையவன். (செங்கண்மால்) ஈஸ்வரத்வத்தை ஸூசிப்பியாநின்ற கண்களையுடையவன். (எங்களித்யாதி) போக்யபூதனும் என்னையுடையவனும் வகுத்தவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்று. "ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே - புத்திநாசாத்ப்ரணச்யதி" என்று சப்தாதிகளைப் பற்றுதே வாழும் ப்ரகாரமறிந்தேன். நிகூ.

பெற்றம்பிணைமருதம் பேய்முலைமாச்சகடம்
முற்றக்காத்தூடுபோ யுண்டுதைத்துக்—கற்றுக்
குணிலாவிளங்கனிக்குக்கொண்டெறிந்தான், வெற்பிற்
பணிலம்வாய்வைத் துகந்தான்பண்டு. கூடு.

அந்.—பெற்றம் முற்ற காத்து பிணை மருதம் ஊடு போய் (7) பேய் முலை உண்டு மா சகடம் உதைத்து (13) கன்று குணிலா

கொண்டு விளங்கனிக்கு எறிந்தான் பண்டு வேற்றி பணிலம் வாய் வைத்து உகந்தான். (23)

அர்.—பசுக்களை யெல்லாம் ரக்ஷித்து இணைந்த மருதமரத்தின் நடுவே சென்று (எ) பூதனையின் ஸ்தநத்தைப் பாநம்செய்து பெரிய சகடாஸுரனை யுதைத்து (கந) வத்ஸாஸுரனுகிய குறுந்தடியை எடுத்துக் கபித்தாஸுரன்மேல் எறிந்த ஸர்வேச்வரன் முன்பு ஜயப்ரதமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்தில்வைத்தூதிஸந் தோஷித்தான். (உந) சுo.

வ்யா.—அவ.— அறுபதாம்பாட்டு.—(பெற்றம்) ப்ரதிபந்தக ங்கள்போலன்றே வாழும்படி யாவதென்னில்; அவன்தானே ப்ரதி பந்தகங்களைப் போக்குமென்கிறது.

(பெற்றபித்யாதி) இதுநிரல்நிறை. கன்றுகிய எறிகருவியைக் கொண்டு விளங்கனிக்குக் கொண்டெறிந்தவன். வென்றியைவிளைப் பதான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலேவைத் துகந்தவன், பண்டுண் டான ப்ரதிபந்தகங்களை யெல்லாம்போக்கும். சுo.

பண்டெல்லாம்வேங்கடம் பாற்கடல்வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும்நீள்சோலைவண்பூங்கடிகை
இளங்குமரன்தன் விண்ணகர். சுக.

அர்.—பண்டெல்லாம் வைகுந்தம் கொண்டு அங்கு உறைவார் க்கு (5) வேங்கடம் பாற்கடல் வண்டு வளம் கிளரும் நீள் சோலை வண் பூ கடிகை (15) இளங்குமரன்தன் விண்ணகர் கோயில் போல். (18)

அர்.—முன்பெல்லாம் ஸ்ரீவைகுண்டத்தைக் கோயிலாகக்கொ ண்டு அங்கு நித்யவாஸம் செய்கிறஸர்வேச்வரனுக்கு, (நி) (இப் போது) திருமலை திருப்பாற்கடல் வண்டுகள் கும்பல்கும்பலாய்க் கிள ம்புகிற விசாலமான சோப்புகளையும் அழகிய புஷ்பங்களையுமுடைய திருக்கடிகை (கநி) நித்யயௌவநமுடையஸ்ரியஃபதிக்கிருப்பிட மான திருவிண்ணகர் (ஆகிய இவைகள்) கோயில்போலே யிருக்கின் றன. (கஅ) சுக.

வ்யா.— அவ — அறுபத்தோராம்பாட்டு.—(பண்டெல்லாமித் யாதி) ப்ரதிபந்தகங்களைப்போக்குமளவேயோ ? பரமபதத்தைக்கல

விருக்கையாகவுடையவன் ஸம்ஸாரத்திலே உகந்தருளின திருப்பதி களைத்தனக்கிருப்பிடமாகக்கொள்ளுகிற்து ஆஸ்ரிதார்த்தமாகவன்றே வென்கிறார்.

(வேங்கடம்பாற்கடல் வைகுந்தம் கொண்டங்குறைவார்க்கு) "திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமே" என்று பரமபதத் தோபாதியாகத் திருமலையைச்சொல்லுகிறது. வைகுந்தங்கோயிலா கக்கொண்டு அங்குறைவார்க்கு, வேங்கடம், பாற்கடல், வண்டுவளங் கிளரும் நீள்சோலைவண்பூங்கடிகை, விண்ணகரானவிவை இளங்கும ரனை தனக்கு இப்போது கோயில்போல். கூக.

அரு.— அறுபத்தோராம்பாட்டு.— வேங்கடம்பாற்கடல் வை குந்தம் கோயில் பண்டெல்லாம்; இப்போதிந்த திருப்பதிகள் கோயி லென்றபடி. வைகுந்தத்தோடு வேங்கடத்தைக் கூட்டுவானென் னென்ன அருளிச்செய்கிறார் (திருமாலித்யாதி). இது கீழும்மேலுங் கூடும். கூக

விண்ணகரம்வெஃகாவிரி திரைநீர் வேங்கடம்
மண்ணகரம்மாமாடவேளுக்கை—மண்ணகத்த
தென்குடந்தைதேனார்திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கைநீரேற்றான் தாழ்வு. கூஉ.

அந்.—விண்ணகரம் வெஃகா விரி திரை நீர் வேங்கடம் (6) மண் ணகரம் மா மாடம் வேளுக்கை (11) மண் அகத்த தென் குடந் தை தேன் ஆர் திருவரங்கம் (18) தென் கோட்டி தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு. (25)

அர்.—திருவிண்ணகர் திருவெஃகா பரந்து அலைமோதுகிற ஜல த்தையுடைய திருமலை (கூ) பூலோகத்தில் ஸ்ரீவைகுண்டம்போல்விள ங்குகிற பெரிய மண்டபங்களையுடைய வேளுக்கை (ஙக) பூலோகத்தி லிருக்கிற ஸ்ப்ருஹணீயமான திருக்குடந்தைதேனினும் பூர்ணமான சோலைகளையுடைய திருவரங்கம் (கஅ) தென்திசையிலுள்ள திருக் கோட்டியூர் (இவைகள்) தன் சிறங்கையில் தாரைஜலத்தை வாங்கின ஸ்ரியஃபதிஸ்வரூபத்துடனெழுந்தருளியிருக்கும்தேசங்கள். (உடு)

வ்யா.— அவ.— அறுபத்திரண்டாம்பாட்டு.— (விண்ணகரம்) கேவலம் ஸம்ஸாரத்திலே நின்றமாத்ரமோ? பரமபதத்திலிருப்புமனி ச்சுக்காய்தாழ்சியோடே கூடவிருப்பது உகந்தருளின தேசத்தி லே யன்றோவென்கிறார்.

(விண்ணகரமித்யாதி) விண்ணகரம், வேங்கா, விரிதிரைநீர் வேங்கடம். திருமலையென்றலொரு விசேஷணரஹிதமாகச் சொல்லமாட்டார். (மண்ணகரமித்யாதி) போக்யதைகுறைவற்றகோயில், (தண்குடங்கையித்யாதி) மஹாபலிபக்கலிலே தன்னுடைமைபெறுகைக்கு அர்த்தித்வம் தோற்றும்படி அர்த்தியாய் நின்றாற்போலே உகந்தருளின தேசங்களிலே தாழ்வுதோற்றும்படி நின்றான். சுஉ.

அரு.—அறுபத்திரண்டாம்பாட்டு.— மனிச்சுக்கு—ஹர்ஷத்துக்கு; ஸௌஜந்யத்துக்காக வென்றபடி. மண்ணுக்கு நகரமென்கையாலே மண்ணிலுண்டான போக்யதையால் குறைவில்லை யென்றபடி. சுஉ.

தாழ்சடையும்நீண்முடியு மொண்மழுவும்சக்கரமும்
சூழரவும்பொன்னணிந்தோன்றுமால்—சூழும்
திரண்டருவிபாயுந்திருமலை மேலெந்தைக்கு
இரண்டுருவு மொன்றாயிசைந்து. சுங.

அந்.—சூழும் திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு (6) தாழ் சடையும் நீள் முடியும் ஒண் மழுவும் சக்கரமும் (13) சூழ் அரவும் பொன் நாணும் இரண்டு உருவும் இசைந்து ஒன்றாய் தோன்றும். ஆல். (23)

அர்—நாற்புறத்திலும்சுற்றிக்கொண்டிருக்கிற திரண்ட அருவிகள் பாயாநின்ற திருமலைமேலெழுந்தருளியிருக்கிற என்னுடைய ஸ்வாமிக்கு (சு) தொங்குகிற சடையும் நீண்ட திருவபிஷேகமும் அழகிய மழுவென்கிற ஆயுதமும் திருவாழியும் (கங) (இடுப்பில்) சுற்றியிருக்கிற பாம்பும் ஸுவர்ணமயமான கடிஸூத்ரமும் ஆகியிவ்விரண்டு ஹரஹரிரூபமும் அமர்ந்து ஒருபடியாய்த் தோற்றுகின்றது. ஆச்சர்யம். (உ-கூ) சுங.

வ்யா.—அவ.—அறுபத்துமூன்றும்பாட்டு.—(தாழ்சடையும்) ஸித்தமானவேஷத்தையும் ஸாதகமான வேஷத்தையும் ஒக்கதரிப்பதே! இதாருசீலவத்தையே! என்கிறார்.

(தாழ்சடையித்யாதி) சூழத்திரண்டருவி பாயாநின்றதிருமலைமேலே நிற்கிற என்னுடைய ஸ்வாமிக்கு. (இரண்டுருவு மொன்றாயிசைந்து) ஒன்று ஸாதகமாய் ஒன்று ஸித்தமாஞல் சேராச்சேர்த்தியாயிருக்குமோவென்னில்; இரண்டுருவுமிசைந்தொன்றாயிருக்கும். பொருந்தியிருக்கும். சுங.

இசைந்தவரவமும் வெற்புங்கடலும்
பசைந்தங்கமுது * படுப்ப—அசைந்து
கடைந்தவருத்தமோ கச்சிவெஃகாவில்
கிடந்திருந்துநின்றதுவுமங்கு. சுசை.

அர்.—கச்சி வெஃகாவில் கிடந்து அங்கு இருந்து நின்றதுவும், (5) இசைந்த அரவமும் வெற்பும் கடலும் அங்கு அமுது படுப்ப (12) பசைந்து அசைந்து கடைந்த வருத்தமோ? (16)

அர்.—காஞ்சீகரத்திலுள்ள திருவெஃகாவில் பள்ளிகொண்டு அக்கச்சியில் (ஹஸ்திகிரியில்) எழுந்தருளியிருந்து (திருப்பாடகத்தில்) நின்றதும், (நு) (ஸமுத்ரமதநத்தில்) ஒருப்பட்ட வாஸுகியையும் மந்தரபர்வதத்தையும் திருப்பாற்கடலையும் (சேர்த்து) அந்தஸமுத்ரத்தில் அம்ருதத்தை யுண்டாக்கைக்காக (கஉ) விருப்புற்று ஆடியாடிக் கடைந்த ஸ்ரமத்தினாலேயோ! (கசு) சுசை.

வ்யா.—அறுபத்துநாலாம்பாட்டு.— (இசைந்தவித்யாதி) கடலிலே ஒருமலையை யிட்டு ஒருபாம்பைச்சுற்றிக் கடையாகின்றால் சேராச்சேர்த்தியாயிருக்குமோவென்றால்; (இசைந்த) தன்னில் பொருந்தியிருந்தபடி. (பசைந்தங்கமுதுபடுப்ப) அதிலேயம்ருதம்படும்படிக் கீடாகப்பசைகொடித்து. (அசைந்தித்யாதி) உலாவிக்கடைந்த வருத்தமோ? (கச்சியித்யாதி) திருக்கச்சியிலும் திருவெஃகாவிலும் கிடப்பது இருப்பது நிற்பதாகிறது தனியே கடலைக்கடைந்தத்தாலே திருமேனியிலே பிறந்த ஆயாஸமோ? சுசை.

அரு.— அறுபத்துநாலாம்பாட்டு.— பசைகொடுத்து = பக்வம் பண்ணி. அம்ருதமுண்டாம்படி அதுக்குவேண்டும் ஸாதநங்களையெல்லாமுண்டாக்கி யென்றபடி. சுசை.

= அங்கற்கிடரின்றியந்திப்பொழுதத்து
மங்கவிரணியனதாகத்தைப்—பொங்கி
அரியுருவமாய்ப்பிளந்தவம்மானவனே
கரியுருவங்கொம்பொசித்தான்காய்ந்து. சுநு.

அர்.—அங்கற்கு இடர் இன்றி அந்திப்பொழுதத்து அரியுருவமாய் பொங்கி (6) இரணியனது ஆகத்தை மங்க பிளந்த அம்மான் அவனே கரியுருவம் கொம்பு காய்ந்து ஒசித்தான். (16)

---

* (பா) படைப்ப. = (பா) அங்கக்கிடரின்றி.

அர்.—பிள்ளையாகிய ப்ரஹ்லாதனுடைய நியமரைப் போக்குகைக்காக ஸத்யாகாலத்தில் நரஸிம்ஹமுமாய் வ்ருத்தியடைந்து (சு) ஹிரண்யராஜனுடைய சரீரத்தை யழியும்படி கிழித்துப்பொகட்ட ஸ்வாமியான அத்தலரியபதியே குவலயா பீடத்தின் கத்தத்தைக் கோபித்து முறித்தவன். (கசு) சுடு.

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.—(அங்கற்கிடரின்றியித்யாதி) பிள்ளையுடைய விடாய்தீர "அங்கக்கிடரின்றி" என்று பாடமாகில், அவ்விடத்தில்விடாய்தீர.(அந்திப்பொழுதத்து) அஸுரர்க்குபலம்வர்த்திக்கும் காலத்திலே.(மங்கவிரணியனதாகத்தை)-ஹிரண்யனுடைய ஹ்ருதயமானது மங்கிப்போம்படிக்கீடாக.(பொங்கியித்யாதி)"பிறையெயிற்றன்றடலரியாய்ப் பெருகினானே" என்னும்படி. (அவனேயித்யாதி) அவனேகுவலயாபீடத்தினுடைய கொம்பை யொசித்தான். (காய்ந்து) சீற்றமில்லாதவன்சிறி. சுடு.

அரு.— அறுபத்தைந்தாம்பாட்டு.—அங்கர்-அங்கத்தையுடைய பிள்ளை, அங்கு அக்கிடர்-அவ்விடத்திலத்தவிடாய்தீரவென்று பாடாந்தரம். சுடு.

காய்ந்திருளைமாற்றிக்கதிரிலகுமாமணிகள்
ஏய்ந்தபணைக்கதிர்மேல்வெவ்வுயிர்ப்ப--வாய்ந்த
மதுகைடபரும்வயிறுருகிமாண்டார்
அதுகேடவர்க்கிறுதியாங்கு. சுசு.

அ.—இருளை காய்ந்து மாற்றி கதிர் இலகு மா மணிகள் ஏய்ந்த பணம் கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப (11) வாய்ந்த மதுகைடபரும் வயிறு உருகி மாண்டார். ஆங்கு அது அவர்க்கு கேடு இறுதி. (21)

அர்.—இருளைக் கோபித்துப் போக்கி ஒளி வீசுகிற ஸ்லாக்யமான மாணிக்கங்கள் சேர்ந்த படத்தினுடைய கிரணங்களின்மேலே (ஸர்வேஸ்வரன்) பெருமூச்சு விட (கக) (அப்போது) அங்குவந்த மதுகைடபர்களென்கிற இரண்டரக்கர்களும் உடல் கனைத்து செத்தார்கள். அவ்விடத்தில் வந்தது அவர்களுக்கு (உண்டான) வாழ்வுக்கும் கெடுதி. (பிழைப்புக்கும்) கெடுதி. (உக) சுசு.

வ்யா.— அவ.— அறுபத்தாறாம்பாட்டு.— (காய்ந்து) உணர்த்தியுண்டானபோது விரோதிநிரஸனமபண்ணினதோரேற்றமோ? அவதாரமில்லிக்கேயிருக்கச்செய்தே விரோதிகளை முடிக்கவல்லவனுக்கென்கிறார்.

(காய்ந்திருஞ்மாற்றி) சீறியிருஞாப்போக்கி. (கதிரிலகிய்யாதி) ஒளிவிடாநின்றுள்ள மணிகள்சேர்ந்த பணத்திலுண்டான தேஜஸ்ஸின்மேலே தெடுமூசசுவிட்(டவாய்ந்தவித்யாதி)கிட்டினமதுகைடபர்கள் வயிறுருகிமூடிந்தார்கள். (அதுகேடித்யாதி) "என்றுமென்பிள்ளைக் குத்தீமைகள் செய்வார்களங்ஙனமாவர்களே". சுசு.

அரு.— அறுபத்தாறுமம்பாட்டு.— கண்வளர்ந்தருளுகிறபோது ஸ்வாஸத்தாலே மூடிக்கையாலே அவதாரமின்றி யென்கிறது. திருவகத்தாழ்வானுடைய ஸ்வாஸத்தாலே என்றுஞ்சொல்லுவர்கள். இவ்விடத்துக்குப் பெருமாளுடைய ஸ்வாஸமேயாகக்கடவது. ஆங்கு-அந்தஅவஸ்தையிலே. இறுதியானகேடு-மூடிவானகேடு.இதெப்படியென்ன, இவ்விடம்போலே என்கிறார் (என்றுமென்பிள்ளைக்கித்யாதி). சுசு.

ஆங்குமலரும் குவியுமாலுந்திவாய்
ஓங்குகமலத்திலெண்போது— ஆங்கைத்
திகிரிசுடரென்றும்வெண்சங்கம், வானில்
பகருமதியென்றும்பார்த்து. சுன.

அந்.—மால் உந்தி வாய் ஓங்கு கமலத்தின் ஒன்போது(7) ஆம் கை திகிரி சுடர் என்றும் (12) வெண் சங்கம வானில் பகரும் மதி என்றும் பார்த்து ஆங்கு மலரும்; குவியும். (22)

அர்.—ஸர்வேஸ்வரனுடைய திருநாபியில் முளைத்து உயர்ந்து வளராநின்ற தாமரையி னழகிய பூவானது, (எ) அழகியதிருக்கையிலிருக்கிற திருவாழியை ஸூர்ய னென்றும் (கஉ) வெண்மையான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஆகாசத்தில் விளங்குகிற சந்த்ர னென்றும் பார்த்து அப்போது விகஸிக்கும்; மூடிக்கொள்ளும். (உஉ) சுஎ.

வ்யா.—அவ.—அறுபத்தேழாமபாட்டு.—(ஆங்கு)ஹிரண்யனும் மதுகைடபர்களும முடிந்தபின்பு கண்வளரும போதையழகை யநுபவிக்கிறார்.

(உந்திவாயித்யாதி). திருநாபிகமலத்திலே ஓங்கியிருந்துள்ள அழகியதாமரைப்பூ.(ஆங்கையித்யாதி)கையில்திருவாழியாழ்வானென்றும். (வெண்சங்கமித்யாதி) ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஆகாசத்திலே விளங்காநின்றுள்ள சந்த்ரனென்றும்பார்த்து - அறுலர்ந்திக்கு. (ஆங்குமலருங்குவியுமால்) இரண்டுகாலத்திலே பிறக்கக்கடவ அவஸ்தாவிசேஷத்தையாண்டு யுக்தமாக உண்டாகாநின்றது. சுஎ.

கூ0 மூன்றுந்திருவந்தாதி, சுஅ-பா, பார்த்த.சுகூ-பா, வெற்பென்று.

அரு.— அறுபத்தேழாம்பாட்டு.— ஆங்கை-அங்கை என்றுமாய், அழகியகை-திகிரி. திருவாழி-ஆங்கு - அந்தஅவஸ்தையிலே. ஆல்-ஆஸ்சர்யம். சுஎ.

பார்த்தகடுவன்சுனைநீர்நிழற்கண்டு
பேர்த்தோர்கடுவனெனப்பேர்ந்து—கார்த்த
களங்கனிக்குக்கைநீட்டும்வேங்கடமே, மேலாள்
விளங்கனிக்குக்கன்றெறிந்தான்வெற்பு. சுஅ.

அந்.—சுனை நீர் பார்த்த கடுவன் நிழல் கண்டு (6) பேர்த்தோர் கடுவன் என பேர்ந்து கார்த்த களங்கனிக்கு கைநீட்டும் வேங்கடமே (14) மேல்நாள் விளங்கனிக்கு கன்று எறிந்தான் வெற்பு. (19)

அர்.— மலையூற்றின் ஜலத்தைப்பார்த்த குரங்கு (அதில்தன்) நிழலைப்பார்த்து (கூ) தனக்கெதிரியாகிய குரங்கென்று நினைத்து (இதற்குள்) கறுத்த களாப்பழத்துக்காகக் கைநீட்டாநிற்கிற திருமலையே (கச) முற்காலத்தில் விளாம்பழத்துக்காகக் கன்றை வீசிப்போகட்ட க்ருஷ்ணன் நித்யவாஸம்செய்யும்மலை. (சுகூ) சுஅ.

வ்யா.—அறுபத்தெட்டாம்பாட்டு.—(பார்த்தவித்யாதி) சுனைநீரிலேகடுவனைது தன்னுடைய நிழலைக்கண்டு. (பேர்த்தோரித்யாதி) வேறே தனக்கெதிரியான கடுவனென்று பெயர்த்து, (கார்த்தவித்யாதி) பின்னேயும் தன்னுடைய சாபலத்தாலே அருகில்களாப்பழத்தையறுத்துத்தாவென்று கைநீட்டாநிற்கும் திருமலை. (மேலாளித்யாதி) பண்டுகன்றைக் கொண்டு விளங்கனிக்கெறிந்தவனுடையமலை.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு.—கடுவன்-ஆண்குரங்கு. பேர்த்து-பயத்தாலே அப்புறத்தே பேர்த்து.கார்த்த-கறுத்த.''அறுத்துத்தா'' என்று அந்தநிழலிலேகண்ட தன்னையே நீட்டிக்கிடக்குமென்றபடி. களங்கனியும் அதினண்டையிலே நிழலிலேதோற்றும். சுஅ.

வெற்பென்றுவேங்கடம்பாடும், வியன்துழாய்
கற்பென்றுசூடுங்கருங்குழல்மேல்—மற்பொன்ற
தீண்டதோள்மால்கிடந்தநீள்கடல்நீராடுவான்
பூண்டநாளெல்லாம்புகும். சுகூ.

அந்.—வெற்பு என்று வேங்கடம் பாடும் (4) வியன் துழாய் கற்பு என்று கருங் குழல் மேல் சூடும். (11) மல் பொன்ற தீண்ட தோள் மால் கிடந்த நீள் கடல் நீராடுவான் பூண்ட நாளெல்லாம் புகும். (23)

அர்.—"மலி" என்றுசொல்லப்புகில் திருவேங்கடத்தைப் பாடுங்கோள். (ச) ஆஸ்சர்யகரமான திருத்துழாய்வகுத்தது என்றுநினைத்து கறுத்த மயிர்முடிமேல் சூடுங்கோள். (ஙக) மல்லரைக் கொன்ற நீண்ட புஜங்களையுடைய ஸர்வேஸ்வரன் பள்ளிகொண்ட விசாலமான திருப்பாற்கடலில் நீராடுகைக்காக விடிந்த தினமெல்லா மாசைப்படுங்கோள். (உங) கூகூ.

வ்யா.—அவ.—அறுபத்தொன்பதாம்பாட்டு.— (வெற்பென்று) ஆழ்வாரானவவஸ்த்தைபோய் ஒருபிராட்டியவஸ்த்தையை பஜித்து அவளுடைய தசையைத்தாயார் சொல்லுகிறாள்.

(வெற்பித்யாதி) லோகயாத்ரையுமிவளுக்கு பகவத்விஷயத்தி மேல. திருமலையொழிய வேறொருமலையுமறியாள். (கருங்குழல்மேல் வியன்றுழாய்கற்பென்றுசூடும்) காட்டுப்பூச்சூடாள். "தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்" என்கிறபடியே, விஸ்மயமானதிருத்துழாயல்லது குழலில்வையாள். "கற்பு"என்றுபாதிவ்ரத்யம். (மற்பொன்றவித்யாதி) விரோதிநிரஸநத்துக்காக வளர்த்தமேதாவியுடையனுய் வ்யாமுக்தனுனவன் கிடந்த நீள்கடலிலே விடிந்தநாளெல்லாம் புகாநின்றாள். திருப்பாற்கடலொழிய வேறொன்றில் குளித்தால் விடாய்கெடாதென்றிரா நின்றாள். இப்ப்ரகாரணத்தில் கீழ்மேலும்அர்த்தபேதமின்றிக்கேயிருக்க இப்பாட்டொன்றும்மிப்படிகொள்ளுகிறதென்னென்று நிர்வஹிப்பர்கள். அம்மலை இம்மலையென்று ஒன்றைச்சொல்லக்கடவிகோளிறே ; ஆனபின்பு, திருமலையைப்பாடுங்கோள். (வியன்துழாயித்யாதி)ஒருபூவைச் சூடக்கடவிகோளிறே ; ஆனபின்பு வகுத்தவனுகக்கும திருத்துழாயைச் சூடுங்கோள். (மற்பொன்றவித்யாதி) ப்ராதஸ்ஸ்நாநம் பண்ணக்கடவிகோளிறே. ஆனபின்பு விரோதிநிரஸநசீலனுனவன்கிடந்த திருப்பாற்கடலிலேமுழுகுங்கோள். கூகூ.

அரு.— அறுபத்தொன்பதாம்பாட்டு.— பாதிவ்ரத்யம் - அவன் ஸ்பர்சித்த பூவொழிய வேறொன்று சூடாமை. பூண்டவிடிந்த, கற்பென்று ப்ராப்தமென்று. இது இரண்டாவதுக்கு. கூகூ.

புகுமதத்தால்வாய்பூசிக்கீழ்தாழ்ந்து, அருவி
உகுமதத்தால்கால்கழுவிக்கையால்—மிகுமதத்தேன்
விண்டமலர்கொண்டுவிறல்வேங்கடவனையே
கண்டுவணங்கும்களிறு. ஏ0

அங்.—புகு மதத்தால் வாய்பூரி கீழ் தாழ்ந்து (5) அருவி உகு மதத்தால் கால் கழுவி (10) மிகு மதம் தேன் விண்ட மலர் கையால் கொண்டு (17) விறல் வேங்கடவனையே களிறு கண்டு வணங்கும். (உஉ)

அர்.—(பெருகிவந்து வாயில்) புகுகிற மதஜலத்தினால் வாயைக்கொப்பளித்து, கீழே வந்து (நி) அருவிகள்போல் விழாநின்ற மதஜலத்தினால் கால்களை யலம்பி (தo) மிக்க மதகர்மான தேனையுடைத்தாய் மலர்ந்திருக்கிற புஷ்பங்களைத் தும்பிக்கையினால் லெடுத்து (ஸமர்ப்பித்து) (கள) பலிஷ்டனை திருவேங்கடமுடையானையே யானையானது கண்டு ஆஸ்ரயிக்கும். (உஉ) எo.

வ்யா.—அவ.— எழுபதாமபாட்டு.—(புகுமதத்தால்) அநுகூலருடைய தேஹயாத்ரையெல்லாம் தன்ஸமாஸ்ரயணத்துக்குடலாகக் கொள்ளுமவனுடைய திருமலையென்கிறது.

(புகுமதத்தாலித்யாதி) வாயிலே புகுகிறமதஜலத்தாலேகால்கழுவி. (கீழித்யாதி) கீழேதாழ்ந்த வருவிபோலவுகாநின்ற மதஜலத்தாலே கால்கழுவி. (கையித்யாதி) கையாலே மிக்கமதுவையுடைத்தாய் அலராநின்ற பூவைக்கொண்டு களிறானது விறல்வேங்கடவனையே கண்டு வணங்கும். விறல்வேங்கடவனென்று-திருமலையில் திர்யக்குக்களும் தன்னைவணங்கும்படி ஜ்ஞாதத்தைக்காடுக்கவல்லசக்தியையுடையவனென்கிறது-ஜ்ஞாதகார்யமான ஸமாஸ்ரயணத்தைதேச்வாஸத்தாலே பண்ணிவைக்கும். எo.

அரு.—எழுபதாம்பாட்டு.—கீழ்தாழ்ந்தவருவி—மேட்டரஜலம்.

களிறுமுகில்குத்தக்கையெடுத்தோடி
ஒளிறுமருப்பொசிகையாளி—பிளிறி
விழுகொன்றுநின்றதிருவேங்கடமே, மேலோர்
குழுக்கன்றுகொண்டெறிந்தான்குன்று. எக.

அங்.—களிறு கை எடுத்து ஓடி முகில் குத்த (6) ஒளிறு மருப்பு ஒசி கையாளி பிளிறி விழு கொன்று (14) நின்ற திரு மலை வேங்கடமே மேலோர் குழுக்கன்று கொண்டு எறிந்தான் குன்று. (22)

அர்.—யானையானது தனதுதுமிக்கையைத் தூக்கிக்கொண்டோடி மேகத்தைக் குத்த, (சு) (அப்போது) ஒளிவிடாநின்ற (அவ்யானையின) தந்தங்களை முறியாநின்ற கைகளையுமுடைய யானையானது

(அவ்யானையைக்) கூய்ச்சஷிட்டுக்கொண்டு விழும்படி கொன்று (கசை) அருகேநின்று கர்ஜநம்செய்யாநின்ற திருமலையே முற்காலத்தில் சிறியகன்றாய்வந்த வத்ஸாஸுரனைப் பிடித்து வீசிப்பொகட்டக்ருஷ்ணன் நித்யவாஸம்செய்யும்பர்வதம். (உஉ) எக.

வ்யா.— எழுபத்தோராம்பாட்டு.— (களிறித்யாதி) கையையெடுத்துக்கொண்டோடிக்களிறுனது முகிலைக்குத்த (ஒளிறித்யாதி) ஆனையினுடைய வெண்மருப்பை முறியாகின்றயாளி. கையெடுத்தோடியென்று யாளிக்காகச் சொல்லவுமாம். (பிளிறியித்யாதி) ஆனையானது பிளிறிக்கொண்டு விழும்படிக்கீடாகக்கொன்று சினத்தாலே கின்றதிராகின்ற திருமலை. (மேனுளித்யாதி) ஸஹஜசத்ருக்களை முடித்து விரோதிபோகப்பெற்றதென்று உகந்துநிற்குமவனுடைய திருமலையிதற். திருமலையில் பின்னையொன்றுக்கொன்று பாதகமாகுமோ வென்னில். அக்ரூஷோபீய ஹிம்ஸையோபாதியிறே அவற்றுக்கும். எஉ

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—ஒளிறு-ஒளியையுடைய கொம்பு-இவற்றுக்கு பாதகங்கூடுமோவென்ன; அவனைப்போலே அவனுரிமுள்ளது மென்கிறார் (ஸஹஜசத்ருக்களையித்யாதி). ஆனாலும் இவ்யதேசத்திலே பாதகமாமோ வென்றபிப்ராயமாக (அக்ரூஷோபீயமித்யாதி). எக.

குன்றொன்றினையகுறமகளிர்கோல்வளைக்கை
சென்றுவிளையாடுந்தீங்கழைபோய்—வென்று
விளங்குமதிகோள்விடுக்கும்வேங்கடமே, மேலை
இளங்குமரர்கோமானிடம். எஉ.

அந்.—குன்று ஒன்றினைய குறமகளிர் சென்று (4) கோல் வளைகை விளையாடுமை தீ கழை போய் (10) வென்று விளங்கும் மதி கோள் விடுக்கும் வேங்கடமே (16) மேலை இளங்குமரர் கோமான் இடம். (20)

அர்.—திருமலை யொன்றையேப்ராப்யமாகவுடைய குறப்பெண்கள் போய் (ச) அழகிய வளைகளையுடைய கைகளாலே (பிடித்து) விளையாடாநின்ற அழகிய மூங்கில்கள் மேற்புறம்வளர்ந்து (ராஹுவை) ஜயித்து (அதினால்) ப்ரகாசியாநின்ற சந்த்ரனுடைய ஆபத்தைப் போக்காநின்ற திருமலையே (கசை அண்டத்துக்குமேலுள்ளபரமபத

த்தில்வாஸம்செய்கிற யௌவநாரம்பத்தையுடைய நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான ஸர்வேஸ்வர னெழுந்தருளியிருக்கும்தேசம்.(உ0, எக.

வ்யா.— எழுபத்திரண்டாம்பாட்டு.— (குன்றித்யாதி) திருமலைக்குக்கீழ்ழியில்குடிப்பழியாங்குறவருடையபெண்கள். (கோல்வளைக்கையித்யாதி)குறவருடையபெண்கள் கோல்வளையையுடைத்தானகையாலே சென்றுவிளையாடுகிற கழையானதுபோய் உஜ்வலமான சந்த்ரனை ராஹுவானது க்ரஹிக்க வொண்ணுதென்று வென்று சந்த்ரனுக்கு அந்தவ்யஸநத்தைப்போக்கும திருமலை. பரமபதத்தில் தன்னுடைக்க த்வாதசவார்ஷிகரான நித்யஸூரிகளுக்கு சேஷியானவனிடம். "தீங்களை" என்று இவர்கள் ஊஞ்சலாடுகைக்குப் பிடித்துவிளையாடும் மூங்கிலாகவுமாம், எஉ

அரு.—எழுபத்திரண்டாம்பாட்டு.— "தீங்களை" என்றுபாடுமாய்,வளைக்கையாலே எறிந்து விளையாடுகிற களையென்றுதல். தீங்கழை-மூங்கிலென்றுதல் பிழை. எஉ

இடம்வலமேழ்பூண்டவிரவித்தேரோட்டி
வடமுகவேங்கடத்துமன்னும்—குடநயந்த்
கூத்தனைய்நின்றுன்குரைகழலேகூறுவதே
நாத்தன்னலுள்ளநலம். எகூ

அந்.—இடம் வலம் ஏழ் பூண்ட இரவி தேர் ஓட்டி (7) வடமுகம் வேங்கடத்து மன்னும் நயந்த குடம் கூத்தனைய் நின்றுன் (14) குரை கழல் கூறுவதே நாதன்னல் உள்ள நலம். (20)

அர்.—இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலுமாக ஏழுகுதிரைகள் கட்டியிருக்கிற ஸூர்யனுடைய தேரை (அந்தர்யாமியாயிருந்து) நடத்துமவனும், (எ) வடதிசையிலுள்ள திருமலையிலே பொருந்தியெழுந்தருளியிருக்குமவனும் விருப்பத்துடனே குடமெடுத்துக் கூத்தாடினவனும் எழுந்தருளியிருக்கிற ஸ்ரிய:பதியினுடைய (கச) ஆபரணத்வநிகளையுடைய திருவடிகளைச் சொல்வதே நாவிற்கு பெறத்தக்க பயன். (உ0) எகூ

வ்யா.—எழுபத்துமூன்றாம்பாட்டு.—(இடமித்யாதி) இடத்திலும் வலத்திலுமாக ஏழுகுதிரைபூண்ட ஆதித்யனுடைய தேரையோட்டி. ஏழ்பூண்ட ஆதித்ய ரதத்தை மஹாமேருவுக்கு வலமே இடமாக-மார்க்கமாக ஓட்டி என்றுமாம். இரவியினுடையதேரைபாரதஸமரத்திலே

நடத்தியென்றுமாம். (வடமுகவித்யாதி) வடக்கில்திக்கிலே புண்டான திருமலையிலே நித்யவாஸம்பண்ணுகிற. (குடயெத்தவித்யாதி) குடமாடிகின்றவனுடைய ஆபரணவொலியையுடைத்தான திருவடிகளைக்கூறுகை நாவால்படைக்கும் ஸாப்தத்து. குடக்கூத்தாடினை இஃப்பாறத் திருமலையிலே வந்து நின்றுன்போலே. எங்.

அரு.—எழுபத்துமூன்றும்பாட்டு.—வலமேஇடமாகமஹாமேருவைவலமாகவருகையே வழியாக. இடம்-வழி. பாரதத்திலும் ஆதித்யன் தேரைநடத்தின. குடயெத்த—குடக்கூத்தை விரும்பின. எங்.

நலமேவலிதுகொல் நஞ்சூட்டுவன்பேய்
நிலமேபுரண்டுபோய்வீழச்—சலமேதான்
வெங்கொங்கையுண்டானைமீட்டாய்ச்சியூட்டுவான்
தன்கொங்கைவாய்வைத்தாள்சார்ந்து. எசு.

அந்.—சலமேதான் நஞ்சு ஊட்டு வன் பேய் நிலமே புரண்டு போய் வீழ (8) வெம் கொங்கை உண்டானை ஆய்ச்சி சார்ந்து மீட்டு ஊட்டுவான் (15) தன் கொங்கை வாய் வைத்தாள். நலமே வலிது கொல். (21)

அர்.— கபடத்தினால் (தாய்வேஷங்கொண்டு) விஷத்தைப் பாநம்செய்விக்கைக்காகவந்த கொடியபூதனை பூமியில் புரண்டு விழும்படி (அ) (அவளுடைய) விஷபுக்தமான முலைப்பாலை யமுதுசெய்தக்ருஷ்ணனை யசோதாதேவி கிட்டவந்தெடுத்துப் பால்கொடுக்கைக்காகத் (கரு) தன்னுடைய ஸ்தநத்தைத் திருப்பவளத்தி லமர்த்தினாள். (இதுக்குக்காரணம்) ப்ரேமமே பெரிதாயிருந்தது. (உக) எசு.

வ்யா.—எழுபத்துகாலாம்பாட்டு.—(நலமேவலிதுகொல்) ஸ்த்ரீத்வப்ரயுக்தமான அச்சத்திற்காட்டில் ஸ்நேஹமேவலிதரகாதே. (சலமேதான்நஞ்சூட்டுவன்பேய்) தாய்வேஷத்தைக்கொண்டு நஞ்சூட்டுவதாக வந்தவலியபேயானது. (நிலமேபுரண்டுபோய்வீழ) நிலத்திலேபுரண்டு விழும்படிக்கீடாக. (வெங்கொங்கையுண்டானை) விஷமூலையுண்டதுக்குப் பரிஹாரமாக அம்ருதத்தையுடைத்தான தன்கொங்கையைக் கால்லடைத்து நன்று சென்று அவன்வாயிலேவைத்தாள். (நலமேவலிதுகொல்) அச்சமும் ஸ்நேஹமுங்கூடினால் ஸ்நேஹமேவலிதாகாதே. எசு.

அரு.— எழுபத்தாகாலாம்பாட்டு.— சலம்-ச(ஊ)லமாய், கபட மென்றபடி. சார்ந்து-கிட்டி. கால்கடைதந்து-சென்றுகிட்டி என்ற படி. எசு.

சார்ந்தகடுதேய்ப்பத்தடாவியகோட்டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும்வெண்மதியினெண்முயலைச்—சேர்ந்து
சினவேங்கைபார்க்குந்திருமலையே, ஆயன்
புனவேங்கைநாறும்பொருப்பு. எடு.

அக்.—தடாவிய கோடு உச்சிவாய் அகடு தேய்ப்ப சார்ந்து ஊர்ந்து இயங்கும் (8)வெண் மதியின் ஒண் முயலை வேங்கை சேர்ந்து சினம் பார்க்கும் திருமலையே (17) வேங்கை நாறும் ஆயன் புனம் பொருப்பு. (22)

அர்.—பரந்த சிகரத்தின் தூனியில் வயிறு தேயும்படி கிட்டி மெள்ளப் போகாநின்ற (அ) வெண்மையான சந்த்ரனிடத்திலிருக்கிற அழகிய முசலை வேங்கைப்புலி கிட்டி கோபித்துப் பார்க்கும் திரு வேங்கடமே (கள) வேங்கைப்பூவின் பரிமளம்வீசுகிற க்ருஷ்ணனு டைய வாஸஸ்தாநமான திருமலை. (உஉ) எடு.

வ்யா.—எழுபத்தைந்தாம்பாட்டு.—(சார்ந்தகடு) (தடாவியகோ ட்டுச்சிவாய் சார்ந்தகடுதேய்ப்ப) பரந்தகொடுமுடியிலே கிட்டிக்கீழ் வயிறுதேய்ப்ப. (ஊர்ந்தியங்கும்வெண்மதியினெண்முயலை) போக்ய தையாலே மெள்ள ஸஞ்சரியாநின்ற சிகரத்திலே தேய்கையாலே ஒளியையுடைத்தான சந்த்ரன்பக்கல் முயலை.(சேர்ந்தித்யாதி)கிட்டிச் சினத்தாலே புலிபடப்பார்க்குந்திருமலை; (ஆயனித்யாதி) இடையர்க் குக்காட்டில் மரங்களுடைய நாற்றம் சாலப்ரியமிறே. எடு.

பொருப்பிடையேநின்றும்புனல்குளித்தும், ஐந்து
நெருப்பிடையேநிற்கவும்நீர்வேண்டா-விருப்புடையஃ
வெஃகாவேசேர்ந்தாணைமெய்ம்மலர்தூய்க்கைதொழுதா
அஃகாவேதீவினைகளாய்ந்து. எசு.

அக்.—கீர் பொருப்பு இடையே நின்றும் புனல் குளித்தும் (6) ஐந்து நெருப்பு இடையே நிற்கவும் வேண்டா. (11) விருப்புடைய வெஃகாவே சேர்ந்தாணை மெய் மலர் தூய் கைதொழுதால் தீவினை கள் ஆய்ந்து அஃகாவே. (21)

மூன்றுந்திருவந்தாதி, எள-பா, ஆய்ந்தவருமறையோன். சுள

அர்.—(ஐங்களே!) நீங்கள் (தவம்செய்கைக்காக) மலை யிடையில் நிற்கவும் பொய்கைகளில் முழுகவும் (சு) பஞ் சாக்கி மத்தியில் நிற்கவும் வேண்டாம். (கக) ப்ரேமத்துடனே திருவெஃகாவில் பள்ளி கொண்டயதோக்தகாரிக்கு அங்யப்ரயோஜநமாகப் புஷ்பங்களை ஸமர்ப்பித்து அஞ்சலிபண்ணினால் பாபங்கள் (இவ்விடம்தனக்கிருக்கத் தகாதென்று) ஆலோசித்து(த்தாங்களே) விட்டுப்போகாவோ? (உக)

வ்யா.—அவ.—எழுபத்தாறும்பாட்டு.— (பொருப்பிடை) ஸர் வேச்வரன் ஸம்ஸாரத்திலே புகுந்து தன்னுடம்பைப்பிணித்தே நங் கார்யம் செய்யாநின்றான். நீங்களுடம்பையொறுக்க வேண்டாவென் கிறார்.

(பொருப்பித்யாதி) பனிகாள்மலைகளில், பொய்கைகளிலே புக் குக்குளித்து. (ஐந்தித்பாதி) கோடைகாள்பஞ்சாக்கி மத்யஸ்தனாய் நிற்கவும் வேண்டா. (விருப்பித்யாதி) விரும்பப்படுவதான திருவெஃ காவிலே சேர்ந்தவனே. (மெய்ம்மலரித்யாதி) அங்யப்ரயோஜநமாய் புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆய்ந்து-அதுலந்தித்துக்கைதொ ழுதால் அசேதநமான கொடியபாபங்கள் தான் தன்னையாச்ரயிக்க நிற்கவற்றோ? தீவினைகள்தானே ஆராய்ந்து நமக்கு நிலமன்றென்று போகாவோவென்றுமாம். "வ்ருஷ்விவ்ருகீக்ஷாஸ்ரூயாயை - வ்ருஷ்டிப்ர தீக்ஷாஸ்ரூயாயை" என்னும் ந்யாயத்தாலே "சும்மெனுதேகைவிட்டோ டித் தூறுகள்பாய்ந்தனவே" என்கிறபடியே. எசு.

அரு.—எழுபத்தாறும்பாட்டு.— சாலயாஃ - ஸ்ஸ்யங்களானவை கள் வர்ஷத்தைப்பார்க்குமாப்போலே பாபங்களு மிவனைவிட்டுப் போகைக்கு பகவத்ஸமாச்ரயணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும். அஃகாவே-கிட்டாவே. ஆய்ந்து-இரண்டிடத்திலுமக்வயம். எசு.

ஆய்ந்தவருமறையோன்நான்முகத்தோன்நன்குறங்கில்
வாய்ந்தகுழவியாய்வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போதுமூன்றேழென்றெண்ணினான், ஆர்ந்த
அடிப்போதுநங்கட்கரண். எள.

அந்.—ஆய்ந்த அரு மறையோன் நான்முகத்தோன் நல் குறங் கில் வாய்ந்த குழவியாய் (8) வாள் அரக்கன் ஏய்ந்த போது முடி மூன்றுஏழுஎன்று எண்ணினான் (15) ஆர்ந்த அடிப்போது நங்கட்கு அரண். (19)

அர்.—அர்த்தஸ்ரீசாரபுரஸ்ஸரமாகஎடுத்துப்பட்டும் பெறுதற்கரியது மான வேதங்களையுடைய சதுர்முகப்ரஹ்மாவினுடைய அழகிய மடியில் அமைந்துபள்ளிகொண்ட சிறுகுழந்தையாய்க்கொண்டு (அ) வாளாயுதத்தையுடைய ராவணஸேநாநுக்குடைய (அறுக்கைக்குத்) தகுதியான புஷ்பம்போன்ற தலைகளை "மூன்றவழு" என்று எண்ணினஸர் வேஸ்வரனுடைய (கரு) கல்யாணகுணபூர்ணமான திருவடித்தாமரையே நமக்கு ரக்ஷகம். (சகு) எஎ.

வ்யா.—அவ.— எழுபத்தேழாம்பாட்டு.— (ஆய்ந்தவருமறைத் யோன்) கீழ்ஸர்வேஸ்வரனை ஆஸ்ரயிக்கவே உங்கள் பாபங்களெல்லாம் போமென்றது. இதில் அளவுடையரான ப்ரஹ்மாதிகளுக்கு வழிகேடாகப்புக்கால் பரிஹரிப்பானவனென்கிறது.

(ஆய்ந்தவித்யாதி) ஸர்வேஸ்வரனாலே ஒதுவிக்கப்பட்டு வேதார்த்தங்களிரேபணம் பண்ணவல்ல ப்ரஹ்மாவினுடைய குறங்கிலே, ஸ்வாபாவிகமான சேஷித்வமில்லாமையாலே புதுக்கும்பிடைக்கண்டிமாந்து தங்களகர்த்தமறியாதே ராவணனுக்குத் தெடுத்தெல்லாம் கொடுக்கப்புக இவனாலே கோவுபட்டாலும் நமமுடைய பாடேயிறே இவர்கள் வந்து விழுவதென்றுபார்த்து. (வாய்ந்தகுழவியாய்) அழகியபிள்ளையாய். (வாளரக்கன்) ஸாயுதனான ராக்ஷஸனுடைய. (ஏய்ந்தவித்யாதி) ராக்ஷஸனுடைய தலைகளை. மௌக்த்யத்தாலே மூன்றேழென்றெண்ணினவனுடையஅபேக்ஷிதத்தைச் செய்யவற்றாய் போக்யமான திருவடிகள் நமக்குரக்ஷகம். எஎ.

அரு.—எழுபத்தேழாம்பாட்டு.— வழிகேடாக-துர்மார்க்கராக்ப்புக்கால், தப்புவரப்புக்காலென்றபடி. தெடுத்தெல்லாம் - அவனபேக்ஷித்ததெல்லாம். (ஆர்ந்தவடி) ஆநுகூல்-பூர்ணமாய், அவரவரபேக்ஷிதத்தைக் கொடுக்கவற்றாகை. எஎ.

அரணமக்கென்று மாழிவலவன்
முரணுள்வலம்சுழித்தமொய்ம்பன்—சரணமேல்
ஏதுகதியேதுநிலையேது பிறப்பென்னுதே
ஓதுகதிமாயனையே யோர்த்து. எஅ.

அந்.—ஆழி வலவன் முரண் ஸள் வலம் சுழித்த மொய்ம்பன் சரணமேல் (8) கதி ஏது, நிலை ஏது, பிறப்பு ஏது, என்னுதே நமக்கு ஹனுமத் அரணம். (18 சு) மாயனையே ஓர்த்து ஓது. (22)

அர்.— திருவாழியை வலதுதிருக்கையிலேந்தினவனுய் மூரா ஸுரனுடைய வயஸ்ஸினுல் (சிரஜீவித்வத்தால்) வந்த பலத்தைப் போக்கின பலிஷ்டனுனஸ்ரியஃபதி ரக்ஷகனுமிடத்தில் (அ) ஜ்ஞாந மெது, அநுஷ்டான மெது, ஜந்ம மெது, என்றுலோசியாதே நமக் கெப்போதும் ரக்ஷகனுகும். (கஅ) (ஆகையால்) (மனமே!) சரண்ய னுய் ஆஸ்சர்யபூதனுனவனையே த்யாநித்துச் சொல்லு. (உஉ) எஅ.

வ்யா.—அவ.—எழுபத்தெட்டாம்பாட்டு.— (அரணும்) அவன் ஸர்வரக்ஷகனுகிலும் நம்முடைய ஜ்ஞாநவ்ருத்த ஜந்மங்களினுடைய கொற்றைபார்க்கவேண்டாவோவென்ன; வேண்டாவென்கிறது.

(அரணுமித்யாதி) ஸர்வசக்தி நமக்குரக்ஷயாம். வலவருகே திருவாழிபிடிக்குமவன் போலேகாணும் ரக்ஷகனுவான். தன்னைப்புர ஸ்கரித்திறே, "ஸோऽஸ்நுதே—மாந்ஸ:" என்றது. இவனுடைய அஹம் புத்தி சோகநிமித்தம்; அவனுடைய அஹம்புத்தி சோகநிவர்த்தகம். (முரஞ்ஸ்வலஞ்சுழிந்த மொய்ம்பன்) விரோதியைப்போக்கி ரக்ஷிக்க வல்லனென்னுமிடத்தையுபபாதிக்கிறது. முரனுடைய ஆயுஸ்ஸா கிற மிடுக்கை முடிக்கவல்ல மிடுக்கன். (சரணமேலித்யாதி) அவன் ரக்ஷகனுமிடத்தில் ஜ்ஞாநமேது, வ்ருத்தமேது, ஜந்மமேது; என்று ராயாதே. (ஆழிவலவனரணும்) ஆஸ்ரயணீயனும் "ஸகோஹம் வரூஹமேஷ— நஸேஅதி ஷ்டாஹ்நிரயி:" ஸமோஹமஸர்வ பூதேஷு— நமேத்வேஷ்யோஸ்தி நப்ரிய:" "யேவிஷ்ணு:வாவ யோநய:-யேபிஸ்யு:பாபயோநய:" எத்தனை கலந்தானிலாத சண் டாள சண்டாளர்களாகிலும்". (ஓதுகதிமாயனையே யோர்த்து) சர ண்யனுய் ஆஸ்சர்யபூதனுனவனை அநுஸந்தித்து அவன் திருநாமங்க ளைச் சொல்லு. எஅ.

அரு.— எழுபத்தெட்டாம்பாட்டு.— சக்தியைக் காட்டியே ரக்ஷிப்பதோவென்ன, அருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி). ஈஸ்வர னிவனுடைய ஜ்ஞாநவ்ருத்தங்கள் ஆராயாதேரக்ஷகனுமென்னு மதுக்குப்ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஸமோஹமித்யாதி). கதி - சரண்யன். எஅ.

ஓர்த்தமனத்தரா யைந்தடக்கியாராய்ந்து
பேர்த்தால்பிறப்பேழும்பேர்க்கலாம்—கார்த்த
விரையார்நறுந்துழாய் வீங்கோதமேனி
நிரையாரமார்பனையே நின்று. எகூ

அக்.—கார்த்த விரை ஆர் நறு துழாய் வீங்கு ஒதம் மேனி (8) நிரை ஆரம் மார்பனையே நின்று ஒர்த்த மனத்தராய் (14) ஐந்து அடக்கி ஆராய்ந்து போர்த்தால் ஏழ் பிறப்பும் போக்கலாம். (21)

அர்.—பசுமையாய் ஸௌந்தர்ய பூர்ணமாய் பரிமளயுக்தமான திருத்துழாயையுடையனுய் பொங்குகிற கடல்போன்ற திருமேனியுடையனுய் (அ) ஒழுங்கான ஹாரத்தையுடைய திருமார்பையுடைய னனஸர்வேஸ்வரனையே ஸ்திரமாயிருந்து த்யாநித்த மனமுடையவர் களாய்க்கொண்டு (கச) பஞ்சேந்த்ரியங்களை நிக்ரஹித்து (விஷயங்களின்தோஷத்தை) ஆலோசித்து (அதில்நின்றும்மநஸ்ஸைத்) திருப்பினுல் மேல்வரப்போகிற ஜந்மங்களையெல்லாம் போக்கலாம்.(உக)எகூ.

வ்யா.—அவ.—எழுபத்தொன்பதாம்பாட்டு.— (ஓர்த்தமனத்தராய்) அநாதிகாலம்பண்ணின பாபத்தைப்போக்கும் போது அநந்தகாலம் வேண்டாவோ வென்னில்; அவனையநுஸந்தித்து சப்தாதிகளிலே அநாதரம்பிறக்கச் சடக்கெனப்போக்கலாமென்கிறது.

(கார்த்தவித்யாதி) அழகியதிருத்துழாய் மாலையையுடையவனுமாய், தேங்கினகடல் போலேயிருக்கும் திருமேனியையுடையவனுமாய், சப்தாதிகளை காக்குவனைக்கலாம்படி ஆபரணவழகையுடையவனை. (நின்று ஓர்த்தமனத்தராயித்யாதி) நின்று அநுஸந்தித்த மநஸ்ஸையுடையரராய் இந்த்ரியங்களை விஷயங்களில் போகாதபடியடக்கி, அவைபொல்லாதென் நுராய்ந்து ஸம்ஸாரத்தைப் போக்கப்புக்கால் போக்கலாம். ஏழ்பிறப்பென்றது உபலக்ஷணம்; ஜந்மமடங்கப் போக்கலாமென்றபடி.. எகூ.

நின்றெதிராயநிரைமணித் தேர்வாணன்தோள்
ஒன்றியவீரைஞ்ஞூறுடன்துணிய—வென்றிலங்கும்
ஆர்படுவான்நேமியரவணையான் சேவடிக்கே
நேர்படுவான்தான்முயலும் நெஞ்சு. அ0.

அக்.—நின்று நிரை மணி தேர் எதிராய (5) வாணன் தோள் ஒன்றிய ஈரைஞ்ஞூறு உடன் துணிய வென்று (12) இலங்கும் ஆர்படுவான் நேமி அரவணையான் சே அடிக்கே நேர்படுவான் நெஞ்சு தான் முயலும். (22)

அர்.—(ஸர்வேஸ்வரனென்றறியாமல்) இருந்து அழகிய மணிகளிழைத்த தேரின்மேலேறி எதிராகவந்த (நு) பாணஸுரனுடைய

தோளில் சேர்ந்திருக்கிற ஆயிரம்கைகளை உடனே அறும்படி (வெட்டி) ஜயித்த (கஉ) ப்ரகாசியாநின்ற கூர்மையான திருவாழியையுடையனும் திருவந்தாழ்வானைப்படுக்கையாகவுடையவனுமான ஸர்வேஸ்வரனுடைய சிவந்த திருவடியை யடைகைக்காக மநஸ்ஸை தானே ப்ரயத்நம்செய்யும்.. (உஉ) அ0.

வ்யா.—அவ.— எண்பதாம்பாட்டு.— (நின்றெதிராய) நம்மால் இத்த்ரியஜயம்பண்ணி அவனை யநுஸந்தித்து ஸம்ஸாரஸம்பந்த மறுக்கப்போகாது; அவன் ப்ரதிபந்தகத்தைப்போக்க அவனையநுஸந்திக்க வாசைப்படாநின்றது நெஞ்சென்கிறார்.

(நின்றெதிராயவித்யாதி) தாமஸதேவதையை ஆஸ்ரயிக்கையாலே ஸர்வேஸ்வரனென்றறியாதே எதிரிட்டுத் தேரையுடையனை பாணனுடையதோளோடே தோளொன்றியவல்லாத ஆயிரந்தோளும் துணியும்படிக் கோக வென்று. ஒளியையும் கூர்மையையு முடைய திருவாழியையுடைய அநந்தசாயியுடைய திருவடிகளிலே யணைய நெஞ்சானது தானே ப்ரவர்த்தியாநின்றது. அ0.

அரு.—எண்பதாம்பாட்டு.— ஆர்படுகை - கூர்ம்மையுண்டாகை. ஆர்-கூரிசு. வான் பெருமை. கோப்படுவான்-கோப்படுகைக்காக; அணைய வென்றபடி. அ0.

நெஞ்சால் நினைப்பரியனேலும், நிலைப்பெற்றென்
நெஞ்சமேபேசாய், நினைக்குங்கால்—நெஞ்சத்துப்
போராதுநிற்கும்பெருமானை யென்கொலோ
ஓராதுநிற்பதுணர்வு. அக.

அர்.—நெஞ்சால் நினைப்பரியனேலும் என் நெஞ்சமே! நிலைபெற்று பேசாய். (6) நினைக்குங்கால் நெஞ்சத்து போராது நிற்கும் பெருமானை உணர்வு ஓராது நிற்பது என்கொலோ? (15)

அர்.—மநஸ்ஸினால் நினைக்கதர்லபனுகிலும் எனது மனமே! ஸ்திரமாயிருந்து (அவனைச்) சொல்லப்பாராய். (சு) (ஒருகால்) நினைக்கில் மனதை விட்டுப்போகாமல் ஸ்திரமாய்வாஸம்செய்யும் ஸர்வேஸ்வரனை அறிவு நினையா திருப்பது எந்தக்காரணத்தினாலிருக்கலாம்? (கஙி) அக.

வ்யா.—அவ.—எண்பத்தோராம்பாட்டு.—(நெஞ்சால்) தீர்ஸம் ஸாரிகளுக்கில்லாதது நமக்குண்டானவாறே நெஞ்சு பகவத்விஷயத்

திலே மண்டிற்றென்று கொண்டாடினீர். விஷயத்தைப்பார்த்த வாறே அடியிட்டிலராயிருந்தாரென்கிறது.

(நெஞ்சாலித்யாதி) நெஞ்சமே உன்னால் நினைக்கப்போகாதாகிலும். (நிலைப்பெற்றென்னெஞ்சமேபேசாய்) ஐஸ்வர்யங்கண்டு பித்தாவியாதே அநுபவியாய். (நினைக்குங்காலித்யாதி) ஒருகால் நினைக்கில் நாக்குண்டாகாவெழாவென்று நெஞ்சுவிட்டுப் போகவறியாத ஸர்வேஸ்வரனை. "கண்ணுள்ளேநிற்குங்காதன்மையாற்றொழில்" என்கிறபடியே. (என்கொலோவித்யாதி) அவனை நினையாதே மணலைமுக்கப்பார்க்கிறதோ? அவனை நினையாதே தாணுண்டாம்படி எங்ஙனே. "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு". அக.

அரு.—எண்பத்தோராம்பாட்டு.— உணர்வானது ஓராதுநிற்பதென்கொலோ-ஸத்தையுண்டாம்படிநிற்பது; எங்ஙனே யென்றபடி.

உணரிலுணர்வரியனுள்ளம்புகுந்து
புணரிலுங்காண்பரியனுண்மை—இணரணைய
கொங்கணைந்துவண்டறையுந் தண்டுழாய்க்கோமானை
எங்கணைந்துகாண்டுமினி. அஉ.

அந்.—உணரில் உணர்வரியன். உள்ளம் புகுந்து புணரிலும் உண்மை காண்பரியன். (7) இனி இணர் அணைய வண்டு கொங்கு அணைந்து அறையும் தண் துழாய் கோமானை (17) எங்கு அணைந்து காண்டும். (20)

அர்.— (தானை) அறியப்பார்க்கில் அறிகைக்கரியன். ஹ்ருதயத்தில் ப்ரவேசித்துச் சேர்ந்திருந்தாலும் உள்ளபடியறிகைக் கரியன். (எ) இப்போது, பூங்கொத்துத் தாழும்படி வண்டுகள் தேனில் சேர்ந்து பாடாநின்ற குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடைய ஸ்வாமியை (கை) எங்கே போய்க் காண்போம்.(உ)அஉ.

வ்யா.— எண்பத்திரண்டாம்பாட்டு — (உணரிலுணர்வரியன்) கண்ணுமறியப்போகாது; இவனுமறியப்போகாது. "தனக்குந்தன்தன்மையறிவரியரீனை" ஸ்வயத்நத்தால் காண்பார்க்குக் காணப்போகாது. (உள்ளமித்யர்தி) தானேவந்து ஹ்ருதயத்திலே புகுர்ந்தானேயாகிலும் அவனுடைய உண்மையறியப்போகாது. (இணரணைய வித்யாதி) காணவரியனென்று கைவாங்கப்போகாதென்கிறது. பூங்கொத்துக்கள் தாழும்படிக்கீடாக மதுவைவ்பாரம்பண்ணின

மூன்றாந்திருவந்தாதி, அந-பா, இனியவன். அச-பா, உளனுய. எங

வண்டுகள் சப்தியாநின்ற திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேஸ்வரனேயெங்கேகிட்டிக்காண்போமினி. அஉ.

அந.—எண்பத்திரண்டாம்பாட்டு.—புணரிலுமென்னும்பாடம்; உள்ளத்தேபுகுந்தபின்பும், உணரிலுமென்னும்பாடம். இணர்-பூங் கொத்து. கொங்கு-தேன். அணைய-தாழ.

இனியவன்மாயனெனவுரைப்பரேலும்
இனியவன்காண்பரியனேலும்—இனியவன்
கள்ளத்தால் மண்கொண்டுவிண்கடந்தபைங்கழலான்
உள்ளத்தினுள்ளே யுளன். அங.

அந்.—இனி அவன் மாயன் என உரைப்பரேலும் இனி அவன் காண்பரியனேலும் (8) கள்ளத்தால் மண் கொண்டு விண் கடந்த பை கழலான் இனியவன் உள்ளத்தின் உள்ளே உளன். (19)

அர்.—இப்போது அந்தஸர்வேஸ்வரன் (காணவரிய) மாயாவி என்று சொன்னர்களேயாகிலும் இப்போது அந்த ஸ்ரியஃபதி ஸாக்ஷாத்கரிக்கதுர்லபனுகிலும் (அ) வஞ்சனையினல் பூமியை ஸ்வாதீநப்படுத்திக்கொண்டு ஆகாசத்தையு மளந்த அழகிய திருவடியையுடைய போக்ய பூதனை அந்த ஸர்வேஸ்வரன் ஹ்ருதயத்திற் குள்ளே வாஸம்செய்கிறன். (கக) அங.

வ்யா.— எண்பத்து மூன்றும்பாட்டு.—(இனியவனித்யாதி) வர்த்தமான தசையில் ப்ரக்ருதியிலே ஸம்பந்தித்து "ஜஜோயாஹுரஹுயா மமமாயாதுரத்யயா" என்னும்படி காணவரியனுலும் (இனியித்யாதி) நெஞ்சுக்கினியனுமாய்த் தன்னுடைமையை மஹாப்ரளயக்கலிலே வஞ்சித்தாளைக்கொண்டளந்தவன் ஹ்ருதயத்திலே நின்று மறக்க வொட்டான். அங.

அந — எண்பத்துமூன்றும்பாட்டு.— (இனியித்யாதி) மாயன்-சேதகரைப் ப்ரக்ருதியிலே யிடமவனென்றுமும், ஒருவர்க்குங்காணப்போகாதவனென்றுமும் மாவலிக்குக்காட்டிஞற்போலேதானே காட்டக்கண்டவனுக்கு ஸுலபனென்றபடி. அங.

உளனுயநான்மறையினுட்பொருளே, உள்ளத்
துளனுகத்தேர்ந்துணர்வேலும்—உளனுய
வண்டாமரைநெடுங்கண்மாயவனேயாவரே
கண்டாருகப்பர்கவி. அச.

அந்.—நால் மறையின் உள் பொருள் உளனுயனே (5) உள்ளத்து உளனுகதேர்ந்து உணர்வரேலும் (9) வண் தாமரை நெடும் கண் மாயவன் உளனுயனே கவி உகப்பர் கண்டார் யாவர். (19)

அர்—நால்வகையான வேதங்களி னுட்பொருளாக உள்ளவனே (நி) ஹ்ருதயத்தி லிருக்கிறவனுக ஆராய்ந்து அறிந்தார்களேயாகிலும் (கூ) அழகிய தாமரைபோல் நீண்ட திருக்கண்களையுடையனுய் ஆஸ்சர்யபூதனு யுள்ளவனனைக் கவிபாடுகைக் காசைப்படுவாரல்லது ஸாக்ஷாத்கரிப்பவர் எவர். (கசு) அச.

வ்யா.—எண்பத்துநாலாம்பாட்டு.—(உளனித்யாதி) நிர்த்தோஷ ப்ரமாணஸித்தனுகையாலே தானுளனுய் வேதத்தாலே ப்ரதிபாதிக்கப் பட்டவனே. (உள்ளத்தித்யாதி) கர்மயோகத்தாலே ஜ்ஞாநயோகம் கைவந்து ஜ்ஞாநயோகத்தாலே காணவாசைப்பட்டாரேயாகிலும். (உளனுயவித்யாதி) "யஸ்யாகூவ ராவம்வ ாணுரீ கூடேவகூஷிணீ-யதா கப்யாஸம்புண்டரீகமேவமகூஷிணீ" என்று ஸ்ருதிப்ரஸித்தமான கண் ணழகையுடைய ஸர்வேஸ்வரனே ஆர்காணவல்லார். (உகப்பர்கவி) பின்னைக்காணும்படி எங்ஙனேயென்னில் அவனுடைய ஸ்தோத்ரத் தையுகக்குமத்தனே. அச.

கவியினர்கைபுனைந்துகண்ணீர்கழல்போய்ச்
செவியினர்கேள்வியராய்ச்சேர்ந்தார்—புவியினர்
போற்றியுரைக்கப்பொலியுமேபின்னைக்காய்
ஏற்றுயிரையட்டானெழில். அநு.

அந்.—கவியினர் கை புனைந்து கண் ஆர் கழல் போய் (7) செவியின் ஆர் கேள்வியராய் சேர்ந்தார் புவியினர் (12) பின்னைக் காய் ஏற்று உயிரை அட்டான் எழில் போற்றி உரைக்க பொலி யுமே? (20)

அர்.— ஸ்தோத்ரம்செய்கிறவர்களாய்க்கொண்டு கைகளைக் கூப்பிக் கண்களை யழகிய திருவடிகளிலே போம்படிசெய்து (எ) காதில் நிறைந்த (தத்தியருண) ஸ்ரவணத்தையுடையரா யடைந்த பூலோகத் தார் (கஉ) கப்பின்னைப்பிராட்டிக்காக எருதி னுயிரைப் போக்கின ஸர்வேஸ்வரனுடைய ஸௌந்தர்யத்தை ஸ்துதித்துச் சொல்லில் ஸம் ருத்தமாகுமோ? (அதைப்பூர்ணமாகச் சொல்லப்போமோ)? உ.அநு.

வ்யா.— அவ.— எண்பத்தைந்தாம்பாட்டு,— (கவியினுர்) ஒரு த்தராலறியப்போகாதாகில் "வாழ்த்துவார்பலராக" என்னும்படியே பூமியிலுள்ளாரெல்லாருங் கூடினாலும் அறியவும் ஏத்தவும் போமோ வென்னில், ஒண்ணுதென்கிறது.

(கவியினுர்கைபுனைத்து) ஸ்தோத்ரத்தாலே அபிமாநசூந்யராய்த்தொழுது. (கண்ணுர்கழல்போய்) கண்விலக்ஷணமான திருவடிகளை யடைந்து. (செவியினுரித்யாதி) செவிகிறைந்த கேள்வியையுடையரா ய்ச்சேர்ந்தாரான பூமியிலுள்ளாரெல்லாம். (போற்றியுரைக்கப்பொலி யுமே) எல்லாருங்கூடப்போற்றியுரையாகின்றால் அங்குத்தைக்கேதே னும் அதிசயத்தைப்பண்ணப்போமோ? (பின்னைக்காயித்யாதி) நப்பி ன்னைப் பிராட்டி கலவிக்கு ப்ரதிபந்தகமான வ்ருஷபங்களையடர்த்த வொருசெயலையும் வடிவழகையும் முடியச்சொல்லப்போமோ. அரு.

அரு.— எண்பத்தைந்தாம்பாட்டு.— பொலியுமே - இவர்களா லே ஏத்தி அதிசயத்தை யுண்டாக்கப்போமோ? ஏத்தி முடியாதென்றபடி. அரு.

எழில்கொண்டுமின்னுக்கொடியெடுத்து, வேகத்
தொழில்கொண்டுதான்முழங்கித்தோன்றும் — எழில்
நீர்மேகமன்னநெடுமால்நிறம்போலக் [கொண்ட
கார்வானங்காட்டுங்கலந்து. அசு.

அந்.— எழில்கொண்டு மின் கொடி எடுத்து வேகம் தொழில் கொண்டு (6) தான் முழங்கி தோன்றும் கார் வானம் (11) எழில் கொண்ட நீர் மேகமன்ன நெடுமால் நிறம்போல கலந்து காட்டும். (18)

அர்.— அழகை யுடையதாய் மின்னலே த்வஜமாக வெடுத்து அதிவேகமான கமநவ்யாபாரத்தை யுடைத்தாய்க்கொண்டு. (சு) தானே கர்ஜநம்செய்துகொண்டுவிளங்காநின்ற மழைக்காலத்து மேகமானது (கக) அழகுபடைத்த ஜலபாரம்செய்திருக்கிற மேகம்போன்ற ஸர்வேஸ்வரனுடைய ஸௌந்தர்யத்தைப்போல் ஒத்துக் காட்டாநிற்கும். (கஅ) அசு.

வ்யா.— அவ.—எண்பத்தாறும்பாட்டு.— (எழில்) ஸ்வரூபரூபங்கள் பரிச்சேதிக்கப்போகாது ; உபமாகத்திலே சிறிதுசொல்லலாமித்தனையென்கிறது.

(எழிலித்யாதி) எழிலையுடைத்தான மின்னைக்கொடியாகவெடுத்து. (வேகத்தெழிலித்யாதி) வேகத்தையுடைத்தான கொழிலைக் கொண்டுதானே முழங்கித் தோன்றுகின்றகார்வானம்.(எழிலித்யாதி) ஆகளமாக நீரைப்பானமபண்ணின காளமேகம்போலே யிருந்துள்ள ஸர்வேஸ்வரனுடைய நிறம்போலே.(காரித்யாதி)கார்காலத்திலே மேகமானது கலந்து காட்டும். அசு.

அரு.— எண்பத்தாறும்பாட்டு.— ஆகளம் - ஆகண்டம்-கழுத்து மட்டாக வென்றபடி. கலந்துகாட்டும் — ஒத்துக்காட்டுமென்றபடி.

கலந்துமணியிமைக்குங்கண்ணு, நின்மேனி
மலர்ந்துமரதகமேகாட்டும்—நலந்திகழும்
கொந்தின்வாய்வண்டறையும் தண்டுழாய்க்கோமானே
அந்திவான்காட்டுமது. அள.

அர்.—கண்ணு! மணி கலந்து இமைக்கும் நின் மேனி மரதகம் மலர்ந்து காட்டும்.(9)நலம திகழும் கொந்தின்வாய் வண்டு அறையும் தண் துழாய் கோமானே அது அந்தி வான் காட்டும். (21)

அர்.—கண்ணனே! கௌஸ்துபமணியோடு சேர்ந்து ப்ரகாசியா நின்றுள்ள உன்னுடைய திருமேனியை மரதகமணி சுற்றும் பரவா நின்றகாந்தியையுடையதாய்கொண்டு தர்சிப்பிக்கும். (சு) ஸௌந் தர்யத்தினால் விளங்காநின்ற பூங்கொத்தி லிருந்து வண்டுகள் சப்தியாநின்ற குளிர்ந்த திருத்துழாய்மாலையையுடைய ஸ்வாமியை அந்த ஸந்த்யாகாலத்தி லுண்டானமேகமானது தர்சிப்பியாநிற்கும்.(உக)அள

வ்பா,— அவ.—எண்பத்தேழாம்பாட்டு.—(கலந்து) பின்னையுமுபமானத்திலே பார்க்கிறார்.

(கலந்தித்யாதி) ஸ்ரீகௌஸ்துபத்தோடேகலந்து ப்ரகாசியா நின்ற உன்னுடைய திருமேனியை, ப்ரகாசியாநின்ற ஸ்ரமஹரமான மரதகமே காட்டாநின்றது. (கலந்திகழுமித்யாதி)அழகுதிகழாநின்ற கொத்திலே வண்டறையாநின்ற திருத்துழாயையுடைய ஸர்வேஸ்வரனே ஸந்த்யாராகத்தாலே சிவந்தமேகங்காட்டாநின்றது. அள.

அரு.— எண்பத்தேழாம்பாட்டு — கண்ணு - கண்ணனே; கலந்து மணியிமைக்கும-மணியோடேகலந்து,மணியோடே கூட. இமைக்கும்-ப்ரகாசிக்கும. அள.

மூன்றுக்திருவந்காதி, அஅ-பா, அதுகன்று. அகூ-பா, முடிந்க. எஎ

அதுநன்றிதுதீதென்றையப்படாதே
மதுநின்றதண்டுழாய்மார்பன்—பொதுநின்ற
பொன்னங்கழலேதொழுமின், முழுவினைகள்
முன்னங்கழலும் முடிந்து. அஅ.

அந்.—அது கன் று இது தீது என் று ஐயப்படாதே (6) மது நின்ற தண் துழாய்மார்பன் (11) பொது நின்ற பொன் அம் கழல் தொழுமின் (17) முழுவினைகள் முன்னம் முடிந்து கழலும். (21)

அர்.—அந்தபகவத்விஷயம் நல்லது, இந்தஸம்ஸாரம் தீயது, என்று (என்ற அம்சத்தில்) ஸம்சயியாமல் (ஸ) தேன் நிறைந்த குளிர்ந்த திருத்துழாய்மாலையைத்திருமார்பிலுடைய ஸ்ரியஃபதியினுடைய (கக) (ஸமஸ்த ஜந்துக்களுக்கும் (ஆஸ்ரயிக்க) ஸாதாரணமாயிருக்கிற பொன்போலழகிய திருவடியை யாஸ்ரயியுங்கோள். (கள) ஸமஸ்தபாபங்களும் ஆஸ்ரயிப்பதற்கு முன்னமே (ஆஸ்ரயிக்கவொருப்பட்டபோதே) நசித்து (உங்களைவிட்டு) நீங்கும். (உக) அஅ.

வ்யா.—அவ.—எண்பத்தெட்டாம்பாட்டு.— (அதுகன்று) அதுகன்றிதுதீதென்று ஸம்சயியாதே ஸர்வேஸ்வரனையாஸ்ரயியுங்கோள்; உங்களுடைய ப்ரதிபந்தகங்கள் வேரோடருவ்யக்திக்காகாதபடி போமென்கிறார்.

(அதுகன்றித்யாதி) பகவத் ப்ராவண்யம் கன்று, விஷயப்ராவண்யம் பொல்லாதென்று ஸம்சயப்படாதே. (மதுநின்றவித்யாதி) ஸம்சயிக்கவொண்ணாதபடி ஆகிராஜ்யஸுகமானதிருத்துழாயையுடையவனுடைய திருவடிகளை ஆஸ்ரயியுங்கோள். (முழுவினையித்யாதி) நீங்கள் பண்ணின பாபம் வ்யக்த்யந்தரத்துக்கு ஆகாதபடி நசிக்கும். அஅ.

அரு.— எண்பத்தெட்டாம்பாட்டு.— ஸம்சயப்படாதே - பொல்லாதது பொல்லாததே கல்லது கல்லதே; இதில்சம்சயமில்லை என்றபடி. முடிந்துகழலும். அஅ.

முடிந்தபொழுதில்குறவாணர், ஏனம்
படிந்துழுசால்பைத்தினைகள்வித்தத்—தடிந்திதழுந்த
வேய்ங்கழைபோய்விண்திறக்கும்வேங்கடமே, மேலொ
ருநாள் தீங்குழல்வாய்வைத்தான்சிலம்பு. அகூ.

அந்.—முடிந்தபொழுதில் குறவாணர் ஏனம் படிந்து உழு சால் பை தினைகள் வித்த (9) தடிந்து எழுந்த வேய் கழை போய் விண் திறக்கும் வேங்கடமே (17) மேலொருநாள் தீ குழல் வாய்வைத் தான் சிலம்பு. (உஉ)

அர்.— கிழத்தனத்திலுள்ள குறவர்கள், பன்றி யூன்றி யுழுத சாலிலே ஸ்லாக்யமான தினைகளை விரைக்க, (அ) (அச்சாலில்) வெட்டுண்டு (பின்னும்) மூளைத்த மூங்கிலின் தூனி உயர்ந்து ஆகா சத்தைப் பிளவாகின்ற திருமலையே (கஎ) பூர்வகாலத்தில் ஸுந்தர மான வேணுவைத் திருப்பவளத்திலமைத்த க்ருஷ்ணனுடைய பர் வதம். (உஉ) அகூ.

வ்யா.— அவ.— எண்பத்தொன்பதாம்பாட்டு.— (முடிந்த) திரு மலையில் குறவரோடு திருவேங்கடமுடையானோடு வாசியற எல்லா முத்தேஸ்யமாயிருக்கிறபடி.

(முடிந்தவித்யாதி) சரமாவஸ்த்தையிலே வர்த்திக்கிற குறவர்க்கு நிர்வாஹகர். (ஏனமித்யாதி) தங்களுக்கு பலமின்றிக்கே பன்றியுழு தசாலிலே அழகியதினைகளை வித்த. (தடிந்தித்யாதி) தினைவிரைக் கைக்காக வெட்டியெழுந்த வேய்ங்கழைபோய் விண்ணைத்திறக்கும் திருமலை. (மேலித்யாதி) பண்டொருநாள் இனியகுழலை வாயிலேவை த்துத் திருவாய்ப்பாடியிலுள்ளாரை வசீகரித்தாற்போலே யொரு மலையிலேநின்று ஸம்ஸாரிகளை வசீகரிக்க நிற்குமவன் சிலம்பு. அகூ.

அரு — எண்பத்தொன்பதாம்பாட்டு.— முடிந்தகாலம் - வ்ருத் தாப்யமாய், அத்தால் சரமாவஸ்த்தை யென்கிறது. மூங்கில் - அலர் ந்து வெட்டிப்போகட்டது நிலப்பண்பாலே கிழங்கு குருத்திட்டு கழைதூனி ஆகாசத்தைக்கிட்டக்கிளருமென்றபடி. சிலம்பு - மலைக் கும்பேர். அகூ.

சிலம்பும் செறிகழலும் சென்றிசைப்ப, விண்ணு
றலம்பியசேவடிபோய், அண்டம்—புலம்பியதோள்
எண்டிசையும்சூழ விடம் போதாதென்கொலோ
வண்டுழாய் மாலளந்தமண். கூம்.

அந்.— சிலம்பும் செறி கழலும் விண் ஆறு அலம்பிய சே அடி போய் (9) அண்டம் சென்று இசைப்ப அண்டம் புலம்பிய தோள்

(15) எண்திசையும் சூழ வண் துழாய் மால் அளந்த மண் இடம்போ
தாது. என்கொலோ? (24)

அர்.— கால் சலங்கையையும் பொருந்தச் சாத்தின வீரத்தண்
டையையுமுடையதாய் ஆகாசகங்கையினால் விளக்கப்பட்ட அழகிய
திருவடி வளர்ந்து (கூ) அண்டபித்திவரையில் சென்று சப்திக்க, (அப்
போது) அண்டத்திலுள்ள தேவர்கள் ஸ்தோத்ரஞ் செய்யாநின்ற
திருத்தோள் (கடி) எட்டுத்திக்குகளையும் வ்யாபிக்க, ஸுந்தரமான
திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேஸ்வர னளந்த பூமியானது
(அளக்கைக்கு) இடம்போராமலிருந்தது. (உச) கூ0.

வ்யா.— அவ.— தொண்ணூறும்பாட்டு.— (சிலம்பும்) திரு
மலையில் மூங்கில்களகப்பட உத்தேஸ்யமானவிடத்தில் அதில் நின்ற
வன் உத்தேஸ்யமாகச் சொல்லவேண்டாவிறே என்கிறார்.

(சிலம்பித்யாதி) சிலம்பையும் செறிகழலையுமுடைத்தாய் கங்
கையிலே விளக்கின திருவடிபோய் அண்டம் சென்றிசைப்ப. (புல
ம்பியதோள்) "ஹஹைவஹ-ஸுரணாடி-ஸங்கைஸ்ஸுராணம்" என்று
தேவர்களாலே திரள் திரளாகநின் றேத்தப்பட்டதோள். எட்டுத்திக்
கும்சூழ விடம்போராது. (என்கொலோவித்யாதி) அளக்குமவன்
அளக்கப்படுமத்தை உண்டாக்கிக்கொண்டன்றோ அளப்பது. கூ0.

அரு.—தொண்ணூறும்பாட்டு.— "திருவடி அண்டம் சென்றி
சைப்ப" என்றுகீழும் "அண்டம்புலம்பியதோள்" என்றுமேலும் அ
ண்டசப்தம்கூட்டுவது; அப்போது அண்டத்திலுள்ளார் ஸ்தோத்ரம்
பண்ணப்பட்டதோளென்றபடி. (அளப்பது) இடம்போராததத்தை எப்
படி அளந்தானென்றபடி. கூ0.

மண்ணுண்டு பேய்ச்சிமுலையுண்டும், ஆற்றுதாய்
வெண்ணெய்விழுங்கவெகுண்டு, ஆய்ச்சி—கண்ணிக்
கயிற்றினல்கட்டத்தான் கட்டுண்டிருந்தான்
வயிற்றினோடாற்றுமகன். கூக.

அ.—வயிற்றினோடு ஆற்று மகன் மண் உண்டும் பேய்ச்சி
முலை உண்டும் (8) ஆற்றுதாய் வெண்ணெய் விழுங்க ஆய்ச்சி வெகு
ண்டு கண்ணி கயிற்றினல் கட்ட தான் கட்டுண்டு இருந்தான்(19)

அர்.—வயிற்றைக்கொண்டு ஆபியிருக்கமாட்டாத பிள்ளையாகி
ய க்ருஷ்ணன் மண்ணை யமுதுசெய்தும் பூதனையின் முலைப்பாலை ய

முதுசெய்துடி (கூ) த்ருப்தியில்லாதவனுய்க்கொண்டு வெண்ணெய்யை யழுதுசெய்ய அதற்கு யசோதாதேவி கோபித்து முடிகளையுடைய கயிற்றினல்கட்டினபோது தான் பந்தப்பட்டிருந்தான்.(ககூ). கூக.

வ்யா.—அவ.— தொண்ணூற்றோராம்பாட்டு.— (மண்ணுண்டு) ஸாமாந்யேந ஜகத்தை உண்டும் ப்ரதிகூலருடைய ப்ராணனையும் அநுகூலர் ஸ்பர்சித்த த்ரவ்யத்தையுண்டும் பர்யாப்தமாயிற்றில்லை யென்கிறது.

(மண்ணுண்டு பேய்ச்சிமுலையுண்டு மாற்றுதாய்) ஜகத்தை வயிற்றிலேவைத்தும், பூதனையுடைய ப்ராணனையுண்டும், இரண்டாலும் அபர்யாப்தனுய். (வெண்ணெய்விழுங்க வெகுண்டாய்ச்சி) இவனுக்கு வெண்ணெய் களவுகாண்கையிலுள்ள ஸ்நேஹம் போருமிறே அவனுக்கு ரக்ஷிக்கையிலும். வெண்ணெய் களவுபோயிற்றென்ற மாத்ரத்திலே இவன்முகத்தில் பையாப்பைக்கண்டு தாயார்சீறி. (கண்ணிக்கயிறின்யாதி) பலபிணையுடைத்தான கயிற்றிலேயவள் கட்டுவதற்குப் பரிஹாரமின்றிக்கே கட்டுண்டிருந்தான். "தாயெடுத்த சிறுகோலுக்குளைந்து" "கையுண்வார்த்தையுளன்னே கோல்கொள்ள நீயுந் தாமரைக்கண்கள் நீர்மல்கப் பையவேகிலையும்" "முழுதும்வெண்ணெயளைந்துதொட்டுண்ணும் முகிழிளஞ் சிறுத் தாமரைக்கையும்" (வயிற்றினுடாற்றுமகன்) இதுக்குப் பிள்ளை யுறங்காவில்லிதாஸர் வயிற்றை வண்ணுலுக்கிட்டாலோவென்று பணித்தார். கூக.

அரு.—தொண்ணூற்றோராம்பாட்டு.— அவதாரிகை (ஸாமாந்யேந இத்யாதி). வெகுளவேண்டுவானென்னென்ன அருளிச்செய்கிறார் (இவனுக்கித்யாதி. பயப்பட்டிருக்குமேவென்ன அருளிசெய்கிறார் (தாயெடுத்த இத்யாதி). ரஸோக்தி யருளிச்செய்கிறார்(இதுக்குப் பிள்ளையித்யாதி). கூக.

மகனொருவர்க்கல்லாத மாமேனிமாயன்
மகனுமவன்மகன்தன்காதல்—மகனைச்
சிறைசெய்தவாணன்தோள் செற்றான்கழலே
நிறைசெய்தென்னெஞ்சே நினை. கூஉ.

அக்.—ஒருவர்க்கு மகன் அல்லாத மா மேனி மாயன் (6)மகனும் அவன் மகன்தன் காதல் மகனை சிறைசெய்த (12) வாணன் தோள் செற்றான் கழல் என் நெஞ்சே! நிறைசெய்து நினை. (20)

அர்.—(நித்யஸித்தனுகையாலே ஒருவர்க்கும் பிள்ளையாக ஆகாதவனுய் ஸ்லாக்யமானதிருமேனியையுடையனுய் ஆஸ்சர்யகரமானகுணசேஷ்டிதங்களையுடையனுய், (சு) தேவகீவஸுதேவர்களுக்குப் பிள்ளையாகிய அந்தக் க்ருஷ்ணனுகிய தனக்குப் பிள்ளையாகிய ப்ரத்யும்நனுக்கு ப்ரேமாஸ்பதமான பிள்ளையாகிய அநிருத்தனைச் சிறையில்வைத்த (கஉ)பாணஸுரனுடைய தோள்களைத் துணித்தவனுன க்ருஷ்ணனுடைய திருவடிகளை என்னுடைய மநஸ்ஸே! பூர்ணமாகத்யாகம்செய். (20) கூஉ.

வ்யா.— தொண்ணூற்றிரண்டாம் பாட்டு.— (மகனித்யாதி) "விதாவஸுதனவிதாரோது - பிதாபுத்ரேணபித்ருமான்" என்னும்படி யில்லாமையாலே ஸர்வேஸ்வரனுக்கு அலப்ய லாபமிறே புத்ரஸ்நேஹம். தனக்கில்லாத தொன்றிலேயிறே ஸ்நேஹம் ஜநிப்பது, புத்ரனிற்காட்டில் பௌத்ரன்பக்கல் ஸ்நேஹமுண்டிறே. ஸ்நிக்தனுமாய் பௌத்ரனுமான அநிருத்தாழ்வானைச் சிறைசெய்த சீற்றத்தாலே பாணனுடைய தோளைக்கழித்தவனுடைய திருவடிகளை, நெஞ்சே! அவன் ப்ரதிபந்தகத்தைப் போக்க ஸ்நேஹித்தறுபவி. கூஉ,

அரு.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு.—ஒருவர்க்கும் மகனல்லாத ஸர்வேஸ்வரனுக்கு மகனுமென்னைக்கு அதிசயமேதென்ன, அருளிச்செய்கிறார் (பிதாபுத்ரேணேத்யாதி) பிதா-லோகபிதாவானஸர்வேஸ்வரன், புத்ரேண-புத்ரபூதரான சேதநராலே, பித்ருமாந்-பித்ருமானே. இவர்கள் வயிற்றிலேபிறந்து அந்தப்பிறப்பைத்தனக்கதிசயமாக நினைத்திருக்குமென்று ஸ்ருதிக்கர்த்தம். புத்ரலாபம்-புத்ரனுகை. புத்ரனுகை அலப்யலாபமோவென்ன அருளிச்செய்கிறார் (தனக்கில்லாதஇத்யாதி) கூஉ.

நினைத்துலகிலார்தெளிவார்நீண்டதிருமால் [துலவு
அனைத்துலகுமுள்ளொடுக்கி யால்மேல் —கனைத்
வெள்ளத்தோர்பிள்ளையாய் மெள்ளத்துயின்றுனை
உள்ளத்தேவைநெஞ்சேயுய்த்து. கூகூ.

அர்.— நெஞ்சே! நீண்ட திருமால் உலகில் நினைத்து தெளிவார் ஆர். கனைத்த உலவு வெள்ளத்த ஆல்மேல் ஓர் பிள்ளையாய் (13) அனைத்து உலகும் உள் ஒடுக்கி மெள்ள துயின்றுனை உய்த்து உள்ளத்தே வை, (22)

அர்.— மனமே ! (த்ரிவிக்ரமனுய்) வளர்ந்த ஸர்வேஸ்வரனே லோகத்தில் த்யாகஞ்செய்து அறியுமவர் யார்! (ஒருவருமில்லை). (ஆயினும்)(ப்ரளயகாலத்தில்)கர்ஜித்துத் திரியாகின்ற ப்ரவாஹத்தில் ஆலிலையின்மேலே அத்விதீயனன பிள்ளையாயிருந்து (கஉ) ஸமஸ்த லோகங்களையும் வயிற்றிலே யடக்கிக்கொண்டு மெள்ளக் கண்வளர்ந்த அந்த ஸர்வேஸ்வரனே யாராய்ந்து ஹ்ருதயத்தி லிருத்து. (உஉ)கூஉ.

வ்யா.— தொண்ணூற்றுமூன்றும்பாட்டு.— (நினைத்துலகிலார் தெளிவார்) அவனையநுபவித்துத் தந்தாமுக் குரியராக வல்லாருண்டோ? (நீண்டவித்யாதி) லோகத்தையெல்லா மளக்கைக்காகவளர்ந்து அளந்தலோகத்தை ஒருவயிற்றிலேவைத்து ஒருபவனுயிருப்பதொரு ஆலிலையிலே, (கனைத்துலவித்யாதி) சப்திக்துப்பரந்து வளராநின்றுள்ள வெள்ளத்திலே யுளனன பிள்ளையாய், (மெள்ள வித்யாதி) வயிற்றிலேபுக்க லோகம்தளராதபடிக் கீடாக மெள்ளக் கண்வளர்ந்தவனே. (நெஞ்சே யுய்த்துள்ளத்தேவை) கொடுவருகையாவது-அவன் புகுரப்புக்கால் விலக்காதொழிகை. கூஉ.

அரு.— தொண்ணூற்றுமூன்றும்பாட்டு.—(உய்த்து) உய்கை-கடத்துகையாய் அவனைக்கொண்டு வருகை. கூஉ.

உய்த்துணர்வென்னு மொளிகொள்விளக்கேற்றி
வைத்தவனைநாடி வலைப்படுத்தேன்—மெத்தெனவே
நின்றுணிருந்தான் கிடந்தானென்னெஞ்சத்துப்
பொன்றுமைமாயன் புகுந்து. கூச.

அ.—உணர்வு என்னும் ஒளிகொள் விளக்கு ஏற்றி வைத்து அவனை உய்த்து நாடி வலைப்படுத்தேன். (10) மாயன் என் நெஞ்சத்து பொன்றுமை புகுந்து மெத்தெனவே நின்றான், இருந்தான், கிடந்தான். (19)

அர்.—ஜ்ஞாந மென்கிற ப்ரகாசத்தையுடைய திருவிளக்கை(ஹ்ருதயத்தில்) ஏற்றி வைத்து அந்த ஸர்வேஸ்வரனே யாராய்ந்து கிட்டி வலையிலகப்படுத்தினேன். (எனக்குவசமாக்கிக்கொண்டேன்). (கo) ஆஸ்சர்யபூதனன அவனும் என்னுடைய ஹ்ருதயத்திலே விட்டுப் பிரியாமல் ப்ரவேசித்து மெள்ள எழுந்தருளி நின்றான்; வீற்றிருந்தான்; பள்ளிகொண்டான். (கக) கூச.

வ்யா.— தொண்ணூற்றுநாலாம்பாட்டு:— (உணர்வென்னுமொளிகொள்விளக்கேற்றி) உணர்வாகிற தைலவர்த்திகளா லுண்டான

அழுக்கின்றிக்கே திணுங்கினதேஜஸ்ஸை ஒளிவிளக்கேற்றி உய்த்து வைத்து. (அவனைகாடி யலைப்படுத்தேன்) கொடுவந்துவைத்து அது ஸந்தித்து ஆநுகூல்யமாகிற வலையிலே யகப்படுத்தினேன். (மெத்தெனவேயித்யாதி) அவனுமிவ்வலையிலே யகப்பட்டு விச்சேதமின்றிக்கே என்னுடைய நெஞ்சிலே நிற்பதிருப்பது கிடப்பதாஞன். "பொன்றுமை" என்றது - நான் நசியாமலென்னவுமாம்; ஹ்ருதயத்திலே ஸ்திதியாகிலுக்கு விச்சேதமின்றிக்கே யென்னவுமாம். கூச.

புகுந்திலங்குமந்திப்பொழுதத்து, அரியாய்
இகழ்ந்தவிரணியனதாகம்—சுகிர்ந்தெங்கும்
சிந்தப்பிளந்ததிருமால் திருவடியே
வந்தித்தென் னெஞ்சமேவாழ்த்து. கூடி.

அந்.— புகுந்து இலங்கும் அந்திப்பொழுதத்து அரியாய் இகழ்ந்த இரணியனது ஆகம் சுகிர்ந்து (8) எங்கும் சிந்த பிளந்த திருமால் திருவடியே என் நெஞ்சமே! வந்தித்து வாழ்த்து. (17)

அர்.— ப்ரவேசித்து விளங்காகின்ற ஸந்த்யாகாலத்தில் நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு, (தன்னை) நிந்தித்த ஹிரண்யனுடைய சரீரத்தைப் பிளந்து (அ) எங்கும் சிதறும்படியாகத் தண்டித்த ஸ்ரியஃபதியினுடைய திருவடியையே என்னுடைய மனமே! தண்டன் ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணு. (கள) கூடி.

வ்யா.— அவ.— தொண்ணூற்றைந்தாம்பாட்டு.— (புகுந்து) தம்முடைய பக்க லவன் ஸ்வலபனனபடியைக்கண்டு ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸ்வலபனனபடியைச்சொல்லுகிறார்.

(புகுந்தித்யாதி) ஹிரண்யன் வரங்கொள்ளாத ஸந்த்யையிலே. "புகுந்திலங்கும்" என்றது - ஸந்த்யையினுடைய ப்ரவேசத்தைச் சொல்லுகிறது. (அரியாயித்யாதி) ஆஸ்ரித விரோதியாலைகயாலே கொன்றதென்ற மாத்ரமின்றிக்கே சீற்றத்தினுடைய உரமிருந்தபடி. (திருமால்திருவடியே) ஆஸ்ரிதர்பக்கல் ஓரத்துக்கடி பிராட்டியருகே யிருக்கை யென்கிறது. (வந்தித்தென்னெஞ்சமேவாழ்த்து) வந்திக்கைக்கும் விஷயமவளோடே கூடினவன்போலே. கூடி.

அரு.—தொண்ணூற்றைந்தாம்பாட்டு.— சுகிர்ந்து எங்கும்சிதப்பிளந்த - அவயவத்தை வகிர்ந்து எங்கும்சிந்தும்படிபிளந்த. இப்

அசமூன்றுந்திருவந்தாதி, கூசு-பா, வாழ்த்திய. கூஎ-பா, அலரெடுத்த.

படிவிசேஷிப்பானென், கொன்றென்ன வமையாதோவென்ன அருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதரித்யாதி). கூடு.

வாழ்த்தியவாயராய்வானோர்மணிமகுடம்
தாழ்த்திவணங்கத்தழும்பாமே—கேழ்த்த
அடித்தாமரைமலர்மேல்மங்கைமணாளன்
அடித்தாமரையாமலர். கூசு.

அந்.— கேழ்த்த அடி தாமரை மலர்மேல் மங்கை மணாளன் அலராம் அடித்தாமரை (8) வானோர் வாழ்த்திய வாயராய் மணி மகுடம் தாழ்த்தி வணங்க தழும்பாமே. (16)

அர்.—அழகிய தாதையுடைய தாமரைப் பூமேல்நித்யவாஸஞ்செய்கிற பிராட்டிக்கு வல்லபனான ஸ்ரீயஃபதியினுடைய மலர்ந்த தாமரைப்பூப்போன்ற திருவடியை (அ) நித்யஸூரிகள் மங்களாசாஸநம் செய்த திருப்பவளத்தையுடையராய்க்கொண்டு ரத்நங்களிழைத்த கிரீடங்களோ வணக்கி நமஸ்கரிக்கில் (அதினுலத்திருவடியில்) தழும்புண்டாகாதோ? (கசு) கூசு.

வ்யா.— அவ.— தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு.— ('வாழ்த்திய') நித்யஸூரிகளுடையபரிமாற்றம் பொறுதலைசுமார்யத்தையுடையவனென்கிறது.

(கேழ்த்தவித்யாதி) நிறத்தையுடைத்தான தாமரைமேலேயிருக்கும் பெரியபிராட்டியாருடைய திருக்கைகளாலே வருடும்போதும் கூசிப்பரிமாறவேண்டும் ஸ்ரீயஃபதியுடைய திருவடிகளை நித்யஸூரிகள் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவாயையுடையராய் முடிகளைத்தாழ்த்திவணங்க அது பொறுமேதழும்பாம். கூசு.

அரு.—தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு.—கேழ்-நிறம். அடித்தாமரை அடிக்கொண்டிருக்கிற தாமரை. கூசு.

அலரெடுத்தஉந்தியா னங்கெழிலாய
மலரெடுத்தமாமேனிமாயன்—அலரெடுத்த
வண்ணத்தான்மாமலரான்வார்சடையான்,என்றிவர்கட்
கெண்ணத்தாமோவிமை. கூஎ.

அந்.— அலர் எடுத்த உந்தியான் எழிலாய மலர் எடுத்த மாமேனி மாயன் ஆங்கு (10) அலர் எடுத்த வண்ணத்தான் மா மலரான் வார் சடையான் என்று இவர்கட்கு இமை எண்ணத்தாமோ? (21)

அர்.— தாமரைப்பூவைத் தூக்கி தர்சிப்பிக்கிற திருநாபியையுடையனுய் அழகிய புஷ்பத்தைக் காண்பியாநின்ற ஸ்லாக்யமான திருமேனியையுடையனுய் ஆஸ்சர்யகுணசேஷ்டிதனுன ஸர்வேஸ்வரன் செய்த வ்யாபாரங்களில் (கo) புஷ்பத்தை ப்ரகாசிப்பிக்கிற ஸௌந்தர்யத்தையுடைய இந்த்ரன், ஸ்லாக்யமான கமலப்பூமேல் வஸிக்கிற ப்ரஹ்மா, தொங்குகிற சடையையுடைய ருத்ரன் என்கிற இவர்களுக்கும் கொஞ்சமாகிலும் நிஜைக்கத்தான்போமோ (உக) கூஎ.

வ்யா.— தொண்ணூற்றேழாம்பாட்டு — (அலரெடுத்த வந்தியான்) அலரைக்காட்டாநின்ற திருநாபியையுடையனுய். (ஆங்கித்யாதி) எழிலையுடைத்தாயிருந்துள்ள மலர்காட்டாநின்றதிருமேனியையுடைய ஆஸ்சர்யபூதன். (அலரித்யாதி) இந்த்ராதிகளுக்கும் அவனை மநோரதிக்கத்தான்போமோ ? (இமை) விசாரி; சற்றுப்போதென்றுமாம். கூஎ.

அரு.— தொண்ணூற்றேழாம்பாட்டு.— அலரெடுத்தவண்ணத்தான்-தாமரைமலர்போலே நிறத்தையுடைய இந்த்ரன். எடுக்கை-உய்ர்த்துங்கையாகையாலே காட்ட என்கிறது. கூஎ.

இமம்சூழ்மலையு மிருவிசும்புங்காற்றும்
அமஞ்சூழ்ந்தறவிளங்கித்தோன்றும்—நமன்சூழ்
நரகத்துநம்மைநணுகாமற்காப்பான்
துரகத்தைவாய்பிளந்தான்தொட்டு. கூஅ.

அந்.—இமம் சூழ் மலையும் இரு விசும்பும் காற்றும் (6) அமம் சூழ்ந்து அற விளங்கி தோன்றும் துரகத்தை தொட்டு (13) வாய் பிளந்தான் நமன் சூழ் நரகத்து நணுகாமல் நம்மை காப்பான். (21)

அர்.— பனியிரும்பல் வ்யாப்தமான ஹிமவத்பர்வதத்தையும் பெரிய ஆகாசத்தையும் காற்றையும்(கூ) இவையெல்லாவற்றையும் வ்யாபித்து (கீழ்ப்படுத்தி) மிகவும் திகழ்ந்து தோற்றுகின்ற கேசியாகிய குதிரையைப் பிடித்து (கஙூ) (அதின்) வாயைக் கிழித்தவன், யமனுல் ஆளப்பட்ட நரகத்தில் கிட்டாதபடி நம்மை ரக்ஷித்தருளுவன். (உக)

வ்யா.— தொண்ணூற்றெட்டாம்பாட்டு.— (இமஞ்சூழித்யாதி) ஹிமவானிலும்வாயுவின்பக்கலிலும் அமைத்துப் பரந்து அறப்பாகாசித்துத் தோன்றுகிற துரகத்தைத்தொட்டு வாய்பிளந்தான். (நமன்சூழ் நரகத்து நம்மை நணுகாமல்காப்பான்) கேசியை ஆஸ்ரிதவிரோதி

யென்றுகைதொட்டுப் பிளந்தவன் நமனுலே சூழ்க்கப்பட்டுள்ள நரகத்தில் நம்மைக்கிட்டாமல் காக்குமவன். கூஅ.

அரு.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு.—ஹிமவான், ஆகாசம், வாயு, இவைகள் கேசியுடைய பருமனுக்கும் உயர்த்திக்கும் பலத்துக்கு மொப்பாகாமையாலே இவற்றையமைத்து-தாழவிசாரித்து, அறவிளங்கி-இவற்றுக்கு மேலாக ப்ரகாசித்து· சூழ்க்கை - விசாரிக்கை. கூஅ.

தொட்டபடையெட்டும்தோலாதவென்றியான்
அட்டபுயகரத்தானந்நான்று—குட்டத்துக்
கோள்முதலேதுஞ்சக்குறித்தெறிந்தசக்கரத்தான்
தாள்முதலேநங்கட்டுச்சார்வு. கூகூ·

அந்.— தொட்ட படை எட்டும் தோலாத வென்றியான் அட்ட புயகரத்தான் அந்நான்று (7) குட்டத்து கோள் முதலே துஞ்ச குறித்து எறிந்த சக்கரத்தான் தாள்முதலே நங்கட்கு சார்வு. (17)

அர்.— (திருக்கையில்) எடுத்த ஆயுதங்க ளெட்டினலும் தோராமல் ஜயசீலனுய் அட்டபுயகரமென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்குமவனுய் பூர்வகாலத்தில்(எ)மடுவிலுள்ள மிடுக்கையுடைய முதலே சாகும்படியாகக் குறிவைத்துப் பொகட்ட திருவாழியையுடையனுன்ரியஃபதியினுடைய பாதமூலமே நமக்கு ப்ராப்யம்.'(கள)

வ்யா.— தொண்ணூற்றொன்பதாம்பாட்டு.— (தொட்டவித்யாதி) ஏதேனுமொரு ஆயுதத்தைத்தொட்டால் அவ்வாயுதத்தாலே எதிரிகளுக்குத்தோராதேவெற்றியையுடையனுய் திருவட்டபுயகரத்திலேநின்றவன். (குட்டத்தித்யாதி) "கூடாஜீலுஂஸரணம்வ்ரவேத்வத்பாதமூலம்சரணம்ப்ரபத்யே" என்னும்படியே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குதவினவனுடைய திருவடிகளே நமக்கபாஸ்ரயம். கூகூ.

அரு.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு.—தோலாத—தோராத. ரலயோரபேதஃ. கூகூ.

சார்வுநமக்கென்றும்சக்கரத்தான், தண்டுழாய்த்
தார்வாழ்வரைமார்பன்தான்முயங்கும்—காரார்ந்த
வானவருமின்னிமைக்கும்வண்டாமரைநெடுங்கண்
தேனமரும்பூமேல்திரு. க0ூ

அந்.—சக்கரத்தான் தண் துழாய் தார் வாழ் வரை மார்பன் தான் மூயங்கும் (9) கார் ஆர்ந்த வான் அமரும் மின் இமைக்கும் வண் தா மரை நெடும் கண் (19) தேன் அமரும் பூமேல் திரு நமக்கு என்னும் சார்வு. (26)

அர்.—திருவாழியையுடையனுய் குளிர்ந்த திருத்துழாய் மாலே விளங்காநின்ற மலேபோன்ற திருமார்பையுடையனுனஸர்வேஸ்வ ரன் தானே ஸம்ஸ்லேஷிக்குமவளாய் (கூ) மேகம் நிறைந்த ஆகாசத் தில் பொருந்தியிருக்கிற மின்னலேப்போல் ப்ரகாசிக்குமவளாய் அழ கியதாமரை புஷ்பம்போல் விசாலமான திருக்கண்களேயுடையளாய் (ககூ) தேன் நிறைந்த தாமரைப்பூமேல் வஸிக்கிறவளான ஸ்ரீமஹா லக்ஷ்மி நமக்கு எப்போதும் பரமப்ராப்யை. (உசூ) க00.

மூன்றாந்திருவந்தாதி முற்றிற்று.

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

வ்யா.—நூறும்பாட்டு.—(சார்வுநமக்கென்றும்) ஆபத்துக்குஸர் வேஸ்வரன்; ஆபத்துள்ளபோதும் எற்றைக்கும் நமக்கபாஸ்ரயம் பெ ரியபிராட்டியார். (சக்கரத்தானித்யாதி) ரக்ஷணத்துக்குபகரணமான திருவாழியைக்கையிலே உடையவனுமாய், போகோபகரணமான தி ருத்துழாயையுடையவன் தானே ஸம்ஸ்லேஷியாகின்றுள்ளவளான. இதுக்குபமாநம் மேல். (காரார்ந்தவித்யாதி) மேகங்கள் செறிந் துள்ள ஆகாசத்திலே அமர்ந்தமின்னேக்காட்டாகின்றுள்ளாளுமாய், ஆஸ்ரிதரக்ஷணத்திலே குளிரநோக்காகின்ற கண்ணேயுடையாளாய், தேன் செறிந்தபூவின்மேலே யிருக்கிற திரு. (சார்வுநமக்கென்றும்) பெரியபிராட்டியார் நமக்கெல்லாக்காலத்துக்கு மபாஸ்ரயம். க00,

மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யாநம்.

முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளே திருவடிகளே சரணம்.

அரு.—நூறும்பாட்டு.—கீழே "குறித்தெறிந்த சக்கரத்தான்" என்கையாலே ஆபத்துக்குஸர்வேஸ்வரனென்கிறது. மின்னிமைக் கும்-மின்னேப்ரகாசிப்பிக்கை, மின்னேக்காட்டுகை; மின்போலேயிருக் கிறுளென்றபடி. க00.

மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யாந அரும்பதம்,

முற்றிற்று.

அப்பிள்ளேதிருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இயற்பா.

திருமழிசையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

நான்முகன் திருவந்தாதி.

இந்த க்ரந்தம்

அபாரகருணைஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய

மணிப்ரவாள வ்யாக்யாநவலஹிதம்

இச்சபாபண்டிதரான

ஸிங்கப்பெருமாள்கோயில்

தர்க்கதீர்த்தர்-ராமாநுஜாசார்யரால்

எழுதப்பட்ட ப்ரதிபதஸஹிதம்

அநேக தேசாதீத ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினால்

லேககப்ரமாதாதி ஜநிததோஷங்களில்லாமல்

மேற்படி

ராமாநுஜாசார்யராலும்

ஹி. முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்) யாரால்

சென்னைப்பட்டணம்,

ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலையில்

ஸ்ரீ பராங்குசதிருவவதாராதி - ஹிரு.

சுபக்ருத் ஸம்வத்ஸரத்தில்

பதிப்பித்துப் ப்ரசுரம் செய்யப்பட்டது.

சகாஉ.

விஜயதேராம்.

ஸ்ரீமதே ராமானுஜாயநமஃ.

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

1882-ஹுத்திய ஆறுவது ஆக்ட்ப்ராகாரம் ரிஜிஸ்டர் செய்து ஸ்தாபிக்கப்பட்டது.

ப்ரதிமாதம் 5 - பாரக்குகளுக்குக் குறையாமல் சாஸ்வதமாய் அச்சிட்டு மூன்றுதலைமுறைகளுக்கு பேட்ரன்களுக்கு 12-காபிகளும், பாகஸ்தர்களுக்கு 5 - காபிகளும் போஷகர்களுக்கு 1 - காபியும் ப்ரதிமாதம் கொடுக்கப்படும்.

பேட்ரன் சந்தா ரூபாய் - 200, பாகஸ்தர்களுக்கு சந்தா ரூபாய் 100, போஷகர்களுக்கு சந்தா ரூபாய் 20, மொத்தமாயாவது ப்ரதி இங்லீஷ்மீ 15கூக்குள் 10 - ல் ஒருபாகமாயாவது கட்டவேண்டும். இவர்களுக்குப் பீரீ வேசவர்த்தனீ க்ரமமாக ரூபாய், 2-0-0, ரூபாய், 1-0-0, ரூபாய், 0-4-0.

மற்ற விவரங்களெல்லாம் சட்டபுஸ்தகத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும், இதின் விலை அணு 2.

இந்த ஸபையாரால் இதுவரையில் அச்சிட்டு ப்ரசுரம்செய்யப்பட்ட க்ரந்தங்கள்.

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம்	மேலாள காகிதம் தமிழ்லிபி		3—4—0
பாரதாதி தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம்	டிடோ		0—5—0
ராமசரமஸ்லோகம் ஸவ்யாக்யாநம்	டிடோ		0—3—0
இயற்பா முதல்திருவந்தாதி ஸவ்யாக்யாநம் ப்ரதிபதமுகா அரும் பதஸஹிதம் டிடோ			1—2—0
டிடோ இரண்டாந்திருவந்தாதி	டிடோ	டிடோ	0—12—0
டிடோ மூன்றாந்திருவந்தாதி	டிடோ	டிடோ	0—11—0
டிடோ நான்முகந்திருவந்தாதி	டிடோ	டிடோ	0—14—0
தாத்பர்யஸஹித பராசர விசிஷ்ட பரம தர்மசாஸ்த்ரம்			0—14—0

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்ய,

கார்யதர்சி - தஞ்சிகாரி,

கெ. 36, வெங்கடாசலமுதலிதெரு, சென்னை.



திருமழிசையாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

இயற்பா

நான்முகன் திருவந்தாதி.

இந்த க்ரந்தம் திவ்யப்ரபந்தத்தில் மூன்றுவது ஆயிரமான இயற் பாவில் நான்காவது ப்ரபந்தம். இதில் பாசுரங்கள்-நூறு. இதை அரு ளிச்செய்தவர்-பகவந் நிர்ஹேதுக ஜாயமான கடாக்ஷலப்த திவ்யஜ் ஞாநமுடைய திருமழிசையாழ்வார். இவர் தொண்டமண்டலத்தில் திருமழிசையென்னும் மஹீஸாரக்ஷேத்ரத்தில் த்வாபரயுகாதி, அதி எகுஅகு-வது ஸம்வத்ஸரமான விபவஸம்வத்ஸரம் தைமாஸம் க்ரு ஷ்ணபக்ஷதசமி குருவாரம் மகா நக்ஷத்ரம் தூலாலக்நத்தி லவதரித் தவர். இவர் தகப்பனார்-பார்க்கவ மஹர்ஷி. இவர் தாயார்-கநகாங்கி யென்னும் அப்ஸரஸ்த்ரீ. இவரை வளர்த்தவர்-ஹரிதாஸர். இவர் திரு மழிசையிலவதரித்தவராகையால் இவருக்குத் திருமழிசையாழ்வா ரென்று திருநாமமாயிற்று. இவர் ஸுதர்சநாம்சஸம்பூதர். இவரு டைய நாமாந்தரங்கள் - ஸ்ரீபக்திஸாரர், மஹீஸாரபுராதீசர், பார்க்க வாத்மஜர், திருமழிசையையர், மழிசைப்பிரான் என்பவை. இவரு க்கு வித்யை - அஷ்டாங்கயோகம். இவர் திருவாராதநம் - சொன்ன வண்ணம்செய்தபெருமாள். ஆசார்யர்-பேயாழ்வார். சிஷ்யர்-கணிகண்

ணன், க்ருடவ்ரதர் என்பவர்கள். இவர் செய்தருளின க்ரந்தாந்தரம்-கஉ0-பாசுரங்களுள்ள திருச்சந்தவிருத்தம், இவர் மங்களாசாஸநம் செய்த திவ்யதேசங்கள் - கோயில், திருமலை, பெருமாள்கோவில், யதோக்தகாரிஸ்தலம், திருவுரகம், திருப்பாடகம், திருக்குறுங்குடி, திருவல்லிக்கேணி, திருக்கோட்டியூர், திருவெவ்வுளூர், திருத்துவாரகை, திருக்கூடல், திருப்பார்கடல், ஸ்ரீவைகுண்டம். இவர் யோகாப்யாஸத்தினால், எ000-ஸம் வத்ஸர மெழுந்தருளியிருந்து நிரதமதங்களை நிரஸித்து விசிஷ்டாத்வைதஸ்தாபித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

இவருடைய ப்ரபாவ ஸங்க்ரஹம்.

முன்பொருகாலத்தில் ஸமஸ்தருஷிகளும்சேர்ந்து இந்த பூலோகத்தில் ஸர்வோத்க்ருஷ்டமான க்ஷேத்ரமெதுவென்றுலோசித்துவிஸ்வகர்மாவைக்கொண்டு ப்ரஹ்மா ப்ரபஞ்சத்திலுள்ளஸகல க்ஷேத்ரங்களொருபுறமும், திருமழிசை யொருபுறமுமாகவைத்து நிறையிட, அப்பொழுது திருமழிசையிருந்தபக்கம் கனத்துத்தாழ்ந்திருப்பதைக்கண்டு திருமழிசைக்கு மஹீஸாரக்ஷேத்ரமென்று திருநாமம் சாத்தினர்கள். பின்பொருகால் இந்தக்ஷேத்ரத்தில் பார்க்கவர்ஷிதபோநிஷ்டராயெழுந்தருளியிருந்ததைக்கண்டு, இந்த்ராதிகள் அந்த தபஸ்ஸை பங்கம்செய்யநினைத்து, கநகாங்கியென்னுமொரு அப்ஸரஸ்த்ரீயை அவரிடமனுப்ப, பார்க்கவர்ஷி அவளைக்கண்டு மோஹித்து யோகாப்யாஸத்தைவிட்டு அவளுடன் க்ரீடித்துக்கொண்டிருக்கையில் அவ்விருவருக்கும் திருமழிசையாழ்வார் பிண்டாகாரமாயவதரித்தார். பின்பு கநகாங்கியென்பவள், ஸூர்யனைப்போல் தேஜோமயமானமான ப்ரஹ்ம தேஜஸ்ஸையுடைய தன்பிள்ளையாகிய இவ்வாழ்வாரை ஓர் பிரப்பம்புதரில்வைத்துவிட்டு, தனக்கிருப்பிடமான ஸ்வர்க்கமடைந்தாள். ருஷியும் தபோநிஷ்டராயிருந்துவிட்டார். பிறகுஅத்தப் பிண்டத்துக்குக் கைகால்கள்முதலிய அவயவங்களேற்பட்டுக் குழந்தையாய், பசியினாலழத்தொடங்க, அவ்வூரிலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீஜகந்நாதன் அங்கு லக்ஷ்மீஸமேதனாயெழுந்தருளி பக்தசிரோமணியான இவ்வாழ்வாருக்கு ஸேவைஸாதித்து இவர்பசியைப்போக்கினார். பின்பொருகால் குறவஜாதியான ஹரிதாஸனென்றொருவர் பிரம்பறுக்க அப்புதரண்டையில்வந்து அங்கிருந்த இவ்வாழ்வாரைப்பார்த்து ப்ரேமாக்ராந்தராயெடுத்துக்கொண்டுபோய், தன் பார்யையான பத்மவல்லியிடத்திற்கொடுத்தார். அவள் தனக்கு ஸந்தானமில்லாததினால் அந்த

ப்ரீதியுடன் இவரையெடுத்து வளர்த்துக்கொண்டிருந்தாள். ஆயினும் ஆழ்வார் அவளகத்துப்பாலுங்கூட அமுதுசெய்யவில்லை. இவ்வாஸ்சர்யத்தைக்கேட்டு மகிழ்ந்து அவ்வூரில் ப்ராஜ்ஞனென்றொரு ஸத்ஸ்ரோத்ரார் வந்துபார்த்து அடியேனகத்துப்பாலமுதுசெய்தருள வேணுமென்று அதிகவிதமாக ப்ரார்த்திக்க, அதையங்கீகரித்துத் தாம் அமுதுசெய்து மிகுத்தபாலை நீர் ஸ்வீகரியுமென்று ப்ராஜ்ஞனுக்கு ஆழ்வார் ப்ரஸாதித்தருள, அவரும் அவர் பார்யையுமாக அப்பாலை ஸ்வீகரித்துக் கிழத்தனத்தைவிட்டு நவயௌவனமுடையவர்களாய்க் கணிகண்ணனென்றொரு பாகவதோத்தமரைப் பெற்றார்கள்.

இவ்வாழ்வார் ஏழுதிருநக்ஷத்ரம்வரையில் அந்த பாகவதிகளிலவிட்டு, கேவல பகவத்கடாக்ஷத்தினால் அந்த ஹரிதாஸரகத்தில் வளர்ந்துகொண்டு கூடைமுடைதல் முதலான தஜ்ஜாத்யுசிதமான வ்யாபாரங்களைச் செய்துகொண்டிருக்கையில், அப்போது ஸர்வேஸ்வரன் இவர்க் கந்தபாகவதிகளில் ருசியை விளைப்பிக்க, அது முதல் ஆழ்வார் ஹரிதாஸரகத்தைவிட்டு தீர்த்தயாத்ரை செய்துகொண்டு சிறிது கால மெருந்தருளியிருந்தார். பின்பு யோகாப்யாஸத்தில் லிழித்து, ஜகத்காரண வஸ்துவை த்யாநிக்கக் கருதி, அதுஇன்னதென்றராயக் கோலி, சாக்யோலூக்யாதி வேத பாஹ்யமதங்களையும், வேதத்துக்கபார்த்தம் சொல்லும். பாட்ட ப்ராபாகர மாயாவாதாதி குத்ருஷ்டிஸித்தாந்தங்களையும் ஆயிரம்வருஷம் பரிசீலகம்பண்ணி அவற்றை அஸாரங்களாகநினைத்துக்கைவிட்டு கடைசியில் சைவஸித்தாந்தமே மேலென்றுஅதில் ப்ரவேசித்து சிவபக்தாக்ரேஸராராய்பஸ்மருத்ராக்ஷங்களை யணிந்து அம்மதத்துக் கநுகுணமாக அநேக க்ரந்தங்களையும் செய்து அம்மதத்தை ப்ரவசநம்செய்து ஸ்தாபித்துக்கொண்டிருந்து கடைசியாய் மௌநவ்ரதத்தை யவலம்பித்தார்.

இந்த வ்ருத்தாந்தத்தைப் பேயாழ்வார் கேட்டருளி இவரைச் சீர்திருத்தினால் இவர் தர்சந ப்ரவர்த்தக ராவரென்று திருவுள்ளம் பற்றி, தம்முடைய நிர்ஹேதுக க்ருபையினால்இவர்இருக்குமிடத்துக் கெழுந்தருளி இவருடைய மௌநவ்ரதத்தைக்கண்டு இவரை வார்த்தைசொல்விக்க உபாயமேதென்றாலோசித்து, இவரிருக்கும் தோட்டத்துக்கு ஸமீபத்திலொரு தோட்டமிட்டு, அதில் செடிகளைத் தலைகீழாக நாட்டி நீர் கில்லாத ஓர் ஓட்டைப் பானையினால் அம்மரங்களுக்கு நீர் வார்த்துக்கொண்டிருக்க, இதைக்கண்ட திருமழிசை யாழ்வார் அட்டஹாஸம் செய்து இதென்ன உன்மத்தக்ருத்

யம் செய்கிறீரென்று கேட்டார். அதற்குப் பேயாழ்வார், நாஞ் உன் மத்தன் ; நீரல்லவா என்று கேட்டு, ஸகல ஜகத்காரணனானவன் ஸ்ரியஃபதியாயிருக்க, அவளுக்குப் பௌத்ரனாய், மண்டையோடும் கையுமாய்ப் பிக்ஷையடித்துத் திரியுமவனும், ஒரு பூர்த்தியின்றிக்கே ஜடையைத்தரித்துத் தவம் செய்யுமவனாய், ஸ்ரியஃபதியினுடைய ஸ்ரீபாததீர்த்தமான கங்கையை சிரஸாவஹித்துப் பவித்ரனானவனுமாயிருக்கிற ருத்ரனே நீர் ஜகத்காரணமென்று உபாஸிப்பது சேரும்விதமென்னென்று பேயாழ்வாருளிச்செய்தார். அப்போது இருவருக்கும் ப்ரசண்ட வாதம்கடந்தது. அதில் பேயாழ்வார், ஸ்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலும் ஸூத்ருக்திகளிலும் சைவ ஸித்தாந்தத்தைக் காட்டிலும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமே பரமோத்க்ருஷ்டமென்று உபந்யஸிக்க, அதற்குத் திருமழிசை யாழ்வார் பதில் சொல்லமாட்டாமல் தோற்று, அப்படி ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் என்னைப் ப்ரவேசிப்பித்து ஸ்ரீவைஷ்ணவனுக்கு விசேஷார்த்தங்களையுபதேசித்து க்ருதார்த்தனுக்கியருளவேணுமென்று ப்ரார்த்திக்க, பேயாழ்வர் அதை ஓமென் றங்கீகரித்து, சைவராயிருந்த திருமழிசை யாழ்வாருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து மந்த்ர மந்த்rர்த்தங்களையுபதேசித்துப் ப்ரபந்நக்ரேஸராக்கிக் கடாக்ஷித்தருளினர்.

அகந்தரம் திருமழிசைப்பிரான் கைரவிணீ தீரத்துக் கெழுந்தருளி ஸ்ரியஃபதி விஷயமாய், தைலதாராவத்விச்சிந்ந ப்ரீதிரூபாபந்ந ஸ்ம்ருதிஸந்தானரூபமானபரமபக்தியை யதுஷ்டித்துத்தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை வர்த்திப்பித்துக்கொண்டு ஆதித்யனுதித்தாற்போல் பெரிய தீப்தியுடையராய்ப் ப்ரகாசித்துக் கொண்டெழுந்தருளியிருந்தார். அப்போதொரு ஸமயத்தில் ருத்ரன் பார்வதீ ஸமேதனாய் வ்ருஷபவாஹநத்தின் மேலேறி ஆகாசமார்க்கமாகத் திரிந்து வரும்போது ஆழ்வார் அவனுடைய நிழல் தம்மேல் விழாமல் ஒரு பக்கமொதுங்க, அதைக்கண்ட பார்வதி, இம்மஹாதபோதனர் ஆரென்று தன் ப்ராணநாதனைக் கேட்க, அவனும்இவருடைய ப்ரபாவத்தைவர்ணிக்க, அதைக்கேட்டு அவரைப் பார்ப்போம் வாவென்று நிர்ப்பந்தம் செய்து அழைக்க, ருத்ரனும் பார்வதீஸமேதனாய் ஆகாசத்தினிருந்திறங்கி ஆழ்வார் முன்னே போய்நின்றனன். ஆழ்வார்இவர்களைக் கண்ணெடுத்துப் பாராமல் தன் கிழிந்த வஸ்த்ரத்தைத் தைத்துக்கொண்டிருந்தார். ருத்ரன் பாகவத வைபவ மறியாத துரபிமானியாகையால் ஆழ்வாரைப் பார்த்து, ஓய்! உமக்கு வேண்டும் வரம் கேளும், நாம் தரு

கிறோமென்று சொல்ல, அதற்குஆழ்வார், தர்மார்த்த காமமோக்ஷங்க ளென்கிற சதுர்வித புருஷார்த்தங்களில் முதல் மூன்றும் நமக்கு வேண்டா;நமக்குவேண்டியமோக்ஷம் இவனுக்கும்இவனைப்படைத்த ப்ரஹ்மாவுக்கும் கொடுக்கச்சக்தியில்லை ; ஆகையால் இவனிடத்தில் நாம் பெறவேண்டுவதொன்றுமில்லை யென்றெண்ணி, நமக்குன் பக்கலில் பெறவேண்டிய தொன்றுமில்லையென் றருளிச்செய்தும் ருத்ரன் வெகுவாய் நிர்ப்பந்திக்க, அவன் நிர்ப்பந்தத்துக்காக ஏதோ ஒன்றைக்கேட்போமென்று நினைத்து, இந்த ஊசியின்வழி நூல் போகும் படிவரங்கொடுக்கவேணுமென்று கேட்டார், அந்தப்பரிஹாஸச்சொல்லைகேட்டு தாமஸ ப்ரக்ருதிகனை ருத்ரன் அதி குபிதனாய், ஓய்! நீர் என்னைப்பரிஹாஸம் செய்தீரல்லவா, உம்மை நானிப்போ தென்செய்துவிடுகிறேன்பாரும், மந்மதனைக்கொளுத்தினாற்போல் உம்மை இப்போதே பஸ்மமாக்கிவிடுகிறேன் என்று பருஷோக்திகளைச் சொல்லித் தன்னுடைய நெற்றிக்கண்ணைத்திறந்தான். அப்போது அக்கண்ணில் நின்றும் காலாக்நி புறப்பட்டு பூம்யந்தரிக்ஷங்களையும் ஸமஸ்த திக்குக்களையும் வ்யாபித்து தஹிக்கத்தொண்டு ஆழ்வார்மேல் திரும்பிற்று. ஆழ்வாரும் தம்முடைய பாதாங்குஷ்டத்தி லிருந்த நேத்ரத்தைத்திறக்க, அதில் நின்று புறப்பட்ட, அக்நி மேற்கிளம்பி ரௌத்ராக்நியைப் பகலில் மின்மினியைப்போ லாக்கிவிட்டு ருத்ரன்மேல்பாய, அதையவன் ஸஹிக்கமாட்டாமல் தனக்கு ஸஹாயமாகக் காளமேகங்களைக்கூப்பிட அம்மேகங்களுமவன்து தங்கள் சக்தியுள்ளவளவும் வர்ஷிக்க, ஆழ்வாருடைய பாதாங்குஷ்டாக்நி அதற்குச்சலியாமல் படபாக்நி ஸமுத்ரஜலத்தைப் பானஞ்செய்வதுபோல் அந்தஜலங்களையெல்லாம் வற்றடித்தது. அதைக்கண்டு ருத்ரன், இனி நமக்கு வேறுபாயமில்லையென்று நிஸ்சயித்து ஆழ்வார் திருவடிகளில் சரணம்புகுந்து, ஓபாகவதோத்தமரே! தேவரீருடைய ப்ரபாவமொருவாலும் வர்ணித்துச் சொல்லமுடியாது, என்னுடைய பா(ஹா)லாக்நியும் உம்முடைய பாதாக்நிக்கொவ்வாது.பூர்வகாலத்தில் அம்பரீஷனென்றொருபாகவதனுல்துர்வாஸர்அவமாநப்பட்டாற்போல்நான் இப்போது தேவரீரால் பரிபவமடைந்தேன். இவ்வளவுப்ரபாவமும் தேவரீருக்கு பகவத்பக்தியினு லுண்டாயிருந்தகாகையால் இது முதல் தேவரீருக்கு பந்துஸாரென்று திருநாமமாகக்கடவதென்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் தம் பாதாங்குஷ்டாக்நியையும் ஸம்ஹரிக்க ருத்ரன் பார்வதீஸமேதனுய் நிரஹம்பாவம் செய்துகொண்டு கைலாஸத்தைமடைந்தான்.

பின்பொருகால், சுக்திஹாரனென்கிற ஒரு ஸித்தன் தன் தபோ மஹிமையினால் புலியை வாஹநமாகக்கொண்டு ஆகாசசாரியாய்த் தனடயின்றி ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ஒருகாள் ஆழ்வாருக்கு மேற்புறமாக வரும்போது தன் வாஹநமான புலி,முன்னே போகமாட்டாமல் ஸ்தப்தமாய் நிற்க, இதற்கென்ன காரணமென்று சித்தன் யோசித்து காற்புறங்களிலும்பார்த்து ஒன்றையுங்காணுமல் கீழ்நோக்கிப் பார்க்கும்போது அங்கெழுந்தருளியிருக்கிற ஆழ்வாரைப்பார்த்து இதுஇவருடையமஹிமைதானென்று நிஶ்சயித்து அங்கிருந்து கீழேயிறங்கிவந்து ஆழ்வாரை ஸேவித்து, ஓஸ்வாமீ! நான் தேவரீருக்கு வஸ்த்ரகவசங்கள் கொடுக்கிறேன். இதை யணிந்திருந்தாலொருபாதையும் வாராது; ஸகல கார்யங்களும் ஸித்திக்கும் அங்கிகரித்தருளீரென்று வஸ்த்ரகவசங்களைக்கொடுக்க, ஆழ்வார், ஓ ஸித்தேஶ்வரனே! நான் உனக்கொரு ரத்நகவசமும் வஸ்த்ரமும் கொடுக்கிறேன்; இதையணிந்து பாருமென்று அந்தக்ஷணத்திலேயே தம் ப்ரபாவத்தினால் ஸ்ருஷ்டித்துக்கொடுத்தார். பின்பு ஸித்தன் தன் கழுத்திலிருக்கும் கவரத்நமாலையைக்கழற்றி, இதை ஜபமாலிகையாகச் செய்துகொள்ளுமென்றுகொடுக்க, ஆழ்வார் தாம் சாத்தியிருந்த துளஸீ களிராக்ஷமாலைகளைக்கழற்றி இதைப்பாரென்று காண்பிக்க, ஸித்தன், கவரத்நங்களிழைத்துக் கண்தெறிக்கும்படி கோடிஸூர்ய ப்ரகாசமாயிருக்கிற அம்மாலையை வாங்கிப்பார்த்து ஆஶ்சர்யப்பட்டு, ஓ ஸ்வாமீ! நான் தேவரீருக்குத் தோற்றேன், இப்படிப்பட்ட பாகவதோத்தமரைஸேவித்ததினால்எனக் கின்னமையினம்ஸுகிநமாயிற்று; தேவரீருடைய ப்ரபாவத்தை ஸாக்ஷாத் ப்ருஹஸ்பத்யாதிகளும் வர்ணிக்கச் சக்தரல்லர், இனி எனக்கு நியமநம் ஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்து நியமநம் பெற்றுக்கொண்டு ஸ்வஸ்தாநத்தையடைந்தான்.

அநந்தரம் சிலகாலங்கழித்து ரஸவாதத்தில் ஸமர்த்தனான கொங்கண ஸித்தனொருவன், ஆழ்வார் ப்ரபாவத்தைக்கேட்டு இவரை ஸேவிக்கவேணுமென்று வந்து, ஓ ஸ்வாமீ! இந்த ரஸகுளிகையைத் திருவுள்ளம்பற்றி ஜாக்ரதையாய் வைத்துக்கொண்டருளவேணும்; இதனால் இரும்பு பொன்னாகுமென்று சொல்லி ஒரு ரஸகுளிகையைக்கொடுக்க, ஆழ்வார், ஓ ஸித்தனே! அதப்படியிருக்கட்டும்; இந்த குளிகையை நீ வாங்கிப்பார்; இதனால் கல் தங்கமாகிறது என்னசொல்லி தம் திருமேனியிலிருந்த அழுக்கைத்திரட்டி

உருண்டையாக்கிக்கொடுக்க, ஸித்தன் அதைவாங்கிக்கொண்டுபோய் ஒருமலைமேல் தடவ அம்மலை அப்போது பொன்மலையாய் மேருபர்வ தம்போல விளங்கிநிற்பதைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு ஆழ்வாரைக்கொ ண்டாடி க்ருதார்த்தனுய்த் தன் தேசத்திற்குச்சென்றான்.

பின்பு சிலகாலம் ஆழ்வார் யோகாப்யாஸ நிஷ்டராய் ஒரு கு ஹையி லெழுந்தருளியிருக்கும்போது ஒருநாள் பொய்கைபூதம் பே யாழ்வார்கள் அவ்வழியாயெழுந்தருளி திருமழிசைப்பிரானுடைய தேதீப்யமானமானதிவ்யதேஜஸ்ஸைக்கண்டு அந்த குஹைக்குள்ளெ ழுந்தருள, திருமழிசைப்பிரான் எதிர்கொண்டுவந்து தண்டம் ஸமர்ப் பித்து அர்க்யபாத்யாசமநாந்தமான உபசாரங்களை ஸமர்ப்பித்து குசலப்ரச்நம்பண்ணினார். அப்போது மூதலாழ்வார்களு மிவரும் பரஸ்பரம் பாகவதஸமாவேசத்தினல் ஸந்துஷ்டராய், பகவத் குணானு பவம் பண்ணிக்கொண்டு ஸுகமேயெழுந்தருளியிருந்தார்கள். சிறி துகாலங்கழித்து மூதலாழ்வார்கள் இவரிடத்தில் நியமனம் பெற்றுக் கொண்டு லோகஸஞ்சாரார்த்தமாக எழுந்தருளினார்கள்.

பின்பு திருமழிசைப்பிரான் தம்முடைய அவதாரஸ்தலமான திருமழிசைக்கெழுந்தருளினார். அங்கு அநுஷ்டாநத்துக்குத்திருமண் காப்பகப்படாமல் சிந்தாக்ராந்தரா யெழுந்தருளியிருக்கையில், திரு வேங்கடமுடையானெழுந்தருளி, திருமண் பெருமாள் கோயிலிலிருக் கிறது, அதைப் பரிக்ரஹியுமென்று ஸாதிக்க, பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி திருமண்காப்பை யெடுத்துக்கொண்டுவந்து அநுஷ்டா நம் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம் சிலகாலம்கழித்துப் பெருமாள்கோயிலில் யதோக்த காரியை ஸேவித்துக்கொண்டு பொய்கைப்புஷ்கரிணிக்கரையில் யோ காப்யாஸம் செய்துகொண்டு அங்கு எழுதறு ஸம்வத்ஸர மெழுந் தருளியிருந்தார். அப்போது கணிகண்ணன் ஆழ்வாரையாஸ்ரயித்துப் பரமபாகவதரா யெழுந்தருளியிருந்தார். அங்கொருகிழவி ஆழ்வார் யோகாப்யாஸம்செய்யும் தேசத்தை ப்ரதிதிநம் ஸ்தல சுத்திசெய்து கொண்டிருக்க, அவளிடத்தில் ஆழ்வார் ப்ரஸந்நராய், உனக்கு வேண் டும்வரம் கேட்டுக்கொள்ளென் றருளிச்செய்ய, அத்தக்கிழவி, எனக்கு யெவ்வகும் வேணுமென்று ப்ரார்த்திக்க, அப்படியே நீ யுவதியாகக் கடவாயென்று ஆழ்வார் அநுக்ரஹித்தார். அவள் அப்போதே யுவதி யாய் அப்ஸரஸ்த்ரீபோல் அதி ஸுந்தரியாயிருந்தாள். ஒருநாள் அந்த தேசாதிபத்யமான பல்லவராயனென்பவன் அவ்வழியாய்ப் போம

போது இவளைப்பார்த்து மோஹித்து இவளை காந்தர்வவிவாஹம்செய்துகொண்டு தனக்குப் பட்டமஹிஷியாக்கித் தன்னுடையஸகலஸ்வர்யங்களையும் அவளதீநமாக்கி ஸுகமநுபவித்துக்கொண்டிருந்தான்.

பின்பு பல்லவராயன் நாள்தோறும்தலைக்குண்டானகிழத்தனத்தையும் தன் பட்டமஹிஷிக்குண்டான நவயௌவநத்தையும்பார்த்து இதுக்கென்னகாரணமென்று தன் மஹிஷியைக்கேட்க, அவள், திருமழிசைப்பிரான் ப்ரஸாதத்தினால் எனக்கு யௌவநம் நித்யமாய்வருத்தியடைகிறதென்றுசொல்ல, அதைக்கேட்டு, ஆனால் ஆழ்வாரையழைத்துக்கொண்டுவந்து என்னையு மப்படியே கடாக்ஷிக்கும்படி நீ செய்யவேணுமென்று பல்லவராயன்சொல்ல, அவர் இங்கெழுந்தருளமாட்டார்; அவர் ப்ரிய்சிஷ்யரான கணிகண்ணனை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருகிறேனென்றுசொல்லிக் கணிகண்ணனை யழைத்துக்கொண்டுவந்தாள். ராஜா அவரைப்பார்த்து, உம்மூடைய ஆசார்யரான ஆழ்வாரை இங்கெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரவேணுமென்று ப்ரார்த்திக்க, அதுக்கு, ஆழ்வார், இங்கெழுந்தருளமாட்டாரென்று கணிகண்ணன் ஸாதித்ததைக்கேட்டுக் கலக்கமுற்றிருந்தான். அங்குள்ளார், இந்தக் கணிகண்ணர் உன்விஷயமாக ஒரு கவிபாடினால் அதுஸபலமாகுமாகையால்உன் அபீஷ்டத்தைஇவரைக்கொண்டு பாடுவித்துக்கொள்ளென்றுசொல்ல, ராஜாவும் கணிகண்ணனைத் தன்விஷயமாக ஒரு கவிசொல்லவேணுமென்று பகுவிதமாக ப்ரார்த்தித்தாலும், நான் மநுஷ்யனைக் கவிபாடமாட்டேனென்று ஒரேபிடியாய்க் கணிகண்ணன் சொன்னதைக்கேட்டு, ஆனால் ராஜபக்தியில்லாத நீர் என்தேசத்தி லிருக்கவேண்டாமென்று சொன்னான். கணிகண்ணன்இந்த வ்ருத்தாந்தத்தை ஆழ்வாருடன் விண்ணப்பம்செய்ய, ஆழ்வாரும், நீர் போனபின் நமக்கிங்கென்ன ப்ரயோஜநம்? நான் உம்மூடனே வருகிறேனென்றுசொல்லி எழுந்திருந்து இதுகளைப் பெருமாளிடம் விண்ணப்பஞ்செய்து தேவரீரும் என்னுடனே எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, உம்மைப்பிரிந்த நமக்கும்இங்கொருகாரியமுமில்லை; நான்உம்மூடனேகூட வருகிறேனென்று திருவநந்தாழ்வானுகிற தன் படுக்கையைச் சுற்றிக்கொண்டு பெருமான்புறப்பட, அதைக்கண்டு மற்ற எம்பெருமான்களும். இதரமான தேவதாந்தரங்களும், அவரவர்கள் பக்தஜநங்களும் புறப்பட்டு காஞ்சிநகரத்திற் கொருக்ரோசம் வெளியில்போய்விட்டார்கள். அப்போது நகரம் அழகழிந்து இருள்மூடிப்போக, பல்லவராயன்

அப்பொழுது மந்திரிகளைத் திரட்டி இந்த அநிஷ்டத்துக்கென்ன ஹேதுவென்று விசாரித்து, பெருமாளிடத்தி லபசாரப்பட்டோமென்று நிஶ்சயித்து பஶ்சாத்தாபத்துடன்போய், யதோக்தகாரியைத் தன் பட்டணத்துக் கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, அவர், ஆழ்வாரெழுந்தருளினால் வருகிறேனென்ன, ஆழ்வாரைப் ப்ரார்த்திக்க, ஆழ்வாரும், நம் கணிகண்ணன் வந்தால் வருகிறேனென்ன, பல்லவராயன் கணிகண்ணன் திருவடிகளில் விழுந்து அபராதக்ஷாபணம்பண்ணிக்கொண்டு பட்டணத்துக் கெழுந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, கணிகண்ணனு மவனிடத்தில் ப்ரஸந்நராய் பட்டணத்துக்கெழுந்தருள அவருடன்கூட ஆழ்வாரும் யதோக்தகாரியும் மற்ற எம்பெருமான்களும் தேவதார்த்தங்களும் அவரவர்கள் பக்த ஜநங்களுமாகக் காஞ்சீநகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்நகரமும் இருள்நீங்கி முன்போலவே சோபாயமாநமா யிருந்தது. பல்லவராயனும் பாகவத ப்ரபாவத்தைக் கண்டு ஆஶ்சர்யப்பட்டு ஆழ்வாரை யாஶ்ரயித்து ஜந்மத்தைக் க்ருதார்த்தமாக்கினன். ஆழ்வார் எம்பெருமானிடத்திற் கெழுந்தருளி, தேவரீர் பக்தபராதீநராய் அடியேன் விண்ணப்பம் செய்தபடி செய்தருளிற்முகையால் இதுமுதல் தேவரீர் யதோக்தகாரி, சொன்னவண்ணம் செய்த பெருமாளென்று திருநாமம் சாத்தியருளவேணுமென்று ப்ரார்த்திக்க ஶ்ரியஃபதியும் அதுமுதல் அத்திருநாமத்தைத் திருவுள்ளம் பற்றினன்.

சிலகாலமங்கே யெழுந்தருளியிருந்து பின்பு திருக்குடந்தைக் கெழுந்தருள வேணுமென்று திருவுள்ளம்பற்றி யெழுந்தருளும் போது கடவழியிலொருநாள் மஹாவ்யாக்ரபுரத்திற் கெழுந்தருளினர். அங்கு வேதாத்யயநம் செய்துகொண்டிருந்த சிலப்ராஹ்மணர்கள் ஆழ்வாரைக்கண்டு சூத்ரர் ஸமீபத்தில் வேதாத்யயநம் செய்யக் கூடாதென்று நிறுத்திவிட்டார்கள். ஆழ்வார் இவர்களத்யயநத்திற்கு விரோதம் வேண்டாமென்று தாமப்புறமெழுந்தருளினர். அந்த பாகவதாபசாரத்தினு லவர்களுக்குமேல் அத்யயநம் செய்யவேண்டிய வாக்யம் மறந்துபோய்த் தடுமாறிக்கொண் டிருக்கையில், பரமதயாளுவான ஆழ்வார் மேல்வாக்யத்தி னர்த்தத்தை யவர்களறியும்படி ஒரு கறுப்புகல்லை நகத்தினால் பிளந்து பொகட்டார். அப்போது (க) ‘கூஷ்ணாநாம் வீஹீணாம் நவநிஹிஷ்ணம் கூஷ்ணாகுஷ்டாஷ்டகஷி

(க) யஜுர்வேதம், க-காண்டம் க-அநுவாகம்.


ணா-க்ருஷ்ணேதி வாரேஹ்ணம் நகநிர்பிண்ணம் க்ருஷ்ணகூடாதக்ஷி ணே"என்கிற வாக்யம ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞாபகம் வந்தது, அவர்க ள் ஆழ்வாருடைய ஜ்ஞாநக்கைபவத்தைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு ஆழ் வாரை பகவிதமாகவாராதித்தார்கள். இதனால், சூத்ரரெவ்வளவு பாகவதர்களாகிலும் வேதார்த்த மறியலாமத்தினையொழிய வேத வாக்யத்தை யுச்சரிக்கக்கூடாதென்றும், அக்ரவர்ணஸ்தர்கள் அந்த பாகவதர்களை நிந்திக்கக்கூடாதென்றும் ஆழ்வார் தம்மதஷ்டாநத்தி னல் ப்ரகாசிப்பித்தருளினர்.

பின்பு ஆழ்வார் அந்தக்ராமத்தில் உஞ்சவ்ருத்திசெய்துகொண்டு வீதிகள்தோறு மெழுந்தருளிக்கொண்டிருக்கும்போது அவ்வூர் கோ யிலிலெழுந்தருளியிருக்கிற பெருமாள் ஆழ்வாரெழுந்தருளுமவ்வவ் வீதிகளுக்கெதிர்முகமாகத் திரும்பிக்கொண்டிருந்தார். இதை அர்ச்ச கர் கண்டுசிலருடன் சொல்ல, அவர்கள் வந்து யஜ்ஞவாடத்தில்ப்ராஹ் மணஸமூஹத்தில்சொல்ல, எல்லாருமெழுந்து போய்ப்பார்த்து யதார் த்தமென்று நம்பினர்கள். அவ்வளவில் யஜ்ஞத்துக்கு யஜமாநன் ஆழ் வார் ஸந்நிதிக்குப்போய்த்தன் யஜ்ஞவாடத்துக் கெழுந்தருளவேணு மென்று ப்ரார்த்தித் தெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து ப்ராஹ் மணோத்தமர் நிறைந்திருக்கும் ஸபாமண்டபத்தி லக்ராஸநத்திலெழு ந்தருளப்பண்ணி அர்சாபூஜை பண்ணினான். யாகம் செய்விக்கும் ருத்விக்குக்களு மத்வர்யுக்களு மதைப்பொறுமல் கோபித்துக்கொ ண்டு, ப்ராஹ்மணோத்தமரான எங்களை யநாதரித்து முதலில் சூத்ர னைப் பூஜித்த உனக்கு யாகம் நஷ்டமாய் விட்டதே. ப்ராஹ்மணவ மாகம் செய்த இந்த அந்யாயமெங்காவது நடக்குமா? என்று அவர் கள் வாய்க்கு வந்தபடி பருஷோக்திகளைச் சொல்லி யஜமாநனைக் கல ங்கப்பண்ணினர்கள். யஜமாநன் பாகவத வைபவமறிந்த மஹாநுபா வனுகையால் ஆழ்வார் ஸந்நிதிக்குவந்து விநீதனாய்நின்று, ஓஸ்வாமீ! இந்த மூர்க்கர்களுடைய பருஷோக்தி கர்ணகடோரமா யிருக்கிறது; ஸஹிக்கக்கூடவில்லை; தேவரீர் ப்ரபாவத்தை மறைத்துக்கொண்டெ ழுந்தருளி யிருக்க இது ஸ்வயமன்று; தேவரீர் ப்ரபாவத்தைக் கொஞ்சம் வெளியிடவேணுமென்று ப்ரார்த்திக்க ஆழ்வாரவனிட த்தி லதுக்ரஹம்பண்ணி ஸ்ரீபரமபதிலைய ஸ்யாஸித்தார். ஸ்ரீயஃபதியுமப் போது ஆழ்வார் திருமுடியில் சேஷசாயியாய், சங்கசக்ரதரனாய், பூர் ணசந்த்ரநிபாநநனாய்நீலமேக ஸ்யாமளனாய், பீதாம்பரதரனாய் வாதெ ழுந்தருளி நிற்க, ஆழ்வார் திருவடிகளி லபசாரப்பட்டவர்களெல்லா

ரும்பார்த்து ஆஸ்சர்யமடைந்து பயப்பட்டு ஆழ்வாருடைய ஸ்ரீபாதத்தையாஸ்ரயித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு பகுமுகமாக ஸ்தோத்ரம்பண்ண ஆழ்வார் அவர்களுக்கு விசேஷார்த்தங்களை யுபதேசித்து க்ருதார்த்தராக்கினர்.

பின்பு ஆழ்வார் அங்கிருந்து திருக்குடந்தைக் கெழுந்தருளி பள்ளிகொண்டிருந்த ஆராவமுதாழ்வாரை ஸேவித்து அவர் விஷயமாக (க)"கடந்தகால்கள் கொன்றவோ" என்கிற பாசுரத்தை விண்ணப்பம் செய்ய ஆராவமுதனும் அந்த பரமபோக்யமான பாசுரத்தைத் திருச்செவிசாத்தி எழுந்திருக்க(உ)"வாழிகேசனே" என்று எழுந்திருக்கவேண்டா; அப்படியேயெழுந்தருளியிருக்க வேணுமென்று ஆழ்வார் விண்ணப்பம் செய்ய, அதுமுதல் திருப்பள்ளியிலிருந்தெழுந்திருப்பதுபோலவே இப்போதும் ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கிறார். அதுமுதல் ஆராவமுதனுக்கு உத்தாநசயனனென்று திருநாமமாயிற்று. ஸமஸ்தபாபஹரமான திருக்குடந்தையில் இரண்டாயிரத்து முந்நூறு ஸம்வத்ஸரம் ஆராவமுதனே ஸேவித்துக்கொண்டு கர்சநப்ரவர்த்தகம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்து அந்த திவ்யதேசத்திலேயே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

திருமழிசைப்பிரானுடைய பரமபாவநமான இந்த சிக்ரசரித்ரத்தை பக்தியுக்தராய்க்கேட்கும் மஹாநுபாவரும் வாசிக்கும் பாகவதர்களும் எழுதும் மஹாக்களும் ஐஹிகத்தில் ஆயுராரோக்ய ஐஸ்வர்ய ஸத்ஸந்தாநாதி பலங்களை யடைந்து, சரீரபாதாநந்தரம் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து நித்யஸூரிகளோடு கலந்து நித்யகைங்கர்ய கிரதராய் அபரிச்சிந்நாநந்த யுக்தராயிருப்பார்கள். இந்த ப்ரபாவம் யதாமதி ஸங்க்ரஹமாக எழுதப்பட்டதாகையால் பக்திஸாரபதாம்போஜ பக்தராஜஹம்ஸர் இதில் தோஷவிட்டுப் பாலையே கொள்வார்களென்று ப்ரார்த்திக்கிறேன்.



(க) திருச்சந்தவிருத்தம்-சுக. (உ) திருச்சந்தவிருத்தம்- சுக.

இவர் திருநக்ஷத்ரதனியன்.

ஶ்ரீவாயாம்ஸுகரேஶாஹ்வி ஜகந்மங்ஸாமஸூர்வாஹ்வயே
ஶ்ரீவல்லாரவரோயோம்ஸுத்விஜவராஶ்ரீஹம்ஸஜே ॥

மகாயாம்மகரேமாஸி சக்ராம்சம்பார்க்கவோத்பவம்
மஹீஸாரபுராதீசம் பக்திஸாரமஹம்பஜே

இவர் தனியன்.

ஸுதிவஜுயவிஶ்ரஹாத்மநே ஸுக்திஹாரஜிதசித்தஹாரிணே ।
ஶுக்திஹாயகஶுரோரிவாஶுயோ ஹுக்திஹாரஶுநயேநமோநமஃ ॥

சக்திபஞ்சமயவிக்ரஹாத்மநே சுக்திஹாரஜிதசித்தஹாரிணே
முக்திதாயகமுராரிபாதயோர் பக்திஸாரமுநயேநமோநமஃ

வாழி திருநாமம்.

அன்புடனந்தாதி தொண்ணூற்றுரைத்தான் வாழியே
அழகாருந் திருமழிசையமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையின்மகத் திங்குதித்தான் வாழியே
எழிற்சந்த விருத்தம்நூற் றிருபதித்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனுர் வாழியே
முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்தசொல்லோன் வாழி
நன்புவியில் காலாயிரத்து முக்நூற்றான் வாழியே [யே
நங்கள்பக்தி சாரரிரு நற்பதங்கள் வாழியே.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

இப்படிக்கு,

ஸபாபண்டிதர் தர்க்கதீர்த்தர் ராமாநுஜாசாரியார்.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

இயற்பா

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த
நான்முகன் திருவந்தாதி,
தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.— (நாராயணன் படைத்தா னித்யாதி) ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஸ்மாத் பரத்வத்தை ஸாதித்த பக்திஸாரருடைய ஶ்ரீஸூக்தியான திவ்ய ப்ரபந்தத்தை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி மஹர்ஸே! பக்திஸார க்ஷேத்ராதிபதியானவர் ஶ்ரீபாதங்களையே ஸ்தோத்ரம் பண்ணென்கிறது.

ஶ்ரீராமப்பிள்ளை யருளிச்செய்த தனியன்.

நாராயணன்படைத்தான் நான்முகனை, நான்முகனுக்கு
ஏராரசிவன்பிறந்தானென்னுஞ்சொல்— சீரார்
மொழிசெப்பிவாழலாம் நெஞ்சமே, மொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

அன்வயம்.— நாராயணன் நான்முகனை படைத்தான். நான்முகனுக்கு ஏர் (5) ஆர் சிவன் பிறந்தான் என்னும் சொல் (15) சீர் ஆர் மொழி செப்பி வாழலாம் (15) நெஞ்சமே! மொய் பூ மழிசைப் பரன் அடியே (25) வாழ்த்து. (21)

அர்த்தம்.— ஶ்ரீமந்நாராயணன் நான்குமுகங்களையுடையப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். ப்ரஹ்மாவுக்கு ஸாதகாநுஷ்டாநத்தினால் (ரு) பூர்ணனை ருத்ரன் பிறந்தான்; என்கிற வர்த்தத்தை ப்ரதிபாதிக்குமதாய் (கo) கல்யாணகுணங்களினால் நிறைந்த ப்ரபந்தத்தை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாம். (கரு) நெஞ்சே! அழகிய பூக்களையுடைய திருமழிசைப்பிரானுடைய திருவடிகளையே (உo) மங்களாசாஸநம்பண்ணு. (உக)

வ்யாக்யாகம் —(காராயணன்படைத்தான்கான்முகனை)(க)"வண கோஹவெ நாராயண ஸுஸிக நவ்ருஹ்மா நேஸாநஃ-ஏகோஹ வை காராயண ஆஸீத் நப்ரஹ்மாகேசாநஃ" என்றும்,(உ)"நாராயண வ்ருஹ்ஜ்யோதிஃ-காராயண பரோஜ்யோதிஃ" என்றும்,(கூ)"நாராய ணேவ்ருயீயுஹே-காராயணேப்ரலீயந்தே" என்றும்,(சு)"வகவஹிஷ்டி திவிஸ்ரூதாஸ்வ நாராயணஃ வ்ருஷ்ஃ-ஏகஸ்திஷ்டதி விஸ்வாத்மாஸ சகாராயணஃப்ரபுஃ" என்றும்(ஞ) "ஸ்ருஷ்டிஸ்திதி கூஜ கராணீழ-ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்" என்று தொடங்கி,(ஈ)வகவனவஜ நாஹ்ருஃ. ஏகஏவ ஜகார்த்தகஃ" என்றும்,(எ)"வனகவனவ ஜமகவ்வாதீ ஸக்திரூ நவ்ருகவ்ருஹ்ஃ-ஏகஏவஜகத்ஸ்வாமீ சக்திமாகவ்யயஃப்ரபுஃ" என் றும்அவரவர்கள் ஸர்வேஸ்வரனுலே ஸம்ஹார்யரென்றும்,(அ)"யந்நா ஹிவஷ்ஃஹவ நஹ்ருதாவ ஜாவதிஃ-யங்காபிபத்மாதபவன்மஹாத்மா ப்ரஜாபதிஃ"(கூ)"நாராயணாஹ் ஹ்ருஜாயதே। நாராயணாஹ்ருஜோ ஜ்ருயதே-காராயணத் ப்ரஹ்மாஜாயதே। காராயணத்திருத்ரோ ஜாய தே" (கூ) "விஸ்வவாகஷாயவ்ருஹ்மணஃவ்ருதாய ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய-விஸ்வபாகஷாய ப்ரஹ்மணஃ புத்ராய ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய" என்றும்"(கக)"வ்ருஹ்மணஸ்ஸாபிஸம் பூதச்சிவ இத்யவதார்யகாம்" என்றும்அவரவர் கள் எம்பெருமானுலே ஸ்ருஜ்யரென்றும் சொல்லப்படுகிற வேதார்த் தங்களை ஸர்வாதிகாரமாம்படி "கான்முகனை காராயணன் படைத் தான், கான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான்படைத்தான், யான்முகமா யங்காதி மேலிட்டறிவித்தே னும்பொருளைச் சிந்தாமல் கொண்மினீர் தோர்ந்து" என்று உபக்ரமித்து "இனியறிந்தேன்" என்று கலைக்கட்டியும் "நற்கிரிசை காரணன்தீ" என்றிறே அரு ளிச்செய்தது. அத்தையாயிற்று "காராயணன் படைத்தான் கான் முகனை கான்முகனுக்கோரார் சிவன்பிறந்தானென்னும் சொல்" என்கி றது. என்னும் என்று வேதாந்த ப்ரஸித்தி தோற்றச்சொல்லுகிறது.

(க) மஹோப நிஷத். (உ) தைத்திரீயம்-காராயணஸுக்தம்.
(கூ) ருக்வேதம், காராயணேப நிஷத். (சு) பாரதம், அநுஸ்ம்ருதி.
(ஞ) ஸ்ரீவிஷ்ணு புராணம்-க-உ-சுஞ. (ஈ) ஸ்ரீவிஷ்ணு புராணம், க-உ-சுஞ.
(எ) (அ) (கூ) ருக்வேதம், காராயணேபநிஷத்.
(கூ) ஸாமவேதம்-சாந்தோக்யம். (கக)

சொல் சீரார் மொழியாவது-தமிழ்க்கவயவமாகச் சொல்லுகிற சொற் சீர்களாலே ஆர்ந்த மொழியென்னுதல். என்னும் சொல்லென்று சொல்லப்படுவதுமாய் சீரார்மொழி யென்று (க) "சீர்கலந்த சொல்" என்கிறபடியே கல்யாண குணப்ரசுரமான மொழியென்னுதல். (மொழிசெப்பி) ஏவம்விதமான நான்முகன் திருவந்தாதி ப்ரபந்தத்தை யநுஸந்தித்து. (வாழலாம்) உஜ்ஜீவிக்கலாம். (நெஞ்சே) மநஸ்ஸே! நீ ஸஹகரிக்கவேணும்.

அதாவது.— (மொய்பூ மழிசைப்பரனடியே வாழ்த்து) ப்ரபந்த வக்காவான திருமழிசை யாழ்வார் திருவடிகளையே ஸ்தோத்ரம் பண்ணு. (உ) "இடம்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடி ப்போது" என்னும்படி நிரதிசய போக்யமா யிருக்கிற இத்தையே விரும்பிப்போரு. மொய் பூ என்று செறிந்த பூவென்னுதல், அழகிய பூவென்னுதல். அன்றிக்கே, பூ என்று அழகாகவுமாம். அப்போது மிக்கவழகு என்றபடி.

மொய் பூ என்று-மழிசைக்கு விசேஷணமாதல், திருவடிகளுக்கு விசேஷணமாதல் *படிக்கு விசேஷணமாதல், அடிக்கு விசேஷணமாதல். இப்படி வைலக்ஷண்யத்தையுடைய திருமழிசை யாழ்வார் திருவடிகளையே மங்களாசாஸநம் பண்ணு, என்கிறது. அவர் (ங) "வரழிகேசனே" என்றும், (ச) "மாலே வாழ்த்திவாழ்மினே" என்றும் பகவத்விஷயமங்களா சாஸந ப்ரசம்ஸை பண்ணினாலும், நீ ஆழ்வாரடி விடாமல் மங்களாசாஸநம் பண்ணென்கிறது.

நான்முகன் திருவந்தாதி தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர்திருவடிகளேசரணம்.



(க) பெரியதிருவந்தாதி-அசு.
(உ) இராமாநுசநூற்றந்தாதி-கூஉ.
(ங) திருச்சந்த விருத்தம்; கூக.
* படிக்கு-தேசத்துக்கு.
(ச) திருச்சந்த விருத்தம்-கூஅ.



ஸ்ரீ ரஸ்து.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்.

அவதாரிகை.—முதலாழ்வார்கள் அநுபாவ்யவஸ்துவை நிஷ்கர்ஷிக்க அதுக்குக் களேபிடுங்குகிறார். க்ஷேத்ரஜ்ஞர்பக்கலிலே ஈஸ்வரத்வ புத்தியைப்பண்ணி அநர்த்தப்படுகிற ஸம்ஸாரிகளுக்கு ஈஸ்வரனுடைய பாரதந்த்ர்யத்தை உபபாதித்து அவர்கள் அநீஸ்வரரென்கிறார்.

நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்-யான்முக
அந்தாதிமேலிட் டறிவித்தே னெம்பொருளைச் [மாய்
சிந்தாமற் கொள்மினீர் தேர்ந்து. க.

அந்.— நாராயணன் நான்முகனை படைத்தான். நான்முகனும் தான் (5) முகமாய் சங்கரனை படைத்தான். யான் முகமாய் (10) ஆம் பொருளை அந்தாதிமேலிட்டு அறிவித்தேன். நீர் தேர்ந்து (15) சிந்தாமல் கொண்மினீர். (17)

அர்.—ஸ்ரீமந்நாராயணன் சதுர்முக ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். ப்ரஹ்மாவும் தானே (ரு) ப்ரதாநனுய்க்கொண்டு ருத்ரனை ஸ்ருஷ்டித்தான். நான் ப்ரதாநனுய்க்கொண்டு (கo) (இந்த) கம்பீரமான வர்த்தத்தைத் திருவந்தாதியென்கிறப்ரபந்தத்தில்வைத்து உபதேசித்தேன், நீங்களாராய்ந்து (கரு) (இவ்வர்த்தத்தை) நழுவாமல் (மனதில்) வையுங்கோள். (கஎ)

வ்யா.— அவ.— முதற்பாட்டு.— ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாற்போலே தந்நிவருத்திக்கு ப்ரதாநனேன் நானென்கிறார்.

(நான்முகனே நாராயணன்படைத்தான்) ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டிக் குபகரணமாக நாலுமுகத்தையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். (நான்முகனுந் தான்முதலாய்) பின்பு ப்ரஹ்மாவுந் தானே ப்ரதாநனுய் ருத்ரனே ஸ்ருஷ்டித்தான். (யான்முகமாயித் யாதி) இப்படி தூரவகாஹமானபொருளை நானே யநுபவித்துப் போகில் ஸம்ஸாரிக ளகர்த்தப்படுவரேயென்று செல்லிலும் கல்லிலும் வெட்டுமாபோலே ப்ரபந்தத்திலே யிட்டிதுக்கு ப்ரதாநனுயமி வித்தேன். ஆழ்பொருளேயென்று நசிக்கிறபொருளே யென்றுமாம். (நீர் தேர்ந்து சிந்தாமற்கொள்மின்) ஸம்ஸாரத்தினுடைய தண்மையையும் நான்சொன்ன வர்த்தத்தினுடைய வருமையையுமுணர்ந்து இவ்வர்த்தம் மங்காமல் புத்திபண்ணுங்கோள். க.

அரும்பதவிளக்கம்.— முதற்பாட்டு.— ஸம்ஸாரத்தையுண்டாக்கித்ததனுகுணமானப்ரயோஜநங்களையுங் கொடுத்து ஸம்ஸாரத்தைப் ப்ரவர்த்திப்பிக்கையாலே ப்ரதாநனென்கிறது. பரத்வநிர்ணயம்பண்ணி மோக்ஷோபாயத்தை யுபதேசிக்கையாலே நிவ்ருத்திப்ரதாநனென்கிறது. ப்ரஹ்மாதிகளைப் பரத்வசங்கைபண்ணிப் பற்றுகை நசிக்கிற பொருள். க.

தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்,
ஆரு மறியா ரவன்பெருமை,—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்,
அருள்முடிவ தாழியான் பால். உ.

அந்.—தேருங்கால் தேவன் ஒருவனேயென்று உரைப்பர். அவன்பெருமை (5) ஆரும் அறியார். ஓரும் பொருள் முடிவும் (10) இத்தனையே. எத்தவம் செய்தார்க்கும் ஆழியான்பால் அருள்முடிவது. (15)

அர்.— விசாரித்தால் தேவனென்பவன் (ஸ்ரீமந்நாராயணன்) ஒருவனேயென்று (வ்யாஸாதிகள்) சொல்லுவர்கள். அந்தநாராயணனுடையமஹிமையை (நு) யொருவரு மறியார்கள். (ஸ்ருதிஸ்ம்ருத்யாதிகளில்) ப்ரதிபாதிக்கப்பட்ட பரதத்வவஸ்துவின் பர்யவஸாநமும் (கo) மிவ்வளவே. எவ்விதமானதபஸ்ஸை யநுஷ்டித்தவர்களுக்கும் சக்ரதான்பக்கலுண்டான (க்ருபையினால்தான்) அந்தபலஸ்வின்பலம் (பெறும்படி) முடியும். (கநு)

வ்யா.—இரண்டாம்பாட்டு.—(தேருங்காணித்யாதி) (க)"தகூஜ்ஜி ஜாஸ்ஸோ நோ நாம்ஹோ தஸ்ஸ ஹிஸ்ஸஸ்ஸ தோ தஸ்ஸ வெஸ்ஸ| தகூஜ்ஜேகூஸ்ஸ யோ மீஸ்ஸி நாராயணஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் - தத்வம்ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகைஃ | தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயணஸ்ஸ்ம்ருதஃ" என்னும்படியே விசாரிக்கும்போது ஸர்வேஸ்வரனொருத்தனேயென்று சொல்லுவர்கள். (ஆருமறியாரவன்பெருமை) ஒருத்தருமவனுடைய பெருமையைப் பரிச்சேதிக்கவறியார்கள். (ஓருமபொருள் முடிவுமித்தனையே)ஸ்ருதிஸ்ம்ருதிகளெங்குமாராயுமர்த்தத்தினுடைய நிர்ணயமிவ்வளவே. (எத்தவமித்யாதி) எல்லாஸாதநாநுஷ்டாநம் பண்ணினவர்களுக்கும் அவற்றுக்கும் பலம் ஸர்வேஸ்வரன் பக்கலில் நின்றுமென்கை. உ

அரு.— இரண்டாம்பாட்டு.— பலத்தைக்கொடுக்கை யருளின் கார்யமாகையாலே அருள்முடி வென்று பலத்தைச்சொல்லுகிறது.

பாலில்கிடந்ததுவும் பண்டரங்க மெய்ததுவும்,
ஆலில் துயின்றதுவு மாரறிவார்,—ஞாலத்
தொருபொருளே வானவர்தம் மெய்ப்பொருளே, அப்பில்
அருபொருளே யானறிந்தவாறு. கூ.

அர்.— ஞாலத்து ஒரு பொருளே வானவர்தம் மெய் (5) பொருளே அப்பில் அரு பொருளே, பண்டு (10) பாலில் கிடந்ததுவும் அரங்கம் எய்ததுவும் ஆலில் (15) துயின்றதுவும் யான் அறிந்தவாறு ஆர் அறிவார். (20)

அர்.— லீலாவிபூதிக் கத்விதீயமான காரணவஸ்துவும் நித்யஸூரிகளுக்கு யதார்த்தமாக (ப்ரத்யக்ஷமாக) (கூ) அநுபவிக்கத்தகுந்தவஸ்துவும், ப்ரளயார்ணவத்தில்சயனித்திருந்த கிருபமான மானவஸ்துவுமான ஸர்வேஸ்வரனையும், (அவன்) முன்பு (கo) திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருந்ததையும், ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டதையும், ஆலந்தளிரில் (கூ) கண்வளர்ந்ததையும் நானறிந்தவிதமாக வேறாரறிவார்கள்? (20)

வ்யா.—அவ.— மூன்றாம்பாட்டு.—(பாலில்) வேறொருவரறிவாரில்லை, நானேயென்றது - நானவன் காட்டக்கண்டே னுகையாலேயென்கிறார்.

(க)

(பாலில்கிடந்ததுவும்) அவதாரத்துக்குறுப்பாகத்திருப்பாற்கடலிலே கண்வளர்ந்ததுவும். (பண்டரங்கமெய்ததுவும்) அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கக்கோயிலிலே வந்துகண்வளர்ந்தருளினதும். (ஆலில்துயின்றதுவுமாதியார்). (ஞாலத்தொருபொருளை)* கார்யகாரமெல்லாமழிந்து (க) "ஸ்ரீஜகத்ஸ்ரஷ்டாவே" என்று நிற்கிறவனை. (வானவர்தம்மெய்ப்பொருளை) நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யனாயுள்ளவனை. (அப்பிலருபொருளை) (உ) "கூவகவவஹஜாஜெள - அபஏவலஸர்ஜாதெள" என்று ஜலஸ்ருஷ்டியைப்பண்ணி யதிலே கண்வளர்ந்தருளுகிறவனை. (யானறிந்தவாறு) அவன் காட்டக்கண்ட ஞானமிந்தபடி. ஸ்வயத்நத்தால் காண்பார்க்கறியப்போகாது. ஈ.

ஆறு சடைக்கரந்தா னண்டர்கோன் றன்னேடும், [ருவர்
கூறுடையனென்பதுவுங் கொள்கைத்தே,—வேறொ
இல்லாமை நின்றனை யெம்மானை, எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து. சு.

அர்.— ஆறு சடை கரந்தான் அண்டர்கோன்தன்னேடும் கூறுடையன் (5) என்பதுவும் கொள்கைத்தே? வேறொருவர் இல்லாமை நின்றனை (10) எப்பொருட்கும் சொல்லானை எம்மானை தொகுத்து சொன்னேன். (15)

அர்.— கங்காநதியைத் தன்சடையில் மறையச்செய்தருத்ரனும் அண்டாதிபதியானஸர்வேஸ்வரனேடும் பாகமுடையவன் (ஸமானமான ஐஸ்வர்யமுடையன்) (நி) என்னும்சொல்லை நம்பலாமா? வேறொருத்தர் (தனக்கொப்பு) இல்லாமல் எழுந்தருளியிருக்கிறவனுவாய் (கo) ஸமஸ்தவஸ்துக்களுக்கும் வாசகங்களானஸகலசப்தங்களுக்கு மர்த்தமாகப்ரதிபாதிக்கப்பட்டவனுமான என்ஸ்வாமியை ஸங்க்ரஹமாகச் சொன்னேன். (கடு)

வ்யா.— அவ —காலாம்பாட்டு.— (ஆறு) தாமறிந்தபடியேயுபபாதிக்கிறார்.

(ஆறித்யாதி) ஜடையிலே கங்கையைத்தரித்து ஸாதகனானருத்ரன் ஸர்வசேஷியானவனேடொக்க சேஷித்வத்திலே கூறுடையனென்று இதுவும் சேதநர்க்கு புத்திபண்ணப்படுமோ? (வேறிச்சாதி) (க) "கூஹம்ஸ்ரஷ்டாஸ்ருஜதி வஸவோ ருத்ரஸ்ருத்ரோயஸ்யாத்மேஸ்ரஷ்டாதிரஜநி

---

* காரியகாரணமெல்லாம். (க) சாந்தோக்யம். கூ-உ.
(உ) மநுஸ்மருதி. க-அ ங. தைத். ஈ-எ.

நூஸ கிஜிஷ ஹிய நஜுய. அஹம்ஸர்வஸ்யஜகதः ப்ரபவः ப்ரளயஸ்த தா-மத்தः பரதரம்நாந்யத்கிஞ்சிதஸ்தித்தகஞ்ஜய" என்னும்படி நின்ற வனே. (எம்மானே) எல்லாக்கு ஸ்வாமியானவனே. (எப்பொருட்கும் சொல்லானே) ஸர்வசப்த வாச்யனானவனே. எல்லாப்பொருளுக்கும் சொல்லவேண்டும்படி நின்றவனே யென்றும்மாம்.(தொகுத்துச்சொன் னேன்). ச.

அரு.— காலாம்பாட்டு.— கொ[illegible]த்து-கொள்கை யுடைத்து. எப்பொருட்டும் சொல்லானே எல்லாப்பதார்த்தங்களுக்கும் தன்னைச் சொல்லும்படி. தொகுத்து - சுருக்கி. ச.

தொகுத்தவரத்தனுய்த் தோலாதான்மார்வம்,
வகிர்த்த வளையுகிர்த்தோள்மாலே,—உகத்தில்
ஒருநான்றுநீயுயர்த்தி யுள்வாங்கிநீயே,
அருநான்குமானுயறி. நி.

அங்— தொகுத்த வரத்தனுய் தோலாதான் மார்வம் வகிர்த்த (5) வளை உகிர் தோள் மாலே! உகத்தில் (10) ஒருநான்று உள் வாங்கி நீயே உயர்த்தி நான்கும் (15) அரு ஆனுய் நீயே அறி (19)

அர்.— (தபஸ்ஸுபண்ணி) ஸம்பாதித்த வரத்தையுடையனுய், தோலாமலிருக்கிற ஹிரண்யகசிபுவினுடைய மார்பைப் பிளந்தும் (நி) வளைந்துமிருக்கிற நகங்களையும் புஜங்களையுமுடையவனுய் (ப்ர ஹ்லாதனிடத்தில்) வ்யாமோஹத்தைப்பண்ணினவனே! ஸ்ருஷ்டி காலத்தில் (10) ஒருகால் ஸம்ஹரித்த நீயே ஸ்ருஷ்டித்து தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவரரூபமான நாலுக்கும் (கநி) அந்தர்யாமியா யானவனே (இவை) நீயே யறிந்தருளவேணும். (கக)

வ்யா.— ஐந்தாம்பாட்டு.— (தொகுத்தவித்யாதி) திரட்டினவர த்தை யுடையவனுகையாலே வரங்கொடுத்தவர்களுக்கும் தோலாத ஹிரண்யனுடைய மார்பைப்பிளந்து வளைந்த வுகிரையும் தோள்யு முடையையாய், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே வ்யாமுக்தனுன வனே!(உள்வாங்கி நீயேயுகத்தி லொருநான்று நீயுயர்த்தி)ஜகத்தடை ய ஸம்ஹரித்த நீயே ஸ்ருஷ்டிகாலத்திலே (க) "சூகவமதழ்-ஆத பகதம்" என்னும்படி நிற்கிற உயர்த்தியென்று-அவதரித்தென்னவு மாம். (அருள் நான்குமானுய்)தேவதிர்யங் மநுஷ்ய ஸ்தாவராதிகளி

(க)

லே அந்தராத்மதயா ப்ரகாசித்துநின்ற. (நீயே அறி) இவ்வர்த்தம் வேறொருவ ரறிவாரில்லை, தேவரே அறிந்தருளவேணுமென்கை. (ரு)

அரு.— ஐந்தாம்பரட்டு.— (உகத்தில்) உகக்கை - ஸ்ருஷ்டியா ய், ஸ்ருஷ்டிகாலத்திலே உயர்த்தி (ஆதபகதம்) வெய்யிலானது எங்குமொக்க வ்யாபிக்குமாபோலே அந்தராத்மாவாக எங்கும்வ்யா பித்தாயென்றபடி. நான்கிலு மருவாய்நின்றாய். (ரு)

அறியார்சமண ரயர்த்தார் பவுத்தர்,
சிறியார்சிவப்பட்டார் செப்பில்,—வெறியாய
மாயவனேமாலவனே மாதவனேயேத்தாதார்,
ஈனவரே யாதலாலின்று. சு.

அந்.— சமணர் அறியார். பவுத்தர் அயர்த்தார். சிவப்பட்டார் (5) சிறியார். செப்பில், வெறியாய மாயவனே மாலவனே (10) மாதவனே ஏத்தாதார். ஆதலால் இன்று ஈனவரே. (15)

அர்.— ஜைநர் (உண்மையை) அறியவில்லை. பௌத்தர் (யதார் த்தமறியாமல்) ப்ரமித்தார்கள். சைவர் (ரு) (அறியத்தக்கவஸ்து வையறியாமல்) அற்பரானார்கள். (இவைகளை) சொல்லில், ஸர்வகந்த னுய் ஆஸ்சர்யசேஷ்டிதனுய் ஸர்வாதவ்யாமுக்தனு யிருக்கிற (கo) ஸ்ரியஃபதியை (இவர்கள்) ஸ்தோத்ரம்செய்யார்கள். ஆகையால் (இவ ர்கள்) இப்போது ஹீநர்களே. (கரு)

வ்யா.— அவ.— ஆரும்பாட்டு.— (அறியார்)வேறொருத்தரறி வாரில்லையோ வென்ன, பாஹ்யகுத்ருஷ்டிகளால் அறியப்போமோ வென்கிறார்.

(அறியார்சமணர்,(க) "வ்யாஹ்வியா நாவி-ஸ்யாதஸ்திஸ் யாங்காஸ்தி" என்று அநேகாந்தமாகக் கொள்கையாலே ஆர்ஹதர் தத்வமுள்ளபடி யறியார். (அயர்த்தார் பவுத்தர்) ப்ரதிஸந்தாநம் பண்ணுகைக்கு ஓரநுபவிதாவைக் கொள்ளாமையாலும், ஜ்ஞாநத்தை க்ஷணிகமாகக் கொள்ளுகையாலும் பௌத்தரும்தத்வ ஜ்ஞாநத்தில் அறிவுகெட்டிருப்பார்கள். (சிவப்பட்டார் சிறியார்) ப்ரமாணத்தை யொருபடிகொண்டு ப்ரமேயத்தை யுள்ளபடி கொள்ளாமையாலே

(க) ஸ்ரீபாஷ்யம் உ - உ - சு - பூர்வபக்ஷாபங்யாஸத்தில்.

ருக்ர ஸம்பந்திகளானவர்களுமெளியார்.(செப்பில்)இவர்களைப் பேசில்.(வெறியித்யாதி)நீரதிசய போக்யனுய் ஆஸ்சர்யபூதனுய்வ்யாமுக்தனுய் ஸ்ரியஃபதியான ஸர்வேஸ்வரனே.(ஏத்தாதாரீனவரே) அவர்களேத்தாமையாலே தண்ணியரே. ஹீநரென்றும் அஹீநரென்றும் நான் ப்ரதிபாதிக்க வேணுமோவென்கிறார். சு.

அரு.— ஆறும்பாட்டு.— ப்ரதிஸந்தானம் - ப்ரத்யபிஜ்ஞை. க்ஷணிகமாகையாலே ப்ரத்யபிஜ்ஞை பண்ணப்போகாதென்றபடி-பிழை. சு.

இன்முக நாளையே யாக,இனிச்சிறிதும்
நின்முக நின்னருளென்பாலதே;—தன்முக
நானுன்னையன்றியிலேன் கண்டாய்;நாரணனே
நீயென்னையன்றியிலை. எ.

அர்.— இன்றுஆக, காளையேஆக இனி சிறிது நின்றுஆக, (5) நின் அருள் என்பாலதே. நாரணனே கன்முக (10) நான் உன்னையன்றி இலேன். நீ என்னையன்றி (15) இலை கண்டாய்; (17).

அர்.— இன்முகவுமாம், காளையாகவுமாம், இன்னம் சிறிதுகாலம் கழித்தாகவுமாம். (நி) உன் க்ருபை யென்னிடத்தில் பூர்ணமாயிராகின்றது. ஸ்ரீமந்நாராயணு! அழகியதாக (கo) நான் உன்னை விட்டு வேறொருரக்ஷகரையுடையேனல்லேன். நீ யென்னைத் தவிர்த்துப் (கநி) பரிபூர்ணனுகமாட்டாய். இதைப்பார்த்தருள வேணும். (கஎ).

வ்யா.— ஏழாம்பாட்டு.— (இன்முகவித்யாதி) இன்முகவுமாம், காளையாகவுமாம், சிறிதுகாலம் கழித்தாகவுமாம்; காலவிளம்பமே உன்னுடைய ப்ரஸாதமென் பக்கலிலே.(கன்முகவித்யாதி)காலவிளம்பமென்றுமென்பக்கலி லென்றுஞ் சொல்லிற்றெத்தாலே யென்னில், அகிஞ்சநருக ஸம்ப்ரதிபந்நனெனக்குன்னை யொழிய வேறொருருபாஸ்ரய மில்லாமையாலே. (நாரணனே நீயென்னையன்றியிலை.) பூர்ணனுனக்கு அபூர்ணனுன வென்னையொழிய அபாஸ்ரயமில்லை. உன்னுடைய சேஷித்வ ஸ்வரூபத்தாலும் என்னுடைய சேஷத்வ ஸ்வரூபத்தாலும் விடப்போகாது. எ.

இலேதுணைமற்றென்னெஞ்சே யீசனென்ற,
சிலைகொண்ட செங்கண்மால்சோரா,—கொலைகொண்ட
ஈரைந்தலையா னிலங்கையையீடழித்த,
கூரம்பனல்லால்குறை.. அ

அந்:— என்நெஞ்சே! ஈசனென்ற சிலை கொண்ட (5) செம் கண் மால் சோரா கொலைகொண்ட (10) ஈரைந்தலையான் இலங்கையையீடழித்த கூர் அம்பனல்லால் (15) குறை துணை மற்று இல்லை. (19).

அர்— என்னுருதயமே! ருத்ரனை ஜயித்த தநுஸ்ஸைப் பிடித்த (கு) சிவந்த திருக்கண்களையுடைய ஸர்வேச்வரனுடு பொருக்தாமல் மரணமடைந்த (கo) தசக்ரீவனுடைய இலங்கையையழியச்செய்த கூர்மையான வில்லையுடைய சக்ரவர்த்திதிருமகனை விட (க்ஙு) குறையைத்தீர்க்கும்படியான ஸஹாயம் வேறொன்றில்லை (கக)

வ்யா.— அவ.—(இலேதுணை)புகையிலுண்டனென்று கொண்டு சொல்லியுன்னை யொழிய வேறொன்றறியேனென்கிற தென்னெனில், வேறுள்ளது கழுக்குக்கட்டியாகையாலே யென்கிறார்.

(இலேதுணைமற்று) ஸர்வேச்வரன் துணையென்கை யன்று ஸாத்யம்; மற்றுள்ளார் துணையன்றென்கை. (என்னெஞ்சே) இவ்வர்த்தம் சொல்லுகைக்குப் பாங்கான நெஞ்சே! ஈசனையித்யாதி) வேறொருத்தர் துணையல்லவென்றது - வேறொரு பூர்ணரில்லாமையாலென்கிறது. ருத்ரனென்ற தநுஸ்ஸைப்பிடித்த புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரன் வந்தவதரித்தவிடத்திலும் (க) "நரரூபேழ்கருமேயம்" என்று (உ) "கொத்தித்தலைவன்" என்னும்படி பத்துத்தலையையுடைய ராவணனுடைய லங்கையை மூலையடியே வழிபோக்கினவம்பின் கூர்மையையுடைய சக்ரவர்த்திதிருமகனை யொழியத்தம்முடைய குறையில் வேறொருவர் துணையில்லை. எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை. யாஸ்ரயித்தவர்கள் அசேதநமான க்ரியாகலாபத்தினுடைய கூர்மையை விஸ்வஸித்திருப்பர்கள், இவர்கள் சக்ரவர்த்திதிருமகன் அம்பின் கூர்மையைத் தஞ்சமாகநினைத்திருப்பர்கள். அ.

(க) ஸ்ரீராமாயணம். யுத்தகாண்டம் ஈசு - கக.
(உ) பெரியாழ்வார் திருமொழி. க - கo - கூ.

அரு.— எட்டாம்பாட்டு.— (புகையில்) தெரியாது. ஆனாலும், புகையிலுண்பன் - நீ இத்தனை பொகட்டாலுண்பன்; இல்லாவிட்டால் பட்டினியேயென்னுமாபோலே. நீயோழிய வேறில்லை யென்கிறது-வேறு ரக்ஷகரில்லாமையாலே யென்றபடி. ஈசனை வெல்லுகை-தேவர்களெல்லாருங்கூடி பரதத்வ நிர்ணயம் பண்ணுகைக்காக விஸ்வகர்மாவாலே இரண்டுவில்லையுண்டாக்கி இருவர்கையிலுங் கொடுக்க விஷ்ணு வில்லெடுத்தெய்ய உதியோகித்த வுடனே ருத்ரன் வில்லுங் கையுமாக நடுங்கி விழுகையாலே வென்றதென்கிறது. அ.

குறைகொண்டுநான்முகன் குண்டிகைநீர்பெய்து,
மறைகொண்டமந்திரத்தால்வாழ்த்தி,—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினன்,
அண்டத்தான்சேவடியை யாங்கு. கூ.

அந்.— நான்முகன் குறைகொண்டு குண்டிகைநீர் பெய்து மறை (5) கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி ஆங்கு அண்டத்தான் (10) சே அடியை கறைகொண்டகண்டத்தான் சென்னிமேல் ஏற (15) கழுவினன். (16)

அர்.— ப்ரஹ்மாவானவன் தன்கைச்யத்தைமுன்னிட்டுக்கொண்டு கமண்டலநீர்த்தத்தை வார்த்து வேதங்களில் (ரு) ஸாரமாகச்சொல்லப்பட்ட புருஷஸூக்தாதிமந்த்ரங்களினால் மங்களாசாஸநம்பண்ணி அந்தத்ரிவிக்ரமாவதாரகாலத்தில் அண்டாதிபதியானஸர்வேஸ்வரனுடைய (கo) அழகிய திருவடிகளை நீலகண்டன் சிரஸ்ஸில் விழும்படி (கரு) திருமஞ்சனம்செய்தான். (கசு.)

வ்யா.—அவ.— ஒன்பதாம்பாட்டு.— (குறை) வேறொருத்தர் துணையில்லை யென்றது - பூர்ணராக ஸம்ப்ரதிபந்நரானவர்களுந் தந்தாம் குறையை இவனுக்கறிவித்துத் தங்களபேக்ஷிதம் பெறுகையாலேயென்கிறார்.

(குறைகொண்டித்யாதி) சதுர்முகனை தான் குண்டிகையிலே தர்மத்தை ஜலமாகவுண்டாக்கி. (மறையித்யாதி) ஸ்ரீ புருஷஸூக்தாதிகளாலே மங்களாசாஸநம்பண்ணி. (அண்டத்தான் சேவடியைக்கறைகொண்ட கண்டத்தான் சென்னிமே லேறக்கழுவினன்) திருவுலகளந்தருளின ஸர்வேஸ்வரன் திருவடிகளை அக்காலத்திலே நீல

கண்டனுடைய சிரஸ்ஸிலே படும்படியாகக்காழினுன். ஸாஹஸிக ரான ப்ரஜைகள் வழியேபோய் வழியே வரவேணுமென்று தீர்த்தத் தை மேலே தெளிப்பாரைப்போலே. கூ

அரு.—ஒன்பதாம்பாட்டு.—(குறைகொண்டு) ஆகிஞ்சிக்யாதி கள முன்னிட்டு, குண்டிகை-கமண்டலம், பெய்கை-உண்டாக்குகை.

ஆங்காரவாரமது கேட்டு, அழலுமிழும்
பூங்காரரவணையான் பொன்மேனி,—யாங்காண
வல்லமேயல்லமே மாமலரான்வார்சடையான்,
வல்லரேயல்லரேவாழ்த்து. கo.

அந்.— ஆங்கு ஆரவாரமது கேட்டு அழல் உமிழும் (5) பூ கார் அரவு அணையான் பொன் (10) மேனி யாம் காண வல்லமேயல்லமே? மா (15) மலரின் வார் சடையான் வாழ் த்து வல்லரே யல்லரே. (2o)

அர்.— அக்காலத்திலுண்டான புங்களாசாஸகத்வனியைக் கே ட்டு (சத்ருக்கள் கோஷிக்கிறார்களென்று) நெருப்பைக் கக்கா நின்ற (நு) அழகிய சீற்றத்தையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய அழகிய (கo) திரு மேனியை நாம் ஸேவிக்க ஸமர்த்தரல்லோமோ! அழகிய (கடு) திருநாபிகமலத்திற்பிறந்த ப்ரஹ்மாவும் தொங்குகிற சடையை யுடைய ருத்ரனும் (அவனை) ஸ்தோத்ரம் செய்கைக்குத்தக்க சக் தியையுடையவர்களாக வாகார்களே. (2o)

வ்யா.— பத்தாம்பாட்டு.—(ஆங்காரவாரமதுகேட்டு)(க)"திசை வாழியெழ" என்னும்படி திருவுலகளந்தருளினபோ தண்டான வார்த்தைகேட்டு. (அழலுமிழும்) (உ)"விடங்காலுந்தீவாயரவணை" என்னும்படியே. (பூங்காரரவணையான்) அழகிய சீற்றத்தையுடைய திருவனந்தாழ்வானைப்படுக்கையாக வுடையவனுடைய. சேஷிபக்கல் பரிவாலேவந்த சீற்றமாகையாலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி யிருக்கிறபடி. (பொன்மேனி யாங்காணவல்லமே யல்லமே) அவனு டைய ஸ்ப்ருஹணீயமான திருமேனி ஸ்வரூபத்துக்கு மேலொன்றி ல்லை யென்றிருக்கிற நமக்குக்காணக்குறையுண்டே? (மாமலரானிச் யாதி) திருநாபிகமலத்திலே அல்பவஸ்துவாகை பிறக்கை யென்றும், ஜடை தரையிலேதாழுமபடி ஸாதகாநுஷ்டாநம் பண்ணினானென

(க) திருவாய்மொழி. ந-மு-க. (உ) இரண்டாந்திருவந்தாதி. மச.

ன்றும் ஸ்வசக்தியில் குறைய நினையாதப்ராப்மருத்ராதிகள் வாழ்த்த மாட்டாரே. கo.

அரு.— பத்தாம்பாட்டு.— (பூங்கார்) கார்-கறுப்பாய், சீற்றம். வல்லமே யல்லமே-அல்லவல்லோமே. மாட்டுவோமென்றபடி. ஸ்வரூபம்-விக்ரஹம். வலரேயல்லலே-வல்லாரல்லரே, மாட்டாரென்றபடி.

வாழ்த்துகவாய் காண்ககண் கேட்கசெவி, மகுடம்
தாழ்த்திவணங்குமின்கள் தண்மலரால்,—சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடி யென்தொல்லைமால்தன்னை,
வழாவண்கைகூப்பி மதித்து. கக.

அந்.— சூழ்த்த துழாய் மன்னு நீள் முடி (5) என் தொல்லை மால்தன்னை வழா வண் (10) கை கூப்பி மதித்து மகுடம் தாழ்த்தி (15) தண் மலரால் வணங்குமின்கள். வாய் வாழ்த்துக. (20) கண் காண்க. செவி கேட்க. (24)

அர்.— சுற்றப்பட்ட திருத்துழாய்மாலை பொருந்தியிருக்கிற நீண்ட திருவபிஷேகத்தை யுடையனாய், (நு) என்னிடத்தில் லாபகியாக வ்யாமோஹத்தையுடையனான ஸர்வேஸ்வரனை (க்ஷணமாத்ரமும்) விடாமலழகிய (கo) கைகளைக் கூப்பி த்யர்ஹம்பண்ணித் தலைகளை வணக்கி (கநு) சீதலமான புஷ்பங்களைக்கொண்டு ஸ்ரயிப்பிங்கோள். (உங்கள்) வாய் (அவனை) மங்களாசாஸநம் செய்யட்டும், (20) கண் ஸேவிக்கட்டும். காது (அவன்குணங்களைக்) கேட்கக்கடவதாக. (உச)

வ்யா.— பதிநேராம்பாட்டு.— (வாழ்த்துகவாயித்யாதி) ஸர்வேஸ்வரனை வாழ்த்தக்கண்டவாயும், காணக்கண்டகண்ணும், அவனுடைய குணங்களைக் கேட்கக்கண்ட செவியும், தந்தாமுக்குவகுத்த தொழிலைச்செய்யுக. (மகுடந்தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்) அவன் திருவடிகளிலே வணங்கக்கண்ட தலையை யங்கே தாழ்த்தி புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவன் திருவடிகளிலே உங்கள் தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள். (சூழ்ததவித்யாதி) வணங்குவித்துக்கொள்ளுகைக்கு லக்ஷணம்சொல்லுகிறது, சூழப்பட்ட திருத்துழாய் வர்த்தியாகின்ற ஆதிராஜ்ய ஸூசகமான முடியையுடைய ஸர்வேஸ்வரனுடைய திருவாபரணத்தை மாறாமல்நினைத்து உதாரமானகையைக்கூப்பி (மகுடந்தாழ்த்தி வணங்குமின்கள் தண்

மலரால்) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவன் திருவடிகளிலே உங்கள்தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள். கக.

அரு.— பதிஞ்ஞாரம்பாட்டு.— வழா-வழுவுதலின்றி, மாறுமல். திருநாமமத்யாஹார்யம். மதித்து - நினைத்து. கக.

மதித்தாய்போய்நான்கின் மதியார்போய்வீழ,
மதித்தாய்மதிகோள்விடுத்தாய்,—மதித்தாய்
மடுக்கிடந்த மாமுதலைகோள் விடுப்பான்;ஆழி
விடற்கிரண்டும்போ யிரண்டின்வீடு. க்உ.

அந்.— மதியார் நான்கில் போய் வீழ மதித்தாய். (5) மதி கோள் விடுத்தாய். மடு கிடந்த (16) மா முதலை கோள் விடு ப்பான் போய் (15) ஆழி விடற்கு மதித்தாய். இரண்டும் போய் (20) இரண்டின் வீடு மதித்தாய். (23)

அர்.— (உன்னை) ஆஸ்ரயியாதவர்கள் தேவதிர்யங் மனுஷ்ய ஸ்தாவரங்களாகிற நான்கு யோநிகளிலும் போய் விழும்படி ஸங்க ல்பித்தாய் (டு) சந்த்ரனுடைய வ்யஸநத்தைப் போக்கினாய். மடுவி லிருந்த (க0) பெரிய முதலையின் பலத்தை யழிக்கை க்காக அங்கெழுந்தருளி (கடு) திருவாழியை ப்ரயோகிக்க ஸங்கல்பி த்தாய். ஆனையும் முதலையும் போய் (20) இரண்டினுடைய ஸ்தா நத்தை (முதலை கந்தர்வபதவியையும் யானைதன் திருவடிகளை யும்) அடையும்படி ஸங்கல்பித்தாய். (உக)

வ்யா.— பன்னிரண்டாம்பாட்டு.— (மதித்தாயித்யாதி) (நான் கின்மதியார் போய்வீழமதித்தாய்) வேதத்தாலு மெங்கும் புக் குண்ணே யுணராதவர்கள் அதஃபதிக்கும்படியாக மதித்தாய். (மதி யார் நான்கில் போய்வீழ மதித்தாய்). உன்னைமதியாதவர்களை (க) ‘கஷிவாரஜஸ்ரமஸுபாஸாஸ்ரீஷ்வேவயோநிஷு - கஷிபா ம்யஜஸ்ரமசுபாஸாஸ்ரீஷ்வேவயோநிஷு” என்னும் படியே சதுர்வித யோநிகளிலும் போய் விழும்படிக் கேடாக நினை த்தாய். (மதிகோள்விடுத்தாய்) சந்த்ரனுக்கு வ்யஸநத்தைப் போக்கினவனே! (மடுவித்யாதி) பொய்கையிலே கிடந்தபயாவஹ மானமுதலைஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்பற்றினை பற்றுவிடும்படிக்கேடாக

(க) கீதை, கசு-கஅ.

ஸங்கல்பமின்றிக்கே திருவாழியை விடுகைக்கு நினைத்தாய் (இரண்டும்போ பிரண்டின்வீடு மறித்தாய்) பூர்வாகாரங்களைவிட்டு முதலிகள் தர்வஞ்ஞ ஆனை திருவடிகளைப் பெறும்படிக் கிடாகவும் நினைத்தாய். கஉ

அரு.— பன்னிரண்டாம்பாட்டு.— நான்கில்-நாலுவேதமாதல், நாலுயோகியாதல். தேவாதிசதுர்விதம். மதித்தாய்போய் - மிகவும் நினைத்தாய். இரண்டும்போய் - முதலியாகாரமும் ஆனையாகாரமும் போய். இரண்டின்வீடு - முதலிக்கு சாபமோக்ஷமும் ஆனைக்கு முக்தியுமென்றபடி. (கஉ)

வீடாக்கும் பெற்றி யறியாது, மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்,—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான்வேதமுதற்பொருள்தான்,விண்ணை
வர்க்கும் நற்பொருள்தான் நாராயணன். கஊ

அஉ.— வீடு ஆக்கும் பெற்றி அறியாது மெய் (5) வருத்தி கூடாக்கி நின்று உண்டுகொண்டு உழல்வீர். (10) வீடு ஆக்கும் மெய்ப்பொருள்தான் வேதம் முதல் பொருள்தான் (15) விண்ணவர்க்கு நல் பொருள்தான் நாராயணன். (19)

அர்.— மோக்ஷத்தை யுண்டாக்கும் ஸாதனத்தை யறியாமல் சரீரத்தை (நீ) (உபவாஸாதிகளினால்) வருத்தப்பண்ணிக் குழையாக (அஸாரமாக) ச்செய்து (பட்டிணியாய்) இருந்து (இதன் பலத்தை) புஜிப்போமென்றத்யவஸித்துத் திரிகிறவர்களே! (கo) மோக்ஷத்தைத்தரும் பரமோபாயமும், வேதத்தில் ப்ரதானமாகச் சொல்லப்பட்ட வஸ்துவும். (கடு) நித்யஸூரிகளுக்கு விலக்ஷணமான புருஷார்த்தமும் ஸ்ரீமந்நாராயணனே யாயிருக்கும். (கக)

வ்யா.—பதின்மூன்றாம்பாட்டு.—(வீடாக்கும் பெற்றியறியாது) மோக்ஷத்தைத்தருவிக்கும் ப்ரகாரமறியாது. (மெய்வருத்தி) சிரகாலமுண்ணாதே நின்று பின்பு ஜீவித்து இப்படி அநுஷ்டிப்போமென்று நெஞ்சிலே கொண்டுழல்வீர்! "கொன்றுழல்வீர்" என்னில், உங்களை ஹிம்ஸித்துழல்வீரென்றுமாம். (வீடாக்கும் மெய்ப்பொருள்தான்) மோக்ஷத்தை யுண்டாக்கும் அவ்யவஹித ஸாதனம். (வேதமுதல் பொருள்தான்) மோக்ஷப்ரதனென்று வேதத்திலே ப்ரதிபாதிக்கப்

படுமவன். (விண்ணவர்க்கும் நல்பொருள்தான்.) தித்யஸூரிகளுக்குப் ப்ராப்யனானவன். (நாராயணன்) ஸர்வேஸ்வரன். கஙு.

அரு.— பதின்மூன்றும்பாட்டு.— உபாஸகரைக்குறித்து உங்களுபாஸநத்திலே ப்ரயோஜநமில்லை, அவனே உபாயமென்கிறார். (வீடாக்கு மித்யாதி) கூடாக்கி - சரீரத்தை வற்றப்பண்ணி. கஙு.

நாராயணனென்னே யாளி, நரகத்துச்
சேராமல் காக்குந் திருமால்; தன்—பேரான
பேசப் பெறுத பிணச்சமயர் பேசக்கேட்டு,
ஆசைப்பட் டாழ்வார் பலர். கச.

அந்— நாராயணன் என்னே ஆளி நரகத்து சேராமல் (5,) காக்கும் திருமால் தன்போரான பேச பெறுத (10) பிணம் சமயர் பேச கேட்டு ஆசைப்பட்டு (15) பலர் ஆழ்வார். (17)

அர்.— ஸர்வசேஷியாய் என்னைப் பரிபாலநம்செய்யுமவனுய் நரகத்திற் சேராதபடி (நி) ரக்ஷிக்குமவனை ஸ்ரிய: பதி, தன் திருநாமங்களானவற்றை யதுஸந்திக்க பாக்யமில்லாத (க0) பிணம்போன்ற மதத்தையுடையவர்கள் சொல்லும் விபரீதார்த்தங்களைக் கேட்டு (அதை) ஆசைப்பட்டு (கநி) அநேகர் முழுகிப்போவர்கள். (கள).

வ்யா.—பதிஞலாம்பாட்டு.--(நாராயணனென்னேயாளி) (க)ஸுவி ஜ்ஜமஸ்தாகிலஜ்ஜகதாதிஸு - அகிலஜகத்ஸ்வாமிந்ஸ்மத்ஸ்வாமிந். (நாராகத்தித்யாதி) பிராட்டிக்குப் ப்ரியமாக ஆஸ்ரிதரை ஸம்ஸாரத்தில் ப்ரவேசியாமல் காக்குமவன், இப்படி ஸர்வரக்ஷகனானவனுடைய திருநாமங்களைப் பேசப்பெறுதே ஜீவியாகிறச்செய்தே ம்ருதப்ராயராயிருக்கும் பாஹ்யகுத்ருஷ்டிகள் வேறேயோரர்த்தமுண்டென்று சொல்லக்கேட்டு அநர்த்தப்படுவார் சிலருண்டென்றும் பரமப்ராப்யன் நாராயணனென்று முபபாதிக்கிறார். கச.

அரு.— பதிஞலாம்பாட்டு.— ஆசைப்பட்டு - அவர்கள்சொன்னத்தைக்கேட்டு - அவர்க ளுபாஸிக்கிற விஷயத்தை யாசைப்பட்டு, ஆழ்வார் - அதஃபதிப்பரென்றபடி. கச.

(க) சரணாகதி கத்யம்.

பலதேவ ரேத்தப் படிகடந்தான் பாதம்,
மலரேற விட்டி றைஞ்சி வாழ்த்த—வலராகில்,
மார்க்கண்டன் கண்ட வகையே வருங் கண்டீர்,
நீர்க்கண்டன் கண்ட நிலே. கடி.

அ்.— பல தேவர் ஏத்த படி கடந்தான் (5) பாதம் மலர் ஏற இட்டு இறைஞ்சி (10) வாழ்த்தவலராகில் நீர்க்கண்டன் கண்ட நிலே மார்க்கண்டன் (15) கண்டவகையே வரும்கண் டீர். (17)

அர்.— அநேகமான தேவர்க ளேத்தும்படி பூமியை யளந்தவனுடைய (டி) திருவடிகளில் பூக்களே விழும்படி ஸமர்ப் பித்து வணக்கத்துடன் (கo) மங்களாசாஸநம் செய்தார்களாகில் விஷஜலத்தைக்கண்டத்திலேயுண்டயருத்ரன் கண்டாஸ்ரயித்துநின்ற விருப்பு மார்க்கண்டேயன் (கடி) கண்டவிதத்தில் வந்துகிட் டும். (கள)

வ்யா.—பதினேந்தாம்பாட்டு.-(பலதேவரிக்யாதி)வேறுஸ்ரயணீய நில்லேயென்று தோற்றிநின்றவன் திருவடிகளிலே வேறுராஸ்ரயணீ யாக நினைத்தவர்கள் செய்கிறதொழிலே அவ்யவஹிதமாகத் தாங்கள் செய்யவல்லார் சிலரென்கிறார்.

(பலவித்யாதி) பலதேவ ரேத்தப்படி கடந்தான்பாத மென் கையாலே ஆஸ்ரயணீயவஸ்து விவனென்று அறுதியிட்டு,(மலரேற விட்டிறைஞ்சி வாழ்த்த வலராகில்) என்கையாலே தாங்களாஸ்ர யணீயராக நினைத்தவர்கள் செய்கிற செயலைத் தாங்களும்செய்ய வல்ல ராகில். (மார்க்கண்டனித்யாதி) மார்க்கண்டேயன் தேவனே மோக்ஷா ர்த்தமாகச் சென்று ஆஸ்ரயிக்க, மோக்ஷப்ரதனீஸ்வரனே யென்று காட்டுமிதுவே யுள்ளதென்று ருத்ரன் காட்டக்கண்டு இதுவே யிவ னுக்குள்ளதென்று மார்க்கண்டேயன் கண்டவகையேயதுஸந்திக்கும் அவ்யவஹிதமாக ஸர்வேஸ்வரன் திருவடிகளே ஆஸ்ரயிக்க வல்லவ ராகில் மார்க்கண்டேயன் கண்டவகையே ஸித்திக்கும். கடி.

அரு.— பதினேந்தாம்பாட்டு.— மோக்ஷப்ரதத்வம் ஸர்வேஸ்வர னுக்கொழிய இதரருக்கில்லே யென்னுமத்தை இப்பாட்டில் ஸூ சிப்பிக்கிறார் (பலதேவரித்யாதி). பலதேவரேத்தவென்றுப்ரஹ்மருத்

ராதிகள்மலசிட்டேத்துமாபோலே தாங்களுமேத்தவல்லராகிலென்ற படி. வேறே ராப்ரயணீயர்-ஈஸ்வரனையொழியத் தங்களுக்காப்ரயணீயராக நினைத்த ப்ரஹ்மருத்ராதிகள். கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (பலதேவரித்யாதி). இதுவே - இவனுக்குக் காட்டுகையே, இவனுக்குள்ளதென்று மார்க்கண்டேயன்கண்டது ருத்ரன் மோக்ஷப்ரதனன்று, ஸர்வேஸ்வரன் மோக்ஷப்ரதனென்று கண்டவகை. இத்தால் அவனே பரதேவதை, இதரரன்றென்றபடி. நீர்க்கண்டன கண்டநிலை மார்க்கண்டன் கண்டவகையே வருமென்றன்வயம். கரி.

நிலைமன்னு மென்னெஞ்ச மந்நான்று, தேவர்
தலைமன்னர் தாமே மாற்றுக,—பலமன்னர்
போர்மாள வெங்கதிரோன் மாயப் பொழில்மறைய,
தேராழி யால்மறைத்தா ரால். கசு.

அந்.— அந்நான்று தேவர் தலை மன்னர் தாமே (5) மாற்றுக பல மன்னர் போர் மாள (10) வெங்கதிரோன் மாய பொழில் மறைய தேராழியால் (15) மறைத்தாரால் என் நெஞ்சம் நிலைமன்னும். (18)

அர்.— அந்தபாரதயுத்தகாலத்தில் தேவர்களுக்குத் தலைவரான ராஜாவாகிய தாமே (நி) சத்ருவாய்க்கொண்டு அநேகம் ராஜாக்கள் யுத்தத்தில் மூடிந்துபோம்படியாகவும், (கo) உஷ்ணகிரணனுஸ்ர்யன் மறையும்படியாகவும், பூமி காணுமலிருள்மூமெபடியாகவும் தேர்ச்சக்கரத்தினால் (கரி) (ஸ்ர்யனை) மறைத்தவரா லென்னெஞ்சம் தரித்து நிற்கப்பெற்றது. (கஅ)

வ்யா.— பதினாறும்பாட்டு.— (நிலைமன்னுமென்னெஞ்சம்) ஸர்வேஸ்வரனை ஆஸ்ரிதார்த்தமாகக்கண்டதென்றநிதபடியாலேபறக்கிறதென்றிலேபாரம்வைத்தாற்போலே (க) "அஜ்ஞாபஹரிதஃ-சஞ்சலம் ஹ்ரீமதஃ" என்னுசொல்லப்படுகிறநெஞ்சம்நிலைபெற்றது ப்ராப்திதசையில்பிறக்குமதிங்கேயிருக்கப்பிறந்தது. (அந்நான்று) பாரதஸமரத்திலே. (தேவர்) (உ) "ராஜாயிராஜஷ்ரேஷ்டா-ராஜாதிராஜஸ்ஸ்வேஷாம்" என்றுஞ்சொல்லப்படுகிற* அயர்வறுமமரர்களதிபதி. (தலைமாற்றுகவித்யாதி) (கூ) "விஷ்டப்ருத்-விஷ்டதக்ஷம்" இத்யாதிப்படியே

(க) கீதை. கூ-டீசு. (உ)
(கூ) டாரதம் உத்யோக கூ).

பாண்டவசத்ருக்கள் துலைக்குசத்ருக்களாகவும், பலமன்னர்கள் முடியும் படியாகவும் (க) "ஹ்ருஷீகேஷ க்ருஷ்ணாய-ப்ரேஷ்யதே ஸ்ரீர்யஃ" என்னுதன்னஞ்ஞையாலே ஒரு முஹூர்த்தக்தப்பாமலுதிப்ப தஸ்த்தமிப்பதாகிற ஆதித்யன் மறையவும், எதிரிகளுக்கிவ்விடத்தில் அஸ்த்தமித்ததில்லை யென்று குறைசொல்லப்போகாதபடி பூமியடைய மறையவும், ஆதித்யனே ப்ரகாசகமான திருவாழியாலே மறைத்தாரானவாலே யென்னெஞ்சம் ஸ்திதித்தது, கித்யஸூரிகளுக் கவ்வருகாய்(உ) "ஸதைகாஹ்ருஷ்யதாஹ்ருஷ்யஜ்ஞஃ-தைர்யகாம ஸ்ஸத்யஸங்கல்பஃ" என்றோதப்படுகிற தாமேத்மக்குத் தகாதபடியான பொய்யைச் செய்கையாலே என்னெசுஸ்திதித்தது. ஈச்வரன் அஸத்யப்ரதிஜ்ஞனும் ரக்ஷிப்பானனை பின்பு நம்முடைய ஸத்ய தபச்சமாதிகளைக்கொண்டென்னென்கை (கூ) "ந்ருஹோ நாஹமவதி-ர்யாஸோகாமபகவதி" இஸ்லோகத்தில் நினைத்த உரமிப்பாட்டால் சொல்லுகிறது.

அரு.— பதினெறும்பாட்டு.— பொழில்-பூமி. பூமியடைய ஆதித்யகிரணம் மறையவு மென்றபடி. கஈ.

ஆல நிழல்கீ ழுறநெறியை நால்வர்க்கு,
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞாலம்
அளந்தானை யாழிக் கிடந்தானை, ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு. கஎ.

அச்.— மெய் தவத்தோன் ஞாலம் அளந்தானை ஆழி (5) கிடந்தானை ஆல்மேல் வளர்ந்தானை தான் வணங்குமாறு (10) அறமெறியை மேலையுகத்து ஆலநிழற்கீழ் நால்வர்க்கு உரைத்தான். (15)

அர்.— ஸத்யமான தபஸ்ஸையுடையருத்ரன், பூமியை யளந்தவனும். திருப்பாற்கடலில் (ரு) பள்ளிகொண்டவனும், ஆலந்தளிரில் திருக்கண்வளர்ந்தவனுமான ஸர்வேச்வரனைத் தானஞ்ஞையிற் கவிதமான (கo) தர்மமார்க்கத்தை மூன்யுகத்தில் வடவ்ருக்ஷத்தின்சாயையில் அகஸ்த்யபுலஸ்த்ய தக்ஷமார்க்கண்டேயர்களான நால்வர்க் குபதேசித்தான். (கரு)

(க) வைதத்திரீயம். ஆநந்தவல்லி-எ. (உ) சாந்தோக்யம். அ-த.
(கூ)

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டு.— (ஆலநிழல்கீழ்) ஜ்ஞாநாதிகளை ருத்ரனும் தன்னேயாஸ்ரயித்தவர்களுக்கு இவ்வர்த்தத்தையிறே சொல்லிற்றென்கிறார்.

(ஆலநிழற்கீழித்யாதி) பகவத் பஜநத்தில் அநுஷ்ட்டிதமான அநுஷ்ட்டாநத்தையுடைய ருத்ரன் ஆலநிழலிலே அகஸ்த்யாதிகளுக்கு தர்ம மார்க்கத்தைப்பண்டு சொன்னன். (ஞாலமித்யாதி) சொன்னபடி எங்ஙனேயென்னில், அவதாரத்துக் கடியாக திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்து சிறியார் பெரியாரென்ன வாசிவையாதே எல்லார்தலைகளிலுமொக்கத் திருவடிகளை வையாதே வைத்து வையாதே எல்லாரையும் தன்வயிற்றிலேவைத்து பவ்யராயிருப்பதொரு ஆலிலையிலே கண்வளர்ந்து ரக்ஷிக்குமவனைத் தான்வணங்கும் ப்ரகாரத்தைச்சொன்னன். கஎ.

மாறுயதானவனே வள்ளுகிரால், மார்பிரண்டு
கூறுகக்கீறியகோளரியை,—வேறுக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே,மற்றவரைச்
சாத்தியிருப்பார்தவம்.¿ கஅ.

அ.—மாறுய தானவனை மார்பு வள் உகிரால் (5) இரண்டு கூறுக கீறிய கோள் அரியை வேறுக (10) ஏத்தியிருப்பாரை, மற்று அவரை சாத்தியிருப்பார் தவம் (15) வெல்லும். (16)

அர்.— சத்ருவான ஹிரண்யாஸுரனுடைய மார்பை க்கூரிய நகங்களினால் (நு) இரண்டுபிளவாகப் பிளந்த பலத்தையுடைய நரஸிம்ஹனை விலக்ஷணமாக (கo) ஸ்தோத்ரம்பண்ணியிருப்பவர்களை, அப்படி ஸ்தோத்ரம்பண்ணுகிறவிலக்ஷணரானஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்தோத்ரம் பண்ணுகிறஸ்ரீவைஷ்ணவர்களின் தபஸ்ஸு (கநு) ஜயிக்கும். (கசு)

வ்யா.— அவ.— பதினெட்டாம்பாட்டு.— (மாறுயவித்யாதி) குறிகொண்டு பகவானையே பஜிக்குமதிலும் ததீயரைப் புருஷகாரமாகக் கொண்டு பற்றுகை சீரியதென்கிறார்.

(மாறுயவித்யாதி) ஈஸ்வரனென்றுபாராதே தனக்கெதிரியான ஹிரண்யனைக்கூரிய வுகிராலேமார்விரண்டு பிளவாகக்கீண்ட நரஸிம்ஹத்தை. (வேறுக வித்யாதி) வேறுக வேத்தியிருப்பாராகிறார் (க) "அந்திய

(க) திருப்பல்லாண்டு. இ.

நூ நான்முகன் திருவந்தாதி, ககூ-பா. தவஞ்செய்து. உ0-பா, நீயே.

ம்போதிலரியுருவாகி அரியை யழித்தவனைப் பல்லாண்டு" என்று ரக்ஷகனுக்குத் தீங்குவருகிறதென்று திருப்பல்லாண்டுபாடும் பெரியாழ்வார்போல்வார். (முற்றிச்யாதி) சாத்தியிருப்பாராகிறார், (க) "வல்லபரிசுவரி விப்பரேல்" என்று பெரியாழ்வார் பக்கலிலே ஈச்வரத்த பராயிருக்கு மாண்டாள்போல்வார். தவம்-ஸாக்ருதம். கஅ.

தவம்செய்து நான்முகனுல் பெற்றவரத்தை,
அவம்செய்த வாழியானன்றே,—உவந்தெம்மைக்
காப்பாய் நீ காப்பதனை யாவாய்நீ,வைகுந்த
மீப்பாயுமெவ்வுயிர்க்கும் நீ. ககூ

அந்.— தவம்செய்து நான்முகனுல் பெற்ற வரத்தை அவம் செய்த (5) ஆழியானன்றே. உவந்து எம்மை காப்பாய் நீ; (10) காப்பதனை ஆவாய் நீ; எவ்வுயிர்க்கும் வைகுந்தம் (15) ஈப்பாயும் நீ. (17)

அர்.— (ஹிரண்யன்) தபஸ்ஸுபண்ணி ப்ரஹ்மாவினிடத்திலிருந்து ஸம்பாதித்த வரத்தை யழியச்செய்த(ரு)திருவாழியையுடையவனன்ரு. ஸந்தோஷத்துடனே யெங்களை ரக்ஷிக்கிறவனும் நீயே;(கo) ரக்ஷிக்கவேணுமென்கிறவங்கல்பத்தை யுடையவனும் நீயே; ஸகல ப்ராணிகளுக்கும் பாமபத (கரு) மளிப்பவனும் நீயே. (கo).

வ்யா.— அவ.— பத்தொன்பதாம்பாட்டு.— (தவஞ்செய்து) ப்ரதானரானவர்களை மறிவுகெடுமிடத்தில் ரக்ஷிக்கும் நீயே யெனக்கு எல்லாவபிமத ஸித்தியும் செய்வாயென்கிறார்.

(தவமித்யாதி) தபஸ்ஸைப்பண்ணி ப்ரஹ்மாவின் பக்கலிலே ஹிரண்யாதிகள் பெற்றவரத்தை யழித்து வரங்கொடுத்தவர்களுக்கும் குடியிருப்புக்கொடுத்த நீயே. (உவந்தித்யாதி) உன்பேறுக ரக்ஷிப்பாய் நீ; ரக்ஷணந்தான் நீ; புநராவர்த்தியில்லாத மோக்ஷத்தை (எவ்வுயிர்க்கு மீப்பாய் நீ). ககூ

நீயேயுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்,
நீயேதவத்தேவதேவனும்,—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும்,அண்டத்
திருசுடரு மாயவிவை. உ0

(க) நாச்சியார் திருமொழி. க). க).

அந்.—உலகெல்லாம் நீயே. நிற்பனவும் நின்அருளே. தவம் (5) தேவர் தேவனும் நீயே. எரி சுடரும் (10) மால் வரையும் எண் திசையும் அண்டத்து (15) இரு சுடருமாய இவை நீயே- (19)

அர்.—லோகங்களுக்கெல்லாம்காரணமானவன் நீயே. அவ்வஸ்துக்களிருப்பதும் உன்னுடையக்ருபையினாலேயே. தபஸ்ஸுபண்ணி (கூ) தேவர்களானப்ரஹ்மாதிகளுக்கும் தேவன் நீயே. ஜவலிக்கிற அக்நியும், (கo) பெரிய பர்வதங்களும், எட்டுத் திக்குகளும், அண்டத்துக்குள்ளிருகிற (கடி) இரண்டு தேஜஸ்ஸுக்களான சந்த்ரஸூர்யர்களுமாகிய இவையெல்லாவற்றுக்குமந்தர்யாமியானவன் நீயே, (கஉ)

வ்யா.—இருபதாம்பாட்டு.—(நீயே யுலகெல்லாம்) உன்னை யொழிய ஜகத்துக்கு ப்ருதக்ஸ்திதியும் ப்ருதகு பலம்பழ மில்லை- (நின்னருளேநிற்பனவும்) உன்ப்ரஸாதமடியாகப் பெறும் பேறுநிலைநிற்பது. (நீயேதவத்தேவதேவனும்.) ஸாதநாநுஷ்டாநம்பண்ணி. அதிகாரம்பெற்றவர்களுக்கும். உன்னையொழிய ஸ்திதியில்லை. (நீயேயெரி சுடருமித்யாதி) பிரித்துச்சொல்லுகிறதென், அக்நியும் குலபர்வதங்களு மெட்டுத்திக்கும் அண்டாந்தர் வர்த்திகளான சந்த்ராதித்யர்களுமான இப்பதார்த்தங்களுமெல்லாம் உன்னதீதம். உல.

இவையாபிலவாய் திறந்தெரிகான்ற,
இவையாவெரிவட்டக்கண்கள்,—இவையா
வெரிபொங்கிக்காட்டு மிமையோர்பெருமான்,
அரிபொங்கிக்காட்டு மழகு. உக.

அந்.—பிலம் வாய் திறந்து கான்ற இவைஎரி (5) ஆ. எரி வட்டம் இவைகண்கள் ஆ. எரி (10) பொங்கி காட்டும் இமையோர் பெருமான் அரி (15) பொங்கி காட்டும் இவைஅழகு ஆ. (19)

அர்.—பிலம்போன்ற திருப்பவளத்தைத் திறந்து (அதிலே) எரிகிற இந்தஅக்நிகள் (கூ) ஆஸ்சர்யங்களாகக்காண்கின்றன, கொள்ளிவட்டம் போன்ற இந்ததிருக்கண்கள் ஆஸ்சர்யமாகக்காண்கின்றன. அக்நிபோல்(கo)கிளர்ந்து தோன்றுமவனுய் நித்யஸூரிகளுக்கதிபதியானவன் ஸுலபம்ஹுமாய் (கடி) க்கிளர்ந்து தோற்றும் இவ்வழகுகள் ஆஸ்சர்யங்கள். (கஉ)

வ்யா.—அவ.—இருபத்தோராம்பாட்டு.—(இவையா) இப்படி பூர்ணனுபவனுக்கு ஆஸ்ரிதார்த்தமாக வரும் சீற்றத்தைச் சொ

ல்லுகிறது. நரஸிம்ஹத்தைத் தத்காலத்திலே அநுஸந்தித்தாற்போலே பேசுகிறார்.

(இவையித்யாதி)(க) "ஸுவாக்ய நாஸுர - அவாக்யகாதர:" என்று தத்வமிருக்கிறபடி. பிலம்போலே யிருக்கிற வாயைத்திறந்து அக்நியை யுமிழாநின்ற யிவை; அக்நியை யுமிழாநின்று பிலம்போலேயிருக்கிறவா யிவை. (இவையா வெரிவட்டக்கண்கள்) "உயிர்க்கெல்லாம் தாயா யளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்" என்கிற கண்கள் (உ)கொள்ளிவட்டம்போலே யிருக்கிற கண்கள். (இவையா வித்யாதி) அக்நிபோலே ஜாஜ்வல்யமான திருமேனியையுடையனுய் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனனவன். அன்றிக்கே, அக்நிகொடுக்கும் ஹவிஸ்ஸையுடைய இந்த்ராதிகளுக்கு நிர்வாஹகன். (அரியித்யாதி) நித்யஸூரிகள் பரியவிருக்குமவன் ஆஸ்ரிதார்த்தமாக நரஸிம்ஹமாய்ச் சீறிக்காட்டினவழகு. உக'

அழகியான்தானே யரியுருவன்தானே,
பழகியான்தாளேபணிமின்,—குழவியாய்த்
தானேழுலகுக்கும் தன்மைக்கும்தன்மையனே,
மீளுயுயிரளிக்கும் வித்து. உஉ.

அ.— தான் குழவியாய் ஏழுலகுக்கும் வித்து தன்மைக்கும்(5) தன்மையன் மீளுய் உயிர் அளிக்கும் அரியுருவன் (9) தானே அழகியான் தானே பழகியான் தாளே (15) பணிமின். (16)

அர்.— தான் (ப்ரளயகாலத்தில்) மூக்தசிசுவாயிருந்து ஏழுலகங்களுக்கும் காரணமாய் அவ்வுலகங்களிலுள்ளவைகளுக்கும் (நி) காரணமாய் மத்ஸ்யாவதாரமெடுத்து ப்ராணிகளை ரக்ஷிக்குமவனுய் நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு (கய) தானே ஸுந்தரனுய் தானே (சிரகாலஸஹவாஸத்தினுல்) பழகியிருக்கிறவனனஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை (கரு) ஆஸ்ரயியுங்கோள். (ககூ)

வ்யா.— அவ.— இருபத்திரண்டாம்பாட்டு.— (அழகியா னித்யாதி) நரஸிம்ஹ வ்ருத்தம் ப்ரஸ்துதமானது பின்னுட்டு கிறது.

(அழகியான்) ஆபத்ஸகனனவனே அழகியான். (பழகியான்தானேபணிமின்) த்யஜிக்கிற சரீரத்திலும் வர்த்திக்கிற சரீரத்திலும் புதியிகோளாயிருந்துள்ள நீங்கள், உங்கள் கையி லுங்களைக் காட்

(க) சாந்தோக்யம். ந - ஸ. (உ) திருமொழி. எ - க - கூ.

டிக்கொடாதே காலத்ரயத்திலும் சரீரங்களில் ப்ரவேசிக்கைக்கு நிதாநத்தையும் அதுக்குப்பரிஹாரத்தையும்அறியுமவனே ஆஸ்ரயிக்கப்பாருங்கோள். ப்ரக்ருதிவாசியறிந்து பழையனுயப் பரிஹரிக்கும் வைத்யனே வ்யாதிக்ரஸ்தர்பற்றுமாப்போலே. (குழவியித்யாதி) கார்யகாரமான ஜகத்துக்கும் தன்மாத்ரையான ஜகத்துக்கும். (தானேமூலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) எல்லா சேதநாசேதநங்களுக்கும் இவற்றின்குணத்துக்கும் குணி. (தன்மைக்கும்) தன்பக்கலிலேவைக்கும். (க) "ஸஹேவ-ஸதேவ" என்று சொல்லப்படுகிறவனே தன்னே யழியமாறி சேதநரைரக்ஷிக்கும் த்ரிவிதகாரணமும். உஉ.

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு.—கார்யகாரமானதொடங்கி பிழை. ஆனாலும் குழவியா யென்றதுக்குச் சேர தன்மைக்கு மென்னுபாடாக்தரமாய், இவற்றையெல்லாம் தன்வயிற்றிலே வைக்கும் ஸ்வபாவத்தையுடையவ னென்றபடி. உஉ.

வித்துமிட வேண்டுங் கொலோ, விடையடர்த்த
பத்தியுழவன்பழம் புனத்து,—மொய்த்தெழுந்த
கார்மேக மன்ன கரு மால்திரு மேனி,
நீர்வானங் காட்டும் நிகழ்ந்து.

அந்.—விடை அடர்த்த பத்தி உழவன் பழம் (5) புனத்து வித்தும் இடவேண்டுங்கொலோ. மொய்த்து எழுந்த (10) கார் மேகமன்ன கருமால் திருமேனி நீர்வானம் நிகழ்ந்து (15) காட்டும். (16)

அர்.—(ஏழு) வ்ருஷபங்களைக் கொன்றவனுய்ப் பக்திக்குக் க்ருஷிபண்ணினவனுன ஸர்வேஸ்வரனுடைய அகாதியான (நி) ஸம்ஸாரமாகிறபூமியில் ஸுக்ருதமாகிறவிரையும் விரைக்கவேணுமா. திரண்டு கிளர்ந்த (கo) கருமேகம்போன்ற நீலவர்ணனுன ஸர்வேஸ்வரனுடைய திருமேனியை நீர்கொண்டமேகம் எதிரேநின்று (கநி) காட்டாநின்றது. (கசு)

வ்யா.—அவ.—இருபத்துமூன்றும்பாட்டு.—(வித்தும்) அறிந்த தசையிலு மறியாத தசையிலும் ஸர்வேஸ்வரனே ரக்ஷகனுக அறிதியிட்டபின்பு தன் அபிமதஸித்திக்கு இவன் செய்யவேண்டும் ஸு-

(க) சாந்தோக்யம். சு - உ.

க்குதமுண்டோ? ஸத்தாப்ரயுக்தையான இச்சை இவனுக்குண்டாகில் மேலுள்ளதுக்கயன்கடவனாகில் இயன்செய்யுமம்சமென்னென்கிறார்.

(வித்துமிடவேண்டுங்கொலோ) வித்தென்று சொல்லுகிறது ஸுக்ருதக்ஷேத்ர (விடையடர்த்தபத்தியுழவன்) நப்பின்னைப்பிராட்டிக்குதவிற்றென்று வ்யாஜமாய் ஆஸ்ரிதருடைய பக்திக்குக் கர்ஷகனாவனுடைய. (பழம்புனத்து) பழம்புனங்களில் விதைக்கவேண்டாதேயுத்பன்னமாகுமாபோலேயாத்ருச்சிகஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாகவிறே ஈச்வரன் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவது. (மொய்த்தெழுந்தவித்யாதி) ருசிபிறந்தபின்பு ப்ராப்தியளவும் நாம் தரிக்கைக்கு அவன் திருமேனிக்குப்போலி யுண்டென்கை. செறிந்தெழுந்த கார்காலத்தில் மேகம்போலே ஸ்யாமமான திருமேனியையுடைய ஸர்வேச்வரனுடைய நிறத்தை நீர்கொண்டெழுந்த காளமேகம்காட்டும். உக:

அரு.—இருபத்துமூன்றும்பாட்டு.—நிகழ்ந்து - வர்த்தியா நின்றுகொண்டு. காட்டும் - ப்ரகாசித்துக் காட்டவுமாம். உக.

நிகழ்ந்தாய்பால்பொன்பசுப்புக்கார்வண்ணம்நான்கும்,
இகழ்ந்தா யிருவரையும் வீயப்—புகழ்ந்தாய்,
சினப்போர்ச் சுவேதனைச் சேனை பதியாய்,
மனப்போர் முடிக்கும் வகை. உச.

அக்.—பால் பொன் பசுப்பு கார் நான்கு (5) வண்ணம் நிகழ்ந்தாய் இருவரையு வீய இகழ்ந்தாய் (19) சேனைபதியாய் மனம் போர் முடிக்கும்வகை சினம் (15) போர் சுவேதனை புகழ்ந்தாய். (18)

அர்.— வெண்மை சிவப்பு பச்சை கறுப்பு (ஆகிற) நான்கு (நி) வர்ணங்களையுடையனாய் (நா யுகங்களிலும்) அவதரித்தாய். பாண்டவகௌரவர்களிருவருடையஸைந்யங்களையும் நசிக்கும்படி உபதேசித்தாய். (கo) ஸேநாபதியாய்க்கொண்டு (தான்) ஸங்கல்பித்த யுத்தத்தைத் தலைக்கட்டும்படி சீறிக்கொண்டு (கநி) யுத்தத்திலே அர்ஜுநனைக் கொண்டாடினாய். (கஅ)

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு.—(நிகழ்ந்தாயித்யாதி) அவ்வோயுகங்களில்சேதநர்க்கு ப்ரியமானவெண்மைதொடக்கமானநிறங்களை

யுகந்தாய். (இகழ்ந்தாயிருவரையும்விய)மதகைபர்கள்.முடிய அன்றிக்கே,(க) "எல்லாச்சேஷியுமிருகிலத்தவிதத" என்னுமாபோலே கூத்வயத்தையும் முடித்தவென்றுமாம். (புகழ்ந்தாயித்யாதி) இனத்த போரையுடைய ஸ்வேதவாஹனனான அர்ஜுநன் ஸைகைக்கு நிர்வாஹகனாய், தர்மபுத்ரன் முடிசூடவும் ,த்ரௌபதி குழல்முடிக்கவும், துர்யோதநாதிகள் முடியும்படியும் நினைத்தபோரைமுடிக்க வல்லனகப்புகழ்ந்தாய். உசை.

அரு.— இருபத்துநாலாம்பாட்டு.— நிகழ்ந்தாய் - ப்ரகாசித்தாய். ப்ரகாசமுகப்பின் கார்யமாகையாலே உகந்தா யென்கிறது. புகழ்ந்தாய் - அர்ஜுநனைக் கொண்டாடினாய். உசை.

வகையால் மதியாது மண்கொண்டாய், மற்றும்
வகையால் வருவதொன் றுண்டே,—வகையால்
வயிரங் குழைத்துண்ணும் மாவலிதா னென்னும்,
வயிரவழக் கொழித்தாய் மற்று. உரு.

அக்.— மதியாது வகையால் மண் கொண்டாய் மற்று (5) வகையால் வயிரம் குழைத்து உண்ணும் தானென்னும் (10) மாவலி வயிரவழக்கு ஒழித்தாய். வகையால் வருவது (15) மற்றும் ஒன்றுஉண்டே. (17.)

அர்.— (மஹாபலியை) லக்ஷ்யம்செய்யாமல் உபாயத்தினால் பூமியை வாங்கிக்கொண்டாய். அதற்குமேல் (நீ) உபாயத்தினால் வச்சிரத்தை புனைத்து புஜித்து தாபிமாநியான (ன்) மஹாபலியோடு சாத்ரவமுறையைப் போக்கினாய். இவ்வுபாயங்களினால் (உனக்கு) வருவது (கீ) (ஆஸ்ரிதரக்ஷண மொழிய) வேறொரு ப்ரயோஜநமுண்டோ ?(கை) உரு.

வ்யா.— அவ,— இருபத்தைந்தாம்பாட்டு.— (வகையால்)ஆஸ்ரிதார்த்தமான செயலொழிய தனக்கென்ன வொருசெய லில்லையென்கிறார்.

(வகையாலித்யாதி) மஹாபலியுகக்கும் ப்ராகாரத்தாலே பூமியை அநாயாஸேநகொண்டாய். (மற்றித்யாதி.)ஒரு உபாயத்தாலே வைரத்தைபுஜித்து அத்தாலேமிடுக்கனாக அபிமாநித்திருக்கிறமஹாபலியையுடைய சாத்ரவமுறையைத்தவிர்த்து மஹாபலி பக்கல்நின்றும் ராஜ்

(க) திருவாய்மொழி. ஈ - உ - ஈ.

யம் மீட்டுக்கொடுத் துபகரித்தாய். (மற்றும் வகையால் வருவதொன் றுண்டே) இவற்றுனக்கு ப்ரயோஜநமாவதொன் றுண்டோ.

அரு.— இருபத்தைந்தாம்பாட்டு.— வயிரங்குழைத்துண் ணும் மாவலி - இந்த்ரனுடே வைரத்தையுண்டாக்கி லோகத்தை புஜிக் கிற மஹாபலி. தானென்னு மெண்கையாலே அபிமாநம் தோற்று கிறது. உடு.

மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை,
கற்றைச் சடையான் கரிக்கண்டாய்,—எற்றைக்கும்
கண்டுகொள் கண்டாய் கடல்வண்ணு; யானுன்னைக்
கண்டுகொள் கிற்கு மாறு. உசு.

அந்.— யான் மற்றுஒருவரையும் தொழுவார் இன்மை. கற்றை (5) சடையான் கரிக்கண்டாய். கடல்வண்ணு ! யான் உன்னை (10) எற்றைக்கும் கண்டுகொள்கிற்குமாறு கண்டுகொள் கண்டாய் (13)

அர்.— நான் (உன்னை யொழிய) வேறொருவரையு மாஸ்ரயணீயராக உடையே னல்லேன். (இதற்கு) கொடுங்கின (ரு) ஜடையையுடையருத்ரன் ஸாக்ஷி. ஸமுத்ரம்போன்றதிருமேனி யையுடையவனே ! நா னுன்னை (ம) யெப்போதும் ஸேவிக்கும்படி கடாக்ஷித் தருளாய். (கூ) உசு.

வ்யா.— இருபத்தாறும்பாட்டு.— (மற்றுத்தொழுவாரின்யாதி) நான் தேவதாந்தரஸமாஸ்ரயணம் பண்ணேனென்னு மிடத்துக்கு ஆள்பிடித்துத் தொழுவித்துக்கொள்ளும் ருத்ரன் ஸாக்ஷி. (எற்றைக்குமித்யாதி) ஸ்ரமஹரமான வடிவையுடைய நீயே மேலுமிந்த நின்மைகளிற்கும்படியாகப் பார்த்தருள வேணும். உசு.

மாருன் புகுந்த மடநெஞ்சம், மற்றுவும்
பேருகக் கொள்வனே பேதைகாள்;—நீருடி
தான்காண மாட்டாத தாரகல சேவடியை,
யான்காண வல்லேற் கிது. உஎ.

அந்.— பேதைகாள் ! நீருடிதான் காணமாட்டாத தார் அகலம் (5) சே அது அடியை காணவல்லேற்கு மால் (10) தான்

புகுந்த மடம் இது நெஞ்சம் (15) யான் மற்று பேறாக கொள் வனே? (19)

அர்.— ஓ புத்தி சூன்யர்களே! பஸ்மோத்தூளிதனைருத்ரனுக்கும் காணவரிதாய் மாலியினுலலங்கரிக்கப் பட்டதாய் (போக்யதையினால்) அபரிச்சிந்நமாய் (நு) சிவந்திருக்கிற அந்தத் திருவடிகளை ஸேவிக்கத்தக்கபாக்யமுடைய எனக்கு ஸர்வேஸ்வரன் (கo) தானேவந்து ப்ரவேசித்த விதேயமான இந்த மனஸ்ஸை யுடையேனை (கரு) நான் (அத் திருவடி யொழிய) வேறொன்றைப் புருஷார்த்தமாகக் கொள்வனே? (கசு) உஎ.

வ்யா.— அவ.— இருபத்தேழாம்பாட்டு.— (மாறன்) பார்த்த ருளவேணுமென் றபேக்ஷித்தபடியே அவன் பார்க்கப்பெற்ற படியைப் பேசுகிறார்.

(மாறன் புகுந்தமடநெஞ்சம்)ஈஸ்வரன் வ்யாமுக்தனைப் புகு ரும்படி ருசியுடைய நெஞ்சு! (நீறித்யாதி) ருத்ரன் காணமாட்டாத தாரையுமகலத்தையு முடைத்தான திருவடிகளைக்காண வல்லேனை வெனக்கு இதொழிய வேறே யொன்றைப் பேறாகக்கொள்வனே? வேறொன்றைப் பேறாக நினைத்திருக்கு மறிவுகேடர்காள்! உஎ.

அரு.— இருபத்தேழாம்பாட்டு.—மாறன்-மால்தான்.நெஞ்சம். நெஞ்சையுடையனை, பிழை. உஎ.

இது விலங்கை யீடழியக் கட்டியசேது,
இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்,— இதுவிலங்கை
தாளெடுங்க வில்நுடங்கத் தண்டா ரிராவணனை,
ஊளெடுங்க வெய்தா னுகப்பு. உஅ.

அந்.— இலங்கை யீடழிய கட்டிய இது சேது; (5) விலங்கு வாலியை வீழ்த்த இதுவும். இது (10) இலங்கைதான் ஓடுங்க வில் நுடங்க தண் (15) தார் இராவணனை ஊன் ஓடுங்க எய்தான் (20) உகப்பு. (21)

அர்.— லங்காபுரியை யழிக்கைக்காகக் கட்டின இந்த ஸேதுவும், (நு) ம்ருகமான வாலியை விழச்செய்த இதுவும், இந்த (ம) லங்காபுரி நசிக்கும்படியாகவும் சார்ங்கம் வளையும படியாகவும் குளிர்ந்த (கரு) மாலையையுடைய ராவணனை ஊடைய ப்ராணன் நசிக்கும்படியாகவும் அடித்தவனுடைய (உo) ஸந்தோஷ வ்யாபாரங்கள். (உக) (உஅ)

வ்யா.—இருபத்தெட்டாம்பாட்டு.—(இதுவித்யாதி) லங்கைக்கு மூலையடியே வழிபோம்படியாகக் கட்டின திருவணையிது. கட லடைபட்ட போதே லங்கையழிந்ததென்று நினைக்கும்படியாக. (இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்) திர்யக்கான வாலியைமுடித் ததுவும். (இது வித்யாதி) லங்கை கெருக்குண்ணவும் ஸ்ரீசார்ங்கம் வளையவும் மதிப்பழிய ராவணன் முதுகு கூனவும் எய்தான். (இது அவனுகப்பு) அவன் லீலை. வாலியைக்கொன்ற ஜயமும், ராவண வத மும் புத்திஸ்தமான படியாலே யிதுவென்கிறார். ஒரு முஷ்டியிலே நின்றெய்ய நெஞ்சழியும்படியாயிறே இருப்பது. உஅ.

அரு.—இருபத்தெட்டாம்பாட்டு.—கட்டிய சேது - கட்டின சேது. தண்டார்-மாலையுடையவனுகையாலே மதிப்பனென்கிறது. இது என்று ப்ரத்யக்ஷமாதல், ஈடுபாடாதல். அப்படி ஈடுபடித்தானோ வென்ன அருளிச்செய்கிறார் (ஒரு முஷ்டீத்யாதி) முஷ்டி – விற் பிடித்தபிடி. உஅ.

உகப்புருவம் தானே யொளியுருவம் தானே,
மகப்புருவம் தானே மதிக்கில்,— மிகப்புருவம்
ஒன்றுக்கொன் ரோசனையான் வீழ, ஒருகணையால்
அன்றிக்கொண் டெய்தா னவன். உக.

அந்.— மிக புருவம் ஒன்றுக்கொன்று ஓசனையான் வீழ அன்றிக்கொண்டு (5) ஒருகணையால் எய்தானவன் மதிக்கில் தானே உகப்பு (10) உருவம். தான் ஒளி உருவம் தானே. (15) மகப்பு உருவம் (17)

அர்.— மிகவும் ஒருபுருவத்துக்கொருபுருவம் யோசனை நீளமுடையகும்பகர்ணன் விழும்படி சிரிக்கொண்டு (ரு) ஒருபாணத்தினு லடித்தசக்ரவர்த்தித்திருமகனை த்யாகித்தால் அவனே மநோஹரமான (கo) திருமேனியையுடையனுயிருப் பன். அவனே உஜ்ஜ்வலமான திருமேனியை யுடையனு யிருப் பன். அவனே (கரு) ஆஸ்சர்யகரமான திருமேனியையுடை பனுயிருப்பன். (கஎ) (உக)

வ்யா.—இருபத் தொன்பதாம் பாட்டு.— (உகப்புருவமித்யாதி) க)" ஊஹாஹூஹீ தாவித்த - இச்சாக்ருஹீதாபிமத " - என்னும்படி

(க) ஸ்ரீ விஷ்ணுபுராணம்-சு-ரு-அசு.

ஸ்வவ்யதிரிக்தர்க்கும் ப்ராப்யமாய்த்தனக்குமபிமதமாய் ரஜஸ்தமோ மிஸ்ரமின்றிக்கே நிஷ்க்ருஷ்ட ஸத்வமாகையாலே நிரவதிகதேஜோ ரூபமாய் (உ) "ரூவஉஹூஜரூஉஹூஹஸ - ரூபமஸ்யத்தரோமஹத்" என்னும்படியான ஆஸ்சர்யமான வடிவையுடையவனுமான சக்ர வர்த்தித் திருமகன்தானே ஒருபுருவத்துக் கொருபுருவம் யோசனை நீளமுடைய கும்பகர்ணன் பட்டுவிழும்படி ஸங்கல்பத்தாலன்றிக்கே திருச்சரத்தாலே தேவகார்யஞ் செய்தாஞ்கை யன்றிக்கே தனக்கே வந்ததாகச் சிற்றத்தை யேறிட்டுக்கொண் டெய்தான். மதிக்கில் இவனுடைய திருமேனியை யொன்றால் பரிச்சேதிக்கப் போகா தென்கை. உ-கூ

அரு.—இருபத்தொன்பதாம் பாட்டு, — மகப்புருவம் - பெரிய வடிவு. அன்றி-சீறி, மதிக்கில் - பரிச்சேதிக்கப் பார்க்கில். ஏதாத்ருச மாகையாலே பரிச்சேதிக்கப் போகாதென்றபடி. உகூ.

அவனென்னை யாளி யரங்கத் தரங்கில்,
அவனென்னை யெய்தாமற் காப்பான்,—அவனென்ன
துள்ளத்து நின்றூ னிருந்தான் கிடக்குமே,
வெள்ளத் தரவணையின் மேல். கூ0.

அ.— அரங்கத்தவன் என்னை யாளி. அவன் என்னை (5) அரங்கில் எய்தாமல் காப்பான். என்னது உள்ளத்து (10) நின்றூன் இருந்தான் அவன் வெள்ளத்து அரவணையின்மேல் (15) கிடக்குமே ! (16)

அர்.—கோயிலில்கண்வளர்ந்தருளுகிறவன் என்னை ரக்ஷிக் கிறவன். அவ னென்னை(நி) ஸம்ஸாரமாகிறகாடகசாலையில் ப்ரவே சியாதபடி ரக்ஷிப்பன். என் ஹ்ருதயத்தில் (க0) நின்றவனும் வீற்றிருந்தவனுமான அவன் க்ஷீராப்தியில் சேஷ சயனத்தில் (கரு) கண்வளருமோ ! (கசு) கூ0.

வ்யா.—மூப்பதாம்பாட்டு.—(அவனித்யாதி) அரங்கத்தவனென் னையாளி.(அரங்கித்யாதி)(கூ)"பிறவிமா மாயக்கூத்து" என்றுஸம்ஸா ரமாகிற காடகசாலையி லென்னை ப்ரவேசியாமல் காப்பாரார்? பெரு மாளே.(அவனித்யாதி)என்ஹ்ருதயத்திலேபுகுந்தகைக்கு அவலாப்ர

(க) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-சு-ரு-எ0. (கூ) திருவாய்மொழி-அ-சு-கூ.
(உ) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-சு-எ-எ0.

தீக்ஷையுக்கோயிலிலே கண்வளர்ந்தருளி அவகாசம்பெற்று என்னுருதயத்திலே நிற்ப திருப்பதாகிறவனுக்குத் திருப்பாற்கடலிலே படுக்கையில் கண்ணுறங்குமோ? கூ.

மேல் நான்முக னரனையிட்ட விடுசாபம்,
தான் நாரண னெழித்தான் தாரகையுள்,—வானோர்
பெருமானை யேத்தாத பேய்காள், பிறக்கும்
கருமாயம் பேசில் கதை. கூக.

அந்.— மேல் நான்முகன் அரனை இட்டவிடு சாபம் (5) நாரணன் தான் தாரகையுள் ஒழித்தான். வானோர் (10) பெருமானை ஏத்தாத பேய்காள்! பிறக்கும் கரு (15) மாயம் பேசில் கதை. (கி)

அர்.— முற்காலத்தில் சதுர்முகன் ருத்ரனுக்குக் கொடுத்த விடக்கூடியசாபத்தை(நி) நாராயணன் தானே பூலோகத்தில் போக்கினான். நித்ய ஸூரிகளுக்கு (கo) நிர்வாஹகனான (அந்த ஸ்ரீமந் நாராயணனை) ஸ்தோத்ரம்செய்யாத பிசாசங்களே! பிறக்கும்போது கர்ப்பத்தில்படுகிற (கநி) ஆஸ்சர்யமானதுக்கத்தைச் சொல்லப்புகில் கதையாயிருக்கும். (கஅ) (கூக)

வ்யா:— அவ.—மூப்பத்தோராம் பாட்டு.—(மேல் நான்முகன்) நீங்க ளாஸ்ரயணீயராக நினைத்தவர்களுக்கு மிடர்வந்த விடத்திலே அவ்விடரைப் பரிஹரிக்கு மவனையன்றே பற்றவடுப்ப தென்கிறார்.

(மேலித்யாதி) பண்டு சதுர்முகன் ருத்ரனை(க) "கூவாமீ கும்ஹவி ஷ்ணவி-கபாலீத்வம்பவிஷ்யஸி" என்று சபித்த சாபத்தைத்தரணியிலே யெல்லாருமறிய ஸர்வேஸ்வரன் போக்கினான்.(வானோரித்யாதி) ஒருத்தன் தலையையறுத்துப் பாதகியாக, ஒருத்தன்சோச்யனாக, இருவருடைய வ்யஸனத்தையும் போக்குவதுஞ் செய்து நித்யஸூரிகளுக்கு ப்ராப்யனானவனை ஏத்தாத அறிவுகேடர்காள்! (பிறக்குமித்யாதி) இவ்வறிவுகேடு கிடக்கப் பிறவிக் கடியான கர்ப்பஸ்தாகத்திலுள்ள ஆஸ்சர்யம் சொல்லப்புகில் மஹாபாரதம். கூக

அரு.—மூப்பத்தோராம்பாட்டு.—தாரகை என்று தரணியென்றபடி.

கதைப்பொருள்தான் கண்ணன் திருவயிற்றி னுள்ள,
உதைப்பளவு போதுபோக் கின்றி,—வதைப்பொருள்தா
வாய்ந்த குணத்துப் படாத தடைமிஞை, [ன்
ஆய்ந்த குணத்தா னடி. கூஉ.

அந்.— கதைப் பொருள்தான் கண்ணன் திருவயிற்றில் உள்ள உதைப்பளவு (5) போதுபோக்கின்றி வாய்ந்தகுணத்து படாதது வதைப்பொருள்தான், ஆய்ந்த (10) குணத்தான் அடி அடைமிஞை. (13)

அர்.— இதிஹாஸபுராணாதிகள் ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸங்கல்பத்தினால் நிலைபெற்றன. ஒருக்ஷணமும் (ரு). வ்யர்த்தமாகப்போக்காமல் திருக்கல்யாணகுணங்களி லீடுபடாதது ஒரு வஸ்துவே. (ஆகையால்), ஹேயப்ரத்யநீகமான (கo) கல்யாணகுணங்களையுடையவனுடைய திருவடிகளைப் பற்றுங்கோள். (கூ) (கூஉ)

வ்யா.—மூப்பத்திரண்டாம் பாட்டு.— (கதையித்யாதி) ஸம்ருதிதிஹாஸ புராணங்கள் ஸர்வேஸ்வரனுடைய ஸங்கல்பத்திலுள்ளன. (உதைப்பித்யாதி) ஒருகொடி மாத்ரம் போதுபோக்கின்றி. (வாய்ந்த குணத்தில் படாதது வதைப் பொருள்தான்) ஆஸ்சர்ய குணத்தி லீடுபடாதது பரஹிம்ஸை. (ஆய்ந்த குணத்தா னடியடைமிஞை) ஹேய ப்ரத்யநீகமான குணத்தை யுடையவன் திருவடிகளை ஆஸ்ரயியுங்கோள். கூஉ.

அரு.—மூப்பத்திரண்டாம்பாட்டு,—போக்கின்றி-போக்காமல். சீக்ரமாக. (அகப்படாதது)-ஸத்குணத்திலே. பரஹிம்ஸை கூடாது, ஆகையாலே, அத்தைவிட்டு அவனை யாஸ்ரயியுங்கோளென்றபடி. பரஹிம்ஸை-ஆத்மாபஹாரமாகவுமாம். கூஉ.

அடிச்சகடம் சாடி யரவாட்டி, ஆனை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு,—வடிப்பவள
வாப்பின்னைத் தோளிக்கா வல்லேற்றெருத்திறுத்து,
கேட்பின்னு மானன் குறிப்பு. கூகூ.

அந்.— அடிசகடம் சாடி அரவு ஆட்டி (5) ஆனை பிடித்து ஒசித்து பேய் முலை (10) நஞ்சு உண்டு வடி

பவளம் வாய் (15) தோளி பின்னேக்காவல் ஏறு எருத்து (20) இறுத்து பின்னும் குறிப்பு கோவானுன். (24)

அர்.—திருவடிகளினுல் சகடாஸுரனே யுதைத்துக் காளியனே (வாலேப்பிடித்து) ஆட்டி (கூ) குவலயாபீடத்தைப் பிடித்து (அதின் கொம்மை) முறித்துப் பூதனேயின் முலேயில் (கo) விஷத்தை யமுதுசெய்து அழகிய பவளம்போன்ற வதரத்தையும் (கஙி) தோள்களேயுமுடைய கப்பின்னேப் பிராட்டிக்காக பலிஷ்டங்களான வ்ருஷபங்களின் முசிப்பை (உo) முறித்துப் பின்னும் ரக்ஷிப்ப தினுல் ஸர்வஸ்வாமியானுன். (உச) கூகூ.

வ்யா.—அவ,—மூப்பத்து மூன்றும் பாட்டு,—(அடிச்சகடம்) அஸாதாரணனேயானகப்பின்னேப்பிராட்டிக்கும்அல்லாதார்க்குமொக்க விரோதியைப் போக்குமவன் என்கிறார்.

(அடியித்யாதி) திருவடிகளாலே சகடையழித்து, காளியனேத் துறத்தி, குவலயாபீடத்தைப்பிடித்து அதின்கொம்பையநாயாஸே முறித்து, பூதனேயைமுடித்து, அழகிய பவளம்போன் றிருக்கிற அதரத்தையும் அழகிய தோளேயுமுடைய கப்பின்னேப் பிராட்டிக் காகத் தன்னேயொக்கிவலிய வ்ருஷபங்களினுடைய கருத்தைப்போக்கி, ஸ்வாபாவிகமான சேஷித்வத்தைப் பின்னேயு முதறிப் படுத்தான் திருவுள்ளத்தாலே. கூகூ.

குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானே யேத்த,
குறிப்பெனக்கு நன்மை பயக்க,—வெறுப்பனே
வேங்கடத்து மேயானே மெய்வினே நோயெய்தாமல்,
தாங்கடத்தும் தன்மையான் தாள். கூச

அந்.—கோட்டியூர் மேயானே வேங்கடத்து மேயானே ஏத்த (5) எனக்கு குறிப்பு. நன்மை பயக்க எனக்கு (10) குறிப்பு. மெய் வினே நோய் எய்தாமல் (15) தான் கடத்தும் தன்மை யான் தாள் வெறுப்பனே! (20)

அர்.— திருக்கோட்டியூரில் நித்யவாஸம்பண்ணுமவனேயும் திருமலேயி லெழுந்தருளியிருக்குமவனேயும் ஸ்தோத்ரம்பண்ண (கூ) எனக் கபிப்ராயம், நல்லகார்யங்களே வ்ருத்திபண்ண எனக் (கo) கபிப்ராயம், சரீரஸம்பந்திகளான கர்மங்களேயும் வ்யாதிகளேயும் அடையாமற்படி (கஙி) தானே கடத்திவைக்கும்

ஸ்வபாவத்தையுடையஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை உபே
க்ஷிப்பனே? (உ0) கச.

வ்யா.—அவ.—முப்பத்து நாலாம்பாட்டு.—(குறிப்பெனக்கு) உகந்தருளின தேசங்களிலேஎனக்காகஅவன்வர்த்திக்க "வரில்பொக டேன் கெடில் தேமேடன்" என்றிருக்கவோ வென்றுகிர்.

(குறிப்பித்யாதி) திருக்கோட்டியூரிலே யெனக்காக ஸங்கி ஹீதனனவனே யேத்தக்கருத்து. (குறிப்பித்யாதி) ஸம்ஸ்லேஷத் தால் வந்த உத்கர்ஷம் பிறக்கக்கருத்து. (வெறுப்பித்யாதி)வந்த ஸம் பத்தை வேண்டா வென்று தள்ளுவனே? (மெய்யித்யாதி) சரீரமடி யாக வந்த வ்யாதியும், வ்யாதிக்கு ஹேதுவான கர்மமும் கிட்டாமல் மாற்றுமவன் திருவடிகளை மறப்பனே? கூ.

அரு.—மூப்பத்துநாலாம்பாட்டு.—மறப்பனே-அத்யாஹார்யம்.

தாளா லுலக மளந்த வசைவே கொல்,
வாளாகிடந்தருளும் வாய்திறவான்,—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்,
ஐந்தலைவாய் நாகத் தணை. கூடு.

அந்.— நீள் ஓதம் வந்து அலைக்கும் மா (5) மயிலை மா அல்லிக்கேணியான் ஐந்தலை வாய் (10) நாகம் அணை வாளா கிடந்தருளும்! வாய்திறவான் (15) தாளால் உலகம் அளந்த அசைவே கொல். (19)

அர்.— பெரிய அலைகள் வந்து அடிக்கிற ஸ்லாக்யமான (கி) மயிலாபூருக்கடுத்த ஸ்லாக்யமான திருவல்லிக்கேணியிலெழுந் தருளியிருக்கிறவன் ஐந்துசிரஸ்ஸுக்களையும் முகங்களையு முடைய (ல) திருவநந்தாழ்வானுகிற படுக்கைமேல் சலியாமல் கண்வளர்ந்தருளுகிறன். ஒருவார்த்தையும்சொல்லான். (கடி) (இது) திருவடிகளினுல். லோகங்களை யளந்த ஆயாஸத்தினுலேயா யிருக்கலாமோ? (கக) கூடு.

வ்யா.— அவ.— முப்பத் தைந்தாம்பாட்டு — (தாளால்) லௌகிகர் படியைக் கண்டு வெறுப்பனே வென்கிறார்.

(தாளாளித்யாதி) (க)"வடி வினையில்லாமலர்மகள்மற்றை நிலமகள் பிடிக்கும்மெல்லடி" என்றுபிராட்டிக்குங் கூசித்தொடவேண்டும் திருவடிகளைக் கொண்டு காடுமேடையு மளந்து திருமேனி அலற்றதோ? இல்லாதத்தை யுண்டாக்கும் ஸங்கல்பம் போராதோ? உண்டானத்தை உஜ்ஜீவிப்பிக்க. (வாளாவித்யாதி) ஏக ரூபமாகக் கிடப்பதும் செய்து வார்த்தையும் பேசுகிறிலன். (நீளோதமித்யாதி) நீர்க்கரையைப்பற்றிக் கண்வளருகிறதும் ஸ்ரமத்தின் மிகுதியென்றிருக்கிறார். கூடு,

அரு.—மூப்பத்தைந்தாம் பாட்டு. — பரியுமத்தனை யன்றே வென்கிறாரிதிலென்றபடி. அசைவு-தளர்த்தி, வாளா-வெறுமனே. ஒரு படியாய்-ஏகரூபமாயென்றபடி. கூடி.

நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்,
நாகத்தணையரங்கம் பேரன்பில்,— நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனு வான். கூசு.

அந்.— ஆதி நெடுமால் அணைப்பார் கருத்தன் ஆவான் (5) நாகத்தணை குடந்தை வெஃகா திருவெவ்வுள் நாகத்தணை (10) அரங்கம் பேர் அன்பில் நாகத்தணை பாற்கடல் (15) கிடக்கும். (16)

அர்.— ஜகத்காரணனை ஸர்வேஸ்வரன் பக்தஜநங்களுடைய ஹ்ருதயத்தில் ப்ரவேசிக்கைக்காக (கூ) திருவநந்தாழ்வானிறபடுக்கையின்மேல் திருக்குடந்தையிலும் திருவெஃகாவிலும் திருவள்ளூரிலும் திருவநந்தாழ்வானிறபடுக்கையின்மேல் (கo) கோயிலிலும் திருப்பேரிலும்திருவன்பிலிலும் திருவநந்தாழ்வானிறபடுக்கையின்மேல் திருப்பாற்கடலிலும் (கடு) சயனித்துக் கொண்டிருக்கிறான். (கசு) கூசு

வ்யா.— அவ.— மூப்பத் தாறும் பாட்டு.— (நாகத்தணை) பலவிடத்தில் கண்வளர்ந்தருளுகிறதும் ஆயாஸத்தாலே யென்றிருக்கிறார்.

(நாகத்தணையித்யாதி) திருக்குடந்தையிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறதும், கோயில்தொடக்கமான எல்

(க) திருவாய்மொழி-கூ-உ-கo.

லாத் திருப்பதிகளிலும் திருப்பாற் கடலிலும் ஜகத்காரண பூதனை ஸர்வேஶ்வரன் தோள்தீண்டியாகக் கண்வளர்ந் தருளுகிறதும், தான் புகுரப்புக்கால் ஆணையிடாதார் ஹ்ருதயத்திலே புகுருகைக்காக இப்படி அவஸர ப்ரதீக்ஷணை வேண்டுவ தெனென்னில் தாயாகையாலே. கூ.

அரு.—மூப்பத்தாறும் பாட்டு.—கீழ்ப்பாட்டுக் கதுகூணமாக அவதாரிகையிலர்த்தம். அவஸரப்ரதீக்ஷணை - பாட்டுக்குத்தாத் பர்யம். கூ.

வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு,
தானுலவு வெங்கதிருந் தண்மதியும்,— மேனிலவு
கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும்,
அண்டம் திருமா லகைப்பு. கூ எ.

அந்.—வான் உலவு தீ வளி மா (5) கடல் மா பொருப்பு தான்உலவு வெம் (10) கதிரும் தண் மதியும் மேல் நிலவு (15) கொண்டல் பெயரும் திசைஎட்டும் சூழ்ச்சியும் அண்டம் (20) திருமால் அகைப்பு. (22).

அர்.—ஆகாசமும் சலிக்கிற அக்நியும் காற்றும் பெரிய (நு) ஸமுத்ரமும் பெரிய மலைகளும் ஸஞ்சரிக்கிற உஷ்ண (கo) கிரணங்களையுடைய ஸூர்யனும் சீதகிரணங்களையுடைய சந்த்ரனும் மேலே ஸஞ்சரிக்கிற (கநு) மேகங்களும் சேதநர்களும் எட்டுத்திக்குக்களும் ஆவரணமும் ப்ரஹ்மாண்டமும் (உo) ஸ்ரியஃபதியினுடைய ஸங்கல்பத்தினுண்டானவை. (உஉ)

வ்யா.—அவ.—மூப்பத் தேழாம்பாட்டு.—(வானுலவு) ஆதிமே மொலி விவரிக்கிறது.

(வானுலவு) சூழ்ச்சியும்-ஆவரணமும். இவையெல்லாம் திருமா லகைப்பு-எழுச்சி; ஸ்ரியஃபதியினுடைய ப்ரயத்நத்தாலே யென்கை.

அரு.—மூப்பத்தேழாம்பாட்டு.— வளி-காற்று. பொருப்புத் தான். கொண்டல்-மேகம். பெயரும்-சேதநரை உபலக்ஷிக்கிறது; சேதநருமென்றபடி. கூ எ.

அகைப்பில் மனிசரை யாறு சமயம் [ல்
புகைத்தான், பொருகடல்நீர்வண்ணன்;—உகைக்குமே
எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையும்,
அப்போ தொழியு மழைப்பு. கூ.அ.

அ.—அகைப்புறில் மனிசரை ஆறு சமயம் புகைத்தான் (5) பொரு கடல் நீர் வண்ணன் உகைக்குமேல் (10) எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும் அழைப்பும் (15) அப்போது ஒழியும். (17).

அர்.—மதிப்பில்லாத மனுஷ்யர்களை ஆறுவிதமான (நாஸ்திக) மதங்களில் ப்ரவேசிப்பித்தவனும் (கு) அலையடிக்கிற ஸமுத்ரத்தின் ஜலம்போன்ற காந்தியையுடையவனுமானஸர்வேஶ்வரன் உபேக்ஷித்தால் (கo) ஸமஸ்ததேவதைகள் வாலாட்டுகிறதும் ஸகலவிதமான யாகாதிக்ரியைகளும் அத்தேவதைகளிலுஹ்வாகமும் (கடு) அப்போது கடக்கமாட்டாது. (கள)

வ்யா.—மூப்பத் தெட்டாம்பாட்டு.—(அகைப்பில் மனிசரை) எழுச்சியில்லாத மனிசரை; அளவில்லாதவர்களை யென்கை. (ஆறு சமயமித்யாதி) க்ஷுத்ரபதார்த்தங்களை யகப்படுத்தப் புகைக்குமாபோலே பாஹ்யஸமயங்களைக் காட்டி யகப்படுத்தினன் ஸர்வேஶ்வரன். (உகைக்குமேலித்யாதி) நெகிழநிற்குமாகில் தேவதாந்தரங்கள் (க) "ஸ்ஸுரோஹுடி ஈஸ்வரோஹம்" என்று க்ஷுத்ரஜந்துக்கள் வாலாட்டுமாபோலேபண்ணு மபிமானமும் அத்தேவதைகளை யாஶ்ரயிக்கைக்காகப்பண்ணும்வ்யாபாரமாகிறகாட்டழைப்பும் அவன் நெகிழ்ந்தபோது ஒழியும்-முடியும். கூ.அ.

அரு.—மூப்பத்தெட்டாம்பாட்டு.—அழைப்பு - காட்டழைப்பு. முகங்காட்டுகைக்காக ஆஹ்வாநம்பண்ணி அழைக்கிற மந்த்ரங்களென்றபடி. கூ.அ.

அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண,
இழைப்பன் திருக்கூடல் கூட,— மழைப்பேர்
அருவி மணிவரண்டி வந்திழிய, ஆனை
வெருவியரவொடுங்கும் வெற்பு. கூ.கூ.

(க) இதை. கூ.கூ - கூ.அ.

அந்.—திருவேங்கடத்தானை காண அழைப்பன். பேர் மழை (5) அருவி மணி வரண்டி வந்து இழிய (10) ஆனை வெருவி அரவு ஒடுங்கும் வெற்பு (15) கூட திருக் கூடல் இழைப்பன். (18).

அர்.—திருவேங்கடமுடையானை ஸேவிக்கக் கூப்பிடாநின்றேன். அதிக மழையினால் (ப்ரவஹிக்கிற) (நி) மலையருவிகள் ரத்நங்களைத் திரட்டிக்கொண்டு வந்து (கீழே) விழும்போது (கo) ஆனை பயந்து பெரும்பாம்பின்வாயிலே விழுகிற திரு மலையை (கரு) யடையவேணுமென்று திருக்கூடல் இழையா நின்றேன் (மணற்களில் சக்ராகாரமாக எழுதிப்பாராநின்றேன். (கஅ)

வ்யா.—மூப்பத் தொன்பதாம்பாட்டு.—(அழைப்பன்) போக மோக்ஷத்துக்கோவென்னில்(காண).(இழைப்பனித்யாதி)மழையிலே பெரிய அருவிகள் ரத்நங்களைக் கொண்டுவந்திழிய ரத்ந தீப்தியை ஆனை அக்நியென்றும் ஸர்ப்பம் மின்னென்றும்பயப்பட்டு ஒதுங்குந் திருமலை. அன்றிக்கே, நெருப்புக்கு பயப்பட்டு ஆனை மலைப்பாம்பின் வாயிலே புக்கொடுங்கு மென்றுமாம். இப்படிக்கொத்த திருமலை யைக் கூட இழைப்பன் திருக்கூடலென்றந்வயம். நகூ.

அரு.—மூப்பத்தொன்பதாம் பாட்டு.—அருவியை மின்னென் றும்.கூட-கூடுகைக்குத் திருக்கூடலிழைப்பன். நகூ

வெற்பென்று வேங்கடம் பாடினேன், வீடாக்கி
நிற்கின்றே னின்று நினைக்கின்றேன்,—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்,
கால்வலையில் பட்டிருந்தேன் காண். சை

அந்.—வெற்புஎன்று வேங்கடம் பாடினேன். வீடாக்கி நிற்கின்றேன். (5) நின்று நினைக்கின்றேன். கற்கின்ற நூல் வலையில் பட்டிருந்த (10) நூலாட்டி கேள்வனார் கால்வலை யில் பட்டிருந்தேன் காண். (15).

அர்.—மலையென்று சொல்லும்போது திருமலையைப் பாடா நின்றேன். (அதினால்) மோக்ஷத்தை யுண்டாக்கிக்கொண்டிராநின் றேன். (நி) ஸ்திரமாகவிருந்து (பலம்பெற்றபடியை) த்யாகியா நின்றேன். அத்யயநம்செய்யப்பட்ட சாஸ்த்ரமாகிறவலையில்

நிஉ காண்முகன் திருவந்தாதி, சக-பா, காணலுறுகின்றேன்.

அகப்பட்ட (ப்ரதிபாதிக்கப்பட்ட) (கo) ஸ்ரீதேவியின் வல்லப ஞன ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளாகிறவஸ்துவை லகப்பட்டுக் கொண்டேன். பாருங்கள். (கநி). (சo)

வ்யா.—நாற்பதாம்பாட்டு.—(வெற்பித்யாதி)விசேஷித்துஒன்று செய்ததில்லை; அல்லாத மலைகளைச் சொல்லுகிறவோபாதியித்தைச் சொல்லத் திருமலையாயிற்று. (வீடாக்கி நிற்கின்றேன்) அநேக யத்நத்தாலே பெறும் மோக்ஷத்தை இச்சொல்லாலே உண்டாக்கிக்கொண்டு நின்றெழுந்தேன். (நின்று நினைக்கின்றேன்) எது சொல்லிற்று எது பற்றிற்றென்று விசாரியா நின்றேன். (கற்கின்ற வித்யாதி) ஓதப்படுகிற வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற பெரிய பிராட்டியார்க்கு வல்லபனாவன் திருவடிகளாகிற வஸ்துவை லகப்பட்டிருந்தேன். சo.

காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர,
ஓண விழவி லொலியதிர,—பேணி
வருவேங்கடவா வென்னுள்ளம் புகுந்தாய்,
திருவேங்கடமதனைச் சென்று. சக.

அ.—கல் அருவி முத்து உதிர ஓணவிழவில் (5) ஒலி அதிர பேணி வரும் வேங்கடவா! (10) என் உள்ளம் புகுந்தாய் திருவேங்கடமதனை சென்று (15) காணல் உறுகின்றேன். (17)

அர்.—இரைச்சலையுடைய மலையருவி முத்துக்களை யுதிர்க்க, திருவோணநக்ஷத்ரமாகிற மஹோத்ஸவத்தில் (நி) மங்களாசாஸநத்வநி யதிரும்படி யாதரித்து வந்தாஸ்ரயிக்கிற திருமலையிலெழுந்தருளியிருக்கிறவனே! (கo) (நீ) என் ஹ்ருதயத்தில் ப்ரவேசித்தாய். (நான்) திருமலைக்குப் போய் (கநி) (உன்னை) ஸேவிக்க ஆசைப்படாநின்றேன். (கஎ)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு:—(கல்லருவியித்யாதி) ஒலியையுடைய அருவிகளாலே முத்துதிர, திருவோணநக்ஷத்ரமாகிற மஹாதிவஸத்திலே அந்நகரருடைய மங்களாசாஸநத்தாலே வந்தத்வநி மிக ப்ராப்யதையாவந்து ஆஸ்ரயிக்கப்படும் திருமலையையுடைய நீ என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்தாய், நான் திருமலையை யடைந்து காணலுறுகின்றேன். சக.

சென்று வணங்குமினே சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்,—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்,
அடிக்கமல மிட்டேத்துமங்கு. சஉ.

அ்.—கடி கமலம் நான்முகனும் கண்மூன்றத்தானும் அடி (5) கமலம் இட்டு என்றும் ஏத்தும் அங்கு (10) சென்று நின்று நீர்மையால் வினை கெடுக்கும் (15) சேணுயர் வேங்கடத்தை வணங்குமினே. (18)

அர்.—பரிமளம்கமழ்கிற திருநாபிகமலத்திற்பிறந்த ப்ரஹ்மாவும் முக்கண்ணனும் திருவடிகளில் (டு) தாமரைப்பூவை ஸமர்ப்பித்து எப்போதும் ஸ்தோத்ரம்செய்கிற அத்திருமலைக்குப் (க0) போய் நிலையாய்நின்று, ஸ்வபாவத்தினால் பாபங்களைப் போக்குகிற (கடு) மிகவுயர்ந்த திருமலையை யாஸ்ரயியுங்கோள். (கஅ) சஉ.

வ்யா.—நாற்பத்திரண்டாம்பாட்டு.—(சென்றித்யாதி)(க)"சென்னியோங்கு தண்திருவேங்கடம்" என்னும்படியே புறப்பட்டவாறே கண்டு க்லேசந்தீரும்படியாக ஆகாசாவகாசமடங்க விழுங்கும்படி உயர்ந்த சிகரங்களையுடைய திருமலையைச் சென்று வணங்குங்கோள். (நீர்மையால் நின்று வினைகெடுக்கும்)விரோதியான பாபத்தைத் திருமலை தன் ஸ்வபாவத்தாலே நசிப்பிக்கும். (கடிக்கமலமித்யாதி) ப்ரயோஜநாந்தரபரரும் தங்கள் அதிகாரம்பெறுவது இத்திருமலையிலே அவனை யாஸ்ரயித்து, திருநாபிகமலத்திலே அவ்யவதாநேந பிறந்த சதுர்முகனும் லலாடதேசத்தனும் அவன் திருவடிகளைப் புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டாஸ்ரயித்து. சஉ.

மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தானை,
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்,—திங்கள்
சடையேற வைத்தானும் தாமரைமேலானும்,
குடையேறத் தாங்குவித்துக்கொண்டு. சங.

அ்.—திங்கள் சடை ஏறவைத்தானும் தாமரைமேலானும் தாம் (5) குடையேற குவித்துக்கொண்டு, மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தானை (10) காப்பணிவான் கங்குல் புகுந்தார்கள். (13)

(க) பெரியாழ்வார் திருமொழி. டு-ச-க.

நிச முகன்முகன் திருவந்தாதி, சச-பா, கொண்டுகுடங்கால்.

அர்.—சந்த்ரனை ஜடையில் தரித்தருத்ரனும் கமலப்பூமேல் வஸிக்கிறப்ரஹ்மாவும் தாங்கள் (டு) குடைமுதலியவைகளைப் பூர்ணமாகஸம்பாதித்துக்கொண்டு, மேகமண்டலத்தையடைந்திருக்கிற சிகரங்களையுடைய திருமலையிலெழுந்தருளியிருக்கிறவனுக்குத் (கo) திருவந்திக்காப்பு ஸமர்ப்பிக்கைக்காக ஸந்த்யாகாலத்தில் ப்ரவேசித்தார்கள். (கசு) சசு.

வ்யா.—நாற்பத்துமூன்றும் பாட்டு.—(மங்குல்) சதுர்முகனும் லலாடநேத்ரனும் திருமலையிலே யொருகாலாஸ்ரயித்துப் போமளவன்று; ஸமாராதநகாலங்கள்தோறும் ஸமாராதநோபகரணங்களைக் கொண்டு வந்தாஸ்ரயிப்பரென்கிறது.

(மங்குலித்யாதி) மேகபதத்திலே செல்ல உயர்ந்த சிகரங்களையுடைய திருமலையையுடையவனே. (சாப்பணிவான் கங்குல் புகுந்தார்கள்) திருவந்திக் காப்பெடுப்பான் ஸமாராதநகாலந்தோறும் புகுந்தார்கள். (திங்களித்யாதி) சந்த்ரனை ஜடையிலே தரித்த ருத்ரனும் தாமரைப்பூவை ஜந்மமாகவுடைய ப்ரஹ்மாவும் திருமுத்துக்குடை முதலானவற்றைத் தரித்துக்கொண்டு கங்குல் புகுந்தார்கள். சசு.

அரு.—நாற்பத்து மூன்றும்பாட்டு.—குடையேற - குடை முதலான ஆராதநோபகரணங்களை. முடித்துக்கோண்டு - குறையற ஸம்பாதித்துக்கொண்டு. சசு.

கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய்,
தண்ட வரக்கன் தலைதாளால்—பண்டெண்ணி,
போங்குமரன் நிற்கும் பொழில்வேங்கடமலைக்கே,
போங்குமரருள்ளீர் புரிந்து. சச.

அந்.—கொண்டு குடங்கால்மேல்வைத்த குழவியாய் தண்டம் அரக்கன் (8) தலை பண்டு தாளால் எண்ணி போம் (10) குமரன் நிற்கும் பொழில் வேங்கடமலைக்கே குமரருள்ளீர் (15) புரிந்து போம். (17)

அர்.—(ப்ரஹ்மாவினால்) எடுத்துக்கொண்டு மடியில்வைத்துக்கொள்ளப்பட்ட சிறுபிள்ளையாய், தண்ட்யனான ராவணஸுரனுடைய (டு) தலைகளை முன்பு திருவடிகளினால் எண்ணி அந்தர்த்

தாகமான (கo) நித்யயுவாவான ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்கிற தோப்புக்களையுடைய திருமலையை, நல்லயஸ்ஸையுடையவர்களே! (கரி) ஆஶ்ரயித்துப் போருங்கோள். (கள) சசை.

வ்யா.—அவ—நாற்பத்துநாலாம்பாட்டு.—(கொண்டு) அறிவுடையாரும் அறிவுகெடும் தசையில் ஹீநதஶியாய் ரக்ஷிக்குமவன்நிற்கிற திருமலையிலே படுகாணரானபோதே சென்றாஶ்ரயியுங்கோளென்கிறார்,

(கொண்டித்யாதி) எடுத்து மடியிலேவைக்கும் பிள்ளையாய் தண்ட்யனான ராக்ஷஸன் தலை பத்து மறுக்கப்படுமென்று திருவடிகளாலே கீறிக்காட்டி அந்தர்த்தாநம் பண்ணின முக்தன் நிற்கும் திருமலைக்கே கால்நடை யாடும்போதே யாஶ்ரயித்துப்போருங்கள். சசை.

அரு.—நாற்பத்து நாலாம்பாட்டு.—போம் - அந்தர்த்தாநம்பண்ணும். குமரன் - சிறுபிள்ளை. குமரருள்ளீர் - பாலராகையாலே கால்நடை தருமே. புரிந்து-ஆஶ்ரயித்து. சசை.

புரிந்து மலரிட்டுப் புண்டரீ கப்பாதம்,
பரிந்து படுகாடு நிற்ப,—தெரிந்தெங்கும்
தாழ்ந்தெங்கு நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே,
வாழ்ந்தோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. சரி.

அந்.—புரிந்து புண்டரீகப்பாதம் மலர் இட்டு பரிந்து (5) படுகாடுநிற்ப எங்கும் தெரிந்து தான் ஓங்கி (10) நிற்கின்றான் தண் அருவி வேங்கடமே வாழ்ந்தோர்க்கும் (15) மண்ணோர்க்கும் வைப்பு. (17)

அர்.—ஆஶ்ரயணேஞ்ஞுகர்களாய் ஸ்ரீபாதபத்மத்தில் புஷ்பங்களை ஸமர்ப்பித்து ஆசையுடன் (ரி) அங்கேநித்யவாஸம்பண்ணும் படி, ஸர்வதேசத்திலும் ப்ரகாஶித்துத் தான் ஸர்வாதிகனாய் (4) எழுந்தருளியிருக்கிறஸர்வேஶ்வரனுடைய குளிர்ந்த அருவிகள்பெருகுகிற திருமலையே தேவர்களுக்கும் (கரி) மனுஷ்யர்களுக்கும் நிதியாயிருக்கும். (கள) சரி.

வ்யா.—அவ.— நாற்பத்தாறும் பாட்டு.— (புரிந்து) வெறும் ஸம்ஸாரிகளுக்கே பன்று; நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யம் திருமலையென்கிறார்.

நிசு நான்முகன்திருவந்தாதி,சசு-பா,வைப்பன். சள-பா,நன்மணி.

(புரிந்தித்யாதி) நிரதிசய போக்யமான திருவடிகளிலே ஆதரித்த புஷ்பாதிகளையிட்டு ஸ்நேஹித்துப் படுகாடு கிடக்கும்படியாக விசததமமாக எக்கும் குறைவற்றவனுடைய ஸ்ரமஹரமான திருமலையே உபயவிபூதிக்கும் ப்ராப்யம். சடு.

வைப்பன் மணிவிளக்காம் மாமதியை மாலுக்கென்று,
எப்பொழுதும் கைநீட்டும் யானையை—எப்பாடும்
வேடுவனாக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே,
நாடுவனைத் தாடுதுமேல் நன்று. சசு

அந்.—மா மதியை மாலுக்கு மணிவிளக்காம் வைப்பன் என்று (5) எப்பொழுதும் கை நீட்டும் யானையை வேடு (10), எப்பாடும் வனைக்க குறவர் வில்எடுக்கும் வேங்கடமே (15) நாடு வனைத்து ஆடுதுமேல் நன்று. (19)

அந்.—ஸ்லாக்யமான சந்த்ரனை ஸர்வேஸ்வரனுக்கு மங்களதீபமாக வைப்பேனென்று (நி) எப்போதும் தும்பிக்கையை நீட்டிக்கொண்டிருக்கிற யானையை வேடர் (கo) எங்கும்போகவொட்டாமல் சுற்றிக்கொள்ள, (அதைக்கண்டு) குறவர் வில்லையெடுக்கிற திருமலையையே (கடு) நாட்டாரெல்லாம் ப்ரதக்ஷிணம்பண்ணிக் கூத்தாடினால் நலமாயிருக்கும். (கக) சகூ.

வ்யா.—நாற்பத்தாறும்பாட்டு—(வைப்பனித்யாதி) சந்த்ரன் அணியனு யிருக்கையாலே ஸர்வேஸ்வரனுக்குத் திருமுகத்தாவிளக்காக வைப்பனென்; றொருகால்நீட்டிக் கிடையாதொழிக்தால் மீளவதியாதே எப்போதும் கை நீட்டினபடியே அங்யபரமாய் நிற்கிறயானையைப்புறம்புள்ள வேடர்சூழ, திருமலையிலே வர்த்திக்குங் குறவர் வில்லெடுத்தபடி யெதிர்க்கும் திருமலையே அறிவில்லாதாரோடு அறிவுடையாரோடு வாசியற எல்லாருமாஸ்ரயிக்கப் பெறில் நன்று. சசு.

அரு.—நாற்பத்தாறும் பாட்டு.—வேடு - வேடர், குறவர் இவர்கள் ஆனை பிடிக்கைக்காக வேடரானவர்களெல்லாம் பார்ஸ்வத்திலும் சூழ அங்கே வந்திருக்கிற குறவரத்தைக்கண்டு வில்லுக்கஞையெடுக்க என்றபடி. சசு.

தன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்,
பொன்மணியும் முத்தமும் பூமரமும்,—பன்மணிநீர்
ஓடு பொருதிருளும் கானமும் வானரமும்,
வேடு படைட் வேங்கடம். சள.

அர்.—ஆளியும் கோள் அரியும் பொன் மணி (5) முத்தமும் பூமரமும் பல் மணி நீரோடு (10) பொருது உருளும் கானமும் வானரமும் வேடும்உடை (15) வேங்கடம் நல் மணி வண்ணன் ஊர். (20)

அர்.—யாளிகளையும், பலமுடைய ஸிம்ஹங்களையும், ஸ்வர்ணங்களும் ரத்நங்களும் (ரு)முத்துக்களும் பூமரங்களும் அனேக மணிகளும் ப்ரவாஹத்தோடுகூட (க0) புரண்டு விழுகிற காடுகளையும் வானரங்களையும் வேடர்களையுமுடைய (கரு) திருமலை நீலமாணிக்கம்போன்ற ஸ்லாக்யமான திருமேனியையுடைய ஸர்வேஸ்வரனுடைய திவ்யதேசம். (உ0) சஎ.

வ்யா.—நாற்பத்தேழாம்பாட்டு.—(நன்மணி) ஸ்ரமஹர்மானவடிவையுடையவனுக்கு ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருமலையை னென்கிறது. ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருவயோத்யையிலும் காட்டை விரும்பிஞரிறே பெருமாள்.அவர் விரும்பின காட்டை விரும்பிப்போகிற இளையபெருமாளை அக்காட்டோபாதி இப்படை வீட்டையும் நினையுங் கிடீரென்ஞரிறே திருத்தாயார்.(க) [ராகவம் ராமம்விஜ்ஞ - ராமம் தசரதம்வித்தி] "வயு காம்வையு காழ்-வத்யதாம் பத்யதாம்" என்று அருவராதே உங்கள் தமயனை ரோபாதியாக உங்களையையும் நினையுங்கிடீர். [ராகவம்விஜ்ஞ நகாத்ஜாழ்-மாம்வித்தி ஜநகாத்மஜாம்] உங்கள்தமயனுருகந்த பிராட்டியோபாதி என்னையும் நினையுங் கிடீரென்கிறார். (ஆளியுமித்யாதி) திருமலையில் வர்த்திக்கும் நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. சஎ.

அரு.—நாற்பத்தேழாம் பாட்டு.—ரக்ஷணத்துக் குறுப்பானவிடத்தை ஊராக விரும்புமோவென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கித்யாதி). விரும்பினு மென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன ஸுமித்ரையாருடைய வசநத்தைக்காட்டுகிறார் (அவர் விரும்பின இத்யாதி). இவ்விடத்துக்கு பதமன்வயியாதே இருக்கபடியே இஸ்லோகத்துக் கிதுவுமொரு அர்த்தம். கானம் - காடு. சஎ.

வேங்கடமேவிண்ணோர்தொழுவதுவும், மெய்ம்மையால்
வேங்கடமேமெய்வினைநோய்தீர்ப்பதுவும்,—வேங்கடமே
தானவரை வீழத்தன் ஞழிப் படைதொட்டு,
வானவரைக் காப்பான் மலை. சஅ.

(க) ஸ்ரீராமா-அயோத்யா. சஅ-அ.

அந்.—விண்ணோர் மெய்ம்மையால் தொழுவதுவும் வேங்கட மே. மெய் (5) வினை நோய் தீர்ப்பதுவும் வேங்கடமே. தாள வரை (10) வீழ தன் ஆழிப்படை தொட்டு வானவரை (15) காப்பான் மலை வேங்கடமே. (18)

அர்.—நித்யஸூரிகள் ப்ராப்யமாக ஆஸ்ரயிக்கிறதும் திரு மலையே. சரீரமடியாகவந்த (நி) பாபங்களையும் வ்யாதிகளையும் போக்குவதும் திருமலையே. ராக்ஷஸர்கள் (கo) படும்படி தன்னுடைய திருவாழியாகிற ஆயுதத்தைத் தரித்துத் தேவர்களை (கநி) ரக்ஷித்த வன் வஸிக்கிற மலையும் திருமலையே. (கஅ) சஅ.

வ்யா.—நாற்பத்தெட்டாம் பாட்டு.—(வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்) திருமலை ப்ராபகமாக வேறொன்று ப்ராப்யமாகையன்றிக்கே இதுதானே ப்ராப்யமாக ஆஸ்ரயிப்பர்கள் நித்யஸூரிகள். (வேங்கடமித்யாதி) (க) "சுவஸ்ருஷ்டநஷ்டாகூவ்ழி அவஸ்ய மநுபோக்தவ்யம்" என்கிற பாபத்தைப் போக்குமதுவும் திரு மலை. (வேங்கடமித்யாதி) அஸுரஜாதி தாழ்ப்படும்படிக்கீடாகத் திரு வாழியைப்பிடித்து தேவஜாதிக்குக் குடியிருப்புக் கொடுத்தவனுக்கு ஊருந் திருமலையே. சஅ.

மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றி,
தலையாமை தாளிரண்டு பற்றி,—அலையாமல்
பீறக் கடைந்த பெருமான் திருநாமம்,
கூறுவதே யாவர்க்கும் கூற்று. சசு.

அந்.—மலை ஆமைமேல் வைத்து வாசுகியை சுற்றி (5) ஆமைதான் தலை ஒருகை பற்றி அலையாமல் (கo) பீற கடைந்த பெரு மான் திருநாமம் கூறுவதே (15) யாவர்க்கும் கூற்று. (17)

அர்.—மந்தரபர்வதத்தைக் கூர்மத்தின்மேல் வைத்து வாஸு கியென்கிறபாம்பை (க்கயிறாக) சுற்றி (நி) ஆமையானதான் மலையினுச்சியை ஒருகையாலே பிடித்தமுக்கி நீர்வெளியில்புரளா மல் (கo) அம்ருதம் பிறக்கும்படி கடைந்த ஸர்வேஸ்வரனுடைய திருநாமங்களை யநுஸந்திப்பதே (கநி) எல்லாருக்கும் உசிதமா வது. (கள) சசு.

வ்யா.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.—(மலையாமையித்யாதி) கூர் மரூபியான தன்மேலே மலையைவைத்து வாசுகியைச் சுற்றி, (தலை

யித்யாதி) ஆமையானதான் மேலே கொந்தளியாதபடிக்கீடாக மலையினுச்சியை ஒருகையாலே யமுக்கி. (அலையாமலித்யாதி) நிரம்பின நீர் புறம்பொசியாமலும் அம்ருதம்படும்படி யுள்ளுடையவும் கடைந்த ஸ்ரீவேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லுவதே எல்லார்க்கு மடுப்பது. சகூ.

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா, தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்;—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும், மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு. நி०.

அ்.—கடல் கிடக்கும் மாயன் ஆற்றங்கரை கிடக்கும் (5) கண்ணன் உரை எனக்கு உள்ளத்து கிடக்கும். (10) கூற்றமும் சாரா, கொடுவினையும் சாரா, தீமாற்றமும் (15) சாரா வகை அறிந்தேன். (18)

அர்.—திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட ஆஸ்சர்யபூதனுய் திருக்காவேரிக்கரையில் சயனித்தவனுன (நி) கண்ணனுடைய ஸ்ரீஸ-ஏக்தியானசரமஸ்லோகம் என்னுடைய ஹ்ருதயத்திலேயே யிருக்கிறது. (க०) ம்ருத்யு கிட்டாமைக்கும் க்ரூரபாபங்கள் கெருங்காமைக்கும் கெட்டவிஷயங்களொன்றும் (கநி) சேராமைக்கும் உபாயமறிந்தேன். (கஅ) நி०.

வ்யா.—ஐம்பதாம்பாட்டு.—(கூற்றமுமித்யாதி) ம்ருத்யு அணையாமைக்கும், ம்ருத்யு அணைகைக்கு ஹேதுவான மஹாபாபம் அணையாமைக்கும், அபவாதம் சேராமைக்கும் உபாயமறிந்தேன். (ஆற்றங்கையித்யாதி) திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து ஆஸ்சர்ய பூதனுய், அகந்தரம் திருக்கபிஸ்தலத்திலே கண்வளர்ந்தருளுகிற க்ருஷ்ணன் "உன்னுடைய ரக்ஷணத்துக்கு நானே கடவேன், நீ சோகிக்கவேண்டா" என்றருளிச்செய்த வார்த்தை என்னெஞ்சிலே கிடக்கும். (கூற்றம்) வர்ணாஸ்ரம தர்மநிஷ்டரில் வ்யாவ்ருத்தி. (கொடுவினை) தர்மநிஷ்டாதருஷ்ட காம்யபரரில் வ்யாவ்ருத்தி. (ஆயனித்யாதி) அவனுடைய திருநாமங்கள் ஹ்ருதயத்திலே கிடக்குமெனக்கு. அதாவது - தத்விஷயஜ்ஞானம். (க) "சரம-ஸ்லோகம். மாம் - அஹம்." நிவ.

அரு.—ஐம்பதாம் பாட்டு.—வர்ணாஸ்ரம தர்மிகளுக்கு யமதர்சன பூர்வகமாக ஸ்வர்க்க ப்ராப்தியாகையாலே அவர்களில் வ்யாவ்ரு

(க) கீதை. கஅ-சுசு.

த்தி - காம்யபரவசராகிறது. பாபகார்ய மாகையாலே காம்யபரரில் வ்யாவ்ருத்தி; இவையிரண்டும் ப்ரபந்நனுக்கில்லையென்றபடி. மரயனுடைய வார்த்தையான ஸ்லோகமென்னுதல். அவன் விஷயமான திருநாமமென்னுதல். அஹமென்றது முந்தின வர்த்தஸ்ஸுசகம். நிo.

எனக்காவா ராரொருவ ரே,எம் பெருமான்
தனக்காவான் தானேமற் றல்லால்,—புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியார், என்மதிக்கு
விண்ணெல்லா முண்டோ விலை. நிக

அக்.—எனக்கு ஆவார் ஒருவர் ஆர்? மற்று (5) எம்பெருமான் தான் தனக்கே ஆவானல்லால் என்மதிக்கு (10) விண்ணெல்லாம் விலையுண்டோ? புனம் காயா வண்ணனே! (15) உன்னை பிறர் அறியார். (18)

அர்.—எனக்கு ஒப்பாவார் ஒருவர் ஆருண்டு? மேலும், (நி) ஸர்வேஸ்வரனும் தான் தனக்கே யொப்பாமொழிய (எனக்கொப்பாகான்). என்புத்திக்கு (க0) பரமபதமெல்லாம்கூட விலையாகுமோ? தன்னிலத்தில்நின்ற காயாம்பூப்போன்ற திருமேனியையுடையவனே! (கநி) உன்னை வேறொருவர் அறியார். (கஅ)

வ்யா.—ஐம்பத்தோராம்பாட்டு.—(எனக்கித்யாதி) எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கொருத்தர் எதிருண்டோ? (எம்பெருமானித்யாதி) ஈஸ்வரன் தனக்கொருவன் ரக்ஷகனுண்டென்றிராமையாலே அவனுமெனக் கொப்பன்று. (புனக்காயாவித்யாதி) ஸ்ரமஹரமான வடிவையுடைய நீ ரக்ஷக னல்லையாகிலும் விரும்பப்படுமுன்னையசலாரறியார்.(என்மதிக்கித்யாதி) ஸம்ஸாரத்திலே எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கு விரோதியில்லாத தேசத்திலேயிருக்கிறவர்கள் என்லேடொப்பரோ? நிக.

விலைக்காட் படுவர் விசாதியேற் றுண்பர்,
தலைக்காட் பலிதிரிவர் தக்கோர்,—முலைக்கால்
விடமுண்ட வேந்தனையே வேறுக வேத்தாதார்,
கடமுண்டார் கல்லா தவர். நிஉ.

அக்.—தக்கோர் விலைக்கு ஆள்படுவர். ஏற்று விசாதி (5) உண்பர். தலைக்கு ஆள்பலி திரிவர். கல்லாதவர் (10) முலைக்கால்

விடம் உண்ட வேந்தனையே வேறுக (15) ஏத்தாதார் கடமுண்டார். (17)

அர்.—புத்திமான்களாக அபிமானித்தஜபிமானிகள் க்ரயத்துக்கு அடிமைப்பட்டிருப்பர்கள். (காலதானுதிகளை) வாங்கி வ்யாதிகளை (நி) யநுபவிப்பர்கள். ஒருவன் தலைக்காக (த்தலையறுக்கி றேனென்று) நரபலியாகத் திரிவர்கள். வித்யாத்யயநம்பண்ணுத மூடர்கள், (கo) ஸ்தநத்திலிருந்த விஷத்தை யமுதுசெய்த ராஜா வாகிய ஸ்ரீக்ருஷ்ணனை விலக்ஷணமாக (கநி) ஸ்தோத்ரம்செய்யாத வர்களாய் பாபபலத்தையேயநுபவிப்பர்கள். (கஎ) நிஉ.

வ்யா.—அவ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—(விலை) என்னேடொப்பாருண்டோவென்று சொல்லுவா னென்னென்னில், இதுவன்றே நாடு அகர்த்தப்படுகிறபடி என்கிறார்.

(விலையித்யாதி) ஈஸ்வர சேஷமாய் அகர்யார்ஹமான வஸ்துவை வேறு சிலர்க்கு சேஷமாக்கியும் ஜீவநத்துக்காகப் பிறருடைய வ்யாதிகளை நீர்வார்ப்பித்துக்கொண்டும், ஒருத்தன்பிழைத்தால் தலையரிகிறேனென்று ப்ரார்த்தித்து, பலித்ரவ்யமாய்த்திரிந்தமன்றே படுகிறது, "தக்கோர்" என்று கேஷபோக்தி. (மூலையித்யாதி) இவர்கள் குறித்துச்செய்வது ஸ்வவிரோதியைப் போக்குமவனை யேத்தாமை. (கடமித்யாதி) அறிவுகேடர் (க) தேகுவம்ஹ-ஜுதேவாவா: ஜுதேத்வகம்புஞ்ஜதேபாபா: " என்னுமப்படியே பாபத்தைபுஜிக்கிறார்கள். அன்றிக்கே, கொடுக்க உடலின்றிக்கேயிருக்கத் தனிசுவாங்கி ஜீவிக்குமவர்களென்னவுமாம். நிஉ.

அரு.—ஐம்பத்திரண்டாம் பாட்டு.—தலைக்கு - ஒருத்தன் தலைக்காக; ஆட்பலி - தங்கள் தலையையறுத்து நரபலியிடுவர்கள். விசாதியேற்கை - காலதாநாதிகளைக் கொள்ளுகை. (கடமுண்டார்) கடன்-பாபமாய் அத்தை யநுபவித்தல் - தாரித்ர்யத்தை யநுபவித்தல். இத்தால் பாபபலமான நரகாநுபவத்தைப் பண்ணியும் கெட்ட சரித்ராயும் போவர்களென்றபடி. நிஉ.

கல்லாதவ ரிலங்கை கட்டழித்த, காருத்த
னல்லா லொருதெய்வம் யானிலேன்,—பொல்லாத
தேவனைத் தேவரல்லாளைத் திருவில்லாத்
தேவனைத் தேறேல்மின் தேவு. நிகூ.

அக்.—கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தனல்லால் யான் (5) ஒருதெய்வம் இலேன். பொல்லாத தேவரை தேவரல்லாரை (10) திருவில்லா தேவரை தேவு தேறேன்மின். (14)

அர்.—அஜ்ஞாநிகளானராக்ஷஸர்களுடைய லங்கையை வரம் பழித்த சக்ரவர்த்தித்திருமகனையொழிய நான் (நி)வேறொருதேவதை யுடையேனல்லேன். க்ரூரர்களாய்த் தபஸ்ஸினால் தேவதைகளா யினும் ஸ்வதஸ்ஸித்தமானதேவத்வமில்லாதவர்களாய் (கo) லக்ஷ்மீஸம்பந்தமில்லாதவர்களான ருத்ராதிகளைப் ப்ராப்ய தேவதையாக நினைக்கவேண்டாம். (கச) நிக.

வ்யா.—ஐம்பத்துமூன்றும்பாட்டு.— (கல்லாதவரித்யாதி) கற்ற னைருத்தனுளனாக அவனைப் புறப்படவிட்ட ஜ்ஞாநஸ்வரூபருடைய தான லங்கையை அரணழித்த சக்ரவர்த்தித்திருமகனையொழிய வேறொன்று ஸமாச்ரயணீயமாக நினைத்திரேன்.(க)"ஸாவோ நாநு தூ மஹ்ஹி-பாவோகாய்யத்ரகச்சதி" என்கிற திருவடியைப்போலே இவரும். (பொல்லாததேவரை) சுபாச்ரயமாக விரூபாக்ஷன் தொடக்கமானரை ஆச்ரயிக்கப்போமோ? (தேவரல்லாரை) அத்தைப்பொறுத்தாச்ரயித்தாலும் கட்டக்குடியன்; அப்ராப்தஸ்தலம். (திருவில்லாத் தேவரை) மோக்ஷப்ரதனானவன் ஸ்ரியஃபதியன்றே? (தேறேன்மின் தேவு) ப்ராப்தஸ்தலமல்லாமையேயன்று; ஆச்ரயித்தால் ப்ரயோஜகமில்லை யென்கை. (தேறேன்மின்தேவு) முகப்பிலே புத்ரபஸ்வாதிகளைத் தருமத்தைக்கண்டு ஆச்ரயணீயராக புத்திபண்ணுதே கொள்ளுங்கோள். நிக.

அரு.—ஐம்பத்துமூன்றும்பாட்டு.—அத்தைப்பொறுத்து-விரூபாக்ஷதையைப்பொறுத்து. கட்டக்குடியன்-ஆபாததயாகுடிபோலே தோற்றி வரியிறுக்கமாட்டாதவன், கட்டம் - கஷ்டமாய் தரித்ரனென்றபடி. குடிபோலேயிருக்கையாலே எடுக்கவுமாம், தரித்ரனுகையாலே கழிக்கவுமாயிருக்குமங்கு; இங்கு அப்ராப்தமாகையாலே எடுத்துக்கழிக்கவும் யோக்யதையில்லை யென்றபடி, "தேவு" என்கையாலே அல்பபலப்ரதரென்கிறது. நிக.

தேவராய் நிற்குமத் தேவும், அத் தேவரில்
மூலராய் நிற்கும் முதுபுணர்ப்பும்,—யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றேரார்தார்
கற்கின்ற தெல்லாம் கடை. நிச.

அர்.—தேவராய்நிற்கும் அத்தேவும் அத்தேவரில் மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் (5) யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்று ஓராதார் கற்கின்றதெல்லாம் கடை. (10)

அர்.—இந்த்ராதிதேவர்கள்நடுவேநிற்கும் அம்மேன்மையையும், அந்ததேவர்களில் ப்ரதாநரான ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரரென்ற மூவரில் நடுவேநின்ற ப்ரதமாவதாரமான விஷ்ணுஸ்திதியையும், (நு) ஸமஸ்தவஸ்துக்களுக்கும்நிர்வாஹகனுயிருக்கும் தன்மையெல்லாவற்றையும் ஸர்வேஸ்வரனென் றறியாதவர்கள் அப்யஸிக்கிறவித்யைகளெல்லாம் வ்யர்த்தம். (கo) நிச.

வ்யா.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—(தேவரித்யாதி.) ஆதித்யேந்த்ராதிகளுக்கு நடுவே நிற்கும்நிலையும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நடுவே (க) "ஸத்யவிஜ்ஞாநாநந்தாவதாரஃ-மத்யேவிராஜ்சகிரிசம் ப்ரதமாவதாரஃ" என்கிற ப்ரதமாவதாரத்தையும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களிலும் சேதநத்வாரா ப்ரவேசித்து அவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வமுண்டாம்படி நிற்கிறநிலையும், ஸர்வாதிகனான ஈஸ்வரனென்றறியாதவர்கள் பரக்கக்கற்கிறதெல்லாம் ஸம்ஸார ப்ரவர்த்தகராகைக்கு. நிச.

கடைநின் றமரர் கழல்தொழுது, நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர்,—புடைநின்ற
நீரோத மேனி நெடுமாலே, நின்னடியை
யாரோத வல்லா ரவர். நிறு.

அர்.—அமரர் கடை நின்று நாளும் கழல் (5) தொழுது இடைநின்ற இன்பத்தாவர் புடைநின்ற நீர் (10) ஓதம் மேனி நெடுமாலே! நின்அடியை அறிந்து (15) ஓத வல்லாரவர் யார். (17)

அர்.—தேவதாந்தரங்களின் வாசலிலே நின்று ப்ரதிதிநமும் அவர்கள்பாதங்களை (நு) யாஸ்ரயித்து மோக்ஷத்துக்கும் ஸம்ஸாரத்துக்கும்நடுவிலுள்ளஸ்வர்க்காதிஸுகமுடையராவர்கள். (பூமியைச்) சுற்றிக்கொண்டிருக்கிற ஜலத்தையுடைய (கo) ஸமுத்ரம் போன்ற திருமேனியையுடைய ஸர்வாதிகனே! உன்திருவடிகளை யறிந்து (கநு) ஸ்தோத்ரம்பண்ணத்தகுந்தவர்கள் யார்? (கஎ)

வ்யா.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—(கடை) தேவதாந்தரங்கள் வாசலிலேநின்று ஸர்வேஸ்வரன் பக்கல்பண்ணும் ப்ரணமாதிகளை

சுலோ — நான்முகன் திருவந்தாதி, நிகழ்-பா, அவரிவரென்றில்லை.

யவர்கள் பக்கலிலேபண்ணி ஸம்ஸாரஸுகமுமின்றிக்கே நிரதிசய மான மோக்ஷஸுகமு மின்றிக்கேயிருக்கிற ஸ்வர்க்கஸுகத்தையு டையரானவர். (புடையித்யாதி) ஒரு ப்ரயோஜநம் பெறுவிடிலும ஸ்தோத்ரம் பண்ணவேண்டும்படி ஸ்ரமஹரமான வடிவையுடைய வன் திருவடிகளே யேத்தவல்லாரார். நிகு.

அரு.— ஐம்பத்தைந்தாம்பாட்டு.— இதரப்ரயோஜநங்களோக்கொ ள்ளுகையொழிய நின்னடியை ஏத்தவல்லா ரொருவருமில்லை யென்றபடி. நிகு.

அவரிவரென் றில்லை யனங்கவேள் தாதைக்கு,
எவரு மெதிரில்லை கண்டீர்,—உவரிக்
கடல்நஞ்ச முண்டான் கடனென்று, வாணற்
குடனின்று தோற்ற னிருங்கு. நிசு.

அந்.—அவர்இவர்என்று இல்லை வேள் அனங்கன் தாதை க்கு (5) எவரும் எதிரில்லைகண்டீர். உவரிக்கடல் நஞ்சம் உண்டான் (10) வாணற்கு கடனென்று உடன்நின்று ஓரு ங்கு தோற்றன். (15)

அர்.—அவர்இவர்என்கிற பேதமில்லை, ஸுந்தரனை மன் மதனுக்குத் தகப்பனான ஸ்ரீக்ருஷ்ணனுக்கு (நி) ஒருவரும் ஸமானமில்லை. ஸமுத்ரத்திற்பிறந்த விஷத்தை விழுங்கினருத்ரனும் (கo) பாணஸுரனுக்கு ரக்ஷகனுவேனென்றுப்ரதிஜ்ஞைபண்ணிக் கூடவேயிருந்து பாணஸுரனைப்போலவே தோற்றன். (கநி) நிசு.

வ்யா.— ஐம்பத்தாறாம்பாட்டு.— (அவரித்யாதி.) காமனுக்குத் பாதகனுக்கு ஒருத்தரு முபமாநமில்லாமைக்கு விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடுவாசியில்லாமை கண்டிகோளே. (உவரியித்யாதி) ஒருத்தருமில்லை யென்கிறதென், ஒருதேவர் இல்லையோவென்னில்; அவரும் செய்தபடி இதுவன்றே வென்கிறார். அம்ருத மதநகாலத்தி லேயுண்டான விஷத்தைக் கண்டத்திலே தரித்தானை ருத்ரனும் தன்னை யாஸ்ரயித்த வாணனுக்கு லோகத்திலே ரக்ஷிக்கிறேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி அவன்தானே ஸாக்ஷியாகத் தோற்றன். (ஒருங்கு) ஒருபடிப்பட வாணனோடு தன்னோடு வாசியற. நிசு.

அரு.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.— கடனென்று கடவன் நீர் வாஹகனென்று.

ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையு மாவான்,
பெருங்குருந்தம் சாய்த்தவனே பேசில்,—மருங்கிருந்த
வானவர்தாம்தானவர்தாம்தாரகைதான், என்னெஞ்சம்
ஆனவர்தா மல்லாத தென். நிள.

அந்.— பெரும் குருந்தம் சாய்த்தவனே ஒருங்குஇருந்த நல்வினையும் (5) தீவினையும் ஆவான் பேசில் மருங்குஇருந்த வானவர்தாம் (10) தானவர்தாம் தாரகைதான் என்னெஞ்சம் ஆனவர்தாம் அல்லாதது (15) என்? (16)

அர்.—பெரிய குருக்கத்திமரத்தை விழத்தள்ளினவனே உடனின்ற புண்யத்துக்கும் (நி) பாபத்துக்கும் நிர்வாஹகன். வர்ணிக்கப்புகில், அருகிருக்கிற தேவர்களும் (கo) அஸுரர்களும் பூமியும் என்மனஸ்ஸும் தானேயாயிருக்கும். அவனுகாதவஸ்து (கநி) எது?. (ககூ) நிள

வ்யா.—ஐம்பத்தேழாம்பாட்டு.—(ஒருங்கித்யாதி) (க) "ஸுவஸ்ய ஹேதவ:-அவஸ்யமதுபோக்தவ்யம்" என்கிற புண்ய பாபங்களுக்கு நிர்வாஹகனானவனே, குருந்தை யகாயாஸேந ஒசித்தாற் போலே கம்முடைய வலிய ப்ரதிபந்தகங்களைப்போக்குவான். (மருங்கித்யாதி) ஆஸ்தாரான தேவர்கள் அஸுரர்கள் தாரகைதான் இதடங்கலுக்கும் அவனையொழிய ஸ்திதியில்லை. நிள.

என்னெஞ்ச மேயா னிருள்நீக்கி யெம்பிரான், [ஞ்ச
மன்னஞ்சமுன்னெருநாள்மண்ணளந்தான்,—என்னெ
மேயானை யில்லா விடையேற்றான், வெவ்வினைதீர்த்
தாயானுக் காக்கினே னன்பு. நிஅ.

அந்.—என்னெஞ்சம் மேயான் இருள்நீக்கி எம்பிரான் மன் (5) அஞ்ச முன்னெருநாள் மண் அளந்தான் என்னெஞ்சம் (10) மேயானை இல்லா விடையேற்றான் வெம்வினை தீர்த்து (15) ஆயானுக்கு அன்பு ஆக்கினேன். (18)

அர்.—என்மனஸ்ஸில் நித்யவாஸம்பண்ணுகிறவனும் அஜ்ஞாநத்தைப்போக்கி எனக்குஸ்வாமியானவனும் பலிசக்ரவர்த்தி (நி) பயப்படும்படி முன்பொருகாலத்தில் பூமியை யளந்தவனும் என்ஹ்ருதயத்தில் (கo) மிகவிருப்பத்தைப்பண்ணுமவனுமான ஸர்

வேஸ்வரன் ஹ்ருதயத்திலில்லாத வ்ருஷபவாஹனனுடைய மஹா பாபத்தைப் போக்கி (கடி) ஸ்வாதிகனனஸர்வேஸ்வரன்விஷயத்தில் ப்ரீதியை யுண்டாக்கினேன். (கஅ) நிஅ.

வ்யா.— ஐம்பத்தெட்டாம்பாட்டு.— (என்னெஞ்சமித்யாதி) என்னுடைய ஹ்ருதயத்தை யிருப்பிடமாகக்கொண்டு அஜ்ஞாநகாந்த காரங்களைப் போக்கி அத்தாலே யெனக்கு உபகாரகனும், க்ஷத்ரிய ஜாதி யெல்லா மஞ்சும்படிக்கோடாகப் பண்டு பூமியையடையத் தன் காற்கீழேயிட்டுக்கொள்வதும் செய்து பின்னையு மென்பக்கலிலே அபிநிவிஷ்டனு யிருக்கிறவனைத் தன்னெஞ்சில் கொள்ளாத ருஷப வாஹனனுடைய மஹாபாபத்தைப்போக்கி அத்தாலே தானுளனன வனுக்கு ஸ்நேஹத்தை யுண்டாக்கினேன். நிஅ.

அநு.— ஐம்பத்தெட்டாம்பாட்டு.— இல்லா-ஸர்வேஸ்வரனை நெஞ்சிலே இல்லா; நெஞ்சிலே கொள்ளாதருத்ரன். ஏறு - வாஹநம்.

அன்பாவா யாரமுத மாவாய், அடியேனுக்
கின்பாவா யெல்லாமும்நீ யாவாய்;—பொன்பாவை
கேள்வா கிளரொளியெங் கேசவனே, கேடின்றி
ஆள்வாய்க் கடியேனை யுள். நிகூ.

அந்.—அன்பாவாய் ஆர்அமுதமாவாய் அடியேனுக்கு இன்பாவாய் எல்லாமும்நீயாவாய் (5) பொன் பாவை கேள்வ கிளர் ஒளி (10) எம்கேசவனே கேடுஇன்றி ஆள்வாய்க்கு அடியேன் நான் (15) ஆள். (16)

அர்.— என்னிடத்தில் ப்ரீதியையுடையனும் பரிபூர்ணம்ருதம் போல்போக்யபூதனும் அடியேனுக்கு உன்னனுபவஸுகத்தைக்கொடுத்தவனும் மற்றஸுகங்களையும் கொடுக்குமவனும் (நி) ஸ்வர்ணவர்ணையான ஸ்ரீதேவிக்கு வல்லபனும் வ்ருத்தியடைகிற தேஜஸ்ஸையுடையனை (கo) என்கேசவனே! அழிவில்லா வடிமைகொண்ட உனக்கு அடியேனை நான் (கடி) சேஷபூதனானேன். (கசு) நிகூ.

வ்யா.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.— (அன்பித்யாதி) என்பக்கல் ப்ரேமத்தையுண்டாக்கி நிரதிசய போக்யனுமாய், எனக்கு ஸ்வாநுபவத்தையும்தந்து, அதுக்குத்தமான போக்யங்களையும்தந்து, இவை யெல்லாம் செய்கைக்கடியான ப்ரஸாதத்துக்குவல்லபனும், இவளோட்டை ஸம்ஸ்லேஷத்தாலே நிரதிசயளாய்வல்லபனும், ப்ரஸந்நகேசனும்.

கைங்கர்யாநுபவத்துக்கு விச்சேதமின்றிக்கே என்னை யடிமைகொள்ளுகிற வுனக்கு நானடிமை. ஸர்வஜ்ஞனான வுனக்கு நானுனக்கு ளென்று சொல்லவேண்டாதிருக்க ஆளென்று சொல்லிற்று-அவன் தாழப் பரிமாறுகிற படியைக்கண்டு முறையறிந்து பரிமாறவேணு மென்று; முறையுணர்த்த வேண்டுகிறது-அவன் விரும்பினபடியைக் கொண்டு. நிக.

அரு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—அடியேனுள்-அடியே னுனை நான் ஆள். நிக.

ஆட்பார்த் தழிதருவாய் கண்டுகோ ளென்றும்,நின்
தாட்பார்த் தழிதருவேன் தன்மையை,—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே, உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். கூ0.

அந்.— கேட்பார்க்கு அரும்பொருளாய்நின்ற அரங்கனே! ஆள்பார்த்து உழிதருவாய் (5) நின்தாள் பார்த்து உழிதரு வேன் தன்மையை என்றும் (10) கண்டுகொள். உன்னை விரும்புவதே மனம் விள்ளேல், (15)

அர்.— (ஸ்வயத்நத்தால்) கேட்கயத்நித்தவர்களுக்கு துர்லபனை ரங்கநாதனே! நமக்குதாஸ்யகாராவது உண்டாவென்று தேடித்திரிகிறவனே! (நி) உன்திருவடியை ஸேவிக்கவேண்டு மென்று திரிகிற என்னுடைய ஸ்வபாவத்தை எப்போதும் (கo) (கடக்கும்படி) கடாக்ஷித்தருளவேணும். உன்னை யாசைப்படுவதே ஸ்வபாவமான மனஸ்ஸை விடமாட்டேன். (கநி) கூo.

வ்யா.—அறுபதாம்பாட்டு.—(ஆட்பார்த்திதியாதி) தேவர் திருவடிகளைக் காண்கையே ஸ்வபாவமான என்னை, ஆரோ நமக்ககப்படுவரென்று பார்க்குமதுவே ஸ்வபாவமாயிருக்கிற நீ காலமெல்லாமிப்படியேயாகப் பார்த்தருளவேணும். (தேட்பார்க்கித்யாதி) (க) "நாயசாதா வ்ருவதேநயஸ்ய நேயயாநவஹ-நாஸ்ரு தேந - காயமாத்மா ப்ரவசநேநலப்ய: நமேதயாந பஹுநாஸ்ந தேந," என்னும்படியே உன் ப்ரஸாதமொழிய ஸ்வயத்நத்தாலே ஸ்ரவணாதிகள் பண்ணுவார்க்கரியையாய்,நீயே காட்டக் காண்பார்க்கு எளியை யாகைக்காகக் கோயிலிலே கண்வளருகிறவனே! (உன்னை

(க) கடவல்லி. கூ-உரு.

யித்யாதி) என்னுடைய மகஸ்ஸானது உன்னை விரும்புகையை விடுகிறதில்லை. விரும்புகையை விடாதொழிகையைப் பார்த்தருளவேணுமென்றுமாம். சுஉ.

அரு.—அறுபதாம்பாட்டு.—விள்ளேல் - என்மகஸ்ஸை விடுகிறதில்லை என்னுதல்; நீவிள்ளாதபடி பண்ணவேணுமென்னுதல். சுஉ.

மனக்கேதம் சாரா மதுசூதன் றன்னை,
தனக்கேதான் தஞ்சமாக் கொள்ளில்,—எனக்கேதான்
நின்றொன்றி நின்றுல்கை யேழாணை யோட்டினன்,
சென்றொன்றி நின்ற திரு. சுக,

அந்.—மதுசூதன்தன்னை தனக்கே தஞ்சமா தான் கொள்ளில் (5) மனக்கேதம் சாரா ஒன்றிநின்று ஏழ்உலகை ஆணை (10) ஓட்டினன் சென்று ஒன்றிநின்ற திரு இன்று (15) எனக்கேதான் (16)

அர்.—மதுஸூதனனைத் தனக்கே ரக்ஷகனென்று தான் ஸ்வீகரித்தால் (நி) மனோவ்யாதிகள் நெருங்கா. ஒருப்பட்டிருந்து ஸப்தலோகங்களிலும் தன்னஜ்ஞையை (க0) நடப்பித்தஸர் வேஸ்வரன் வந்து ஆதரமாகஸேவைஸாதித்த ஸம்பத்து இப்போது (கநி) எனக்கேயுள்ளது. (கசு) சுக.

வ்யா.—அறுபத்தோராரம்பாட்டு.— (மனக்கேதம்சாரா) மனஸ்ஸுக்கேதம்சாராவென்றுமாம். (மதுசூதனித்யாதி) தஞ்சமான செயலைச்செய்யு மவனைத் தனக்கேதான் தஞ்சமாகக்கொள்ளில். (எனக்கித்யாதி) ஸமஸ்தலோகத்தையும் விடாதே நின்று தன்னஜ்ஞை செல்லும்படி நடத்தினவன் தானேவந்து அபிநிவிஷ்டனன் ஸம்பத்து எனக்கே யுள்ளது; அது தானுமின்று. சுக.

அரு.—அறுபத்தோராம்பாட்டு.—(மனக்கேதம்) கேதம் - கேத (வேதி) மாய் துக்கமாதல், ஏதமென்று பொல்லாங்காதல். தஞ்சமாக்கொள்ளில் மனக்கேதம்சாரா; ஏழுலகை யொன்றிநின்று ஆணை யோட்டினன் தான் சென்றொன்றி நின்றதிரு எனக்கின்று என்றன்வயித்து அருளிச்செய்கிறார். (ஸமஸ்த லோகேத்யாதி.) சுக.

திருநின்ற பக்கம் திறவிதென் றோரார்,
கருநின்ற கல்லார்க் குரைப்பர்,—திருவிருந்த

மார்பில் சிரீதரன்தன் வண்டுலவு தண்டுழாய்,
தார்தன்னைச் சூடித் தரித்து. சுஉ

அந்.— மார்பில் திருஇருந்த சிரீதரன்தன் வண்டு உலவு (5) தண் துழாய்தார்தன்னை சூடி தரித்து திருநின்ற (10) பக்கம் திறவிதுஎன்று ஓரார் கருநின்ற கல்லார்க்கு (15) உரைப்பர். (16)

அர்.— திருமார்பில் ஸ்ரீதேவிவாஸம்பண்ணுகிற ஸ்ரீதரனுடைய வண்டுகள் மோதுகிற (டு) குளிர்ந்த திருத்துழாய்மாலையைச் சுற்றிக்கொண்டு தரித்து, ஸ்ரீதேவிவாஸம்செய்கிற (கo) (வலது) பக்கத்தையுடையநாராயணனே அப்ரகம்ப்யமானபரதத்வமென் றறியாதவர்கள் கர்ப்பவாஸம்பண்ணுகிறகூஷ்மாண்டாதேவதைகளை (பரதேவதையென்று) வித்யையையதிகரியாதமூடர்களுக் (கருதி) குபதேசிப்பர்கள். (கசு) சுஉ.

வ்யா.— அறுபத்திரண்டாம்பாட்டு.— (திருநின்றபக்கம்) (க) "கூவாஹூர் ஹூயாம்ஹோயஹ்வாஸி - அபாங்காப்யாம்ஸோ யதுபரி", என்னும்படியே இன்னவஸ்துவென்ன வேண்டா; ஏதேனுமொரு வஸ்துவிலே அவளுடைய கடாக்ஷமுண்டாகில் அது ஸர்வேஸ்வரதத்வமாகிறது. (திறவிதென்று) திறவிதாவது ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தமும்தன்னதாமாய் வேறொன்று லறியாதது. ஒரு சேதநராகில் அறியாமையாலே (கருநின்ற கல்லாரித்யாதி) தங்களோடொக்க கர்ப்பவாஸ்யராய் கர்ப்பவாஸம் பண்ணுகிறவர்களை யாஸ்ரயணீயராகத் தங்களோடொத்த அறிவு கேடர்க்கு உபதேசிப்பார்கள். (திருவித்யாதி) மாம்பழம் உண்ணிங்யாயத்தாலே ஸ்ரீஸம்பந்தமில்லாதாரை ஸ்ரீமாக்களாகச் சொல்லும்படி யன்றிக்கே பெரியபிராட்டியார் திருமார்விலே யெழுந்தருளியிருக்கையாலே ஸ்ரீதரனென்று திருநாமத்தையுடையனானவனுடைய மதுவெள்ளத்தாலே வண்டுகள் திரியாநின்றுள்ள செவ்வியையுடைய திருத்துழாயை (உ) "சூடிக்களைந்தனசூடும்" என்னும்படியே தலையாலே தரித்துத் திருநின்றபக்கம் திறவிதென்றோரார். சுஉ.

அரு.— அறுபத்திரண்டாம்பாட்டு.— ஓரார்-அறியார். இப்படியறிகையே ஜ்ஞாநமென்னுமத்தைத் தாத்பர்யமாகஅருளிச்செய்கிறார் (ஒரு சேதநராகி லித்யாதி). ஜ்ஞாநத்துக்கு விஷயம் ஸ்ரியஃபதி என்றபடி. கல்லார்-கல்லாதவர்களாய் அறிவுகேடரென்றபடி. சுஉ.

(க) ஸ்ரீகுணரத்நகோசம். கo. (உ) திருப்பல்லாண்டு. க.

தரித்திருந்தே னுகவே தாரா கணப்போர்,
விரித்துரைத்த வெண்ணுகத் துன்னே,—தெரித்தெழுதி
வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்,
பூசித்தும் போக்கினேன் போது. சூகூ.

அ்.—தாராகணம் போர் விரித்து உரைத்த வெம் (5) நாகத்து உன்னே தெரித்து எழுதி வாசித்தும் (10) கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்கினேனுகவே (15) தரித்திருந்தேன். (16)

அர்.—நக்ஷத்ரமண்டலங்களுடைய ஸஞ்சாரத்தை விசதமாகச் சொன்ன (சத்ருக்களுக்கு) பயங்கரமான (நி) திருவனந்தாழ்வானத்திருமேனியாகவுடைய உன்னே அநுஸந்தித்தும் எழுதியும் வாசித்தும் (கo) கேட்டும் வணங்கியும் அதுவேயாத்ரையாயிருந்தும் அர்ச்சித்தும் போதுபோக்கினவனுகவே (கநி) தரித்திருந்தேன். (கசு) சூகூ.

வ்யா.—அவ—அறுபத்துமூன்றும்பாட்டு.—(தரித்திருந்தேன்) கீழிற்பாட்டில் இப்படி செய்திலரென்று வெறுத்தார் லோகத்தை; இதில் தமக்குள்ள ஏற்றம் சொல்லுகிறது.

(தாராகணப்போரித்யாதி) நக்ஷத்ரகணங்களுடைய ஸஞ்சாரத்தை விஸ்தருதமாகச்சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருந்துள்ள உன்னே அநுஸந்தித்தும், லிகித்தும், வாசித்தும், ப்ரணம்பண்ணியும், நிர்மமனுய்வணங்கி அது தானே யாத்ரையாய் ஆராதித்தும் காலம்போக்கினேன். (ஆகவே தரித்திருந்தேன்) ஆக தரித்திருந்தேன். (தரித்திருந்தேனுகவே) தரித்திருந்தேனுகைக்காகப் பூசித்துக் காலத்தைப்போக்கினே னென்றுமாம். சூகூ.

அரு.— அறுபத்துமூன்றும்பாட்டு.— நக்ஷத்ரகதியாயிருக்கிற ஜ்யோதிஸ்ஶாஸ்த்ரத்தைச்சொன்ன சேஷனுயிருக்கிற உன்னே யென்று ஸாமாநாதி கரண்யமாகையாலே ஆத்மாவாயிருந்துள்ள வென்றது. ஆக - கீழ்ச்சொன்ன எல்லாத்தாலுமாக, தரித்திருந்தேனென்று க்ரியையாதல்; ஸித்தை யுண்டாகைக்காகவே இப்படி காலத்தைப் போக்கினேனென்று க்ரியையாதல். முன்னபக்ஷத்துக்கு ஏவகாரமவ்யயம். சூகூ.

போதான விட்டிறைஞ்சி யேத்துமினே, பொன்மகரக்
காதானை யாதிப் பெருமானை,—நாதானை
நல்லானை நாரணனை நம்மேழ் பிறப்பறுக்கும்
சொல்லானை, சொல்லுவதே சூது. சூச.

அந்.—பொன் மகரம் காதானை ஆதி பெருமானை (5) நாதானை நல்லானை நாரணனை நம ஏழ்பிறப்பு (10) அறுக்கும் சொல்லானை சொல்லுவதே சூது. போதான (15) இட்டு இறைஞ்சி ஏத்துமினே. (18)

அர்.—ஸ்வர்ணமயமான மகரகுண்டலங்களையணிந்த திருச்செவிகளையுடையவனும், ஜகத்காரணனும், ஸர்வாதிகனும், (நி) ஸர்வசேஷியாய், நல்லவனும், ஸர்வாந்தர்யாமியாய், நமக்கு மேல் வரும்ஜந்மங்களைப் (கo) போக்கும் திருநாமங்களையுடையவனை ஸர்வேஸ்வரனை அநுஸந்திப்பதே நல்லஉபாயம். (ஆகையால்) புஷ்பமென்றவைகளை (கநி) ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம்பண்ணுங்கோள். (கஅ) சூச.

வ்யா.—அறுபத்துநாலாம்படி.— (போதானவித்யாதி) இன்ன புஷ்பமென்று நியதியில்லை ; பூவானதை யெல்லாவற்றையுங்கொண்டு திருவடிகளிலே ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம் பண்ணுங்கோள். (பொன்மகரக்காதானை) கைக்கூலிகொடுத்தும் ஸ்தோத்ரம்பண்ணவேண்டும்படி ஸ்ப்ருஹணீயனானவனை. (ஆதியித்யாதி) அழகியதென்று அப்ராப்தமன்றிக்கே நமக் குத்பாதகனானவன் ; ஸ்வாமியாய், வத்ஸலனாகையாலே நாராயண சப்தவாச்யனும், நம்முடைய ஸம்ஸார ஸம்பந்தத்தையறுக்கும் திருநாமத்தையுடையவனைச் சொல்லுவதே இவ்வாத்மாவுக்குறுவது. சூச.

சூதாவ தென்னெஞ்சத் தெண்ணினேன், சொன்மாலை
மாதாய மாலவனை மாதவனை,—யாதானும்
வல்லவா சிந்தித் திருப்பேற்கு, வைகுந்தத்
தில்லையோ சொல்லீ ரிடம். சூநி.

அந்.—மாதாய மாலவனை மாதவனை சொல்மாலை யாதானும் (5) வல்லவா சிந்தித்த திருப்பேற்கு வைகுந்தத்தில

இடம் (10) இல்லையோ? சொல்லீர். சூதாவது என்னெஞ் சத்து எண்ணினேன். (15)

அர்.—ஸுகந்தாஞ்ஜய ஆஸ்ரிதவ்யாமுக்தனன ஸ்ரீயஃபதியைப் ப்ரதிபாதிக்கிறப்ரபந்தங்க ளெதையாகிலும் (ரு) வந்தபடி யது ஸந்தித்துக்கொண் டிருக்கிறஎனக்கு ஸ்ரீவைகுண்டத்தில் இட (கo) மில்லையா? சொல்லுங்கொள். (இதுவே) கல்லஉபாயமென் று என்மகஸ்ஸி லெண்ணினேன். (கடு) சுசு.

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.— (சூதித்யர்தி) உறுவ்காவ தென்னெஞ்சிலே மநோரதித்தேன். (சொன்மாலையித்யாதி) அழகு தான் வடிவுகொண்டாற் போலேயாய், வ்யாமுக்தனுயிருந்துள்ள ஸ்ரீயஃபதியைச் சொல்லப்பட்ட ப்ரபந்தத்தை ஏதேனுமொருபடி யதுஸந்தித்திருக்கிற வெனக்குப் பரமபதத்தி லிடமில்லையோ? ஸ்ம் ருதிமாத்ரமுடையாருக்கும் பரமபதம் ஸித்தியாதோவென்கை. (க) "வஸ்ஜதோயஹ்ருதிஸோஜநடி - ஸ்ம்ருதோர்யச்சதிசோபயம்" என் கிறபடியே பரமபத ப்ராப்திக்கு ஸ்மர்த்தவ்யனுடைய நீர்மையாலே ஸ்மரணமாத்ரத்துக்கு அவ்வருகு வேண்டாவென்று தாத்பர்யம். சுசு

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.—மாதாய - அழதாய - மாதா - அழகு. சுசு.

இடமாவ தென்னெஞ்ச மின்றெல்லாம் பண்டு
படநா கணைநெடிய மாற்கு.—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு, அயனைநரன்
வையேனைட் செய்யேன் வலம்.

சுசுசு.

அந்.—பண்டு படம் நாகம அணை நெடியமாற்கு (5) இன்றெல்லாம் இடம் என்நெஞ்சமாவது மதி சூடிதன்னோடு (10) அயனை வையேன் நான் திடமாக வையேன். (15) வலம் ஆள்செய்யேன். (17)

அர்.—முற்காலத்தில் (விரிந்த) படங்களையுடைய திருவனந் தாழ்வான்மேல் கண்வளர்ந்தருளின ஸர்வேஸ்வரனுக்கு (நி) இப் போதெல்லாம் வாஸஸ்தானம என்னுடையஹ்ருதயமாயிருக்கும். சந்த்ரனைத் தரித்தருத்ரனோடுகூட (கo) ப்ரஹ்மாவை தக்வயாதா த்ம்யஜ்ஞாநமுடைய நான் ப்ராப்யமாக நினையேன்; (கடு) (அ வர்களை) ப்ரதக்ஷிணமும் செய்யமாட்டேன். (கள) சுசு.

வ்யா.—அறுபத்தாறும்பாட்டு—(இடமித்யாதி) ஸர்வாதிகனான ஸர்வேஸ்வரனுக்கு வாஸஸ்தாநம் என்னுடை ஸம்ஸ்லேஷிப்பதற்கு முன்பெல்லாம் தன்னுடே ஸம்ஸ்லேஷத்தாலே விஸ்த்ருதமான பண்த்தையுடைய திருவனந்தாழ்வான்; இப்போதெல்லாம் என்னுடைய ஹ்ருதயம். (திடமித்யாதி) சந்த்ரனைத் தரிக்தானு யிருக்கிற ருத்ரனையும், திருநாபீகமலத்திலே உத்பந்நனாகையாலே அஜனென்றிருக்கிற ப்ரஹ்மாவையும் த்ருட்பதார்த்தங்களாக நினையேன். (வை வேனுட்செய்யேன்) அதுக்கடி கூரியேனுய் ஸாரஸாரவிவேகஜ்ஞனாகை. (க)"வ்ருதீவ-ஹாநவேவதே-ப்ரதிபுத்தாநஸேவக்தே" என்று கூரியரானவர்கள் தேவதாந்தர பஜநம் பண்ணுர்களிறே என்கை. (வலம்) இதுக்கெல்லாவற்றுக்கு மடி பகவத் பரிக்ரஹமான பலம்.

அரு.—அறுபத்தாறும்பாட்டு—வையேன்-மநஸ்ஸிலே வையேனென்றுய், நினையேனென்று முற்றினது; நான் வையேன் - வையேனுன நானென்றுய், கூரியனுன நானென்று இரண்டாவது.வை - கூர்மை - ஜ்ஞாநக்கூர்மை. சுசு.

வலமாக மாட்டாமை தானுக, வைகல்
குலமாகக் குற்றந்தானுக,—நலமாக
நாரணனே நாபதியை ஞானப் பெருமானைச்
சீரணனே யேத்தும் திறம். சுஎ.

அந்.—நாரணனே நாபதியை ஞானப்பெருமானே சீரணனே ஏத்தும் (5) திறம் வலமாக; மாட்டாமைதானுக; குலமாக; குற்றம்தானுக (10) வைகல் நலமாக. (12)

அர்.—ஸர்வசேஷியாய், எனக்குஸ்வாமியாய், ஜ்ஞாநாதிகனுய், மற்றகல்யாணகுணங்களையுமுடையனுன ஸர்வேஸ்வரனே ஸ்தோத்ரம்செய்கிற (நு) விதம் (ஜ்ஞாநசக்த்யாதி) பலத்தைக்கொடுக்கிலும் நலமே; கொடுக்காவிடிலும் நலமே. ஸத்குலத்தைக் கொடுக்கிலும் நலமே, அதில்தோஷத்தைவிலக்கிலும் நலமே; (கo) எப்போதும் (அவனைஸ்தோத்ரம்செய்வதே எனக்கு) உத்தேஸ்யம் (கஉ) சுஎ.

வ்யா.—அறுபத்தேழாம்பாட்டு—(வலம்) (நலமாகவித்யாதி) நன்றுக ஸர்வஸ்வாமியாய், என்னுவுக்கு நிர்வாஹகனுய், ஜ்ஞாநகுணங்களுக்கெல்லா மாஸ்ரயமாயிருக்கிறவனே நன்றுக வேத்தும்ப்ரகா

(நு) பாரதம்.

ரம்; (வலமாக) பலமாகவுமாம்; ஆபிஜாத்யத்தை யுண்டாக்கவுமாம், அகிலே தோஷத்தை யுண்டாக்கவுமாம்; இவையன்றுத்தேஸ்யம்; அவனேயேத்துகையே உத்தேஸ்யமென்கை. சூஎ.

அரு.—அறுபத்தேழாம்பாட்டு.—சரணன்-குணங்களையுடையவனென்றும், ஜ்ஞாநப் பெருமானென்கிறவிவை இரண்டாலும் ஜ்ஞாந குணங்களெல்லாவற்றுக்கு மாஸ்ரயமென்கிறது. வலம்-பாடுகைக்கு ஜ்ஞாநசக்த்யாதிக ளுண்டாகவுமாம், இல்லையாகவுமாம். குலம்-விலக்ஷணமான ஆபிஜாத்ய முண்டாகவுமாம், லக்ஷணமின்றிக்கே தேஹஷுக்த மாகவுமாம். வைகல் - எப்போதும், ஏத்துகையே உத்தேஸ்யம். சூஎ.

திறம்பேல்மின் கண்டீர் திருவடிதன் நாமம்,
மறந்தும் புறந்தொழா மாந்தரை,—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்க ளென்றான்,நம் னுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு. சூஅ.

அந்.—யமனும் தன்தூதுவரை கூவி செவிக்கு, திருவடிதன் (5) நாமம் மறந்தும் புறம் தொழா மாந்தரை (10) இறைஞ்சியும் சாதுவராய் போதுமின்கள்; திறம்பேல்மின் கண்டீர் என்றான். (15)

அர்.—யமன் தன்தூதர்களை யழைத்து (அவர்கள்) காதில், ஸர்வேஸ்வரனுடைய (ரு) திருநாமத்தை மறந்திருந்தாலும் தேவதாந்தரங்களை ஆஸ்ரயியாத மனுஷ்யர்களை (கo) வணங்கி அநுகூலர்களாகப் போவீர்கள். (இதைத்) தவிரவேண்டாம் என்றான். (கரு) சூஅ.

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு,— (திறம்பேல்மினித்யாதி) பகவத் பரிக்ரஹமேபலமென்னுமித்தை (க) "ஸவை ரை ஷிஷ்ணவீகூர் - ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய" என்கிற ஸ்லோகத்தின்படியாலே விவரிக்கிறார்.

(திறம்பேல்மின் கண்டீர்) திறம்பாதே கொள்ளுங்கோளென்னும்போது காலுபத்தோலை மறக்கவுமாம். (திருவடி யித்யாதி) "வஸி ஹரஸ்ய ஸுஷ்ஹ நவுவஸாநு பரிஹாரமதுஸ்ஹகப்ரபத்நான்" என்கிறபடியே ஸ்வாமியினுடைய திருநாமத்தை மறக்கவுமாம், தேவ

(க) ஸ்ரீ விஷ்ணுபுராணம், கூ, எ, கசை.

தாந்தரபஜகம் பண்ணுதொழிகை இவன் ப்ரபந்நனுகையாவது. பர்த்தாவின்பக்கல் ஆநுகூல்யம் க்ரமத்தாலே பிறக்குமுமாம், பர்த்தந்தர பரிக்ரஹமிறே அவனுக்காகாமைக்கடி. (மாந்தரை) மநுஷ்யரை. (இறைஞ்சியு மித்யாதி) அவர்களை கணிந்திலோமென்றிருக்க வொண்ணுது ; "வாஸுதேவஸ்ய – பாசஹஸ்தம்" என்கிறக்ரமவேஷத்தைத் தவிர்ந்து, விதேயவேஷராய் அஞ்சலி ப்ரணமாதிகளைப் பண்ணிப்போருங்கோளென்கிறார். (நமனும்) (க)"யமஜிஹ்வ-ஸமஜிஹ்வ" என்றுசொல்லப்படுகிறவனும். (தன்தூதுவரை) "வ்யவ-ர்ஜ-ஷிழ்-ஸ்வபுருஷம்" என்றபடி. (செவிக்கு) "கண-ஜிஹ்மே - கர்ணமூலே" என்றபடி. அந்தரங்கர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச் செய்தே, ப்ரகாசிக்கிலென்னுகிறதோ வென்று நெஞ்சு பறைகொட்டுகிறபடி. சுஅ.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு.—நிறம்புதல்-சலிக்கையாய், அத்தால் அவன்வார்த்தையை மறுக்கையைச் சொல்லுகிறது, (ஸமஜிஹ்) ப்ரஹ்மாதிகளோடே ஸமமாகச் சொல்லப்படுகிறவனு மென்றபடி. செவியிலே சொல்ல வேண்டுவானென்னென்ன. அருளிச்செய்கிறார் (அந்தரங்க ரித்யாதி). பறைகொட்டுகை-திடுக்கு திடுக்கு என்னுகை. சுஅ.

செவிக்கின்ப மாவதுவும் செங்கண்மால் நாமம்,
புவிக்கும் புவியதுவே கண்டீர்,—கவிக்கும்
நிறைபொருளாய் நின்றுனை நேர்பட்டேன்,பார்க்கில்
மறைப்பொருளு மத்தனையே தான். சுசு.

அர்.— செவிக்கு இன்பமாவதுவும் செங்கண்மால் நாமம் (5) புவிக்கும் புவி அதுவேகண்டீர். கவிக்கும்நிறை பொருளாய் (10) நின்றுனை நேர்பட்டேன். பார்க்கில்மறைப்பொருளும் அத்தனையேதான். (15)

அர்.—செவிக்கும் ப்ரியமாயிருப்பதும் சிவந்தகண்களையுடைய ஸர்வேஸ்வரனுடைய திருநாமமே. (நி) லோகத்தார்க்கும் ஸ்தூலமானஸ்தானம் அந்தத்திருநாமமே. கவிபாடுகைக்கும் பூர்ணவிஷயமா (கo) யிருக்கிற ஸ்ரியஃபதியை யடைந்தேன். விசாரித்துப்பார்த்தவிடத்தில் வேதார்த்தமும் அதுவே. (கடு) சுசு.

வ்யா.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—(செவிக்கித்யாதி) யமவச்யதையைத் தவிர்க்குமளவன்று; செவிக்கினியதுவும் புண்டரீகா

(க) ஸ்ரீ விஷ்ணுபுராணம்.

கூனுடைய திருநாமம். (புகிக்கும் புகியதுவேகண்டீர்) எனக்கொரு த்தனுக்குமேயோ? பூமியினுள்ளார்க்கெல்லாம் ஸ்தாநம் திருநாமம். (கவியித்யாதி) ஸ்துத்யனுக்கொரு பூர்த்தியின்றிக்கே ஸ்தோதா நிரப்பவேண்டும்படியன்றிக்கே கவிபாடுகைக்கு ஸ்வரூபரூபகுணங்க ளால் குறைவற்றுநின்றவனே யாதிருச்சிகமாக லபித்தேன். (பார்க்கி லித்யாதி) யாதிருச்சிகமாக வன்றிக்கே ஆராய்ந்துபார்க்கில் வேதா ந்த ரஹஸ்யமும் மத்தனேயே. சுக.

தானொருவ னாகித் தரணி யிடந்தெடுத்து,
ஏனொருவ னாயெயிற்றில் தாங்கியதும்,—யானொருவன்
இன்ற வறிகின்றே னல்லேன், இருநிலத்தைச்
சென்றுங் கடிப்படுத்தசேய். எ0.

அ.—சேய்தான் ஒருவனாகி சென்று இரு நிலத்தை (5) ஆங்கு அடிப்படுத்த ஏனொருவனாய் தரணி இடந்தெடு த்து (10) எயிற்றில் தாங்கியதும் யானொருவன் இன்ற அறி கின்றே னல்லேன். (15)

அர்.—வாமநனை தான் தனியே சென்று பரந்த பூமியைப் (டு) பரிக்ரஹீத்தகாலத்தில் திருவடிகளின் கீழகப்படுத்தினதை யும், அத்விதீயவராஹமாய் பூமியைக் குத்தியெடுத்துக் (கo) கோரைப்பல்மேல் தரித்ததையும் நானொருவனுமே இப்போதாக அறியாதிருக்கிறேனன்று. (கடு) எ0.

வ்யா.—அவ.—எழுபதாம்பாட்டு.—(தானொருவன்) வேதாந்த ரஹஸ்ய மிதுவென்றிருந்தபடி எங்ஙனேயென்னில், நானொருத்தனு மின்றாக வறிக்கதோ; ப்ரலித்தமன்றோவென்கிறார்.

(தானொருவனாகி.) வாமநனாய். (இருநிலத்தித்யாதி.) வாமநனாய், பரப்பான பூமியை வ்யாபித்துத் தன்திருவடிக்குள்ளே யடங்கும்படி இட்டுக்கொண்டு, அச்செயலாலே அத்விதீயனாய், ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியில் நின்றும் ஓட்டிவிடும்படி யிடந்தெடுத்து மஹாவராஹ ரூபியாய்ப் பெரியபூமியைத் திருவெயிற்றி லேகதேச த்திலே தரித்ததும் நானொருத்தனு மின்றாகவறிந்ததோ? எ0.

அரு.— எழுபதாம்பாட்டு.— (யானொருவனின்ற வறிகின்றே னல்லேன்) அறிகின்றேனல்லே னென்று முழுச்சொல்லாய், அறி யாதிருக்கிறவ னின்றாக நானொருவனுமே யன்று; என்று மெல்லாரு மறியார்களென்று அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (ப்ரளயங்கொ ண்ட இத்யாதி). எ0.

சேய னணியன் சிறியன் மிகப்பெரியன்,
ஆயன் துவரைக்கோ னுய்நின்ற—மாயன், அன்
றோதிய வாக்கதனைக் கல்லா ருலகத்தில்;
ஏதிலராய் மெய்ஞ்ஞான மில். எக

அந்.—சேயன் அணியன் மிகப்பெரியன் சிறியன் மாயன் (5) துவரைக்கோனுய்நின்ற ஆயன் அன்று ஓதிய வாக்கதனை (10) உலகத்தில் மெய் ஞானம் இல் (15) ஏதிலராய் கல்லார். (16)

அர்.—தூரஸ்தனுயும் ஸமீபஸ்தனுயும் மிக்கமேன்மையையுடையனுயும் அத்யந்தஸுலபனுயும் ஆஶ்சர்யசேஷ்டிதனுயும் (நி)த்வாரகாகாதனுயுமெழுந்தருளியிருக்கிற கோபாலன் பாரதயுத்தத்தில் அருளிச்செய்த சரமஶ்லோகத்தை (கo) லோகத்தில் யதார்த்தஜ்ஞாந மில்லாதவர்களாய் (கடி) சத்ருக்களாய் அப்யஸியாதவர்களாவார்கள். (ககூ) எக.

வ்யா.—அவ.—எழுபத்தோராம்பாட்டு.—(சேயன்) ப்ரளயங் கொண்டபூமியை யெடுத்துரக்ஷித்தது அறியாதிருந்தவளவேயோ, ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுக்க அவனருளிச்செய்த வார்த்தையைத் தானறியப்பெற்றேமோ வென்கிறார்.

(சேயன் மிகப்பெரியன்.) (க) "யதோவாயோநிவர்த்தந்தே யதோவாசோநிவர்த்தந்தே" என்று வாங்மனஸ்ஸுக்களுக்கு நிலமில்லாதபடியாலே ப்ரஹ்மாதிகளுக்கும் தூரஸ்தனுயிருக்கும். (சிறியனணியன்) ஸம்ஸாரிகளுக்கு மிவ்வருகாய்ப் பிறந்து அதுகூலர்க்கு அண்ணியனுயிருக்கும். (ஆயனித்யாதி) அண்ணியனனமைக்கு உதாஹரணம், இடையனுய், ஶ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனுய், ஒரு க்ஷுத்ரனுக்குத் தோற்கவல்ல ஆஶ்சர்ய குணத்தையுடையவன் தேர்த்தட்டிலேநின்று "உன்னுடைய ஸகலதூருக்கும் நானேகடவேன்; நீசோகிக்கவேண்டா" என்றருளிச்செய்தவார்த்தையைத் தஞ்சமாக நினைத்திருக்கைக் கடியான தத்வஜ்ஞாந மின்றிக்கே ஈஶ்வரன் (உ) "தாநஹம்விஷதஃக்ரூரஸம்ஸாரேஷுநராதமாந்-தாநஹம்த்விஷதஃக்ரூராந்" என்று நினைக்கும்படி சத்ருக்களாய், தாங்களும் க்ருஷ்ணனெங்களுக்கு சத்ருவென்று மிருப்பார்கள். எக.

(க) தைத்திரீயம் ஆநந்தவல்லி. (உ) கீதை - ககூ. கஅo.

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—க்ஷத்ரன்-ஜராஸந்தன். உலகத்து மெய்ஞ்ஞானமில் லதிலாய்க் கல்லா ரென்றபடி. எக.

இல்லற மில்லேல் துறவறமில் லென்னும்
சொல்லற மல்லனவும் சொல்லல்ல,—நல்லறம்
ஆவனவும் நால்வேத மாத்தவமும், நாரணனே
ஆவதீதன் றென்பாரார். எஉ.

அந்.—இல் என்னும் இல்லறம் இல்லேல் துறவறம் (5) சொல் அல்லன அறமும் சொல்லல்ல. நல்லறமாவனவும் (10) நால்வேதம் மா தவமும் நாரணயேயாவது ஈதன்று (15). என்பார் ஆர்? (19)

அர்.—(வேதத்தில்) உபாயங்களாகச் சொல்லப்பட்ட க்ருஹஸ்ததர்மமும் அல்லாத நிவ்ருத்திதர்மமும் (டு) (இதிஹாஸ புராணங்களில்) ப்ரதிபாதிக்கப்பட்ட அல்லாத தர்மமும் ஒருசொல்லன்று (உபாயங்களாகமாட்டா). விலக்ஷணங்களான கர்மஜ்ஞாநாதிகளும் (கo) காலுவேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸ்லாக்யமான தபஸ்ஸும் நாராயணனுடையப்ரஸாதத்தாலே பலப்ரதங்களாகும். இப்படியன்று (கடு) என்று சொல்லுவா ரார்? (ஒருவரும் சொல்லார்கள்). (கள) எஉ.

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு.—(இல்லறம்) நீரோதி நீராகில் இதுக்குப்பொருள் சொல்லுமென்னச் சொல்லுகிறார்.

(இல்லறமில்லேல்) கர்மயோகமன்றாகில்; ப்ரவ்ருத்தி தர்மமன்றாகி லென்றுமாம். (துறவறமில்லென்னும் சொல்) நிவ்ருத்தி தர்மம் ஸ்தாநமென்னுமது ப்ரமாணம். ஜ்ஞாநயோகமென்றுமாம். (அறமல்லனவும் சொல்லல்ல) அல்லாத தர்மங்களே விதிக்கிறவை ப்ரமாணங்களுமன்று. அல்லாத தர்மங்களென்கிறதும், கர்த்ருத்வ பலாபிஸந்தி ரஹிதமாக அநுஷ்டிக்கும் கர்மங்களன்றிக்கே இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற காமஸங்கீர்த்த நாதிகளாகவுமாம். "சொல்லறமல்லன" என்று பதச்சேத மானபோது ப்ரமேயபரம். "இல்லென்னுஞ்சொல்" என்றபோது ப்ரமாணபரம். (நல்லறமாவனவும்) பலாபிஸந்திரஹிதமான கர்மங்கள். இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற காமஸங்கீர்த்தனங்கள். (நால்வேத மாத்தவமும்) பூர்வபாகத்தில்சொன்ன கர்மயோகம், இவையெல்லாம் நாராயண ப்ரஸா

தமடியாரு. இதா தர்மங்களைச் சொல்லுகிறது ப்ரமாணங்க ளென்று நீர்சொல்லுகிற தெத்தாலே யென்னில், அவை பலப்ரதங்க ளாம்போது, பகவத் ப்ரஸாதம் வேணும். பகவான் உபாயமாமிடத் தில் அவை ஸஹகரிக்க வேண்டாவென்னும் ப்ரமாண பலத்தா லே சொல்லுகிறேன். (ஈதன் றென்பாரார்) அல்லாதவை போல வன்றிக்கே உபாயமாகவற்றுனஇத்தை அன்றென்ன வல்லாருண்டோ.

அரு.— எழுபத்திரண்டாம்பாட்டு.— இல்லறம்–க்ருஹஸ்தன் பண்ணுகிறகர்மம்; கர்மாதிகளென்றபடி. மேல்தெரியாது. ஆனாலும் மோக்ஷோபாயமான கர்மாதிகளைப் ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்களும் தத்ப்ரமேயமான கார்ஹஸ்த்யாதி தர்மங்களுமான இவை ப்ரமாணங் களுமன்று; ப்ரமேயங்களுமன்று; இனிப்ரமாணம் சரமஸ்லோக மே. தத்ப்ரமேயமும் ஸித்தோபாயமான ஈஸ்வரனே என்று பாட்டு க்குத் தாத்பர்யம். பதங்தோறும் தெரிந்தால் கண்டுகொள்வது. எஉ.

ஆரே யறிவா ரனைத்துல குமுண்டுமிழ்ந்த,
போராழி யான்றன் பெருமையைக்,–கார்செறிந்த
கண்டத்தா னெண்கண்ணன் காணுன், அவன்வைத்த,
பண்டைத்தா னத்தின் பதி. எங.

அங்.— அனைத்து உலகம் உண்டு உமிழ்ந்த பேர் (5) ஆழியான்தன் பெருமையை அறிவார் ஆர். அவன் (10) வைத்த பண்டை தானத்தின் பதி செறிந்த (15) கார் கண்டத்தான் எண்கண்ணன் காணுன். (19)

